# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

## (பகுதி-5)

### 1) வேலை கிடைத்தது, வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வித்திடப்பட்டது.

8 நாட்கள் கழிந்தன. மீண்டும் தஞ்சை ரயிலடியில் மாலை திருவாரூர் பாசஞ்சர் ரயிலை எதிர்பார்த்து நல்ல செய்தி வருமா? என்ற ஆவலுடன் காத்திருந்தேன். ரயிலி லிருந்து இறங்கும்போதே திரு. சுந்தரம் “உன் தகப்பனார் நல்லவர். ஊருக்கு உபகாரி. இரக்ககுணம் கொண்டவர். தினந்தோறும் விடாமல் பலமுறை சகஸ்ரநாம பாராயணம் செய்பவர். அதன்பலன்தான் ராமசுந்தரம் வேலைக்கு வரவில்லை, உனக்கு அந்த வேலை கிடைத்துள்ளது. விரைவில் பணி நியமன உத்தரவு வீடுதேடி வரும்” என்று கூறினார்.

அதுமட்டுமல்லாமல் தஞ்சாவூர் ரயிலடியில் அரசமரத்துப்பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் அமைந்திருந்த Vegetarian Light Refreshment Stall எனப்படும் ரயில்வே நிர்வாகத்தார் நடத்தி வந்த காஃபி ஸ்டாலுக்கு அழைத்துச் சென்று, காஃபியும் வாங்கிக் கொடுத்து, ஊருக்கு உடனே சென்று உன் அப்பாவிடம் இந்த நல்ல செய்தியைச் சொல்லு என்று வழியனுப்பினார். ***(தஞ்சை சந்திப்பில் அமைந்துள்ள நடை மேடையின் நடுவில் காணப்படும் அரசமரத்தையும் அங்கே உள்ள பிள்ளையாரையும் தினந்தோறும் பலர் வணங்கிச் செல்வர். மாலை 6 மணி தொடங்கி அங்கேயுள்ள அரசமரத்தில் ஆயிரக்கணக்கான***

*பறவைகள் ஒலியெழுப்பிக் கொண்டு கிளைகளில் உட்கார்ந்து கொண்டிருக்கும். வட்டமிடும் வித விதமான பறவைகள், எழுப்பும் ஒலியோடு கிளைகளில் உட்கார்ந்திருக்கும் பறவைகளும் எழுப்பும் ஒலி, மக்கள் கூடும்போது எழுப்பப்படும் ஒலியையும், ரயில் எஞ்சின்கள் வெளிப்படுத்தும் ஒலியையும் தாண்டிக் கேட்கும். இன்றும் இந்தக் காட்சியை தஞ்சை ரயிலடியில் ஒருவர் காணலாம்.)*

## 2) V.L.R. ஸ்டாலில் அருந்தும் காஃபியின் நறுமணம்

1960-63 கால கட்டத்தில் சுவை, மணம் மிக்க கலப்பட மில்லாத காஃபி அருந்த விரும்புவோர் தஞ்சை ரயிலடியில் அரசமரத்தடிப் பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் அமைந்திருந்த V.L.R. ஸ்டாலைத்தான் நாடிச் செல்வர். 20 பைசா விலை நிர்ணயிக்கப் பட்ட காஃபியை பெரும்பாலோர் one by two காஃபியாகத்தான் வாங்கி அருந்துவார்கள். இந்த one by two காஃபி அருந்துவோர் 10 பைசாவில் மன நிறைவைப் பெற்றுவிடுவர். அதே போன்று இங்கே விற்கப்படும் சாம்பார் மற்றும் தயிர்சாதப் பொட்டலங்கள் ப்ராஹ்மண சமையல்காரர்களால் சுகாதாரக்கேடின்றி தயாரிக்கப்பட்டு விற்பனைக் கூடத்திற்கு வரும். விழுப்புரம், தஞ்சை போன்ற இடங்களில் இயங்கிவந்த V.L.R. ஸ்டால்களில் ரயில்கள் வராதபோதும் கூட்டம் காணப்படும். *(தற்போது அதே விழுப்புரம் V.L.R. ஸ்டாலில் எவ்வாறு உணவு தயாரிக்கப்படுகிறது என்பதை அந்நியன் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.)*

## 3) உப்பிலியப்பன் காத்தருள்வான்

வேலை கிடைத்த மகிழ்ச்சியில் வையச்சேரியைச் சென்றடைந்தேன். என் தாயாரிடம் முதலில் இந்தச் செய்தியைக் கூறினேன். அவள் வையச்சேரியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸப்பெருமாள் அனுக்ரஹத்தால் தான் உனக்கு இந்த வேலை கிடைத்து உள்ளது. உனக்கு இந்த வேலை கிடைக்கவேண்டும் என்று தினந்தோறும் பெருமாள் ஸந்நிதியில் விளக்கேற்றி வந்தேன். இன்றைக்கு நீ கோயிலுக்குச் சென்று, அர்ச்சனை செய்துவிட்டு வா என்று கூறினாள். மேலும் உன்னுடைய முதல் சம்பளம் கிடைத்தவுடன் உப்பிலியப்பன் கோயிலிலுக்குச் சென்று உப்பு வாங்கிப் போட்டு விட்டு, உண்டியலில் பணம் போட்டு விட்டு வரவேண்டும் என்றும் கூறினாள். பின்பு அதன் படியே நான் செய்தேன்.



## 4) பூண்டி புஷ்பம்கல்லூரியின் தோற்றமும்-வளர்ச்சியும்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பெரும் நிலக் கிழார்களில் சிறந்து விளங்கும் பூண்டி வாண்டையார் குடும்பம் கல்விக்காவலர் என்ற பட்டத்தைப் பெற்று கல்விக்குச் சிறந்த தொண்டு புரிந்து வருகின்றது. இக் குடும்பத்தில் வந்த திரு. ஏ. வீரையாவாண்டையார் 1956-ஆம் ஆண்டு பூண்டியில் ஒரு கலைக்கல்லூரியைத் தொடங் கினார். பூண்டி வாண்டையார் குடும்பத்தினரின் குலதெய்வமான ஸ்ரீபுஷ்பவனேசுவரர் பெயரில் இக்கல்லூரி பெயரிடப் பட்டது. (1967-ஆம் ஆண்டு இக்கல்லூரியை முதுகலை பட்டத்திற்கான கல்லூரியாகத் தகுதியை உயர்த்தினர். 1972-இல் இக்கல்லூரிக்கு இக்கல்லூரியைத் தொடங்கிய வீரையா வாண்டையாரின் நினைவாக, வீரையா வாண்டையார் புஷ்பம் கல்லூரி என மறு பெயரிடப்பட்டது. சுமார் 4000 மாணவர்கள் வரை படிக்கும் இந்தக் கல்லூரியில் 700 மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதி உள்ளது. ஆங்கிலம்,

தமிழ், பொருளியல், இயற்பியல், கணிதம், வணிகவியல் போன்ற துறைகளில் முதுகலைப் பட்டப் படிப்பிற்கான வசதி உள்ளது. தற்போது தமிழகத்திலேயே சிறப்பாக இக்கல்லூரி விளங்குவதற்கு காரணமாக இருந்தவர் திரு. துளசிஅய்யா வாண்டையார் ஆவர். பூண்டி புஷ்பம் கல்லூரியை உருவாக்கிய திரு.வீரையா வாண்டையாரின் தம்பி, திரு. கிருஷ்ணசாமி வாண்டையாரின் புதல்வராவார்.)

## 5) வையச்சேரி விஞ்ஞானி விஸ்வநாதனின் நிதி உதவி

கல்லூரியில் பணி புரிவதற்கேற்ற உடைகள் வாங்குவதற்கு ரூபாய் ஐம்பதைக் கடனாகக் கொடுத்து உதவினார் எங்களூர் விஞ்ஞானி விஸ்வநாதன். இவரைப் பற்றி நான் முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன்.

## 6) Honorary Resident Tutor

தஞ்சை-திருவாரூர் ரயில் மார்க்கத்தில் குடிகாடு நிறுத்தத்தில் இறங்கி கிழக்கே ஒன்றரை கி.மீட்டர் நடந்து சென்றால் வயல்களின் ஊடே பூண்டி புஷ்பம் கல்லூரி காணப்படும். அப்போது வேலையில் சேர்வதற்கு ஒரே ஆவணம் என்னிடம் உள்ள Hall Ticket மற்றும் தேர்வு முடிவுகள் வெளிவந்த நாளிதழுமே. கல்லூரியைச் சென்றந்த வுடன் முதல்வரும், வேதியியல் துறைத்தலைவருமான திரு. O.R. சூரிய நாராயணன் அவர்களைச் சந்தித்தேன்.

அப்போது அவர் புதிதாகத் தொடங்கப்பட்ட கல்லூரி விடுதி உதவிக்காவலராக (Residential Tutor)சம்பளம் இல்லாத பொறுப்பினை ஏற்றுக் கொண்டால்தான் பணி நியமனம் உறுதி செய்யப்படும் என்று கூறினார். தங்குவ



தற்குத் தனிஅறை, ரயிலில் தஞ்சைக்குச் சென்று வர வேண்டிய கட்டாயம் இல்லை. ஒவ்வொரு மாதமும் சாப்பாட்டுச் செலவானது Sharing முறையில் தீர்மானிக்கப் படும். ***(அதாவது அந்த மாதத்திற்கான மளிகை, எரிபொருள், பால், சமையற்காரர்கள் சம்பளம், இதர செலவுகள் ஆகிய வற்றையெல்லாம் கூட்டி, விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்டு வகுத்தால் பெறப்படும் ஈவுத் தொகையே சாப்பாட்டிற்கான செலவாகும். இது ஒவ்வொரு மாதமும் வேறுபடும்.)***

கல்லூரி முதல்வர்தான் மாணவர் விடுதியின் முதன்மை வார்டனாவார். தமிழ்த்துறைத் தலைவரான திரு. கேசவமூர்த்தி Deputy Warden. நான் Assistant Warden. கல்லூரி விடுதியில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு நான் பொறுப்பேற்க வேண்டும். அவ்வப்போது திரு. கேசவ மூர்த்தியுடன் நேரில் தொடர்பு கொண்டு முக்கியமான செய்தி களையும் நடப்புகளையும் தெரிவிக்க வேண்டும். திரு. கேசவமூர்த்தி இரவு 9 மணியளவில் விடுதிக்கு வருகை தருவார். விடுதி மாணவர்கள் Study time இரவு 8 முதல் 9 வரை ஆகும். Resident Tutor ஆகிய நான் அந்த நேரத்தில் தாழ்வாரத்தில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

## 7) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த பாராட்டு

ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான காங்கோ 1960ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாள் பெல்ஜியத்தின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. காங்கோவிலிருந்து அணுகுண்டு செய்வதற்கான யுரேனியம் தாது அமெரிக்காவிற்கு 2ஆம் உலகப் போரின் போதும் அதன்பிறகும் Shinkolobwe சுரங்கத்திலிருந்து தான் ஏற்றுமதி

செய்யப்பட்டது. 1945ஆம் ஆண்டு ஹிரோஷிமா மற்றும் நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்களில் வீசப்பட்ட அணுகுண்டுகள் காங்கோவிலிருந்து பெறப்பட்ட யுரேனியம் கொண்டு தயாரிக்கப்பட்டன. காங்கோவின் ஒரு பகுதியான செப்புத் தாதுக்கள் மிகுந்த கட்டாங்கா காங்கோவிலிருந்து பிரிந்து தன்னைத் தனி நாடாக அறிவித்துக் கொண்டது. கட்டாங்காவின் அதிபராக தன்னை அறிவித்துக் கொண்ட Thsombe பெல்ஜியத்தின் தூண்டுதலால் இவ்வாறு செய்ய முற்பட்டார். பெல்ஜியப்படைகள் அந்த நாட்டி லுள்ள பெல்ஜிய மக்களைக் காப்பாற்றுவதற்காக அனுப்பப்பட்டன. அப்போதைய காங்கோ பிரதமர் ஐக்கியநாடு சபை, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு உதவி கோரி வேண்டு கோள் விடுத்தார். ஐக்கிய நாடுகளின் சபையின் செகரட்டரி ஜனரலான Dag Hammarskjold காங்கோ நாட்டிற்கு உதவ முன்வந்தார்.

## 8) லுமும்பாவின் படுகொலை

அப்போதுதான் சுதந்திரம் அடைந்த அந்த நாட்டில் அமெரிக்கா காங்கோ ஜனாதிபதி Kasavubu வையையும், சோவியத் ரஷ்யா காங்கோ பிரதமரான Patrice Lumumba வையும், பெல்ஜியம்நாடு Mobutu என்ற ராணுவ படைத் தளபதியையும் ஆதரித்தன. அப்போது நடந்த உள்நாட்டுக் கலகத்தில் Patrice Lumumba படுகொலை செய்யப்பட்டார். உலகையே அதிரவைத்த இந்த நிகழ்ச்சி இந்தியாவிலும் எதிரொலித்தது. இந்தியப் பிரதமர் திரு. நேரு அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை காங்கோவில் அமைதி திரும்பிட முழு அளவில் ஒத்துழைத்திட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்தார். காங்கோவில் அமைதியை மீண்டும் நிலை நாட்டுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் இந்தியப்



படைகள் 1961ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள் அனுப்பி வைக்கப்பட்டன. நேருவின் காலத்தில் முழு அளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அணிசாராக் கொள்கை இந்தியாவின் மதிப்பை உலக நாடுகள் மத்தியில் உயர்த்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் செகரட்டரி ஜனரல் ‘Thank God for India’ என்று இந்தியாவின் அணிசாராக் கொள்கைக்கு தமது உளமார்ந்த பாராட்டைத் தெரிவித்தார்.

## 9) கல்லூரி நடப்புகள்

தமிழ்த்துறை விரிவுரையாளராக பணியில் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பார் Resident Tutorஆகப் பணிபுரிவதற்கு ஒப்புக் கொண்டதால் நான் Resident Tutor பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டேன். இது எனக்கு பெருத்த மகிழ்ச்சியைத் தந்தது. வேதியியல் துறையின் தலைவர் கல்லூரி முதல்வர். அவர் கல்லூரிப் பொது நிர்வாகப் பொறுப்பில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதால் வேதியியல் விரிவு ரையாளர் திரு. R.சுப்ரமண்யம்தான் வேதியியல் துறையின் முழு நேரப் பொறுப்பாளராக இருந்து வந்தார். சில நாட்கள் சென்றபின் என்னுடன் செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த கனகசபை என்பான் Demonstratorஆக நியமிக்கப்பட்டான். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அந்த ஆண்டு M.S.C பட்டம் பெற்ற R.சுந்தரம் வேதியியல் விரிவுரையாளராக பணியில் அமர்த்தப்பட்டார். நாங்கள் நால்வரும் ஒத்தக் கருத்துடையவர்களாய் விளங்கியதால் துறைப்பணிகள் செம்மையாக நடைபெற்று வந்தன. அந்த ஆண்டுதான் நான் பி.எஸ்.சி. பட்டம் பெற்றிருந்தாலும், கல்லூரி முதல்வர் திரு. சூரியநாராயணன் அவ்வப்போது அவர் பாடம் போதிக்க வேண்டிய Physical Chemistry வகுப்புகளுக்கு என்னை அனுப்பி வைப்பார்.

அந்த ஆண்டு பூண்டி புஷ்பம் கல்லூரியில் வேதியியல் இளங்கலை 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கு புதுப்பாடத் திட்டப்படி பாடம் நடத்துவதற்கு நான் தகுதியான வன் என்று கல்லூரி முதல்வர் நினைத்ததால் என்னை மட்டும் அவருக்குப் பதிலாக வகுப்புகளில் பாடம் நடத்துவதற்கு அழைப்பு விடுத்திடுவார். கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் தவிர மற்றைய மாணவர்களும், விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் தஞ்சையிலிருந்து ரயிலில்தான் வரவேண்டும். ரயில் வந்தால்தான் வகுப்புகள் நடைபெறும். கல்லூரியில் பணியாற்றும் அனைத்து விரிவுரையாளர்களும் குடிகாடு ரயில் நிலையத்தில் இறங்கி நடந்து வரவேண்டும். வேதியியல் துறையைச் சார்ந்த நான் பெரும்பாலும் மற்றையதுறை விரிவுரையாளர்களுடன்தான் நடந்து வருவேன். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மற்றைய துறைகளுக்குச் சென்று அவர்களோடு அளவளாவி வருவேன். பொதுவாக விஞ்ஞானத் துறையில் பணி புரியும் விரிவுரை யாளர்கள் மற்றைய துறையினரோடு நெருங்கிப் பழகுவ தில்லை. இதற்கு விதிவிலக்காக இருந்தவன் நான்.

தஞ்சையில் சிலநாட்கள் திரு. சுப்ரமண்யத்தோடு ஓர் அறையில் தங்கியிருந்தேன். இவர் ஒரு பாலக்காடு ப்ராஹ்மணர். சிறு வயதில் தென்னை ஓலையைக் கிழித்து யாரோ வில்லாகவிட அது இவர் கண்ணுக்குள் பாய்ந்து பார்வையை இழக்கச் செய்தது. அவருடைய இடதுகண் புருவம் மடிந்தே காணப்படும். பாலக்காட்டில் மனைவி மக்களை விட்டுவிட்டு தஞ்சையில் ஒரு தனி அறையில் வசித்து வந்தார். இவரைத் தவிர புஷ்பம் கல்லூரியில் கேரளாவைச் சார்ந்த இரண்டு விரிவுரையாளர்கள் பணிபுரிந்து வந்தனர். கேரளாவில் கல்லூரி விரிவுரையாளர் வேலை



கிடைக்க வேண்டுமானால் அந்தக் கால கட்டத்திலேயே பெரியதொரு தொகையை லஞ்சமாகக் கொடுத்தாலொழிய வேலை கிடைக்காது. அதனால்தான் பல இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு தஞ்சை போன்ற நகரங்களில் நாங்கள் வேலை பார்த்து வருகிறோம் என்று திரு.சுப்ரமண்யம் கூறுவார். ஆங்கில மொழியில் நல்லபயிற்சி கொண்டவர். எப்போதும் மலையாளிகளுக்குரிய குடையுடன் காணப் படுவார்.

1960 ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் என்னுடன் பணியாற்றிய கனகசபைக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் அந்த ஆண்டு தொடங்கப்பட்ட எம்.எஸ்.சி. பயோகெமிஸ்ட்ரி வகுப்பில் இடம் கிடைத்ததால் வேலையை ராஜினாமா செய்துவிட்டுச் சென்று விட்டான். அந்த இடத்திற்கு 1958ஆம் ஆண்டு Demonstratorஆகப் பணிபுரிந்த திரு. சம்பத்குமார் நியமிக்கப்பட்டார். இவர் சொந்த ஊர் கும்பகோணம். கும்பகோணம் கலைக் கல்லூரியில் 1957ஆம் ஆண்டு பி.எஸ்.சி. பட்டம் பெற்றவர். மற்றொரு விரிவுரையாளரான சுந்தரம் நெய்வேலிக்காரர்.

## 10) என் தங்கை கமலாவிற்கு ஆண்குழந்தை பிறந்தது

என்னுடைய தங்கை திருமதி. கமலாவிற்கு 18.7.1960 ஆம் நாள் கீழைப்பனையூரில் ஆண்குழந்தை பிறந்தது. இவனுக்கு ரங்கராமாநுஜம் என்ற பெயர் இடப்பட்டது. என்னுடைய முதல் மாத சம்பளத்தின் பெரும்பகுதி பிரசவ செலவிற்கு உதவியது. தஞ்சாவூரில் திரு. சுப்ரமண்யத்துடன் ஒரே அறையில் இருப்பதற்கு வீட்டு உரிமையாளர் அனுமதி தர மறுத்ததால் ரயில்வே டிக்கெட் கிளார்க்கான திரு. சுகவனம்

என்பவருடன் ஓர் அறையில் தங்கி யிருந்தேன். இதுபோன்ற மேன்ஷன்கள் எனப்படும் குடியிருப்புப் பகுதிகள் தஞ்சை ரயில்நிலையத்தைச் சுற்றி அமைந்துள்ளன.

## 11) மாலை 5 மணிக்குள் கல்லூரியைவிட்டு அகன்றிட வேண்டும்

மாலையில் திருவாரூரில் இருந்துவரும் பாசஞ்சர் ரயில் குடிகாடு ஸ்டேஷனுக்கு 5.20 நிமிடங்களுக்கு வந்து சேரும். அதை விட்டால் இரவு 8 மணிக்குத்தான் அடுத்த ரயில். பேருந்து நிலையம் பூண்டி கடைத்தெருவில் அமைந்துள்ளது. அப்போதெல்லாம் 2 மணி நேரத்திற்கு ஒரு பேருந்து தஞ்சையை நோக்கிச் செல்லும். அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுக்கு மேல் பிரயாணிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதனால் அவரவர்கள் தத்தம் வேலையை 5மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். 1962ஆம் ஆண்டு உள்ளூர் மக்களின் எதிர்ப்புக்களைத் தாண்டி குடிகாடு ரயில்வே நிலையம் தற்போது உள்ள இடத்திற்கு மாற்றம் பெற்றது.

## 12) தஞ்சை ரயிலடி ஈஸ்வரிபவன்

தஞ்சையில் ரயிலைவிட்டு இறங்கி வேதியியல் துறையைச் சார்ந்த நாங்கள் நான்கு பேரும் ரயில் நிலையத்திற்கு வெளியே இருந்த ஈஸ்வரிபவன் உணவு விடுதிக்குச் சென்று மாலைச் சிற்றுண்டி சாப்பிடுவோம். ஒவ்வொரு நாளும் நாலு பேரில் ஒருவர் சாப்பிட்ட சிற்றுண்டிக்கான தொகையைச் செலுத்தவேண்டும். கல்லூரியில் படித்த நாட்களைவிட கல்லூரியில் வேலை செய்த நாட்கள் மகிழ்ச்சியுடன் கழிந்தன. வையச்சேரியை விட்டு நீங்கி குடும்பத்தினர் அனைவரும் கீழைப்பனையூரில்



சில மாதங்கள் தங்கியிருந்தனர். என்னுடைய தம்பியான ஸ்ரீநிவாஸன் கீழைப்பனையூர் ஆரம்பப் பள்ளியில் படித்து வந்தான். களப்பாள் என்னும் ஊருக்குத் தெற்கே குல மாணிக்கம் என்னும் கிராமம் அமைந்துள்ளது. நாலாபக்கமும் வயல்கள் சூழ்ந்த இந்த ஊரில் பண்ணைக் கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்து வந்தார் என் தந்தையார்.

## 13) James M.A.L.T. என்று அழைப்பதை விட- James M.A. என்று அழைப்பதே மேல்

கணிதத்துறை தலைவராக விளங்கியவர் திரு. L.K.செட்டி. அந்தத்துறையின் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வந்தவர் திரு.ஜேம்ஸ் M.A.L.T. இவரிடம் நான் உங்கள் பட்டத்திலுள்ள L.T.-ஐ எடுத்து விடுங்கள். ஏனென்றால் L.T. படித்தவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை பார்க்கத்தான் தகுதி படைத்தவர்கள் என்ற கருத்து நிலவி வருகிறது. கல்லூரி விரிவுரையாளர்கள் அனைவரும் M.A. என்று போட்டுக் கொள்வதிலேயே அதிக விருப்பம் உடையவர்களாய் இருக்கின்றார்கள் என்று வேடிக்கையாக அவரிடம் கூறிடுவேன். அவரும் நீங்கள் சொல்வது ரொம்ப சரி தம்பி என்று கூறுவார்.

கல்லூரியில் P.U.C. மற்றும் B.Sc. வகுப்புகளில் நான் மாணவர்கள் புரிந்து கொள்ளும்படி பாடம் நடத்தி வருவதை அறிந்த ஜேம்ஸ், ஆப்ரஹாம்பண்டிதர் தெருவில் உள்ள பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த சரபோஜி கல்லூரியில் P.U.C. படிக்கும் மாணவனுக்கு அவன் வீட்டுக்குச் சென்று வேதியியல் பாடங்களைச் சொல்லித் தரவேண்டும், மாதம் 15 ரூபாய் ஊதியமாக அளிக்கப்படும் என்றார். அன்றைய 15ரூபாய் இன்றைய 500ரூபாய்க்குச் சமமாகும். ஏனெனில் 60

டிக்கெட்டுகள் கொண்ட சாப்பாட்டுக் கூப்பன் 30ரூபாய்க்குக் கிடைக்கும். நான் வாங்கிய 120 ரூபாய் சம்பளத்தில் 80 ரூபாய் என் செலவிற்கு வைத்துக் கொண்டு மாதந்தோறும் 40 ரூபாய் என் குடும்பத்துக்குச் செலவிட்டு வந்தேன்.

15ரூபாய் பணம் அதிகமாய் கிடைக்கப்போகிறதே என்ற மகிழ்ச்சியில் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தினந்தோறும் 2மணி நேரம் வேதியியல் பாடங்களைப் போதிப்பதாக ஒப்புக் கொண்டேன். திரு. ஜேம்ஸுடன் ஆப்ரஹாம்பண்டிதர் தெருவிற்குச் சென்றபோது ஆப்ரஹாம் பண்டிதர் வாழ்ந்து வந்த வீட்டைச் சுற்றிக் காண்பித்தார் அவர். அத்துடன் அவரது வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சி களையும் எடுத்துரைத்தார் திரு. ஜேம்ஸ்.

## 14) ஆப்ரஹாம்பண்டிதரின் வாழ்வும், பணியும்

சித்த மருத்துவத் துறையிலும், இசைத்துறையிலும் பெரும் புகழுடன் தஞ்சையில் வாழ்ந்த மேதையான ஆப்ரஹாம் பண்டிதர் 2-8-1959ஆம் ஆண்டு திரு. முத்துசாமி நாடாருக்கும், அன்னம்மாள் என்பவருக்கும் மகனாகப் பிறந்தார்.

இவர் முதலில் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியராக திண்டுக் கல்லில் பணியாற்றினார். அங்கே “யார்க்” என்ற மேல்நாட்டு மதப் பிரசாரகரின் அன்பும், ஆதரவும் கிட்டியது. அவருடைய உதவி ஆப்ரஹாம் பண்டிதரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது.

தனது தந்தையுடன் பிறந்த பதினோறு பேரும் பெரும் கொள்ளை நோய்க்குப் பலியானார்கள் என்பதை சிறு வயதில் கேட்டு, அதிர்ச்சியும், கவலையும் கொண்டிருந்த ஆப்ரஹாம்



பண்டிதர், நோய் தீர்க்கும் மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உறுதியும் கொண்டு அதற்காகப் பல ஆண்டுகள் உழைத்து வந்தார். திண்டுக்கல் வழியாகப் பழனி செல்லும் துறவிகளை அணுகி மருந்துகள் தயாரிக்கும் முறைகளைச் சேகரித்தார். பல ஊர்களுக்குச் சென்று மருத்துவ மேதைகளை அணுகி மருந்து செய்யும் முறை களைக் கண்டறிந்தார். சுருளி மலையில் தவத்திலிருந்த ஒரு சித்தரின் அருள் இவருக்குக் கிட்டியது, அந்தச் சித்தரி டமிருந்து பல்வேறு மருந்துகளைத் தயாரிக்கும் முறை யினைப் பயின்றார். பின்னர் இவர் மருந்துகளைத் தயாரித்து எளிய விலையில் மக்களுக்குக் கொடுத்தார்.

## 15) இசைப்பயிற்சி

திண்டுக்கல்லைவிட்டு, தஞ்சையில் குடியேறிய இவர் பெண்களுக்கான நேப்பியர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார். இங்கு பணியாற்றிய போது சங்க இலக்கியங் களைக் கற்று அறிந்தார். வயலின், வீணை, வாய்ப்பாட்டு முதலிய வற்றில் பயிற்சி மேற் கொண்டு இசை ஞானம் பெற்றார். தன் குடும்பத் தினரையும் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். இதன் பலன் வழிவழி இசைக்குடும்பம் என்ற பெயரைப் பெற்றுவிட்டது. இன்றும் இவர் வழிக்குடும்பம், இசைக்குடும்பம், மருத்துவக் குடும்ப மாகத் திகழ்கிறது.

இவர் தயாரித்த சித்த மருந்துகள் இவருக்கு பெரும் புகழை ஈட்டித் தந்தன. ஆப்ரஹாம் பண்டிதர் மாத்திரைகள் என்ற கருப்பு, சிவப்பு நிற மாத்திரைகள் குழந்தை வைத்தி யத்திற்கு பயன்பட்டு இவருக்கு மருத்துவத்துறையில் அழியாப் புகழைத் தேடித்தந்தன. கி.பி.1898 ஆம் ஆண்டு

நாட்டில் தோன்றிய பிளேக் என்ற கொள்ளை நோய் காரண மாக பலர் மாண்டனர். ஆப்ரஹாம் பண்டிதர் கண்டு பிடித்த மருந்து பலரைப் பிழைக்க வைத்தது. தஞ்சை நகருக்கு அருகில் பெரிய பண்ணை அமைத்து பயன் தரும் மருந்துச் செடி களுடன், பழ மரங்களையும், காய்கறிகளையும் பயிரிட்டார். நாட்டு மக்களுக்குப் புதுமுறை வேளாண் மையில் பற்று ஏற்பட காரணமாக விளங்கினார். இவரது தோட்டத்தை சென்னை கவர்னர் கண்டு, வாழ்த்தினார். அரசு இவருக்கு ராவ் சாகிப் என்ற பட்டத்தை அளித்தது.

## 16) கர்ணாமிருத சாகரம்

ஆப்ரஹாம் பண்டிதர், மருத்துவத்தில் மட்டுமின்றி இசை யிலும் வல்லுநராக இருந்தார். தமிழில் இசையின் நுட்பங்களை ஆராய்ந்து ''கர்ணாமிருதசாகரம்'' என்ற சிறந்த நூலை எழுதி வெளியிட்டார். இசைகளைப் பற்றி கூறும் இந்த சிறந்த ஆராய்ச்சி நூலை தமிழ் நாட்டின் ஒவ்வொரு சங்கீத வித்வானும் படிக்க வேண்டியது அவசியம் என்பது அறிஞர்கள் கருத்து. சுரங்களையும், சுருதிகளையும், இராகம் உண்டாக்கும் வழிகளையும் அனுசரித்துப் பாடி வந்த பன்னி ரெண்டாயிரம் ஆதி இசைகளைப் பற்றியும், அவற்றின் பரம்பரையில் உதித்த ராகங்களைப் பற்றியும் பேசுகிறது இந்நூல். இரண்டு பாகங்களைக் கொண்டு 1346 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய இந்த இசை ஆய்வு நூலை இவர் பதினைந்து ஆண்டுகள் உழைத்து எழுதியுள்ளார். தமிழ் இசைதான் ஆதி இசை என்பதை நிலை நாட்டும் முடிவு களையும் சேர்த்து இந்நூலில் வெளியிட்டு இருக்கிறார்.

இவரும் அரிகேச நல்லூர் முத்தையா பாகவதரும் இணைந்து, ''சங்கீத வித்தியா மகா ஜன சங்கம்'' என்ற



பெயரில் சங்கம் ஏற்படுத்தி, முதல் மகாநாட்டை 27-5-1912 அன்று நடத்தினார். 1912ஆம் ஆண்டு முதல் சுமார் பத்து ஆண்டுகள் ஆண்டுதோறும் இசை மகா நாடுகள் நடத்திப் புகழ் பெற்றார். இந்த மகாநாடுகளுக்கு பாரதத்தின் பல பகுதிகளிலிருந்து இசை மேதைகள் வரவழைக்கப்பட்டு, தமிழ் இசை பற்றி ஆய்வு செய்து இருக்கிறார்கள். இந்த ஆய்வுகளைக் கொண்டு தனது அரிய நூலை வெளியிட்டார். இவருடைய நூலில் காணும் முன்னுரையைக் கொண்டே இந்நூலின் தன்மையை உணரமுடியும்.

பொன் போற் சிறந்த சங்கீத சாஸ்த்ரத்தின் அடிப்படையாய் விளங்கும் சுருதிகளைப் பற்றிய பல சந்தேகங்களை நீக்கித் தமிழ் மக்களிடையே வழங்கி வந்த இசைத்தமிழிலிருந்து பல மேற்கோள் களையும், தற்காலத்தில் வழங்கி வரும் அனுபோகங்களையும், திட்டமான அளவையும் விளக்கிக் காட்டி இந்நூலை எழுதி முடிப்பதற்கு வேண்டும் எல்லா நன்மைகளையும் செய்து உதவிய கருணானந்த முனிவருக்கு இந்நூல் உரிமையாக்கப் பெற்றது.

சுருதிகளைப் பற்றிச் சொல்லும் இந்த முதல் புத்தகத்திற்கு ''கருணானந்தர் பொற்கடனம்'' என்று பெயர்.

**முதல்பாகம்:** இப்புத்தகம் நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதற்பாகம் சங்கீதம் பூர்வ காலத்தில் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழில் ஒன்றாயிருந்தது என்பதையும், தமிழ் மொழியின் பூர்வீகத் தையும், தமிழ் நாட்டின் தொன்மையையும், இசைத்தமிழ் வழங்கிய விவரத்தையும் சில இசை வல்லோரையும் பற்றிச் சொல்லும். (275 பக்கங்கள்)

**இரண்டாம் பாகம்:** இது ஒரு ஸ்தாயியில் வழங்கும் சுரம்

சுருதிகளைப் பற்றிப் பலர் சொல்லும் அபிப்ராயங்களை ஒத்துப் பார்த்து அவைகள் தற்கால அனுபோகத்திற்கு ஒத்து வராதவை என்று தெளிவுறக் காட்டும். (238 பக்கங்கள்)

**மூன்றாம் பாகம்:** இது இசைத் தமிழில் வழங்கி வந்த சுரம் சுருதிகள் நுட்ப சுருதிகளையும், பூர்வ காலத்தில் வழங்கி வந்த தமிழ்ப்பண் முறைகளையும், யாழையும், கிரகசுரம் மாற்றுவதையும் பல சக்கரங்களினால் விளங்கக் காட்டும். (225 பக்கங்கள்)

**நான்காம் பாகம்:** இது ஆயப்பாலையில் உண்டாகும் 12 சுரங்களுக்கும், வட்டப் பாலையிலுண்டாகும் 24 சுருதி களுக்கும், திரிகோணப் பாலை சதுரப்பாலைகளில் உண்டாகும் 48, 96 நுட்பமான சுருதி களுக்கும் லாகரித முறைப்படி கணிதமும், அளவும், சென்ட்ஸும், ஓசையின் அலைகளும் சொல்வதோடு நாலு அட்டவணைகளில் அவைகளுக்கு, திருஷ்டாந்தமும் எடுத்துக் காட்டும், இந்நூலுக்கு டாக்டர்.உ.வே. சாமிநாத ஐயர், பரிதிமாற் கலைஞன் என்ற சூரிய நாராயண சாஸ்திரியார் போன்ற தமிழ் அறிஞர்கள் பாராட்டுரை வழங்கியுள்ளனர். தஞ்சைத் தரணிக்கு பெருமை சேர்த்த மாமனிதர் இவர்.

## 17) படிக்காத மேதை

நானும் சுந்தரமும் எப்போதும் ஒன்றாகவே காணப் படுவோம். கல்லூரி விடுமுறை நாட்களில் ஒரே பொழுது போக்குத் திரைப்படம் பார்ப்பதுதான். அந்த ஆண்டு ஜூன் 25ஆம் நாள் திரையிடப்பட்ட 'படிக்காத மேதை' படம் திரையிடப்பட்ட அனைத்து ஊர்களிலும் 100 நாட்களுக்கு மேல் ஓடி, சிறந்த படமாகத் திகழ்ந்தது. இந்தப்படம் தஞ்சை நியூடவர் டாக்கீஸில் திரையிடப்பட்டது. எந்தத் திரைப்



படத்திற்குச் சென்றாலும் பால்கனி டிக்கெட் வாங்கித் தான் செல்லவேண்டும். ஏனெனில் மற்றைய வகுப்புகளில் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் காணப்படுவர். பால்கனி தவிர மற்றைய டிக்கெட்டுகள் வாங்கிப் படம் பார்த்தால் ‘‘கருமிவாத்தியார்’’ என்ற பட்டப்பெயர் கொடுக்கப்படும். இதற்குப் பயந்து கொண்டே கூட்டம் இல்லாவிட்டாலும் பால்கனி வாங்கிப் படம் பார்க்கவேண்டும். இது ஒரு எழுதாத சட்டம். தயாரிப்பு பாலா மூவிஸ். நடிக நடிகையர்: சிவாஜி கணேசன், ரங்காராவ், அசோகன், டி.ஆர். ராமச்சந்திரன், முத்துராமன், கண்ணாம்பா, சௌகார்ஜானகி, சந்தியா, ஈ.வி. சரோஜா, மற்றும் பலர். கதை: ஆஷா பூர்ணாதேவி. (வங்கக் கதாசிரியை) வசனம். கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், பாடல்கள். பாரதியார், மருதகாசி, கண்ணதாசன். இசை. கே.வி. மகாதேவன். டைரக்ஷன். ஏ. பீம்சிங். கதைச்சுருக்கம்: ராவ்பகதூர் சந்திரசேகரன், பங்கு மார்க்கெட்டில் பணத்தைக் குவித்த செல்வந்தர். இவருக்கு மகன்கள் மூவர். மகள் இருவர். எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை அறியாத இவர் எல்லாச் செல்வத்தையும் பெற்று, **அறுபதுக்கு அறுபது** கொண் டாடினார்.

ரங்கன் வெள்ளை உள்ளம் படைத்த வெகுளி, அவனுக்கு உலகம் தெரியாது. ராவ்பகதூரும், அவர் மனைவியும், லக்ஷ்மி என்ற அவனைக் கைப்பிடித்த பெண்ணும்தான் அவனைச் சரிவரப் புரிந்து கொண்டவர்கள். கடைசி மகள் கீதாவிற்கு நிச்சயமான தேதியிலே பங்கு மார்க்கெட்டில் வீழ்ச்சி ஏற்பட, பல இடங்களிலும் கடன் ஏற்படு கிறது. இந்த நிலையைக் கண்டு பெண் வேண்டாம் என்று பிள்ளை வீட்டார் சொல்லிவிடுகின்றனர். இடிமேல் இடி. மகன்கள் ஒதுங்கி விடுகின்றனர். ரங்கன் மட்டும்

அவருக்கு ஆதரவாக இருந்தான். பிள்ளைகள், தந்தை சொன்ன சிக்கன வாழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்த தோடு ரங்கனையும் அவமதிக்கின்றனர். லக்ஷ்மி, ரங்கனிடம் ‘‘வீண்பழிச் சொல்லுடன் இங்கு இருக்க வேண்டாம்’’ என்று அவனை வற்புறுத்துகிறாள். அதற்கு ரங்கன் ‘‘பிரிந்துபோவது பைத்தியக்காரத்தனம்’’ என்று கூறுகிறான்.

நெருக்கடி நிலை. ராவ்பகதூரும் அவர் மனைவியும், மனமின்றி ரங்கனையும், லக்ஷ்மியையும் வெளியே அனுப்பு கிறார்கள். வெளி உலகம் அறியாத அவன், பல விசித்திரங் களைக் காண்கிறான். ஓரிடத்தில் வேலையில் சேர்கிறான். அங்கு அவனுக்குக் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு, எப்பொழுதும் சிகரெட் பிடித்துக் கொண்டு இருக்கும் பழக்கத்திற்கு ஆளான ராவ் பகதூருக்கு சிகரெட் வாங்கி வருகிறான். பணத்தைப் பாழாக்கிய தற்காக அவன் கண்டிக்கப்படுகிறான். வேதனை உள்ளத்துடன் அழுத வண்ணம் அவன் வெளியேறுகிறான்.

ராவ்பகதூரின் பேரன் செய்த பணமோசடி குறித்து ஒரு மார்வாடி ராவ்பகதூரிடம் வழக்குத் தொடரப் போவதாக அச்சுறுத்துகிறான். அதிர்ச்சி தாங்காத ராவ்பகதூர் மரண மடைகிறார். அவர் மனைவி நிலை பரிதாபத்துக்கு உள்ளாகிறது. வீடு ஏலத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. பிள்ளைகள் ஏனோதானோவென்று போய் விடுகிறார்கள். இந்த நிலையில் ரங்கன் துணிந்து செயல்படுகிறான். அவனது அன்பு உள்ளம் அனைவருக்கும் புரிகிறது. அந்தப் படிக்காத மேதையின் பாசம் வெளிப்படுகிறது.

## 17-அ) சிவாஜியின் நடிப்பு, சிகரத்தைத் தொட்டது

S.V.ரங்காராவ் தமது உணர்ச்சிமிக்க நடிப்பினால்



அனைவரையும் கவர்ந்தார். கண்ணாம்பாவும் இவருக்கு இணையாக நடித்துப் பெயர் பெற்றார். சிவாஜிகணேசன் ஏற்று நடித்ததோ ரங்கன் என்ற அருமையான குணச்சித்திரக் கதாபாத்திரம். அந்தப் பெரிய மனிதரின் வீட்டிலே பணியாளாய், எடுபிடியாய், அதேசமயம் ஒருமகனைப் போல உரிமையும் பாசமும் கொண்டவனாய் வாழும் கதாபாத்திரம். இந்தக் கதாபாத்திரத்தில் சிவாஜி வாழ்ந்து காட்டினார் என்றால் மிகையாகாது. சௌகார் ஜானகியின் கதாபாத்திரமும் சிறப்பானது. மிகச் சிறப்பாக நடித்து தன் திறமையை வெளிப்படுத்தினார். மற்றைய கதாபாத்திரங்களும் நிறைவாக நடித்தனர்.

## 18) கே.வி. மகாதேவனின் இனிமையான இசை அமைப்பு

கே.வி. மகாதேவனின் இனிமையான இசையும் உள்ளத்தைத் தொடும் பாடல்களும் இந்தப் படத்தின் வெற்றிக்குத் துணை புரிந்தன. பல காட்சிகளில் வசனமும் உள்ளத்தைத் தொட்டது. **ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா** என்ற பாடல், கதையின் கருவைப் படம் பிடித்துக் காட்டியது என்பதுடன் உணர்ச்சிக் குவியலாக இருந்தது. மற்றும் ‘‘பக்கத்திலே கன்னிப் பெண்ணிருக்கு’’, ‘‘சீவிமுடிச்சு சிங்காரிச்சு’’, ‘‘உள்ளதைச் சொல்வேன்’’, ‘‘படித்ததினால் அறிவு பெற்றோர்’’, பாரதியாரின் ‘‘எங்கிருந்தோ வந்தான்’’ (மிக உயர்ந்த கற்பனையுடன் இணைக்கப்பட்டிருந்தது) போன்ற பாடல்கள் நிறைவைத் தந்தன. பீம்சிங்கின் திறமையான டைரக்ஷன் இப்படத்தை ஒரு வெற்றிச் சித்திரமாக்கியது.

## 19) பாரதியாரின் காலத்தால் அழியாத பாடல்கள்

பாரதியாரின் பாடல்களை திரைப்படங்களின் வழி

பரப்பிய மாபெரும்பணிக்கு வித்திட்டவர் திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார் ஆவார். 14-1-1947ஆம் நாள் வெளியிடப்பட்ட ''நாமிருவர்'' படத்தில் பாரதியாரின் பாடல் இடம்பெற்றது. பாரதியாரின் ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று'' என்ற பாடல் நாடெங்கும் மக்களால் பாடப்பட்டு வந்தது.

படிக்காத மேதை படத்தில் பாரதியார் ''கண்ணன் பாட்டு'' என்ற தலைப்பில் ''கண்ணன் என் தோழன்'', ''கண்ணன் என் தாய்'', ''கண்ணன் என் தந்தை'', ''கண்ணன் என் சேவகன்'', ''கண்ணன் என் அரசன்'', ''கண்ணன் என் சீடன்'', ''கண்ணன் என் சத்குரு'', ''கண்ணம்மா என் குழந்தை'', ''கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை'', ''கண்ணன் என் காதலன்'', ''கண்ணன் என் காந்தன்'', ''கண்ணம்மா என் காதலி'', ''கண்ணன் என் ஆண்டான்'', ''கண்ணம்மா எனது குலதெய்வம்'' என்ற தலைப்புகளில் பல்வேறு பாடல்களை இயற்றியுள்ளார். இந்தத் தலைப்பு களில் ''கண்ணன் என் சேவகன்'' என்ற பகுதியிலிருந்து சில வரிகள் பாடலாகப் படமாக்கப்பட்டிருந்தது. பார்ப்போர் நெஞ்சைத் தொடும் வண்ணம் இந்தப் பாடலும் அமைந்திருந்தது. திரு. சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பாடல்களில் அமரத்துவம் பெற்ற சில பாடல்களில் இதுவும் ஒன்று. பாரதியாரின் இந்தப்பாடலை படத்தில் முழுமையாக எடுத்துக் கொள்ளவில்லை.

## 20) எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்;

''கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாந் தாமறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;



''ஏனடா, நீ நேற்றைக் கிங்குவர வில்லை'' யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்ததென்பார்;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டா நாளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்: ஒன்றுரைக்க வேறுசெய்வார்;
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்;
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம் பலத்துரைப்பார்;
எள்வீட்டி லில்லையென்றால் எங்கு முரசறைவார்;
சேவகாராற் பட்ட சிரமமிக வுண்டு, கண்டீர்;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை;
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்;

*எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்*
*மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடுவேன்*
*வீடுபெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்*
*சொன்னபடி கேட்பேன் துணிமணிகள் காத்திடுவேன்*
*சின்னக்குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே*
*ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;*

காட்டுவழி யானாலும், கள்ளர்பய மானாலும்,
இரவிற் பகலிலே யென்னேரமானாலும்,
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர், தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்;
கற்றவித்தை யேதுமில்லை; காட்டு மனிதன் ஐயே!

ஆனபொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ் சனைபுரியேன்''
என்றுபல சொல்லிநின்றான். ''ஏதுபெயர்? சொல்'' என்றேன்.

''ஒன்றுமில்லை; கண்ணனென்பர்; ஊரிலுள்ளோர் என்னை'' என்றான்;

கட்டுறுதி யுள்ளவுடல், கண்ணிலே நல்லகுணம்
ஒட்டுறவே நன்றா வுரைத்திடுஞ்சொல்—ஈங்கி வற்றால்
தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
''மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்;

கூலியென்ன கேட்கின்றாய்? கூறு'' என்றேன். ''ஐயனே!
தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை;

நானோர் தனியாள்; நரைதிரைதோன் றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை'' யென்றான்.
பண்டைக் காலத்துப் பயித்தியத்தி லொன்றெனவே
கண்டு, மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன்; அன்றுமுதற்கொண்டு
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணனால்
பெற்றுவரு நன்மையெல்லாம் பேசி முடியாது
கண்ணை யிமையிரண்டும் காப்பதுபோல், என் குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்

வீதி பெருக்குகிறான், வீடு சுத்த மாக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெலாந் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்,
ஒக்கநயங் காட்டுகிறான்; ஒன்றுங் குறைவின்றிப்



பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கிப் மோர் வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து;
நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப், பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான். இடைச்சாதி யென்றுசொன்னான்
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்துவிட்டேன்

கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவு மவன்பொறுப்பாய்ச்
செல்வம், இனமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாஞ் சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்கொண்டடேன்! கண்கொண்டேன் கண்கொண்டேன்
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமு முள்ளனவே!''

## 21) ஹிந்தியே ஆட்சிமொழி என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மொழிவாரி அடிப்படையில் பிரிக்கப்பட்ட பிறகு பல்வேறு கலகங்கள், போராட்டங்கள் ஆங்காங்கே நிகழ்ந்தன. 1955ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆட்சிமொழி பற்றிய ஆலோசனைக்குழு 1956ஆம் ஆண்டு தனது அறிக்கையை வெளியிட்டது. இந்தக் குழுவானது ஆங்கிலமொழியின் ஆதிக்கம் பல்வேறு கட்டங்களில் குறைக்கப்பட்டு, ஹிந்தி மொழி எல்லாத்

துறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும், இறுதியில் ஆட்சி மொழியாக ஹிந்தி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் பரிந்துரை செய்தது. ஆயினும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த மேற்கு வங்காளத்தைச் சார்ந்த சுனிதி குமார் சாட்டர்ஜி மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த டாக்டர் சுப்பராயன் ஆகிய இருவரும் தங்கள் எதிர்ப்பைத் தெரி வித்தனர். அவர்கள் நாடெங்கும் ஹிந்தியைத் திணிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்று கூறினர். இந்தக்குழுவின் அறிக்கையை ராஜ்யசபா மற்றும் லோக்சபா உறுப்பினர்கள் கூட்டுக்குழு ஆய்வுசெய்து தனது அறிக்கையை வெளி யிட்டனர்.

அதன் அடிப்படையில் 1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்திய ஜனாதிபதி ஓர் ஆணையைப் பிறப்பித்தார். அதன்படி ஆங்கில மொழியின் ஆதிக்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1965ஆம் ஆண்டு தொடங்கி நாடெங்கும் ஹிந்தி மொழியே ஆட்சி மொழியாக விளங்கும், ஆயினும் ஆங்கில மொழி இணைஆட்சி மொழியாக விளங்கும் என்றும் இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் இந்த ஆணைக்கு இணங்க ஹிந்தி மொழியை வளப்படுத்து வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனாதி பதியின் இந்த ஆணை தென் தமிழகத்தில் பெருத்த கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. தமிழ் நாட்டிலுள்ளோர் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 22) துச்சாதனனும், ராஜாஜியும்

1937ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்தில் இந்தியை ஆதரித்த ராஜாஜியும், ஜனாதி



பதியின் இந்த ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதே ராஜாஜியை தமிழன்னையைக் குத்திக் கொலை செய்யும் பாதகனாகச் சித்தரித்து 18-5-1938 ஆம் நாள் விடுதலை நாளேட்டில் கேலிச்சித்திரம் வெளியிடப்பட்டிருந்தது. அதே போல் குடியரசு என்னும் நாளிதழில் 19-12-1937 ஆம் நாள் தமிழ்த்தாயைத் துகிலுரியும் துச்சாதனனாக ராஜாஜி சித்தரிக்கப்பட்டிருந்தார்.

## 23) ஹிந்தி அரக்கி ஒழிக!

1960ஆம் ஆண்டு தோன்றிய ஹிந்தி எதிர்ப்பு அலை 1962- 1965- காலகட்டத்தில் மொழிப் போராட்டமாக மாற்றம் அடைந்தது. சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன் ஆகியோர் தீக்குளித்து மாண்டனர். ஹிந்தி ஓர் அரக்கியாக சித்தரிக்கப் பட்டு கேலிச் சித்திரங்கள் வெளியிடப்பட்டன. ஹிந்தி அரக்கி ஒழிக என்ற குரல் தமிழகம் எங்கும் ஒலிக்கத் தொடங்கியது. ஹிந்தி எதிர்ப்பு அலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம். 1962ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் 15 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

தி.மு.க. 1967ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப் பற்றியது. அன்று தொடங்கி இன்றுவரை தமிழ்நாட்டை தி.மு.க. அல்லது அ.தி.மு.க. தான் ஆண்டு வருகிறது. காமராஜர் ஆட்சியை மீண்டும் மலரச் செய்வோம் என்று வாய் கிழியப் பேசும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தோர் தி.மு.க அல்லது அ.தி.மு.க. போடும் தொகுதிப் பிச்சையை ஏந்தி மகிழ்ச்சியடைகின்றனர். தமிழ்நாட்டைப் பொருத்தவரை காங்கிரஸின் அழிவிற்கான வித்து காங்கிரஸ்காரர்களாலேயே 1960-65 கால கட்டத்தில் விதைக்கப்பட்டது.

## 24) ஹிந்தி எதிர்ப்பும், ப்ராஹ்மணர்களின் மீதான வெறுப்பும்

ஹிந்தி எதிர்ப்பலை ஸம்க்ஸ்ருத மொழியின் அழிவை நோக்கிச் சென்றது. அது ப்ராஹ்மணர்களுக்கு எதிரான போராட்டமாக, அவ்வப்போது பொறுப்பில் உள்ள முதல மைச்சர் போன்றோரால் ஆரிய திராவிடப் பிரச்சனையாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆரியர்கள் தலை வனான ராமன், திராவிடர்கள் தலைவனான இராவணனைக் கொன்று விட்டான் என்று அவ்வப்போது மொழி, இனப்பிரச்ச னையைக் கையில் எடுத்துக் கொண்டு தாங்கள் மதச்சார்பற்ற அரசை நடத்தி வருவதாகக் கூறிக்கொண்டு வருகின்றனர். இவர்களைப் பொருத்தவரை இந்த நாட்டின் பழங்குடி யினரான இந்துக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்ப வர்கள் மதவாதிகள்.

கிறிஸ்தவர் மற்றும் முகம்மதியர்கள் சமூகத்திற்கு என்ன அநீதி இழைத்தாலும் அவர்களை ஆதரித்துப் பேசுபவன் மதச்சார்பற்றவன். ஆட்சியைப் பிடிப்பதற்கும் தமிழ்நாட்டில் ஆரியர் திராவிடர் பிரச் சனையை அவ்வப் போது பேசுவதற்கும் காரணமாய் அமைந்தது 1960ஆம் ஆண்டு அப்போதைய மத்திய அரசாங்கம் மேற்கொண்ட ஹிந்தித் திணிப்புக் கொள்கையே ஆகும். இதுபற்றிய மேலும் பல உண்மைகளை இனிவரும் காலங்களில் இந்தக் கட்டுரைத் தொடரைப் படித்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

## 25) திருச்சி மாநகருடன் உறவு தொடர்ந்தது

பெரும்பாலான ஞாயிற்றுக் கிழமைகளில் திருச்சிக்குச் சென்றுவிடுவேன் நான். அங்கே என் நண்பர்களான ஸ்ரீநிவாஸன் மற்றும் S.சுப்ரமண்யம் ஆகிய இருவருடன்,



D.சுப்ரமண்யம் என்ற மற்றொரு நண்பனும் முறையே செயின்ட் ஜோசப் கல்லூரி மற்றும் தேசியக் கல்லூரியில் வேலை பார்த்து வந்தனர். ஆண்டார்தெரு விலிருந்து மலைக் கோட்டைக்குச் செல்வதற்குப் படிக்கட்டுகள் அமைந்து உள்ளன. மலையைச் சுற்றி வீடுகள் காணப்படும்.

ஆண்டார் வீதியிலிருந்து மலைக்கோட்டைக்குச் செல்வ தற்கான படிக்கட்டுகளின் வலதுபுறம் அமைந்திருந்த ஓர் அறையில் இவர்கள் தங்கியிருந்தனர். ஞாயிற்றுக் கிழமைகளில் காவிரியில் நீராடுவது, மாயவரம் லாட்ஜில் உணவு உட்கொள்வது, புதிதாக வெளி வந்துள்ள திரைப்படம் பார்ப்பது இவைகள்தான் பொழுதுபோக்கு.

## 26) Blar-இன் அறிவுரை

**பூண்டி புஷ்ப**ம் கல்லூரி ஆங்கிலத்துறைப் பேராசிரி யராகப் பணி புரிந்து வந்தவர் திரு. B.L. ரங்கநாதன். இவரை அனைவரும் **Blar** என்று அழைப்பர். இவர் அரசினர் கலைக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய் இருந்து ஓய்வு பெற்றவர். வயது 65. இவர் என்னிடம் 'நீ வாங்கும் சம்பளத்தில் ஒவ்வொரு மாதமும், ஒன்றின் கீழ் நாலு பாகம் வேறு வேலை தேடுவதற்கு விண்ணப்பம் செய்திடுவ தற்கும், அத்துடன் கட்டணமாக அனுப்புவதற்கும் செல விட்டுக் கொண்டே இருக்கவேண்டும். நாம் ஒரு வேலையில் சேர்ந்துவிட்டோம் இது போதும் என்ற நினைவு உன்னிடம் இருக்கக்கூடாது. இதைவிட நல்ல வேலை எங்கே கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு நாள் தோறும் நாளிதழ்களைப் பார்த்து வேலைக்கு விண்ணப்பம் அனுப்பிக் கொண்டே இருக்கவேண்டும்' என்று எனக்கு அறிவுரை கூறிவந்தார். அவருடைய தூண்டுதலின் பேரில் சென்னை A.G..S. Office-இல் Sr. Assistant பதவிக்கு விண்ணப்பம் செய்தேன்.

## 27) 'ஹிந்தி மாலும் நஹி'

1960 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நேர் காணலுக் கானக் கடிதம் வந்தது. என்னுடைய அறையில் வசித்துவந்த சுகவனத்தின் வீடு சென்னை சேத்துப்பட்டில் அமைந்திருந்தது. அவருடன் நான் சென்னைக்குச் சென்று அவருடைய வீட்டில் தங்கியிருந்து நேர் காணலுக்குச் சென்றேன். இதே A.G.S. Office-இல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது Junior Assistant வேலை தேடிச் சென்றதையும், நேர்காணலின்போது கேட்கப்பட்ட "Are you related to T.T.K."என்ற கேள்விக்கு திமிர் கலந்த பதில் கூறியதையும் முன்னமே குறிப்பிட்டு உள்ளேன்.

இந்த முறை என்னிடம் ஹிந்தி தெரியுமா? என்ற கேள்வி கேட்கப்பட்டது. இந்தத் தொடர் கட்டுரையின் சென்ற இதழில் தமிழகம் முழுவதிலும் ஹிந்தி மொழிக்கு எதிரான கிளர்ச்சி நடை பெற்று வந்ததைக் குறிப்பிட்டுள்ளேன். என்னை நேர்காணல் கண்ட அதிகாரிகளிடம் எனக்கு ஹிந்தி தெரியாது, அந்த மொழியைப் படிப் பதில் விருப்பம் இல்லை என்று கூறினேன். உடனே அவர்கள் 'மத்திய அரசு வேலையில் நீ அமருவதற்கு லாயக்கில்லை' என்று கூறினர். ஏற்கெனவே ஒரு வேலையில் இருக்கிறோம் இவர்கள் வேலை கொடுக்காவிட்டால் ஒன்றும் ஆகி விடாது என்று மனதைத் தேற்றிக் கொண்டு வந்ததுதான் வந்தோம் மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போவோம் என்று, 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' நாவல்களில் விவரிக்கப்பட்டுள்ள சில காட்சிகளை மனக் கண்ணே கண்டு களித்துக் கொண்டு அந்த ஊரைச் சுற்றிப் பார்த்தேன். அப்போதெல்லாம் மிகக்குறைந்த அளவிலேயே மக்கள் அங்கு காணப்படுவர்.



## 28) நூலகத் தந்தை திரு. ரங்கநாதன்-வாழ்வும், பணியும்

புஷ்பம் கல்லூரி Librarian ஆகப் பணியாற்றி வந்தவர் மன்னார்குடியைச் சார்ந்த திரு. கணேசன் என்பார். தடித்த கண்ணாடி, வெள்ளை பேண்ட், வெள்ளை T-Shirt அணிந்த தோற்றம். ஒரு நாள் அவர் என்னிடம் நூலகத் தந்தை என அனைவராலும் பாராட்டப்படும் திரு. R. ரங்கநாதன் நமது கல்லூரிக்குப் பல்கலைக்கழக நூலகக் கல்விக் குழுவின் தலைவர் என்ற முறையில் வருகை தர உள்ளார். அவரிடம் உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன் என்று கூறினார். எனக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் கல்லூரி நூலகத்திற்குச் சென்று பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களைப் படித்து வருவேன். மற்றைய துறை ஆசிரியர் களைவிட, மாறுபட்ட நடைமுறையைக் கொண்ட என்னிடம் அவர் நன்மதிப்புக் கொண்டிருந்தார்.

திரு. ஆர் ரங்கநாதன், சீர்காழி உபயவேதாந்தபுரத்தில் இராமாமிர்த ஐயருக்கும், சீதாலட்சுமிக்கும் மகனாக 9-8-1892 ஆம் நாள் பிறந்தார். ஆறுவயதில் தந்தையை இழந்து, பாட்டனாரின் ஆதரவில் இளம் வயதை சீர்காழியில் கழித்த இவர், சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்று வந்தார். தேவாரம், திருவாசகம் ஆகியவற்றை முழுமையாகப் பயின்றவர். 1907ஆம் ஆண்டு இவர் ருக்மிணி என்ற பெண்ணை மணந்தார்.

1908ஆம் ஆண்டு சென்னை சென்ற இவர், கிறித்துவக் கல்லூரியிலும், மாநிலக்கல்லூரியிலும் பயின்றார். 1913இல் பி.ஏ. பட்டமும், 1915இல் கணிதத்தில் பட்டமும், 1917இல் சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக்

கல்லூரியில் படித்து, கல்வி பயிற்று வித்தலில் சான்றித ழையும் பெற்றார். 1921இல் மாநிலக் கல்லூரியில் கணிதத் துறையில் உதவிப் பேராசிரியராக பணியில் அமர்த்தப் பட்டார். தனது பதினைந்தாவது வயதில் மணந்த ருக்மிணி அம்மாள் 1928இல் இறந்துவிடவே, சாரதா அம்மையார் என்பவரை அடுத்த ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். சென்னை பல்கலைக் கழகத்தில் முதல் நூலகராக சேர்ந்தார். அப்போது இந்த நூலகம் கன்னிமாரா நூலக வளாகத்தில் இயங்கி வந்தது. நூலகத்தில் மாணவர் களைப் படிக்குமாறு தூண்டினார்.

நூலகம் பற்றி பயிற்சி பெற பல்கலைக்கழகம் இவரை இங்கிலாந்திற்கு அனுப்பியது. Honours பட்டம் பெற்று தாயகம் திரும்பினார். பல்கலைக் கழக நூலகத்தை வடிவமைத்து பல்கலைக் கழக வளாகத்துக்குள்ளேயே நூலகத்தை அமைத்துச் செயல்படச் செய்தார். இவர் முயற்சியில் சென்னை பல்கலைக் கழக நூலகத்தை மக்கள் விரும்பும் நூலகமாக மாற்றினார். ஓரிடத்தில் அமராது, நூலகத்திற்கு வருபவர்களுக்காக ஓயாமல் பணியாற்றி வந்தார்.

## 29) நூல்களைப் பகுக்கும் முறை உருவாக்கப் பட்டது

ஐந்துவிதி முறைகளை உருவாக்கினார் இவர். நூல்கள் பயன் படுத்துவதற்கே, ஆளுக்கு ஒரு நூல், நூலுக்கு ஒரு ஆள், வாசகர், நூலகப் பணியாளர் காலங்கருதுக, நூலகம் வளரும் ஓர் அமைப்பு என்பவைகளே அந்த விதிமுறைகள் ஆகும். **கோலன் பகுப்பு முறையையும்** கையாண்டார். பல் வேறு வகைப்பட்ட பொருள்களில் எழுதப்பட்ட நூல்களைப் பிரித்து, நூலகத்தில் அந்தந்த பொருளுக் குரிய இடத்தில் அந்தந்த நூல்களைச் சேர்த்து வைக்கவும், நூலகத்தில் வருபவர் தாம் விரும்பிய பொருள் பற்றிய நூல்களை எளிதில் எடுத்துப் படிக்கவும், படித்தபின் அந்த நூலுக்குள்ள இடத்தில் பணியாளர் அடுக்கி வைக்கவும், நூற்றொகை தயாரிப் பதற்கும் பெரிதும் உதவினார். ஒருவர், தாமே புத்தகங்களை எடுத்துக் கொள்ளவும், வீட்டிற்கு எடுத்துச் செல்லும் முறை களையும் ஏற்பாடு செய்தார்.



## 30) முதல் நடமாடும் நூலகம் உருவானது

இவருடைய முயற்சியால் சென்னை நூலகச் சங்கம் உருவாயிற்று. இதற்கு உறுதுணையாக நூலக இயக்கம் கிராமங் களிலும் பரவ ஏற்பாடு செய்தார். **இந்தியாவில் முதல் நடமாடும் நூலகத்திற்கு ஏற்பாடு செய்தவர் இவரே.** மன்னார்குடி வட்டத்தில் மேலூர் என்ற சிற்றூரில் கௌமார மடாலயத்தார் மூலம் 8-10-1931-இல் நடமாடும் நூலகத்தைத் தொடங்கி வைத்தார். 95 கிராம ங்களுக்குச் சென்று வந்த விபரமும், மன்னார்குடியில் தானியம் கொடுத்து புத்தகம் வாங்கினார் என்ற விபரமும் அவர் எழுதிய குறிப்புகளி லிருந்து அறியப்படுகிறது. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழக நூலக வளாக நிகழ்ச்சித் தொகுப்புகளில் அக்காலத்தில் வில் வண்டியில் இத்தகைய நடமாடும் நூலகம் கிராமங் களுக்குச் சென்றது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## 31) முதல் நூலகச் சட்டம்உருவானது

திரு. ரங்கநாதன் 1944 முதல் 1955 வரை இந்திய நூலக வளர்ச்சிக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். 1944ஆம் ஆண்டு பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக பணி யாற்றிய சர். எஸ். ராதாகிருஷ்ணன்

அவர்களுடைய அழைப்பை ஏற்று காசிக்குச் சென்று, அப்பல்கலைக்கழக நூலகப் பிரிவில் பணி யாற்றினார். இவர் அமைத்த நூலகம் அனைத்து வசதிகளுடன் இன்றும் மிக உயர்ந்த நிலையில் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. 1948ஆம் ஆண்டு டில்லி பல்கலைக் கழகம் இவருக்கு "**D-Lit**" பட்டம் வழங்கியது.

காமன் வெல்த் நாட்டில் முதல் முதலாக நூலகத்துறையில் ஆராய்ச்சிகளை ஏற்படுத்தியவர் திரு. ரங்கநாதன் ஆவார். இவர் தந்த ஆலோசனைத் திட்டங்களை இந்தியா உட்பட பலநாடுகள் ஏற்றன. பெங்களூரில் அகில இந்தியப் புவியியல் ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி வந்தார். சாரதா என்று பெயரிடப்பட்ட அவர் இல்லத்தில் இருந்து கால்நடையாகவே ஆராய்ச்சி நிலையத்திற்கு நடந்து செல்வார். நடந்து செல்லும்போது நூலகம் பற்றிய பாடங் களை மாணவர்களுக்குப் போதித்தவாறு செல்வார். பின்னர் இந்நிலையம் மைசூரில் விசாலமான இடத்திற்கு மாற்றப் பட்டது.

பல நூல்களை எழுதியுள்ள இவருடைய எண்ணத்தில் 1948இல் முதல் நூலகச் சட்டம் பற்றிய சிந்தனை பிறந்தது. இச்சட்டம் கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் நடைமுறைப் படுத்தப் பட்டது. டெல்லி பொதுநூலகம் பலநாடுகளுடன் தொடர்பு கொண்டு சிறப்பாக செயல்பட வழி வகுத்துக் கொடுத்த மேதை இவர். நூலக நிர்வாகம் பற்றிய இவரது நூல் இவருக்குப் புகழைத் தந்தது. பல நாட்டு நூலக சங்கங்கள் இவரை அழைத்து ஆலோசனை கோரின. 1956இல் கிழக்கு ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் சென்று வந்தார். 1957இல் பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் இவருக்கு வழங்கியது. 1959இல் மாஸ்கோ சென்று நூலக நிலைமையை ஆராய்ந்தார்.



## 32) 1991ஆம் ஆண்டு திரு. ரங்கநாதனின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

1951இல் இன்ஸ்டாக் நிறுவனத்தின் குழு ஒன்றுக்கு ஆலோசகராகப் பணியாற்றி வந்தார். 1954 முதல் 1964 வரை எப்.ஐ. டி. குழுவின் தலைவராகச் செயலாற்றினார். 1960இல் சென்னைப் பல்கலைக்கழக நூலக கல்விக் குழுவின் தலைவராக இருந்தார். 1964இல் அமெரிக்காவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டார். பெங்களூரில் நிறுவப் பட்ட நூலக ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்புப் பேராசிரி யராகப் பணியாற்றினார். கணக்கில் திறமையுடன் விளங்கிய ரங்கநாதன் முதலில் கணக்கராகத் தொடங்கி, பின்னர் நூலக வித்தகராக மாறினார்.

தளராத உழைப்பு, கல்வியின் பால் நாட்டம், ஆர்வம், தியாகம் இவைகள் காரணமாக உயர்நிலைக்கு வந்தவர் இவர். 1957இல் சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவின்போது நூலகவியல் உயர் கல்விக்கும், அதன் வளர்ச்சிக்கும், தனது துணைவி சாரதாவின் பெயரில் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை தந்து ஆராய்ச்சி செய்யத் துணை புரிந்தார்.

இவர் 27-9-1972 அன்று தனது 80ஆவது வயதில் கால மானார். இந்திய ஜனாதிபதியாக இருந்த திரு.வி.வி.கிரி. இவரை இந்தியாவின் நூலகவியலின் தந்தை எனக் குறிப்பிட்டார். இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இவரை அறிவுலகத்திற்கு சிறந்த முன்னோடியாகத் திகழ்ந்தவர் எனத் தெரிவித்தார். இவருடைய நூற்றாண்டு விழாவினை 1991ஆம் ஆண்டு இந்திய அரசும் கொண்டாடியது.

## 33) சேலம் மஹாலக்ஷ்மி கண்ணாடித் தொழிற்சாலை

சேலத்தின் புறப்பகுதியான கருப்பூரில் அமைந்திருந்த இரும்புத் தாதுகளை வெட்டியெடுக்கும் Dalmia Iron ore சுரங்கம் ஒன்றில் Chemist post ற்கு விண்ணப்பம் செய்திருந்தேன். 1960 நவம்பர் இறுதியில் Interview கடிதம் வந்தது. சேலத்தில் என்னுடைய ஒன்றுவிட்ட அம்மாவழி சிறிய தகப்பனார் திரு. ராமாநுஜம் E.S.I. நிறுவனத்தில் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வந்தார். சேலம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும் மற்றும் சுரங்கங்களும் E.S.I. நிறுவனத்தின் கண்காணிப்பிற்கு உட்பட்ட பகுதியாகும். ஆகவே சிறிய தகப்பனாரான ஸ்ரீராமாநுஜம் துணை கொண்டு Dalmia Ironore நிறுவனத்தின் Chief Chemist -ஐ முதல்நாள் அவருடைய இல்லத்தில் சென்று பார்த்தேன்.

அவர் ஒரு கன்னடிகர். திரு. ராமாநுஜத்திடம் நிச்சயம் இந்த வேலை உங்கள் பையனுக்குத் தான் கிடைக்கும் என்று கூறி விடை கொடுத்த னுப்பினார். மறுநாள் நேர்காணல் முடிந்தது. சேலம் மாநகரத்திற்கு முதல் முறையாக அப்போது தான் நான் சென்றேன். 1957ஆம் ஆண்டு வெளிவந்த '**முதலாளி**' படத்தில் கண்ணாடித் தொழிற்சாலையில் பல் வகையான கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி செய்யப் படுவதைக் காட்சிகளாக அமைத்திருந்தனர். அவை அப்போது சேலத்தில் இயங்கி வந்த மஹாலக்ஷ்மி Glass Factory -இல் படமாக்கப்பட்டன. அந்த தொழிற்சாலையும் திரு. ராமாநுஜத்தின் கண்காணிப்புக்குட்பட்ட தொழிற் சாலையாக இருந்து வந்ததால் என்னை அங்கே அழைத்துச் சென்றார் அவர்.



***கண்ணாடி, ஆற்றுமணல் (Quartz எனப்படும் Silicon-dioxide- $SiO_2$ படிமங்கள் ஒன்றோடு ஒன்று இடித்துக் கொண்டு நீரின் விசையால் உருண்டு வரும்போது உருவாகின்றது. Soda-(Caustic Soda- NaOH), Washing Soda-$Na_2CO_3$.10 $H_2O$-,Lime Stone- Calcium Carbonate- $CaCO_3$, Borax-SodiumTetra Borate deca Hydrate-($Na_2B_4O_7$. 10 $H_2O$), Boric Acid ($H_3BO_3$) Magnesium Oxide-MgO, Lead Oxide-PbO ஆகிய பொருள்களை தேவைக்கு ஏற்பக் கலந்து அவற்றுடன் உடைந்த கண்ணாடித் துகள் களையும் சேர்த்து அவற்றை அதிக வெப்பம் கொண்ட சூளையில் (Furnace) அவற்றை ஒன்றோ டொன்று கலக்கச் செய்து அவ்வாறு கிடைக்கும் உருகிய நிலை யிலிருக்கும் அந்தக் குழம்பை கை தேர்ந்த Blowers எனப்படும் தொழிற்கலைஞர்கள் வாயினால் ஊதி, விதவிதமான கண்ணாடிப் பொருள்களைத் தயாரிக்கின்றனர். அலங்கார விளக்குகள், நீர் மற்றும் மது அருந்த உபயோகப்படுத்தப்படும் கண்ணாடி டம்ளர்கள், விஞ்ஞான ஆய்வுக் கூடங்களில் பயன்படும் உபகரணங்கள், ஹரிகேன் மற்றும் பெட்ரும் விளக்குகளுக்கான glasses ஆகியவை இவ்வாறு தயாரிக்கப்படுகின்றன. தற்போது பெரும்பாலான தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் மூலம் கண்ணாடிப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.)***

1957ஆம் ஆண்டு வெளிவந்து 100 நாட்களுக்கு மேல் ஓடிய '**முதலாளி**' திரைப்படம் படமாக்கப்பட்ட இடத்தைச் சுற்றிப் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

## 34) சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்

சேலம் என்றாலே மாம்பழம்தான் நம் நினைவிற்கு வரும். சேலம் மாம்பழத்துடன் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த மாடர்ன் தியேட்டர்சும் நம் நினைவிற்கு வரும்.

சேலத்திலிருந்து ஏற்காடு செல்லும் வழியில் அமைந் திருந்தது மாடர்ன் தியேட்டர்ஸ். அங்கு என்னை அழைத்துச் சென்றார் திரு. ராமாநுஜம்.

சேலம் நகரிலிருந்து ஏற்காடு மலைக்கு வளைந்து செல்லும் மலைச்சாலையின் தொடக்கத்திலேயே ஓர் அலங் கார வளைவு காணப்படும். கம்பீரமான அந்த வளைவின் முகப்பில் “The Modern Theatres Ltd”என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் ஒரு மிகப் புகழ்பெற்ற திரைப்பட உருவாக்க நிறுவனத்தின் நினைவுக் கல் வெட்டாகத் திகழுகின்றன. 1935லிருந்து 1982வரை 136 திரைப்படங்களையும், மாடர்ன் தியேட்டர்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தையும் உருவாக்கியவர் திரு.டி.ஆர் சுந்தரம் என்று அழைக்கப்பட்ட திருச்செங்கோடு ராமலிங்க சுந்தரம் முதலியார்!

1930-களின் தொடக்க ஆண்டுகளில் மௌனப் பட சகாப்தம் ஏறக்குறைய முடிந்து, பேசும்படங்கள் வரத் தொடங்கியிருந்தன. ஆனால் அதற்கான தொழிநுட்பமோ, மூடப்பட்ட படிப்பிடிப்பு அரங்கங்களோ தமிழ்நாட்டில் இல்லாத காரணத்தால், 1931 முதல் 1935 வரையிலும் கூட பல தமிழ்ப்படங்கள் கல்கத்தா, பம்பாய், பூனா, ஷோலாப்பூர், கோலாப்பூர் ஆகிய நகரங்களில்தான் உருவாக்கப்பட்டன. தமிழகத் தயாரிப்பாளர்கள், நடிக நடிகையர், கதை வசன கர்த்தர், இயக்குனர் மற்றும் பிற தொழில்நுட்பாளர்களைக் கூட்டிச் சென்று அந்த நகரங்களில் இருந்த படப்பிடிப்புத் தளங்களில் படம்பிடித்து வந்தனர்.

அத்தகையதொரு தயாரிப்பு நிறுவனம்தான் சேலத்தைச் சேர்ந்த ஏஞ்சல் ஃபிலிம்ஸ். 1933இல் இங்கி லாந்திலிருந்து ஜவுளித் தொழிலில் உயர்பட்டத்துடன், புது மனைவியுடன் சேலத்திற்குத் திரும்பிய டி.ஆர். சுந்தரத்திற்கு அந்தத் தொழிலின் மீது ஏனோ ஆர்வம் அவ்வளவாக இல்லை. சென்னையில் கல்வி பயின்ற அந்த ஆறேழு ஆண்டுகளில் மௌனப் படங்களை மட்டுமே பார்த்திருந்த சுந்தரத்திற்கு இங்கிலாந்தில் பயின்ற மூன்று ஆண்டுகளில் பல பேசும் படங்களைக் கண்டு இன்புறும் வாய்ப்புக் கிட்டியதால், அத்தகைய படங்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்தது. 1933இல் சேலம் திரும்பியதும் “ஏஞ்சல் ஃபிலிம்ஸ்” நிறுவனப் பங்குதாரர்களான வேலாயுதம் பிள்ளை, சுப்பராய முதலியார் ஆகியோருடன் தாமும் ஒரு பங்குதாரராகச் சேர்ந்து கொண்டார்.



படமெடுப்பதற்காகப் பம்பாய், கல்கத்தா, பூனா என்று போக வேண்டியிருக்கிறதே, அவ்வாறில்லாமல், எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு படப்பிடிப்பு அரங்கத்தை சேலத்திலேயே நிறுவினால் என்ன என்ற எண்ணம் டி. ஆர். சுந்தரத்திற்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் மலையடிவாரத்தில் பத்து ஏக்கர் நிலத்தை வாங்கி அதைச் சீர்திருத்தி படப்பிடிப்பு அரங்கம், லாபரேட்டரி, ஒலிப்பதிவுக் கூடம், படத்தைத் திரையிட்டுப் பார்க்க ஓர் அரங்கம், நடிக நடிகையர் தங்கியிருக்கக் குடில்கள், சமையல் அறைகள், உணவுக்கூடம்.... இவ்வாறு எல்லா வசதிகளையும் உள்ளடக்கியதாக அந்த வளாகம் உருவாக்கப்பட்டது. பணத்தையும், நடிக நடிகையரையும் அழைத்துக் கொண்டு அந்த வளாகத்தினுள் நுழைந்தால், அங்கேயே முழுப் படத்தையும் முடித்து, படப்பிரதியுடன் வெளியே வர முடியும் என்ற அளவிற்கு தயாரிப்பு வசதிகள் அத்தனையும் அங்கே அமைக்கப்பட்டன. 1935இல் மாடர்ன் தியேட்டர்ஸ் படப்பிடிப்பு அரங்கம் உருவானது. அதே பெயரில் தயாரிப்பு நிறுவனத்தையும் தொடங்கினார் திரு. டி.ஆர். சுந்தரம்.

## 35) மாடர்ன் தியேட்டர்ஸ்-இன் முதல் படம் சதி அகல்யா

1936இல் தமது முதல் படத்தை உருவாக்க முடிவு செய்து, புராணக் கதையாகிய சதிஅகல்யாவைத் தேர்ந் தெடுத்தார் சுந்தரம். அந்தப் படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தவர் அந்நாளைய காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவராக இருந்த திருமதி. ருக்மிணி லட்சுமிபதி. கதா நாயகியாக இலங்கையைச் சேர்ந்த தவமணிதேவி என்பவரை அறிமுகப்படுத்தினார். கதாநாயகனாக எஸ்.டி. சுப்பையா மற்றும் எஸ். வி. தாத்தாச்சாரி, எஸ்.எஸ். சகுந்தலா, துளசிபாய் ஆகியோரும் நடித்தனர். டி. ஆர். சுந்தரம் படத்தை இயக்க, ஆர். பாலுசாமி என்பவர் இசையமைத்தார். அன்றைய பிரபல பாடலாசிரியரான மதுர. பாஸ்கரதாஸ் பாடல்களை எழுதி இருந்தார். **சதிஅகல்யா** 10.3.1937 அன்று வெளியிடப்பட்டு, வெற்றி பெற்றது. தமது முதல் படமே வெற்றி பெற்றதால் டி.ஆர். சுந்தரம் மகிழ்ச்சி கொண்டார். இதே ஆண்டில் **பத்மஜோதி** என்ற படத்தையும் தயாரித்து இயக்கினார். 1938இல் மலையாள மொழியின் முதல் பேசும் படமான **பாலன்** மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் டி.ஆர். சுந்தரம் இயக்கத்தில் வெளிவந்து பெரும் வெற்றி பெற்றது. அதன் பின்னரே மலையாள மொழியில் பலரும் படமெடுக்கத் தொடங்கினர்.

## 35-அ) பி.யூ. சின்னப்பா இரட்டை வேடங்களில் நடித்த உத்தமபுத்திரன்

'Man in the iron mask' என்ற பெயரில் அலெக் ஸாண்டர்டூமாஸ் (Alexander Dumas) என்ற ஃபிரெஞ்சு எழுத்தாளரின் நாவலைத் தழுவி ஐரோப்பாவின் பல



மொழிகளிலும் திரைப்படங்கள் வெளி வந்தன. ஒரே மாதிரி இருக்கும் இரண்டு இளவரர்கள் (இரட்டைப்பிறவிகள்) ஒருவன் நல்லவன், மற்றவன் கெட்டவன். இந்த மாறுபட்ட குணச் சித்திரங்களை ஏற்று நடித்தவர் பி.யூ. சின்னப்பா. 24.10.1940- இல் வெளியான அந்த **உத்தமபுத்திரன்** திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது.

## 36) ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி

அதுவரை மாடர்ன் தியேட்டர்ஸ் உருவாக்கிய படங்களிலேயே மிக அதிக செலவும், மிகப் பெரும் வெற்றியும் பெற்ற **ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி** 1947இல் வெளி வந்தது. தன்னை மணக்க விரும்பி வருபவர்களுக்கு, ஒரு தேர்வு வைப்பாள் அபூர்வ சிந்தாமணி. தோற்றுப் போனால் தலையை வெட்ட உத்தர விடுவாள். அப்படியாக 999பேர் தலையை வெட்டி விடுகி றாள். ஆயிரமாவது நபராக வரும் ஓர் ஆணழகன் சிந்தா மணியின் குருநாதர் செய்யும் சூழ்ச்சியை முறியடித்து வெற்றி பெறுகிறான்.

பிரபலமான நாவல் அது. ஜி.ராமநாதன் இசை யமைக்க, டி.ஆர். சுந்தரமே தயாரித்து இயக்கியிருந்தார். வி.என். ஜானகி சிந்தா மணியாக நடிக்க, கதாநாயகனாக நடித்தவர் பி.எஸ். கோவிந்தன். (புளியமாநகர்-புலிக்குட்டி என்ற புகழுடன் நாடகங்களில் நடித்து வந்தவர்) போலிச் சாமியாராக எம். ஆர். சாமிநாதன், இரண்டாம் கதா நாயகியாக எஸ். வரலட்சுமி மற்றும் எம்.ஜி. சக்ரபாணி, பி.கே. சரஸ்வதி, மாதுரிதேவி, காளி என். ரத்னம் ஆகியோர் நடித்திருந்தனர். மிக நீளமான படமாகத் திகழ்ந்தது அது. மூன்றே முக்கால் மணி நேரத்திற்கு காண்பிக்கப்பட்டது இந்தத் திரைப்படம்.

## 37) எம். என். நம்பியாரின் திகம்பர சாமியார்

பாவேந்தர் பாரதிதாசனின் குறுங்காப்பியமான **எதிர்பாராத முத்தம்** என்ற காதல் கதையை மாடர்ன் தியேட்டர்ஸ் சார்பில் டி.ஆர். எஸ். தயாரிக்க எல்லிஸ் ஆர். டங்கன் இயக்கினார். கதாநாயகனின் பெயரான **பொன்முடி** என்பதே படத்தின் பெயரும் ஆனது. 1949இல் தயாரான அந்தப்படம் 1950 ஜனவரி 14ஆம் நாள் பொங்கலன்று வெளியானது. பொன்முடியாக நரசிம்மபாரதியும் பூங்கோதை யாக மாதுரிதேவியும் நடித்திருந்தினர்.

1935இல் நடிக்கத் தொடங்கி சென்ற ஆண்டு இறைவனடி சேர்ந்த திரு.எம்.என். நம்பியார் கதாநாயகனாக நடித்த படம் **திகம்பர சாமியார்.** டி.ஆர். சுந்தரம் தயாரித்து இயக்கிய இப்படத்தில் நம்பியாரின் முழுத்திறமையும் வெளிப்பட்டது. வடுவூர் துரைசாமி அய்யங்காரின் துப்பறியும் நாவல் திகம்பர சாமியார். பல வேடங்களை ஏற்று சிறப்பாக நடித்திருந்தார் எம்.என்.நம்பியார். கொடுமையின் அவதார மாக டி. பாலசுப்ரமணியம் நடித்திருந்தார். மற்றும் நரசிம்ம பாரதி, எம்.ஜி. சக்ரபாணி, வி.கே. ராமசாமி, எம்.எஸ். திரௌபதி, சி.கே. சரஸ்வதி ஆகியோரும் நடித்திருந்த **திகம்பர சாமியார்** 29.9.1950 அன்று வெளியானது. ஜி. ராமநாதன்-எஸ்.எம். சுப்பையா நாயுடு இருவரும் இசை யமைத்திருந்தனர். அப்படத்தில் இடம் பெற்ற **ஊசிப் பட்டாசே வேடிக்கையாக வைச்சாலே வெடி டபார் டபார்.... பாருடப்பா பாருடப்பா பாருடப்பா நீ....** ஆகிய பாடல்கள் இன்றளவும் பிரபலம்!

## 38) மந்திரிகுமாரி

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டல



கேசியில் வரும் இறுதிக் காட்சியை அடிப்படையாகக் கொண்டு திரு. கருணா நிதி மந்திரிகுமாரி என்ற நாடகத்தை எழுதியிருந்தார். மேடையில் வெற்றி பெற்ற **மந்திரிகுமாரி** நாடகத்தைப் படமாக்க டி.ஆர்.எஸ். முடிவு செய்தார். ஆகவே திரைக்கதை வசனத்தை எழுதும்படி கருணாநிதியைப் பணித்தார். கருணாநிதியும் கனல் பறக்கும் வசனங் களுடன் எழுதி முடித்தார். படத்தின் கதாநாயகனான தளபதியின் பாத்திரத்திற்கு எம்.ஜி. ராமச்சந்திரனை பயன்படுத்திக் கொள்ளும்படி கருணாநிதி, டி.ஆர் சுந்தரத்திடம் பரிந்துரை செய்தார். முதலில் தயங்கிய டி.ஆர். எஸ். பின்னர் ஒப்புக் கொண்டார்.

மேடை நாடகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த ராஜகுரு வேடத்தில் எம்.என். நம்பியாரையும், அவரது மகனாக வில்லன் வேடத்தில் எஸ். ஏ. நடராஜ னையும், மந்திரிகுமாரி வேடத் திற்கு மாதுரிதேவியையும், தளபதியைக் காதலிக்கும் ராஜகுமாரி வேடத்திற்கு ஜி. சகுந்தலாவையும் ஒப்பந்தம் செய்தார். நகைச் சுவைக்கு ஏ. கருணாநிதி, டி.பி. முத்துலட்சுமி, மருதகாசி, கவி. கா.மு. ஷெரீப் ஆகியோர் பாடல்கள் எழுத, ஜி. ராமநாதன் இசை யமைத்தார்.

‘‘**உலவும் தென்றல் காற்றினிலே**’’ பாடல் காட்சி ஏற்காடு ஏரியில் படமாக்கப்பட்டது. படகு ஏரியில் மிதந்து செல்வதற்கு பொருத்தமாக அந்தப் பாட்டின் இசை அமைந்திருந்தது. ‘‘**வாராய் நீ வாராய்....**’’ என்ற பாடல் காட்சி ஏற்காடு மலையடிவாரத்தில் படமாக்கப்பட்டது. மந்திரிகுமாரி படம் என்றாலே **வாராய் நீ வாராய் ..** என்ற திருச்சி லோக நாதன் பாடிய பாடல்தான் நினைவுக்கு வரும் அளவிற்குப் பிரபலமானது. மற்றும் ‘‘**அந்தி சாயுற நேரம் மந்தாரச் செடி**

**ஓரம்....**'', ''**அன்னமிட்ட வீட்டில் கன்னக்கோல் சாத்தவே....**'' ஆகிய பாடல்களும் பிரபலமாயின. படத்தை முதலில் இயக்கிக் கொண் டிருந்த எல்லிஸ் ஆர். டங்கன் பாதியில் அமெரிக்காவிற்கு திரும்ப நேர்ந்ததால், மீதியை டி. ஆர். சுந்தரம் இயக்கி 1950இல் வெளியிட்டார். மந்திரிகுமாரி மிகப் பெரும் வெற்றி பெற்றது. அப்படத்தில் கதாநாயகனாக நடித்த எம்.ஜி. ராமச்சந்திரனின் நடிப்பும், கத்திச் சண்டை போடும் திறமையும் சுந்தரத்தைக் கவரவே, அடுத்த படத்திலும் அவரையே கதாநாயகனாக்கினார். அந்தப் படத்திற்கு **சர்வாதிகாரி** என்று பெயரிடப்பட்டது. 14-9-1951ஆம் நாள் வெளி வந்தது.

## 39) தமிழில் வெளிவந்த முழு நீள வண்ணப்படம் எது?

டி.ஆர். எஸ். திரைக்கதை எழுதி இயக்கித் தயாரித்த **அலிபாபாவும் நாற்பது திருடர்களும்** 14-1-1956இல் வெளி வந்தது. இது கேவா கலர் படம். இதுவே தமிழில் வெளிவந்த முழுநீள முதல் வண்ணப்படமாகும். மாடர்ன் தியேட்டர்ஸின் இரண்டு வெற்றிப் படங்களான **மந்திரிகுமாரி**, **சர்வாதிகாரி** ஆகியவற்றிற்குப் பிறகு எம்.ஜி. ராமச்சந்திரன் அலிபாபாவாக நடிக்க, மார்ஜியானாவாக பி. பானுமதி நடித்தார். கொடூரமான கொள்ளைக் கூட்டத்தலைவனாக பி.எஸ். வீரப்பாவும், அலிபாபாவின் அண்ணனாக எம்.ஜி. சக்ரபாணி. மற்றும் கே.ஏ.தங்கவேலு, கே.சாரங்கபாணி, எம்.என்.ராஜம், வித்யாவதி ஆகியோரும் நடித்திருந்தனர்.

சந்திரலேகாவுக்குப் பிறகு செட்டிங்குகளுக்காக மிகவும் பேசப்பட்ட படம் **அலிபாபாவும் நாற்பது திருடர்களும்.** அதில் குகைக்குள் எம்.ஜி.ஆரும், பி.எஸ்.



வீரப்பாவும் கத்திச் சண்டை போடும் அந்த தொங்கு பாலமும், இறுதியில் பீப்பாய்களை உருட்டிவிடும் அந்த மலை உச்சி மாளிகையும் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்தன. நாற்பது திருடர்கள் குதிரைகளுடன்உள்ளே நுழையும் அளவிற்கு அவ்வளவு பெரிய குகை செட் மைசூரில் உருவாக்கப்பட்டது. மலை உச்சி மாளிகை, ஒகேனக்கல் அருவியின் மேல்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அக் காட்சிகளெல்லாம் மேல் நாட்டுப் படங்களுக்கு இணையாக, டபிள்யூ.ஆர்.சுப்பாராவ் என்ற ஒளிப்பதி வாளரால் படம் பிடிக்கப்பட்டன. ஏ.எல். நாராயணன் வசன மெழுத எஸ். தட்சிணாமூர்த்தி இசையமைத்திருந்தார். மருதகாசி எழுதிய அத்தனை பாடல்களும் பிரபலமாயின. ''**மாசிலா உண்மைக் காதலே**...'', ''**அழகான பொண்ணு நான்.....**'' போன்ற பாடல்களை இன்றைக்கும் கேட்டு மகிழலாம். இந்தப்படம் 100 நாட்களுக்கு மேல் அனைத்துத் திரையங்குகளிலும் ஓடியது.

## 40) T.R.சுந்தரத்தின் இறுதி நாட்கள்

1937 முதல் 1982 ஆம்ஆண்டு வரை 136 திரைப் படங்களை பல்வேறு மொழிகளில் தயாரித்த மாபெரும் நிறுவனம் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ். மாடர்ன் தியேட் டர்ஸ் நிறுவனத்தார் தயாரித்து வெளியிட்ட படங்களில் **திரும்பிப்பார்** (10-7-1953), **மகேஸ்வரி** (13-11-1955), **பெற்ற மகனை விற்ற அன்னை** (30-5-1958), **வண்ணக்கிளி** (3-4-1959), **கைதி கண்ணாயிரம்** (1-12-1960), **குமுதம்** (29-7-1961) ஆகியவை குறிப்பிடத்தக்க திரைப்படங் களாகும்.

**கொஞ்சும் குமரி** படப்பிடிப்பு மும்முரமாக நடந்து

கொண்டி ருந்தது. கிட்டத்தட்ட முடிவடையும் நிலை. அடுத்த படம் மாடர்ன் தியேட்டர்ஸின் நூறாவது படமென்பதால் அதை மிகப் பிரம்மாண்டமாகத் தயாரிக்க வேண்டுமென டி.ஆர்.எஸ். திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். அதன் தொடர்பாக 28.8.1963 அன்று மாலை படப்பிடிப்பு முடிந்ததும் சென்னைக்குப் புறப்பட்டுப் போகத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் கிளம்ப முடியவில்லை. அதுநாள்வரை அவருக்கு எந்தவித உடல்நலக் குறைவும் ஏற்பட்டதில்லை. முழு ஆரோக்கி யத்துடன் இருந்தவர். மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டனர். அன்றிரவு அவர் சரியாக உறங்க முடியவில்லை என்பதால் அவர்கள் அருகிலேயே இருந்து கவனித்தனர்.

மறுநாள், அதாவது 29.8.1963. அன்று படப்பிடிப்பை நிறுத்த வேண்டாம் என்று உத்தரவிட்டு தமக்குப் பதிலாக ஜி. விஸ்வ நாதன் என்பவரை இயக்கும்படி பணித்தார். அவரில்லாமலேயே ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. சுந்தரத்தின் உடல்நிலை கவலைக் கிடமானது.

அன்று மாலை ஆறரை மணி அளவில் அவருக்குக் கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டது. மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் பயனின்றி 29.8.1963 அன்றிரவு டி.ஆர். சுந்தரம் மரணம் அடைந்தார். மாரடைப்பால் அவர் இறந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். மன்னர் மறைந்து விட்டார். மன்னர் நீடுழி வாழ்க (King is dead, Long live the King) என்று இங்கிலாந்தில் சொல்வதுபோல, டி.ஆர்.எஸ். மறைந்தபிறகும் மாடர்ன் தியேட்டர்ஸ் இயங்கியதற்கு அவர் போட்டிருந்த வலுவான அடித்தளமே காரணமாக இருந்தது.



## 41) மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் மூடுவிழா

அவருக்குப்பிறகு அவருடைய மகனான திரு. ராமசுந்தரம் பல படங்களை இயக்கி வெளியிட்ட போதிலும் **வெற்றி நமதே** (17-12-1982) என்ற படத்துடன் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ விற்கு மூடுவிழா நடத்தப்பட்டது. திரு. ராமசுந்தரம் 23-2-1993 ஆம் நாள் மரணமடைந்தார். சேலம் சென்று திரும்பிய ஒரு வாரத்தில் எனது சிறிய தகப்ப னாரிடமிருந்து வந்த கடிதத்தில் Regional affinity Triumphed என்று எனக்கு Dalimia Iron ore factory- யில் வேலை கிடைக் காததையும் Chemist ஆக கன்னடிகர் ஒருவர் நியமிக்கப் பட்டதையும் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

## 42) அரவங்காடு Cordite Factory

1961ஆம்ஆண்டு பிறந்தது. 1960 ஜனவரி மாதம் குன்னூரி லிருந்து ஊட்டி செல்லும் சாலையில் அமைந்துள்ள அரவங்காடு Cordite Factory -யில் Chemist post க்கு விண்ணப்பித்திருந்தேன். மார்ச் மாதத்தில் Interview card-உம் வந்தது. அப்பொழுதுதான் கோடை வெயில் தஞ்சாவூரைத் தாக்கிக் கொண்டி ருந்தது. ஊட்டி செல்வதற்கு இதுவொரு வாய்ப்பாக அமைந்திருந்தது. நானும் செயின்ட் ஜோசப் கல்லூரியில் என்னுடன் படித்து அங்கேயே வேலையில் அமர்ந்திருந்த துறையூர் ஸ்ரீனிவாசனும் நேர்காணலுக்குச் சென்றோம்.

## 43) Cordite என்றால் என்ன?

Ordnance Factories எனப்படும் ராணுவத் தட வாளங்கள் பலவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்

நாடெங்கும் இயங்கி வந்தன. தயாரிக்கப்படும் தடவாளத் திற்கேற்ப இந்த தொழிற் சாலைகள் தட்பவெட்ப நிலையை கருத்திற் கொண்டு அமைக்கப் பட்டிருந்தன. Kirke, Bonda munda, Calcutta, Avadi, Aravankadu போன்ற இடங்களில் இந்த Ordnance Factories அமைந்திருந்தன. அரவங்காடு தொழிற்சாலையில் நைட்ரஜனும், ஹைட்ரஜனும் ஒன்று சேர்க்கப் பட்டு அம்மோனியா வாயு தயாரிக்கப்பட்டு வந்தது.

$N_2 + 3\ H_2 = 2\ NH_3$ (இவ்வாறு அம்மோனியா தயாரிக்கப் படும் முறைக்கு **Haber Process** என்று பெயர்.

இந்த அம்மோனியா நீரில் கரையும்போது அம்மோனியம் ஹைட்ராக்ஸைடாக மாறுகின்றது. ($NH_3 + H_2O = NH_4OH$.) நீர் கலவாத அம்மோனியாதான் ரெப்ரி ஜேட்டர்களில் பயன்படுத்தப்படுகின்றது. பல்வகையான உரங்கள் அம்மோனியாவைக் கொண்டுதான் தயாரிக்கப் படுகின்றது. அரவங்காட்டில் Cordite எனப்படும் புகை யில்லாத வெடிபொருள் தயாரிக்கப்பட்டு வந்தது. இந்த வெடி பொருள் Nitro Glycerine Acid Mixture (NGAM) என்ற வேதியியல் பொருளிலிருந்து தயாரிக்கப்படவேண்டும். இதற்கு வேண்டிய மற்றொரு வேதியியல் பொருளான Sulphuric Acid அரவங்காட்டில் தயாரிக்கப்பட்டது. Cordite எனப்படும் பொருள் திரி வடிவில் அமைந்திருக்கும். அது Gun Cotton, Nitro Glycerine, Mineral Jelly and Nitro Cellulose ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இவற்றை Propellants என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். அரவங்காட்டில் காற்றில் உள்ள நைட்ரஜன், நீரைப் பிரிப்பதால் கிடைக்கும் ஹைட் ரஜன் ஆகியவற்றைக் கொண்டு அம்மோனியா தயாரிக்கப்பட்டது. அவ்வாறே கந்தகத்தை வெப்பமடையச் செய்து அதிலிருந்து கிடைக்கும்



Sulphur tri -Oxide -யை Concentrated Sulphuric Acid-உடன் Contact Process என்னும் முறையில் சேர்த்து Oleum ($H_2SO_4 . SO_3 - H_2S_2O_7$)நீருடன் அதன் அடர்த்தியை குறைத்து Sulphuric Acid தயாரிக்கப்பட்டது.

## 44) ஜெனரல் மேனேஜர் திரு. கௌரிசங்கர்

இந்தியாவில் இயங்கிவரும் Ordnance Factoryகளில் மிகப் பழமையானது அரவங்காடு தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையின் பொது மேலாளராகப் பணியாற்றி வந்தவர் திரு. கௌரிசங்கர். இவர் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயின்றவர். வேதியியல் துறைத்தலைவர் திரு. C.K.ராமகிருஷ்ணனிடம் அளவற்ற அன்பும் மரியாதையும் கொண்டவர். அதனால் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயின்ற வேதியியல் பட்டப்படிப்பு படித்த மாணவர்கள் விண்ணப்பித்தாலே போதும் வேலை கிடைப்பது உறுதி என்ற நிலையை ஏற்படுத்தினார். தான் பயின்ற கல்லூரிக்கும், பாடம் போதித்த திரு. C.K.ராம கிருஷ்ணனுக்கும் நன்றி செலுத்தும் வகையில் திரு. கௌரி சங்கர் அந்தக் கல்லூரியில் பயின்ற மாணவர்களுக்கு இந்த வேலை வாய்ப்பை அளித்து வந்தார். 1960ஆம் வருடம் தேர்வில் வெற்றி பெற்ற 24 மாணவர்களில் 8 நபர்களுக்கு அரவங் காடு தொழிற்சாலையில் வேலை கிடைத்தது.

## 45) ஊட்டியில் வெப்பம் குறைந்து காணப் படுவது ஏன்?

நேர்காணலின் போது எல்லோரிடம் பொதுவான கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. “நீங்கள் பேருந்தில் மேட்டுப் பாளையத்தி லிருந்து வரும்போது வெப்பம் தணிந்து குளிர் காற்று அடிப்பதை உணர்ந்தீர்கள். மேலே செல்லச்செல்ல

நாம் சூரியனை நோக்கி அல்லவோ செல்கிறோம். ஆகவே சமவெளியைவிட அரவங்காட்டில் வெப்பம் அதிகமாக அல்லவா இருக்கவேண்டும். ஆனால் இங்கு குளிர் வாட்டுகிறது. ஏன்?'' என்பதுதான் அந்தக் கேள்வி.

அன்றைய தினம் நேர்காணலுக்கு வந்த 8 நபர்களுக்கும் இதற்கான பதில் தெரியவில்லை. சரி. நேர்காணலில் நம்மை கேள்வி கேட்டு மடக்கி விட்டார். இந்த வேலை கிடைக்கப் போவதில்லை வந்ததுதான் வந்தோம். ஊட்டி ஏரி, பொட்டானிகல் கார்டன்ஸ் ஆகியவற்றை சுற்றிப் பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பிப் போய் விடுவோம் என்று நானும் எனது நண்பர்களும் ஊட்டியைச் சுற்றிப் பார்த்து ஊர் திரும்பி னோம்.

***(இதற்குக் காரணம் காற்றழுத்தத்தின் குறைவுதான். கடல் மட்டத்தில் காற்றழுத்தம் சுமார் 1000மில்லிபார் அளவில் உள்ளது. தரையிலிருந்து உயரே செல்லச் செல்லக் காற்றழுத்தம் குறைகிறது. அதேபோலே காற்றின் அடர்த்தியும் குறைகிறது. சுமார் 400 பேர் அமரக் கூடிய மண்டபத்தில் நிற்கக்கூட இடமில்லாத வகையில் 800 பேர் கூடியிரு ந்தால் நடக்கும்போது ஒருவர்மீது ஒருவர் இடிக்காமல் செல்ல முடியாது. ஓரிடத்தில் வெப்பம் அதிகரிக்கும்போது காற்றின் மூலக்கூறுகள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதுகின்றன. அவை இவ்விதம் வேகமாக முட்டி மோதுகிற நிலையில்தான் வெப்பம் அதிகமாக உணரப்படுகிறது.***

***எனினும் ஒரு பெரிய மண்டபத்தில் இங்கு ஒருவர் அங்கு ஒருவர் என்று உட்கார்ந்திருப்பதுபோல தரையிலிருந்து உயரே செல்லச் செல்ல காற்றின் மூலக்கூறுகள் குறைகின்றன. அவற்றின் இடையே மோதலும் குறைகிறது. ஆகவே வெப்பம் குறைந்து காணப்படுகிறது.)***



## 46) தஞ்சையில் குடித்தனம்

1960ஆம் ஆண்டு எனது தம்பி ஸ்ரீனிவாஸன் கீழைப்பனையூரில் நான்காம் வகுப்புப் படித்துக் கொண் டிருந்தான். இன்னொரு தம்பியான ராமாநுஜம், தங்கை பூமாலக்ஷ்மி ஆகியோரைப் பள்ளியில் சேர்க்க வேண்டும். தந்தையாரோ குலமாணிக்கம் என்னும் கிராமத்தில் பணியாற்றி வந்தார். அந்த ஊரிலிருந்து 6. கி.மீட்டர் நடந்து சென்றால் தான் ஆரம்பப்பள்ளியைக் காணஇயலும். ஆகவே தம்பிகள் இரு வரையும் தங்கையையும் தஞ்சாவூரில் பள்ளியில் சேர்க்கலாம் என்ற நினைவோடு எனது தாயார் மற்றும் தம்பி தங்கைகள் தஞ்சாவூருக்குக் குடி பெயர்ந்தனர்.

தஞ்சை பழைய பேருந்து நிலையத்திற்கு அண்மையில் கும்பகோணம் செல்லும் சாலையில் 16 குடித்தனங்கள் கொண்ட ஸ்டோர் ஒன்று இருந்து வந்தது. பெரும்பாலும் குறைந்த வருவாயைக் கொண்டவர்களே இங்கு வசித்து வந்தனர். சுமார் 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட அறைதான் 'வீடு'. பேருந்து நிலையத் திற்கு அண்மையில் இந்தப்பதினாறு குடி ஸ்டோர் அமைந்தி ருந்ததால் வெளியே சென்று வருவதற்கு எந்த இடர்ப்பாடும் இல்லை. மேலும் 24 மணிநேரமும் குழாயில் நீர் வந்து கொண் டேயிருக்கும். முற்றத்தில் அமைந்திருந்த குழாய் பக்கலிலே குளியலறை. அதன் பக்கத்தில் துணி தோய்ப்பதற்கு ஒரு கருங்கல். மாத வாடகை ரூபாய் 15. அப்போதெல்லாம் விறகு அல்லது அடுப்புக்கரி கொண்டுதான் சமையல் செய்திட வேண்டும்.

## 47) Umrao திரிstove

1960ஆம்ஆண்டுதான் மண்ணெண்ணெய் மற்றும்

தடித்த திரி கொண்டு உணவுப் பண்டங்களைத் தயார் செய்ய உதவும் Umrao stove சந்தையில் விற்பனைக்கு வந்தது. இதன்பிறகுதான் காற்ற டிக்கும் ஸ்டவ்கள் விற்பனை செய்யப்பட்டன.

மண்ணெண்ணெய் எவ்விதத் தட்டுப்பாடுமின்றி லிட்டர் 25பைசாவிற்குக் கிடைத்த காலமது. எங்கள் ஸ்டோருக்கு அண்மையில் உள்ள மளிகைக் கடையில் தேவையான மண்ணெண்ணையை வாங்கிக் கொள்ளலாம். திருச்சிக்குச் சென்ற நான் இந்த Umrao stoveவை வாங்கி வந்தேன். என் தாயாருக்கு பெரும் மகிழ்ச்சி. ஏனெனில் 20 ஆண்டு களாக விறகடுப்போடு போராடிய அவளுக்கு இது புதையல் கிடைத்தது போலக் காணப்பட்டது. அந்த அடுப்பிற்குக் குங்குமப் பொட்டு வைத்து பூச்சூட்டி பால் காய்ச்சிய அன்று அந்த ஸ்டோரில் உள்ள அனைவரும் எங்கள் அறைக்கு வந்து வியப்புடன் அந்த ஸ்டவ்வை பார்த்து மகிழ்ந்தனர். உடனே என்னிடம் அவர்கள் Professor Sir ***(அவர்களைப் பொறுத்தவரை கல்லூரியில் வேலை பார்ப்பவனுக்குப் பெயர் Professor)*** திருச்சிக்கு நீங்கள் அடுத்த முறை போகும்போது 10 ஸ்டவ் வாங்கி வாருங்கள் என்று கூறினர். நல்லவேளை தஞ்சையிலேயே இந்த ஸ்டவ் சில நாட்களில் விற்பனைக்கு வந்துவிட்டது.

## 48) தஞ்சை அரண்மனை

என் தம்பி தங்கைகளை அழைத்துக் கொண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை அரண்மனைப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்தேன். தஞ்சைப் பெரிய கோயிலை அடுத்து தஞ்சையில் உள்ள அரண்மனை, புராதனக் கலைச்சின்னமாக விளங்குகிறது. பெரிய கோயிலுக்குச் சற்று வடகிழக்கில்



உள்ள அரண்மனை, முதல் தஞ்சை நாயக்க மன்னரான செவ்வப்ப நாயக்கரால் (கி.பி. 1536-1590) கட்டப் பட்டது. இந்த அரண்மனை சிறகு விரித்துப் பறக்கும் கருடனின் வடிவில் அமைந்து உள்ளதாக, சத்திரபதி சிவாஜி தனது தம்பியும், தஞ்சையில் மராட்டிய அரசை ஏற்படுத்திய வனுமான வெங்கோஜிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது என்பதை போன்ஸலே வம்ச சரித்திரம் நமக்குத் தெரிவிக்கிறது. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் அரண்மனை வளாகத்தில் கட்டிடங்கள் எழுந்தன. எதிரிகளின் கவனத்தை திசை திருப்பும் நோக்கத்துடன் கோயிலைப் போன்ற தோற்றத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆயுத கோபுரமும், மாடங்களாக உயர்த்திக் கட்டப்பட்டுள்ள மணிக்கூண்டும் நாயக்கர் காலத்தை சேர்ந்தவை. இவை களைத் தொடர்ந்து, மராட்டிய மன்னர்களும் புதிய கட்டிடங்களை எழுப்பியும், பராமரித்தும் வந்தனர்.

தஞ்சை அரண்மனை சுமார் 355 ஹெக்டேர் (538 ஏக்கரில்) அமைந்துள்ளது. அரண்மனை வளாகத்தில் கலையம்சம் பொருந்திய கலைக்கூடம், உலகம் போற்றும் சரஸ்வதி மஹால் நூலகம், மற்றும் சங்கீத மஹால் ஆகியவை பழங்காலப் பெருமைகளை எடுத்துக் கூறுவதாக உள்ளன. அரிய சிற்பங்களை தன்னகத்தே கொண்டு உலகிற்கு தஞ்சைத் தரணியின் கலை, கலாச்சார, வரலாற்றுப் பெருமையை பறைசாற்றிக் கொண்டு இருக்கிறது. அறிஞர்கள் போற்றும் அரிய நூல்களையும், பழைய ஓலைச் சுவடிகளையும் பெற்று கருவூலமாக விளங்கி தஞ்சையின் பெருமையை உலக அரங்கில் வெளிப்படுத்தும் நந்தா விளக்காக தஞ்சை ராஜா சரபோஜி சரஸ்வதி மஹால் நூல்நிலையம் விளங்குகிறது. விஞ்ஞான வசதி இல்லாத

அந்நாளில், அரங்கில் வீணையை மீட்டினால் அதன் மெல்லிய ஓசையை அந்த அரங்கில் எந்த இடத்தில் இருந்தும் அதன் முழு நுட்பத்துடன் கேட்கக்கூடிய இசை அரங்கான சங்கீதமஹால் தஞ்சையின் கலை அறிவையும் இசை அரங்கின் அமைப்பையும் உலகம் வியக்க எடுத்து ஒலிக்கும் முரசாகத் திகழ்கிறது.

அரண்மனையின் கிழக்குப் பகுதியில் மராட்டியர் தர்பார் கூடமும், மேற்குப் பகுதியில் நாயக்கர் தர்பார் கூடமும் உள்ளன. இவைகளுக்கு இடையில் சரஸ்வதி மஹால் நூல் நிலையம் உள்ளது. நாயக்கர் தர்பார் கூடத்தில் தஞ்சைக் கலைக்கூடம் அமைந்துள்ளது. சரஸ்வதிமஹால் நூல் நிலையத்திற்கு கீழ்ப்புறம் அமைந்துள்ள இந்த மண்டபம் கி.பி. 1681இல் மராட்டிய மன்னர் ஷாஜியினால் திருத்திக் கட்டப்பட்டது. இந்த மண்டபம் இரு பகுதியாக காட்சி யளிக்கிறது. முன் மண்டபத்திற்கு முன்பாக பரந்தமுற்றப் பகுதி உள்ளது.

தர்பார் கூடத்தின் முன் மண்டபம் மரத்தூண்களால் தாங்கப் பெற்று, ஓடுகள் வேயப்பட்ட சாய்வான கூரையுடன் கூடியதாக உள்ளது. உள் மண்டபம், முன் மண்டபத்திலிருந்து படிகள் வழியாக சென்று அடையக்கூடிய வகையில் பெரிய மேடை போன்று விளங்குகிறது. முன் மண்டபம் கற்களால் அமைக்கப்பட்டு, சுதை பூசப்பட்ட தூண்கள் தாங்கும் வண்ணம் வண்டிக்கூடு அமைப்பில் கூரை உள்ளது. இம்மண்டபத்தின் விதானத்திலும், கிழக்குச் சுவரிலும், வடக்குச் சுவரிலும் அழகிய வண்ணங்களைக் கொண்டு எழில் ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. மண்டபத்தின் தூண் களில் காணப்படும் சுதை சிற்பங்களும், திருமாலின் பத்து அவதாரங்களைச் சித்தரிக்கும் சுதை சிற்பங்களும்



வண்ணம் பூசப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றன. வடக்குச் சுவரில் உள்ள ஓவியம் மராட்டிய மன்னர்களது வேட்டைக் காட்சியைச் சித்தரிக்கும் வகையில் உள்ளது. இச்சுவரில் நாயக்கர் கால ஓவியங்களும் இருப்பது அண்மையில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்குச் சுவரில் மராட்டிய மன்னர் களுடைய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்த தர்பார் கூடத்தில் நடுநாயகமாகக் காணப்படும் ஓவியம் கி.பி. 1832-1855 வரை தஞ்சையை ஆண்ட கடைசி மராட்டிய மன்னரான இரண்டாம் சிவாஜியின் உருவமாகும். இவருக்கு இருபுறமும் இவருடைய அமைச்சர்களான சின்னண்ணா, **வரகப் பையர்** ஆகியோர் உருவங்கள் வரையப்பட்டு உள்ளன.

இக்கூடத்தின் நடுவில் கிழக்குச் சுவரை ஒட்டிய நிலையில் மரத்தினாலான கண்ணாடிகள் பதிக்கப் பெற்று அழகுடன் காட்சியளிக்கும் தர்பார் நீண்ட சதுர கருங்கல் தளத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது. இந்த தர்பாரில் மராட்டிய மன்னர்கள் அமர்ந்து தங்கள் அரசவையை நடத்தினர் எனக் கூறப்படுகிறது. அரண்மனைப் பெண்டிர் அரசவை நிகழ்ச்சிகளை மேல் மாடத்திலிருந்து, அவை யினருக்குத் தெரியாவண்ணம் காணக்கூடிய வசதியிருந்தது. இந்த தர்பார் கூடத்தில் 30 அடிநீளமும், 20 அடி அகலமும், 9 அடி உயரமும் கொண்ட சுரங்கப்பாதை உள்ளது. இந்த அரண்மனையின் கழிவு நீர் வடிகால் அமைப்பு இந்தச் சுரங்கப்பாதையில் இருப்பது அண்மையில் தொல்பொருள் ஆய்வுத்துறை யினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வடிகால் அமைப்பு அகழியில் சென்று முடியும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. வேறு சுரங்கப் பாதைகள் அரண்மனையில் இருந்து, அவை மூடப்பட்டுள்ளன.

கி.பி. 1806இல் சதுர்மாடி (நான்கு மாடி) இரண்டாம் சரபோஜி மன்னரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவர்காசி சென்று வந்தபின் கி.பி. 1820இல் உஞ்சமாடி அதாவது உயரமான மாடி-ஏழு மாடியைக் கட்டினார். இதற்கான கல்வெட்டும் உள்ளது. இவர் அரண்மனைப் பெண்டிர் நீராடும் குளத்தையும் அமைத் திருந்தார். ஒரு மாடியில் ஏறி அடுத்து அடுத்துள்ள கட்டிடங்களுக்குச் சென்று புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடுமாறு கட்டிட அமைப்புகள் உள்ளன. இந்த அரண்மனையில் மராட்டிய மன்னர்களின் வாரிசு தாரர்கள் வசித்து வருகிறார்கள். சீனியர் பிரின்ஸ் துளஜேந்தி ராஜா அரண்மனையில் சிறிய பகுதியில் வசிக்கிறார். அந்தச் சிறிய பகுதியே பெரிய இடமாக உள்ளது. இவருக்குக் கிடைக்கும் அரசு மானியத் தொகையில் இடத்தைச் சுத்த மாகப் பராமரிக்க முடிவதில்லை. அரண்மனை வளாகத்தில் உள்ள ஏழு மாடி கட்டிடத்திலும் மற்ற கட்டிடங்களிலும் அரசு அலுவலகங்கள் இயங்கி வந்தன.

## 49) கவின்மிகு தஞ்சைக் கலைக்கூடம்

சரஸ்வதி மஹாலை அடுத்து, தஞ்சை நாயக்க மன்னர் களுடைய பூஜா மண்டபத்திலும், கொலு மண்டபத்திலும் அரிய சிற்பச் செல்வங்களை தன்னகத்தே கொண்டு, தஞ்சைத்தரணியின் கலை, கலாச்சாரப் பெருமைகளை உலகிற்கு அள்ளி வழங்கி, அருங் காட்சியகங்களில் சிறந்த ஒன்றாக விளங்கி வருகிறது. தஞ்சைக் கலைக் கூடத்தைக் காண உலகிலுள்ள பல நாட்டினரும், நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வரும் மக்களும் கண்டு களித்து தஞ்சைத் தரணியின் கலைப் பெருமையை அறிந்து பாராட்டிச் செல்கின்றனர். உலகப் படைப்புத் தொழிலின் அதிபதியான பிரம்மதேவரே இக் கலைக்கூடம் உருவாவதற்கான சிருஷ்டி



கர்த்தாவாகவும் விளங்குகிறார். 1951-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இக்கலைக்கூடம் தோன்றிய வரலாறே ஒரு சுவையான நிகழ்ச்சியாகும்.

தஞ்சை கருந்தட்டான் குடியில் வடவாற்றின் வடகரையில் கவனிப்பார் அற்றுக் கிடந்த கற்சிலை ஒன்றைக் கல்கத்தாவிலிருந்து வந்திருந்த திரு. சிவராமமூர்த்தி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டார். அதன் அழகில் மயங்கி, அதை கல்கத்தா கலைப் பொருட்கள் காட்சிய கத்திற்கு எடுத்துச் செல்ல தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. டி.கே. பழனியப்பன் ஐ.ஏ.எஸ். அவர்களிடம் அனுமதி கோரினார். சிலையை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிடச் சென்றபோது, மக்கள் அந்தச் சிலையை தஞ்சையை விட்டு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்க வில்லை. தஞ்சையிலேயே ஒரு பாதுகாப்பான இடத்தில் இத்தகைய சிறந்த சிலைகளை கண்காணித்து பாது காத்து வரவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கினார்கள்.

திரு. டி.கே. பழனியப்பன் அவர்களுக்கும் இது போன்ற சிறந்த சிலைகளைச் சேகரித்து ஒரு கலைக்கூடத்தை ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்குமே என்ற எண்ணமும் தோன்றியது. இந்த எண்ணத்தை செயல்படுத்த இவருக்கு உறுதுணையாக துணை ஆட்சித் தலைவர் திரு. பொன். பாஸ்கரத் தொண்டமான் அவர்களும் வட்டாட்சியர் திரு. இராமச்சந்திரபத்தர் அவர்களும் நின்றனர். தஞ்சை மாவட்டத்தில் கிடைத்த அரும்பெரும் கற்சிலைகளையும், உலோகச் சிலைகளையும், மற்ற கலைச் செல்வங்களையும் சேகரித்து 1951ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி அன்று இக்கலைக் கூடத்தைத் நிறுவினர். அரசு ஊழியர் களையும், மாவட்டத்திலிருந்த சிறந்த கலைஞர்களையும்

பெரிய மனிதர்களையும் கொண்ட செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சியுற்று இன்று உலக அரங்கில் புகழ் பெற்ற அருங்காட்சியங்களில் ஒன்றாக விளங்குகிறது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சேர்ந்த சிலைகள் இங்கு உள்ளன.

அவைகள் கோயில்கள் பாழடைந்து கவனிப்பாரற்றுக் கிடந்த சிலைகள் யாவும் தஞ்சை மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டு, இவை யாவற்றையும் மண்டபத்திலும், அதற்கு தெற்கே எதிரில் உள்ள கோபுரத்தின் அடி மண்டபத்திலும், நாயக்கர் தர்பார் மண்டபத்திலும் காட்சிப் பொருளாக அமைக்கப்பட்டன.

பூஜா மண்டபத்தில் தஞ்சை, தாராசுரம், திருவலஞ் சுழி, பட்டீஸ்வரம் போன்ற இடங்களில் கிடைத்த கற்சிலைகள் மேடைகளில் வைக்கப்பட்டுள்ளன. கோபுர அடி மண்டபத்தில் தஞ்சை, தாராசுரம் போன்ற இடங்களில் கிடைத்த அற்புதமான கற் சிலைகள் அழகிய மேடைகளில் அமைக்கப்பட்டுள்ளன. நாயக்கர் தர்பார் மண்டபத்தில் புராதன தெய்வச் செப்புத் திருமேனிகள் அழகிய மரப் பீடங்களில் அழகுடன் வைக்கப்பட்டுள்ளன. இந்த கற் சிலைகள், செப்புச்சிலைகளின் அடிப்பீடத்தில் சிலையின் பெயர், கிடைத்த இடம், எந்தக் காலத்தைச் சேர்ந்தது போன்ற விவரங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு இருப்ப தால் பார்வையாளர்கள் நன்கு அவைகளைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

இக்கலைக் கூடம் உருவாக மூலகாரணகர்த்தாவான இருந்த பிரம்மாவின் சிலை, கலைக்கூடத்தின் தலை



வாயிலில் பத்ம பீடத்தில் அமர்ந்து பார்வையாளர்களை அன்புடன் வரவேற்றுக் கொண்டு இருக்கிறது. இச்சிலையில் சிறிது பின்னம் ஏற்பட்டு இருந்தாலும், அழகு குறைய வில்லை. பார்வையாளரின் கவனத்தை பொதுவாக மிகவும் கவரும் ஒருசில சிலைகளை குறிப்பிட வேண்டுமானால், கஜசம்ஹாரர், துவாரபாலகர், பிட்சாடனர், ரிஷி பத்தினிகள், கங்காதரர் கற்சிலைகளையும், செப்புச் சிலைகளில் ரிஷப வாகனத் தேவர், பார்வதி, விஜயராகவ நாயக்கர் சிலை களையும், வெள்ளை சலவைக் கல்லில் உருவான மன்னர் சரபோஜியின் சிலையையும் குறிப்பிடலாம்.

## 50) துவார பாலகர்

கம்பீரமான தோற்றமும், அழகும் கொண்ட துவார பாலகரின் சிலையை முதலாம் ராஜாதி ராஜனான ஸ்ரீவிஜயராசேந்திரன் மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேசுவர ஆகமல்லனை வென்று அவன் தலைநகரமான கல்யாணபுரத்தை அழித்து மேலைச் சாளுக்கியரது சிற்பக் கலைத்திறனை வெளிப்படுத்தும் இந்த அற்புத துவாரபாலகர் சிலையை வெற்றிச் சின்னமாக கொண்டு வந்த வரலாற்று பின்னணி கொண்டது இச்சிலை. இச்சிலையின் அடியில் ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீவிஜயராஜேந்திர தேவர் கல்யாணபுரம் எரித்துக் கொண்டு வந்த துவாரபாலகர் என்று தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. துவாரபாலகர் அடி மரத்தின் மேல் முழங்கையை ஊன்றிக்கொண்டு, மரத்தின் பொந்துகள் வழியாக வெளிவரும் பாம்பின் தலைமீது கையை வைத்துள்ளார். பாம்பு ஒரு எலியைக் கவ்விக் கொண்டுள்ளது. அடி மரத்தில் சுண்டெலி, உடும்பு போன்றவை ஏறுகின்றன. ஆந்தைப் பொந்திலிருந்து எட்டிப் பார்க்கிறது. இத்துணை இடையூறுகளுக்குமிடையே துவாரபாலகர் கவனம் சிதறாது

தமது கடமையைப் புரிகிறான் என்பதை எடுத்துக் காட்டி சிற்பி இத்தனை ஜந்துக்களையும் சிலையில் வடித்திருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது.

தொள்ளைக்காது மண்டபம் என்று மக்களால் இன்று அழைக்கப்படும் மண்டபத்தை அந்நாளில் மணி மண்டபம் என்று அழைத்தனர். அக்காலத்தில் மணியை-- நேரத்தை அறிவிக்கும் மண்டபமாக இது இருந்தது. அடுத்து தஞ்சையை ஆண்ட சிறந்த கடைசி நாயக்க மன்னரான விஜயராகவ நாயக்கரின் வெண் கலச்சிலை அழகுறக் காட்சியளிக்கிறது. இறைவனை இருகரம் கூப்பி வணங்கும் ஸ்ரீவைஷ்ணவ பக்தனாக காட்சியளிக்கிறார் இம்மன்னர். இவர் தலையில் ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் அணியும் குல்லாய், இடையில் ஸ்ரீவைஷ்ணவ முறைப்படி ஆடையை மடித்து இருக்கும் பாங்கு, இடையில் சிறுகுத்துவாள், காலில் வீரக்கழல், கையில் காப்புடன் காட்சியளிக்கும் இம்மன்னரின் சிலை அரண்மனையில் கிடைத்தது. வீரனாகவும், பக்தி மானுமாக விளங்கிய இம்மன்னர் அவ்வாறே நமக்கு காட்சி தருகிறார்.

## 51) எண்ணெய்க்கத்திரிக்காய்

தஞ்சாவூர் அய்யன்கடைத்தெரு காய்கறி மண்டி சிறப்பு வாய்ந்ததொன்றாகும். ஒருவருக்குத் தேவையான ஆபரணங்கள், மற்றைய வீட்டு உபயோகப் பொருள்கள், மளிகை சாமான்கள், மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை அய்யன்கடைத்தெருவிற்குச் சென்றால் வாங்கி வரலாம். காலை நேரங்களில் காய்கறிவரத்து அதிக அளவில் இருக்கும். தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஆற்றுப் படுகையில் பல்வேறு வகைக்காய்கறிகள் பயிரிடப்பட்டு அவை



சந்தைக்கு வந்து சேரும். இயற்கை உரமிட்டு, ரசாயனப் பூச்சி மருந்துகள் இடப்படாத இயற்கை முறையில் விளை விக்கப்பட்ட அந்தக் காய்கறிகளின் சுவையே தனி. குறிப்பாகப் பிஞ்சுக் கத்திரிக்காய் கூடை கூடையாய் மண்டியில் காணப்படும். அவை என்னை உங்கள் வீட்டிற்கு வாங்கிச் செல்லுங்கள் என்று அழைப்பு விடுப்பது போலத் தோன்றும். பல்வகைக் கீரைகளும், கீரைத்தண்டும் பச்சைப்பசேலென்று காணப்படும். இந்தப் பிஞ்சுக்கத்திரிக் காயை வாங்கி வந்து எண்ணெய்க்கத்திரிக்காய் சமையல் செய்தால் அனைவரும் விரும்பி உண்பர்.

***(சங்கீதம் தெரிந்தவன் 'சரிகமபதநிச' என்ற ஏழுஸ்வரங்களை இசைத்துப் பாடுவது போல, சமையல் செய்வதற்கு மிளகு, சீரகம், மிளகாய், துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, தனியா, உளுத்தம்பருப்பு, கடுகு, பெருங்காயம், உப்பு, புளி போன்றவற்றை பல்வேறு விகிதத்தில் ஒன்று கூட்டி உணவுப் பண்டங்களை உருவாக்கு கிறோம். ஒரு வகையில் சமையற்கலை சங்கீதக் கலையை ஒத்த தாகும். அதனால்தான் ஒரு திரைப்படத்தில் ''சங்கடமான சமையலை விட்டு சங்கீதம் பாடப்போகிறேன்'' என்ற பாட்டு இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து சமையல் தெரிந்தவர்கள் சங்கீதக் கலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம் என்பது வெளிப்படுகிறது.)***

பிஞ்சு முழுக்கத்திரிக்காயை வாங்கி வந்து நன்றாக அலம்பி தலைப்பகுதியை அரிந்து முக்கால் பாகத்திற்கு செங்குத்தாக நான்கு பாகங்களாக நறுக்கிக் கொள்ள வேண்டும். தனியா, உ.பருப்பு, கடலைப் பருப்பு, மிளகாய், பெ. காயம், உப்பு ஆகியவற்றை வறுத்து எடுத்துக் கொண்டு, பொடி செய்து பிளந்த கத்திரிக்காயின் இடையில் வைத்து நான்கு துண்டுகளையும் முழுக் கத்திரிகாய்போல ஒன்று சேர்த்திட வேண்டும். வாணலியில் தேவையான அளவிற்கு

எண்ணெயைச் சேர்த்து இந்தக் கத்திரிக்காய்களை செங்குத்தாக அவற்றில் வைத்து விட வேண்டும். மிதமான சூட்டில் அவை நன்றாக வெந்துவிடும். இதுவே எண்ணெய்க் கத்திரிக்காய். இந்த செயல் முறையைப் பின்பற்றியே பெரியகுடைமிளகாயையும் அரிந்தபிறகு, காரப் பொடியை நடுவிலே வைத்து எண்ணெயில் வதக்கலாம்.

என் தாயார் அடிக்கடி எண்ணெய்க் கத்திரிக்காய் மற்றும் வாழைப்பூவடை ஆகியவற்றை ஞாயிற்றுக்கிழமை களில் சமைத்திடுவாள். என்னுடன் கல்லூரியில் வேலை பார்க்கும் சுந்தரமும் சாப்பிட்டுவிட்டு ‘மாமி நன்றாக இருக்கிறது’ என்று சொல்லிச் செல்வான்.

## 52) கிரிக்கெட் ஆட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கிரிக்கெட் ஆட்டத்தை Eleven Fools Playing Eleven Thousand Fools Watching என்று பெர்னாட்ஷா இகழ்ந்து கூறுவாராம். ஆயினும் மக்கள் விரும்பிப் பார்க்கும் விளையாட்டுகளில் முதலிடம் பெற்றிருப்பது கிரிக்கெட்டே யாகும். சிறுவர்கள் தொடங்கி பல்லுப் போன கிழவர்களும் பார்த்து ரசிப்பது கிரிக்கெட்டேயாகும். கிரிக்கெட் விளை யாட்டை ரசிக்கும் அனைவரும் ஆடத் தெரிந்தவர்கள் அல்லர். ஆயினும் பந்தைத் தடுக்காமல் அதன் விளைவாக எதிரணியினர் ரன்கள் எடுக்கப்படும்போதும், வீசிய பந்தை பிடிக்க இயலாமல் போகும்போதும் அவனுக்குக் கிடைக்கும் சாபங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. அதேபோல் ரன்களை அதிகம் கொடுக்கும் பந்து வீச்சாளருக்கு அந்த அணித் தலைவர் மீண்டும் ஒரு ஓவர் கொடுக்கும் போது **இவன் எல்லாம் கேப்டன் பதவிக்கு லாயக்கில்லை** என்று அவனுடைய செயலை விமர்சிப்பவர்கள் பலர் இன்றும்



உண்டு. கால்பந்து, டென்னிஸ், போன்ற ஆட்டங்களைவிட உலகெங்கும் மக்களால் விரும்பிப் பார்க்கப்படுவது கிரிக்கெட்டே.

கோடிக்கணக்கான ரூபாய்கள் இந்த ஆட்டத்தில் விளையாடுபவர்களுக்கு ஊதியமாக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு நிறுவனமும் போட்டி போட்டிக் கொண்டு விதவிதமான விளம்பரங்களை அள்ளித் தெளிக்கின்றன. ஆரம்பகாலத்தில் 5 நாட்கள் விளையாடப்பட்ட டெஸ்ட் எனப்படும் கிரிக்கெட் ஆட்டம் ஒருநாள் Limited Over-ஆக மறு உரு எடுத்தது. அதன்பிறகு அதிக லாபத்தை ஈட்டும் 20 ஓவர் ஆட்டங்களாக மாற்றம் அடைந்தது. அது I.P.L. 20-20, உலகக் கோப்பைப் போட்டி போன்றவைகளாகத் துளிர் விட்டன. இப்போதெல்லாம் ஆண்டு முழுவதிலும் எங்கேயோ உலகின் ஒரு மூலையில் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் Test, One day Match, 20-20 Limited Over விளையாட்டுகள் நடைபெற்று வருகின்றன.

முதன்முதலாக 278 ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்த்ரேலி யாவில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடப்பட்டது. அமெரிக்காவில் உள் நாட்டுப் போர் நிகழவில்லையானால் Ashes எனப்படும் இருநாடுகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி இங்கி லாந்திற்கும் அமெரிக்காவிற்குமிடையே நடைபெற்றிருக்கக்கூடும். இங்கிலாந்தில் கிராமப்புற மக்களிடையே விளையாடப்பட்டு வந்த கிரிக்கெட் இன்று உலகெங்கும் பரவி உள்ளது. ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில்தான் இந்த விளையாட்டு பரவியுள்ளது என்று கூறுவது தவறு. டென்மார்க், கனடா, அமெரிக்கா, பெல்ஜியம், Fiji, Holland, Gulf Countries போன்ற நாடுகளில் கிரிக்கெட் ஆடப்பட்டு வருகிறது.

1976ஆம் ஆண்டு ஆஸ்த்ரேலியாவில் Kerry Packer என்பார் தம்முடைய Channel Nineஎன்னும் தொலைக் காட்சியில் ஒளிபரப்பு வதற்காக அனைத்து நாடுகளிலிருந்து சிறந்த ஆட்டக்காரர்களை பெரும் தொகை கொடுத்து ஒருநாள்போட்டித்தொடர்களை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கிரிக்கெட் தலைமையகம் என்று அழைக்கப் படும் ICC சில மாறுதல்களுடன் இந்த ஆட்டத்தை தன்னுய டைதாக்கிக் கொண்டது. அதன்பிறகு Oneday Series எனப்படும் 50-50 Overs ஆட்டம் I.C.C.யால் அங்கீ கரிக்கப்பட்டது. கிரிக்கெட் உலகில் சாதனைகளுக்குப் பஞ்சம் இல்லை. புள்ளியியல் எனப்படும் Statistics முழு அளவில் பயன் படுத்தப்படுவது கிரிக்கெட்டில்தான்.

## 53) "Brisbane - Tie"

1960ஆம் ஆண்டு West Indies கிரிக்கெட் குழுவிற்கும் ஆஸ்த்ரேலியா கிரிக்கெட் குழுவிற்கும் நடந்த 5 டெஸ்ட் போட்டிகள் கிரிக்கெட்டின் தரத்தை உலக அரங்கில் உயர்த்திக் காட்டியது. ஒவ்வொரு டெஸ்டிலும் நடந்த நிகழ்ச்சிகள் இன்றும் பலர் மனதை விட்டு அகன்றிருக்க முடியாது. அப்போதெல்லாம் இந்தப் போட்டி நடைபெறும் போது தொலைக்காட்சிப் பெட்டியில் பார்க்கமுடியாது. கிரிக்கெட் வர்ணனையும் முழுமையாக ஒலிபரப்பப்பட மாட்டாது. அவ்வப்போது அகில இந்திய வானொலியில் ஒலி பரப்பப்படும் செய்திகள் மூலமாகத்தான் அன்றைய தினம் கிரிக்கெட் உலகில் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

1960ஆம் ஆண்டு டிசம்பர் 9, 10,12, 13, 14 ஆகிய 5 தினங்களில் Brisbane என்னும் ஆஸ்த்ரேலிய நகரில்



ஆஸ்த்ரேலியாவுக்கும் வெஸ்ட் இண்டீஸ்க்கும் நடைபெற்ற போட்டி வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு மாபெரும் ஆட்டமாகும். முதன்முதலாக டெஸ்ட் போட்டியில் சம நிலையில் இரு குழுக்களும் ஓட்டங்கள் எடுத்து யாருக்கும் வெற்றி தோல்வி இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இந்த போட்டிக்குப் பிறகு தமிழகத்தில் அனைத்து திரையரங்கு களிலும் காண்பிக்கப்பட்டு வந்த நியூஸ் ரீலில் Brisbane Tie காண்பிக்கப்படுகிறது என்ற விளம்பரம் தியேட்டர் வாசலில் காணப்படும். காண்பிக்கப்படும்படம் எவ்வளவு மோசமாக இருந்தாலும் இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக திரையரங்கே நிரம்பி வழியும். Brisbane Tie காண்பித்து பாடாவதிப் படங் களை சில வாரங்கள் ஒட்டிய தியேட்டர்களும் உண்டு. ***(இப்போதெல்லாம் E.S.P.N. Star Cricket போன்ற தொலைக் காட்சி நிறுவனங்கள் பல்வேறு டெஸ்ட், Oneday, 20-20 ஆட்டங் களை இடைவிடாது ஒளி பரப்பி வருகின்றன. ஆனால் 1960 கால கட்டத்தில் நியூஸ் ரீலில் 3 நிமிடம் காண்பிக்கப்பட்டு வந்த Brisbane Tie மேட்ச் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.)***

ஆஸ்த்ரேலிய அணிக்கு R. Benaud-உம், மேற் கிந்தியத்தீவு அணிக்கு F.M.M.Worrell -உம் அணித்தலைவர் களாக இருந்தனர். ஒவ்வொரு நாள் ஆட்டமும் பல சிறப்புக்களை வெளிப்படுத்தின. மேற்கிந்தியத் தீவு அணியில் C.C. Hunte, C.W. Smith, R.B. Kanhai, G..S. Sobers, F.M.M. Worrell, J.S. Solomon, P.D. Lashley, F.C.M. Alexander, S. Ramadhin, W.W.Hall, A.L. Valentine ஆகிய வர்களும், ஆஸ்த்ரேலிய அணியில் C.C. Mc.Donald, R.B. Simpson, R.N. Harvey, N.C. O'Neill, L.E. Favell, K.D. Mackay, A.K. Davidson, R. Benaud, A.T.W. Grout, I. Meckiff, L.F. Kline ஆகியோர்களும் பங்கு கொண்டனர். ஒரு

ஓவருக்கு 8 பந்துகள் வீசப்பட்டன. முதலில் ஆடத் தொடங்கிய மேற்கிந்திய அணியினர் 453 ஓட்டங்களை எடுத்தனர். அதன்பிறகு விளையாடிய ஆஸ்த்ரேலிய அணி முதல் இன்னிங்கிஸ்ஸில் 505 ஓட்டங்களை எடுத்தனர். 2-ஆவது இன்னிங்கிஸ்ஸில் மேற்கிந்திய அணியினர் 284 ஓட்டங்கள் எடுத்தனர். 233 ஓட்டங்கள் எடுத்தால் ஆஸ்த்ரேலிய அணி வெற்றி பெறலாம் என்ற நிலையில் அந்த அணியினரால் 232 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. அதனால் இந்தப் போட்டி யாருக்கும் வெற்றி தோல்வியில்லாமல் சமநிலை எனப்படும் Tie -இல் முடிந்தது.

## 54) Davidson-The Great Allrounder

மேற்கிந்திய அணியில் முதல் இன்னிங்க்ஸில் Sobers 132 ஓட்டங்களை எடுத்தார். ஆஸ்த்ரேலிய தரப்பில் Davidson 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். Davidson மிகச்சிறந்த பந்து வீச்சாள ராகவும் பேட்ஸ்மேனுமாக விளங்கியவர். இவர் பங்கு கொள்ளும் போட்டிகளில் முதலில் வேகப்பந்து வீச்சாளராகச் செயல்படுவார். அவரே ஆட்டத்தின் பின்பகுதியில் சுழற்பந்து வீச்சாளராகப் பந்து வீசுவார். ஆஸ்த்ரேலிய கிரிக்கெட் வரலாற்றில் யாரும் மறக்கமுடியாத வீரர் Davidson ஆவார்.

ஆஸ்த்ரேலியா தரப்பில் O' Neill 181 ஓட்டங் களையும் Simpson 92 ஓட்டங்களையும் எடுத்து அணிக்கு வலு சேர்த்தனர். வேகப்பந்து வீச்சாளரான Hall 4 விக்கெட்டு களையும் ஆல் ரவுண்டரான Sobers 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். **(Davidson- *ஐவிட மிகச்சிறந்த ஆட்டக்காரர்* Sobers. *இவரைக் கௌரவித்து ஆங்கிலேய அரசு* Sir *பட்டம் வழங்கியது.*)** இரண்டாவது இன்னிங்கிஸ்ஸில் இரு தரப்பிலும் யாரும் 100 ரன்கள் எடுக்கவில்லை. முதல் இன்னிங்க்ஸ் போலவே Davidson அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



## 55) Hall-வீசிய கடைசிப்பந்து

ஆஸ்த்ரேலியாவின் 2ஆவது இன்னிங்க்ஸ் கடைசி பந்தில் 1 ரன் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் கடைசிப் பந்தை வீசினார் ஹால் என்னும் வேகப்பந்து வீச்சாளர். அப்போது அவர் அருகில் சென்ற அணித்தலைவர் Worrell வேகப்பந்து வீச்சாளரான Hall-இடம் "For Pete's sake do not bowl a no ball" என்று கூறினார். ஏனெனில் No Ball வீசப் பட்டால் ஒரு ரன் கூட்டப்படும். அதன் விளைவாக ஆஸ்த் ரேலியா ஜெயிக்கக்கூடும். Hall-வீசிய பந்தை பவுண் டரியை நோக்கி அடித்தார் ஆஸ்த்ரேலிய வீரர். அவ்வாறு அடித்த பந்தை பவுண் டரியில் இருந்தவர் பிடித்து விட்டார். அதனால் வெற்றிக்குத் தேவையான ஒரு ஓட்டத்தை ஆஸ்த் ரேலியாவால் எடுக்க முடிய வில்லை. கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளர்கள் கடைசி பந்தில் 4 ரன்கள் எடுத்து ஆஸ்த் ரேலியா வெற்றி பெற்றுவிட்டதாக முதலில் சொன்னவர்கள் அதை மாற்றி இரண்டு குழுக்களும் சம எண்ணிக்கையில் ஓட்டங்களைப் பெற்றுள்ளதால் இந்தப் போட்டி Tie-ல் முடிந்தது என்று அறிவித்தனர்.

## 56) 2,3,4,5-போட்டிகளின் சிறப்பு

இரண்டாவது டெஸ்ட் போட்டி 1960 டிசம்பர், 30, 31 மற்றும் 61ஆம் வருஷம் ஜனவரி 2,3 ஆகிய நாட்களில் Melbourne-கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய ஆஸ்த்ரேலியா முதல் இன்னிங்க்ஸில் 348 ஓட்டங்களையும், 2ஆவது இன்னிங்க்ஸில் 70 ஓட்டங் களையும் எடுத்தனர். மேற்கிந்திய தீவுகள் அணி முதல்

இன்னிங்க்ஸில் 181 ஓட்டங்களையும், 2-ஆவது இன்னிங்க்ஸில் 233 ஓட்டங்களையும் எடுத்து தோல்வியைச் சந்தித்தனர். ஆஸ்த்ரேலியா அணி 7 வீக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மூன்றாவது டெஸ்ட் போட்டி சிட்னியில் 1961ஆம் வருஷம் ஜனவரி 13, 14, 16, 17, 18 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்தப் போட்டியை மேற்கிந்திய அணி 222 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. மேற்கிந்திய அணி முதல் இன்னிங்க்ஸில் 339 ஓட்டங்கள் எடுத்தனர். Sobers அதிக பட்சமாக 168 ஓட்டங்கள் எடுத்தார். ஆஸ்த்ரேலியா தனது முதல் இன்னிங்க்ஸில் 202 ஓட்டங்களை எடுத்தனர். தொடர்ந்து விளையாடிய மேற்கிந்திய அணி 2ஆவது இன்னிங்க்ஸில் 326 ரன்கள் எடுத்தனர். ஆனால் ஆஸ்த்ரேலியா தனது 2ஆவது இன்னிங்க்ஸில் 241 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

## 57) Kline and Mackay -எழுப்பிய தடுப்புச் சுவர்

நாலாவது போட்டி Adelaide மைதானத்தில் 1961ஆம் ஆண்டு ஜனவரி 27, 28, 30, 31 மற்றும் பிப்ரவரி 1 ஆகிய தினங்களில் நடை பெற்றன. இந்தப் போட்டி யாருக்கும் வெற்றி தோல்வியின்றி **டிரா**வில் முடிந்தது. மேற்கிந்திய அணியினர் தரப்பில் R.B. Kanhai 117 ஓட்டங்களை எடுத்து சிறப்பாக விளையாடினார். இந்தத் தொடரின் நான்காவது போட்டியில் ஆஸ்த்ரேலியாவின் 2ஆவது இன்னிங்க்ஸில் Kilne, Mackay-ஜோடி ஒரு மணி 50 நிமிடங்களுக்கு ஆட்டத்தின் இறுதியில் விளையாடி மேற்கிந்திய அணி வெற்றி பெற முடியாமல் தடுத்து நிறுத்தினர். 5ஆவது டெஸ்ட் போட்டி Melbourne கிரிக்கெட் மைதானத்தில் 1961ஆம் ஆண்டு பிப்ரவரி 10,11, 13,14, 15 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்கிந்தியத்தீவு அணி முதலில்



விளையாடி முதல் இன்னிங்க்ஸில் 292 ஓட்டங்களையும், 2ஆவது இன்னிங்க்ஸில் 321 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்த்ரேலியா முதல் இன்னிங்க்ஸில் 356 ரன்களையும், 2ஆவது இன்னிங்க்ஸில் 258 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்தப் போட்டியில் ஆஸ்த்ரேலியா 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ்வாறாக இந்தத் தொடரில் ஆஸ்த்ரேலியா வெற்றி பெற்ற போதிலும் ஆஸ்த்ரேலிய மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்களாக Worrell-உம் அவருடைய அணி வீரர்களும் திகழ்ந்தனர். போட்டிகள் முடிவுற்றபிறகு Melbourne-துறைமுகத்தில் இருந்து கப்பலில் பயணம் செய்த மேற்கிந்திய அணியினர்க்கு ஒரு லட்சம் மக்கள் திரண்டு வந்து பிரியாவிடை தந்தனர். 1960-61 ஆண்டு நடைபெற்ற இந்தப் போட்டிகள் கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளத்தில் நீங்காத இடம்பெற்ற தொடராக இன்றும் விளங்குகிறது.

## 57-a) Gas for Laboratory

பூண்டி புஷ்பம் கல்லூரி வேதியியல் துறையில் அட்டெண்டர்களாகப் பணியாற்றிவந்தவர்கள் திரு. பாபு, திரு. வைத்திலிங்கம், திரு. முருகையன், மற்றும் திரு. பீட்டர் ஆகியோர். இவர்களில் பீட்டரும் முருகையனும் சோதனைக் கூடத்தில் உபயோகப்படுத்தப்படும் Bunsen Burner-க்கான Gas தயாரிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

தற்போது மிக எளிதாகக் கிடைக்கும் Liquified Petrolium Gas (L.P.G) அதிக அளவில் அந்தக் காலகட்டத்தில் உற்பத்தி செய்யப்படவில்லை. குறிப்பாகக் கல்லூரிகளில் அமைந்துள்ள சோதனைக் கூடங்களில் Bunsen Burner-ஐ

எரிய விடுவதற்குத் தேவையான வாயு, மண்ணெண்ணையை வேதியியல் முறையில் பிளந்து அதிலிருந்து கிடைக்கும் 1) Methane 2)Ethane, 3) Propane, 4) Butane, 5) Pentane- ஆகிய வாயுக்களை நீரில் சுத்திகரித்துத் தகுந்த பாதுகாப்பு முறையில் அவற்றைச் சேகரித்து வைக்க வேண்டும். இதுவே குழாய்கள் மூலம் சோதனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். (இந்த முறைக்கு Cracking of Keresene என்று பெயர்.)

## 58) Crude Oil

எரிசக்திகளில் பல உண்டு. பெட்ரோல், டீசல், மண்ணெ ண்ணை, திரவ எரிவாயு (Liquified Gas) எனப்பல பொருட்களி லிருந்து எரிசக்தி கிடைக்கிறது. இவற்றுக் கெல்லாம் அடிப்படையாக இருப்பது கறுப்புப்பொன் என்று அழைக்கப்படுகிற கச்சா எண்ணெய். வருங்காலத்தில் உலகத்தையே ஆட்டிப் படைக்கப் போகிற மிகச் சில விஷயங்களில் இந்தக் கச்சா எண்ணெய்க்குத்தான் முதலிடம். தங்கம்கூட கச்சா எண்ணெய் முன்பு தலை வணங்கி நிற்கவேண்டும். இதனாலேயே கச்சா எண்ணெயை எரிசக்திகளின் கதாநாயகன் என்றுகூட நாம் அழைக்கலாம். கிறிஸ்து பிறப்பதற்கு 347 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் எண்ணெய்க் கிணறுகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. மூங்கிலால் பூமியைக் குடைந்து இந்த எண்ணெய்க் கிணறுகளை அமைத்தனர் சீனர்கள்.

பெட்ரோலியப் பொருள்களின் வரலாறு 1850-களிலிருந்து ஆரம்பமாகிறது. 1859-ஆம் ஆண்டு அமெரிக்காவில் எட்வின் டிரேக் என்பவர் பென்கில்வேனியா மாநிலத்தில் உள்ள டிட்ஸ்வில்லாவில் முதல்முதலாக ஒரு



எண்ணெய்க் கிணறைத் தோண்டினார். இதன் ஆழம் 69 அடி. ஒரு நாளைக்கு 25 பேரல் எண்ணெயைத் தோண்டி எடுத்தார்.

## 59) பெட்ரோல் கொண்டு வாகனங்களை இயக்க முடியும் என்று கண்டுபிடித்தவர் பென்ஸ்.

மின்விளக்குகள் வந்தபிறகு மண்ணெண்ணையின் முக்கியத்துவம் கொஞ்சம் குறைந்தது. ஏற்கெனவே தோண்டிய எண்ணெய்க் கிணறுகளை மூடிவிட்டு, வேறு வேலையைப் பார்க்க வேண்டியதுதான் என்கிற அளவுக்கு எண்ணெய்க் கிணறு தோண்டிய வர்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். 1885-ஆம் ஆண்டு ரஷ்யாவில் கச்சா எண்ணெயிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. ஏறக்குறைய இதே நேரத்தில் இந்தோனேஷியாவில் உள்ள சுமத்ராவிலும் பெட்ரோலைத் தயாரிக்க ஆரம்பித்தனர். பெட்ரோல் என்கிற அதிஅற்புதமான திரவம் கண்டு பிடிக்கப் பட்டவுடன் மனிதனின் வாழ்க்கை அசுர வேகத்தில் முன்னேற ஆரம்பித்தது.

பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்ட அதே நேரத்தில் அதைக் கொண்டு வாகனங்களை ஓட்ட முடியும் என்று நிரூபித்தனர் சில தொழில்நுட்ப வல்லுநர்கள். கார்ல்பென்ஸ் என்பவர் 1885-ஆம் ஆண்டு முதல்முதலாக ஒரு காரை உருவாக்கி, அதில் பெட்ரோலை ஊற்றி ஓட்டியும் காண்பித்தார். கார், பஸ், லாரி, இரு சக்கர வாகனங்கள் மட்டுமின்றி நிலக்கரியில் இயங்கி வந்த ரயில், கப்பல் போன்ற பெரு வாகனங்கள்கூட பெட்ரோலியப் பொருள்களின் உபயோகத்திற்கு மாறின. அந்தப் பட்டியலில் ஆகாய விமானமும் புதிதாகச் சேர்ந்து கொண்டது. போக்குவரத்துக்குத் தொடர்பில்லாத வேறு பல இயந்திரங்களும் (நீர் இறைக்கும் பம்ப்

செட், மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்) பெட்ரோலியப் பொருள்கள் மூலம் இயங்க ஆரம்பித்தன.

## 60) பெட்ரோலியப் பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன?

பெட்ரோலியப் பொருள்கள் என்பது பலவிதமான ஹைட்ரோ கார்பன் அணுக்களின் கூட்டுக்கலவை. இதில் ஹைட்ரஜன் மற்றும் கார்பன் அணுக்களே அதிகம் உள்ளன. அதனால்தான் இதை ஹைட்ரோகார்பன் என்றுகூட அழைக்கிறார்கள். பூமியின் மிக ஆழத்திலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வோர் எண்ணிக்கையில் ஹைட்ரஜன் மற்றும் கார்பன் அணுக்கள் இருக்கின்றன. கார்பன் அணுக்களின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றத்தினால்தான், பலவிதமான பொருள்கள் உருவாகின்றன.

குறைவான எண்ணிக்கையில் கார்பன் அணுக்கள் இருந்தால் அது எளிதில் ஆவியாகும் தன்மை பெற்றதாக இருக்கும். உதாரணமாக மீத்தேன், ஈத்தேன், புரபேன் மற்றும் புயுட்டேன். இவை அனைத்தும் வாயு வடிவில் நமக்குக் கிடைக்கின்றன. அதிக எண்ணிக்கையில் கார்பன் அணுக்கள் இருக்கும் பட்சத்தில் அது திரவ வடிவைப் பெற்று விடுகிறது. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகச் சொல்லலாம். பூமியிலிருந்து நமக்குக் கிடைப்பது கச்சா எண்ணெய்தான். அதை ஆங்கிலத்தில் Crude Oil என்று சொல்வார்கள். அட்டைக் கறுப்பு அல்லது கொஞ்சம் பழுப்பு நிறமும் கலந்து கச்சா எண்ணெய் காணப்படுவதால், இதற்கு வைக்கப்பட்டுள்ள இன்னொரு பெயர் கறுப்புத் தங்கம். இந்தக் கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும்போதுதான் திரவ எரிவாயு, பெட்ரோல், மண்ணெண்ணை, டீசல், Furnace Oil, Asphalt, Lubricant Base Oils, கந்தகம் ஆகியவை கிடைக்கின்றன.



## 61) கச்சா எண்ணெயின் உற்பத்தி

மக்கிப்போன விலங்கு மற்றும் தாவரங்கள் பல ஆயிரம் ஆண்டுகள் பூமியில் படிந்திருப்பதன் விளைவாக உருவாகும் எண்ணெயிலிருந்து கச்சா எண்ணெய் கிடைப்பதால், இதை 'Fossil Oil' என்று அழைக்கின்றனர். கடலின் மிக ஆழத்தில் இருந்து மட்டும் கச்சா எண்ணெய் எடுக்கப்படுவதில்லை. நிலப்பகுதிகளில் இருந்தும் கச்சா எண்ணெய் எடுக்கப்படுகிறது. நிலப்பகுதிகளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினங்கள், தாவரங்கள் இறந்து, அழிந்து மண்ணோடு மண்ணாக மக்கி, பூமியின் அடி ஆழத்துக்குள் சென்று கச்சா எண்ணெயாக மாறியுள்ளன. மேலும், பூமியின் மிக ஆழத்தில் உருவாகும் கச்சா எண்ணெய் அதே இடத்தில் மட்டும் தேங்கி நிற்பதில்லை. நிலப்பரப்பில் நதிகள் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பயணம் செய்வது போல், பூமியின் மிக ஆழத்தில் தேங்கி நிற்கும் கச்சா எண்ணெயும் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குப் பயணம் செய்கிறது. பாறைகளுக்கு நடுவே இருக்கும் இடுக்களில் எல்லாம் நுழைந்து பல ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தைக் கூடக் கடந்து செல்கிறது கச்சா எண்ணெய்.

கடைசியில் ஏதோ ஓர் இடத்தை அடைந்து, அதற்கு மேல் பயணம் செல்ல முடியாமல் தேங்கி நிற்க ஆரம்பிக்கிறது. இப்படி ஒரே இடத்தில் பெருமளவில் கச்சா எண்ணெய் சேர்ந்து, ஆழ்துளைக் கிணறுகள் வழியாகப் பூமியின் மேற்பரப்பை வந்தடைகிறது. கடுமையான பாறைகளுக்கு உள்ளிருந்து இந்தக் கச்சா எண்ணெய் எடுக்கப்

படுவதால், பெட்ரோலை ‘பாறை எண்ணெய்’ என்றும் அழைக்கின்றனர். கச்சா எண்ணெயை ஏன் சுத்திகரிக்கிறார்கள்? அதை அப்படியே பயன்படுத்த இயலாதா? போன்ற கேள்விகள் அனை வருக்கும் தோன்றும். சில நேரங்களில் மட்டும் பூமியிலிருந்து எடுக்கப்பட்ட கச்சா எண்ணெயை அப்படியே பயன் படுத்தமுடியும். உதாரணத்திற்கு, மிகப் பெரிய கப்பல்களை இயக்க சுத்திகரிக்கப்படாத கச்சா எண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். கப்பல்களைப் போல, எல்லா வாகனங்களையும் கச்சா எண்ணெயைக் கொண்டு இயக்க முடியாது. காரணம், சுத்திகரிக்கப்படாத கச்சா எண்ணெயில் எளிதில் தீப்பற்றக்கூடிய சில வேதியியல் பொருட்கள் உள்ளன. இதனால் மிகப் பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனைத் தவிர்க்கவே, சுத்திகரிக்கப்படாத கச்சா எண்ணெயைப் பயன்படுத்தப்படுவது இல்லை.

## 62) OIL REFINERY

கச்சா எண்ணெயைச் சுத்திகரிப்பது என்றால் வெறும் சுத்தம் செய்வது மட்டுமல்ல. அதைவிட ஒருபடி மேலே சென்று பல்வேறு பயன்பாட்டிற்கு ஏற்ற எண்ணெயைத் தயாரிப்பதாகும். உதாரணத்திற்கு, நம்வீட்டுக் குழாயில் தண்ணீர் வருகிறது. அது சுத்த மான தண்ணீர் அல்ல. எனவே கிருமிகளை அழிக்கும் ஃபில்டரில் அந்தத் தண்ணீரை ஊற்றி, முதலில் சுத்தப்படுத்துகிறோம். அப்படியே அதில் உள்ள மஞ்சள் நிறத்தையும் மாற்றி, வெள்ளை வெளேர் என ஆக்குகிறோம். அதோடு மட்டும் அல்லாமல் சுவையையும் கொஞ்சம் கூட்டுகிறோம்.

சாதாரணமாகக் கிடைக்கும் தண்ணீரை இவ்வளவு தூரம் மாற்றுவதுதான் சுத்திகரிப்பு. கச்சா எண்ணெய் சுத்திகரிக்கும்போதும் இதுபோன்ற மாற்றங்கள் பல நிகழ்கின்றன. கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு என்பது எளிதாக மேற்கொள்ளக்கூடியதொன்றல்ல. அதற்கு மிகப் பெரிய தொழிற்சாலை வேண்டும். அந்தத் தொழிற்சாலை அமைய பல நூறு ஏக்கர் நிலம் வேண்டும். பல ஆயிரம் மனிதர்கள் வருஷத்தில் 365 நாட்களும் அங்கு உழைக்கவேண்டும். எப்போதும் மின்சாரம் வேண்டும். நிறைய தண்ணீர் வேண்டும். இதுபோன்ற பல கட்டமைப்புகள் இருந்தால் மட்டுமே ஒரு கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவி, தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த முடியும். அதனால் தான் ஏழை நாடுகளால் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவி நடத்த முடிவதில்லை.



## 63) கச்சா எண்ணெயிலிருந்து என்னென்ன கிடைக்கும்?

ஒரு பேரல் என்பது அமெரிக்கக் கணக்குப்படி 42 கேலன். ஒரு கேலன் என்பது 3.78 லிட்டர். (அமெரிக்கக் கணக்குப்படி) அதாவது ஒரு பேரலில் 158.75 லிட்டர் கச்சா எண்ணெய் இருக்கும். கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் போது முதலில் கிடைப்பது வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு. அதன்பிறகு ‘நாப்தா’ (Naphtha)எனப்படும் பெட் ரோலின் மூலப்பொருள், மண்ணெண்ணெய், விமானங் களில் பயன்படுத்தப்படும் சுத்தி கரிக்கப்பட்ட மண்ணெண் ணெய் (Aviation Turbine, Fuel-ATF) Heavy Fuel Oil எனப் படும் கப்பல், மற்றும் நிலக்கரியைக் கொண்டு அதில் மின்சாரம் தயாரிக்கும் மின் நிலையங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. அதன்பிறகு மீதமுள்ள கச்சா எண்ணெயிலிருந்து Vacuum Distillation எனப்படும் சுத்தி கரிப்பை மேற்கொண்டு உராய்வுத் தடுப்பு எண்ணெய்

தயாரிக்கப் பயன்படும் Lubricants Base Oil பெறப்படுகிறது. அதன்பிறகு மீதமுள்ள கச்சா எண்ணெய் கொண்டு மருந்துகள் தயாரிக்கப் பயன்படும் பல்வேறு மூலப் பொருள்கள் பெறப்படுகின்றன. இறுதியில் மஞ்சள் நிறம் கொண்ட Free Sulphur கிடைக்கின்றது. எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் சுமார் 300 அடி உயரத்திற்கு பொருத்தப்பட்ட செங்குத் தான நீண்டதொரு குழாயின் முகப்பில் தீ கொழுந்து விட்டுஎரிந்து கொண்டேயிருக்கும். மேற்சொன்ன சுத்திகரிப்புகளுக்குப் பிறகு பயன்படுத்த இயலாத குறிப்பாக வாயு நிலையிலுள்ள பல்வேறு ரசாயனப் பொருள்கள் இவ்வாறு எரிக்கப்படுகின்றன. பெட்ரோலியப் பொருட்கள் இல்லையேல் மனிதன் வாழ இயலாது.

குறிப்பாக உயிர்காக்கும் பல மருந்துகள் கச்சா எண்ணெயிலிருந்து தான் கிடைக்கின்றது என்பதையும் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லையேல் மனித வாழ்க்கையே தலை கீழாக மாறி விடும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். ***(என்னுடைய ஜீவாதாரமே பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் கச்சா எண்ணையோடு பிணைந்த இந்தியன் ஆயில் நிறுவனம் கொடுத்த ஊதியத்தைச் சார்ந்து இருந்தது. அங்கே நான் பெற்ற அனுபவங்கள் பல. 1963ஆம் ஆண்டு தொடங்கி 1997ஆம் ஆண்டு முடிய 34 ஆண்டுகள் எண்ணெய்க் கம்பெனி அனுபவம் என் வாழ்வை வளப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் பல பாடங்களை கற்றுக் கொடுத்தது. பின் வரும் காலங்களில் மண்ணெண்ணெய்க் கம்பெனியில் நான் பணிபுரிந்தபோது எதிர் கொண்ட இன்னல்கள், வெற்றிகள், தோல்வியையும் வெற்றியாக மாற்றிக் கொண்ட நிகழ்வுகள், தொழிலாளர் மேலாண்மை, செயல் திறன், உற்பத்தித்திறன் போன்ற ஒருவனது வாழ்க்கை மேம் பாட்டிற்குத் தேவையான அனைத்தையும் எனது எண்ணெய்க் கம்பெனி வாழ்க்கை எனக்குக் கற்றுக் கொடுத்தது எப்படி என்பதை எழுதவிருக்கிறேன்.)***



## 64) பீட்டரின் மோசடி

பூண்டி புஷ்பம் கல்லூரி வேதியியல் விரிவுரையாளர் திரு. R.. சுப்ரமண்யம் கண்டிப்பு மிகுந்தவர். ஒருநாள் Bunsen Burnerக்கான கேஸ் தயாரிக்கும் பீட்டரிடம் 10 டின் மண்ணெணெய்க்கு உரிய கேஸ் கிடைக்கவில்லை, ஏன் என்று வினவினார். அவன் அதற்கு “என்ன சார் உங்க மனசிலே என்ன நினைச்சிட்டுருக்கீங்க? நான் என்ன களவாணியா? இந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு நான் கேரளா போறேன்” என்று சொல்லி Spannerகளையும் கேஸ் ரூம் சாவியையும் அவருடைய மேசை மேல் வீசி எறிந்துவிட்டு சென்றுவிட்டான். இன்னொரு கேஸ் தயாரிக்கும் தொழிலாளியைத் தேடி பணியில் உடனடியாக அமர்த்த இயலவில்லை. அப்போது அவனுடன் பணி புரிந்த முருகையன் “நான் அந்த வேலையைச் செய்கிறேன் சார். என்னுடைய உதவிக்கு நீங்கள் ஒரு வேலை ஆளைத் தாருங்கள்” என்று சொல்லி அவன் அந்தப் பணியை மேற் கொண்டான்.

முருகையன் வேலையில் அமர்த்தப்பட்ட பிறகு கேஸ் உற்பத்தி 25% அதிகரித்தது. அதாவது ஏற்கெனவே 10 டின் மண்ணெ ண்ணெய்க்கு X Quantity Gas தயாரிக்கப்பட்டு வந்தால் தற்போது X + 25% கிடைக்கப் பெற்றது. இதற்குக் காரணம் பீட்டர் ஒன்றிரண்டு மண்ணெண்ணெய் டின்களை வெளியே விற்று வந்ததுதான் என்பது கண்டுபிடிக்கப் பட்டது. ***(ஒருவரிடம் வேலையை ஒப்படைக்கும்போது Policing எனப்படும் தோள்பட்டையின்மீது கண்காணிப்பவரது மூச்சுக்காற்று***

*படக்கூடாது. ஆனால் ஒருவரை நாம் கண்காணிக்கிறோம் என்பது தெரியாமல் அவர்செய்யும் வேலையை நாம் மேற்பார்வையிட்டு வர வேண்டும். அவ்வாறு மேற்பார்வையிடுவதற்கு உரிய வழிமுறை களைத் தேவைக்கேற்ப நாம் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பது மிகச் சிறந்த மேலாண்மைக் கொள்கையாக* **(Management Principles)** *ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தை என்னுடைய 21ஆவது வயதில் இந்த நிகழ்ச்சி மூலம் கற்றுக் கொண்டேன்.)*

## 65) Attempted Acid Throw

வேதியியல் பரிசோதனைக்கூடத்தில் வைத்திலிங்கம் எனப்படும் அட்டெண்டர் வேலையில் அமர்த்தப்பட்டார். அவர் அந்தத் தொழிலுக்குப் புதியவர். மேலும் அவர் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி. ஒருநாள் வகுப்பறைக்கு குளோரின் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சில வேதியியல் உபகரணங்களை எடுத்துச் செல்லும் போது கண்ணாடியால் ஆன அந்த உபகரணங்கள் கைதவறிக் கீழே விழுந்து உடைந்து போயின. புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு குளோரின் மிகச்சிறந்த Oxidising Agent என்பதை செயல்முறை விளக்கம் கொண்டு போதித்திட வேண்டும். அதற்கு ஒரு குடுவை, அதிலிருந்து வெளிப்படும் வாயுவை எடுத்துச் செல்வதற்கு ஒரு நீண்ட கண்ணாடிக்குழாய், கண்ணாடித்துண்டால் மூடப்பட்ட ஒரு கண்ணாடி ஜார், அதற்குள் செந்நிறம் கொண்ட செம்பருத்தைப்பூ. வகுப் பறையில் உபகரணங்களைப் பரப்பி Potassium Perman ganate மீது அடர்த்தி குறைந்த ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை மெதுவாகக் கலந்தால் குளோரின் வாயு உண்டாகும்.



$$2\,KMnO_4 + 16\,HCl = 2KCl + 2MnCl_2 + 8H_2O + 5Cl_2$$

புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு இதுபோன்ற செயல் முறைப்பயிற்சிகள் செய்து காண்பிக்கப்படவேண்டும் என்பது பல்கலைக் கழக வழிகாட்டி நெறிகளாகும். இந்த உபகரணத்தின் விலை அந்தகால கட்டத்தில் சுமார் 800 ரூபாயிருக்கும். திரு. சுப்ரமண்யம் மிகக் குறைந்த சம்பளம் வாங்கி வந்த வைத்திலிங்கத்திடம் இவ்வாறு இந்த உபகரணம் உடைந்ததால் அவருடைய சம்பளத்திலிருந்து மாதம் 40ரூபாய் பிடிக்கப்படும் என்று கூறினார். அவர் வாங்கி வந்த சம்பளமோ ரூபாய் 50 அல்லது 60 தானிருக்கும். அதில் 40ரூபாயைப் பிடுங்கிக் கொண்டால் அவன் என்ன செய்வான்? ஒருநாள் மதிய உணவு உட்கொண்ட பின் பரிசோதனைக்கூடத்தில் நான் எனக்கு அடுத்து R.சுப்ர மண்யம், அதற்கு அடுத்தடுத்து திரு. சுந்தரம், திரு. சம்பத் குமார், பௌதிகத்துறை செயல்முறை பயிற்சியாளர் திரு. நாராயணன் ஆகியோர் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எதிர்வரிசையில் அமைந் திருந்த மாணவர்களுக்கான பரிசோதனைக் கூட Shelfஇன் பக்கத்தில் திரு. வைத்திலிங்கம் நின்று கொண்டு தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

திரு. சுப்ரமண்யமோ தமக்குரிய மலையாளம் கலந்த தமிழில் அபராதத்தை திரும்பிப்பெற்றுக் கொள்ள முடியாது என்று பதில் கூறிக்கொண்டிருந்தார். மேசையின் முதல் நபராக உட்கார்ந்திருந்த நான் வைத்திலிங்கம் தன் கைகளை நீட்டி Sulphuric Acid நிரப்பப்பட்டிருந்த பாட்டிலை எடுப்ப தற்கு முயன்று வருவதைப் பார்த்தேன். அவன் திரு.

சுப்ரமண்யத்தின்மீது ஆசிட் பாட்டிலை தூக்கி எறிந்து தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். மெதுவாக அவனுக்குப் பின்புறம் சென்று இந்த முயற்சியை முறியடித்தேன். அனைவரும் பதற்றம் கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் விளைவாக அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

***(இந்த நிகழ்ச்சி இன்றும் என் மனக்கண்களைவிட்டு அகல வில்லை. பிற்காலத்தில் பலம் பொருந்திய தொழிலாளர் அமைப்புகளுடன் எவ்வாறு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும், வேலைக்காரன் ஆனாலும் அவனுக்கும் தன்மான உணர்வு உண்டு, பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது தன்நிலை மறந்து எவ்வாறு செயல்படுகிறான் போன்ற சமூக இயல் சார்ந்த நிகழ்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை இந்த நிகழ்ச்சி எனக்குக் கற்றுத்தந்தது.)***

## 66) கல்லூரி கிரிக்கெட் போட்டியின் முதலும் முடிவும்

1961ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் நான், வேதியியல் துறை விரிவுரையாளர் சுந்தரம், வேதியியல்துறை மாணவர்கள் ராதா கிருஷ்ணன், வைத்யநாதன், ***(இவன் ஒரு*** Super Intelligent Student ***ஒவ்வொரு தேர்விலும் 95 மதிப்பெண்களுக்குக் குறையாமல் அனைத்துப் பாடங்களிலும் பெற்றிடுவான்.*** Practical ***வகுப்பில் குறிப்பாக*** Quantitative Analysis ***பாடப்பகுதியில் வைத்தியநாதன் எழுதும் விடையைத்தான் மற்றையோருக்கு மதிப்பெண் கொடுப்பதற்கு அளவுகோலாகக் கொள்வோம்.)*** கோவிந்தராஜன் ஆகியோர் ஆசிரியர் மாண வர்கள் குழுவினர் கிரிக்கெட் போட்டி ஒன்றிற்கு ஏற்பாடு செய்தோம். 12 ஆசிரியர்கள் கொண்ட கல்லூரி ஆசிரியர் குழு விற்கும், 12 மாணவர்கள் கொண்ட கல்லூரி மாணவர் குழுவிற்கும் இடையே 10 ஓவர் போட்டி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.



சில ஆசிரியர் களுக்கு இந்தப் போட்டியின் விதிகளைக் கூறி நீங்கள் பந்து வந்தால் கீழே விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள் என்று கூறி அவர்களை இந்தப் போட்டியில் கலந்து கொள்ளச் செய்தோம். வேதியியல் மாணவன் ராதாகிருஷ்ணன்தான் மாணவர் குழு கேப்டன். அவனிடம் ஆசிரியர்கள் சில ரன்களை எடுப்பதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள், ஆட்டத்தை விட்டுக்கொடுத்து ஆசிரியர்கள் குழு வெற்றி பெறுவதற்கு உதவவேண்டும் என்று கூறியிருந்தேன். அவர்களும் சரி என்று சொன்னார்கள். ஆசிரியர்கள் குழுவில் 4 நபர்களைத் தவிர யாரும் அதிக ஓட்டங்கள் எடுக்கவில்லை. வரலாற்றுத் துறை ஆசிரியர் திரு. கோதண்டராமன் கீழே குனிந்து அடித்த பந்தைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தபோது அவருடைய பிறப்புறப்பில் அந்தப் பந்து பட்டு மயங்கிக் கீழே விழுந்து விட்டார். இதன் விளை வாக அவர் ஒரு வாரம் மருத்துமனையில் அனுமதிக்கப் பட்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஆசிரியர் குழு மாணவர் குழு ஆகியோரிடையே நேய முறையில் எந்த விளையாட்டும் நடைபெறவில்லை.

## 67) மொழியின் பெயரால் இனத்தின் பெயரால் அரங்கேறிய அவலங்கள்

மஹாராஷ்ட்ர மாநிலத்திலிருந்து குஜராத் மாநிலம் பிரிக்கப் பட்டு மஹாராஷ்ட்ராவிற்கு பாம்பே தலைநகர மாகவும், குஜராத் மாநிலத்திற்கு அஹமதாபாத் தலைநகர மாகவும் ஆக்கப்பட்டு அந்த மாநிலத்தில் நிலவியிருந்த அமைதியின்மை ஒருவாறு கட்டுக்குள் கொண்டு

வரப்பட்டதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். ஆனால் பிரதமர் நேரு தம் வாழ்நாளின் இறுதி ஆண்டுகளில் 1960ஆம் ஆண்டு தொடங்கி 1964 முடிய இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மொழியின் பெயரால், மதத்தின் பெயரால் நடைபெற்றுவந்த கிளர்ச்சிகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பஞ்சாப் மாநிலத்தில் 1960ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. சீக்கியர்கள் தமக்கென மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட ஓர் மாநிலம் வேண்டுமென்று போராடி வந்தனர்.

உண்மையிலேயே பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் என்ற போர்வையில் சீக்கியர்கள் தமக்கென தனி நாடு வேண்டும் என்று மறைமுகமான போராட்டங்களில் ஈடுபட்டனர். மாஸ்டர் தாரா சிங்கும்மற்றொரு சீக்கியத் தலைவரான Sant Fateh Singh ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து பல போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். அடிக்கடி இவர்களும் இவர்களுடைய அகாலிதள தொண்டர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், சாகும் வரை உண்ணாவிரதம் என்று இந்த இருவரும் அறிவிப்பர். ஆனால் சிலநாட்கள் சென்றபின் தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்கிறோம் என்று நாடகம் ஆடுவர்.

***(ஈழத்தமிழர் பிரச்சனை கையில் எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் 'பந்த்' என்றும், உண்ணா விரதப் போராட்டம் என்றும், சாகும்வரை உண்ணாவிரதம் என்றும் பல போராட்டங்களை "தன் நலத்தை" பெருக்கிக் கொள்வதற்கு முயன்றனர். பல ஆண்டுகளாக தீர்வுகாண முடியாத இலங்கைப் பிரச்சனைக்கு விடுதலைப்புலி பிரபாகரனின் மரணத்தில் முடிவு கண்டனர் சிங்களர். அகதிகளாய் இந்தியாவில் இருப்போருக்கும் அங்கே போரினால் தம் உடைமைகளை இழந்து, உற்றார் உறவினர்களை இழந்து வாடும் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஒருநாள் உண்ணாவிரதம் இருந்து அன்றைக்கு உணவுக்குச் செலவுசெய்யும் பணத்தை இலங்கைத் தமிழர் துயர் துடைக்க அளிக்க எந்த அரசியல் கட்சியும் முன் வரவில்லை. ஏன்? எரிகின்ற வீட்டில் இருந்து எந்த வகையில் ஆதாயம் தேடலாம் என்ற கொள்கையே இதற்குக் காரணம். இத்தகைய போக்கிற்கு வித்திட்டவர் மாஸ்டர் தாராசிங். இந்திராகாந்தி அம்மையார் சீக்கியர்களை வழிக் கொணர்வதற்காக பிந்த்ரன் வாலே என்னும் பூதத்தை உருவாக்கினார். அந்த பூதமே இந்திராகாந்தி அம்மையாரை பின்பு விழுங்கிவிட்டது.)***



அப்போதைய பஞ்சாப் முதல் மந்திரியான பிரதாப்சிங் கெய்ரான் உறுதியுடன் செயல்பட்டார். இரும்புக்கரம் கொண்டு அகாலிதளப் போராட்டங்களை எதிர்கொண்டார். கிராமப்புற மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட முதல் மந்திரியாகத் திகழ்ந்து வந்தார். எட்டு ஆண்டுகள் அதாவது 1960 தொடங்கி 1968ஆம் ஆண்டுவரை பஞ்சாபின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்து வந்தார். இவர் காலத்தில்தான் புகழ் பெற்ற பஞ்சாப் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றது. ஆழ்துளைக் கிணறுகளில் குழாய்களைப் பொருத்தி வேளாண் தொழிலில் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தார். விவசாயிகள் பயிர்த் தொழிலை மட்டும் நம்பியிராமல் கோழி வளர்ப்பு போன்ற லாபகரமானத் தொழில்களை மேற்கொள்ளச் செய்தார். வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த இல்லத்தரசிகளை பட்டப்படிப்பு படிக்குமாறு ஊக்குவித்தார். ஆனால் அவருடைய புகழுக்குக் களங்கம் ஏற்படுத்திடும் வண்ணம் அவருடைய இரு மகன்கள் செயல்பட்டனர். காங்கிரஸ் கட்சியிலும் பஞ்சாப்

மாநிலத்திலும் கெய்ரான்மீதான ஊழல் புகார்கள் குவிந்த வண்ணம் இருந்தன. முடிவில் திரு. நேரு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றினை அமைத்தார். அன்றைய காலகட்டத்தில் பஞ்சாபில் பிரதாப்சிங் கெய்ரானும், காஷ்மீரில் பக்ஷிகுலாம் முகம்மதும் நேருவிற்கு நெருக்கம் உடையவர்களாக இருந்து வந்தனர்.

எல்லைமாகாணமான பஞ்சாபில் நேருவின் அரவணைப்பில் முதல் மந்திரி கெய்ரானின் நடவடிக்கைகள் நேருவின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தின. வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டு நாகா மாநிலம் உருவாக்கப்பட்டது. 1960ஆம்ஆண்டு ஜுன் மாதம் அஸ்ஸாமில் வங்காள மொழி பேசும் மக்களுக்கு எதிரான கிளர்ச்சி வலுப்பெற்றது. அப்போது நடந்த கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் வீடு இழந்தனர், கொல்லப்பட்டனர். அப்போதைய உள்துறை அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்த்ரி அஸ்ஸாமுக்குச் சென்று அமைதி திரும்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். அஸ்ஸாம்மாநிலத்தில் அஸ்ஸாமிஸ் ஆட்சி மொழியாக இருக்கும் என்றும், அதே சமயம் மிகுந்த எண்ணிக்கையில் வங்காளிகள் அந்த மாநிலத்தில் நிறைந்து இருப்பதால் வங்க மொழியும் இணை ஆட்சி மொழியாய் இருக்கும் என்று அறிவித்தார்.

1961ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஜபல்பூரில் மதக்கலவரம் வெடித்தது. இரண்டு முகம்மதிய இளைஞர்கள் தன்னை பலாத்காரம் செய்தனர் என்று கூறி ஹிந்துப் பெண் ஒருத்தி தற்கொலை கொண்டாள். இந்தச் சாவில் மர்மங்கள் பல நிறைந்திருப்பதாக உள்ளூர் நாளிதழில் வெளிவந்த செய்தியின் அடிப்படையில் முகம்மதியர்களுடைய வீடுகள்,



வணிக வளாகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பதிலடி கொடுக்கும்வண்ணம் முகம்மதியர்களும் கலவரத்தில் ஈடுபட்டனர். ஜபுல்பூரிலிருந்து மெல்ல மெல்ல இந்த கலவரம் மற்றைய பகுதிகளுக்குப் பரவியது. நாட்டு விடுதலைக்குப் பிறகு மிகப் பெரிய அளவில் எழுந்த இந்தக் கலவரம் அடக்கப் படுவதற்குப் பல மாதங்கள் ஆயின. **(The Hindu** ***நாளிதழில் இந்தச் செய்திகள் ஏதோவொரு மூலையில் நான்கு வரிச் செய்திகளாகக் காணப்படும். மக்களால் விரும்பி படிக்கப்பட்டு வந்த டீக்கடை நாளிதழ் களின் ராஜாவான தினத்தந்தியில் 'சதக்சதக்' என்று குத்தினார், 'இச் இச்' என்று முத்தமிட்டார் போன்ற உள்ளூர்ச் செய்திகள் பாமரர்கள் படிப்பதற்கு ஏற்பத் தலைப்பிடப்பட்டு விற்பனையில் முன்னேற்றம் கண்டிருந்தது. ஆனால்*** **The Current, The Blitz** ***போன்ற இதழ்களில் வட இந்தியாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள் தெளிவு படச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கும்.)***

## 68) Three Concerns

வேதியியல் துறையைச் சார்ந்த நான், திரு. சுப்ரமண்யம், மற்றும் திரு. சுந்தரம் ஆகிய மூவரும் கூட்டு சேர்ந்து இந்த இதழ்களை வாங்கிப் படிப்போம். மக்கள வையில் அவ்வப்போது நடைபெற்று வரும் பயனுள்ள அதே சமயம் பொறுப்புள்ள எதிர்க்கட்சிகளாய் விளங்கி வந்தோரின் கேள்விக்கணைகளையும், அவற்றைத் துணிவுடன் எதிர் கொண்டு பதிலளித்து வந்த திரு. நேருவின் சமயோசித அறிவும் என்னை மிகவும் ஈர்த்த நிகழ்ச்சிகளாகும். வேலையில் இருப்பதால் இயந்திரங்களோடு இயந்திரமாக செயல் படாமல் இன்று வரையிலும் நாட்டு நடப்புகளையும், உலக அளவில் அரங்கேறும் நிகழ்ச்சிகள் எவ்வாறு இந்திய மக்களைப்பாதிப்படையச் செய்யும் என்பதை என்னுடைய

16ஆவது வயது முதல் உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளேன், வருகிறேன். ***(ஒவ்வொரு தனிமனிதனும் Concern for self, Concern for Family, Concern for Society என்ற மூன்று வகைக் கவலைகளைக் கொண்டிருக்க வேண்டும். இதில் மூன்றாவது கவலைக் களனான Concern for Society நம்மிடையே இல்லாததால்தான் நம்மால் சுற்றுப்புறச் சூழ்நிலையையும், நம்மைச் சூழ்ந்திருக்கின்ற ஆபத்துக்களையும் அறிந்து கொள்ள இயலவில்லை. நாட்டின் ஏதோவொரு மூலையில் நடைபெற்ற சீக்கியர்களின் எழுச்சி, நாகா மக்களின் போராட்டம், ஜபல்பூர் இனக்கலவரம், தமிழ்நாட்டில் வேரூன்றிய ஹிந்தி எதிர்ப்பு, அதன் வழித்தோன்றிய 69% ரிசர் வேஷன், ஆரியர் திராவிடர் என்ற துருப்புச் சீட்டைக் கையாண்டு அவ்வப்போது அறிவியலுக்குப் பொருத்தமில்லாத கதைகளைப் பரப்பி வரும் திராவிடக் கட்சிகள் வளர்ந்தவிதம், அவர்கள் சினிமா எனப்படும் மாபெரும் சாதனத்தின் வழியாக ஆட்சியைப் பிடித்தது போன்றவற்றை என்னால் தெளிவுபடக் கூறஇயலும்.)***

## 69) கிருஷ்ணமேனன் மீதான குற்றச்சாட்டுகள்

சீனநாட்டுடனான எல்லைப்பிரச்சனை வளர்ந்து கொண்டே இருந்தது. White Papers எனப்படும் உண்மை நிலை அறிக்கைகள் பல வெளியிடப்பட்டன. மக்களவையில் எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சராய் செயல்பட்டு வந்த திரு.கிருஷ்ணமேனனை மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர். பீஹார் மாநிலத்தின் தலை சிறந்த அப்பழுக் கற்ற அரசியல்வாதியான திரு. J.B. Kripalani 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் நாள் மிகச் சிறந்ததொரு உரை ஆற்றினார். இதனை ஆங்கில நாளேடுகள் "Acharya Kripalani delivered perhaps the greatest speech that has been made on the floor of that House since Independence" என்று புகழாரம்



சூட்டின. பாதுகாப்பு அமைச்சரான திரு. கிருஷ்ணமேனன்மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினார் திரு. கிருபளானி. இவர் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் பாரதநாடு பன்னிரண்டாயிரம் சதுர மைல் பரப்பளவு கொண்ட எல்லைப்பகுதியை சீனாவிடம் இழந்து நிற்கிறது. ***(இன்றையநாள் வரை சீனாவிடம் இழந்த பகுதிகளை நம்மால் மீட்க இயலவில்லை. மாறாக இந்தியக் குடியரசுக்கு உட்பட்ட மேகாலயா மாநிலம் சீனாவின் வரைபடத்தில் சீனாவின் ஒரு பகுதியாக காண்பிக்கப் பட்டு வருகிறது.)***

"திரு. கிருஷ்ணமேனனின் நிர்வாகத் தலையீட்டால் ராணு வத்தில் பதவி உயர்வுகளும், மற்றைய சலுகைகளும் தகுதி உடை யோர்க்கு அளிக்கப்படுவதில்லை. மாறாக திரு. கிருஷ்ணமேனனின் கடைக்கண் பார்வை பெற்றோர்க்கே அளிக்கப்பட்டு வருகிறது ராணுவ வீரர்களிடையே இன, மொழி அடிப்படையில் பிரிவுகளை உண்டாக்கித் தன்னுடைய சொந்த நலனைப் பெருக்கியுள்ளார். சென்ற சில ஆண்டுகளாக ராணுவத் தடவாளங்கள் உரியமுறையில் தரம் பொருந்தியனவாக வாங்கப்படவில்லை, இதில் ஊழல் நடை பெற்று உள்ளது" ***(இன்றைக்கும் அவ்வப் போது Bofors பீரங்கி ஊழல் என்று அரசியல்வாதிகள் குறிப்பாக பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறிவருவார்கள். ஆனால் இந்த Bofors பூதத்தை யாரும் அடக்க முடியாது. ராஜீவ்காந்திக்கும் Bofors ஊழலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஒருசாரார் கூறி வருகின்றனர்.***

***தி ஹிந்து நாளிதழ் பக்கம் பக்கங்களாக ஆவணங்களை தான் வெளிப்படுத்தியதாக மார்தட்டிக் கொண்டது. இந்த Bofors ஊழல் நாட்டின் மிகப் பெரிய உளவு அமைப்பான சி.பி. ஐ.யின் செல்லப் பிள்ளை. அவ்வப்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் கட்சியின் தலைவர்கள் மேற்கொள்ளும் முடிவுற்கேற்ப இந்த Bofors பூதத்தை***

*சி.பி.ஐ. விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். சில நாட்களுக்குப்பிறகு அது காணாமல் போய்விடும். மக்களவைக்குத் தேர்தல் வந்தால் அது மீண்டும் ஒலிக்கும். இதைப் போன்றுதான் கிருஷ்ண மேனன்மீது ராணுவத் தடவாளங்கள் வாங்கிய விதத்தில் ஊழல் நடைபெற்றது என்று எதிர்க்கட்சிகள் கூறிவந்தனர். ஆனால் கிருஷ்ணமேனனை அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை.)*

“இந்தியா ஒரு ஏழை நாடு, அதன்வரிப்பணம் கிருஷ்ணமேனனால் விரயம் செய்யப்பட்டுள்ளது என்று கூறிய திரு. கிருபளானி கட்சிப்பாகுபாடு இன்றி மனச் சாட்சிக்கு கட்டுப்பட்டு அனைத்து மக்களவை உறுப்பினர் களும் கேட்டுக்கொண்டார். பிரிட்டீஷ் அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயல்களை எதிர்கொண்ட காங்கிரஸ் கட்சியினர் இப்போது நாட்டின் சுதந்திரத்தை காப்பாற்று வதற்கு கிருஷ்ணமேனனை எதிர்த்துப் போரிடவேண்டும் என்று குரல் கொடுத்தார்.

அப்போது நடந்த விவாதத்தில் பேசிய ஜன சங்கத்தைச் சார்ந்த திரு. வாஜ்பேயி, சுதந்திராக் கட்சியின் தலைவர் பேராசிரியர் என்.ஜி ரங்கா, ப்ரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரும்புகழ் பெற்ற (என்னுள்ளத்தில் நீங்காத இடம் பெற்ற) ஹேம்பரூவா ஆகியோர் நேருவைச் சாடினர். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சீன அரசாங்கம் இந்தியாவின் எல்லையை கொஞ்சம் கொஞ்சமாக ஆக்ரமித்து வருவதைக் கண்டும் காணாததுபோல் திரு. நேரு செயல் படுகிறார் என்று குற்றஞ்சாட்டினார்.

## 70) Nehru Accused of Functioning as an umpire forgetting his role as a P. M.

அப்போது நடந்த விவாதத்தில் கிரிக்கெட்டில் பற்று



கொண்ட உறுப்பினர் ஒருவர் திரு. நேரு அணித் தலைவர் போல விக்கெட்டை எடுப்பதிலும், ஓட்டைக் குவிப்பதிலும் கவனம் செலுத்தாது, ஆட்டத்தின் நடுவர் போல செயல் படுகிறார் என்று குற்றம் சாட்டினார். மக்களவையில் 17-8-1961, 28-11-1961, 14-8-1962 ஆகிய நாட்களில் திரு. நேரு அவர்கள் பதிலளித்து உரை ஆற்றியபோது அவர் தன் நிலையில் இருந்து வழுவி, எதிர்க்கட்சித் தலைவர்களை, குழந்தைத்தனமாகப் பேசுகிறார்கள் என்று சாடினார். ( **Nehru termed his critics as childish and infantile**) காங்கிரஸ் கட்சிக்குள்ளும் கிருஷ்ணமேனனுக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்றது. ஒரு கட்டத்தில் திரு. நேரு சீனா ஆக்ரமித்திருக்கும் **Aksaichin** பகுதி ஓர் புல்கூடத்துளிர்விட இயலாத வறட்டுப் பகுதி என்று வர்ணித்தார். இதற்கு மறுப்பு தெரிவித்த எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து கொண்ட காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தலையிலிருந்த குல்லாயைக் கழற்றி “தன்னுடைய வழுக்கைத் தலையில் ஒரு ரோமம்கூட காணப்படவில்லை, அதனால் என் தலை பயனற்றதா?” என்று வினவினார். 5.12.1961 அன்று நடந்த அந்த விவாதம் சொட்டைத் தலை படைத்த நேருவின் மீது தமக்குள்ள வெறுப்பை இவ்வாறு அந்த காங்கிரஸ் உறுப்பினர் கூறி மகிழ்ச்சியடைந்தார் என்று ஊடகங்களில் விமர்சிக்கப் பட்டது.

## 71) A.L.முதலியாரின் வருகை

பூண்டிபுஷ்பம் கல்லூரியில் Annual Day 1961ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது. அன்றையதினம் நடைபெற்ற கொண்டாட்டங்களுக்குச் சென்னைப் பல்கலைக்கழக துணை வந்தர் திரு. லக்ஷ்மணசாமி முதலியார் வருகை தந்திருந்தார். ஆற்காடு சகோதரர்கள்

என்று அழைக்கப்பட்டு வந்த திரு.ராமசாமி முதலியார் மற்றும் திரு. லக்ஷ்மணசாமி முதலியார் ஆகிய இருவரும் இரட்டையர். இவர்களைப் பற்றி முன்னமே குறிப்பிட்டு உள்ளேன். மிகச் சிறந்த கல்வியாளரும், மகப்பேறு மருத்து வருமான திரு. லக்ஷ்மணசாமி முதலியார் சென்னை கிறிஸ்துவக்கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பல ஆண்டுகள் சட்ட சபையின் ஒரு அங்கமாக விளங்கிய Legislative Councilஇல் எதிர்க்கட்சித் தலைவராக செயல் பட்டு வந்தார்.

கல்லூரிவிழாவில் கலந்து கொள்ள வந்த திரு. லக்ஷ்மணசாமி முதலியாரிடம் அனைத்துத்துறை ஆசிரியர் களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். வெள்ளை டர்பன், நெற்றியிலே ஒற்றைக்கோடு ஸ்ரீசூர்ணம் தரித்து வந்த அந்த மாபெரும் மனிதருடன் என்னுடைய 21ஆவது வயதில் கை குலுக்குவதில் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தேன். பருத்த அவருடைய உள்ளங்கை பஞ்சுபோல இருந்தது.

## 72) U.G.C. Scale of Pay not implemeted by the Management

அன்றையதினம் வரவேற்புரையில் கல்லூரி நிர்வாகம் தாங்கள் இந்தக் கல்லூரியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு U.G..C. நிர்ணயித்த ஊதியத்தை அளிப்பதாகக் கூறி யிருந்தனர். ஆனால் நிர்வாகம் பல மாதங்களாகியும்இந்த மாற்றியமைக்கப்பட்ட சம்பள விகிதத்தை அமுல் படுத்த வில்லை. U.G.C. யிலிருந்து அதற்குரிய தொகை நிர்வாகத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் நிர்வாகம் தனது பங்கை அத்துடன் சேர்த்து புதிய ஊதிய விகிதங்களை அமுல்படுத்த வேண்டும். இதுகுறித்து நான் இந்தியன்



எக்ஸ்பிரஸ் நாளிதழிக்கு “One affected” என்று கையெழுத் திட்டு கடிதம் எழுதி னேன். அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியருக்கு என்னுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால் அவர்களும் என் பெயரை வெளிப்படுத்தாமல் அந்தக் கடிதத்தை வெளியிட்டனர். இதற்கு எனக்கு உதவி செய்தவர்கள் ட்ராப்ட் எழுதித் தந்த திரு. சுப்ரமண்யம் அதை டைப் செய்து உதவிய **ஜெராடு** ரேடியோ விற்பனைக்கூடத்தின் உரிமையாளர் திரு. ஜயராமனும் ஆவார்.

முதன்முதலில் என்னுடைய கடிதம் நாளிதழில் வெளி வந்தது. ஆனால் நான்தான் இந்தக் கடிதத்தை எழுதினேன் என்று திரு. சுப்ரமண்யத்தைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. இந்தக்கடிதம் வெளியான சில நாட்களில் அனை வருக்கும் புதிய சம்பள விகிதத்தில் ஊதியம் வழங்கப் பட்டது. எனக்கு சம்பள நிலுவையாக 1961ஆம் ஆண்டு மே மாதம் 3000 ரூபாய் கிடைத்தது. அந்தப் பணத்தில் என்னுடைய நீண்ட நாள் ஆசையான ரேடியோ வாங்கும் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டேன். இந்தக்கடிதத்தை Type செய்து உதவிய திரு. ஜயராமனின் ஜெராடு ரேடியோவையே வாங்கினேன். அப்போது எல்லாம் ஓரளவு வசதி உள்ளவர்களே ரேடியோ வாங்கமுடியும். இதற்கு லைசென்ஸ் கட்டணம் ஆண்டுக்கு 15ரூபாய். சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்த லைசென்ஸ் கட்டணம் ரத்து செய்யப்பட்டது.

## 73) அரவங்காடு Cordite Factoryஇல் வேலை கிடைத்தது

1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனைத்துத் தேர்வு

களும் நடத்தப்பட்டு ஏப்ரல் முதல் விடுமுறை அளிக்கப் பட்டது. கல்லூரியில் தேர்வுகள் நடத்துவதற்கு பொறுப்பா ளராக Logic Mani என்பவர் செயல்பட்டு வந்தார். தஞ்சையில் புகழ்பெற்று விளங்கிய Lawley அச்சகத்தில்தான் விதவித மான வண்ணத்தாள்களில் தேர்வுக்கு உரிய வினாத்தாள்கள் அச்சிடப்படும். வேதியியல் துறையில் இளங்கலை படிப்பிற்கான பாடப்பகுதிகளுக்கு வினாத்தாள் தயாரிக்கும் பொறுப்பு கல்லூரி முதல்வரால் எனக்கு அளிக்கப்பட்டது.

ஏப்ரல் மாத முதல் வாரத்தில் சற்றும் எதிர் பாராத வகையில் அரவங்காடு Cordite Factoryஇலிருந்து நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். திரு. சுப்ரமண்யம் என்னை சார் என்றே அழைப்பார். இந்தக் கடிதம் வந்தவுடன் “சார் நீங்கள் இந்த வேலையில் சேர்ந்து விடுங்கள். கல்லூரி செயல்முறை விளக்க பணியாளராக உங்கள் வாழ்க்கையை ஓட்டி விட முடியாது” என்று அறிவுரை கூறினான். எப்படியும் ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களுக்கும் கல்லூரியில் ஊதியம் கிடைக்கும், கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து குளுகுளு ஊட்டிக்குப் போய் நிம்மதியாய் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் ஊட்டிக்குப் புறப்பட்டேன். என்னுடைய சக மாணாக்கர்களான திரு. ரங்கராஜன், திரு. ஸ்ரீனிவாசன் ஆகியோரும் நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்று, என்னுடன் ஊட்டிக்கு புறப்பட்டு வந்தனர்.

நாங்கள் மூவரும் பொது மேலாளர் திரு. கௌரி சங்கரைச் சந்தித்தோம். அவர் மூவரையும் Laboratoryஇல் Chemist ஆகப் பணி புரியும்படி கட்டளையிட்டார். Laboratory formen கிஷாராவ் என்பவர் அவருக்குக் கீழ் பணிபுரிந்த Chargeman பெயர் முகர்ஜி. யார் கெமிஸ்டாக அங்கு வந்து சேர்ந்தாலும் ஒருமாத காலம் Upper Lab என்ற பகுதியில்



வேலை செய்யவேண்டும். அதன்பிறகே அவர்கள் Main Lab எனப்படும் பகுதியில் பணி புரியலாம். எங்களுடன் படித்த ராமநாதன் என்பான் ஒரு ஆண்டுக்கு முன்பே வேலையில் சேர்ந்து அவனும் Laboratoryஇல் பணி புரிந்து வந்தான்.

அரவங்காட்டில் கோடை காலத்தில் இரவு நேர வெப்பம் 10 அல்லது 12 டிகிரிதான் இருக்கும். பகல் நேர வெப்பம் 18 அல்லது 20 டிகிரி ஆக இருக்கும். நான்கைந்து தொழிலாளிகள் (பெரும் பாலும் Bachelors ஒன்றுகூடி ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்வர். இந்த வீடுகள் அனைத்தும் பள்ளத்தாக்குகளில் அமைந்திருக்கும்.

பள்ளத்தாக்குகளில் அடுக்கடுக்காக அமைந்துள்ள இந்த குடியிருப்புகளுக்குச் செல்வதற்கு நல்ல அகலம் கொண்ட படிக் கட்டுகள் அமைந்திருக்கும். படிக்கட்டுகளின் இரு மருங்கிலும் காஃபி செடிகள் காணப்படும். பருவ காலத்திற்கு ஏற்ப அவை பூப்பூத்து, காயாகி, கனியாகி, பறிப்பதற்கு உரிய நிலையை அடைந்து நிற்கும். குறைந்தது 300 அல்லது 400 படிகளில் இறங்கி குடியிருப் புக்குச் செல்ல வேண்டும். அதேபோல் 300 அல்லது 400 படிகள் ஏறி தொழிற்சாலைக்கு அல்லது உணவருந்தச் செல்லவேண்டும். பெரும்பாலான தொழிலாளர்கள் ஷிப்ட் முறையில் பணி செய் பவர்கள். ஒரு வீட்டில் வசிப்பவர்கள் 5 பேர் என்றால் ஒவ்வொருவனும் ஒரு ஷிப்டில் பணி புரிவான். கீழே படுத்து உறங்க முடியாது. அரையடி உயரத்திற்கு கால்கள் அமைந்த மரப்பலகைகளால் ஆன படுக்கை களையே உபயோகத்தில் கொள்ளவேண்டும். கட்டில் வாங்குவதற்கு ஏற்ற நிதிவசதி இல்லை.

Cordite Factoryஇல் அனைத்து அலவன்சு களையும்

சேர்த்து கிடைத்த சம்பளம் 160ரூபாய். இரவு ஷிப்ட் பார்த்து விட்டு (10 p.m. 6 a.m.) தொழிற்சாலைக்கு எதிரில் அமைந்திருந்த காஃபி ஹவுஸ் என்னும் உணவு விடுதியில் கிடைக்கும் இட்லியை விழுங்கிவிட்டு, (இந்த இட்லியில் எந்த ருசியும் இருக்காது. சுடச்சுட பரிமாறப்படும் சாம்பாரின் துணை கொண்டே இந்த இட்லிகளைச் சாப்பிட இயலும்.) காஃபி என்ற பெயரில் ஒரு பானத்தை அருந்தி விட்டு வீட்டிற்கு வந்து படுத்தால் மதிய உணவு சாப்பிடுவதற்கு எழுப்ப ஆளில்லாமல் கண்விழித்துப் பார்த்தால் மாலை மணி மூன்றாயிருக்கும். மிகுந்த வேதனையுடன் 400 படிகளில் ஏறி உணவு விடுதிக்குச் சென்றால் அங்கே ஒன்றும் இருக்காது. சில பழங்களையும் பிஸ்கட்டுகளையும் தின்றுவிட்டு இரவு 8 மணி வரையில் உணவிற்குக் காத்திருக்க வேண்டும்.

‘மெஸ்’ எனப்படும் சில இடங்களில் என்னைப் போன்றவர்கள் உணவருந்த இயலாது. பெயருக்கேற்ப அங்கு ஒரே மெஸ் ஸாயிருக்கும். விஜிடேரியன், நான்-வெஜிடேரியன் என்று இரண்டு இடங்கள் இருக்கும். விஜிடேரியன் உணவைப் பரிமாறுபவன் கரண்டி இல்லையென்றால் பக்கத்து அறைக்குச் சென்று நான்-வெஜிடேரியன் உணவு பரிமாறுவதற்காக வைக்கப் பட்டிருந்த கரண்டியைப் போட்டு உணவைப் பரிமாறிவிடுவான். Long off என்று ஒன்று உண்டு. அதாவது சனிக்கிழமை முதல் ஷிப்ட் பார்ப்பவன் 2 மணிக்கு வெளியே வந்தால் திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு இரவு ஷிப்டிற்குத் தான் செல்லவேண்டும். Laboratoryஇல் பணிபுரியும் நானும் எனது நண்பர்களும் 5 கி.மீ. தொலைவில் உள்ள குன்னூருக்கு நடந்து சென்று உட்லண்ட்ஸ் உணவு விடுதியில் வயிறார உண்டு, அதன் பிறகு, திரைப்படங்களைக் கண்டு மகிழ்ந்து பேருந்தில்



அரவங்காட்டிற்குத் திரும்பி வந்துவிடுவோம். இதற்குக் காரணம் குன்னூரிலிருந்து அரவங்காடு செல்லும் சாலை மேட்டுப் பகுதியாய் இருக்கும். நடந்து செல்வது கடினமான செயலாகும்.

## 74) அரவங்காடு வேதியியல் ஆய்வுக்கூடம்

அரவங்காடு வேதியியல் ஆய்வுக்கூடம் Upper Lab என்றும் Lower Lab என்றும் இருவகைப்பட்டிருக்கும். புதிதாகப் பணியில் சேருபவர்கள் Upper Lab இல் பணியாற்றியபிறகே உயர்பரி சோதனைக்கூடமான Lower Labஇல் பணிபுரிய அனுமதிக்கப் படுவார்கள். Upper Lab இல் சிமெண்ட், எஃகு கம்பிகள் போன்ற பொருட்களைப் பரிசோதிக்க வேண்டும். Lower Labஇல் பெரிய உலைகளில் (Plants) தயாரிக்கப்படும் அம்மோனியா, Sulphuric Acid, Nitro Glycerene Acid mixture போன்றவற்றை உடனுக்குடன் பரிசோதித்துத் தரவேண்டும்.

கல்லூரிகளில் வேதியியல் பாடம் நடத்தும்போது $H_2O$ Molecule-ஐ ஆசிரியர் அநாயாசமாக சுழித்து எடுத்து விடுவார். ஆனால் தொழிற்சாலைகளில் இவ்வாறு $H_2O$ Molecule-ஐ சுலபமாக எடுத்து விடமுடியாது. உலையில் ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது தட்பவெப்ப நிலை, மற்றைய இடுபொருள்களின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே இதுபோன்ற வேதியியல் மாற்றங்களைச் செய்து முடிக்க முடியும். கல்லூரிப்படிப்பு என்பது ஒரு வழிகாட்டுதல் முறையே ஆகும். Industrial Chemistry என்பது அனுபவ ரீதியாகக் கற்றுக் கொள்வதாகும். 24 மணிநேரமும் இயங்கி வரும் ஆலைகளில் இருந்து மாதிரிகள் அவ்வப்போது ஆய்வுக்கூடத்திற்கு வந்துசேரும். அவற்றை குறிப்பிட்ட கால

கெடுவிற்குள் பரிசோதித்துத் தொலை பேசி மூலம் Plant-ற்கு தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு பரிசோதிக்கும் போது தவறுகள் நேர்ந்தால் அது உற்பத்தியையே பாதிக்கும். இரவு பகல் எனப் பாராது அயராது ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் நாடெங்கும் இதற்காகப் பணிபுரிந்து வருகின்றனர்.

1957ஆம் ஆண்டு பல்கலைக்கழக தேர்விற்கு முன்பு நான் எதிர்கொண்ட Rheumatic Pain என்னை மீண்டும் தாக்கியது. கோடை காலமாக இருந்த போதிலும் குளிர் பிரதேசத்திற்கேற்ப தகுந்த உடைகள் என்னிடம் இல்லாததால் பெரிதும் அவதியுற்றேன். ஒரு கட்டத்தில் தாங்க முடியாத உடம்பு வலி ஏற்பட்டதால் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டேன். என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள் அரவங்காடு போன்ற குளிர்ப்பிரதேசங்களில் என்னால் வேலை செய்ய இயலாது என்று கூறி உடனடியாக சம சீதோஷ்ணம் கொண்ட பகுதிக்கு மாற்றல் செய்திடுமாறு நிர்வாஹத்திற்கு பரிந்துரை செய்தனர். வட இந்தியாவில் உள்ள Bondamunda அல்லது Kirke என்ற ஊருக்கு பணிமாற்றம் செய்திடுவதாக நிர்வாஹத்தினர் கூறினர். நான் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஆசிரியர் தொழிலுக்குச் சென்றுவிடுகிறேன் என்றுகூறி மீண்டும் புஷ்பம் கல்லூரியில் வேலைக்குச் சேர்ந்தேன்.

## 75) ந.மு.வேங்கடசாமி நாட்டார் வாழ்வும், பணியும்

1961-62ஆம் ஆண்டுகளில் பூண்டி புஷ்பம் கல்லூரியில் வேதியியல் துறையில் பணிபுரிந்து வந்தபோது தமிழ்த்துறையின் சார்பில் நடைபெற்ற சொற்பொழிவுகளில் அவ்வப்போது கலந்து கொண்டு நான் உரை ஆற்றி வருவதுண்டு. விஞ்ஞானப் பாடம் போதிக்கும் ஆசிரியர்



களுக்கு இலக்கிய உணர்வு கிடையாது என்றே பொதுவாக அனைவரும் கருதி வந்தனர். இதற்கு விதிவிலக்காகத் திகழ்ந்தவன் நான். கல்லூரியில் சார்பில் நா.மு. கோவிந்தராய நாட்டார் என்பார் தலைமையில் அவருடைய தந்தையாரான நா.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களைப் பற்றி உரை யாற்றியது கல்லூரியில் பரபரப்பை ஏற்படுத்தியது. அன்றைய தினம் நான் பேசி முடித்தபிறகு பலர் என்னை பாராட்டினர்.

"திருவையாறுக்கு அண்மையில் உள்ள நடுக்காவிரி என்ற சிற்றூரில், கள்ளர் மரபைச்சார்ந்த முத்துச்சாமி நாட்டார், தைலம்மாள் தம்பதிகளுக்கு மகனாக 12-4-1884இல், திரு.ந.மு.வேங்கடசாமி நாட்டார் பிறந்தார். சிறுவனாக திண்ணைப்பள்ளியில் படித்த இவர், தனது சிறிய தந்தையாகிய சொக்கலிங்க நாட்டாரிடம் சிறிது இசைப் பயிற்சியும் பெற்றார். தனது தந்தையின் உதவியுடன் வில்லிபாரதம், கம்பராமாயணம், நளவெண்பா, திருவிளையாடல் புராணம் முதலியவற்றைக் கற்றார்.

ஆசிரியர் உதவியின்றித் தாமாகவே படித்து 1905ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கம் நடத்திய பிரவேச பண்டிதர் தேர்வில் முதல்வராகத் தேறிப் பரிசு பெற்றார். பின்னர் 1907இல் பாலபண்டிதர் தேர்விலும் முதல் பரிசு பெற்றார். இதற்காக இவருக்கு தங்கத்தோடா பரிசு அளிக்கப்பட்டது. இவர் பண்டிதர் என்று அழைக்கப்பட்டார். தனது 23ஆவது வயதில் இந்திராணியம்மாள் என்பவரை மணந்த இவர் திருச்சி ராப்பள்ளி பிஷப்ஹீபர் கல்லூரியில் விடுப்பில் சென்ற ஆசிரியருக்குப் பதிலாக தமிழாசிரியராக 1908ஆம் ஆண்டு பணியாற்றினார்.

பின்னர் கோவையில் தூயமிக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். 1910ஆம் ஆண்டு

திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கி இருபத்துநான்கு ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்தார். பின்னர் சிதம்பரத்தில் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் 1933ஆம் ஆண்டு தமிழ் விரிவு ரையாளராகப் பதவி ஏற்றார்.

கருந்திட்டைக்குடி எனப்படும் கரந்தையில் தமிழ்ப் பற்றுக் கொண்டிருந்த தமிழ் அறிஞர்களால் கரந்தைத்தமிழ் சங்கம் உருவாகி யிருந்தது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக வேங்கடசாமி நாட்டார் மிகவும் பாடுபட்டார். இச்சங்கத்தி லிருந்து வெளிவந்த செந்தமிழ்ப் பொழில் என்ற இதழில் பல கட்டுரைகளை எழுதினார். திருநெல்வேலியில் சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திய செந்தமிழ் செல்வி என்ற மாத இதழில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

நக்கீரர், கபிலர் என்ற நூலை எழுதி வெளியிட்ட வேங்கடசாமி நாட்டார், பின்னர் கள்ளர் சரித்திரம் என்ற ஆராய்ச்சி நூலை எழுதிப் புகழ் பெற்றார். கள்ளர் மரபினர் தம் குலவிளக்கு என்று போற்றி புகழ்ந்தனர். சோழர் வரலாறு, வேளிர் வரலாறு, கண்ணகி வரலாறு, கற்பு மாண்பு என்ற நூல்களை எழுதினார். இவர் மேலும் திருவிளையாடல் புராணம், சிலப்பதிகாரம், அகநானூறு, மணிமேகலைக்கு உரை இயற்றினார். இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த உரையாசிரியராக இவர் திகழ்ந்தார்.

1940இல் இவருடைய சொல்வன்மையைப் பாராட்டி சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டில் இவருக்கு நாவலர் என்ற பட்டம் தந்து சிறப்பித்தனர். தாய்மொழிப் பற்றும், இறைப் பற்றும், ஒழுக்க சீலமும் கொண்டு விளங்கிய இவர் 1944ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மரணமுற்றார்".



## 76) 1962ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்

1962 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நாடெங்கும் மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடைபெற்றது. பூண்டி புஷ்பம் கல்லூரியில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் தேர்தல் பணிக்கு Presiding Officers ஆக நியமிக்கப்பட்டனர். இதற்காக சாலிய மங்கலம் Block Devolopment Officeஇல் பயிற்சி அளிக்கப்பட்டது. தஞ்சைத் தொகுதியில் காங்கிரஸின் சார்பில் A.Y.S. பரிசுத்த நாடாரும், தி.மு.க. வின் சார்பில் திரு.மு.கருணாநிதியும் போட்டி யிட்டனர். பூண்டி புஷ்பம் கல்லூரி ஆசிரியர்கள் பாபநாசம் ரிசர்வ் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் தேர்தல் அதிகாரி களாக நியமிக்கப்பட்டனர். எனக்குப் பெண்கள் வாக்குச் செலுத்தும் பகுதியிலும், தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் கோவிந்தசாமிக்கு ஆண்கள் வாக்கு செலுத்தும் பகுதியிலும் நியமன உத்தரவு கிடைத்தது. பாபநாசத்திலிருந்து வலங்கை மான் செல்லும் பகுதியில் ஒரு குக்கிராமத்தில் அமைக்கப் பட்டிருந்த வாக்குச் சாவடிக்கு தேர்தலுக்கு முதல் நாளே பயணப்பட்டோம். சுமார் 4 மணியளவில் பல இன்னல்களைக் கடந்து அந்த ஊரைச் சென்றடைந்தோம்.

மாவட்டத் தேர்தல் அதிகாரியிடமிருந்து வாக்குச் சீட்டு களைப் பெற்றுக் கொண்டு வாக்குச் சாவடியிலேயே பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அன்றிரவைக் கழித்தேன். அடுத்தநாள் காலை 8 மணிக்கெல்லாம் வாக்குப் பதிவு ஆரம்பமாகியது. சரியாக ஓட்டுப்போடத் தெரியாதவர்கள் அல்லது முதியோர் தேர்தல் அதிகாரியின் துணை கொண்டு ஓட்டுப் போடலாம் என்ற விதிமுறை அமுலில் இருந்தது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. திட்டை R. சுப்ரமண்யம்

தேர்தல் களத்தில் இருந்தார். ‘‘ஓட்டுப் போட இயலாத இன்ன சின்னத்தில் முத்திரை குத்தவேண்டும் என்று தெரியாத வர்கள் தேர்தல் அதிகாரியின் உதவியை நாடலாம் என்பது தேர்தல் விதி முறைகளில் ஒன்றாகும்.

‘‘இரட்டைக் காளை மாட்டில் சீல் குத்துங்க’’ என்று சொன்னால் திட்டை R. சுப்ரமண்யத் தின் சின்னத்தின் மேல் சீல் குத்த வேண்டும். இவ்வாறில்லாமல் ‘‘நீங்க ஏதாவது ஒரு சின்னத்தில் குத்திக் கொள்ளுங்க’’ என்று சொல்வோரே மிகுதியாகக் காணப்பட்டனர். அவ்வாறு அவர்கள் கூறும் போது என் செஞ்சோற்றுக்கு கடன் கழிப்பதற்காக திட்டை R. சுப்ரமண்யத்திற்கு அந்த ஓட்டுகளைப் போட்டேன். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது திட்டை R. சுப்ரமண்யம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். தஞ்சைத் தொகுதியில் திரு.கருணாநிதி வெற்றி பெற்றார்.

## 77) காமராஜ் முதல் மந்திரியானார்

இந்தத் தேர்தலில் மாநில சட்டசபைக்கு காங்கிரஸ் சார்பில் 139 உறுப்பினர்களும், தி.மு.க. சார்பில் 50 உறுப்பினர்களும் தேர்ந்து எடுக்கப்பட்டனர். 1957ஆம் ஆண்டு 15 உறுப்பினர்களைக் கொண்டிருந்த தி.மு.க. தேர்தலில் 27 சதவிகித வாக்குகளைப் பெற்று 50 இடங்களை எட்டியது. காங்கிரஸ் கட்சி சார்பில் சாத்தூர் தொகுதியிலிருந்த போட்டியிட்ட திரு. காமராஜ் மாநில முதல் வராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

## 78) சிறுகதை எழுத்தாளர்களுடன் ஓர் நேர் சந்திப்பு

கல்லூரி நூல் நிலையக்காப்பாளர் திரு.கணேசனின்



உறவினர் மன்னார்குடியைச் சேர்ந்த திரு. சுவாமிநாத ஆத்ரேயா, அவருடைய நண்பர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மன்னார்குடி தேசிய உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த கரிச்சான்குஞ்சு என்ற எழுத்தாளர். அந்தக் கால கட்டத்தில் கலைமகள், தினமணிக் கதிர் போன்ற பத்திரி கைகளில் தரமான சிறுகதைகளும், குறுநாவல் களும் வெளி வந்து கொண்டிருந்தன. திரு.B.S.ராமையா, M.V. வெங்கட் ராம், கு.ப. ராஜகோபாலன் போன்ற எழுத்தாளர்கள் தமிழிலக்கியத்தின் தவப்புதல்வர்களாகக் கொள்ளப்பட்டனர்.

ஒரு சனிக்கிழமை மாலை திரு.கணேசன் என்னிடம் இன்றிரவு நான் மன்னார்குடி செல்ல இருக்கிறேன், என்னுடன் வந்தால் திரு. தி. ஜானகிராமன் மற்றும் M.V. வெங்கட்ராமை நேரில் சந்திக்கலாம் என்று கூறினார். அன்று அவருடன் மன்னார்குடி சென்று அடுத்தநாள் திரு. கரிச்சான் குஞ்சு வீட்டில் திரு. M.V. வெங்கட்ராம் மற்றும் திரு. ஜானகிராமன் ஆகியோரையும் நேரில் பார்த்து அளவளாவக் கூடிய பேற்றினைப் பெற்றேன். இந்த இருவரைப் பற்றிய சில குறிப்புகளை திரு. நா. எத்திராஜூ அவர்கள் தம்முடைய ‘**நெஞ்சையள்ளும் தஞ்சை**’ என்னும் நூலில் தந்து உள்ளார். அந்தக் குறிப்புகளை அப்படியே தந்து உள்ளேன்.

## 79) எம்.வி.வெங்கட்ராம்.

கும்பகோணத்தைச் சார்ந்த திரு.எம்.வி. வெங்கட்ராம் தனது பதினாறாவது வயதிலேயே இலக்கிய ஏடான மணிக் கொடியில் எழுத ஆரம்பித்தார். திரு. கு.பா. ராஜகோபாலன், திரு.ஜானகிராமன், திரு.மௌனி, ந.பிச்சமூர்த்தி, கரிச்சான் குஞ்சு, சுவாமிநாத ஆத்ரேயன் போன்ற எழுத்தாளர்கள் இவருடைய நண்பர்கள். மகாபாரதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர், கு.பா. ராஜ கோபாலனுடைய தூண்டு

தலில் ''நித்யகன்னி'' என்ற சிறந்த நாவலை 1919ஆம் ஆண்டு எழுதினார். இது ஒரு அற்புத சிருஷ்டி என எழுத்தாளர்களாலும், வாசகர்களாலும் வரவேற்கப்பட்டது. இலக்கிய உலகில் இந்நூல் இவருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்தது.

சிறு வயதிலேயே இவர் எழுதிய '**பூமத்யரேகை**' என்ற சிறு கதை இலக்கிய நயம் கொண்டது. இவருடைய '**நிறபேதம்**' என்ற கதை இலக்கிய உலகில் பெரும் பாராட்டைப் பெற்றது. அந்நாளில் சிறு கதையில் அபார கலைச்சாதனையைப் படைத்தவர் இவர். எழுத்தில் கலைஞன் தனக்கென தனிவழி கண்டவர் எம்.வி.வி. என்று அந்த நாளில் புகழ் பெற்ற மூத்த எழுத்தாளர் திரு.ந. பிச்சமூர்த்தி பாராட்டி னார். அந்நாளில் ரங்கூனிலிருந்து சுவாமிநாத சர்மாவினால் நடத்தப் பட்ட '**ஜோதி**' என்ற பத்திரிகையில் இவர் கதைகள் பல வெளிவந்தன. அறுபதாண்டுகளுக்கு முன்னர் சௌராஷ்டிரா இன மக்களுக்கு தமிழில் நன்றாகப் பேசவோ, எழுதவோ வராத காலத்தில், இந்த இனத்தைச் சார்ந்த எம்.வி. வெங்கட்ராம் இத்துணைச் சிறப்பாகத் தமிழில் சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதிப் பெரும்புகழ் பெற்றுவிட்டார். பட்டதாரியான இவர் சிலகாலம் ஆசிரியர் தொழில் புரிந்தார். பின்னர் வேலையை விட்டுவிட்டு, தன் இனமக்களுக்கு உரிய பட்டு ஜரிகை உற்பத்தி வியாபாரத்தில் இறங்கி, சிறந்து விளங்கினார்.

இவர் செல்வச் சிறப்போடு இருந்த நாட்களில் '**தேனி**' என்ற இலக்கியப் பத்திரிகையைத் தொடங்கி, அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். '**தேனி**' பத்திரிகையில் பல புதிய எழுத்தாளர்களை எழுதச் செய்தார். இவ்வாறு உருவாக்கப்பட்டவர்களில் எழுத்தாளர் மௌனியும் ஒருவர் என்று கூறலாம். இவருடைய பெரும்பாலான கதைகளை



எம்.வி. வி. வெளியிட்டு மகிழ்ந்தார். அன்றே மௌனியை இவர் இனம் கண்டு கொண்டுவிட்டார். வியாபாரத்தில் சரிவு ஏற்படவே தேனி பத்திரிகையும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆயினும் இவர் பல பத்திரிகைகளுக்கு நிறைய எழுதினார். சுதேசமித்திரன், கல்கி, கலைமகள், தினமணிகதிர் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த இவருடைய கதைகளை ஆவலுடன் எதிர்பார்த்து வாசகர்கள் படித்தனர். இவருடைய மழை, கோடாலி, கால்கள் போன்ற சிறுகதைகள் வாசகர்களைக் கவர்ந்து சிந்திக்க வைத்தன. இவர் இருட்டு, உயிரின் யாத்திரை, அரும்பு, வேள்வித்தீ, ஒருபெண் போராடுகிறாள், காதுகள், இருளும் ஒளியும் என்ற நாவல்களைப் படைத்தவர். காதுகள் என்ற இவருடைய நவீனம் இந்திய அரசின் சாகித்ய அகாடமியின் பரிசை 1994ஆம் ஆண்டு பெற்றது. இவர் நாவல்கள் அனைத்தும் நவீனத்துவம் வாய்ந்தவை. நாவல்களைத் தவிர மாணவ மணிகளுக்காக பல தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை, ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் வழிவெளிப்படுத்தி உள்ளார்.

சிலகாலம் 'சௌராஷ்டிராமணி', பத்திரிகை ஆசிரியருக்கு உறுதுணையாக நின்று, அதன் தீபாவளி மலர், பொங்கல் மலர்களில் நல்ல இலக்கிய நயமிக்க கதைகளும் நாடகங்களும் வெளிவர தனது உழைப்பை நல்கினார். ஐம்பதாண்டுகளுக்கு மேல் எழுத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு பணியாற்றிய இவரால், தமிழ் புதினம் பெருமைப் படுகிறது. கும்பகோணமும், தஞ்சைத் தரணியும் இத்தகைய சிறந்த எழுத்தாளரைப் பெற்றதற்கு பெருமைப்படுகிறது.

## 80) தி. ஜானகிராமன்

திரு. தி. ஜானகிராமன் அவர்கள் 1921ஆம் ஆண்டு

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தேவங்குடியில் பிறந்தவர். இளம் வயதில் சங்கீதத்தின்பால் ஆர்வம் கொண்டு முறையாக சங்கீத வித்வானிடம் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்றார். அரங்கேற்றத்தன்று ஆசையுடன் அரங்கம் நோக்கிச் சென்றபோது, எதிரே தனது குருவின் சவ ஊர்வலம் வருவதை அறிந்ததும், சங்கீத மேடைக்குப் போவதையே விட்டு விட்டார். தனது 15ஆவது வயதில் சிறுகதை எழுதத் தொடங்கிய இவர், கும்பகோணம் பள்ளியில் ஆசிரியராகச் சிறிது காலம் பணியாற்றிய காலத்தில் பல சிறுகதைகள் எழுதி தமிழத்தின் சிறுகதை எழுத்தாளர்களில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றார். இவர் எழுதிய சிலிர்ப்பு, முள்முடி, நாலு வேலி நிலம் போன்ற கதைகள் அனைவருடைய மனத்தையும் கொள்ளை கொண்டது.

சிறுகதையைத்தவிர நாவல்கள், பயணக்கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், நாடகங்கள், என்று பல துறைகளிலும் இவருடைய கைவண்ணத்தைக் காணமுடியும். தஞ்சைத் தரணியின் வழக்கில் புழங்கிய மொழியினை இவர் கதைகளில் நிறைய காணலாம். அம்மொழியினை இவர் நன்கு கலை ரசனையுடன் கையாண்டு உள்ளார். தமிழில் வெகு அற்புதமாக, நேர்த்தியாக, நெகிழ்ச்சியோடு, மனங் கவரும் வண்ணம் எழுதக்கூடிய எழுத்தாளர் இவர்.

1956இல் ‘சிவப்பு ரிக்ஷா’ என்ற இவருடைய சிறு கதைத் தொகுப்பு வெளி வந்தது. இவருடைய சிறுகதைகள் அநேகமாக எல்லா தலைசிறந்த பத்திரிகைகளிலும் வெளி வந்தன. திரு.பி.எஸ். ராமையாவினால் நடத்தப்பட்ட ‘மணிக் கொடி’ பத்திரிகையில் இவர் கதைகள் வெளிவந்து சிறுகதை இலக்கியத்தில் உறுதியான இடத்தை திரு.ஜானகிராமன் பெற்றுவிட்டார். ‘கொட்டுமேளம்’ என்ற மற்றொரு



கதைத்தொகுப்பு வெளிவந்ததும், தமிழகம் நன்கு அறிந்த தலை சிறந்த எழுத்தாளராக இடம் பெற்றுவிட்டார். ‘சக்தி வைத்தியம்’ என்ற பெயரில் இவருடைய சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்தது.

தஞ்சை மக்களின் அன்றாட வாழ்வை நுட்பமாக வைத்து கதை எழுதும் ஆற்றல் பெற்ற இவர் நாவல் எழுது வதில் வல்லவர் என்பதை 1955ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் வெளிவந்த மோகமுள் என்ற நாவல் நிரூபித்தது. மோகமுள் சிறந்த தமிழ்நாவல் என்று கருதப்பட்டது. இவர் செம்பருத்தி, அன்பே ஆர முதே, மலர்மஞ்சம், நளபாகம், மரப்பசு போன்ற நாவல்களை பல பத்திரிகைளில் தொடராகவே எழுதினார். பின்னர் 1966இல் அம்மா வந்தாள் என்ற நாவலை ஒரே மாதத்தில் எழுதி முடித்தார்.

நடிகர் சகஸ்ரநாமம், எழுத்தாளர் பி.எஸ்.ராமையாவின் தொடர்பால் **நாலுவேலி நிலம்**, **வடிவேலு வாத்தியார்** என்ற மேடை நாடகங்களை எழுதினார். இந்த நாடகங்கள் நடிகர் சகஸ்ரநாமம் அவர்களால் மேடை ஏற்றப்பட்டன. 1967இல் சங்கீத நாடக அகாடெமி இவருக்கு விருது வழங்கி கௌர வித்தது. 1979இல் இவருக்கு சாகித்ய அகாடெமி விருதும் வழங்கப்பட்டது.

ஆசிரியர் பணியைவிட்டுவிட்டு, அகில இந்திய வானொலியில் சென்னை கல்வி ஒலிபரப்பில் பணியாற்றி னார். பின்னர் புது டெல்லியிலும் பணியாற்றினார். ஜப்பான் சென்று வந்து அந் நாட்டைப் பற்றிய பயணக் கட்டுரையை எழுதிய இவர் 1978இல் ஓய்வு பெற்றார். கும்பகோணத்தில் இவரைச் சுற்றி எழுத்தாள நண்பர்கள் நிறைய இருந்தனர்.

இவர் அமரராகி விட்டாலும் இவருடைய படைப்புகள் சிரஞ்சீவி தன்மை பெற்றனவாக உள்ளன. தஞ்சைத் தரணிக்கு பெருமை சேர்த்த தலைச்சிறந்த தமிழ் எழுத்தாளர் இவர்.

## 81) கிங்காங், தாராசிங்

1960ஆம் ஆண்டு தொடங்கி நாடெங்கும் பிரபலமாகப் பேசப்பட்டு வந்தது கிங்காங் மற்றும் தாராசிங் ஆகியோருடையே நிகழ்ந்த மல்யுத்த போட்டிகளாகும். 1954ஆம் ஆண்டு நடந்த மல்யுத்த பந்தயத்தில் இந்திய மல்யுத்த வீரரான தாராசிங் ஐரோப்பியக் கண்டத்தின் புகழ்பெற்ற மல்யுத்த வீரரான கிங்காங்கை தோற்கடித்து, பட்டத்தை வென்றார். கனடாவில் 1959ஆம் ஆண்டு நடை பெற்ற காமென் வெல்த் நாடுகளுக்கு இடையே நிகழ்ந்த மல்யுத்தப் போட்டியிலும் தாராசிங்கே வெற்றி பெற்றார். 200 கிலோ எடைகொண்ட மல்யுத்த வீரர்களான கிங்காங்கை தலைக்கு மேலே தூக்கி தமது இரண்டு கைகளால் சுழற்றி பந்தய மேடைக்கு வெளியே எறிந்தார் தாராசிங் இந்தப் போட்டியில்.

பஞ்சாப் மாநிலம் அமிர்த சரஸ்ஸில் 19-11-1928ஆம் நாள் பிறந்தவர் தாராசிங். மல்யுத்த போட்டிகளில் முதன்முதலாக 1951ஆம் ஆண்டு நுழைந்தார். ஆறடி இரண்டு அங்குலம் உயரம் கொண்ட இவருடைய எடை 130 கிலோ. 1968ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சார்ந்த Lou Theze என்பாரைத் தோற்கடித்து உலக மல்யுத்த சாம்பியனாக அறிவிக்கப்பட்டார். இவருடைய முழுப் பெயர் Dara Singh Randhawa என்பதாகும். இவருடன் பலமுறை மோதிய கிங் காங்கின் பெயர் Emile Czaja (Pronounced shya)இவர் ஆஸ்த்ரேலியா நாட்டைச் சார்ந்த சிட்னியில் பிறந்தவர். இவர்



உயரம் 6 அடி,182 கிலோ எடை கொண்டவர். இவர் 1970ஆம் ஆண்டு ஒரு கார் விபத்தில் மரணமடைந்தார்.

தாராசிங் 1961ஆம் ஆண்டு முதல் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார். சுமார் 200 படங்களுக்கு மேல் இவர் நடித்து உள்ளார். இவர் 12 ஹிந்தி மற்றும் பஞ்சாபி மொழிப் படங்களை இயக்கியுள்ளார். ராஜ்யசபா உறுப்பினராகவும் இவர் பணிபுரிந்து உள்ளார். இவரைப் போன்ற ஒப்பற்ற மல்யுத்த வீரர் இந்தியாவில் இன்றுவரை தோன்றவில்லை. இவர்தம் சுயசரிதையை ஹிந்தி மற்றும் பஞ்சாபி மொழியில் எழுதியுள்ளார். 1962ஆம் ஆண்டு வெளிவந்த கிங்காங் படத்தின் மூலம் இவர் பெரும் புகழை எய்தார். இந்தப்படம் நாடெங்கும் பெரும் வெற்றியை ஈட்டித் தந்தது. ***(தஞ்சை யாகப்பாவில் திரையிடப் பட்ட இந்த படத்தைப் பார்ப்பதற்கு நான் 2 முறை சென்று நுழைவுச் சீட்டு கிடைக்காமல் திரும்பி வந்து விட்டேன்.)***

தாராசிங் வில்லன் வேஷத்தில் நடிப்பதை என்றும் விரும்ப வில்லை. இவர் நடித்த சில படங்கள் பின்வருமாறு Rustam E-Baghdad (1963), Faulad (1963), Hercules (1964), Tarzan Dilli Men (1965), Sikander-E-Azam, (1965) Rustom-E-Hind (1965), and Boxer (1965). 1986ஆம் ஆண்டு இராமானந்த் சாகர் தயாரித்து தொலைக்காட்சியில் பல மாதங்கள் ஒளி பரப்பப்பெற்ற இராமாயணம் தொடரில் **ஹனுமான்** வேஷத்தில் நடித்தார் தாராசிங்.

## 82) வாழ்க்கைச் சக்கரத்தின் சுழற்சி

1962ஆம் ஆண்டு என் தம்பி ஸ்ரீனிவாஸன் தஞ்சையில் புகழ்பெற்ற வீரராகவா உயர்நிலைப்பள்ளியிலும், மற்றொரு தம்பி யான ராமாநுஜம் மாநகராட்சிப் பள்ளியிலும் சேர்ந்து முறையே 6-ஆம் வகுப்பு மற்றும் 3-ஆம் வகுப்பில்

படித்து வந்தனர். என்னுடைய தங்கையான கமலாவிற்கு 1962ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆண் மகவு ஒன்று பிறந்தது. அதற்கு ஸ்ரீதர் என்று நான் பெயரிட்டேன். என் தந்தையார் குலமாணிக்கம் என்னும் கிராமத்தில் ஒரு பண்ணையில் வேலை பார்த்து வந்தார். ஒவ்வொரு வார இறுதியிலும் கிராமத்திலிருந்து காய்கறிகள் மற்றும் அரிசி ஆகியவற்றை எடுத்து வருவார். இவ்வாறாக வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது.

## 83) உலகமெங்கும் போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன

உலகெங்கும் அமைதியின்மை காணப்பட்டது. பலம் பொருந்திய அமெரிக்க மற்றும் ரஷ்யா ஆகிய நாடு களிடையே நிலவி வந்த Cold War எனப்படும் நிழல்யுத்தம் பல்வேறு முனைகளில் தொடர்ந்து கொண்டேயிருந்தது. சைனா மற்றும் Formosa இடையே ஆன நிலவுரிமைப் போராட்டம், இந்தியா சீனா எல்லைத் தகராறு, காஷ்மீரை மையமாகக் கொண்ட இந்தியா பாகிஸ்தான் இடையே எழுந்த மதரீதியான போராட்டங்கள், தனி நாகாலாந்து கோரி Phizoவின் போராட்டம், எகிப்து நாட்டிற்கும் இஸ்ரேல் நாட்டிற்கும் இடையே நிலவி வந்த மதம் மற்றும் நிலவுரிமைத் தொடர்பான போராட்டங்கள் கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனி நாடு களிடையே எழுந்த அரசுரிமைப் போராட்டம் கியூபா மீதான அமெரிக்காவின் ஆக்ரமிப்பு, வட கொரியா, தென் கொரியா இடையே ஆன அரசுரிமைப் போராட்டம், அமெரிக்காவில் வெள்ளையருக்கும் கறுப்பருக்குமிடையே நிகழ்ந்த கலகங்கள், அல்ஜீரியா நாட்டில் எழுந்த விடுதலைப் போராட்டம், ரஷ்யாவில் ஸ்டாலின் ஆதரவாளர்களுக்கும் அப்போதைய பிரதமர் Kuruschev ஆதரவாளருக்கிடையே நிகழ்ந்த போராட்டங்கள், ஈராக்கில் Kurd இனத்தவரிடையே நிகழ்ந்த கலகம், அஸ்ஸாமில் வங்காள மொழி பேசும் இனத்தவர்களும் அஸ்ஸாம் பேசுவோருக்கும் இடையே நிகழ்ந்த கலகங்கள், சஹாரா பாலைவனத்தின்மீது உரிமை கொண்டாடிய Algeria மற்றும் Morocco நாடுகளுக்கிடையே நிகழ்ந்த கலகம் ஆகியவை உலகத்தைச் சூழ்ந்திருந்தன.



## 84) 1961, டிசம்பர் மாதம் கோவா விடுதலை அடைந்தது

1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய ராணுவம் போர்த்துகீசிய காலனியாகிய கோவாமீது படையெடுத்தது. வடக்கில் செவன்த் வாடி வழியாகவும், தெற்கில் கார்வார் வழியாகவும், கிழக்கில் பெல்காம் வழியாகவும் இந்திய ராணுவம் உட்புகுந்தது. 18-12-1961ஆம் நாள் பனாஜிம் நகரை இந்திய ராணுவம் கைப் பற்றியது. அவ்வாறே Daman and Diu பகுதிகளில் நடைபெற்ற போரில் 15 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். 36 மணிநேரப் போருக்குப் பிறகு போர்த்து கீசியர்கள் சரணடைந்தனர்.

## 85) 1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கிருஷ்ணமேனன் போட்டியிட்டார்.

1962ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் வடக்கு பாம்பே தொகுதியிலிருந்து திரு.வி.கே. கிருஷ்ணமேனன் போட்டியிட்டார். அவரை எதிர்த்து போட்டி யிட்டவர் பழம்பெரும் சுதந்திரப் போராட்ட வீரரான திரு. J.B.கிருபளானி ஆவார். 1962ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது இந்தத் தொகுதியேயாகும். நேருவின் தேர்தல் பிரசாரத்தாலும்

கோவாவில் கிடைத்த வெற்றியாலும் திரு. கிருஷ்ணமேனன் ஒரு லட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## 86) இந்தியா சீனா போர் உச்சக்கட்டத்தை அடைந்தது

காங்கிரஸ் கட்சி 361 இடங்களிலும், கம்ப்யூனிஸ்ட் 21 இடங்களிலும், ஸ்வதந்த்ரா கட்சி 18 இடங்களிலும், தி.மு.க. 7 இடங்களிலும் வெற்றி பெற்றனர். நான்காவது முறையாக திரு. நேரு பிரதம மந்திரியானார். 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே நிகழ்ந்து வந்த எல்லைத் தகராறு தீவிர மாயிற்று. லடாக் பகுதியில் கல்வான் பள்ளத்தாக்கில் 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய ராணுவத்தினருக்கும், சீன ராணுவத்தி னருக்கும் இடையே கடுமையான போர் நிகழ்ந்தது.

1962ஆம் ஆண்டின் பின்பகுதியில் நடந்த பல்முனைத் தாக்குதல்களில் இந்திய ராணுவம் தோல்வியைச் சந்தித்தது. மக்களவையில் எதிரொலித்த எதிர்ப்புகளின் காரணமாய் திரு. கிருஷ்ணமேனன் பாதுகாப்பு அமைச்சரவை யிலிருந்து நீக்கப்பட்டார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து ராணுவ தடவாள உதவி பெறப்பட்டது. 1962ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள் திரு. நேரு அவர்கள் சைனா தான் ஒப்புக் கொண்ட பஞ்சசீலக் கொள்கைகளுக்கு எதிராய் போரைத் தீவிரப்படுத்தியது என்றும், நம்பிக்கைத் துரோகத்தை இழைத்துவிட்டது என்றும் அறிவித்தார்.

15-11-1962ஆம் நாள் சைனா இந்திய எல்லையில் மீண்டும் தனது தாக்குதலை நடத்தியது. Nefa (North East Frontier Agency)வில் Walong பகுதியில் மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. வெகு விரைவாக முன்னேறிய சீனப் படையினர் Bomdila பகுதியைக் கைப்பற்றினர். இது அஸ்ஸாமிலிருந்து சில கி.மீட்டர் தூரத்தில் அமைந்திருந்தது. தேஜ்பூர் நகரை விட்டு மக்கள் அகன்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் வேண்டு மென்றே கொளுத்தப்பட்டன. வங்கிகளில் இருந்த ரூபாய் நோட்டுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. தேஜ்பூர் நகரில் செயல்பட்டு வந்த மனவளம் குன்றியோர் மருத்துவ மனையில் இருந்த மனநோயாளிகள் விடுவிக்கப்பட்டனர்.



ராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய மக்கள் ஆயிரக் கணக்கில் முன்வந்தனர். 1962ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் நாள் திடீரென்று சீனப்படைகள் பின்னோக்கிச் சென்றன. போர் அந்தக் கட்டத்தில் முடிவுக்கு வந்தது. சீனாவுடன் நடந்த இந்தப் போரில் 1383 இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர். 3968 வீரர்கள் போர்க் கைதிகளாக எடுத்துச் செல்லப் பட்டனர். 1696 நபர்களைப் பற்றிய தகவல் தெரியவில்லை. இந்திய வரலாற்றில் 1962ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தப் போர் நீங்காத ஓர் களங்கத்தை ஏற்படுத்தியது.

அமெரிக்க தூதர் திரு. John Kenneth,Galbraith, இந்தியா அமெரிக்காவிடம் இருந்து ராணுவத் தடவாளங்கள் பெறுவதற்கு மூலகாரணமாய் இருந்தார். அமெரிக்காவில் தேர்தல் நடந்து John Kennedy அதிபராகத் தேர்ந்து எடுக்கப் பட்டார். 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் திருமதி. Jacqueline Kennedy இந்தியாவிற்கு வருகை தந்தார். இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று பெருமளவில் ராணுவத் தடவாளங் களை அமெரிக்கா தந்துதவியது.

## 87) நாத்திகர்களின் தமிழ் அர்ச்சனைப் போராட்டம்

1960 தொடங்கி தமிழ்நாட்டில் ஈ.வெ.ராமசாமி

நாயக்கரின் தமிழ் அர்ச்சனை இயக்கம் ஒரு போராட்டமாக உருவெடுத்தது. ஆரியர்களாகிய ப்ராமணர்களையும் சமஸ்க்ருத மொழியையும் தமிழ் நாட்டை விட்டே துரத்தி யடிக்கவேண்டும் என்று தி.க.வினர் தம் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக்கப்படவேண்டும் என்ற வாதம் 1960 தொடங்கி முன் வைக்கப்பட்டது.

கர்ப்பக்ருஹத்துக்குள் அனைத்து சாதியினரும் நுழையலாம் என்று கோஷமிட்டனர். குன்றக்குடி அடிகளார் போன்றோர் தமிழ் நாட்டில் தமிழில்தான் பூசை செய்ய வேண்டும் என்ற வாதத்திற்கு வலிமை சேர்த்தனர். தமிழ் அர்ச்சனை என்ற போர்வையில் நாத்திக வாதம் அவ்வப்போது மதக் கலவரத்தை ஏற்படுத்தியது. ***(கடவுள் நம்பிக்கையற்றோர் மத நம்பிக்கைகளில் தலையிட்டு குழப்பம் செய்து வருவதை தமிழ்நாட்டில்தான் காணலாம். ஒவ்வொரு மதத்திற்கும் நீண்டகாலப் பாரம்பரியம் என்று ஒன்று உண்டு. ஆனால் தமிழ்நாட்டின் தலைவிதி தேசியக் கட்சியான காங்கிரஸ் மேற் கொண்ட தன்னுடைய பல்வேறு நடவடிக்கைகளால் செல்வாக்கு இழந்து 1967ஆம் வருடம் ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகத்திடம் அன்று தொடங்கி இன்றுவரை திராவிடக் கட்சிகள் போடும் தொகுதிப் பிச்சையில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது காங்கிரஸ். ஆனால் அவ்வப்போது சில காங்கிரஸ்காரர்கள் கி.பி. 2011இல் காமராஜர் ஆட்சியை மீண்டும் கொண்டு வருவோம் என்று முழக்கமிட்டுக் கொண்டிருப்பார்கள். காங்கிரஸைப் பொறுத்த வரை தமிழ்நாட்டில் காமராஜ் ஆட்சி என்பது ஒரு கானல் நீர்.)***

## 88) இந்தியா கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்றது

1962ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வருகை தந்த



இங்கிலாந்து கிரிக்கெட் அணியை இந்திய கிரிக்கெட் அணி தோற்கடித்து 2.0 என்ற கணக்கில் வெற்றி வாகை சூடியது. Ted Dexter தலைமையில் இங்கு வந்த கிரிக்கெட் அணி முதல் 3 ஆட்டங்களை டிரா செய்தது. இந்திய அணிக்கு வலிமை சேர்க்கும் பொருட்டு இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த Mansur Alikhan Pataudi அணியில் சேர்க்கப் பட்டார். இந்திய அணிக்கு Naricontractor அணித்தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்திய அணியில் இடம் பெற்றிருந்த ஆல் ரவுண்டர்களான Salim Durrani and Chandu borde ஆகிய இருவரும் தம்முடைய திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்திய அணியில் இடம் பெற்றிருந்த Salim Durrani, Gentlemen of the Team என்று அனைவராலும் கொண்டாடப்பட்டார்.

நெருக்கடியான நேரங்களில் Salim Durrani-ன் ஆட்டம் இந்தியாவின் வெற்றிக்கு உதவியது. 1962ஆம் ஆண்டின் பின்பகுதியில் Naricontractor தலைமையில் இந்தியஅணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான Griffith பார்பிடோஸில் நடந்த பந்தயத்தின்போது வீசிய பந்தினால் தலையில் அடிபட்டு Naricontractor உயிர் இழக்கும் கட்டத்தை அடைந்தார். உடனடியாக விமானம் மூலம் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டார். கிரிக்கெட் வீரரான Naricontractor -இன் கிரிக்கெட் வாழ்வு இந்த பயணத்தோடு முடிந்தது. உயிர் பிழைத்த போதிலும் கிரிக்கெட் ஆடுவதற்கான தகுதியை Nari contractor பெற இயலவில்லை. உதவி அணித்தலை வரான Pataudi அணித் தலைவராகச் செயல்பட்டார். இவருடைய ஒரு கண்ணில் பார்வை கிடையாது. மேற்கிந்தியத் தீவில் இந்தியஅணி எதிர்

கொண்ட 5 போட்டிகளிலும் இந்தியா தோல்வியைத் தழுவியது.

## 89) Final Year Students received special attention from me

1961, 62 கல்வியாண்டில் புஷ்பம் கல்லூரிலிருந்து முதல் Batch B.Sc. Chemistry மாணவர்கள் தேர்வை எதிர்நோக்கி இருந்தனர். கல்லூரி முதல்வர் திரு. O.R.சூர்ய நாராயணன் மாணவர்கள் நல்ல மதிப் பெண்கள் பெறுவ தற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதனை செயல் படுத்திடும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் திருந்தார். இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு 1961ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 62ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தனி வகுப்புகள் பல என்னால் நடத்தப்பெற்றன. Practicals வகுப்புகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. நான் பாடம் நடத்தும் விதத்தை தோப்புகளில் படிக்கச் செல்லும் மாணவர்கள் மூலம் அறிந்த கல்லூரி தாளாளர் திரு. வீரையா வாண்டையார் முதல்வரிடம் இது குறித்துப் பேசினார் என்று முதல்வரே என்னைக் கூப்பிட்டு பாராட்டினார்.

## 90) ராஜா முத்தையா செட்டியாரின் வருகை

1962ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழாவிற்கு செயின்ட் ஜோசப் கல்லூரி முதல்வர் Father Erhart -ஐ தலைமை ஏற்கச் செய்யவேண்டும் என்று எண்ணம் கொண்ட கல்லூரி முதல்வர் என்னையும் கணிதத் துறை தலைவரான திரு. L.K.Chetty என்பாரையும் அனுப்பி வைத்தார். தான் திருச்சியை விட்டு வெளியிடங்களில் நடைபெறும் எந்த நிகழ்ச்சிக்கும் செல்வதில்லை என்று எங்களது அழைப்பை ஏற்க மறுத்தார் திரு. Erhart. முடிவில் அண்ணாமலைப்



பல்கலைக்கழக Prochancellor -ம் பிரபல தொழிலதிபரும் ராஜா முத்தையா செட்டியார் கல்லூரி ஆண்டு விழாவில் பங்கேற்பதுக்கு ஒப்புதல் அளித்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரான ராஜா அண்ணாமலைச் செட்டியாரின் புதல்வர் இவர்.

போட்மெயில் எனப்படும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் தஞ்சைக்கு காலை நாலரை மணிகெல்லாம் வந்து சேர்ந்து விடும். அதில் வந்த ராஜா முத்தையா செட்டியாருக்கு கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் ரயில்நிலையத்திற்கு வருகை தந்து தக்க வரவேற்பு அளித்திட வேண்டும் என்று நிர்வாகம் அறிவித்திருந்தது. போட் மெயில் வந்து நின்று, 5 நிமிடம் ஆகியும் முத்தையா செட்டியார் வெளியில் வரவில்லை. ரயில் தஞ்சையில் 5 நிமிடம்தான் நிற்கும். Guard வண்டி புறப்படுவதற்கான ஒலியை எழுப்பிய பிறகே திரு. முத்தையா செட்டியார் ரயிலை விட்டு கீழே இறங்கினார். இறங்கியவுடன் அங்கே காத்திருந்த யாருக்கும் அவர் முகமன் கூறவில்லை. வெகுவேகமாக பிளாட்பாரத்தைக் கடந்து தனது கெஸ்ட் ஹவுசிற்கு சென்று விட்டார்.

***(V.I.P.களை வரவேற்பதற்கு பள்ளிக் குழந்தைகள் பலர் மணிக்கணக்காக காத்துக்கிடக்க வேண்டிய பரிதாப நிலையை இன்றும் பார்த்து வருகிறோம். இந்தியன் ஆயில் நிறுவனத்தில் குறிப்பாக வெளியூர்களில் பணிபுரிந்து வந்தபோது காலை 5 மணிக்கு வரும் ரயிலில் அந்த ஊருக்கு வந்து சேரும் V.I.P.-ஐ ஸ்டேஷனுக்குச் சென்று முகமன் கூறி அவர் தங்கும் ஹோட்டலில் கொண்டு சேர்க்கும் வரையில் மனது பதைபதைத்துக் கொண்டு இருக்கும். பெரும்பாலான V.I.P.கள் "துர்வாசமுனியின் நகல்கள்". இவர்களையெல்லாம் சமாளித்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி யாக வேண்டும். நம் உறவினர்களோ அல்லது பெண்டு பிள்ளை களோ வந்தால் இவர்கள்***

***விஷயத்தில் காட்டும் அக்கறையில் நூற்றில் ஒரு பங்குகூட நாம் காட்டுவதில்லை.)***

அன்றுமாலை கல்லூரி ஆண்டுவிழா திரு. ராஜா. ஸர் முத்தையா செட்டியார் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது.

## 91) வீணை பாலச்சந்தர்

தஞ்சையில் நாடகக்கலைக்குப் பல்வகைகளிலும் ஆதரவு அளிக்கப்பட்டு வந்தது. அப்போதெல்லாம் தஞ்சை ஸ்ரீ சுதர்சனகான சபா சார்பில் அடிக்கடி நாடகங்கள் நடை பெற்று வந்தன. ஸ்ரீசுதர்சன கான சபா உள்ள ராமநாதன் செட்டியார் ஹாலில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர், ராமசாமி குழுவினரால் நடிக்கப்பெற்ற அண்ணாவின் **வேலைக்காரி**, **ஓர் இரவு** நாடகங்களும், சிவாஜிகணேசன் பங்கேற்று நடித்த **பராசக்தி** போன்ற நாடகங்களும், மாதக்கணக்கில் நடை பெற்று வந்தன. அமைச்சூர் நாடக சபாக்களும், அப்போ தெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு நாடகங்களை மற்றும் இசைக் கச்சேரிகளை நடத்தி வந்தன.

1963ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்ப்புத்தாண்டை ஒட்டி வீணை எஸ். பாலச்சந்தரின் வீணைக்கச்சேரி இராம நாதன் செட்டியார் ஹாலில் நடைபெற்றது. **அந்தநாள்** என்னும் திரைப்படத்தின் வழியாக அனைத்து மக்களின் கவனத்தையும் ஈர்த்தவர் திரு. பாலச்சந்தர். அவரை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு இராம நாதன் செட்டியார் ஹாலில் நடைபெற்ற வீணைக்கச்சேரிக்குச் சென்றேன் நான்.

சுமார் அரை நூற்றாண்டு காலம் கர்நாடக இசையால்



பல நாட்டு மக்களை மகிழ்வித்த மேதையான திரு.பாலச்சந்தர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவாஞ்சியத்தைச் சார்ந்த சுந்தரராம அய்யருக்கும், பார்வதி என்னும் செல்லம் மாளுக்கும் இரண்டாவது மகனாக 18-1-1927ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை வக்கீல் தொழில் புரிந்தவர். பாலச்சந்தரை இவருடைய வீட்டார் ‘சந்துரு’ என்று செல்லமாக அழைப்பர். சிறு வயதிலேயே கஞ்சிரா, தபேலா, ஆர்மோனியம், வாய்ப்பாட்டு முதலியவற்றில் சிறந்து விளங்கினார். இவரது ஆறாவது வயதில் **சீதா கல்யாணம்** என்ற படத்தில் கஞ்சிரா வாசித்தார். ரஞ்சன் நடித்த ஜெமினியின் தயாரிப்பான **ரிஷ்ய சிருங்கரில்** பாலரிஷ்ய சிருங்கராக நடித்தார்.

பாலச்சந்தரின் தமையனார் ராஜம் அய்யர் சிறந்த பாடகர். இவருடன் சிலோன், கராச்சி, லாகூர், டெல்லி, சிம்லா போன்ற இடங்களுக்குச் சென்று இசைக்கச்சேரிகளில் கலந்து கொண்டார். இவருடைய பதினோறாவது வயதில் தனது தமையனார் கச்சேரியில் தபேலா வாசித்து சிறப்புப் பெற்றார். இவருடைய தபேலா வாசிப்பைக் கேட்டு மகிழ்ந்த திருமதி.கிருஷ்ணாபாய் என்ற அம்மையார் இவருக்கு சிதார் ஒன்றை பரிசாக அளித்தார். அந்த சிதாரில் கர்நாடக இசையைப் பழகினார். சிறிதுகால பயிற்சிக்குப் பின் மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபையில் தனது சிதார் கச்சேரியை அரங்கேற்றினார். இது அவருடைய வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்தது. இவரது பன்னிரெண்டாவது வயது முதல் பதினாறாவது வயதுவரை கர்நாடக இசை சிதார் கலைஞராக மிகவும் போற்றப்பட்டார். இவரது பதினைந் தாவது வயதில் வானொலியில் நிலைய சிதார் கலைஞராக பணியாற்றும் வாய்ப்பு பெற்றார்.

மூன்று ஆண்டுகள் வானொலியில் பணியாற்றிய பின்னர், வீணையைக் கர்நாடக இசை வாசிப்பிற்கு ஏற்றது என்று கருதிய பாலச் சந்தர் தனது கவனத்தை வீணை வாசிப்பதில் செலுத்தினார். இயற்கையாகவே தன்னிடம் குடி கொண்டிருந்த ஞானத்தைக் கொண்டு, குரு எவரையும் நாடாத, வீணை தனம்மாள், காரைக்குடி சாம்பசிவ ஐயர் பாணியைக் கருத்தில் கொண்டு பயின்றார். சினிமாத் துறையிலும் இவர் நாட்டம் கொண்டிருந்தார். புராணப் படங்களே பெருமளவில் திரையிடப்பட்டு வந்த காலத்தில் ''இது நிஜமா'' என்ற சமூகப்படத்திற்கு கதை, வசனம், பாடல்கள் இயற்றி, நடிகராகவும் இரட்டை வேடத்தில் நடித்து புகழ் பெற்றார். பின்னர் சிவாஜி கணேசன், பண்டரிபாய் நடித்த ''அந்த நாள்'' என்ற ஏ.வி.எம். நிறுவனத்தாரின் சிறந்த படத்தை இயக்கி வெற்றி கண்டார். பாடல்கள், நடனம் எதுவுமில்லாது தொடக்கம் முதல் கடைசி வரை விறுவிறுப்பு குறையாமல் எடுக்கப்பட்ட வெற்றிப்படம் இது. ''பொம்மை'', ''நடுஇரவில்'' போன்ற படங்களை இவர் தயாரித்தார்.

கர்நாடக இசைக்காகத் திரைப்படத்துறையைத் துறந்து, தனது கவனத்தை முழுவதும் வீணை இசையில் செலுத்தினார். பல இசைத் தட்டுகளும், ஒலி நாடாக்களும் இவருடைய இசையைத் தாங்கி வெளிவந்து இவருடைய பெருமையைப் பறை சாற்றியதுடன் மக்களை இன்றும் மகிழ்வித்து வருகின்றன. 1962இல் அமெரிக்கா சென்ற இவர் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்று கச்சேரி செய்து, இந்தியாவின் இசைப் பெருமையை உலகறியச் செய்தார். பாலச்சந்தர் சிறந்த இசையைப் போற்றும் பண்புடையவர். திருவாவடுதுறை இராஜரத்தினம், செம்பை வைத்தியநாத பாகவதர், டைகர் வரதாச்சாரி, மகாராஜபுரம்



விஸ்வநாத ஐயர், திருவாலங்காடு சுந்தரேச ஐயர் இவர்களைப் புகழ்ந்து ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதியுள்ளார். எழுத்தாற்றல் மிக்க இவர் தனது கருத்துக்களை அச்சமின்றி வெளியிடுபவர். இதனால் இவரை சிலர் மண்டைகனம் பிடித்தவர் எனக் கூறுவர்.

***(சங்கீத நாடக அகாடமியினரால் தேசிய விருது 1977இல் இவருக்கு வழங்கப்பட்டது. இந்திய அரசு 1987இல் பத்மபூஷண் பட்டம் அளித்து கௌரவித்தது. சங்கீதகலாசிகாமணி போன்ற சுமார் நாற்பத்தாறு பட்டங்களைப் பெற்றவர் இவர். 1990இல் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பிலாய் என்ற நகருக்கு கச்சேரி செய்யச் சென்றபோது மாரடைப்பால் தனது 63ஆவது வயதில் காலமானார்.)***

## 92) 1954-ஆம் ஆண்டு வெளிவந்த அந்த நாள் திரைப்படம்.

தயாரிப்பு ஏ.வி.எம். நடிக-நடிகையர். சிவாஜி கணேசன், ஜாவர் சீதாராமன், பி.டி. சம்பந்தம், பண்டரிபாய், சூரியகலா, மற்றும் பலர். கதை-வீணை பாலச்சந்தர், ஜாவர் சீதாராமன். வசனம்- ஜாவர் சீதாராமன். டைரக்ஷன்-எஸ். பாலச்சந்தர். நீளம் 12431 அடிகள். படம் வெளி வந்த நாள் 13-4-1954.

**கதைச்சுருக்கம்-**அறிவாளியான ரேடியோ என்ஜினீயர், தன் திறமையையும் அறிவையும் இந்த நாடு பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது என்ற ஆவேசத்தில், ஜப்பான் நாட்டுக்குத் தன் நாட்டைக் காட்டிக் கொடுக்க முனைந்தான். தேசபக்தியே அனைத்து பக்தியைவிடச் சிறந்தது என்ற எண்ணம் கொண்ட அவன் மனைவி அவனை எதிர்க்கிறாள். கணவன் மனைவி கைகலப்பில் துப்பாக்கி வெடிக்க, கணவன் இறக்கிறான்.

## 93) படத்தின் சிறப்பியல்புகள்

இன்ஜீனியருடன் மோதும் சில கதாபாத்திரங்களும் இதில் சம்பந்தப்பட்டி ருக்கின்றன. யார் அவனைக் கொன்றது என்பது மர்மமாக ஆரம்பத்திலிருந்து கையாளப்பட்டு உள்ளது. அந்தக் கொலை சம்பந்தமாகப் புலன் விசாரணை நடைபெற்றபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு சம்ப வத்தைக் கூற, காட்சிகள் அமைக்கப்பட்டு, படம் பார்ப்பவர் களை ஆவல்மிக்க நிலையில், முடிவு என்னவாக இருக்கும் என்று சிந்திக்கத் தூண்டும் வகையில் கதை அமைப்பு உருவாக்கப் பட்டிருந்தது. ஜப்பானியப்படமான 'ராஷமோன்' கதை பாணி இதில் கையாளப்பட்டு புதுமை விருந்தாக இருந்தது. பாடல்கள், நடனக் காட்சிகள் இடம் பெறாதிருந்தது மற்றொரு புதுமை.

கதாநாயகன் துப்பாக்கியால் சுடப்படுகிறான். அதைப் பார்த்த ஒருவன் ஓடிச்சென்று புகார் செய்கிறான். சாதாரண மாக விசாரணையில் கொலை, சற்றுமுன் நடந்தது என்றோ, பத்து நிமிடங் களுக்கு முன்னரோ என்றோ, குறிப்பிட்ட மணியையோ கூறுவது வழக்கம். ஆனால் ஓடிவந்த நபர், மூன்று நிமிடம், இத்தனை வினாடி என்று கூறுவதே புதுமை. காரணம் என்ன தெரியுமா? அவர் ஓடும் போது காட்டப்பட்ட காட்சியில், பின்னணி இசையுடன், தொழில் நுட்பக் கலைஞர்கள் பெயர் இடம் பெறும். டைட்டில்கள் ஆரம்ப மாகின்றன. டைட்டிலும், பின்னணி இசையும் படத்தில் இடம் பெறும் அந்த மூன்று நிமிடத்தையும் சில வினாடிகளையுமே சரியாக கூற வைத்ததிலிருந்தே இயக்குனரின் திறன் வெளிப் படுகிறது.

கதாநாயகனாக சிவாஜிகணேசன், புதுமைமிகு



நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு முறையும், பெட்டியை மூடிக் கொண்டு புறப்பட முயற்சிப்பதும், துப்பாக்கியால் சுடப்படுவதும் காண்பிக்கப்படுகிறது. அந்தந்தக் கதை சொல்லப்படும் முறை- சம்பவத்துக் கேற்றாற்போல் அவர் அந்தக் காட்சிகளில் நடித் திருப்பது குறிப்பிடத்தக்கது. கொலை பற்றி விசாரிக்கும் துப்பறியும் நபராக, மேலை நாட்டு நடிகர்தான் நடிக்கிறாரோ என்ற முறையில் ஜாவர் சீதாராமன் தமக்கே உரித்தான குரல் வளத்துடன் சிறப்பாக நடித்திருந்தார். மனைவியாக நடித்த பண்டரிபாய், கணவனை எதிர்க்கும் காட்சியில் சிறப்பாக நடித்திருந்தார். சூரியகலா, தமது மயக்கும் நடிப்பையும், தன் பேரில் கொலைக்குற்றம் சாட்டப்படும் போது வெளிப் படுத்தும் திகில் கலந்த குழப்ப பாவங்களையும் நன்றாகவே வெளிப்படுத்தியிருந்தார். கலை நுணுக்கங்களுடன் விறு விறுப்பாகப் புதிய பாணியில் படத்தைச் சிறப்பாக இயக்கிய பாலச்சந்தர், தமிழ்த் திரைப்பட வரலாற்றிலே நிரந்தரமான இடத்தைப் பெற்று புகழ்பெற்றார். புதுமை மிளிரும் இந்தப் புதினம் வெற்றிப்படமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்தில் உச்சகட்ட காட்சியாக சிவாஜி கணேசனின் மனைவியாக நடிக்கும் பண்டரிபாயே எதிர் பாராத விதத்தில் தன் கணவனைக் கொல்லும் காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. இன்ஜீனியரின் கொலைபற்றி துப்புத்துலங்காத நிலையில் 'தூக்குத்தூக்கி' படத்தின் விளம்பரத்தில் காணப்பட்ட கீழ்க்கண்ட சொற்றொடர்களே திருப்புமுனையாக இந்தப்படத்தில் அமைந்து இருந்தது. 'கொண்டு வந்தால் தந்தை, கொண்டு வந்தாலும் வரா விட்டாலும் தாய், சீர் கொண்டு வந்தால் சகோதரி, கொலையும் செய்வாள் பத்தினி, உயிர் காப்பான் தோழன்' என்ற ஐந்து சொற்றொடர்களே அவை.

ராமநாதன் செட்டியார் ஹாலில் கச்சேரி முடிந்ததும் திரு. பாலச்சந்தர் விரைவாக வெளியே சென்றுவிட்டதால் என்னால் அவரை நேரில் சந்திக்க முடியவில்லை.

## 94) முடிகொண்டானுக்குச் சென்று வந்தது.

தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் பாலூரார் எனப்படும் வம்சத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தங்களுக்குள் திருமண உறவை வைத்துக் கொள்ப வர்கள். பாலூரார் வம்சத்தைச் சார்ந்தவர்களாக பாரத்வாஜ, கபில, கௌண்டின்ய, நிதிநிந்திய கோத்ரத்தவர்கள் அமைந்திருந்தனர். தஞ்சை மாவட்டத்தில் எந்த ஒரு ஊர் அல்லது கிராமத்திற்குச் சென்றாலும் பாலூரார் வம்சத்தைச் சார்ந்தவர்கள் ஓரிருவர் காணப்படுவர். திருமணம், உபநயனம் போன்ற பல மங்கல நிகழ்ச்சிகளுக்கு பத்திரிகை வந்து விட்டால் அந்த நிகழ்ச்சிக்குச் சென்று வரவேண்டும் என்பது அனைவராலும் கடைபிடிக்கப்பட்டு வந்த ஓர் ஒழுங்கு முறையாகும். அவ்வாறு முடிகொண்டான் கிராமம் ஸ்ரீகோதண்டராமர் ஸந்நிதியில் கைங்கர்யத்தில் ஈடுபட்டி ருந்த ஸ்ரீ.உ.வே.ராஜகோபால அய்யங்கார் இல்லத்தில் நடைபெற்ற ஒரு மங்கல நிகழ்ச்சிக்கு நானும் என் தந்தையார் மற்றும் தாயார் தம்பி தங்கைகளுடன் சென்று வந்தேன்.

கீழைத்தஞ்சைப் பகுதியில் உள்ள முடிகொண்டான் கிராமத்திற்கு தற்போது அமைந்துள்ளதுபோல் பேருந்து வசதிகள் அப்போது கிடையாது. திருவாரூருக்கு ரயிலில் சென்று அங்கிருந்து மயிலாடு துறை செல்லும் ரயிலில் பூந்தோட்டம் என்னும் ரயில் நிலையத்தில் இறங்கி, முடி கொண்டான் கிராமத்திற்கு நடந்து செல்ல வேண்டும். ரயிலில் நீண்ட பயணம் போகப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் எனது தம்பி தங்கைகள் திளைத்திருந்தனர்.



## 95) முடிகொண்டான் கிராமமும், கோதண்டராமர் திருக்கோயிலும்.

திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை செல்லும் மார்க்கத்தில் 15வது கிலோ மீட்டரில் அமைந்துள்ள தலம் முடிகொண்டான். இங்கு ஸ்ரீகோதண்டராமர்கோயில் சிறப்புப் பெற்றதொரு கோயில் ஆகும். இத்தலத்திற்கு மகுட வர்த்தனபுரி என்ற பெயரும் உண்டு. பாரத்வாஜர் மகரிஷி இங்கு ஆசிரமம் அமைத்து வாழ்ந்தார். இவர் ஸ்ரீ ராமபிரானை தனது ஆசிரமத்திற்கு விருந்து உண்ண அழைத்தார். ஸ்ரீராமர், ராவணனை வதம் புரிந்து திரும்பும்போது அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பதாகக் கூறினார். ராவணனைக் கொன்று திரும்பிய ராமர், பாரத்வாஜர் ஆசிரமம் வந்தார். தான் பூஜித்து வணங்கும் ஸ்ரீரங்கநாதரைத் தரிசித்துப் பின்னர்தான் உணவு உண்ண முடியும் என ராமர் கூறி விடவே, பாரத்வாஜ முனிவர் பள்ளி கொண்ட ஸ்ரீரங்கநாதரை வேண்டி நிற்கவே, ஸ்ரீரங்கநாதரும் உடன் தோன்றினார் என்பது புராண வரலாறு.

பாரத்வாஜர் கோதண்டராமரின் முடியைக் கண்டதால் முடியைக்கண்டான் என்று இத்தலம் பெயர் பெற்றது. நாளடைவில் பெயர் மருவி முடிகொண்டான் என்று ஆயிற்று என்று கூறுவர். இங்குள்ள கோதண்டராமர் கோயிலில் காணப்படும் ராமர், லட்சுமணன், சீதை, அனுமார் மூலவர், உத்ஸவ விக்ஹரகங்கள் சோழர் காலத்தைச் சார்ந்தது என்று சொல்லப்படுகிறது. இக் கோயிலில் புரட்டாசி சனிக்கிழமை மிகவும் விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் புனர்பூச நட்சத்திரத் தன்று திருமஞ்சனம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஸ்ரீராம நவமி உத்ஸவம் பத்து தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி விழாவும் சிறப்புடன் கொண்டாடப்பட்ட வருகிறது.

## 96) கூத்தனூர் சரஸ்வதி கோயில்

முடிகொண்டான் தலத்திற்கு அடுத்துள்ள பூந்தோட்டம் என்னும் ஊருக்கு அண்மையில் உள்ள கூத்தனூர் என்னுமிடத்தில் அழகே உருவான ஞான சரஸ்வதியின் அர்ச்சாவிக்ரஹம் உள்ள சரஸ்வதி கோயில் உள்ளது. இங்கு புலவர் ஒட்டக்கூத்தர் நித்திய வழிபாடுகள் செய்து வந்தார் என்று கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் சரஸ்வதிக்கு என்று உள்ள கோயில் இது.

எனது தம்பி தங்கைகளுக்கு சரஸ்வதிதேவியைச் சென்று தரிசித்தால் தேர்வில் நிறைய மதிப்பெண்கள் வாங்கலாம் என்ற ஆசை எழுந்தது. அங்கிருந்து கால்நடை யாகவே கூத்தனூர் கிராமத்தைச் சென்றடைந்தோம்.

முற்காலத்தில் இத்தலம் அம்பாள் புரியென்று அழைக்கப் பெற்று வந்துள்ளது. சோழநாட்டு அரியணையை அலங்கரித்து வந்த விக்ரமசோழன், இரண்டாம் குலோத் துங்கன், இரண்டாம் இராஜராஜன் ஆகியோரின் அரச வைகளில் புலவராக விளங்கியவர் ஒட்டக்கூத்தர். இரண்டாம் இராஜராஜன் ஆட்சியில் இவருக்கு இந்த ஊரைப் பரிசாக வழங்கிய காரணத்தால் இவ்வூர் கூத்தனூர் என்ற பெயரைப் பெற்றது. ஒட்டக்கூத்தர் அருகில் ஓடிக்கொண்டிருக்கும் ஹரி நதியெனும் அரசலாற்றில் தினந்தோறும் நீராடி ஸ்ரீ மகா கணபதியை வணங்கி ஸ்ரீசரஸ்வதியைக் குறித்துத்தவம் புரிந்தார். ஒருநாள் ஸ்ரீசரஸ்வதி அவர் முன் தோன்றி தனது வாயிலிருந்த தாம்பூலத்தை அருளி நல்லாசி வழங்கிட, அன்று முதல் கூத்தர் முன்னைவிட பேரறிவும் ஞானமும்



நல்லாசி வழங்கிட சக்தி பெற்றார். பின்னர் ஒட்டக்கூத்தர் வேண்டிக் கொண்டதற்கிணங்க ஸ்ரீமஹாசரஸ்வதியாக இங்கேயே திருக்கோயில் கொண்டு வழிபடுபவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதாக வாக்குதந்த பிரகாரம் அருள்பாலித்து வருகிறாள் போன்ற செய்திகளை கோயிலில் ஆராதனம் செய்யும் குருக்கள் எடுத்துக் கூறினார்.

இதற்குமேல் என் தந்தையார், குருபரம்பரை நூல்களில் ஸரஸ்வதி தேவி எவ்வாறு ராமானுஜரைக் கொண்டாடினாள் என்பதை எடுத்தரைத்தார். வைணவ ஆசார்யர்களைப் பற்றி எடுத்துரைக்கும் நூல்களுக்கு குருபரம்பராப்ரபாவம் என்ற பெயர் வழங்குகிறது. பின்பழகராம் பெருமாள் ஜீயர் என்பார் எழுதிய ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் இந்த நிகழ்ச்சி எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் தெரிவித்தார்.

“ஒருமுறை காஷ்மீரத்தில் பட்டிமண்டபத்தைக் கிட்டி, ஸரஸ்வதீ பண்டாரத்தேற எழுந்தருளின வளவிலே, ஸரஸ்வதி தானே வாசல் திறந்து கொண்டு வந்து எதிரே புறப்பட்டு நின்று உடையவரைப் பார்த்து **ய ஏஷோ(அ)ந்த ராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருஶ்யதே ஹிரண்ய ச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரண காத் ஸர்வ ஏவ ஸுவர்ண: I தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமே வமக்ஷிணீ II** (ஸூர்யனுக்கு நடுவில் தங்கம்போல் அழகிய உருவை யுடைய எந்தப் பரம புருஷன் காணப் படுகிறானோ, அவன் ஸுவர்ணம் போன்று அழகான மீசையையும், கேசங் களையும், நகம் முதலிய எல்லா அவயவங்களையும் உடையவன். அவனுக்கு ஸூர்யனார் மலரும் தாமரை போன்ற இரு கண்கள் உள.)என்கிற ச்ருதிக்குப் பொருள் சொல்லிக்காணீர் என்ன, இவரும்,

**கபிஸ்த்வாதித்ய க: கம் பிபதி கிரணைரித்யபி கபிர் பபஸ்தீத்யாம்நாதஸ் ஸ கபிரமு நா(அ)ஸ்தம் யதிஹ தத் l ப்ரதீம: கப்யாஸம் திவஸகரதே ஜோவிகஸிதம் ஸுபத்மம் ஸ்ரீமத்த் வாதகணி பகவச்ச க்ஷுருபமா||** என்று கம் எனப்படும் நீரைக் கிரணங்களால் பருகுவதால் சூரியன் கபி: எனப்படுகிறான் கபிர்பபஸ்திதேஜநம் என்னும் வேத வாக்யத்தில் அந்த ஸூர்யன் கபி: என்று ஓதப்படுகிறான். அந்த ஸூர்யனால் எது அலர்த்தப் பெறுகிறதோ அத்தாமரை கப்யாஸமாகிறது என்று நிச்சயிக்கிறோம்.

ஆக, ஸூர்யனுடைய கிரணங்களால் அலர்த்தப் பெற்ற அத்தாமரை அழகையிட்டு பகவானுடைய திருக் கண்களுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது என்று கப்யாஸத்திற்கு இராமாநுஜர் பொருள் அருளிச் செய்ய, ஸரஸ்வதியும் கேட்டு மகிழ்ந்து, இவரிட்டருளின ஸ்ரீபாஷ்யக்ரந்தத்தையும் சிரஸா வஹித்துத் தன் கையை நீட்டி, உடையவர் திருக்கையைப் பிடித்துக் கொண்டு போய் அவர் கூறியவற்றை சாஸ்திர சம்மதம் என்று அங்கீகரித்து இவருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்ற திருநாமம் சாத்தி, ஹயக்ரீவரையும் எழுந்தருளுவித்துக்கொடுத்து மிகவும் ச்லாகிக்க, ஸ்ரீபாஷ்யகாரரும், ''நம்மை இத்தனை ஆதரிக் கைக்கு அடி என்?'' என்று கேட்டருள, அவளும் முன்பு இங்கு வந்த சங்கரனை இச்ருதிக்கு அர்த்தங்கேட்ட வளவில், அவனும் குரங்குப்ருஷ்டம் போலேயிருக்குமென்று பொருத்த மில்லாத அர்த்தஞ் சொன்னான். நீர் என் கருத்தறிந்து பொருள் சொல்லுகையாலே நான் ஆதரித்தேன்'' என்றாள்.

கம்பர் சரஸ்வதியின் அருள் பெற்றவர். சரஸ்வதி அந்தாதி என்று வழங்கும் நூல் கம்பரால் இயற்றப்பட்டது என்பது மு. இராக வய்யங்கார் கருத்து. சோழ மன்னனின் சபையை அலங்கரித்த கம்பர் அம்மன்னனோடு மாறுபாடு கொண்டார். சேர நாட்டில் அடைக்கலம் கொண்டார். சேர மன்னன் அவைப்புலவர் கம்பரை இழிவுபடுத்தினான். அவர் செய்த சூழ்ச்சியை வெல்லுவதற்காக கம்பர் சரஸ்வதியின் பேரில் அந்தாதி பாடினார். அப்போது சரஸ்வதி தேவி இடது கால் சிலம்பை கம்பருக்கு பரிசாகத் தந்தாள். அதன் பின் கம்பர் மன்னன் வேண்டியபடி அரச சபையில் தேவியைத் துதித்தார். கலைமகள் அங்கு காட்சி தந்தாள். வலது காலில் மட்டும் சிலம்புடன் நடனமாடினாள். கம்பனுக்குத் தான் அளித்த ஒற்றைச் சிலம்பை சபையில் அணிந்து கொண்டு மறைந்தாள் என்பது செவிவழிச் செய்தி. கம்பர் வழிபட்ட சரஸ்வதி தேவியின் உருவம் கன்னியா குமரி மாவட்டம் பத்மநாபபுரம் கோட்டையில் இருக்கிறது.



கலைமகள் மீது பெரிதும் ஈடுபாடு உடையவர் பாரதி. அவர் இயற்றிய **வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்** என்ற பாடலை அனைவரும் கேட்டு மகிழ்வர். சரஸ்வதி அருளால் சகலகலாவல்லி மாலை பாடினார் குமரகுருபரர். இந்தி மொழியில் பேசும் ஆற்றலையும் பெற்றார். நூலகங்கள்-சரஸ்வதி பண்டாரம் என்று அழைக்கப்பட்டு வருகின்றன. சரஸ்வதி பண்டாரங்களில் ஏடு எடுத்துக் கொடுக்கவும், எழுதவும் அலுவலர்கள் இருந்ததாகச் சிதம்பரம் மற்றும் திருவரங்கம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## 97) யோகவிலாஸ்.

தஞ்சாவூரில் இருந்த 3 ஆண்டு காலத்தில் 4 வீடுகளுக்கு வெவ்வேறு ஆண்டுகளில் குடி பெயர்ந்தோம். கிழக்கு ராஜவீதியில் ஒரு சந்தில் இருந்த வீட்டில் நாங்கள் குடியிருந்த போது, பூண்டி புஷ்பம் கல்லூரியில் ஆண்டுத்

தேர்வின் போது காப்பியடித்தற்காக இரண்டாம் ஆண்டு B.A.மாணவன் ஒருவனைக் கையும் களவுமாகப் பிடித்தேன். அவ்வாறு பிடிபட்ட மாணவன் இடைநீக்கம் செய்யப் பட்டான். ஆனால் அந்த மாணவன் நாங்கள் குடியிருந்த வீட்டு சொந்தக்காரருடைய மகன் என்று எனக்குத் தெரியாது. இதன் விளைவாக அந்த வீட்டைக் காலி செய்து விட்டு தெற்கு அலங்கத்தில் யோக விலாஸ் என்னும் பெயர் கொண்ட வீட்டிற்குக் குடிபுகுந்தோம். மராட்டிய மன்னர்கள் காலத்தில் அவர்களுடைய காமக்கிழத்திகள் தங்குவதற்காகப் பல வீடுகள் தெற்கு அலங்கத்தில் உருவாக்கப் பட்டிருந்தன. அத்தகையதொரு வீடுகளில் ஒன்றுதான் இந்த யோக விலாஸ். பரந்த பரப்பளவைக் கொண்டது இந்த வீடு. இந்த வீட்டின் உரிமையாளர் தஞ்சை R.M.S.இல் பணி புரிந்து வந்தார்.

யோக விலாஸுக்கு எதிரில்தான் வீரராகவா உயர் நிலைப் பள்ளி இயங்கி வந்தது. தெற்கு அலங்கத்தின் இரு மருங்கிலும் குடியிருப்பு வீடுகளும், கடைகளும் காணப் படும். யோக விலாஸிற்கு எதிரில் வீரராகவா உயர்நிலைப் பள்ளிக்கு மேல் புறத்தில் ஒரு தேனீர்விடுதி அமைந்திருந்தது. நாள்தோறும் குறிப்பாக மாலை 3மணி முதல் 4 மணி வரை ராணுவ வீரர்களுக்காக விவித்பாரதி எனப்படும் அகில இந்திய வானொலியின் வணிக ஒலிபரப்பில் (Commercial Broadcast ) இந்திப் பாடல்கள் ஒலிபரப்பப்படும். 4 மணி முதல் 5 மணி வரை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகளில் ஒவ்வொரு மொழிக்கும் 15 நிமிடங்கள் பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்புவதற்கு அகில இந்திய வானொலியில் மிகக் குறைந்த நேரமே ஒதுக்கப்



பட்டிருந்தது. சிலோன் ரேடியோவில் தான் மயில்வாகனன் மற்றும் அப்துல்ஹமீது ஆகிய அறிவிப்பாளர்கள் குரலுடன் ஒவ்வொரு நாளும் இடையிடையே விளம்பரங்களோடு காலையில் ஒரு மணிநேரமும், மாலையில் 2 மணி நேரமும் திரைப்படப்பாடல்களைக் கேட்க முடியும்.

## 98) "மொகல் யே ஆஸம்"

தமிழ்நாட்டில் ஹிந்தி மொழிக்கான எதிர்ப்பு ஒரு பக்கத்தில் இருந்த போதிலும் சிறந்த ஹிந்திப் படங்கள் மக்களின் ஆதரவைப் பெற்று ஓடிக் கொண்டிருந்தன. அதில் குறிப்பிடத்தக்கது **மொகல் யே ஆஸம்** என்ற ஹிந்திப்படம். இதில் ப்ருத்விராஜ் கபூர், திலீப் குமார், மதுபாலா ஆகியோர் நடித்திருந்தனர். 5-8-1960ஆம் நாள் இந்தப் படம் திரையிடப் பட்டது. இந்தப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குனருமாக விளங்கியவர் திரு. K.ஆசிஃப். புகழ்பெற்ற இசையமைப் பாளரான நௌஷாத்தின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்போருக்கு இன்பம் பயப்பனவாக அமைந்திருந்தன. திருமதி.லதா மங்கேஷ்கரின் குரலில் ஒலித்த "Pyar Kiya To Darna Kya" என்ற பாடல் ஒலிக்காத இடமே இல்லை எனலாம். மிகுந்த பொருட்செலவில் ***(அந்தக்காலகட்டத்தில் ஒன்றரை கோடி ரூபாய் அளவில்)*** இந்தப் படம் தயாரிக்கப் பட்டது. இந்தப் படத்திற்காக படமாக்கப்பட்ட போர்க் காட்சியில் 2ஆயிரம் ஒட்டகங்கள், 4 ஆயிரம் குதிரைகள், 8 ஆயிரம் காலாட்படை வீரர்கள் பங்கு கொண்டனர். இந்திய ராணுவ வீரர்கள் அரசாங்கத்தின் அனுமதியின் பெயரில் இந்தப்படத்தில் காலாட்படை வீரராகத் தோன்றிப் போரிட்டனர்.

அக்பர் காலத்தில் அவருடைய மகனான சலீமிற்கும்

ஆடலழகி அனார்க்கலிக்கும் இடையே மலர்ந்த காதல் எவ்வாறு அங்கீகரிக்கப்படாமல் அனார்க்கலி உயிரோடு சமாதியில் வைக்கப்பட்டாள் என்பதே இந்தக்கதையின் கருவாகும். ஆனால் இந்தப் படத்தில் சலீமினுடைய பார்வையில் அனார்க்கலி இறந்ததாகக் கொள்ளப்பட்டாலும், உண்மையில் அவள் சமாதியிலிருந்து ரகசிய வழியாக வெளியேற்றப்பட்டு வேறொரு இடத்திற்குச் சென்று விட்டதாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. “Pyar Kiya To Darna Kya” என்ற பாடல் லாகூர் கோட்டையில் ஷீஷ்மஹாலில் படமாக்கப்பட்டது. “நான் சலீமைக் காதலித்தேன். இதில் அச்சம் கொள்வதற்கு என்ன உள்ளது”என்பது இந்தப் பாடலின் திரண்ட கருத்தாகும். படத்தில் இந்த நடனக்காட்சி மட்டும் வண்ணத்தில் படமாக்கப்பட்டது. மற்றைய காட்சிகள் கறுப்பு வெள்ளையில் படமாக்கப்பட்டன.

2004ஆம் ஆண்டு விஞ்ஞானம் கண்ட முன்னேற் றத்தின் விளைவாக இந்தப்படம் முழுவதும் வண்ண மயமாக்கப்பட்டு, மீண்டும் வெளிவந்தது. இந்தப்படம் அடைந்த வெற்றியை இன்றுவரை வேறு எந்த ஹிந்திப் படமும் எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 99) ‘அக்பர்’ திரைப்படம்.

1962 ஆம் ஆண்டு அக்பர் என்ற பெயரில் இந்தப் படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு, தமிழகத்தில் திரையிடப் பட்டது. தென்னிந்திய இசைக்குயில் என்று போற்றப்படும் திருமதி. சுசீலாவின் குரலில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பாடல் யோகவிலாஸிற்கு எதிரில் அமைந்திருந்த தேனீர் விடுதியில் கிராம போன் ப்ளேட்டின் உதவி கொண்டு அடிக்கடி ஒலி பரப்பப்படும். நான் விரும்பிக் கேட்டு மகிழும் பாடல்களில் இதுவும் ஒன்றாகும்.



கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே கதை கண்ணீராச்சே
நிலா வீசும் வானில் மழை சூழலாச்சே மழை சூழலாச்சே
கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே.

முன்பே எண்ணிப் பாராமல் நெஞ்சம் ஈந்திட்டேனே
எந்தன் ஆசையே இன்று என்னைக் கொல்லலாச்சே
உந்தன் காதலின் கனவெல்லாம் கண்ணீராச்சே.... ஆச்சே

கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே கதை கண்ணீராச்சே
நிலா வீசும் வானில் மழை சூழலாச்சே மழை சூழலாச்சே

அகம் வாட்டும் காதல் தீ யார்க்கும் சொல்லாதே
மறைத்தேன் நான் வாழ்கின்ற மார்க்கம் கெடாதே
ஜெகம் வாழ்கிறேன் வாழ்க்கையே கண்ணீராச்சே ..... ஆச்சே

கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே கதை கண்ணீராச்சே
நிலா வீசும் வானில் மழை சூழலாச்சே மழை சூழலாச்சே
கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே கதை கண்ணீராச்சே.

திருமதி. சுசீலா பாடிய பாடல்களில் மிகச் சிறந்ததாக விளங்குவது இந்தப்பாடல். திரு. நௌஷாத்தின் இசையமைப்பு கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

## 100) கேரளா சுற்றுப்பயணம்

1962ஆம் ஆண்டு கோடைவிடுமுறையின்போது கேரளாவைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. கல்லூரியில் என்னுடன் படித்த திரு. D. சுப்ர மண்யம் தேசீயக் கல்லூரியில் English Tutor ஆக பணிபுரிந்து வந்தான். அவனுக்கு திருச்சூரில் கல்யாணம் நடைபெற்றது. இந்தக் கல்யாணத்தில் கலந்து கொள்வதற்காக மே மாத

இறுதியில் திருச்சூருக்குச் சென்றேன். அங்கேயே 10 நாட்கள் தங்கியிருந்து குருவாயூர், எர்ணாகுளம், கொடுங்கோளூர் போன்ற ஊர்களுக்குச் சென்று வந்தேன். எங்கு நோக்கினும் இயற்கை அழகு மிளிரும் கேரள தேசத்தில் Back Waters எனப்படும் உப்பங்கழிகளை ஆங்காங்கே காணலாம். அங்கே தங்கியிருந்தபோது எனது நண்பன் திரு. சுப்ரமண்யனின் 63-64 கல்வியாண்டில் தேசியக் கல்லூரியில் Chemistry Demonstrator Vacancy ஒன்று எழுந்துள்ளதால் என்னை அந்த இடத்திற்கு விண்ணப்பம் செய்திடுமாறு கூறினான். தேசியக் கல்லூரியில் மட்டும் ஆண்டு தோறும் செயல்முறை பயிற்சி யாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட போதிலும் அவர்கள் மீண்டும் பதவியில் அமர்த்தப்படும்போது 5 ரூபாய் சம்பள உயர்வு தரப் பட்டது. மற்றைய கல்லூரிகளில் இல்லாத தொரு சலுகையாகும் இது. மேலும் தஞ்சையைவிட திருச்சியில் நண்பர்கள் வட்டம் அதிக அளவில் அமைந்திருந்தது. தஞ்சை ரயில் சந்திப்பிலிருந்து திருச்சி சென்று வருவது பூண்டிக்குச் சென்று வருவதைவிட எளிமையான, இனிமையான பயணமாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு திருச்சி தேசியக் கல்லூரி நிர்வாகத்திற்கு எனது விண்ணப்ப படிவத்தை அனுப்பி வைத்தேன்.

திருச்சூரிலிருந்து பொள்ளாச்சிக்கு பேருந்தில் வரும் போது இரு மருங்கிலும் காணப்பட்ட இயற்கை அழகு இன்றும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. பொள்ளாச்சி யிலிருந்து பழனி, திண்டுக்கல் வழியாக ரயில் மூலம் தஞ்சாவூரை வந்தடைந்தேன்.

## 101) தேசியக் கல்லூரியில் பணியில் சேர்ந்தேன்.

ஜூன் மாத இறுதியில் தேசியக் கல்லூரியில் இருந்து



நேர் காணலுக்கான அழைப்பு வந்தது. நிர்வாகத்தினர் நான் பூண்டி புஷ்பம் கல்லூரியிலிருந்து முறையான Relieving order உடன் வந்தால் பணியில் சேர்த்துக் கொள்வதாக உறுதி அளித்தனர். பூண்டி புஷ்பம் கல்லூரி நிர்வாகத்தினரிடம் நான் தேசீயக் கல்லூரிக்குச் செல்கிறேன் என்றால் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஆகவே எனக்கு செயிண்ட் ஜோசப் கல்லூரியில் M.Sc.யில் இடம் கிடைத்துள்ளதால் வேலையை ராஜினாமா செய்கிறேன் என்று கடிதம் மூலம் தெரிவித்து Relieving order-ஐப் பெற்றேன்.

## 102) ரயில் பயணமும், வில்லிபாரதச் சொற் பொழிவும்.

1959ஆம் ஆண்டு தொடங்கி திண்டுக்கல் சாலையில் ராம்ஜிநகர் செல்லும் வழியில் தேசியக் கல்லூரி இயங்கி வந்தது. திருச்சி சந்திப்பிலிருந்து சுமார் ஒன்றரை கி.மீட்டர் தூரம் நடந்து சென்றால் கல்லூரியைச் சென்றடையலாம். நகரப் பேருந்துகள் அதிக அளவில் செல்லாத தடம் இது. தஞ்சையில் காலை 8.15க்கு வண்டி ஏறினால் 9.30 மணிக்கெல்லாம் திருச்சி சந்திப்பை வந்தடையலாம்.

மாலை நேரங்களில் வேதியியல் துறைத் தலைவரான திரு. ராமபத்ர அய்யங்காரின் சிறப்பு அனுமதி பெற்று மாலை நாலரை மணிக்கே கல்லூரியை விட்டு புறப்பட்டு விடுவேன். 4.50க்கு திருச்சி சந்திப்பில் திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சரில் ஏறி அமர்ந்தால், 5.35க்கெல்லாம் தஞ்சாவூரைச் சென்றடைந்து விடலாம். சிலநாட்கள் திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சரில் செல்ல இயலாது. அப்போதெல்லாம் Workshop Train எனப்படும் ரயில் மாலை ஐந்தரை மணிக்கு திருச்சி சந்திப்பிலிருந்து புறப்படும்.

இந்த ரயிலில் ஒவ்வொரு கம்பார்ட்மென்டிலும், ஒவ்வொரு பகுதி குறிப்பிட்ட சிலருக்கு ஆண்டு முழுவதும் ‘‘முன்பதிவு’’ செய்யப்பட்ட இடங்கள் ஆகும். இதை அறிந்த வர்கள்தான் இந்த ரயிலில் பயணம் செய்ய முடியும். இந்த ரயிலில் வெவ்வேறு குழுவினர் பல்வேறு செயல்களில் ஈடுபட்டிருப்பர். காசு வைத்துச் சீட்டு விளையாடுபவர்கள், அரசியல் பேசுபவர்கள், படித்துக் கொண்டே வருபவர்கள், ஆபிஸில் நடந்த நிகழ்ச்சிகளை அலசிக் கொண்டு வருபவர்கள் ஆகியோரோடு வில்லிபாரதம் மூலத்தையும் விளக்கவுரையையும் புத்தகம் பார்க்காமல் சொல்லி வருபவரும் அவரைச் சூழ்ந்திருக்கின்ற ஒரு சிலரும் காணப் படுவர். அவ்வாறு வில்லிபாரத சொற்பொழிவுக் கேட்டு மகிர்ந்தவர்களில் நானும் ஒருவன்.வில்லிபாரதத்தைச் சொல்லி வந்த நண்பர் பெயர் கந்தசாமிப் பிள்ளை. இவர் புகழ்பெற்ற தமிழறிஞரான கந்தசாமிப் பிள்ளையின் பெயரன். திருச்சி ரயில்வே டிவிஷனல் ஆபிஸில் வேலை பார்த்து வந்தவர்.

## 103) நீ. கந்தசாமிப்பிள்ளை (1898-1977)

தஞ்சையை அடுத்த பள்ளியக்கிரகாரத்தில் பிறந்தவர். கரந்தைத் தமிழ்ச்சங்கச் செயலாளராகவும், தமிழ்ப் பொழில் ஆசிரியராகவும், பணியாற்றியவர். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழி வல்லுநர். பாண்டிச்சேரி இந்தியவியல் ஆய்வின் பிரெஞ்சு நிறுவனத்தில் பத்தாண்டு பணிபுரிந்தவர். அலெக்சாண்டர் கிரேயின் ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர். அதற்கு இடுகாட்டில் எழுதிய இரங்கற்பா என்று பெயர் கொடுத்தார். மர்ரே எஸ். ராஜத்தின் இலக்கியப் பதிப்புகளுக்கு இவரே ஆலோசகர். பிரெஞ்சு நிறுவனத்தார் இவருடைய திருவாசகப் பதிப்பை வெளியிட்டு உள்ளனர்.



தமிழ் உலகின் கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தவர். மதுரா விஜயம் என்னும் நூலை மொழி பெயர்த்துள்ளார்.

## 104) வில்லிபாரதத்தின் பெருமை

பெண்ணையாறு பாயும் திருக்கோவலூர் முதலிய திருமால் திருப்பதிகளையும்,திருவெண்ணெய்நல்லூர் முதலிய சிவத் திருப்பதிகளையும் கொண்டது நடுநாடு. அது திருமுனைப்பாடி நாடு எனவும் வழங்கும். அந்நாட்டிலுள்ள சனியூரில், ஸ்ரீவைஷ்ணவ சமயத்தில், அந்தணர் குலத்தில் வீரராகவாசாரியார் என்பவருக்கு அறுநூற்றாண்டுகளுக்கு முன்பு வில்லிபுத்தூரார் பிறந்தார். தாமே இளமையில் அவர் தக்க நல்லாசிரியரிடம் முத்தமிழையும் தெளி வுறக் கற்றுத் தேறினார். வடமொழியில் வல்லவரிடம் அம்மொழி யையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். வில்லிபுத்தூரார் நால்வகைக் கவிதைகளும் பாடுவதில் வல்லவர். அதனால் அவர் புகழ் தமிழ்நாடு எங்கும் நன்கு பரவியது. தமிர் வேந்தர்களும் அவருடைய புலமையைக் கண்டு அவரைச் சிறப்பித்துப் போற்றினர்.

அப்போது வில்லிபுத்தூராரின் பெருமையை வக்க பாகை நகரத்து அரசனாகிய வரபதியாட்கொண்டான் என்பவன் உணர்ந்தான். இதுவரை நம் நாட்டில் பிறந்த புலவரை நாம் போற்றாமல் இருந்துவிட்டோமே என்று வருந்தினான். உடனே அவன் வில்லியை வரவழைத்து, தனது அவைக்குத் தலைமைப் புலவராக்கிச் சிறப்பித்தான். வில்லியும் அதுமுதல் வரபதியாட் கொண்டான் மனம் களிக்கும்படி தனது புலமையைக் காட்டி வந்தார். அதுசமயம் ஒருநாள் வரபதியாட்கொண்டான் வில்லிபுத்தூராரைப் பார்த்து, நம்இருவரின் புகழும் பூமியில் நெடுங்காலம்

நிலைத்து நிற்கும்படி வடமொழியில் வியாச மகாமுனிவர் அருளிய மகாபாரதத்தை செந்தமிழில் இனிய செய்யுட்களாகப் பாட வேண்டும் என்று வேண்டினான். மன்னனின் வேண்டுதலுக்கு இணங்கி வில்லிபுத்தூராரும் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்து விளங்கும்படி நல்ல நடையில் பாரதத்தை பாடியருளினார்.

இந்த வரலாறு வில்லிபுத்தூராருடைய திருமகனார் வரந் தருவார் என்பவரால் வில்லிபாரத முகப்பில் பாடப்பட்டுள்ளது.

*நீடாழி யுலகத்து மறைநாலாடைந்தென்று நிலைநிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்*
*ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்*
*கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ*

வில்லிபுத்தூரார் நாலாயிரத்து முந்நூற்றுக்கு மேலான இனிய செய்யுட்களாக பாரதத்தைப் பாடியுள்ளார். இவர் பாடியருளியது முதற்பத்து பருவம் மட்டுமே. இறுதி எட்டு பருவங்களை தமிழில் இயற்றிட அவர் விருப்பப்படவில்லை. பத்தாவது பருவத்திலேயே கனைகடற்பாரளித்து அவரு மந்நகரி லறநெறியே கருதி வாழ்ந்தார் என மங்களகரமாகப் பாடி பாரதத்தை முடித்துவிட்டார்.

பின்வரும் பருவங்களில் பாண்டவர்களின் இறப்பு, ஸ்ரீகண்ணபிரானின் மறைவு ஆகியவற்றை விளக்கி பாடிட அவர் மனம் இசையாததே காரணமெனவும் நாம் கருதலாம்.

## 105) கல்லூரி வாழ்க்கை

தேசீயக்கல்லூரியில் ஆங்கிலத்துறைப் பேராசிரியராக விளங்கியவர் திரு. ராமச்சந்திரன். திருச்சியில் புகழ்பெற்று



விளங்கும் அகஸ்தியர் புத்தகசாலை நிறுவனரின் மகன். ஒரு சில நாட்கள் தஞ்சைக்குச் செல்லாமல் திருச்சியில் தங்க நேரிடும்போது தற்போது சாரதாஸ் ஸ்டோர்ஸ் இருக்கும் பகுதியில் இருந்த அவருடைய வீட்டில்தான் தங்கியிருப்பேன். மாதத்தில் 10 நாட்கள் தஞ்சைக்குத் திரும்பிச் செல்ல மாட்டேன். திரு. சுப்ரமண்யம் மலைக்கோட்டையின் வடக்குப் பகுதியில் குடியிருந்தான். அங்கேயும் பல நாட்கள் தங்குவதுண்டு. தேசியக்கல்லூரியில் நான் படித்து வந்த காலத்தில் அனைவராலும் கொண்டாடப்பட்டு வந்த ஆங்கிலத்துறைப் பேராசிரியர் V.N.என்று அழைக்கப்பட்டு வந்த திரு. V. நடராஜன் என்பவரும் நானும் இணைபிரியாத நண்பர்களாக ஆனோம்.

## 106) பல்துறைப் பேராசிரியர்களுடன் கொண்ட நட்பு

நான் தேசியக் கல்லூரியில் பணி புரிந்தபோது கணிதத்துறை தலைவரும் பேராசிரியருமான திரு.V.ரங்கநாதன் முதல்வராகப் பணியாற்றி வந்தார். பௌதிகத் துறையில் எனது உற்ற நண்பனும், மன்னார்குடியைச் சார்ந்த V.ஸ்ரீநிவாஸன், திரு. A.C.பத்மநாபன், ஸ்ரீரங்கம் வீணை மிராசு திரு. ரங்கராஜன், மற்றும் திரு. S.வேதாந்த தேசிகன் ஆகியோர் பேராசிரியர்களாகப் பணியாற்றி வந்தனர்.

1961ஆம்ஆண்டு தொடங்கி தேசியக்கல்லூரியில் பௌதிகத்தில் M.Sc. பட்டப்படிப்பு தொடங்கி வைக்கப்பட்டது. திருச்சி யிலேயே முதன் முதலாக செயின்ட் ஜோசப் கல்லூரிக்குப் பிறகு பௌதிகத்தில் M.Sc.பட்டப் படிப்பு தேசியக் கல்லூரியில்தான் அளிக்கப்பட்டு வந்தது.

வேதியியல் துறையின் தலைவராக திரு. ராமபத்ராசாரியர் இருந்து வந்தார். கச்சம், சிறிய அளவில் பின்குடுமி,

வாயில் வெற்றிலைப்பாக்கு, அழுக்கு படிந்த ஒரு கோட்டு இவற்றுடன் அவர் காணப்படுவார். எல்லோருக்கும் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். என்னைப் பொறுத்தவரையில் அவர் ஒரு சிறந்த H.O.D. ஏனெனில் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் இருந்தபோதிலும் மாலை 4 மணிக்கே எனக்கு 4.40க்கு புறப்படும் திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சரில் தஞ்சாவூருக்குச் செல்ல அனுமதியளித்தவர் அவர். மற்றைய செய்முறைப் பயிற்சியாளர்கள் நான் அரைமணி நேரம் முன்னதாகக் கல்லூரியை விட்டுச் செல்வதை விரும்பவில்லை.

திரு. ராமபத்ராசார்யர் இவர்களுடைய முணுமுணுப்பையெல்லாம் லட்சியம் செய்வதில்லை. திரு.M.V. கோபால ரத்னம், திரு.M.N. வரதராஜன், திரு. S. தியாகராஜன் ஆகியோர் மற்றைய வேதியியல் துறைப் பேராசிரியர்கள் ஆவர். Geology. (புவியியல்) துறையின் பேராசிரியராய்ப் பணிபுரிந்து வந்தவர் திரு. S.ரங்கநாதன். இவர் மன்னார் குடியில் புகழ்பெற்று விளங்கியவரும், பரமதார்மீகருமான ஸ்ரீ.ஸ்ரீனிவாஸய்யங்காருடைய புத்ரர். **(இவர் சில ஆண்டுகளுக்குப் பிறகு தனது வேலையை உதறித் தள்ளி விட்டு மன்னார்குடியில் விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் தஞ்சாவூர் டெல்டா விவசாயிகள் சங்க காரியதரிசியாகப் பொறுப்பேற்றார். இன்றைய தேதிவரை விவசாயிகளின் நலனுக்காகப் போராடி வருகிறார். பாஞ்ச ஜன்யம் ஆயுள் சந்தாதாரர். மன்னார்குடி செல்லும் போதெ ல்லாம் இவரை நேரில் கண்டு கல்லூரி நாட்களை அவருடன் நினைவு கூர்ந்து மகிழ்வேன்.)**

மற்றைய துறை விரிவுரையாளர்களுடனும், பேராசிரியர்களுடனும் அவ்வப்போது அந்தந்தத் துறைக்குச் சென்று



அளவளாவி வருவேன். இவ்வாறு நான் மற்றைய துறை பேராசிரியர் களுடன் பழகுவதை திரு.கோபாலரத்னம் போன்றோர் விரும்பவில்லை. திரு. ராமபத்ராசார்யருடைய முழு அரவணைப்பில் நான் இருந்து வந்ததால் இதுபற்றி கவலைக் கொள்ளவில்லை.

## 107) தீபாவளிக் கொண்டாட்டமும், திண்டாட்டமும்

தீபாவளி வந்தால் தம்பி தங்கைகளுக்கு பெருத்த கொண்டாட்டம். தஞ்சாவூரைச் சுற்றி எவ்வளவு வெடிக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றிய புள்ளி விவரங்கள் அவர்களுக்குத் தெரியும். 1962ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தீபாவளியின் போது வீட்டிற்குள்ளேயே ஓலை வெடியை வெடித்து அதன் விளைவாக கையில் காயம் ஏற்பட்டு அதே தெருவில் உள்ள டாக்டரிடம் என் தம்பி ஸ்ரீனிவாசனை அழைத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## 108) விற்பனைக் கூடங்களில் இனிப்பு வகைகள் தயாரிப்பின் போது, தூய்மை பாது காக்கப் படுகிறதா?

அப்போதெல்லாம் மிக்ஸி அல்லது கிரைண்டர் ஆகிய வற்றின் உபயோகம் கிடையாது. எந்த இனிப்புப் பண்டமானாலும் அல்லது கார வகையானாலும் வீட்டிலேயே தயாரிக்கப்பட வேண்டும். கடைகளில் வாங்கிச் சாப்பிடுவது ஆசாரக்குறைவான செயலாகக் கருதப்பட்ட காலம். பார்ப்பதற்கு அழகான ருசி உடையதான லாலா கடை இனிப்பு மற்றும் காரவகைகள் பாவனத்வம் (தூய்மை) கொண்டவை அல்ல. ஆயினும் தற்போது நாட்டில் ஒரு பக்கம் நீரிழிவுநோயினால் அவதிப்படுவோர் அதிக அளவில்

இருந்தபோதிலும் இனிப்புப் பண்டங்களின் விற்பனைக் கூடங்கள் அதிகஅளவில் காணப்படுகின்றன. உலகத்திலேயே இந்தியாவில்தான் அதிகஅளவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளார்கள் என உலகளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. (தற்போது இந்திய ஜனத் தொகையில் 50.8 மில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.)

## 109) தீபாவளி மருந்து தயாரிப்பது எப்படி?

தீபாவளி ''போனஸ்'' ஆக பெரும்பாலோர்க்குக் கிடைப்பது அஜீரணமும், அதன் விளைவாகத் தோன்றும் வயிற்றுக் கோளாறும் தான். இதைத் தவிர்ப்பதற்காக தீபாவளி மருந்து என்ற உடனடி மருத்துவப் பண்டத்தை தீபாவளிப் பலகாரங்களின் ஒரு முக்கிய பகுதியாகக் கொண்டுள்ளனர். தற்போது கடைகளில் விற்கப்படும் தீபாவளி மருந்தைவிட நாமே தயாரிக்கும் தீபாவளி மருந்து நல்ல பயனைத் தரும்.

மிளகு, வால்மிளகு, ஓமம், சுக்கு, அரிசித்திப்பிலி, கண்டந் திப்பிலி, சித்தரத்தை, கொத்தமல்லி விதை ஆகியவற்றைக் குறிப்பிட்ட அளவு நன்றாகத் தண்ணீரில் ஊற வைத்து, அம்மி அல்லது கல் உரலில் அரைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அரைத்த கெட்டியான குழம்பை வாணலியில் கொதிக்கவைத்து அது கொதிக்கும்போது பொடி செய்த வெல்லத்தை அதில் சேர்க்கவேண்டும். அந்த வெல்லம் பாகான நிலையை அடைந்த உடன் நெய், சிறிது நல்லெண்ணைய், தேன் ஆகியவற்றை இளம் சூடாக இருக்கும்போது சேர்த்து நன்றாகக் கிளற வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மருந்தைப் பல நாட்கள் பாதுகாப்பாக வைத்து அனைத்து வயதினரும் உட்கொள்ளலாம்.



கிராமப்புறங்களில் ஜிஞ்சர்பீர் என்றதொரு பானம் கடைகளில் விற்கப்படும். இது அஜீரணத்தைப் போக்கவல்லது. கிராமங்களில் தீபாவளி சமயத்தில் இதன் விற்பனை அமோகமாக இருக்கும்.

## 110) கருந்தட்டாங்குடி எனப்படும் கரந்தை

ரயில் பயண வில்லிபாரத சொற்பொழிவின் போது பழக்கமான திரு. கந்தசாமிப்பிள்ளை கரந்தை தமிழ்ச்சங்கப் பேராசிரியர் ஒருவரை அறிமுகப்படுத்தி வைத்தார். ஒருநாள் அவருடைய அழைப்பின் பேரில் கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு திரு. கந்தசாமிப்பிள்ளையுடன் சென்று வந்தேன்.

சுருக்கமாகக் கரந்தை என்றும், பொதுமக்களால் கருந்தட்டாங்குடி என்றும் அழைக்கப்படும் தஞ்சை நகரின் ஒரு பகுதியின் பழம்பெயர் கருந்திட்டைக்குடி என்பதாகும். கருவிட்டைக்குடி, கருவிட்டக்குடி எனவும் வழங்கப் பெற்று உள்ளது. இவ்வூர் திருநாவுக்கரசர் பாடலில் குறிக்கப்பெற்ற வைப்புத் தலமாகும்.

**நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்மங்குடி**
**நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி**
**கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி**
**கருந்திட்டைக்குடி சடயக்குடி காணுங்கால்**
**விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி**
**வேதிகுடி மானிகுடி விடைவாய்க்குடி**
**புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி**
**புதுக்குடியும் போற்றஇடர் போகுமன்றோ!**

(அடைவு திருத்தாண்டகம்-3)

என்பது திருநாவுக்கரசர் பாடலாகும். கருந்

திட்டைக்குடி தொன்மையதோர் ஊர். தனி ஊர். ஆனால் தஞ்சையோடு நெருங்கிய தொடர்புடையது. தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்ப் பற்று கருந்திட்டைக்குடி என்றும், தஞ்சாவூர்க் கருந்திட்டைக்குடி என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. தஞ்சையையும் கருந்திட்டைக்குடி யையும் வடவாறு பிரிக்கிறது. வடவாறு பராந்தகசோழன் காலத்தில் வெட்டப்பட்டது. அதற்கு வீரசோழ வடவாறு என்றும் பெயர் உண்டு. அரியாறு மணிமுத்தாநதி என்று அழைப்பர். வடவாற்றின் வடகரையில் இவ்வூர் உள்ளதெனக் கல் வெட்டுக் கூறும். இராசராசன் காலத்தில் தஞ்சைக் கோட்டையின் மும்மடிச்சோழ மதிலுக்கு வெளியேதான் கரந்தை இருந்தது. அதனால்தான் கல்வெட்டுகளில் தஞ்சாவூர்ப்புறம்படி கருந்திட்டைக்குடி என்று குறிக்கப் படுகிறது.

கருந்திட்டைக்குடிக்குச் சங்கத் தவிர்த்த சோழநல்லூர், குலோத்துங்க சோழநல்லூர் எனப் பிற்காலச் சோழர் காலத்தில் பெயர் அமைந்துள்ளது. இங்கிருந்த ஒரு நந்தவனம் கங்கை கொண்ட சோழன் எனப்பெயர் பெற்றிருந்தது. இன்றும் கரந்தைக் கிராமத்தின் ஒரு பகுதி கங்காந்திடல் என அழைக்கப்படுகிறது.

விண்ணாறு கரந்தையிலிருந்து தஞ்சைக்கு வரும்வழி அக்காலத்தில் கோடிவனமடையான் பெருவழி என்று அமைக்கப் பட்டது. கருந்திட்டைக்குடியை ஒட்டி வட மேற்குப்புறம் காடவன் மகாதேவி ஆன விருதராச பயங்கரச் சதுர்வேதிமங்கலம் இருந்தது. பாண்டியர் ஸ்ரீவல்லவன் காலத்தில் கரந்தை தஞ்சையில் சில பகுதிகள் சேர்ந்து ஜகதேகவீர சுவர்ணமங்கலம் என்று அழைக்கப்பட்டது. பாண்டியன் ஸ்ரீவல்லபனின் தளபதி சாமந்த நாராயணன் என்ற தொண்டைமானார் தம் பெயரால் எடுத்த சாமந்த நாராயணச் சதுர்வேத மங்கலத்தில் சாமந்த நாராயண விண்ணகர் எம்பெருமானுக்கும் அகரத்துப் பட்டர்களுக்கும் கொடையாக அளிக்கப்பட்டது. இரண்டாம் இராசாதிராசன் காலக் கல்வெட்டொன்றில் (1178) ஐம்பது கோயில் காணியுடைய குடிமக்கள் கருந்திட்டைக் குடியைத் தங்கள் காணி ஊர் என்று கூறியுள்ளனர்.



## 111) தஞ்சையில் இரு தமிழ்ச் சங்கங்கள்

1902ஆம் ஆண்டு பாப்பாநாடு குறுநில மன்னர் சாமிநாத விசயதேவர் தலைமையில் ஒரு தமிழ்ச்சங்கம் தோன்றியது. கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் இராசமையங்கார் செயலாளராக இருந்தார். இச்சங்கம் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தது. எல். உலகநாத பிள்ளை இச்சங்கத்தோடு தொடர்புடையவராக விளங்கினார். அரித்வாரமங்கலம் வா. கோபாலசாமி ரகுநாத இராசாளியார் ஒரு முத்தமிழ்க் கொடை வள்ளல். டாக்டர்.உவே. சாமி நாதய்யருக்குப் புறநானூறு ஏட்டுப் பிரதியை அளித்தவர். 1901ஆம் ஆண்டு பாண்டித்துரைத்தேவர் மதுரைத் தமிழ்ச் சங்கம் அமைக்க உடனிருந்து உதவியவர். பாண்டித்துரைத் தேவர் வேண்டிக் கொள்ளத் தஞ்சையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவினார். தமிழகம் என்ற இதழையும் தொடங்கி னார். 1911இல் டெல்லியில் ஐந்தாம் ஜார்ஜ் முடிசூட்டிக் கொண்ட போது தஞ்சை மாவட்டத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர் இவர்.

## 112)கரந்தைத் தமிழ்ச் சங்கம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ்நலம் காத்து, தமிழர் நலம் போற்றித்

தனித்தமிழ் வளர்ச்சியையே எழுத்திலும் பேச்சிலும் பரப்பி வருவது கரந்தைத் தமிழ்ச் சங்கம். திரு. திருவாளர். அவைத் தலைவர். சொற்பொழிவு போன்ற பல சொற்களை நடை முறைக்குக் கொண்டு வந்து அறிமுகப்படுத்திப் பரப்பியது இச்சங்கமேயாகும். 14.5.1911 அன்று த.வே. இராதா கிருட்டிணப்பிள்ளை. பி.ஏ. அவர்களால் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டது. அவர் தனுஷ்கோடியில் சுங்கத் துறை அலுவலக மேற்பார்வைப் பணியில் இருந்ததால் தமை யனார் த.வே. உமாமகேசுவரனார் சங்கத் தலைமைப் பதவி யேற்று முப்பது வருட காலம் தலைவராக விளங்கிப் பல பணிகளைச் சிறப்புடன் செய்தார்.

1914ஆம் ஆண்டு முதல் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலான சுந்தரம் பிள்ளையின் ''நீராரும் கடலுடுத்த'' என்ற பாடலை முழுமையாகப் பாடிவருவது சிறப்புக்குரியது. வெள்ளையர் ஆட்சியில் பள்ளிகள் கட்டணம் வசூலிக்கப் பட்டு ஆங்கில முறையில் நடைபெற்றது. சங்கம் கட்டணம் இன்றித் தமிழ்வழியில் நடத்தியது வரலாற்றுச் சிறப்புமிக்கது. 1916இல் தொடக்கப்பள்ளி, 1922இல் நடுநிலைப் பள்ளி, 1950இல் உயர்நிலைப்பள்ளி, 1978இல் மேல்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டது.

சங்க வெள்ளிவிழாவில் 1938இல் புலவர் கல்லூரியை ஞானியார் சுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். மாணவர்கள் பல்துறைக் கல்வியும் கலைகளும் கற்கவேண்டி 1987இல் புலவர் கல்லூரி கலைக்கல்லுரியாக மாற்றப்பட்டது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வராத தமிழ் அறிஞர்களே கிடையாது. யாழ்நூல் உள்ளிட்ட பல சிறப்புமிகு நூல் களைவெளியிட்டுள்ளனர். 68 ஆண்டுகளாகத் தமிழ்ப் பொழில் மாத இதழ் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.



மழலையர் பள்ளியிலிருந்து முனைவர் பட்டப் படிப்பு வரை தழைத்து நிற்கின்றன. கரந்தைத் தமிழ்ச் செம்மல் ச. இராம நாதன் அவர்கள் தலைமையில் பழம்பெருமை மிக்க இந்நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த சோழரின் கரந்தைச் செப்பேடுகள் இங்கு உள்ளன.

## 113) த.வே. உமாமகேசுவரனார்.

கரந்தையில் வேம்பப்பிள்ளை-காமாட்சியம்மை தம்பதியருக்கு மகனாக 7-5-1883இல் பிறந்தார். வழக்கறி ஞராகி தமிழ் வரலாறு ஆசிரியர் கே.சீனிவாசப்பிள்ளையிடம் பணிபழகும் வழக்கறிஞராகச் சேர்ந்தார். தஞ்சை வட்டக் கழகத்தின் முதல் தலைவராகிப் பன்னிரு ஆண்டுகள் தொடர்ந்து தலைவராக விளங்கினார். சாலை, பால வசதிகளைப் பெருக்கினார். புகழ் பெற்ற வழக்கறிஞர் ஆனார். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரில் தோன்றிய நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரியில் தமிழுக்கும் இடம் அளித்து அரசர் கல்லூரியில் தமிழ் இடம் பெறச் செய்தவர் உமாமகேசுவரனார் ஆவார்.

தஞ்சை சிரேயசு சத்திரத்தை மாணவர் தங்கிப் படிக்கும் இடமாகச் செய்தார். வேலைவாய்ப்புத் தரும் தொழிற் கல்வியை மாணவர்க்கு வழங்கினார். தமிழுக்கெனத் தனியாகப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று 1925ஆம் ஆண்டிலேயே கூறியவர் 1911ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகத் திகழ்ந்தவர். 1934இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். 1933இல் ஞானியார்

அடிகளால் செந்தமிழ்ப் புரவலர் பட்டம் பெற்றார். தமிழவேள் பட்டமும் பெற்றார். கரந்தை நிறுவனங்களை நன்கு நடத்தக் கருதி தாகூரின் சாந்தி நிகேதனைப் பார்த்து வரும்போது வழியில் 9.5.1949ஆம் ஆண்டு காலமானார்.

## 114) கரந்தைச் செப்பேடுகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் முதலாம் ராஜேந்திரன் காலத்திய செப்பேடுகளின் தொகுப்பைக் கண்டேன். இந்தச் செப்பேடுகள் அம்மாப்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள புத்தூர் என்னும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டவையாகும். திரு. சேவுப்பாண்டியன் என்பவரிடம் இருந்த இந்தச் செப்பேடுகளை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் அவரிடம் இருந்து பெற்று கரந்தையில் பாதுகாத்து வந்தனர். அதனால் இந்தச் செப்பேடுகள் கரந்தைச் செப்பேடுகள் என அழைக்கப்பட்டு வருகின்றன. 57 செப்பேடுகள் கொண்ட இவை முதலாம் ராஜேந்திரனால் அவனுடைய 8ஆம் ஆட்சி யாண்டில் அவனது அன்னையான வானமாதேவியின் நினை வாக மிகப்பெரிய சதுர்வேதிமங்கலம் ஒன்று ஏற்படுத்தி வைக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. இந்தச் சதுர்வேதி மங்கலத்திற்கு திரிபுவன மஹாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் வழங்கி வந்தமை செப்பேடுகள் மூலம் அறியப் படுகிறது.

முதலாம் ராஜேந்திரனுடைய மந்திரியான நாரக்கன் மாரையன் ஜனநாதன் என்பானுடைய வேண்டுகோளுக்கு இணங்க, 1080 ஸ்ரீவைஷ்ணவர்களைக் குடியமர்த்தி அமைக்கப்பட்ட சதுர்வேதிமங்கலம் இது. சோழ பரம் பரையைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் இந்தச் செப்பேடுகள் மூலம் அறியப்படுகின்றன.



## 115) வாழ்க்கைப்படகு திசை மாறியதே!

பாபா அட்டாமிக் ரிசர்ச் கார்ப்ரேஷனில் (BARC) Scientist பணிக்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அத்துடன் இணைப்பதற்கான போட்டோ ஒன்றினை எடுத்த போது அது சரியாக வரவில்லை. ஆகவே அந்தப் பணிக்கு விண்ணப்பம் செய்யாத நிலையில் அங்கு அனுப்புவதற்காக எடுத்த 10ரூபாய் போஸ்டல் ஆர்டரை என்ன செய்வது என்று தெரியாமல் என்னிடம் வைத்துக் கொண்டிருந்தேன்.

1963ஆம் ஆண்டு மார்ச் மாதம்ஒருநாள் The Mail ஆங்கில நாளிதழில் ஒரு விளம்பரத்தைக் கண்டேன். அதில் “Wanted Gaugers Apply with 10Rs Postal order, Salary-150-10-250, Minimum Qualifiation B.Sc. to The Indian Oil Company, 151-A, khivraj mansions, Mount Road, Madras-2, ” என்ற விளம்பரத்தைக் கண்டேன். கையில் 10ரூபாய் போஸ்டல் ஆர்டர் இருந்தது. மேலும் தற்போது வாங்கும் சம்பளம் மற்றும் ஆண்டுதோறும் வேலையை விட்டு நீக்குதல், அப்படியே வேலையில் அமர்த்தப்பட்டாலும் கிடைப்பது 3ரூபாய் இன்கிரிமெண்ட். இவையெல்லாம்விட ஆண்டுக்கு 10ரூபாய் இன்கிரிமெண்ட் கிடைக்கிறது. 150ரூபாய் என்பது நல்ல சம்பளம் என்ற எண்ணம் கொண்ட நான் வேலையினுடைய தன்மை எது என்று அறியாத நிலையில் Indian Oil Company க்கு விண்ணப்பம் செய்தேன்.

## 116) Gauger-இன் பணி என்ன?

Gauger என்றால் எந்த மாதிரியான வேலையை மேற்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றிய எந்தக் குறிப்பும் கிடைக்காத போது திருச்சி ஜங்ஷன் எதிரில் அந்தக் கால கட்டத்தில் செயல்பட்டுவந்த பர்மாஷெல் பெட்ரோல் பங்க்

மேனேஜரிடம் சென்று விசாரித்தேன். அவர் தனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டார். ஆக்ஸ்போர்ட் ஆங்கிலப் பேரகராதியில் Gauger-An excise Man who measures oil என்ற விளக்கம் காணப்பட்டது. Excise man என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது. இந்த வேலை கிடைத்தால் கோடை விடுமுறையில் வேலை செய்வோம், வேலை பிடிக்காவிட்டால் மீண்டும் தேசியக்கல்லூரிக்கு வந்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் அந்த வேலைக்கு விண்ணப்பித்தேன்.

## 117) Interview At Chennai

1963 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் சென்னையில் நடைபெறவுள்ள நேர்காணலுக்கு வருகை தந்திடுமாறு தகவல் கிடைத்தது. சென்னையை நோக்கிய எனது 3ஆவது பயணமும் நிகழ்ந்தது. Khivraj Mansionஇல் நடைபெற்ற நேர்காணலுக்கு 8 நபர் வருகை தந்திருந்தனர். திரு. B.A. ராவ், A.S.மணி மற்றும் திரு. T.P.ராகவன் ஆகியோர் தேர்வுக் குழவில் இடம் பெற்றிருந்தனர். இதில் முதல் 2 அதிகாரிகளும் District Managers என்ற பதவி யிலும், திரு. T.P.ராகவன் Assistant Operations Manager என்ற பதவியையும் வகித்து வந்தனர் என்பதை நான் அந்த கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தபின் அறிந்து கொண்டேன்.

## 118) Appointment letter reached My house before I could reach Tanjore.

நேர்காணலின்போது அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு எவ்விதத் தயக்கமுமின்றி பதில் சொன்னேன். விசாகப் பட்டினத்தில் வேலை பார்க்கவேண்டும் என்று திரு. ராகவன் கூறியபோது இந்தியாவின் எந்தப் பகுதியிலும் நான் வேலை பார்க்கத் தயார் என்று பதில் அளித்தேன். நமக்கு இந்த வேலை கிடைக்காது என்ற எண்ணத்துடன் அங்கிருந்து புறப்பட்டு வேடந்தாங்கல், சிதம்பரம் ஆகிய ஊர்களுக்குச் சென்றுவிட்டு 6 நாள் கழித்து தஞ்சாவூருக்குத் திரும்பி வந்தேன். விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள Indian Oil Installationஇல் Gauger பதவிக்கு நியமன உத்தரவு நான் ஊர் திரும்புவதற்கு முன்பாகவே வரப்பெற்று, எனக்காகக் காத்திருந்தது. அதில் 1963 ஏப்ரல் 30ஆம் தேதிக்குள் இந்த வேலையை ஒப்புக்கொள்ளா விட்டால் தன்னடைவே அது ரத்தாகிவிடும் என்று காணப்பட்டது. என்னுடைய தமையனாரான பார்த்தசாரதிக்கான ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் 'நீத்தார்' நினைவுநாள் (சிராத்தம்) மே 1ஆம் தேதி கொண்டாடப்பட இருப்பதால் மே 4ஆம் தேதி பணியில் சேர் வதற்கு அனுமதி கேட்டு கடிதம் அனுப்பி னேன். அதற்கு இசைவு தெரிவித்து உடன் பதில் வந்தது.



## 119) 4.5.1965 அன்று விசாகப்பட்டினத்தைச் சென்றடைந்தேன்

தமிழ்நாட்டு எல்லையைவிட்டு எங்கும் நான் சென்ற தில்லை. மே 1ஆம்தேதி சிராத்தம் முடிந்த கையோடு திருச்சி வழியாக சென்னைக்குப் புறப்பட்டுச் சென்ற நான் 1963 மே3ஆம் தேதி காலை சென்னை சென்ட்ரலிலிருந்து புறப்பட்ட ஹௌரா எக்ஸ்பிரஸில் விசாகப்பட்டினத்திற்குப் பயணப்பட்டேன். மே 4ஆம் தேதி காலை 7 மணிக்கு வால்டேர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிய நான் எந்தத் திக்கில் எந்தப் பேருந்தில் பயணத்தை மேற்கொள்வது என்பதை அறியாமல் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது

திரு.ராமகிருஷ்ணன் என்பாரைக் காண நேரிட்டது. அவர் பர்மா ஷெல்லில் பதவி வகிக்கும் ஓர் அதிகாரி என்பதை அவர் தெரிவித்தார். அவரிடம் நான் இந்தியன் ஆயில் கம்பெனிக்குப் போக வேண்டும், எப்படிச் செல்வது என்று எனக்குத் தெரியாது, நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவரும் அதற்கு இசைந்தார். அவருடன் சென்ற நான் காலை உணவு அருந்திய பிறகு பேருந்தில் பயணம் செய்தோம். திரு. ராம கிருஷ்ணன் Coal Jetty என்று அழைக்கப்பட்டு வந்த பேருந்து நிறுத்தத்தில் என்னை இறங்கச் சொல்லி தெற்கு நோக்கி செல்லும்படி பணித்தார்.

## 120) விசாகப்பட்டினமும், அதன் சிறப்புகளும்

கிழக்குக் கடற்கரையில் ரத்தினமணிபோல விளங்குவது விசாகப்பட்டினம் ஆகும். ஒரு பக்கத்தில் கடலாலும், மூன்று பக்கம் மலைகளாலும் சூழப்பட்ட ஒரு நகரம். இங்குதான் இந்தியக் கடற் படையின் கிழக்குப்பகுதித் தளம் அமைந்துள்ளது. ஆந்திர மாநிலத்தின் 2ஆவது பெரிய மாநகரமாய் தற்போது விளங்குவது விசாகப் பட்டினம். இங்குள்ள துறைமுகம் இயற்கையிலேயே அமைந்த துறைமுகமாகும். (சென்னைதுறைமுகம் செயற்கையாய் அமைக்கப்பட்டதொன்றாகும்.) கலிங்கநாட்டின் ஒரு பகுதியாய் விளங்கிய விசாகப்பட்டினத்தை அசோகர் போரில் வெற்றி கொண்டார். அதன்பிறகு வெங்கி நாட்டு மன்னர்கள், சளுக்கியர்கள், பல்லவர்கள், சோழர்கள் ஆகியோர் அவரவர் ஆட்சிக் காலத்தில் விசாகப்பட்டினத்தை தமது ஆட்சிப் பரப்பின் எல்லைக்கீழ் கொண்டி ருந்தனர். முகலாயர்களுக்குப் பிறகு ஹைதராபாத் நிஜாமின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது விசாகப்பட்டினம். கிழக்கிந்தியக்கம்பெனியர்



இயற்கைத் துறைமுகமான விசாகப்பட்டி னத்திலிருந்து புகையிலை, தந்தம், ஆடைகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து வணிகரீதியில் பெரும்பொருள் ஈட்டி வந்தனர்.

1804ஆம் ஆண்டு Greater Madras Presidency என்று அழைக்கப்பட்டு வந்த சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாய் இது விளங்கியது. இந்தியா சுதந்திரம் அடைந்த போது நாட்டிலேயே மிகப் பெரிய மாவட்டமாய் விளங்கிய விசாகப்பட்டினத்திலிருந்து ஸ்ரீகாகுளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. 1940ஆம் ஆண்டு Scindia Steam Navigation Companyயின் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பட்டது. இந்தக் கப்பல்கட்டும்தளமே இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு பெயர் மாற்றம் பெற்று Hindustan Shipyard limited என்று அழைக்கப்பட்டு வந்தது. தற்போதைய சட்டீஸ்கர் மாநிலத்தில் அமைந்துள்ள Bailadila என்னும் இடத்திலிருந்து இரும்புத்தாதுகள் goods trainமூலம் கொண்டு வரப்பட்டு பெருமளவில் விசாகப்பட்டினம் துறை முகத்திலிருந்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.

1959ஆம் ஆண்டு புகழ்பெற்ற Caltex Oil Company தம்முடைய எண்ணெய் சுத்திகரிப்பு நிலை யத்தை விசாகப் பட்டினத்தில் நிறுவினர். இதற்கு ஆங்கிலத்தில் CORIL என்ற பெயர் வழங்கி வந்தது. 2ஆம் உலகப் போரின்போது ஜப்பானியர்களால் இந்த நகரம் வான்வெளித் தாக்குதலுக்கு உள்ளானது. புகழ்பெற்ற ஆந்திரா, பல்கலைக்கழகம் 1926ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. புகழ்பெற்ற எழுத் தாளர்களான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் K.R.ஸ்ரீனிவாஸ அய்யங்கார் போல்வோர் இந்தப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர்களாகப் பணி புரிந்துள்ளனர்.

## 121) Coal Jetty I.O.C. Installation

செல்லும் வழியெல்லாம் துறைமுகத்தை ஆழப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட ஈரமண் நாலடி உயரத்திற்குப் புதைந்து கிடைந்திருந்தது. வெளிப்புறம் சமதளம்போல் சீராகக் காணப்படும் அதில் கால் வைத்தால் இடுப்பளவு சேற்றில் மாட்டிக் கொள்ளவேண்டும். என்னோடு வந்த ஒருவர் அதன்மேல் நடக்க வேண்டாம் என்று அறிவுறுத்தி யதால் ரயில்வே லைன் வழியாக இந்தியன் ஆயில் கம்பெனி முகப்பைச் சென்றடைந்தேன். இந்தியன் ஆயில் கம்பெனிக்கு Customs Check Gate வழியாகத்தான் செல்ல வேண்டும். சென்னைத்துறைமுக Customs Collectorateரின் நிர்வாஹப் பொறுப்பில் விசாகப்பட்டினம் Customs இன் கீழ் இருந்து வந்ததால் பெரும்பாலும் தமிழ்பேசும் சுங்கத்துறை அதிகாரி களையே விசாகப்பட்டினத்தில் காணலாம். அவர்களிடம் அனுமதி பெற்று நிர்வாஹ அலுவலகத்தைச் சென்றடைந் தேன். அங்கே தமிழ்நாட்டிலிருந்து முன்பே வேலையில் அமர்ந்திருந்த திரு. R.சத்தியநாராயணன் (Stenographer) K.ராமமூர்த்தி (Junior Assistant) S.கார்த்திகேயன் (Typist) ஆகியோரைச் சந்தித்தேன்.

## 122)இந்தியன் ஆயில் கம்பெனியின் தோற்றம்

Installation Manager திரு. குப்புசாமி ராணுவ மேஜராவார். 1959ஆம்ஆண்டு அப்போதைய Mines and Fuels துறை அமைச்சராக விளங்கிய திரு. K.D. Malaviya அவர்களின் எண்ண அலைகளில் உதித்ததே இந்திய ஆயில் கம்பெனி நிறுவனம். 1959ஆம் ஆண்டுக்கு முன்பு மேற்கத்திய எண்ணெய்க் கம்பெனிகளான பர்மாஷெல், Esso, Caltex, Stanvac Assam Oil Company போன்ற



வையே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்துள்ள பெட்ரோலியப் பொருள்கள் விநியோகத்தில் ஈடுபட்டு இருந்தனர். கொச்சி, மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த Indian Navy Oil Installationsகளை இந்தியன் ஆயில் கம்பெனி தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டது. பர்மா ஷெல் ஊழியர்கள் இந்த இந்தியன் நேவிக்குச் சொந்தமான எண்ணெய்க் கம்பெனிகளின் இயக்கத்தை மேற் பார்வை யிட்டு வந்தனர். அவை இந்தியன் ஆயிலிடம் ஒப்படைக்கப் பட்டபின் பர்மா ஷெல் தமக்கென புதியதொரு எண்ணெய்க் கிடங்கை (Oil Installation) ஒன்றினை Caltex Oil Refinary-க்கு அண்மையில் அமைத்துக் கொண்டனர்.

## 123) ராணுவ உயர் அதிகாரிகள் Oil Installation Managerஆகப் பணி புரிந்தனர்

Oil Installation-களை மேற்பார்வையிடுவதற்கும், அதில் பணிபுரிவதற்கும் தகுந்த நபர்களை அமர்த்துவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. ஆயினும் கொச்சி மற்றும் விசாகப்பட்டினம் ஆயில் சேமிப்புக் கிடங்குகளை மேற் பார்வை அதிகாரியாக ராணுவ மேஜர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவரே திரு.குப்புசாமி. இவர் கும்பகோணத்துக்காரர். வாய் ஏதாவதுஒரு ராகத்தை முணு முணுத்துக் கொண்டேயிருக்கும். ராணுவ அதிகாரி ஆதலால் கண்டிப்பு மிக்கவர்.

## 124) நீ தஞ்சாவூர்க்காரனா?

Assistant Installation Manager ஆன கர்நாடகாவைச் சார்ந்த திரு. K.S. சந்திரசேகராவிடம் மற்றைய தமிழ் நாட்டு ஊழியர்கள் என்னை அழைத்துச் சென்றனர்.

அவர் என்னை திரு. குப்புசாமி அவர்களிடம் அழைத்துச் சென்றார். திரு. குப்புசாமி என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு "நீ தஞ்சாவூர்க்காரனா? ஆயில் கம்பெனி வேலை யைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டார். அதற்கு நான் "கல்லூரியில் வேலை பார்த்துவிட்டு வருகிறேன். ஆயில் கம்பெனி தொடர்பான வேலைகளை நான் கற்றுக்கொண்டு திறம்பட வேலைபார்ப்பேன்" என்று கூறினேன். அதற்கு அவர் "இது தாண்டா தஞ்சாவூர்க் காரனுக்குள்ள தைரியம் வெரிகுட்" என்று என் முதுகில் தட்டிக் கொடுத்தார். (ஆரம்ப கட்டத்தில் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் அதிக அளவில் கர்நாடகா மற்றும் கேரள மாநிலத்தவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இந்தியன் ஆயில் நிறுவனத்தின் முதல் சேர்மன் திரு. S. நிஜலிங்கப் பாவும் அவருக்குப் பிறகு பாலக்காட்டைச் சேர்ந்த திரு. P.A. கோபால கிருஷ்ணன் I.A.S-ம் செயல்பட்டனர். திரு. கோபால கிருஷ்ணன் எல்.ஐ.சி. நிறுவனத்தின் சேர்மனாக இருந்து இந்தியன் ஆயில் நிறுவனத்துக்கு வந்தவர். )

## 125) K.G. Hospitalக்கு அனுப்பப்பட்டேன்

எந்த வேலைக்கு யார் சேர்ந்தாலும் கம்பெனியின் நடை முறைகள் விதியின்படி முழு உடற்பரிசோதனை செய்யப்பட்ட பிறகே வேலையில் அமர்த்தப்படுவர். அதன்படி என்னை K.G. Hospital என்று அழைக்கப்பட்டு வந்த அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று உடற்பரி சோதனை செய்து கொண்டு வருமாறு திரு. குப்புசாமி கூறினார்.

மொழி தெரியாத அந்த ஊரில் தட்டுத்தடுமாறி கே.ஜி மருத்துவமனைக்குச் சென்றேன். 40ரூபாய் செலவில்



மெடிக்கல் செக்கப் முடிந்தது. மீதி கையிருப்பு 60 ரூபாய்தான். எப்போது சம்பளம் வரும் என்று தெரியாது. எங்கே தங்குவது என்று தெரியாது. ஆந்திரா காரத்துடன் கூடிய மதிய உணவை உட்கொண்டு மாலையில் சுமார் 5 மணிக்கு ஆயில் Oil Installationக்கு வந்து சேர்ந்தேன்.

## 126) பிரம்மசாரிகளுக்கு வாடகைக்கு இடம் கிடைக்காது

பொதுவாக எந்த ஊரிலும் பிரம்மசாரிகளுக்கு வீடோ அல்லது தனியறைகளோ வாடகைக்குக் கிடைக்காது. (சென்னையில் உள்ள மேன்ஷன்களும் வொர்க்கிங் விமன் ஹாஸ்டல்களும் தற்போது அவர்களுக்கு புகலிடம் அளித்து வருகிறது.) அதுவும் ஆந்திராவில் எந்த ஊருக்குச் சென்றாலும் இதே நிலைதான். Bachelors ஐக் கண்டால் அவ்வளவு பயம். ஆனால் டாபா கார்டன்ஸ் (Daba Gardens) என்று அழைக்கப்பட்டு வந்த பகுதியில் திரு. சத்திய நாராயண ரெட்டி என்பார் தமக்குச் சொந்தமான வீட்டைத் தடுத்து பல அறைகளை உண்டாக்கி Bachelorsமீது இரக்கம் கொண்டு ஒரு ரூமிற்கு ரூபாய் 30 வாடகை வசூலித்து வந்தார்.

ஒரு அறையில் மூன்று பேர்தான் தங்கலாம். கடுமையான தண்ணீர்ப்பஞ்சம் நிலவி வந்ததால் குளிப்ப தற்கும் துணிகளைத் துவைத்துக் கொள்வதற்கும் ஒரு நபருக்கு வழங்கப்பட்டது 15லிட்டர் கொள்ளளவு கொண்ட இரும்பு வாளியில் தண்ணீர். இதற்குள் ஒரு நபர் தமது அனைத்து நீர்த்தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஒரு அறையில் நாலாவதுநபர் வீட்டுச் சொந்தக் காரரின் அனுமதியின்றி தங்கினால் அவர் வெளியேற்றப்

படுவார். என்மேல் இரக்கப்பட்டு திரு. சத்தியநாராயணன் தன்னுடைய அறையில் எனக்கு இடமளிப்பதாக ஒப்புக் கொண்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கார்த்திகேயன் ஒரு மாதம் தான் இந்த அறையில் தங்கலாம். அதற்குள் நீ வேறொரு இடத்திற்குச் சென்றிடவேண்டும் என்று கட்டளை யிட்டான். ஏதோ தற்போதைக்கு இடம் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் பல இன்னல்களைக் கடந்து இரவு 8 மணிக்கு அறைக்கு வந்து சேர்ந்தோம். (பல நாட்கள் எங்களுக்கு இருப்பிடத்திற்குத் திரும்புவதற்கான பேருந்து வசதி இருக்காது. சுமார் ஆறு கி.மீட்டர் தூரம் நடந்து வரவேண்டும்.)

## 127) அன்றாட வாழ்க்கையில் எதிர் கொண்ட இன்னல்கள்

காலை 8 மணிக்குள் Oil Installationக்குஐ சென்ற டைந்திட வேண்டும். ஸிம்ஹாசலத்திலிருந்து Corilஐத் தாண்டி அமைந்து உள்ள காஜுவாக்கா என்னும் ஊருக்குச் செல்லும் பேருந்தினைப் பிடிக்கவேணும். காலை ஏழேகால் மணிக்கு Daba கார்டன் நிறுத்தத்தில் பேருந்தில் ஏறவில்லை என்றால் 8 மணிக்கு அலுவல கத்தில் இருக்க முடியாது. நாங்கள் தங்கியிருந்த அறைக்கு மிக அண்மையில் அமைந்திருந்த ஹோட்டல் ஊட்டியில்தான் காலை உணவை உட்கொள்ள வேண்டும். சில நாட்கள் அங்கே தாமதம் ஏற்பட்டால் 4 கி.மீட்டர் தூரம் நடந்து சென்றுதான் வேறொரு பேருந்தினையோ அல்லது எண்ணெய் லாரியையோ பிடிக்க முடியும்.

## 128)சர்க்காருக்கு எண்ணை கம்பெனி நிர்வாஹம் தெரியாது.

ஒவ்வொரு நாளும் Coal Jetty Oil Installationக்குள்



காலை எட்டு மணிக்குள் இருக்கவேண்டும். 1963ஆம் ஆண்டு முதல் 1987 வரை 24 ஆண்டுகள் இரவு 8 அல்லது 10 மணிக்குத்தான் வீடு திரும்ப முடியும். நான் வேலையில் சேர்ந்தபோது எப்போது எண்ணெய்க் கப்பல் வரும் என்று தெரியாது. மாலை 5 மணிக்கு 60 ஆயில் வேகன்கள் யார்டுக்கு வந்து சேரும். ஒவ்வொரு நடைமுறை சிக்கலுக்கும் உரிய விடையை நாங்களே தேடிக்கண்டு பிடிக்க வேண்டும். மற்றைய ஆயில் கம்பெனி பணியாளர்கள் எங்களை மதிக்க மாட்டார்கள். அவர்கள் அனைவரும், சர்க்காருக்கு மண்ணெண்ணைய் கம்பெனியை திறம்பட நடத்தத் தெரியாது. உலகளவிலே பல நாடுகளில் திறம்பட ஆயில் கம்பெனிகளை நிர்வகித்து வரும் பர்மா ஷெல், Caltex, E.S.S.O.போன்ற கம்பெனிகளுக்கு இந்தியன் ஆயில் கம்பெனி ஒரு கொசு மாதிரி. இந்தியன் ஆயில் கம்பெனிக்கு விரைவில் மூடுவிழா நடத்தப்படும். ஆகையால் இப்போதே வேறு வேலையை தேடிச் செல்லுங்கள் என்றெல்லாம் எங்களை அச்சுறுத்தி வந்தனர்.

## 129) Gauger வேலையை விட்டு விலகிய சக ஊழியர்கள்

என்னுடன் Gauger பணிக்கு புவனேஷ்வரைச் சார்ந்த பாணிக்கிராஹி என்பவரும் மதுரையைச் சேர்ந்த குப்பு என்பவரும் வேலைக்குச் சேர்ந்தனர். அவர்களால் கடினமான இந்த வேலையில் நீடித்து இருக்க இயலவில்லை. வேலை செய்யும்போது பாணிக் கிராஹியின் கால் விரல் அவருடைய கவனக்குறைவால் துண்டிக்கப்பட்டது. குப்பு 150 அடி உயரமுள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்கின் மேல் ஏறும்போது மயக்கமுற்றான். ஆக இவ்விருவரும் வேலையை ராஜினாமா செய்துவிட்டு தத்தம் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

## 130) Gauger-இன் பணி என்ன?

Kerosene, Diesel, Light Diesel Oil, Furnace Oil ஆகியவை Coal Jetty Oil Installationஇல் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. Gauger பணியில் ஒவ்வொரு நாளும் 150 அடி உயரமுள்ள எண்ணெய் டேங்குகள் மீது ஏறி அந்தந்த டேங்குகளில் எத்தனையளவு எண்ணெய் உள்ளது என்பதை கணக்கிடவேண்டும். இதற்கு Gauging and Stock Accounting என்று பெயர். தெலுங்கு மொழி மட்டும் தெரிந்த வேலையாட்களுடன் அன்றாடம் பேசிப்பழக வேண்டும். எனக்கோ தெலுங்கு மொழி தெரியாது. இதனால் வேலை பார்க்கும்போது பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிட்டது. என்னுடன் தற்காலிக Gauger ஆகப் பணியாற்றிய திரு.வீராசாமி நாயுடு என்பார் உதவியுடன் தெலுங்கு மொழியில் பேசுவதற்காகப் பயிற்சியை மேற்கொண்டேன்.

## 131) திரைப்படங்களைப் பார்த்து தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டேன்.

வீராசாமி நாயுடுவுடன் தெலுங்கு மொழிப் படங்களைப் பார்த்து தெலுங்கு மொழியில் சொற்களை எவ்வாறு உச்சரிப்பது, அதற்கு என்ன பொருள் என்பதை அறிந்து கொள்ள முற்பட்டேன். விசாகப்பட்டினத்தில் உள்ளோர்க்கு பொழுதுபோக்கு சாதனங்கள் இரண்டுதான். ஒன்று தியேட்டர்களில் படம் பார்ப்பது, மற்றொன்று விசாகப் பட்டினம் சென்று கடற்கரைக்குச் சென்று உலாவுவது. Daba gardens பகுதியைச் சுற்றி சுமார் 10 சினிமா தியேட்டர்கள் அமைந்திருந்தன. சனிக்கிழமைதோறும் வீராசாமி நாயுடு விற்கும் சேர்த்து அனுமதிச்சீட்டு வாங்கியபிறகு தெலுங்குப் படங்களைப் பார்ப்பதுண்டு. ''லவகுசா'', ''அடுகுஜாடலு''



போன்ற படங்களை தெலுங்கு மொழி கற்றுக் கொள்வதற்காகப் பலமுறைப் பார்த்தேன். உதடுகள் அசைவதைக் கொண்டு என்ன வார்த்தை உச்சரிக்கப்படுகிறது, அதற்கு என்ன பொருள் என்பதை நாயுடுவுடன் தெரிந்து கொண்டு அதை மனதில் பதிய வைத்துக் கொண்டு தெலுங்கு மொழியைக் கற்றுக் கொண்டேன். சுமார் 6 மாத காலத்துக்குள் தொழிலாளர்களிடம் பேசிப்பழகுவதற்கான மொழிப் பயிற்சியைப் பெற்றேன். என்னால் தெலுங்கில் பேச, புரிந்து கொள்ளமுடியுமே ஒழிய, எழுதத் தெரியாது. சுந்தரத் தெலுங்கு பாரதியார் இந்த மொழியின்பால் ஈடுபாடு கொண்டுதான் ''சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப்போம்'' என்றார் போலும்.

***(தெலுங்குமொழி இனிமையானது. தியாகராஜர் உள்ளமுருகி பாடியது தெலுங்கு மொழியில்தான். நானும் என் குடும்பத்தாரும் தெலுங்கு மொழி திரைப்படங்களை இன்றும் விரும்பிப் பார்ப்போம். தெலுங்கு மொழி மென்மையானது. அதில் வல்லினச் சொற்கள் இருக்காது. சமஸ்க்ருதத்தோடு இணைந்த மொழியாகும் தெலுங்கு மொழி. ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும்பாலும் தெலுங்கு மொழியில் பாண்டித்யம் பெற்ற வர்களாகத்தான் ஒரு காலத்தில் திகழ்ந்து வந்தனர். பெரும்பாலான ஸம்ப்ரதாய நூல்கள் முதன்முதலில் தெலுங்கு எழுத்தில் தமிழ்ச் சொற்களோடு வெளிவந்தன. இன்றும் பல நூல்கள் தெலுங்கு மொழியில் தமிழ் சொற்றொடர்களோடு அச்சிடப்பட்டு உள்ளன. உதாரணத்திற்கு நம்மாழ்வாரின் திருவிருத்தம் உரை தெலுங்கு லிபியில் க்ரந்த முத்ராபக சபையாரால் 1902ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அதை 1947ஆம் ஆண்டு ஸ்ரீ.உ.வே. கோழியாலம் ரங்கநாதா சார்யர் ஸ்வாமி தமிழில் கைப்பிரதியாக எழுதி வைத்திருந்தார். இந்தப் பணியில் அவரை ஈடுபடுத்தியவர் புத்தூர் அட்வகேட் ஸ்ரீ.உ.வே. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி ஆவார். 1996ஆம் ஆண்டு எனது பதிப்பு***

*நிறுவ னமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயின் சார்பில் முதன்முதலாகத் தமிழில் இந்த நூல் அச்சிடப்பட்டது. இந்தப் பதிப்பினை நான் மேற் கொண்டதற்கு தெலு ங்கு மொழியின்பால் நான் கொண்ட ஈடுபாடும் ஒரு காரணமாகும். )*

## 132) பிணங்கள் எரியும் வெளிச்சத்தின் உதவி கொண்டு நடந்து செல்லவேண்டும்.

coal Jettyக்குச் செல்லும் பேருந்துகள் துறை முகத்தின் வழியாகத்தான் சுற்றிச் செல்லவேண்டும். 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புறச்சாலை என்று அமைக்கப்பட்டது. இந்தப் புறச்சாலையின் இருமருங்கிலும் Gandhi Grass எனப்படும் விஷச்செடிகள் அதிக அளவில் காணப்படும். இந்த வழிக்கு ''பிணம் செல்லும் பாதை'' என்று பெயர். பல நாட்கள் இரவு நேரங்களில் பணி முடிந்த பிறகு நடந்தே வீடு திரும்பவேண்டும். அமாவாசை மற்றும் தேய்பிறை நாட் களில் சாலையின் ஒரு மருங்கில் எரிந்து கொண்டிருக்கும் பிணங்களின் வெளிச்சத்தில் தான் சாலையில் செல்ல வேண்டும்.

## 133) Parthenium என்னும் விஷச்செடி

1960ஆம் ஆண்டு தொடங்கி நாடெங்கும் Parthenium எனப் படும் இந்த விஷச்செடி தரிசு நிலங்கள், சாலையின் இருமருங்குகள், இரயில்பாதையின் ஓரங்கள், பாழ்மனைகள் ஆகியவற்றில் காணப்பட்டன. இதை Feverfew, Congress Weed, Star weed, Carrot Weed, White cap, White top போன்ற பெயர்களையிட்டும் அழைத்து வந்தனர். இந்தச் செடி மனித உடலைத் தீண்டும் போது ஒருவிதமான ஒவ்வாமை (Allergy) ஏற்படும். ஆஸ்த்ரேலியா, மெக்ஸிகோ, க்யூபா, நார்த் அமெரிக்கா,



சௌத் அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து இந்த விஷச்செடி இந்தியாவிற்குள் நுழைந்தது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தானியம் மற்றும் பருப்பு வகைகளில் இந்த விஷச் செடியின் விதைகள் கலந்திருந் ததால் அவை இந்தியாவிற்குள் நுழைந்தன. இந்த செடியின் விதைகள் மிகமிக சிறிய அளவில் அமைந்திருக்கும். அவை மனிதனுடைய உடைகள், மற்றும் காலணி ஆகியவற்றின் வழியாகக்கூட இந்தியாவிற்குள் நுழைந்து இருக்கக்கூடும் என்று தாவரவியல் நிபுணர்கள் கருதுகின்றனர். விஞ்ஞா னிகள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளாலும் இந்தச் செடியை அழிக்க இயலவில்லை. மாறாக அவை 100 மடங்கு பெருகி நாடெங்கும் பரவியது. Parthenium செடியை புல்லோடு விலங்கினங்கள் சாப்பிடும்போது அவை அந்தச் செடியின் நச்சுத்தன்மையால் அவதியுற்றன. மற்றைய செடிகள் Parthenium செடிகள் வளரும்போது பக்கத்தில் வளர்ந்தால் அவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

## 134) ஒவ்வாமை எவ்வாறு ஏற்படுகிறது?

இந்த விஷச் செடிகள் ஒரு அடி உயரத்திலிருந்து 3 அடி உயரம் கொண்டவை. இவற்றின் பூக்கள் வெள்ளை நிறத்தில் அடர்ந்து காணப்படும். அவை தூய கதரால் நெய் யப்பட்ட குல்லாய் போல காணப்பட்டதால் இந்தச் செடியை Gandhi Grass என்ற பெயரிட்டு அழைத்து வந்தனர். ஆண்டு முழுவதும் அதிக அளவில் இனப் பெருக்கம் செய்யும் வகையைச் சார்ந்தது. இதன் விதைகள் கருப்பு நிறம் கொண்டவை. இந்த செடியின் இலை, பூக்கள், தண்டு ஆகியவற்றில் Parthenin என்னும் நச்சுப் பொருள் பல்வேறு விகிதங்களில் அமைந்துள்ளன. ஒவ்வாமையை உண்டு பண்ணும் caffeic acid, P-coumaric acid and anesic acid,

vanillic acid and -Hydroxy benzoic acid போன்ற நச்சுப் பொருள்களும் இந்தச் செடியில் அமைந்துள்ளன.

## 135) கலப்படத்திற்குப் பயன்படும் விஷச் செடியின் இலைகள்

சீதோஷ்ண நிலை இந்தச் செடிகள் மீது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. எல்லாக் காலங்களிலும் நீக்கமற எங்கும் காணப்படும். Parthenium இலைச்செடிகள் மணம்மிக்க தவனச் செடிகளோடு மாலையாகக் கட்டி விற்பனை செய்யும் “கலப்படம்” இன்றும் நடந்து கொண் டிருக்கிறது. 1959ஆம் ஆண்டு பூனாவில் வளர்ந்து வந்த இந்த செடிகள் அந்த ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் மற்றைய மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஒவ்வொரு மாநிலமாக இந்த விஷச்செடிகளின் விதைகள் இந்தியா முழுதும் சில ஆண்டுகளில் நிறைந்து காணப் பட்டன.

## 136) Contact dermatitis என்றால் என்ன?

Parthenium செடியின் இலையோ பூவோ மனித உடலில் படும்போது அது Contact dermatitis என்னும் தோல் எரிச்சலை உண்டு பண்ணுகிறது. அந்த இடத்தை விரல்களால் தீண்டும்போது அந்த இடத்தில் கொப்பளங்கள் உண்டாகும். இது ஏற்படுத்திய ஒவ்வாமையினால் விசாகப் பட்டினத்தில் பல தொழிலாளிகள் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். எவ்வளவோ முயன்றும் இந்த விஷச்செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. சிலர் இந்த ஒவ்வாமை ஏற்படுத்த விளைவினால் தற்கொலைகூட செய்து கொண்டனர்.



## 137) இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

1956ஆம் ஆண்டு இந்தியப் பொருளாதாரக் கொள்கையில் புதியதொரு திருப்பம் நிகழ்ந்தது. இந்தி யாவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், அதற்கு அடிப்படையாய் அமைந்துள்ள பெட்ரோலியப் பொருள் களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தை அரசே மேற் கொள்ளவேண்டும் என்பதே அது. மத்திய அமைச்சர வையில் பெட்ரோலியத்துறை அமைச்சராகப் பணியாற்றி வந்த திரு. K.D. மாளவ்யாவின் பெருமுயற்சியால் 1959ஆம் ஆண்டு இந்தியன் ஆயில் நிறுவனம் நிறுவப்பட்டது.

## 138) பொன்விழாக் காணும் இந்தியன் ஆயில் நிறுவனம்

2009ஆம் ஆண்டு இந்தியன் ஆயில் நிறுவனத்தின் பொன் விழா கொண்டாடப்பட்டது. 1959ஆம் ஆண்டு இந்த நிறுவனம் தொடங்கப்பட்டபோது இதன் மதிப்பு ரூபாய் 45 கோடி யாகவும், விற்பனை 78 கோடியாகவும் இருந்தது. 2009-ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தின் விற்பனை வருமானம் 2,85,337 கோடியாகும். தொடங்கப்பட்ட காலத்தில் இருந்ததைவிட 3000 மடங்கு இந்தியன் ஆயில் நிறுவனம் வளர்ச்சி பெற்றுள்ளது. முழுக்க முழுக்க அரசாங்கத்தின் பங்குகளோடு 12 கோடி மூலதனத்தில் இந்த நிறுவனம் 1959ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

## 139) ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்

1959ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டுவரை திரு. நிஜலிங்கப்பா இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சேர்மன்

பணியில் இருந்து வந்தார். நான் இந்த நிறுவனத்தில் சேர்ந்தபோது திரு. P.A. கோபாலகிருஷ்ணன் சேர்மனாகப் பணியாற்றி வந்தார். 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் U.S.S.R. என்றழைக்கப்பட்டு வந்த ரஷ்யாவுடன் டீசல் மற்றும் மண்ணெண்ணை, விமானத்தில் உபயோகிக்கப்படும் A.T.F. ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்தியப் பொருளாதாரம் நலிவுற்ற நிலையில் இருந்த அந்தக் கால கட்டத்தில் மேலை நாடுகளிலிருந்து டாலர்களைக் கொடுத்து பெட்ரோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இயல வில்லை. ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்திய நாணய மதிப்பிலேயே பணம் செலுத்தலாம் என்ற ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரான தடைகளை பல்வேறு வடிவங்களில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டு வந்தன. அவற்றில் ஒன்று அவ்வப் போது இந்தியாவில் பெட்ரோலியப் பொருள்களுக்கு ஒரு செயற்கையான தட்டுப்பாட்டினை உண்டாக்கு வது. பர்மாஷெல், ESSO போன்ற எண்ணெய்க் கம்பெனிகள் நாட்டிற்கு வேண்டிய அளவு பெட்ரோலியப் பொருள்களை இறக்குமதி செய்யாது, அதற்கான தட்டுப்பாட்டை வேண்டு மென்றே இந்தியாவில் உருவாக்கி வந்தன. குறிப்பாக 1963ஆம் ஆண்டு தொடங்கி 1965ஆம் ஆண்டு ஈறாக இவ்வாறாக, செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட பெட்ரோலியப் பொருள்களின் தட்டுப்பாட்டை இந்தியன் ஆயில் நிறுவனம் முறியடித்தது.

முதலாம் ஆண்டின் முடிவில் இந்த நிறுவனத்தின்



விற்பனை 32,073 கிலோ லிட்டராக இருந்தது. இது நாட்டின் பெட்ரோலியப் பொருள்களின் விநியோகத்தில் 0.5 சதவிகிதமாகும். 1960ஆம் ஆண்டு ரஷ்ய கம்பெனியான Soyuzneftee xport என்ற நிறுவனத்துடன் நான்கு ஆண்டு களுக்கு 1.5 மில்லியன் டன்கள் டீசல், கெரசின் மற்றும் A.T.F. ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## 140) முதல் எண்ணெய்க்கப்பல் பாம்பே துறை முகத்தை வந்து அடைந்தது

ரஷ்யாவில் இருந்து இந்த ஒப்பந்தத்தின்படி 11,390 டன் டீசலை ஏற்றிக் கொண்டு M.V.Uzhgorod என்ற எண்ணெய்க் கப்பல் 17-8-1960ஆம் நாள் பாம்பே துறை முகத்தை வந்தடைந்தது. 1961ஆம் ஆண்டு Antop Hill (பாம்பே), வெலிங்டன் தீவு (கொச்சி), விசாகப்பட்டினம் (ஆந்திரா) ஆகிய இடங்களில் இருந்து ராணுவத்துக்குச் சொந்தமான எண்ணெய்க்கிடங்குகள் இந்தியன் ஆயில் வசம் ஒப்படைக்கப்பட்டன.

## 141) Import of Mobil brand Lubricants

1962ஆம் ஆண்டு ஜனவரி முதல்நாள் அஸ்ஸாம் மாநிலத்தில் கௌஹாத்தியில் முதல் எண்ணெய்ச் சுத்தி கரிப்பு சாலை தொடங்கி வைக்கப்பட்டது. 1962ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாள் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் பணி யாளர்கள் எண்ணிக்கை 665 ஆக இருந்தது. நான் 1963ஆம் ஆண்டு மே 4ஆம் நாள் இந்த நிறுவனத்தில் சேர்ந்தபோது எனக்கு அளிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 1167 ஆகும். 1962ஆம் ஆண்டு அமெரிக்காவில் புகழ்பெற்று விளங்கிய Mobil பெட்ரோலியம் கம்பெனியோடு Lubricants

இறக்குமதிக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்படி இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு வகை Lubricants, 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விசாகப்பட்டினத்தை வந்தடைந்தது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட Lubricants மூலம் அந்தத் துறை சார்ந்த பல பயனுள்ள செய்திகளை நான் அறிந்து கொண்டேன். பின்வரும் காலங்களில் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் Technical services என்றொரு துறையுடன் நான் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன். அதற்கு அடிப்படையாய் அமைந்தது 1963ஆம் ஆண்டு Mobil Petroleum Products இறக்குமதி செய்யப்பட்டபோது நான் பெற்ற அனுபவமே. 1963ஆம் ஆண்டு மே 10ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள Koyali எண்ணெய் சுத்திகரிப்பு சாலைக்கு மாண்புமிகு பாரதப்பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

## 142) Sri. J.V.K.Rao- The ever remembered Branch Manager.

சென்னையில் அமைந்திருந்த Southern Branch Office-இல் ப்ராஞ்ச் மேனேஜராகப் பணியாற்றி வந்தவர் திரு. J.V.K.ராவ். விசாகப் பட்டினத்தில் பணியாற்றி வந்த Sales Officers மற்றும் இதர அதிகாரிகள் J.V.K.ராவ் உடன் தொலைபேசியில் உரையாடும்போது நின்று கொண்டேதான் பேசுவார்கள். அத்துணை மரியாதை! அவர் தொலை பேசியில் என்ன சொல்வாரோ பிறர் கேட்க முடியாது. ஆனால் “Yes Sir, I will do it Sir, It will be definitely done Sir” போன்ற வார்த்தைகளை மட்டுமே நாங்கள் கேட்க முடியும். தொலை பேசி உரையாடல் முடிந்தவுடன் கர்ச்சீப்பால் முகத்தை நன்றாகத் துடைத்துக் கொண்டு நீர் அருந்திய பிறகுதான் சமநிலைக்கு வருவார் அந்த அதிகாரி. சிறந்த



நிர்வாகத்திறமை படைத்த திரு.J.V.K. ராவ் போன்றவர்கள்தான் இந்தியன் ஆயில் கம்பெனியின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர்கள்.

## 143) திரு. T.P. ராகவனுக்கு இழைக்கப்பட்ட அநீதி

1960ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டுவரை இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணிசெய்தவர்களுடைய உழைப்பினால் தான் இந்தக் கம்பெனிக்கு மிக ஆழமான, அகலமான அடித்தளம் அமைக்கப் பட்டது. அன்று மட்டும் அவர்கள் அத்தகைய உழைப்பை பிரதி பலனைப் பாராது தந்திராவிட்டால், இந்த நிறுவனம் இன்று மாபெரும் வளர்ச்சியை அடைந்திருக்க இயலாது. மேஜர் திரு. குப்புசாமி 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் பணி ஓய்வு பெற்றார். அப்போது பணியில் இருந்த Assistant Installation Manager திரு. சந்திரசேகரா Installation Manager-உடைய பணிகளைத் தற்காலிகமாக நிர்வஹித்து வந்தார். தனக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற கனவும் கண்டு கொண்டிருந்தார். திரு. J.V.K. ராவுக்கும், சென்னையில் Assistant Operations Manager -ஆக விளங்கி வந்த திரு. T.P.ராகவனுக்கும் *(இவர்தான் என்னை Gauger பதவிக்கு தேர்வு செய்தவர் என்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன்.)* ஏற்பட்ட மோதலின் விளைவாக திரு. ராகவனை Additional Assistant Installation Manager ஆகப் பணிமாற்றம் செய்தார் J.V.K .ராவ்.

விசாகப்பட்டினம் Installation வளாகத்தினுள்ளே இரண்டு குடியிருப்புப் பங்களாக்கள் உண்டு. அதில் A-பங்களாவில் Installation Manager -உம், B -பங்களாவில் Assistant Installation Manager -உம் குடியிருந்து வந்தனர். B -பங்களாவில் இருந்து அலுவலகம் 100 அடி தூரத்தில்தான்

இருந்தது. ஒருநாள் திரு. T.P. ராகவன் காலை 8.05க்கு அலுவலகம் வந்து சேர்ந்தார். திரு. J.V.K.ராவின் தூண்டுதலின் பேரில் அறிவிப்புகள் ஒட்டப்படும் தகவல் பலகையில் திரு. T.P. ராகவனைக் குறித்த கீழ்க்கண்ட மெமோ டைப் செய்யப்பட்டு ஒட்டப் பட்டிருந்தது.

**"It is Found that you are coming late to office by 5 minutes every day. This type of indiscipline cannot be tolerated. Explain why disciplinary action cannot be taken against to you"**

## 144) நீதி கேட்டு நான் நடத்திய முதல் போராட்டம்

இதைப் பார்த்தவுடன் திரு. ராகவனுக்கு வருத்தம் ஏற்பட்டதோ இல்லையோ எனக்கு இந்த மெமோ தாங்க முடியாத மன வருத்தத்தை அளித்தது. அப்போது எனக்கு வயது 24. அந்த நிறுவனத்தின் கடைநிலை ஊழியன். ஆயினும் அநீதி இழைப்பதைக் கண்டு என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. நேரே Installation Manager -சந்திரசேகராவிடம் சென்று "ஒரு உயர் அதிகாரியை இவ்வாறு அவமானப்படுத்துகிறீர்களே! இது தகுமா?" என்று கோபத்துடன் வினவினேன்.

அதற்கு அவர் "Mr. Chari you have no right to talk on such matters. These are all done as directed by my superiors. You are too young, do not spoil your future and you go do your work" என்று என்னை அச்சுறுத்தினார். இதற்கு நான் பயப்படவில்லை. இந்த நிகழ்ச்சி தொடங்கி இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பல்வேறு போராட்டங்களைச் சந்தித்து இருக்கிறேன். அநீதி இழைக்கப்படும்போது எத்துணை



உயர்பதவியில் ஒருவர் இருந்தபோதும் அவரிடம் நீதி கேட்டுப் போராடியுள்ளேன். ***(தற்போது பத்திரிகை வாயிலாக நீதிக்குப் போராடும் இந்தச் செயல்களுக்கு வித்து என்னுடைய 24 வயதிலேயே விதைக்கப்பட்டது.)***

## 145) திரு. ராஜேந்திரா புது I.M. ஆனார்.

தற்போது ஆட்சி மாற்றங்கள் ஏற்படும்போது நிர்வாகப் பணியில் இருக்கும் அதிகாரிகள் மாற்றப்படுவதுபோல இந்தியன் ஆயில் கம்பெனியிலும் சில நிகழ்ச்சிகள் அரங்கேறின. திரு. J.V.K.ராவ் Branch Manager பதவி யிலிருந்து பணி மாறுதல் பெற்று பாம்பே தலைமையலு வலகத்தில் operations Managerஆகப் பொறுப்பேற்றுக் கொண்டார். திரு.T.P. ராகவன் சென்னை ப்ராஞ்ச் ஆபிஸில் மீண்டும் Assistant Operations Managerஆக பணியில் அமர்ந்தார். திரு. சந்திரசேகராவிற்குப் பணி உயர்வு கிடைக்க வில்லை. மாறாகக் கல்கத்தாவில் Budge Budge Installation-இல் Assistant Installation Managerஆக மாற்றல் உத்தரவு பெற்றார். விசாகப்பட்டினம் எண்ணெய்கிடங்கிற்கு திரு.K. ராஜேந்திரா புதிய Installation Managerஆக நியமிக்கப்பட்டார்.

## 146) இந்தியன் ஆயில் நிறுவனமும், ஒட்டு மாமரமும்

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பல எண்ணெய் கம்பெனி களில் இருந்து வந்தவர்கள் பலர் உயர் பதவிகளில் பொறுப்பு வகித்து வந்தனர். இந்தியன் ஆயிலுக்கென்று ஆரம்பகால கட்டத்தில் தனி அதிகாரிகள் பணியில் அமர்த்தப் படவில்லை. Deputation எனப்படும் மற்றொரு நிறுவனத்தில் இருந்து இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு வந்து

ஆரம்பகாலத்தில் பணியில் அமர்ந்தவர்கள் ராணுவ அதிகாரிகள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ப்ரிகேடியர் லூத்ரா, மேஜர் குப்புசாமி, Col. P.N.Sapru போன்றோர். அதன் பிறகு மத்திய அரசு மற்றும் மாநில அரசுப் பணிகளில் இருந்த ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் P.K.Samal, திரு.P.A.கோபால கிருஷ்ணன், P.R. Nayak ஆகியோர். ESSOவிலிருந்து T.குமரன், M.A.Anand, பர்மா ஷெல் லிருந்து திரு. கமலஜித் சிங் ஆகியோரை திரு. கோபாலகிருஷ்ணன் தேர்வு செய்து அவர்களை உயர் பதவிகளில் அமர்த்தினார்.

1963-65 கால கட்டத்தில் ESSO(Eastern Standard Stanvac Oil Company), Caltex (California Texas Oil Company), Burma Shell, ஆகிய ஆயில் நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது பதவியை விட்டு விலகியோரே அதிக அளவில் இந்தியன் ஆயில் கம்பெனியில் பணி நியமனம் பெற்றனர்.*(மேலை நாட்டு எண்ணெய்க் கம்பெனிகள்* **Hire and Fire** *என்ற மேலாண்மைக் கொள்கையின்படி திறமைமிக்க அதிகாரிகளிடம் அதிக அளவில் வேலைப்பளுவைச் சுமத்தி மூன்றுபேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவர் மூலம் பெற்றுக் கொள்வர். 2 ஆண்டுகள் அத்தகையோரைச் சக்கையாகப் பிழிந்துவிட்டு ஒருநாள் எந்த முகாந்திரமும் இல்லாமல் அவர்களை பணி நீக்கம் செய்து விடுவார்கள். அப்போதெல்லாம் "யூனியன்" என்ற பேச்சுக்கே இடமில்லை. இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பெற்றவர்கள் வேறு ஏதாவது ஒரு தொழிலை நாடித்தான் செல்லமுடியும். இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணி செய்ய அதிகாரிகள் தேவை என்ற நிலையில் மற்றைய எண்ணெய்க் கம்பெனியிலிருந்து வந்தவர்களே அதிகம்.)*

Accounts துறையில் AGS Officeலிருந்து வந்தவர்களே அதிக அளவில் பணி புரிந்து வந்தனர். அரசு



நிறுவனங்களுக்கே உரிய தன்மையாகிய Escalation of Decision making **அதிகார வர்க்கத்தின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.** ***(எந்த முடிவையும் நான் எடுக்க மாட்டேன். மேலதிகாரிகள் எடுக்கட்டும் என்ற எண்ணங்கொண்ட அதிகாரிகள் உடனடியான தீர்வினையோ அல்லது முடிவுகளையோ எடுக்கமாட்டார்கள். இது அரசு நிறுவனங்களின் தனித்தன்மையாகும்.)***

வியாபார நோக்கில் செயல்பட்டு வந்த மற்றைய எண்ணெய் கம்பெனிகளின் வளர்ச்சிக்கு இணையாக நடைபோட முடியாமல் இந்தியன் ஆயில் நிறுவனம் தவித்துக் கொண்டிருந்தது. என்னைப் போன்றோர் எந்த எண்ணெய்க் கம்பெனியிலும் பணிபுரியா விட்டாலும் அடிப்படைப் பொது அறிவின் உதவி கொண்டு பல்வேறு நடைமுறைச் சிக்கல் களைத் தீர்த்து வந்தோம்.

ஒரு ஒட்டு மாமரத்தில் பல்வேறு கிளைகளில் பல வகை மாம்பழங்கள் பழுப்பதுபோல இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பல்வேறு எண்ணெய்க் கம்பெனிகளின் கலாச்சாரப் பின்னணி ஒன்று சேர்ந்து ஒட்டுமாமரம்போல் புதியதொரு company cultureஐத் தோற்று வித்தது. இதுதான் இந்தியன் ஆயில் கம்பெனி நிறுவனத்தின் தனித் தன்மையாகும்.

## 147) Haldia துறைமுகத்தின் தேவைக்கேற்ப விசாகப்பட்டினத்தில் எண்ணை இறக்கப்பட வேண்டும்.

நான் பணியில் சேர்ந்தபோது, 10 நாட்களுக்கு ஒருமுறை ரஷ்யாவிலிருந்து டீசல், மற்றும் மண்ணெண் ணெய்க் கப்பல்கள் விசாகப்பட்டினம் துறைமுகத்தை வந்தடையும். ரஷ்யா மிகப் பரந்த பரப்பளவு கொண்ட நாடு.

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் வட கொரியாவுக்கு அருகில் Vladivostok என்ற துறைமுகத்திலிருந்தும், ரஷ்யாவின் மேற்குப்பகுதியில் கருங்கடலில் உள்ள Odessa துறை முகத்திலிருந்தும் இந்த எண்ணெய்க் கப்பல்கள் விசாகப் பட்டினத்தை வந்தடையும். ரஷ்யக் கப்பல்களில் கேப்டன் மற்றும் Chief Officer ஆகிய இருவருக்கு மட்டுமே கொஞ்சம் கொஞ்சம் ஆங்கிலம் தெரியும். மற்றையோரிடம் சைகை மொழியில்தான் கருத்துப் பரிமாற்றம் கொள்ளவேண்டும். பெரும்பாலும் இந்தக் கப்பல்கள் 18,000 டன் எடை கொண்ட பெட்ரோலியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வரும். அப்போது அந்தக் கப்பலின் அமிழ்ந்த ஆழம் 27அடியாக இருக்கும். Lightering எனப்படும் சுமை குறைக்கும் பணியை விசாகப்பட்டினத்தில்தான் மேற்கொள்ளவேண்டும்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினம் தவிர வேறு எங்கும் எண்ணெய்க் கிடங்குகள் கிடையாது. மேலும் இதுபோன்ற எண்ணெய்க்கப்பல்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி Two Ports discharge என்ற அடிப்படையில் எண்ணெய்ச் சுமையை கப்பல்கள் ஏற்றிவரும். கல்கத்தாவில் இரண்டு துறைமுகங்கள் உண்டு. அவை Haldia மற்றும் Budge Budge துறைமுகங்கள் ஆகும். இவை Hooghly ஆற்றின் கரையில் அமைந்துள்ளன. Hoogly நதியில் நீரின் ஓட்டத்தைப் பொறுத்தே கப்பல்கள் இந்தத் துறைமுகங்களுக்குள் செல்ல முடியும். ஒரு மாதத்தின் வளர்பிறையின்போது இந்த ஆற்றின் ஆழம் 9 மீட்டர்கள் இருக்கும். அதன்பிறகு படிப்படியாய் அவை குறைந்து சில நாட்கள் 6 மீட்டர் ஆழத்திற்கு இறங்கிவிடும். விசாகப்பட்டினத்தில் கப்பல் வந்தடைந்த நாளிலிருந்து ஹால்டியா சென்றடையும் நாளைப் பொறுத்து



அதற்குத் தேவையான எண்ணெய்ச் சுமையைக் குறைக்க வேண்டும்.

மாதத்தின் 30 நாட்களுக்கும் அந்த ஆற்றின் ஆழத்தை Draft forecast எனப்படும் துறைமுக நிர்வாஹத்தின் அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டே விசாகப் பட்டினத்தில் இந்தப் பணியை மேற்கொள்ளவேண்டும். விசாகப்பட்டினத்தில் கப்பல் உப்புநீரில் நிற்கும்போது அதன் அமிழ்ந்துள்ள ஆழம் மற்றும் ஹால்டியா துறைமுகத்தில் சுத்தநீரில் அதன் ஆழம் (Draft) ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு விசாகப் பட்டினத்தில் தேவைப்பட்ட அளவு எண்ணெய்யை இறக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யவில்லையானால், இங்கிருந்து செல்லும் கப்பல்கள் பல நாட்கள் ஹால்டியா வெளித் துறைமுகத்தில் நிற்க நேரிடும்.

இவ்வாறு எண்ணெய்க்கப்பல்கள் வெளித்துறை முகத்தில் நிற்க நேரிடும்போது ஒன்று Demurrage எனப்படும் அபராதக் கட்டணம் மற்றும் தேவைக்கு ஏற்ப West Bengal மற்றும் பீஹார் ஆகிய மாநிலங்களுக்குப் பெட்ரோலியப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாது. அரசியல் ரீதியான சில சங்கடங்களை மத்திய அரசு எதிர் கொள்ள நேரிடும். இதனால் விசாகப்பட்டினத்தில் சரியான அளவில் கல்கத்தா விற்குச் செல்லும் கப்பல் அதற்குரிய draft-உடன் அனுப்பி வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு கப்பலின் வருகைக்கும், மற்றொரு கப்பலின் வருகைக்கும் இடையே சில சமயம் அதிக இடைவெளி இருக்காது. வேண்டிய அளவிற்கு டீசலோ, அல்லது கெரசினோ விசாகப்பட்டினத்திலிருந்து வெளியேற்ற முடியாது. அதுபோன்ற சமயங்களில் எனது சமயோசித முடிவுகளால் பெரும் ஆபத்துக்களைத் தவிர்த்துள்ளேன்.

## 148) Customs and Excise துறைகளின் செயல்பாடு

இந்தியாவில் உற்பத்தியாகும் எந்தப் பொருளுக்கும் விதிக்கப் படும் வரிக்கு Excise duty அல்லது கலால் வரி என்று பெயர். அவ்வாறே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரிக்கு Customs duty என்று பெயர். இந்தத் துறைகளுக்கு என தனி உயர் அதிகாரிகள் உண்டு. அவர்கள் முறையே Excise Collector and Customs Collector என்று அழைக்கப் படுவர். விசாகப்பட்டினத்தில் உள்ள எண்ணெய்க்கிடங்குகள் அனைத்திற்கும் இந்த இரண்டு துறையிலிருந்து லைசன்ஸ் பெற்றிருக்க வேண்டும். இவற்றில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருள்களுக்கு உரிய வரியை மொத்தமாகக் கட்ட வேண்டும். அவ்வாறு வரி கட்டியபிறகே அந்த எண்ணெய்யை விற்பனை செய்ய முடியும். ஆனால் உள்ளூர் எண்ணெய் சுத்திகரிப்பு சாலையான CORIL-இருந்து பெறப்படும் பெட்ரோலியப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருள் களோடு ஒரே கிடங்கில் இருந்தாலும் அவற்றை விற்றபிறகு வரி செலுத்தி னால் போதும். ஆனால் அதற்குரிய தொகை Exciseதுறை கணக்கில் இருக்கவேண்டும்.

ஒரே எண்ணெய்க்கிடங்கில் பல்வேறு அடுக்குகளில் Customs Bonded stocks and Excise bonded stocks இருக்கும். தினந்தோறும் Customs Preventive officer ஆன Oil officer வந்தபிறகுதான் அவரிடம் உள்ள சாவியை வாங்கி எண்ணெய்க்கிடங்குகளின் வால்வுகளைத் திறக்கமுடியும். காலையில் ஏழரை மணிக்கெல்லாம் ஆயில் ஆபீஸர் வீட்டிற்குக் கார் அனுப்பப்பட வேண்டும். அவர் 8 மணிக்கு எண்ணெய்க் கிடங்கிற்கு வந்து சேருவார். அவர் வந்தபிறகு



அவரிடமிருந்து சாவியை வாங்கி Tanks எனப்படும் எண்ணெய்க் கிடங்கில் பூட்டப்பட்டிருக்கும் சங்கிலியோடு கூடிய பூட்டுக்களைத் திறக்க வேண்டும். அதுவரையிலும் எந்த எண்ணெய் லாரியையும் நிரப்ப இயலாது. இது சட்டம். ஆனால் நடைமுறையில் சாவி என்னிடம்தான் இருக்கும். ஆயில் ஆபீஸர் ஏழரை மணிக்கு அனுப்பப்படும் காரில் தன்னுடைய சொந்த வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு, அதாவது தனது பிள்ளைகளைப் பள்ளியில் விட்டுவிட்டு, மனைவியை கடைத்தெருவில் இறக்கிவிட்டு மெதுவாக வருவார்.

## 149) Customs Officer கௌஸுடன் நிகழ்ந்த மோதல்

பண்டைய காலத்தில் மன்னர்கள் அரசவையில் மந்திரிகளை நோக்கி, மாதம் மும்மாரி பொழிகிறதா? ப்ரஜைகள் நலமுடன் இருக்கிறார்களா? என்று கேட்பதுபோல் தமிழில் (பெரும்பாலும் தமிழர்களே ஆயில் ஆபிஸர்களாக இருந்து வந்தனர்.) "என்ன சாரி. எல்லாம் சுமுகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறதா? Any Problem" என்று கேட்டுவிட்டு எங்கேயோ சென்று விடுவார். இவர்கள் வீட்டிற்கு கார் சாயந்தரம் அனுப்பப்படுமேயொழிய Coal jetty எண்ணெய்க் கிடங்கிற்கு வரமாட்டார்கள். இவ்வாறு ராஜபோகத்தை அனுபவித்துக் கொண்டு இருந்த ஆயில் ஆபிஸர் கௌஸ் என்பாரைப்பற்றி 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருநாள் அவருடைய உயர் அதிகாரியிடம் புகார் ஒன்றைச் கொடுத்தேன். அவ்வாறு புகார் கொடுத்ததற்கான காரணம் ஒரு எண்ணெய்க் கப்பலின் இறக்குமதியின்போது நடந்த நிகழ்ச்சியேயாகும். London Pride என்ற ஒரு கப்பல் 15000 டன் Furnace Oil எனப்படும் கப்பல்கள் மற்றும்

உருக்காலைகளுக்கான எரிபொருள்களுடன் விசாகப் பட்டினத்திற்கு வருகை தந்தது. இந்த அளவு எண்ணெயை இறக்குவதற்கு சுமார் 5 நாட்களாயின. தினந்தோறும் மாலை ஆயில் ஆபிஸரான திரு. கௌஸ் தம்முடைய யுனிபார்மோடு கப்பலின் Chief Officer அறையில் மது அருந்திக் கொண் டிருப்பார்.

ஒருநாள் Chief Officer-ஐ பார்க்கச் சென்ற என்னை "ஏய் பாப்பாரப் பயலே! அந்த சோடாவை இங்கே எடுத்துவா, இல்லாவிட்டால் உன்னைப் பந்தாடி விடுவேன்" என்று என்னை ஏவினார். நான் ஒன்றும் சொல்லாமல் கீழே இறங்கி விட்டேன். அன்றிரவே ஒரு வெற்றுத்தாளில் London Pride கப்பலில் ஆயில் ஆபிஸர் கௌஸ் என்னைத் தரக்குறைவாகப் பேசிவிட்டார், அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விசாகப்பட்டினம் Assistant Customs Collector-க்கு புகார் மனு ஒன்றை எழுதித் தபாலில் சேர்த்து விட்டேன். திரு. கௌஸிற்கு கலெக்டர் ஆபிஸில் எதிரிகள் பலர் இருந்தனர். அவருடைய உயர் அதிகாரிகள் இவரை எப்படி மடக்குவது என்ற சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தனர். என்னுடைய புகார் மனு கிடைத்தவுடன் திரு. கௌஸ் தற்காலிகப் பணி நீக்கம் (Suspend) செய்யப்பட்டார். இந்தச் செய்தி கலெக்டர் ஆபிஸிலும், இந்தியன் ஆயில் நிறுவனத்திலும் எதிரொலித்தது.

## 150) இந்த நிகழ்ச்சி மூலம் நான் கற்றுக் கொண்ட பாடம்

Installation Manager திரு. ராஜேந்திரா என்னைக் கூப்பிட்டு, "நீ இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணி புரிபவன். நீ எந்த அரசு அதிகாரிக்கும் நேராக எந்தப் புகார் மனுவையும் அளிக்க முடியாது. நிறுவனம் சம்பந்தப்பட்ட இந்த நிகழ்ச்சியை நீ என்னிடம் சொல்லி இருக்க வேண்டும். இதன் விளைவுகளைப் பற்றி உனக்குத் தெரியுமா? Customs-அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஆயில் கம்பெனிப்பணிகள் முடங்கிவிடுமே" என்றெல்லாம் கூறி என்னுடைய செயலைத் தவறு என்று குறிப்பிட்டார். அவரிடம் "அநீதி இழைக்கப்படும்போது என்னால் பொறுத்துக் கொள்ள இயலாது. அதனால்தான் அப்படிச் செய்தேன். இதன்விளைவாக நிறுவனத் திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாவண்ணம் நான் பார்த்துக் கொள்வேன்" என்று கூறினேன். ஆனால் என்னுடைய செயலை Customs Collector ஆபிஸில் உள்ள பெரும்பாலோனார் வரவேற்ற தோடு மட்டும் அல்லாமல் என்னுடைய செயலையும் பாராட்டினர். ஒரே செயலுக்கு என்மீது கற்களும் பூச்செண்டு களும் வீசியெறியப்பட்டன.



திரு. கௌஸின் பணிநீக்கத்தை அடுத்து திரு. ஸ்ரீனிவாஸன் என்பார் ஆயில் ஆபிஸராக நியமிக்கப்பட்டார். என்னைக் கண்டால் அவருக்கு பயம். Car misuse என்னுடைய இந்தப் புகாரால் நிறுத்தப்பட்டது. காலையி லிருந்து மாலைவரை ஆயில் ஆபீஸர் திரு. ஸ்ரீனிவாஸன் Installation உள்ளேயே இருந்தார். சில நாட்கள் தம்முடைய கெடுபிடியைக் காட்டி வந்தார். ஒருநாள் மாலை அவரை சந்தித்து நடந்தவற்றை விவரித்துச் சொன்னேன். அதற்குப் பிறகு திரு.ஸ்ரீனிவாஸனும் நானும் உற்ற நண்பர்களாக ஆனோம்.

அதன்பிறகு அவர் எந்த விஷயத்திலும் குறுக்கீடு செய்யவில்லை. நாங்கள் எவ்வித அச்சமுமின்றி வேலையை மேற்கொண்டோம். இவ்வாறு சகஜ நிலை ஏற்பட்டதை

திரு.ராஜேந்தி ராவிடம் நான் தெரிவித்தேன். அவர் என்னை மீண்டும் எச்சரித்து வெளி நபர்கள் மீது நிறுவன சம்பந்தப் பட்ட வேலைகளைச் செய்யும் போது புகார்மனு அளிக்கக் கூடாது என்ற அறிவுரையை வழங்கினார். என் வாழ்க்கையில் நான் கற்றுக்கொண்ட மிகச்சிறந்த பாடம் இது.

## 151) குடும்பம் மன்னார்குடிக்குக் குடிபெயர்ந்தது

நான் விசாகப்பட்டினத்திற்கு வந்துசேர்ந்தபிறகு, தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடிக்கு எங்கள் குடும்பம் குடிபெயர்ந்தது. எனது தந்தையார் மன்னார்குடி மூன்றாம் தெருவில் வசித்து வந்த வக்கீல் ராஜப்பா முதலியாரிடம் வக்கீல் குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்தார். களப்பாளில் புகழ்பெற்று விளங்கிய குமரப்ப முதலியாரின் அண்ணன் இவர். இவருடைய குமாரர் முத்தைய்யா முதலியார். திரு.ராஜப்பா முதலியாரை பக்கவாத நோய் தாக்கியதால் அவரால் நீதி மன்றத்திற்குச் செல்ல இயலவில்லை. அந்த ஊரில் மூன்றாம் தெருவின் மேற்குப் பகுதியில் District Munsif Court செயல்பட்டு வருகிறது. திரு. முத்தைய்யா முதலியார் தனது தந்தையார் பார்த்து வந்த வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருந்தார். நிறைந்த பண்பாளர். சைவ சமயத்தில் தீவிரப் பற்றுக் கொண்டிருந்த போதிலும் எனது தந்தை யாரிடம் வைணவம் தொடர்பாக தனக்கு ஏற்படும் ஐயப்பாடு களுக்கான தெளிவினை அவ்வப்போது பெற்று வந்தார்.

இவர்களுக்குக் களப்பாளுக்கு அருகில் 10 வேலி நஞ்சை நிலமும், புஞ்சைத் தோட்டங்களும் இருந்தன. அவ்வப்போது களப்பாளுக்குச் சென்று மேற்பார்வையிட்டு வருவார் என் தந்தையார். கிராம வரவு செலவுகளைக் கண்காணிப்பதற்கு தியாகராஜ முதலியார் என்பவர் மணியகாரராக இருந்து வந்தார். கிராமங்களில் மணியகாரர் எனப்படும் மணியார்தான் முதலாளிக்குப் பதிலாக அனைத்து முடிவு களையும் எடுக்க வேண்டும். நிலங்களில் கிடைக்கும் பல்வேறு பலன்களை முதலில் அனுபவிப்பவர் இவரே. குறிப்பாகப் புஞ்சைத் தோட்டங்களில் விளையும் புளி, தென்னை, மாங்காய், உயர்ரக சாப்பாட்டு நெல் ஆகிய வற்றின் முதல் பயனைப் பெறுபவர் இவரே. அவ்வப்போது மாட்டு வண்டியில் இவற்றை ஏற்றிக் கொண்டு மன்னார் குடியில் தனது முதலாளியான ராஜப்பா முதலியாரிடம் ஸமர்ப்பித்திடுவார்.



## 152) என் தந்தையாரின் உற்ற நண்பரான திரு. தியாகராஜன்

அவ்வாறு மாட்டு வண்டியில் இவைகளை ஏற்றி வரும்போது கணக்குப்பிள்ளையாகிய என் தந்தையாரிடம் தேங்காய், மாங்காய் ஆகியவற்றில் ஒரு பங்கை அளித்திடுவார். என் தந்தையாரிடம் மணியார் பெரும் மதிப்புக் கொண்டிருந்தார். என் தந்தையார் 1999ஆம் ஆண்டு ஆவணி மாதம் பரமபதிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு அவருடன் நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். தன் நினைவு களை அவரோடு பகிர்ந்து கொண்ட மகிழ்ச்சியில் அன்று முழுவதும் திகழ்ந்தார் என் தந்தையார். ***(உலகில் உற்ற நண்பர் ஒருவருடன் அவர் எந்த இனத்தைச் சார்ந்தவராயினும் கடந்தகால நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது ஒரு இன்பம் பயக்கக்கூடிய செயலாகும். குறிப்பாக, ஒருவர் தன்னுடைய வாழ்நாளின் பிற்பகுதியில் தன் பொழுதைப் போக்குவது மிகவும் கடினமான செயலாகும். வீட்டிலுள்ள அனைவருக்கும் ஏதேதோ வேலை. அவர்களுக்கென விதவிதமான பொழுதுபோக்குகள். ஆனால் தனிமையில் தவிக்கும் முதியோர்களுக்கு அவ்வப்போது பேச்சுத் துணை***

*தேவைப்படுகிறது. அந்த அளவில் தன் கடந்தகால அனுபவங்களை நினைவு கூர்வதில் வயது முதிர்ந்தோர் மகிழ்ச்சி கொள்கின்றனர். )*

## 153) என் தந்தையார் மேற்கொண்ட அத்யாபக கைங்கர்யம்

மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளியில் எனது தம்பிகள் இருவரும் பயின்று வந்தனர். இன்னொரு தங்கை யாகிய பூமாலக்ஷ்மி கணபதி விலாஸ் ஸ்கூல் எனப்படும் பள்ளியில் பயின்று வந்தாள். 1963ஆம் ஆண்டு தொடங்கி 1983ஆம் ஆண்டுவரை சுமார் 20 வருடங்கள் ராஜ கோபாலனுடைய கைங்கர்யத்தில் குறிப்பாக அத்யாபக கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தார் என் தந்தையார். இன்றைக்கும் நான் மன்னார்குடி ராஜகோபாலன் ஸந்நிதிக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ள அர்ச்சகர்கள் என் தந்தையாரின் இடைவிடாத வாசிக கைங்கர்யத்தை நினைவு கூறுவார்கள். அடியேனை அனந்தாசார்யர் குமாரர் என்றுதான் அழைப்பார்களே யொழிய பெயரிட்டு அழைக்க மாட்டார்கள்.

## 154) பொன் பெரிதா? புகழ் பெரிதா?

வாழ்க்கையில் ஒருவர் தன் சந்ததியினருக்கு பொன்னையும் பொருளைத்தான் தேடி வைக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அது சிலருடைய வாழ்க்கையில் இயலாததொன்றாகிவிடுகிறது. ஆனால் அவர் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் புகழ் என்னும் விலை மதிக்கமுடியாத பொருளை வைத்துச் செல்லலாம். அந்தப் பொருளை யாரும் அழிக்க முடியாது. வருங்கால சந்ததி யினருக்கு அதுவே உண்மையான சேம வைப்பாகும். என் தந்தையாரின் வாழ்நாளில் அவரால் செய்து முடிக்க இயலாத சில பணிகளை நான் மேற்கொண்டுள்ளேன். அவற்றில்



ஒன்று மதக் கல்வியைப் பரப்புவது. அதற்கு ஏற்ப அவர் பரமபதிப்பதற்கு 7 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பாடத் திட்டங்களை வகுத்து தொலைதூரக் கல்விமுறை மூலம் சமூகத்திற்குப் பணி செய்ய முற்பட்டேன்.

## 156) அமெரிக்க ஜனாதிபதி John F. Kennedyயின் அகால மரணம்

உலகத்தையே உலுக்கிய நிகழ்ச்சியொன்று 22-11-1963ஆம் நாள் நிகழ்ந்தது. அமெரிக்காவின் 35ஆவது ஜனாதிபதியான J.F.Kennedy அவருடைய மனைவியுடன் காரில் சென்று கொண்டி ருந்தபோது மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த நிகழ்ச்சி இந்திய மக்களி டையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவரைக் கொன்றவராகக் குற்றம் சாற்றப்பட்ட Lee Harvey Oswald என்பார் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். 10 ஆண்டுகள் பல விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும் உண்மையான குற்றவாளியை அடையாளம் காண இயலவில்லை. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஜனாதிபதியின் மனைவியான Jacqueline Kennedy உயிர் தப்பினார். இருவர் காயமடைந்தனர்.

## 157) மக்களவையில் திரு.நேரு செலுத்திய அஞ்சலி

மக்களவையில் மாண்புமிகு பாரதப்பிரதமர் திரு.நேரு 25-11-1963ஆம் நாள் இந்திய மக்களின் எண்ணத்தைப் பிரதி பலிக்கும் வண்ணம் கீழ்க் கண்டவாறு இரங்கல் உரை யாற்றினார்.

"We meet here today under the shadow of shock and

sorrow. To many of us, it is a personal shock and grief. But the crime that has been committed was something more than a personal one. It was a crime against humanity. A man has been struck down in the prime of youth and achievement: a man of ideals, vision and courage, who sought to serve his own people as well the larger causes of the world.

President Kennedy revived among his people the ideals enshrined in the American Constitution and, in a changing world, sought to apply them to the problems of today. He endeavoured, not without success, to work for the removal of the tensions that burden and distract the world and to ensure an abiding peace. He devoted himself to the removal of injustice and inequalities among men. In his own great country, he laboured for civil liberty and worked so that Negroes might enjoy full freedom and opportunity without discrimination based on race or colour. In the wider world outside, a great part of which still suffers from poverty and lack of opportunities for growth, he threw his great energy and weight in favour of the development of under developed countries, so that people everywhere should have the blessings of freedom and the advantages that modern science and technology give.

Wealth and prosperity came to his own country. To these, President Kennedy added a deeper human and moral outlook which embraced in its scope the peoples of the wolrd. To these great causes he dedicated himself, and the picture of a great President emerged, which brought a measure of hope to the peoples of the world. To his high office he gave



lustre and grace, and people in distant parts of the world looked upon him with hope and affection. The memory of his great predecessor, Abraham Lincoln, the Emancipator, was revived, and in the confusion and conflicts of the present day world came a vision of the "self-evident truths" that all men are created equal and have certain inalienable rights, and till these are fully achieved, the vision of the founders of the American Republic will not be realized in its completeness.

The gracious lady, his wife, to whom our thoughts must turn today in deepest sympathy, came to India and we had the privilege to give her an affectionate welcome. It was our hope that President Kennedy would also pay us a visit, and he had himself expressed a wish to do so. That will not take place now, as an assassin's hand has put an end to a life which had already flowered so well and which gave promise of greater achievement in the future.

A great President and a great man is dead, struck down by one of his own countrymen. We sorrow for this, as indeed we must, but perhaps he has served the causes he cherished by his death even as he loboured for them in his life. Let us all draw inspiration from his fragrant memory and pay our homage to it. These words which I have said, I am sure, represent not only my sentiments but the sentiments of all the Members here and all the Parties that are represented in this Parliament.

## 158) வாரன்பேட்டியும், கென்னடி பற்றிய திரைப் படமும்

ஹாலிவுட்டின் மிகச் சிறந்த நடிகர்களில் வாரன் பேட்டியும் ஒருவர். இவரது தங்கைதான் பிரபல ஹாலிவுட் நடிகையும் மிகச் சிறந்த நடனக் கலைஞருமான ஷெர்லி மேக்லைன் என்பது குறிப்பிடத்தக்கது.

1963ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியான ஜான். F கென்னடியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் படமாக P.T.109 என்ற திரைப்படம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. இப்படத்திற்கு இயக்குநராக எலியாகசன் என்பார் நியமிக்கப்பட்டார். ஜான் .F கென்னடியின் கதாபாத்திரத்திற்கு வாரன்பேட்டிதான் பொருத்தமானவர் என்று இயக்குநர் எலியாகசன் நினைத்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜான் F. கென்னடியும் வாரன்பேட்டிதான் பொருத்தமானவர் என விரும்பினார்.

ஆனால் வாரன்பேட்டியோ இதற்கு சம்மதிக்க வில்லை. ஏனென்றால் அவருக்குக் கதை பிடிக்கவில்லை என்றும், அந்தக் கதையில் எந்தவித சுவாரஸ்யமும் இல்லை என்றும் மறுத்துவிட்டார். இதனால் அந்தக் கதாபாத்திரத்தில் கிளிஃப் ராபர்ட்சன் என்ற நடிகரை வைத்து அத்திரைப் படத்தை எடுத்தனர். ஆனால் வாரன் பேட்டி கூறியது போலவே அத்திரைப்படம் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்தது. இதற்குப் பிறகு ஒரு பொது நிகழ்ச்சியில் ஜான் F. கென்னடியும் வாரன் பேட்டியும் சந்தித்துக் கொண்டார்கள். அப்பொழுது கென்னடி நீங்கள் எடுத்த முடிவுதான் சரியானது எனக் கூறி வாரன் பேட்டியைப் பாராட்டினார். அன்று முதல் கென்னடியும் வாரன் பேட்டியும் நண்பர்களாகி விட்டனர். அந்த நட்பு 1963 ஆம் ஆண்டு கென்னடியின் மறைவுவரை நீடித்தது.



அதன்பிறகு கென்னடியின் தம்பியான ராபர்ட் கென்னடியும் வாரன்பேட்டியும் நண்பர்களானார்கள். கென்னடியின் மறைவிற்குப் பிறகு 1968 ஆம் ஆண்டு ராபர்ட் கென்னடிக்கு ஆதரவாக வாரன் பேட்டி தேர்தல் பிரச்சாரம் செய்தார். இவ்வளவு தூரம் தன் நண்பருக்காக தேர்தல் பிரச்சாரம் செய்தும், வாரன்பேட்டியின் சொந்த ஊரான லாஸ் ஏஞ்சல்ஸில்தான் ராபர்ட் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி அறிந்ததும் மிகுந்த வேதனை அடைந்தார் வாரன் பேட்டி.

## 159) லீலாமஹாலில் ஒரே அனுமதிச்சீட்டிற்கு இரண்டு திரைப் படங்கள் காண்பிக்கப்படும்.

நான் வசித்துவந்த பகுதிக்கு Daba Gardens என்ற பெயர் வழங்கி வந்தது. அதாவது ஒவ்வொரு வீட்டு மாடியிலும் அழகான பூச்செடிகளைப் பயிரிட்டு வருவர். அத்தகைய பூச்செடிகள் அமைந்த குடியிருப்புகள் என்று பெயர். விசாகப்பட்டினத்திலேயே மிக அமைதியான இடம் இந்தப்பகுதி. இதன் சுற்றுப்பகுதியில் மார்க்கெட், கடைத் தெரு, திரையரங்குகள் ஆகியன அமைந்திருந்தன. நான் இருந்த வீட்டிற்கு வெகு அண்மையில் அமைந்திருந்த திரைப்பட அரங்குகளில் குறிப்பிடத்தக்கது லீலா மஹால். லீலா மஹாலில் ஆங்கிலப் படங்களே திரையிடப்பட்டு வந்தன. எப்போதாவது புதிய ஹிந்திப்படங்கள் திரையிடப் பட்டு வந்தன. நான் முன்பே இந்தக் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டிருந்ததுபோல் ஒரு ரூபாய் கொடுத்து அனுமதிச் சீட்டு வாங்கினால் 2 ஆங்கிலப்படங்களைப் பார்த்து

ரசிக்கலாம். ஒரு படத்திற்கும் இன்னொரு படத்திற்கும் இடைவேளை 10 நிமிடங்கள். பக்கத்திலுள்ள ஹோட்டல் ஊட்டியில் இரவு உணவு அருந்திவிட்டு 2ஆவதாகக் காண்பிக்கப்படும் படத்தைப் பார்க்கச் செல்வேன். நினைவில் இன்றும் நிற்கக்கூடிய ஆங்கிலப்படங்கள் பலவற்றை 1963, 70 காலக் கட்டத்தில் நான் கண்டு ரசித்துள்ளேன். அவற்றைப் பற்றிய விமர்சனங்களை இந்தக் கட்டுரைத் தொடரில் நீங்கள் படித்து இன்புறலாம்.

லீலாமஹாலில் 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான் பார்த்த படம் Psycho. இந்தப்படத்தைப் பற்றி விமர்சிக்காத பத்திரி கைகள் இல்லை. பெரும்பாலான மக்கள் பலமுறை விரும்பிப் பார்த்த படம் இது. இன்றும் இந்தத் திரைப்படம் பார்ப்பவர் மனத்தில் திகிலூட்டும் தன்மை கொண்டது. இந்தப் படத்தை இயக்கியவர் புகழ் பெற்ற இயக்குனரான ஆல்பிரட் ஹிட்ச்காக் என்பவர்.

## 160) ஆல்பிரட் ஹிட்ச்காக்

அமெரிக்க சினிமாவின் மிக உயர்ந்த தொழில் நுட்பக் கலைஞன் (The Supreme Technician of the American Cinema) என்றும் உண்மையான சினிமாவைப் படைக்கின்ற புகழ் பெற்ற வர்களில் ஹிட்ச்காக்கும் ஒருவர் (One of the Greatest Master of Pure Cinema) என்றும் ஹாலிவுட்டில் அழைப் பார்கள்.

ஹிட்ச்காக் 1899 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் நாள் லண்டனில் உள்ள ஒரு ஊரில் பிறந்தார். இவரது தந்தை வில்லியம் ஹிட்ச்காக், தாயார் எம்மா ஜான் ஹிட்ச்காக். இவர் களுக்கு மூன்று குழந்தைகள். இதில் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் ஹிட்ச்காக். இவருடைய இயற்பெயர்



ஆல்பிரட் ஜோசப் ஹிட்ச்காக் என்பதாகும். இவர் திரையுலகிற்கு வந்த பிறகு இவருக்குப் பட்டப் பெயர்கள் சூட்டினார்கள். அதாவது Hitch என்றும், The Master of Suspense என்றும் அழைப்பார்கள்.

இவருடைய சிறந்த தொழில் நுட்பம், கதாபாத்திரங் களையும் கதையைக் கையாளுகின்ற விதம், சில சமயங் களில் நகைச்சுவைக் காட்சிகள், மயிர்க்கூச்செரியும் திரில்லர் காட்சிகள், படத்தில் பய முறுத்தும் பின்னணி இசை என இவை அனைத்தும் ஆல்பிரட் ஹிட்ச்சாக்கின் படங்களின் சிறப்பம்சங்களாகும்.

1926இல் வெளியான The Lodger என்ற படத்தின் மூலம் தான் ஒரு சிறந்த தொழில் நுட்பக் கலைஞர் என்பதை ஹிட்ச்காக் நிரூபித்தார். இது அருமையான திரில்லர் படமாகும். படத்தின் ஆரம்பக்காட்சியே ஒரு பெண் கொலை செய்யப்படுவதன் மூலம் ஆரம்பிக்கிறது. இதற்கடுத்து 1929இல் Blackmail என்ற படத்தின் சில காட்சிகளை முதலில் Silent ஆக படம்பிடித்துவிட்டு, பின்பு அதிகக் காட்சி களை உடன் படமாக்கினார்கள். ஒரு சாதாரண பெண், தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்ற ஒருவனைக் கொலை செய்து விடுகிறாள். பின்பு அந்தக் கொலைக்காக அவள் Blackmail செய்யப்படுகிறாள். இதுதான் படத்தின் கதை. படத்தின் கிளைமாக்ஸ் காட்சி பிரிட்டிஷ் மியூசியத்தில் படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தை விமர்சகர்கள் வெகுவாகப் பராட்டினார்கள்.

1934இல் வெளியான அதிகம் தெரிந்தவன் (The Man Who Knew Too Much) என்ற படம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. இந்தப் படத்தைவிட அடுத்து

1935இல் வெளியான The 39 Steps என்ற படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. காதலும் நகைச் சுவையும் இரண்டும் சரியானதொரு கலவையாக இந்தப்படத்தில் அமைந்திருந்தன. இதன்பின் 1936இல் வெளியான The Secret Agent மற்றும் Sabotage ஆகிய இரண்டு படங்களும் சுமாராகத்தான் ஓடின.

மறுபடியும் 1938இல் ஹிட்ச்காக் புகழின் உச்சிக்கு சென்றார்.The Lady Vanishes என்ற படத்தில் ஒரு ரயிலில் நடை பெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு கதை அமைக்கப்பட்டது. இப்படத்தின் மூலம் இங்கிலாந்தின் சிறந்த இயக்குநர்களின் பட்டியலில் ஹிட்ச்காக் இடம் பிடித்து விட்டார்.

1939இல் ஹிட்ச்காக் முதன் முதலில் ஒரு அமெரிக்கப் படத்தை இயக்கினார். Daphne du Maurierஇன் நாவலை மையமாக வைத்து 1940இல் Rebecca என்ற படத்தை இயக்கினார். ரெபேக்கா சிறந்த படத்திற்கான அகாடமி அவார்டைப் பெற்றது. இதற்குப் பிறகு ஹிட்ச்காக்கிற்கு அதிகப் படவாய்ப்புகள் வந்து குவிந்தன. 1940ஆம் ஆண்டில் பாரின் கரஸ்பாண்டெண்ட் (Foreign Correspondent) என்ற படத்தை இயக்கினார். இத்திரைப்படத்தில், ஒரு ரிப்போர்ட்டர், ஐரோப்பாவில் உள்ள கொடூரமான விஷயங்களை எப்படி ஆராய்கிறார் என்பதை மையமாக வைத்து உருவாக்கப் பட்டது. காமெடி மற்றும் சிறந்த தொழில் நுட்பம்தான் இப் படத்தின் சிறப்பம்சமாகும். படத்தில் வரும் கொலைக்காட்சி மற்றும் விமானம் நொறுங்கி விழும் காட்சி என இதன் மூலம் தன் திறமையை மீண்டும் நிரூபித்தார்.

வாழ்க்கையில் சாதாரண மக்கள் துன்பத்தில் மாட்டிக் கொண்டு எப்படி தப்பிக்கிறார்கள் என்பதை 1941இல் சஸ்பிஷன் (Suspicion) என்ற படத்திலும், மற்றும் 1943இல் Saboteur போன்ற படங்களில் காட்டியுள்ளார். அதன்பின் 1944இல் வெளியான Life boat என்ற படத்தில் இவர் இசையையே பயன்படுத்தவில்லை. ஒரு கப்பல் விபத்திற்குள்ளாவதும், அதிலிருந்து மக்கள் எப்படித் தப்பிக்கிறார்கள் என்பதும்தான் இப்படத்தின் கதையாகும். இதன் பிறகு 1948இல் வெளியான ரோப் (Rope) என்ற படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இது ஹிட்ச்காக்கின் முதல் கலர் படமாகும். 1946 இல் வெளியான நொட்டோரியஸ் (Notorious) என்ற படம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. தன்னைச் சுற்றி நடக்கும் சம்பவங்கள் மூலம் ஒரு பெண் எப்படி சிக்கலில் மாட்டிக் கொள்கிறாள் என்பதுதான் இதன் கதை. இதைத் தொடர்ந்து 1943இல் வெளியான ஷேடோ ஆப் டவ்ட் (Shadow of Doubt) என்ற படம் சுமாராகத்தான் ஓடியது.

அடுத்து 1960இல் வெளிவந்து உலகையே மிரட்டிய திரைப்படம் தான் சைக்கோ (Psycho). உலகின் சிறந்த படங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. ஆண்டனி பெர்க் கின்ஸ் என்ற நடிகர் நாயகனாக நடித்திருப்பார். இந்தப் படத்தில் இடம்பெற்ற அந்த குளியலறை கொலைக்காட்சி அனேக மக்களைத் தியேட்டரிலேயே திகைக்க வைத்தது. லண்டனில் இந்தப் படம் வெளியான முதல் நாளன்று படம் பார்த்தவர்களில் 11 பேருக்கு மாரடைப்பு வந்ததாகக் கூறுவர். இதன்பின் 1963இல் Bird என்ற படத்தை இயக்கி வெளியிட்டார். இதுவரை மனிதர்களை கொலைகாரர்களாக வைத்து திரைப் படத்தை எடுத்த ஹிட்ச்காக் இதில் பறவைகளைக் கொலைகாரப் பறவைகளாக சித்திரித்திருக்கிறார். ஆயிரக் கணக்கான பறவைகள் கூட்டமாகப் பறந்து வந்து

மனிதர்களைத் தாக்கிக் கொல்லுகின்றன. இக்காட்சியை மிக அற்புதமாகப் படமாக்கியிருப்பார். இதுதான் இப்படத்தின் சிறப்பம்சம். ஆல்ப்ரட் ஹிட்ச்காக் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் நாள் இறந்தார்.

## 161) PSYCHO

சைக்கோ ஒரு பிரமாதமான, வெற்றிகரமான, நம்மை திகைக்கச் செய்யும் ஒரு திரில்லான படம். இதுவரை இப்படி ஒரு திரில்லான படத்தை யாரும் எடுத்ததில்லை. இயக்குநர் ஆல்பிரட் ஹிட்ச்காக் இப்படத்தைப் படமாக்கிய விதம் திரையரங்குகளில் படம் பார்க்கும் மக்களை பயத்தின் உச்சிக்கே சென்று சத்தமிட வைத்துள்ளது.

இப்படத்தைப் பற்றி மேலும் அவர் கூறுகையில், ''நான் ஒரு முக்கியமான படம் எடுக்கவேண்டும் என்று நினைக்கவில்லை, சாதாரணமாகத்தான் இப்படத்தின் கதையை எழுதினேன். படத்தை எடுக்க 8,00,000 டாலரே செலவானது. படத்தின் லாபம் 15 மில்லியன் டாலரைத் தாண்டியது'' என்றார்.

மேலும் அவர், ''என்னுடைய முழு திருப்தியே இப்படம் மக்களை பெரும் அளவில் பாதித்தது என்பதுதான். மக்கள் தங்களை அறியாமலேயே படத்தின் சில காட்சிகளில் பயந்து கதறிவிட்டார்கள். அப்படி ஒரு கலையை வைத்துக் கொண்டு மக்களின் உணர்ச்சி களோடு விளையாடுவதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. சைக்கோ இதைப்பூர்த்தி செய்துள்ளது.''

சைக்கோ படம் ஆரம்பித்து முதல் 45 நிமிடங்களில், ஹிட்ச்காக், ஜேனட் லை என்ற அழகான பெண்ணைக் காட்டு



கிறார். அவளுக்கு நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. இதனால் ஒரு வயதான மனிதனிடமிருந்து 40,000 டாலர் பணத்தைத் திருடுகிறாள். பின்பு ஒரு ஹோட்டலில், ஆண்டனி பெக்கின்ஸ் என்ற நபரைச் சந்திக்கிறாள். அவன்தான் இக்கதையின் கதாநாயகன். அவனுடன் சிறிது நேரம் பேசுகிறாள். பின்பு திருடிய பணத்தை திருப்பி அந்த வயதான நபரிடமே கொடுக்க முடிவெடுக்கிறாள். இதன் பிறகு தன் அறைக்குச் சென்று குளிக்கிறாள். அப்போது அவளை ஒரு பெண் கத்தியால் குத்திக் கொன்று விடுகிறாள். ஜேனட்டின் இரத்தம் அப்படியே தண்ணீருடன் கலக்கிறது. படத்தின் கதாநாயகி இப்படி பாதியிலேயே இறந்து விடுகிறாள். அடுத்தது என்ன நடக்குமோ என்ற பதற்றத்தில் மக்கள் தவிப்பதை நம்மால் உணரமுடிகிறது.

ஆன்டனியைப் பொறுத்தவரையில் அவன் ஒரு அமைதி யான அழகான, அதே சமயம் தன் தாயின்மீது அளவற்ற அன்பு வைத்தி ருக்கும் பாசமுள்ள மகன். ஆனால் இதில் முக்கியத்திருப்பம் என்ன வென்றால், உண்மை யிலேயே ஆன்டனி பெக்கின்ஸ்சின் தாய் உயிருடன் இல்லை என்பதுதான். அவனது தாயாரைக் காட்டும் காட்சிகளில்கூட ஹிட்ச்காக் தாயின் முகத்தைக் காட்டவில்லை. இந்தக் காட்சிகளை ஆங்கிள் ஷாட் மூலம் பிரமாதமாக எடுத்துள்ளார். அதனால்தான் ஏன் அந்த தாயின் முகத்தைக் காட்டவில்லை என்ற சந்தேகமே நம் மனதிற்குள் வராது.

உண்மையில் அந்த தாய் உயிருடன் இல்லை. அப்படி இருப்பதாகக் காட்டப்படுவது ஒரு டம்மி. அதாவது எப்போதோ இறந்துபோன அவன் தாயாரின் உடல் தைலமிட்டு பாதுகாக்கப்பட்ட ஒரு பிணம். தன் தாயாரின்மீது அளவு கடந்த பாசம் வைத்திருப் பதால், மகன் ஆன்டனி

பெக்கின்ஸ் இப்படி செய்துள்ளான். கடைசியில் அவன்தான் கொலைகாரன் எனத் தெரியவரும் பொழுது நமக்கு அதிர்ச்சி யாக இருக்கிறது. இதுதான் ஆல்பிரட் ஹிட்ச்காக்கின் சிறப்பம்சம்.

சைக்கோ திரைப்படம் மற்ற திரில்லர் படங்களைவிட வித்தியாசமானது. நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அது நடக்காது. எதிர்பாராததவை நடந்து நம்மை பயத்தால் நடுங்க வைத்து விடுகிறது. தாம் என்ன செய்யவேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பார் ஹிட்ச்காக். அந்தக் குளியல் அறையில் ஜேனட் கொலை செய்யப்படும் காட்சியை 70 கேமிரா செட் அப்புகள் வைத்து 7 நாட்கள் படமாக்கினார்கள்.

## 162) தமிழ்நாட்டு அரசியலும், திமுகவின் திராவிட நாடு கோரிக்கையும்

ஜனவரி 1963ஆம் வருடம். நேரு தலைமையிலான மத்திய அரசு புதிய குண்டை வீசியது. அது தி.மு.க. மைதானத்தில் விழுந்து புயலைக் கிளப்பும் என்பதுதான் நேருவின் நோக்கம். பிரிவினை கேட்கும் இயக்கங்களைத் தடை செய்வதற்கு வசதியாக அரசியல் சாஸனத்தைத் திருத்த மசோதா கொண்டு வரப்படும். நாடாளுமன்றத்தில் தன்னுடைய கண்டனங்களைப் பதிவு செய்துவிட்டு கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார் அண்ணாதுரை. நேரு எடுத்துள்ள புதிய அஸ்திரம் பற்றி விரிவான விவாதத்துக்குப் பிறகு கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டு இறுதியாகக் கட்சியின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று திருத்தப்பட்டது.

''திராவிட நாடு அடைவதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ற கோட்பாடு'', ''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என்ற நான்கு மொழிவழி மாநிலங்களும் அதிகபட்ச உரிமைகளைப் பெற்று நெருங்கியிருப்பதே தி.மு.க.வின் கொள்கை'' என்று மாற்றம் பெற்றது. இந்த மாற்றத்தை மூன்றே வார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால், ''திராவிடநாடு கோரிக்கை கைவிடப்படுகிறது''.



புதிய பாதையில் தி.மு.க. நடைபோடத் தொடங்கியது. இந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சியில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் வந்தது. ''காமராஜ் திட்டம்'' அமலுக்கு வந்தது. காங்கிரஸ் கட்சியின் பல முதல்வர்கள் தங்களுடைய முதலமைச்சர் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு கட்சிப் பணிகளுக்குத் திரும்பினர். தமிழ்நாட்டில் காமராஜ் பதவி விலக, பக்தவத்சலம் முதல்வரானார். இந்தச் சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்ற புதிய இயக்கம் உருவானது.

திராவிட நாடு கோரிக்கை என்ற ஆயுதத்தை ஓரமாக வைத்திருந்த அண்ணாவின் கைகளுக்கு புதிய ஆயுதத்தைக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி. அது இந்தி ஆட்சி மொழி. இதற்காக அரசு குறித்திருந்த தேதி ஜனவரி 26, 1965. அன்றைய தினம் இந்தியா முழுக்க இந்தியே ஆட்சி மொழியாக அமலுக்கு வந்துவிடும். இதனை எப்பாடு பட்டாவது தடுத்து நிறுத்தியே தீரவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தார் அண்ணாதுரை. அவருக்கு உதவியாக ஒரு பழுத்த அனுபவசாலி வந்திருந்தார். அவர்தான் ராஜாஜி. காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி சுதந்தரா கட்சியைத் தொடங்கி, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக முழங்கத் தொடங்கியிருந்தார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபடுவது தமிழர்களின் கடமை என்று அண்ணாதுரை பேசியது, தமிழ் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. ஹிந்தி எதிர்ப்பு தமிழ்நாட்டு அரசியலில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இதன்விளைவாக 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பீடத்தில் அமரக்கூடிய வாய்ப்பினை திமுக பெற்றது. அன்று ஆட்சியைப் பிடித்த திமுகவும், அதன் கிளையான அதிமுகவும் தமிழ் நாட்டை சென்ற 42 ஆண்டுகளாக ஆண்டு வருகின்றன. ஒரே குட்டையில் ஊறிய மட்டையான திமுகவும், அதிமுகவும் மாறி மாறி ஆட்சியில் அமர்ந்து நாட்டு மக்களை இலவசம் என்ற பெயரில் முட்டாளாக்கி வருகின்றனர். காமராஜர் ஆட்சியை மீண்டும் மலரச் செய் வோம் என்று கூறும் காங்கிரஸ் திமுகவிடம் சீட்டுப் பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிறது. இது தமிழ்நாட்டின் தலைவிதி. இது நீங்கும் நாள் எந்நாளோ?

## 163) இசை அமைப்பாளர் ஜி.ராமநாதனின் மறைவு

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஜி. ராமநாதன் இவ்வுலகை விட்டு மறைந்தார். கர்நாடக இசையை மக்கள் விரும்பிக்கேட்கும் அளவிற்கு பாடல்களுக்கு இசை அமைத்து, புகழ்பெற்ற மேதை திரு. ஜி. ராமநாதன். இவர் இசைத் துறையில் 1950ஆம் ஆண்டு தொடங்கி 1963ஆம் ஆண்டு வரை கொடிகட்டிப் பறந்தவர்.

இவர் இசையமைத்த படங்களில் குறிப்பிடத் தக்கவை 1) உத்தமபுத்திரன்-1940 2) ஆர்யமாலா-1941.



3)சிவகவி - 1943. 4) ஹரிதாஸ்-1944. 5) ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி-1947. 6) ஸ்ரீஆண்டாள்-1948. 7) திகம்பர சாமியார்-1949 8) மந்திரிகுமாரி-1950 9) மதுரை வீரன்-1956 10) அம்பிகாபதி-1957 (என் தந்தையார் இசைக்காகப் பலமுறை பார்த்து மகிழ்ந்த படம்இது.) 11) வணங்காமுடி-1957. 12)உத்தம புத்திரன்-1958 13) காத்தவ ராயன்-1958. (ஒரே தலைப்பு கொண்ட படங்கள் இரண்டிற்கு இசை அமைத்த பெருமை பெற்றவர் இவர். 1940ஆம் ஆண்டு உத்தமபுத்திரன், 1941ஆம் ஆண்டு ஆர்யமாலா. ஆர்ய மாலாகதைதான் காத்த வராயன் கதையாகும். வீரபாண்டிய கட்டபொம்மன்-1959, ராஜா தேசிங்கு-1960, கப்பலோட்டிய தமிழன்-1961. சித்தூர் ராணி பத்மினி-1963 ஆகியவை.

ஜி. ராமநாதன் இசையமைத்த கப்பலோட்டிய தமிழன் படப் பாடல்களை (அனைத்தும் பாரதியார் பாடல்கள்) நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம். கேட்கும் போதெல்லாம் இனிமை பயக்கும் இசையமைத்த மாமேதை ஜி. ராமநாதன் பற்றிய நினைவுகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

## 164) ராஜாமடம் ராமநாதன்

ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே உள்ள பிக்ஷாண்டார் கோயில்தான் அவருடைய சொந்த ஊர். சோலைகளும் மரங்களும் பசுமையாக அடர்ந்த காவிரியின் கரையில் மூன்று போகம் காணும் நிலம். ஆனால் அந்தக் காலத்தில் பிக்ஷாண்டாருக்கே அது பலன் தரவில்லை. ஊரின் பழமையான ஆலயம் மெல்ல சிதிலமடைந்து கொண் டிருந்தது. சிறு மிராசான கோபால அய்யரின் குடும்பமும் வளமாக இல்லை. கோபால அய்யரும் அவர் மனைவியும்

தங்கள் பிள்ளைகள் வளர்வதைக் காண முடியாமல் காலகதி அடைந்தார்கள்.

மூத்த மகனான சுந்தர பாகவதர் தன்னுடைய தம்பி ராமநாதனையும், தங்கை காமாட்சியையும் வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டார். தந்தை ஸ்தானத்தில் அவர்களைக் காப்பாற்ற வேண்டியவராக இருந்தார். கதாகாலட்சேபம் செய்பவரான அவரை பட்டுக்கோட்டைக்கு அருகே உள்ள கிராமமான ராஜாமடத்திற்கு வந்து சங்கீத உபன்யாஸம் செய்யும்படி அந்தக் கிராமத்து ஆத்திகர்கள் கேட்டுக் கொண்டார்கள். ***(ராஜாமடத்தில்தான் நான் என்னுடைய உயர்நிலைப்பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தேன் என்பதை முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன்.)*** ராஜாமடத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இத்தகைய வாய்ப்புகள் பெருகியதால், தன் தம்பி- தங்கை யுடன் ராஜா மடத்திலேயே தங்கி விட்டார் சுந்தரபாகவதர். ராஜாமடம் சுந்தர பாகவதர் என்றே பலர் அவரை அழைக்கலானார்கள்.

## 165) ராமநாதனின் இசைப்பயணம்

ஹார்மோனிய இசையில் தேர்ச்சி பெற்றவரான ராமநாதன் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோஸ் போன்ற படத்தயாரிப்பாளர்கள் எடுத்த திரைப்படங்களுக்கு இசை அமைத்துள்ளார். எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த சிவகவியில் ஜி. ராமநாதன் இசையில் 'வதனமே சந்திர பிம்பமோ', பாடல் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்தது. அந்தப் படத்தில் 'வசந்தருது மன மோகனமே', 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து', போன்ற பாடல்கள் ஜி. ராமநாதன் இசைத்திறமையை வெளிப் படுத்தின. தமிழ்த்திரை உலகில் பல ஆண்டுகள்



திரையரங்குகளில் ஓடிய பெருமையைப் பெற்ற படம் ஹரிதாஸ். அதில் வரும் 'மன்மத லீலையை வென்றார் உண்டோ', பெற்ற வெற்றி ஈடு இணையில்லாதது. சாருகேசி ராகத்தில் பாகவதரால் பாடப்பட்ட இந்தப் பாட்டை இன்றும் விரும்பிக் கேட்பவர்கள் உண்டு. அதற்கு ஆணிவேராய் அமைந்தது ராமநாதனின் இசை.

## 166) லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கும், அதன் பாதிப்பும்

லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கில் பக்ஷிராஜா ஸ்டுடியோ அதிபர் S.M.ஸ்ரீராமுலு கைது செய்யப்பட்டார். பம்பாய் வழக்கறிஞர் K.M.முன்ஷியின் வாதத்திறமையால் அந்த வழக்கிலிருந்து ஸ்ரீராமுலு நாயுடு விடுவிக்கப்பட்டார். தியாகராஜ பாகவதருக்கும் N.S.கிருஷ்ண னுக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. தன்னுடைய உற்ற நண்பர் களான தியாகராஜ பாகவதர் தண்டிக்கப் பட்டதும், ஸ்ரீராமுலு நாயுடு சில மாதங்கள் சிறைவாசம் அனுபவித்ததும் ராமநாதனின் உள்ளத்தை வேதனையடையச் செய்தன.

## 167) மந்திரிகுமாரியும், திமுகவின் பிராஹ்மணர் மீதான வெறுப்பின் வெளிப்பாடும்

ஜி. ராமநாதனின் இசை வெள்ளத்தில் இன்றும் மிதந்து கொண்டிருக்கும் ஒரு திரைப்படம் மாடர்ன் தியேட்டர்ஸாரின் மந்திரிகுமாரி. திராவிட முன்னேற்றக்கட்சியினர் 50, 60 இடைப்பட்ட ஆண்டுகளில் திரைப்படங்களின் வாயிலாக தமது கொள்கைகளைப் பரப்பி வந்தனர். ப்ராஹ்மணர்கள் மீதான வெறுப்பில் தோன்றிய ஜஸ்டிஸ் பார்ட்டி, அதன்வழி வந்த திராவிடக்கழகம், திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்த திராவிட முன்னேற்றக்கழகம் போன்ற கட்சி யினருக்கு

அடிப்படையே ப்ராஹ்மணர்கள் மீதான வெறுப்பைத் தூண்டிவிடுவது. ப்ராஹ்மணர்களை ஆரியர்கள் என்று இகழ்ந்து அவர்கள் வணங்கும் கடவுள் சிலைகளை உடைப்பது, குடுமியையும் பூணூலையும் அறுப்பது போன்ற அநாகரிகமான செயல்களில் ஈடுபட்டு வந்தனர். அந்தக்கால கட்டத்தில் வெளிவந்ததுதான் மாடர்ன் தியேட்டர்ஸின் மந்திரிகுமாரி.

புத்த மதப் பிரச்சாரத்திற்காக எழுதப்பட்ட குண்டல கேசி கதை, மாற்றம்பெற்று மந்திரிகுமாரியானது. மந்திரி குமாரியில் வலுவான திராவிட இயக்கப் பிரச்சாரமான ப்ராஹ் மணர்கள் மீதான வெறுப்பு கதை வசனம் எழுதிய கருணா நிதியால் புகுத்தப்பட்டது. ***(இவர் கதை வசனம் எழுதுகின்ற ராஜா காலத்துப் படங்களில் ஒரு ராஜகுரு இருப்பான். அவன் தடித்த பூணூல் அணிந்திருப்பான். அரசனுக்கு எதிராக சூழ்ச்சி செய்வான். அவன் ஒரு காமாந்தகாரனாக சித்தரிக்கப்படுவான். இவ்வாறு மக்கள் மனத்தில் பிராஹ்மணர்கள் மீதான வெறுப்பைக் கருணாநிதி தன்னுடைய அரசியல் பயணத்தில் அவ்வப்போது வெளிப்படுத்தி யுள்ளார்.)***

மார்பிலே பூணூலுடன் ராஜகுரு (நம்பியார்) கதையின் பிரதான வில்லன். திராவிட இயக்கத்தின் பிராம்மண எதிர்ப்பின் வளமான களமாக இந்த ராஜகுரு பாத்திரத்தை உருவாக்கினார் மு. கருணாநிதி. கொடியவன், கொடூரமான சூழ்ச்சிக்காரன் என படம் பார்ப்போர் சபிக்கும்படி மிகத் திறம்பட நம்பியார் நடித்திருந்தார். ராஜகுருவின் மகன்தான் கொள்ளைக்காரன். கொள்ளை அடிப்பது ஒரு கலை என்று சாதிக் கிறவன். வார்த்தைச் சிலம்பங்களால் சிலேடை யுத்தம் செய்யும் பிரச் சாரப்பாணிக்கு இடையே, பொருத்தமான உரையாடல்கள் உண்டு. மந்திரி



குமாரி-''என்னை அவ்வளவு எளிதாக ஏமாற்ற முடியாது''. பார்த்திபன்-''கொஞ்சம் முயன்றால் ஏமாற்றலாம் என்கிறாய்'' போன்ற வசனங்கள் சிலேடையில் அமைந்திருந்தன.

''வாராய் நீ வாராய்'', ''அன்னம் இட்ட வீட்டிலே'' ''ஊருக்கு உழைப்பவண்டி, உதைபட்டுச் சாவாண்டி'', ''எருமை கன்னுக்குட்டி -என் எருமை கன்னுக்குட்டி'', போன்ற பாடல்கள் இந்தப் படத்தில் இடம் பெற்றிந்தன.

## 168) ராமநாதனின் மற்றைய திரைப்படங்கள்

1956ஆண்டு வெளிவந்த 3 படங்களான மதுரை வீரன், அம்பிகாபதி, உத்தமபுத்திரன் ஆகியவற்றிற்கு ஜி. ராமநாதன் இசை அமைத்திருந்தார். இந்த 3 படங்களின் வெற்றிக்கு அவருடைய இசை அமைப்பும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. மதுரைவீரனில் ''ஆடல் காணீரோ'', அம்பி காபதியில் ''சிந்தனை செய் மனமே''. உத்தமபுத்திரனில் ''முல்லை மலர் மேலே'', ''காத்திருப்பான் கமலக் கண்ணன்'', ''அன்பே அமுதே அருங்கனியே'', ''உன்னழகைக் கன்னி யர்கள் சொன்னதனாலே'' போன்ற பாடல்கள் ஜி. ராமநாதன் இசையில் அமரத்துவம் பெற்றன. வீரபாண்டிய கட்ட பொம்மன் படத்திற்கு இசை அமைத்தவர் ஜி. ராமநாதன். அதில் இடம் பெற்ற பாடல்களான ''வெற்றி வடிவேலனே'', ''மனம் கனிந்தருள் வேல் முருகா'', ''சிங்காரக்கண்ணே'', ''இன்பம் பொங்கும் வெண்ணிலா'' இன்றும் மக்கள் நேயர் விருப்பத்தில் கேட்டு மகிழ்கின்றனர். இவை அனைத்தும் கர்நாடக இசையின் பெருமையை வெளிப்படுத்து கின்றன.

## 169) கப்பலோட்டிய தமிழன்

கப்பலோட்டிய தமிழன் படத்தை நான் பலமுறை

பார்த்து மகிழ்ந்துள்ளேன். சுதந்திரம் அடைவதற்கு மக்கள் எவ்வாறு போராடினர் என்பதை உணர்த்தும் அமர காவியங்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற திரைப்படங்கள். ஆனால் ஊடகங்களோ குடியரசு தினத்தன்றும் ஆகஸ்ட் 15ஆம் நாளும் தமிழே பேசத்தெரியாத நுனிநாக்கு கொண்டு தமிழாங்கிலம் பேசும் அரைகுறை ஆடையணிந்த திரைப்பட நடிகைகளின் பேட்டியை ஒளிபரப்புவதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்து கின்றன. இவர்கள் கப்பலோட்டிய தமிழன் படத்தை அவ்வப்போது ஒளிபரப்பவேண்டும்.

“இரவிலே வாங்கினோம் அதனால்தான் இன்னும் விடியவே இல்லை” என்று சுதந்திரம் பற்றி புதுக்கவிதை தோன்றுவதற்குக் காரணம் இன்றைய தலைமுறையினர், எப்படி சுதந்திரம் வாங்கினோம், அதற்கு தலைவர்கள் கொடுத்த விலை என்ன? என்பதை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாமையால்தான். சுதந்திரத்தின் உண்மையான மதிப்பை இன்றைய தலைமுறையினர் உணர்ந்து கொள்ள வில்லை. ஆங்கிலேயே ஆதிக்கத்தை எதிர்த்து செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் கதையே திரைப்படமாக ஆக்கப்பட்டது. வ.உ.சி. பிறந்தநாள் அன்று சென்னைத்துறை முகத்தின் நுழைவாயிலில் உள்ள வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவிப்பதோடு தம் கடமை முடிந்து விட்டதாக அரசியல் வாதிகள் எண்ணுகின்றனர்.

கப்பல் போக்குவரத்தில் ஆங்கிலேயருக்கு இருந்த பலத்தால் தான் அவர்கள் பல நாடுகளுக்குச் சென்றார்கள். வியாபாரம் செய்ய வந்தவர்கள் ஆட்சியாளர்களாக மாறினார்கள். “நாங்களும் கப்ப லோட்டுகிறோம்” என்று கிளம்பினார் ஒரு தூத்துக்குடி வழக்கறிஞர் வ.உ. சிதம்பரம்.



அவரையும் அவருடைய கூட்டாளியான சுப்ரமணிய சிவாவையும் ராஜ துவேஷ குற்றத்திற்காகக் கடுமையாக தண்டித்தது ஆங்கில அரசு. இந்தச் சமகால சரித்திரத்தை படமாக்க முன்வந்தார் பி. ஆர். பந்துலு (1961)

படம் அப்போது வெற்றி அடையவில்லை. ஒரு தேசிய வாதியின் எழுச்சியூட்டும் வாழ்க்கையை திரையுலகில் மக்களுக்காகப் படைத்தபோதும், அன்றைய காங்கிரஸ் அரசு அதற்கு எந்த ஆதரவும் கொடுக்காமல் அவமதித்தது. ஆனால் இன்றுவரை மக்கள் படத்தை ஆர்வத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம், பாத்திரங் களுக்கு ஏற்ற நடிகர்களைத் தேர்வு செய்தது. வ.உ. சிதம்பரமாக நடித்த சிவாஜி மிகைநடிப்பு பாணியை ஒதுக்கிவிட்டு அடக்கி வாசித்தார். டி.கே. சண்முகம் சிவாவாகவே வாழ்ந்தார். எஸ்.வி. சுப்பையா நடித்துக் காட்டிய சுப்ரமணிய பாரதியை இன்றுவரை எவரும் மீறவில்லை. பாரதியே நேரில் வந்து நடித்ததுபோல் இருந்தது என்பது பாரதியைப் பார்க்காதவர்கள் கருத்து. ஓரிரு காட்சிகளில் திலகராக பந்துலு தோன்றினார். தேசிய கவிஞரான எஸ். டி. சுந்தரத்தின் வசனங்களை சிவாஜியேகூட வியந்தார்.

ஒரு தேசத்தலைவரின் வாழ்க்கையை ஜனரஞ்சகராக வழங்கு வதில் படத்திற்கு வெற்றிதான். அந்த வெற்றிக்கு உறு துணையாக அமைந்தது படம் நெடுக பாரதிப் பாடல்களின் பயன்பாடு. அந்தப் பாடல்களுக்கு ராமநாதன் அமைத்த அற்புதமான மெட்டுகள் தமிழ் மக்களை அவருக்கு நிரந்தரக் கடனாளியாக்கி விட்டன. முதலில் அந்த மெட்டுக்கள் பாடல்கள்மீது திணிக்கப்பட்டவையாகத்

தோன்றவில்லை. பாரதியே இப்படித்தான் பாடினாரோ என்ற அளவிற்குப் பொருத்தமாக அமைந்திருந்தன.

‘‘வந்தே மாதரம் என்போம்’’ என்று அவர் தொடங்கிய போது ஒரு ஊர்வலப் பாட்டிற்குத் தேவையான வீரியமும் வீச்சும் அதில் உடனே பளிச்சிட்டது. பாடல் வரிகளில் வெளிப்படும் உணர்ச்சி களுக்கு கனகச்சிதமான போக்குடன் நடந்தாலும், ‘‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே’’வில் ஒரு இணக்கம், ‘‘அந்நியர் வந்து புகல் என்ன நீதி’’யில் கோபம்- வந்தே மாதர கோஷத்தின் லயத்தோடு அவை உடனே கலந்துவிடும். ராகங்களை அவ்வளவு பொருத்தமாகப் பாட்டின் தேவைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டார் ராமநாதன்.

பாரதியின் பாப்பா பாட்டில் ‘‘காலை எழுந்தவுடன் படிப்பு’’ என்று தொடங்கும்போது பாப்பாவிற்கு ஏற்ற கனிவுடன் ‘‘சகானா’’வில் ஊஞ்சல் ஆடினார். ‘‘பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ’’, ‘‘என்று தணியும்’’ போன்ற பாடல்களில் அவலச் சுவைக்கு ‘‘புன்னாக வராளி’’ வந்து உட்கார்ந்தது. இவை ராகங்களைக் குறித்த விஷயங்கள் அல்ல. அந்த ராகங்கள் எப்படி உணர்ச்சியூட்ட பயன்பட்டன என்பதுதானே முக்கியம்.

‘‘காற்று வெளியிடை கண்ணம்மா’’விற்கு மோக கல்யாணியின் சாயலில் ராமநாதன் கொடுத்த வார்ப்பு, பாரதிப் பாடலுக்குக் கிடைத்த மிக நேர்த்தியான இசை வாகனமாக அமைந்தது. கப்பலோட்டிய தமிழன் பாடல்களுக்கான முதல் வரவேற்பு சரியாக அமையவில்லை. கேட்கக்கேட்கத்தான் அவற்றின் சிறப்பு புரிந்தது. அதேபோல் வெளியானபோது கப்பலோட்டிய தமிழன் மக்கள் ஆதரவைப் பெறவில்லை.



போகப்போக படத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பெருமை கொள்ளும் அளவிற்கு அதன் செல்வாக்கு வளர்ந்தது.

## 170) நிர்வாகத்திற்குப் பிடிக்காத சொல் ‘யூனியன்’

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் 1963-64 காலக் கட்டத்தில் யூனியன் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. கம்பெனியும் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. J.V.K. ராவ் தம்முடைய வலுவான கரம் கொண்டு யூனியன் தொடங்கப்படாதவாறு இடர்ப்பாடுகள் பலவற்றை மேற் கொண்டு வந்தார். அவற்றில் ஒன்று எந்த முகாந்திரமும் இல்லாமல் யூனியன் ஆரம்பிப்பதற்கு முனைப்பாய் இருந்த சிலரை வேலையை விட்டு நீக்குவது. மொழிப்போர் தியாகி களுக்கு திராவிடக் கட்சிகள் பதவிக்கு வந்தவுடன் அவ்வாறு உயிர் நீத்தவர்கள் பெயரில் பாலத்திற்கு பெயர் சூட்டுவது, போக்குவரத்துக் கழகங்களை நிறுவுவது, சிலை வைப்பது, பணமுடிப்பு அளிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டன. ஆனால் J.V.K. ராவின் வஞ்சகச் சூழ்ச்சியால் வேலை பறிபோன சத்யநாராயணா போல்வாருக்கு யாரும் எந்த இழப்பு நிதியும் வழங்கவில்லை. Charge man ஆக இருந்த சத்யநாராயணா விசாகப்பட்டினத்தில் யூனியன் அமைப்ப தற்கான வேலைகளை மறைமுகமாகச் செய்து வந்தார்.

தொலைத்தொடர்பு வசதிகள் அதிகஅளவில் அமைந் திராத காலகட்டம் அது. அலுவலகத்தில் Phonogram Note Book என்று ஒன்று இருக்கும். தந்தி அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் செய்தியைத் தெரிவித்திடுவார்கள். தொலைபேசியில் சொல்லப்படும் அந்தச் செய்தியை குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளவேண்டும். நாள், நேரம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். ஊழியர்களிடையே இருந்த ‘‘எட்டப்பன் ஒருவன்’’ சத்யநாராயணாவின் செயல்

பாடுகளைச் சந்திர சேகராவிடம் சொல்ல, ஒருநாள் மாலை குறிப்பேட்டில் தந்தி அலுவலகத்திலிருந்து வந்த கீழ்க்கண்ட செய்தியை நான் 5 மணிக்கு எழுதிக் கொண்டேன். “Sathya narayana dismisssed. Letter follows” இந்தத் தந்தியின் பின்புலத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இந்த செய்தியை நானே சத்யநாராயணாவிடம் தெரிவித்தேன். அந்தக் கால கட்டத்தில் ஊழியர்களை வேலையை விட்டு நீக்குவது என்பது சர்வ சாதாரணமாய் நடந்து வந்த ஒரு நிகழ்ச்சியாகும். சத்ய நாராயணாவின் வேலை நீக்கத்திற்குப் பிறகு ஊழியர்களிடையே விழிப்பு ணர்ச்சி ஏற்பட்டது. இன்று சத்யநாராயணா நாளை எவரோ என்ற அச்சம் தோன்றியது.

## 171) இந்தியன் ஆயில் எம்ப்ளாயீஸ் யூனியனின் தோற்றம்

சென்னையில் 1964ஆம் ஆண்டு எனது நண்பர்களான திரு.T.S.ரங்கராஜன், திரு.R.M. சுந்தரம், திரு.ஜேம்ஸ் பொன்னையா, திரு. கிருஷ்ணமூர்த்தி இன்னும் பலர் ஒன்றுகூடி நிர்வாகத்திற்குத் தெரியாமல் பல்வேறு இடங்களில் கூட்டங்கள் நடத்தி Indian Oil Employees Union-ஐ தோற்றுவித்தனர். அடுத்த சில ஆண்டுகளில் இந்த யூனியன் வலிமை மிக்கதொரு கூட்டமைப்பாக அமையப் பெற்றது. மற்றைய நிர்வாக அமைப்புகளில் இருந்த யூனியன்களைவிட Indian Oil Employees Union-தொழிலாளர் நலனையும் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மேன்மையையும் உயர்த்தும் பணியில் ஈடுபடுத்திக் கொண்டது.

## 172) Result As usual இதற்கு என்ன பொருள்?

சந்திரசேகரா A.I.M.ஆக Budge Budge-க்கிற்கு



பணிமாற்றம் பெற்று சென்றபிறகு, அந்த இடத்திற்கு F.Mascarenhas -என்பார் பணியில் அமர்ந்தார். இவர் கோவா மாநிலத்தைச் சேர்ந்தவர். இவருக்கு 5 பெண்கள். அவர் B பங்களாவில் வசித்து வந்தார். மாலை வேளை களில் விதவிதமான உடையணிந்து இவருடைய 5 பெண்களும் (சிறு வயதினர்) ஆயில் கிடங்கின் குட்டிச்சுவர்களின்மீது வரிசையாக நடந்து செல்வர். இது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். அவருடைய மனைவி கர்ப்பமுற்றிருந்தார். வாஸ்கோவிற்கு பிரசவத்தி ற்காகச் சென்றிருந்தார். Mascarenhas-மட்டும் விசாகப்பட்டினத்தில் இருந்தார்.

ஒருநாள் கீழ்க்கண்ட சொற்றொடர்கள் கொண்ட phonogram -வந்தது. To Mascarenhas Result As usual -அப்போது Mascarenhas -எங்கோ சென்றிருந்தார். இந்தத் தந்தியை Installation Manager-இடம் காண்பித்து இதன் பொருள் விளங்கவில்லையே என்றேன். அதற்கு அவர் Mascarenhas -க்கு 6ஆவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்து உள்ளது என்பதுதான் இந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். Mascarenhas -அன்று எவ்விதக் கலக்கமும் இன்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

## 173) Perception என்றால் என்ன?

உலகில் ஒரு மனிதரைப் பற்றிய செய்திகளை நம்முடைய விருப்பு வெறுப்புக்கேற்றவாறு மனதில் பதிவு கொள்கிறோம். சமூக இயலில் A Man is More Misunderstood than Understood என்ற சொற்றொடர் இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றது. ஒரு மனிதரைப் பற்றிய தவறான எண்ணங்களுக்கு நாம் அவ்வப்போது இடம் கொடுத்து விடுகிறோம். ஒருவர் மஞ்சள் கண்ணாடி அணிந்து பார்க்கக் கூடுமானால் அவர் காணும் பொருள்கள் அனைத்தும் மஞ்சள்

நிறம் உடையவையாகவே அவருக்குத் தோற்ற மளிக்கும். Perception என்றதொரு தலைப்பில் மேலாண் மைக் கொள்கைகள் பல வகுக்கப்பட்டு உள்ளன. ஒரு மனிதனுடைய சில செயல்களையும் பேச்சுக்களையும் மட்டும் நாம் கண்டும், கேட்டும் அந்த மனிதரைப் பற்றிய குணநலன்களை நம் உள்ளத்தில் உருவாக்கிக் கொள்கிறோம். திரைப் படங்களில் கொடுமையின் வடிவாகவே சித்தரிக்கப் படும் பாத்திரங்களில் நடிக்கும் எம்.என் நம்பியார், பி.எஸ். வீரப்பா போன்றவர்கள் அவர்களுடைய தனி நபர் வாழ்க்கை யிலும் இத்தகைய குணங்கள் கொண்டவர்களாகப் பெரும் பாலானோர் கற்பனை செய்து கொள்கிறார்கள். உண்மையில் அவர்கள் சிறந்த பண்பு நலன்களைக் கொண்டவர்களாயும், ஒழுக்கமுடையவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள் என்பதை மக்கள் அறிவதில்லை.

## 174) War Films

2ஆம் உலகப்போர் முடிவுக்கு வந்தபிறகு, உலகப் போரை மையமாக வைத்துப் பல திரைப்படங்கள் வெளி வந்தன. அவற்றில் ஹிட்லரும், அவனைச் சார்ந்த படை வீரர்களும் கொடுமையின் உருவமாகச் சித்தரிக்கப் பட்டிருப்பார்கள். மேலும் ஜெர்மானியர்கள் முட்டாள்களாக அந்தப் படங்களில் காணப்படுவர். அத்தகைய படங் களில் குறிப்பிடத்தக்கவை 1) Great Escape 2) Valkyrie 3) The Reader 4) Defiance 5) Inglurious Basterds 6) Indiana Jones and the Last Crusade 7) The Bridge on the River Kwai போன்ற திரைப்படங்களாகும்.

## 175) Great Escape

இவற்றில் John Sturges என்பார் இயக்கி 1963ஆம்



ஆண்டு வெளி வந்த Great Escape படம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. இத்திரைப்படத்தில் ஒரு நட்சத்திரப் பட்டாளமே நடித்திருந்தது. ராணுவ முகாமில் சிறையிலடைக்கப்பட்ட போர்க்கைதிகள் தங்களுடைய சாமர்த்தியத்தால் எவ்வாறு தப்பித்துச் செல்கிறார்கள் என்பதை மிகச் சிறப்பாகப் படமாக்கியிருந்தார் இயக்குனர். திரைப் படத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை ரசிகர்களின் கண்கள் திரையை விட்டு எங்கும் செல்ல முடியாத வகையில் காட்சிகளை அமைத் திருந்தார்.

## 176) The Bridge on the River Kwai.

போர்க்கைதிகளின் முகாமில் நடைபெறும் சம்பவத்தின் அடிப்படையில்தான் இப்படத்தின் கதை அமைக்கப்பட்டிருந்தது. கைதிகள் முகாம், பர்மாவில் உள்ள குவாய் என்ற நதியின் அருகில் அமைந்திருந்தது. இந்த முகாமில் உள்ள அதிகாரிகளும், காவலர்களும் கைதிகளைத் துன்புறுத்துவது ஒரு வாடிக்கையான சம்பவமாகும். முகாமின் மூத்த அதிகாரி ஹிட்லரின் நாஸி படையைச் சார்ந்தவன். ஒரு கொடுமைக்காரன். அவன் கைதிகளைக் கொடுமைப்படுத்தி அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்பவன். கைதிகளுக்குச் சரியான சாப்பாடும் வழங்கப் படுவதில்லை.

இந்த சமயத்தில்தான் கர்னல் நிக்கல்சன் என்ற பிரிட்டீஷ் அதிகாரி அங்கே வருகிறார். ஜப்பானிய வீரர்களைவிட பிரிட்டீஷ் வீரர்கள்தான் சிறந்தவர்கள் என்று நிரூபிக்க முடிவெடுக்கிறார் நிக்கல் சன். அப்படி ஒருவேளை ஜப்பானிய வீரர்கள் தோற்றுவிட்டால், அந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது என்பதை

முடிவு செய்துதான் நிக்கல்சன் இந்தப் பந்தயத்திற்கு சம்மதிக்கிறார். ஜப்பானிய வீரர்களுடன் இணைந்து ஒரு பாலம் கட்டுவதற்கு சம்மதிக்கிறார் நிக்கல்சன். ஆனால் இந்தப் பாலத்தின் மூலம் பிரிட்டீஷ் படைகளைத் தகர்ப்பது தான் ஜப்பானிய வீரர்களின் நோக்கமாக இருந்தது. அதற்காகத்தான் பாலத்தைக் கட்டுகிறார்கள். இதை அறியாமல் நிக்கல்சனே இதற்கு உதவுகிறார்.

ஆனால் இந்தப் பாலத்தைத் தகர்ப்பதற்கு வேறு ஒரு குழு அதாவது கமாண்டோ ஃபோர்ஸ் திட்டம் தீட்டுகிறது. இந்தக் குழுவிற்கு ஒரு பிரிட்டீஷ் மேஜர்தான் தலைவர். படத்தின் கிளைமாக்ஸ் மிகப் பிரமாதமாகப் படமாக்கப் பட்டிருந்தது. அந்தப் பாலத்தின் மீது ஒரு ஜப்பானிய ரயில் வந்துகொண்டிருக்கிறது. அந்தக் கமாண்டோ ஃபோர்ஸ் பாலத்தின் கீழ் வெடிகுண்டை வைத்துவிடுகிறது. ரயில் வரும் சமயம் சரியாக வெடிகுண்டு வெடிக்க கமாண்டோக்கள் நிக்கல்சன் மற்றும் பலரும் இறந்துவிடுகிறார்கள். ரயில் பெட்டிகள் துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கின்றன. ஒரு போரின் பாதிப்புகளை இப்படம் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. இறுதிக் காட்சியில் நிக்கல்சனை அந்த வெடிகுண்டு வைக்கும் நிபுணர் சுடும்பொழுது, அவர் தற்செயலாகத்தான் வெடிகுண்டு மீது விழுந்துவிடுகிறார். சினிமா வரலாற்றில் முக்கியமான கிளைமாக்ஸ் காட்சிகளில் The Bridge on the River Kwaiஇன் கிளைமாக்ஸ் காட்சியும் ஒன்றாகும்.

## 177) ஏப்ரல் 20 ஹிட்லரின் பிறந்தநாள்

1964ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் நாள் ஹிட்லருடைய பிறந்த தினத்தை நாங்கள் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்திலிருந்த வரலாற்றுப் பேராசிரியர் திரு. சர்மா இனிப்புகள் வழங்கி கொண்டாடி னார். இவர் விசாகப்பட்டினத்தில் புகழ்பெற்று விளங்கிய A.V.N. கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணி புரிந்துவந்தவர். உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் இனிப்பு வழங்கியபோது “உலகமே வெறுத்து ஒதுக்குகின்ற ஹிட்லரின் பிறந்த நாளை நீங்கள் கொண்டாடுகிறீர்களே” என்று அவரிடம் வினவினேன். அதற்கு அவர் ஹிட்லரின் பல்வேறு பண்புகளைக் குறித்து ஊடகங்களில் சரியாகச் சித்தரிக்கப்படாததாலும், புத்தகங்களில் உள்ளபடி எழுதப்படாத தாலும் மக்கள் ஹிட்லரை ஒரு கல்நெஞ்சுக் காரன், கொடுமையின் வடிவே உருவானவன் என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்றுகூறி கீழ்க்கண்ட செய்திகளை என்னிடம் தெரி வித்தார். அதன் பிறகு ஹிட்லரைப் பற்றிய பல புத்தகங்களை நான் படிக்க லுற்றேன். அவர் கூறியது உண்மை என்பதை அறிந்து கொண்டேன்.



## 178) ஹிட்லரின் விரும்பத்தக்க பண்புகள்

“வெளி நாட்டாருடைய பிரச்சாரத்தின் சக்தியோ என்னவோ ஹிட்லர் படங்களில் கடுகடுத்த முகத்துடனேயே காணப்படுகிறான். இது சர்வாதிகாரிகளுக்குப் பொதுவாக ஏற்பட்ட சாபம் போலிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே இவர்கள் அப்படியில்லை. இவர்கள் மனித நேயம் மிக்கவர்கள். அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் இவர்களிடத்திலும் உண்டு. இவர்களும் மற்றவர்களைப் போல் சிரிப்பார்கள், விளை யாடுவார்கள் வாழ்க்கையிலே எல்லோருக்கும் உள்ள பற்றைப்போல் இவர்களுக்கும் பற்று உண்டு. அதிலே

இன்பம் நுகரும் சக்தி உண்டு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இவர்களுடைய ஒரு பக்கந்தான் எல்லாருக்கும் காட்டப் படுகிறது. மற்றொரு பக்கம் இருக்கிறதென்று கூட எண்ணப் படுவதில்லை.

ஹிட்லரின் முகத்திலே எப்பொழுதும் புன்சிரிப்பு விளையாடிக் கொண்டிருக்கும். யாருடனும் பணிவாகவே பேசுவான். தான் சர்வாதிகாரி என்பதைச் சிறிதும் காட்டிக் கொள்ளமாட்டான். ஹிட்லர் ஒழுக்கத்தில் சிறந்தவன். அதனாலேயே இவனிடத்தில் தன்னம்பிக்கையும், கண்டிப்பும் நிரம்பியிருக்கின்றன. இவன் சிகரெட் முதலிய போதைப் பொருள்களை உபயோகிப்பதில்லை. மது அருந்துவ தில்லை. மாமிசத்தைக் கையால் தொடுவதுமில்லை. இவன் உண்ணும் மரக்கறி ஆகாரமும் சாதாரண குடியானவர்களின் ஆகார வகை போலவே இருக்கும். பல தினுசுகள் இரா. ரொட்டி, பழம், பால், பருப்பு, ஆகியவை களில் ஏதேனும் ஒன்றை உண்ப தோடு இவன் நிறைவு கொள்வான். இந்த எளிய உணவையும் இவன் தனியாக உட்கார்ந்து சாப்பிட மாட்டான். யாராவது இரண்டொரு நண்பர்களை விருந்தினர்களாக வைத்துக் கொண்டுதான் சாப்பிடுவான். சாப்பிடும் போது உரக்கச் சிரிப்பான். உற்சாகத்துடன் பேசுவான். இந்த உற்சாகத்திலே சில சமயங்களில் தன்னை மறந்து போய் எழுந்து நிற்பான்; மேஜையைத் தட்டுவான். பிறர் நகைப்புடன் பேசினால் அதனைப் பூராவும் அனுபவிப்பான். எல்லாருடனும் சமமாகப் பழகுவான்.

ஹிட்லருக்கு விவாகமாகவில்லை. ப்ரஹ்மசாரி யாகவே காலத்தை கழித்து வந்தான். இது விஷயமாக இவனிடம் எவ்விதமான குறைபாடும் கூற முடியாது. பெண்களிடத்தில் மிக அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்வான். தாய்மைக்குச் சட்ட பூர்வமான ஒரு கௌரவ ஸ்தானம் கொடுப்பதைக் கொண்டே இவன் பெண்ணுலகத்தின்மீது காட்டும் மதிப்பு வெளிப்படும்.



காதல் வாசனையை நுகராதவன் ஹிட்லர். சங்கீதம், ஓவியம், முதலிய உயர்தரக் கலைகளில் ஈடுபாடு கொண் டவன். நாடகங்கள் பார்ப்பதிலே இவனுக்கு அதிக ஆசை யுண்டு. சங்கீதத்திலும் அப்படியே. சிறப்பாக, வாக்னர், பீத்தோவன் முதலியோரின் பாடல்களிலே இவனுக்கு அதிக பிரேமை உண்டு. அவற்றை யார் பாடினாலும் மெய்மறந்து கேட்பான். அச்சமயத்தில் தன் பதவி கௌரவத்தையும் கவனிக்க மாட்டான். பாட்டு முடிந்தவுடன் பாடியவரைக் கட்டித் தழுவிக் கொள்வான். அவர்களுக்கு தன் கையிலே இருந்தால், பாராட்டுதலுக்கு அறி குறியாக ஒரு பூச் செண்டையும் கொடுப்பான். அரசாங்க வேலைகளுக் கிடையே சிறிது ஓய்வு பெற வேண்டுமானால், சங்கீதம் கேட்டே மன அமைதி வைத்துக் கொண்டு சித்திரங்கள் வரைவான். எழுதி முடிந்ததும் அதனைத் திருப்பித் திருப்பிப் பார்ப்பான். அதில் மகிழ்ச்சி கொள்வான். இவன் அவ்வப் பொழுது வரைந்த சித்திரங்கள் இவன் வீட்டில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன.

காதலை வடிவமாகக் காணாத இவன், குழந்தை களிடத்தில் அவை யாருடைய குழந்தையாயிருந்தாலும், மிக அன்பாகப் பேசுவான். அவைகளோடு வேடிக்கை செய்வான். ஓடி விளையாடுவான். குழந்தைகளிடத்தில் இவன் வைத்திருக்கும் அபாரமான ப்ரீதியைக் கண்டே, தேச மக்கள் இவனுடைய 47ஆவது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது, (20-4-1936) சுமார் ஆயிரம் தொட்டில்கள் வாங்கிக் கொடுத்தனர். இவையனைத்தையும் இவன் ஏழைக் குழந்தை

களின் உபயோகத்திற்குக் கொடுத்துவிடுமாறு உத்திரவு செய்தான்.

ஹிட்லர் பிறருடைய தயவுக்காகவோ, தாட்சண்யத்திற்காகவோ எதையும் செய்ய மாட்டான். சிறப்பாக, பொதுப் பணத்தைக் கையாளும் விஷயத்தில் மிகவும் சிக்கனமாகவும் கண்டிப்பாகவும் இருப்பான். 1923ஆம் ஆண்டு நவம்பர் புரட்சியின்போது இவனோடு மாறுபட்ட வான்கார் என்பவனே ‘‘நான் ஹிட்லரோடு எல்லா விஷயங்களிலும் ஒற்றுமையான அபிப்பிராயங் கொள்ளவில்லை. ஆனாலும் அவன் மிகவும் நாணயஸ்தன் என்பதை நான் மறுக்க முடியாது’’ என்று கூறுகிறான். அரசாங்க தோரணையிலோ தனி முறையிலோ ஹிட்லருடன் யாராவது பேச வருவார்களானால் அவர்களை எழுந்து நின்றே வரவேற்பான். அவர்கள் விடைபெற்றுச் செல்லும்போது கூடவே தொடர்ந்து சிறிதுதூரம் வந்து வழி விடுவான். தலை வணங்கி வந்தனங் கூறுவான். இவனுடைய உடை, பாவனை ஆகிய இரண்டையும் பார்த்தால், சாதாரண ஒரு கீழ்த்தர உத்தியோகஸ்தனுக்கும் இவனுக்கு எவ்வித வேற்றுமையும் காணப்பட மாட்டாது. மற்றெல்லா வகையிலும் போலவே உடையிலும் இவன் ஆடம்பரம் இல்லாதவனே.

ஹிட்லருக்கு நாய்களிடத்தில் அதிக பிரியம். மக், வுல்ப், பிளாண்டா என்ற பெயருள்ள மூன்று நாய்களை இவன் அநேகமாகக் கூடவே வைத்துக் கொண்டிருப்பான். அவைகளுடன் குதித்து விளையாடுவான். ஆபர்ஸால்ஸ் பெர்க்கிலுள்ள பெர்க்டஸ் காடன் என்ற பிரதேசத்தில் ஹிட்லருக்குச் சொந்தமான வீடு ஒன்று இருந்தது. இதற்கு வாகெட் பெல்ட் என்று பெயர். முனிச்சிலிருந்து மூன்று மணிநேரம் ரெயிலில் பிரயாணம் செய்தால் இங்கு போய்ச்



சேரலாம். மலையடி வாரமும் ஏரிக்கரையும் சந்திக்கிற இடத்திலே இந்த வீடு அமைந்தி ருந்தது. இங்கு வந்துதான் ஹிட்லர் ஓய்வு கொள்வது வழக்கம். அல்லது அரசாங்கக் காரியங்களில் முக்கியமானவற்றை அமைதியாக இருந்து கவனிப்பதற்கு இங்கு வருவான். வாகென் பெல்ட் ஆடம்பரமில்லாத முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் நிர்வாகம், ஹிட்லரின் சகோதரி அஞ்சலோ ரௌபாலின் கீழ் இருந்தது. விருந்தினரை எளிய முறையில் உபசரிக்கும் பொறுப்பு முழுவதையும் இவள் ஏற்றுத் திறமையாக நடத்தி வந்தாள். ஹிட்லர் இந்த இடத்திற்கு வந்து அமைதியாக இருந்து வேலையைக் கவனிக்க விரும்பினாலும், மக்கள் இவனைச் சும்மா விடுவதில்லை.

பெர்லினிலும் இவன் மிக எளிய முறையிலேயே வசித்து வந்தான். இங்குள்ள இவன் வேலை பார்க்கும் அறையானது சுமார் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்டது. இதில் ஒரு மூலையில், ஜன்னலுக்கருகாமையில் பெரிய மேஜை போடப்பட்டிருக்கும். அதைச் சுற்றிச் சில நாற்காலிகள் வேறுவிதமான ஆடம்பர வஸ்துக்கள் இங்குக் கிடையா. இந்த இடத்திலிருந்து கொண்டு தான் ஹிட்லர் ஒரு நாளைக்குப் பதினெட்டு மணிநேரம் வீதம் வேலை செய்து வந்தான். ஹிட்லர் எதையும் கூர்ந்து கவனிப்பான். ஆழ்ந்து படிப்பான். படித்த வற்றுள் முக்கியமானவற்றை அவ்வப் பொழுது குறித்துக் கொள்வான். முசோலினியைப் போல் இவன் பெரிய படிப்பாளி என்று சொல்ல முடியாது. ஆனால் அநுபவ ஞானம் இவனுக்கு நிரம்ப உண்டு. இவன் மக்களின் மனிதன். பாமர மக்களை வசியப்படுத்தும் ஆற்றல் இவனுக்கு இருப்பதைப் போல் வேறொருவருக்கும் இல்லையென்று சொல்லப்படுகிறது.

ஜார் பிரதேசம், ஜெர்மனியிடம் ஒப்புக்கொடுக்கப் பட்ட தினத்தன்று, (1-3-1935) இவன் ஜார்ப்ரூகெனுக்குத் திடீரென்று வந்தான். அன்று நல்ல மழை. ஆனால் ஹிட்லரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலினால், லட்சக் கணக்கான மக்கள், வீதிகளில் மழையில் நனைந்தவண்ணம் நின்று கொண்டிருந்தார்கள். ஹிட்லர், ஒரு மோட்டார் வண்டியின்மீது நின்று கொண்டு மக்களுக்குக் காட்சி தந்தான். இவன் எதிரே துருப்புகள் அணிவகுத்துச் சென்றன. அப்பொழுது ஹிட்லர் மழைக்கோட் ஒன்றினை மேலே போட்டுக் கொண்டிருந்தான். இத்தனை மக்களும் மழையிலே நனையும் போது நமக்கு மட்டும் இந்தப் பாதுகாப்பு எதற்கு என்று சொல்லி மழைக் கோட்டை கழற்றி எறிந்துவிட்டான். தானும் மழையிலேயே நனைந்தான். சுமார் ஒரு மணி நேரத்திற்குமேல் நின்ற இடத்திலேயே, மக்களுக்கும் துருப்புகளுக்கும் பதில் மரியாதை செய்தான். இதனால் இவனுக்கு ஜலதோஷம் பிடித்தது. ஆனால் இது மக்களை எவ்வளவு தூரம் வசீகரப்படுத்திவிட்டது? இந்தத் தன்னல மற்ற தன்மையினாலேயே, இவனை ஜெர்மானியர்கள் தெய்வமாகப் போற்றுகிறார்கள்''

## 179) Merger of Indian Refineries Ltd and Indian Oil Company

1964ஆம் ஆண்டு செப்டம்பர் முதல்நாள் இந்தியன் ஆயில் கம்பெனியும், இந்தியன் ஆயில் Refineries நிறுவனமும் ஒன்றி ணைக்கப்பட்டு Indian Oil Corporation என்று பெயரிடப்பட்டது. ரஷ்யாவின் தொழில் நுட்ப உதவியோடு கொயாலி எண்ணெய் சுத்தி கரிப்பு சாலை தொடங்கி வைக்கப்பட்டது. கௌஹாத்தி, கொயாலி ஆகிய எண்ணெய் சுத்திகரிப்பு சாலைகளில் இருந்து வட இந்தி



யாவின் உட்பகுதிக்கு சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் வகைகளை எடுத்துச் செல்வதற்கு கொயாலி அஹமதாபாத் மற்றும் கௌஹாத்தி Siliguri எண்ணெய்க் குழாய்கள் (Pipe lines) அமைக்கப்பட்டன.

இந்தியன் ஆயில் நிறுவனம் விற்பனை செய்து வந்த மண்ணெண்ணெய்க்கு ''ஜோதி மண்ணெண்ணெய்'' என்ற பெயர் வழங்கி வந்தது. மற்றைய எண்ணெய்க் கம்பெனிகள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலம் விற்பனை செய்யப்படும் பெட்ரோலியப் பொருள்கள் தரமற்றவை என்ற பிரச்சாரத்தைச் செய்து வந்தனர். ஒவ்வொரு நாளும் சுமார் ஆயிரம் 18.5 லிட்டர் கொண்ட மண்ணெண்ணை டின்கள் விசாகப்பட்டினம் எண்ணெய்க் கிடங்கில் நிரப்பப்பட்டன. விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவன எண்ணைய்க் கிடங்கிலிருந்து ராய்ப்பூர், பிலாய், பொண்டமுண்டா, ராய்ச்சூர், கட்டாக், Bailadila, Jabalpur, Jamshedpur, ஆகிய வட மாநில நகரங்களுக்கும், அனகாபள்ளி, Tuni, ராஜமுந்திரி, Nidadavole, காக்கிநாடா, மசூலிப்பட்டினம், Razole, விஜயவாடா, ஆகிய தென் மாநில நகரங்களுக்கும் லாரிகள் மூலமாகவும் ரயில்வே ஆயில் Tanks மூலமாகவும், பெட்ரோல், டீசல், கெரோசின் ஆகியவை அனுப்பப் பட்டு வந்தன.

## 180) R.I.P.M.S.C.

வேகன்கள் மூலம் எண்ணெய் அனுப்பப்படுவதை ஒழுங்கு படுத்துவதற்காக Railway Inland Petroleum Movement Sub Committe என்ற குழு செயல்பட்டு வந்தது. பல நாட்கள் இவ்வாறு அனுப்பப் படும் ஆயில் வேகன்கள் மாலை 5 மணிக்குத்தான் siding எனப்படும் எண்ணெய் நிரப்பப்படும்

இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தப் படும். ஆரம்ப காலத்தில் அதாவது 63-64 கால கட்டத்தில் உள் கட்டமைப்பு வசதி எனப்படும் Infrastructure ஏதுமில்லாது, நேரம் காலம் பார்க்காது சரியான வேளையில் உணவு உட்கொள்ள இயலாது ஊழியர்கள் அனைவரும் உழைத்து வந்தனர்.

## 181) ஒரு காலாண்டில் 32 மணிக்குமேல் O.T. கிடையாது

Accountant General Office-லிருந்து இடம் பெயர்ந்தவர்களே Accounts Department-இல் பணிபுரிந்து வந்தனர். தொழிற்சாலை சட்டம் எனப்படும் Factories Act-இன்படி ஒரு தொழிலாளி மூன்று மாத கால அளவில் 32 மணிநேரம்தான் ஓவர்டைம் எனப்படும் அதிகப்படி வேலையைச் செய்யமுடியும். ஒவ்வொரு மாதமும் வேலைப் பளுவின் காரணமாக ஒவ்வொரு தொழிலாளியும் சுமார் 60லிருந்து 80 மணி நேரம் ஓவர்டைம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர்களுக்கான ஓவர் டைத்தை மேற் குறிப்பிடப்பட்ட சட்ட விதியின்படி Accounts Department நிராகரித்துவிட்டது. ஆயினும் தொழிலாளர்கள் எந்தவித மன வருத்தமும் இன்றிப் பணிபுரிந்து வந்ததே இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

*(1992ஆம் ஆண்டு மே மாதம் ஹைதராபாத் நகரில் அமைந்துள்ள Sanathnagar எண்ணெய்க்கிடங்கில் உயர்நிலை மேலாளராக நான் பணி யாற்றி வந்தேன். ஒருநாள் எண்ணெய் நிரப்ப வந்த லாரியின் கிளீனர் அவன் பணிபுரிந்து வந்த லாரி டிரைவரின் கவனக்குறைவாலே Depo-வின் உள்ளேயே மரணத்தை எதிர்கொள்ள நேரிட்டது. அந்த மரணம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக வந்த Inspector of Factories திரு ராஜு நேர்மையாளர், லஞ்சம் வாங்காதவர். மரணம் தொடர்பான செய்திகளைச் சேகரித்தபிறகு தம்முடைய Factory Inspection-யும் அன்றே முடித்துக் கொள்வதாகச் சொல்லி தம்முடைய ரிப்போர்ட்டைத் தயார் செய்தார். எந்த எண்ணெய்க் கம்பெனியிலும் ஓவர்டைம் அதிக அளவில் கொடுக்கப்படாது பணியை முடிக்க இயலாது. அது அந்தத் தொழிலுக்கே உரிய தனிப்பட்ட தன்மையாகும். மேலும் ஒரு கால கட்டத்தில் சம்பளத்தை விட ஓவர்டைம் வாங்கும் தொழிலாளிகளே அதிக அளவில் காணப் பட்டனர்.*



*திரு. ராஜு அவர்கள் என்னிடம் சில குறிப்பிட்ட தொழி லாளிகள் Factory Act சட்டத்தின் விதிகளை மீறி அதிக அளவில் ஓவர்டைம் செய்துள்ளனர் என்று சுட்டிக்காட்டி, இனிவரும் காலங்களில் இது கட்டுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். நான் அவரிடம் இந்தக் குறிப்பை நீக்கிவிடுங்கள், இது பெரிய ஆபத்தை விளைவிக்கும் என்று சொன்னேன். அதற்கு அவர் Department அதிகாரிகள் இந்த அறிக்கையைப் படித்தபிறகு இந்தக்குறிப்பை நீக்கி விடுவார்கள் என்று சொன்னார். "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே" என்று நானும் கையெழுத்திட்டேன். துறை ரீதியாக திரு.ராஜு மீது அவருடைய மேலதிகாரி நல்ல எண்ணம் கொண்டிருக்கவில்லை. அதன் விளைவாக ஓவர்டைம் கொடுத்ததற்காக என்மீது லேபர் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது, இவ்வாறு ஓவர்டைம் கொடுத்ததைச் சரியாகக் கண்காணிக்காததற்காக திரு.ராஜுமீது துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. Factory Act-சட்டப்படி இந்தக் குற்றத்திற்கு மூன்று மாத கடுங்காவலும், 5000ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம். ஒருவேளை நான் தண்டிக்கப்பட்டால் இந்தியா முழுவதும் உள்ள எண்ணெய்க் கம்பெனிகளின் பணியில் பெருத்த சலனம் ஏற்படும், சரியான நேரத்தில் பெட்ரோலியப் பொருள்கள் மக்களைச் சென்றடையாது என்பதனை ஆந்திர அரசின் முதன்மைச்*

*செயலாளருக்கு எடுத்துக்கூறிய பிறகு அந்த வழக்கு அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டது. நானும் தண்டனையிலிருந்து தப்பித்தேன்.)*

## 182) யாரால் "இந்த விதியை" மாற்ற இயலும்?

International Labour Conference ஒன்றுதான் இந்த ஓவர்டைம் விதியை மாற்றமுடியும். இந்த விதியைத் தளர்த்துவதற்கு மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத் திற்குக்கூட உரிமையில்லை. இன்றும் எங்கும் இந்த சட்டவிதி மீறப்படுகிறது என்பதே உண்மை. கண்டு கொள்ளாமல் இருப்பதே சிறந்த செயலாகும் என்பதற்கு ஒரு காலாண்டிற்கு 32 மணிநேரம்தான் ஓவர்டைம் அனுமதி தரப்படும் என்ற விதியும், அதன் நடைமுறையும் தக்க சான்றாகும்.

## 183) Indane எரிவாயு விற்பனைக்கு வெளிவரத் தொடங்கியது

1964ஆம் ஆண்டு இண்டேன் எனப்படும் சமையல் எரிவாயு வட மாநிலங்களில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த எரிவாயு Crude எனப்படும் பூமியிலிருந்து கிடைக்கும் திரவத்தை சுத்திகரிக்கும் போது முதன்முதலில் வெளிப்படும் வாயுக்களாகும். நடைமுறையில் எந்த மனிதன் இறந்து எரிவாயுவாக நம் இல்லத்தில் இருக்கிறான் என்று சொல்ல இயலாது.

## 184) பெட்ரோலியப் பொருள்களின் "அசைவத் தன்மை"

லத்தீன் மொழியில் "பெட்ரா" என்றால் பாறை. "ஒலியம்" என்றால் எண்ணெய். ஆக, பாறைக்குள் இருக்கும் எண்ணெய் என்ற பொருளில்தான் இந்தப் பெயர் சூட்டப் பட்டு இருக்கிறது. "நான் அசை வத்தைக் கிட்டே சேர்க்க மாட்டேன்" என்பவர்கள் பெட்ரோலியத்தைப் பயன் படுத்தவே கூடாது. ஏனென்றால், உயிரினங்கள் இல்லை யென்றால் பெட்ரோலியம் இல்லை. கடலில் இறந்த நுண்ணு யிர்கள் கடலின் அடிவாரத்திலோ அல்லது கடலுக்கருகே இருக்கும் மணல் பகுதியிலோ புதைந்து விடுகின்றன. பல ஆயிரம் ஆண்டு களுக்குப் பிறகு பூமியின் வெப்பம், மேற்புறத்தில் அளிக்கப்படும் அழுத்தம், பாக்டீரியாவின் செயல்பாடுகள் இவை எல்லாம் சேர்ந்து இந்த உயிரினங்களை எண்ணெய் போன்ற திரவமாக மாற்றிவிடுகின்றன. அந்தத் திரவம் மூக்கைத் துளைக்கும் வாசம் கொண்டதாக கொழ கொழவென இருக்கும். அதுவே Crude.

பொதுவாக ஆக்ஸிஜனே இல்லாத பகுதிகளில்தான் இந்த மாற்றம் நடைபெறுகிறது. எனவே பெட்ரோலியக் கிணறுகள் கடல் ஆழத்தில் காணப்படுவதில் வியப்பு இல்லை. நிலத்திலும் பெட்ரோலியக் கிணறுகள் இருக் கின்றன. ஆனால், ஒரு காலத்தில் அந்தப் பகுதி கடலால் சூழப்பட்டதாக இருந்திருக்கும் என்கிறார்கள் அறிவிய லாளர்கள். இன்று L.P.G. சமையற்கட்டில் மட்டுமல்லாது கார்களிலும் ஆட்டோ ரிக்ஷாக்களிலும் நிரப்பப்படுகின்றது. L.N.G. எனப்படும் L.P.G.ஐப்போன்ற மீத்தேன் தொடக்கமான வாயுக்களைக் கொண்டு பல மாநகரங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. (இது மாசுக்கட்டுப் பாட்டுக்கு உதவு கிறது.) ஆரம்ப கால கட்டத்தில் L.P.G.ஐப் பயன்படுத்து வதற்கு மக்கள் தயக்கம் காட்டி வந்தனர்.

## 185) Constitution 16th Amendment

தி.மு.க.வின் தனித்திராவிட நாடு கோரிக்கையை

ஒடுக்கு வதற்காக 1963ஆம் ஆண்டு இறுதியில் இந்திய அரசியல் சட்டத்தின் 16ஆவது திருத்தம் கொண்டு வரப் பட்டது. பேச்சுரிமை சுதந்திரம் இந்திய அரசியல் சட்டத்தின் 19(1)(a) விதிப்படி அளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குச் சில வரம்புகள் அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் இந்திய நாட்டை கூறுபோட (பேச் சளவில்) விழைந்த தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், பஞ்சாபில் அகாலிதளத்தையும் ஒடுக்கு வதற்காக 16ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

*(நமது அரசியல் சட்டம் இதுகாறும் 94 முறை திருத்தப்பட்டுள்ளது. எந்தச் சூழ்நிலையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டது பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். 7-6-1950ஆம் நாள் சென்னை உயர்நீதி மன்றம் செல்வி செம்பக்கனம் துரைராஜன் என்பாருக்கு அவள் ப்ராஹ்மண குலத்தைச் சார்ந்தவள் என்பவள் என்பதால் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தும் மருத்துவக் கல்லூரியில் இடம் மறுக்கப்பட்டது செல்லாது என்று தீர்ப்பு வழங்கியது. இவ்வாறு உயர் கல்வி படிப்பிற்கு ப்ராஹ்மண வகுப்பைச் சேர்ந்த ஒருவர்க்கு அனுமதி மறுக்கப்பட்டது* Article 15 & 29 (2) *ஆகியவற்றிற்கு முரணானது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மாநில அரசாங்கம் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றமும் தனது 9-4-1951ஆம் நாள் அளித்த தீர்ப்பில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பினை உறுதி செய்தது.*

*இதன் விளைவாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் 1951ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. சென்னை மாநில அரசு மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை* **Communal G.O.** *என்ற மாநில அரசின் ஆணைப்படிதான் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தது.*



*இதன்படி 6 ப்ராஹ்மணர் அல்லாத மாணவர்கள், 2 பின்தங்கிய வகுப்பினர், 2 ப்ராஹ்மணர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் 4 என்ற விகிதப்படி 14 மாணவர்கள் தொகுப்பு தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்று விதித்திருந்தது. ப்ராஹ்மண எதிர்ப்பின் முதல் வடிவமே மாநில அரசின் இந்த* **Communal G.O.** *தான் பிற்படுத்தப்பட்ட மக்களை சமுதாயத்தின் மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்காக அரசாங்கம் எடுத்துக் கொண்ட முதல் முயற்சி என சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் திரு.* **V.K.T.Chari** *வாதாடினார். (தான் சார்ந்திருக்கும் சமுதாய நலனுக்கு எதிராக வாதாடும் திறமை கொண்ட புத்தி கூர்மை படைத்த ப்ராஹ்மணர்களே திராவிடக் கட்சிகள் இந்த நாட்டை ஆளும் போது தேவைப்படுகிறது. ஆனால் அவ்வப்போது அவர்களை ஆரியர்கள், சூழ்ச்சிக் காரர்கள் என்று இகழ்ந்து விஷத்தைக் கக்கும் கூட்டத்தினர் இவர்கள்.*

*இதற்கு உதாரணம் ராமர் பாலம் இடிக்கப்பட்டது சரியே, ராமர் பாலம் என்று ஒன்று இல்லை என்று வாதாடியவர்கள் திரு. மோகன் பராசரனும்,* V.T.*கோபாலனும் ஆவர். ஒரு முகம்மதியரோ அல்லது ஒரு கிறிஸ்தவரோ தான் சார்ந்திருக்கும் சமுதாயத்திற்குத் தீமை பயக்கும் அரசாணை சரியென்று அவர் சர்க்கார் தரப்பு வழக்குரைஞராக இருந்தாலும் வாதாட மாட்டார். ஆனால் பணமும் பதவியும் கிடைத்தால் போதும் ப்ராஹ்மண சமுதாயத்தைச் சார்ந்த வழக் குரைஞர்கள் ப்ராஹ் மணர்களுக்கு எதிரான அரசாணையை சரியென்று வாதிடத் தயங்கமாட்டார்கள். அதனால்தான் அறிவுச் செல்வம் நிரம்பிய இந்தச் சமூகம் தனக்குரிய உயர் வினைப் பெற இயலவில்லை.*

*உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சென்னை மாநில அரசின் மற்றைய* Communal Quota *உத்தரவுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. அப்போதைய சென்னை மாநில முதலமைச்சரான* P.S. *குமாரசாமி ராஜா இந்திய அரசியல் அமைப்புச்*

*சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து Communal Quotaவை காப்பாற்ற வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். இதன் விளைவாக இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்பினர் என்ற சொற் றொடரிலிருந்து "பொரு ளாதார ரீதி" என்ற சொல் நீக்கப்பட்டது. இன்றுவரை ஜாதி அடிப் படையில் கோட்டாக்கள் அமுல் படுத்தப்படுகின்றனவே யொழிய உயர் ஜாதியினரிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கியோர் உள்ளனர் என்பதை அரசியல் கட்சிகள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். ப்ராஹ்மணர்களுடைய வாக்கு வங்கியைப் பற்றி எந்த அரசியல் கட்சியும் கவலை கொள்வதில்லை. இன உணர்வு என்பது என்ன? என்பதை அறியாத இந்த சமூகத்தினர் தமிழ்நாட்டு ஜனத்தொகையில் 7 சதவிகிதம்உள்ளனர். இதைவிடக் குறைந்த மக்கள் தொகை கொண்ட மற்றைய இனத்தவர் தமது இனத்துக்குரிய உரிமைகளைக் கேட்டு வாங்கும்போது இந்தச் சமூகத்தின் வழக்குரைஞர்கள் மட்டும் அந்தச் சமூகத்தின் நலனுக்கு எதிரான வழக்குகளில் ஆஜராகிப் புகழைத் தேடிக் கொள்கின்றனர். 1951ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திருத்தமே இன்றுவரை 94 திருத்தங்களுக்கு வித்திட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.)*

## 186) ஏமாறாதே! ஏமாற்றாதே!

நாட்டில் ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்று பவர்கள் வாழ்ந்து கொண்டேயிருப்பார்கள் என்னும் மூதுரை எல்லாக் காலத் துக்கும் பொருந்தும். ஈஸ்வரி பைனான்ஸ், ரமேஷ் கார்ஸ், ஸ்டெர்லிங் மர வளர்ப்பு போன்ற நிறுவனங் களில் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து தங்கள் சேமிப்பை இழந்தவர்கள் ஆயிரக் கணக்கானோர். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எந்த மாற்றத்தையும் மனிதர்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை.



இன்றும் லட்சக்கணக்கில் பணத்தைப் பறிகொடுத்து போலீஸ் கமிஷனரிடம் மனு கொடுப்பவர்களை அதிக அளவில் காண்கிறோம்.

1963ஆம் ஆண்டு நான் வேலையில் சேர்ந்தபோது எனக்குக் கிடைத்த சம்பளம் பிடித்தங்கள் போக 120 ரூபாய். இந்த 120இல் என்னுடைய உணவு, போக்குவரத்து, இருப்பிடம் ஆகிய செலவுகளுக்காக 80ரூபாயை வைத்துக் கொண்டு 40ரூபாயை என் தந்தையாருக்கு மணியார்டர் செய்துவிடுவேன். தன்னுடைய பிறந்தநாள் தொடங்கி வறுமையிலேயே வாழ்க்கையை ஓட்டியவர் என் தந்தையார். அவர் இறக்கும்போது பிள்ளைகளுக்கு எந்த சொத்தையும் சேர்த்து வைக்கவும் இல்லை. கடன் சுமையையும் வைத்து விட்டுச் செல்ல வில்லை. மாதம் தவறாது என்னுடைய செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு ரூபாய் 40ஐ என் தந்தையாருக்கு அனுப்பி வைத்திடுவேன். அவரும் தன் செலவுக் கணக்குகளை நீண்ட பட்டியலிட்டு பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதிடுவார்.

தெலுங்குப்படம் ஒன்றில் தன் பிள்ளையை வளர்த்து ஆளாக்கி யதற்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவானதாகப் பட்டியல் ஒன்றை பெண் கொடுக்க முன் வருவோரிடம் கொடுத்து அதை வசூல் செய்ய முற்படுவான் அவன் தந்தை. இது ஒரு நகைச்சுவைக் காட்சியாக அந்தத் திரைப்படத்தில் திணிக்கப்பட்ட போதும் அதில் ஒரு உண்மை ஒளிந்து உள்ளது. உலகத்திலே எந்தத் தாயும் தந்தையும் தன் பிள்ளையை ஆளாக்கு வதற்கு விலைப்பட்டியல் இட்டால் இந்த உலகம் தாங்காது. ஆயினும் பிள்ளைகள் தாங்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் எந்த அளவில் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தாலும் தம்முடைய தாய் தந்தையர்க்கு

அவர்கள் கேட்காமலேயே அவ்வப்போது பணம் தந்து உதவ வேண்டும். இதனால்தான் என்னவோ தற்போது அரசாங்கம் பெற்றோர்களை அவர்களுடைய பிள்ளைகள் காப்பாற்ற வேண்டும் என்ற சட்டத்தினைக் கொண்டு வந்துள்ளது.

வாழ்க்கையில் 120ரூபாய் சம்பளம் வாங்கியபோது நான் பெற்ற மனமகிழ்ச்சி லட்சக்கணக்கில் ஊதியம் பெறுவோரிடம் இன்று இல்லை. அதற்குக்காரணம் யானைக்கு வந்த யானைக்கால் நோய் போன்றதுதான் அவர்கள் வாங்கும் ஊதியம். ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கு பவனுக்கு செலவுகள் பல வடிவங்களில் காத்தி ருக்கும். Income tax என்ற பூதம் கணிசமான தொகையை விழுங்கிக் கொண்டேயிருக்கும். வீட்டு வாடகை அல்லது வீடு கட்டுவதற்கான கடன் வாங்கிய வழியில் சம்பளத்தின் ஒருபகுதி செலவழியும். மருத்துவச் செலவிற்கு ஒன்றின் கீழ் மூன்று பாகம் ஒதுக்க வேண்டும். இதுபோன்று பல செலவுகள் அவன் சம்பளத்தை விழுங்கிவிடும். இதில் தாய் தந்தையர் நினைவே அவர்களுக்கு ஏற்படாது.

1964ஆம்ஆண்டு ஒருநாள் ஹிந்து பேப்பரில் விளம்பரம் ஒன்றினைக் கண்டேன். அதில் பாம்பே நிறுவனம் ஒன்று ‘‘உங்களுக்குப் பண உதவி தேவையா? நாங்கள் 3000ரூபாய் வரை கடன் கொடுத்து உதவு கிறோம். அங்கத் தினர் ஆவதற்கு 100ரூபாய் செலுத்தினால் போதும் நீங்கள் வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் கடன் உதவி வழங்கப் படும்’’ என்று காணப்பட்டது. என் தந்தையின் பணப் பற்றாக்குறையை போக்குவதற்கு இது ஒரு வாய்ப்பு என்று எண்ணி 100 ரூபாயை பாம்பே நிறுவனத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பி வைத்தேன். நாட்கள் பல சென்றும் எந்தப் பதிலும் இல்லை. அது ஒரு போலி நிறுவனம். இவ்வாறு



மக்களை ஏமாற்றி லட்சக் கணக்கில் பணம் பறித்ததாகப் பத்திரிகைச் செய்தி வெளி வந்தது. ஆகவே ஏமாறுவதும் வாழ்க்கையில் ஒவ்வொருவர் நடை பெறும் ஒரு நிகழ்ச்சியே. உலகில் புத்திசாலி என்பவன் யாருமில்லை. அந்த புத்தி சாலியை ஏமாற்றுவதற்கு இன்னொரு புத்திசாலி இருப்பான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் யாரிடமோ ஏமாந்திருப்பார்கள். அது பண விஷயத்தைப் பொறுத்து மட்டுமல்ல. ஒருவருடைய வாக்கை ஆதாரமாகக் கொண்டு ஏமாந்திருக்கலாம். இவர் நெருங்கிய நண்பர், ஏமாற்ற மாட்டார் என்று நினைத்து பண உதவி செய்து ஏமாந்தவர்களும் உண்டு. இதுபோன்ற நேரங்களில் ஏமாறாதே, ஏமாற்றாதே என்ற மூதுரையை நினைவில் கொண்டால் அதுவே நம்மை இது போன்ற சங்கடங்களிலிருந்து காப்பாற்றிடும்.

## 187) காமராஜ் பிளான்

1962ஆம் ஆண்டு நிகழ்ந்த சீனப் படையெடுப்பும், அதில் இந்தியா அடைந்த தோல்வியும் காங்கிரஸ் கட்சியை நிலைகுலையச் செய்தது. காங்கிரஸ் கட்சிக்குள் உட்பூசல்கள் அதிக அளவில் வெளிப்பட்டன. நிர்வாகத்தில் கட்சியின் தலையீடு அதிக அளவில் காணப்பட்டது. பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தனது பெரும்பான் மையை இழந்தது. 1963ஆம் ஆண்டு லோக் சபாவிற்கு நடந்த 3 இடைத் தேர்தல் களிலும் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியது. தன்னு டைய முதுமை காரணமாய் நேருவின் செயல்பாடுகளில் தடுமாற்றங்கள் காணப்பட்டன. நேருவிற்குப் பின் யார்? என்பதைப் பற்றிய விவாதங்கள் நாடெங்கும் நிகழ்ந்தன. இந்த நிலைமையில் அப்போதைய சென்னை மாநில முதல் மந்திரியான திரு. காமராஜ் அவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, நேரு ‘‘காமராஜ் திட்டம்’’ என்ற ஒன்றினை முன்

வைத்தார். காங்கிரஸ் கட்சியை வலுவுள்ளதாக ஆக்கு வதற்காக 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ''மத்திய அமைச்சர்கள், மாநில முதல் மந்திரிகள் போன்ற பெரும்பதவியில் இருப்பவர்கள் தாங்களே முன் வந்து தங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், திரு. நேரு அவர்கள் அவர்களில் யார் யாரை கட்சிப்பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பார்'' என்பதே அந்தத் திட்டம்.

300 ராஜினாமாக் கடிதங்கள் திரு.நேருவை வந்த டைந்தன. 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24ஆம் நாள் கீழ்க்கண்ட மத்திய அமைச்சர்களின் ராஜினாமாவை நேரு ஏற்றார். மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி, எஸ்.கே. பாட்டீல், ஜகஜீவன்ராம், பி. கோபாலரெட்டி, கே.எல். சீமாலி ஆகியோர். 6 காங்கிரஸ் முதல் மந்திரிகள் ராஜினாமாவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் காமராஜ் திட்டம் எதிர் பார்த்த மாற்றத்தைக் கொண்டு வர இயலவில்லை. மாறாக கட்சிக்குள் உட்பூசல்கள் மேலும் வளர்ந்தன. நேருவின் உடல்நிலையும் மோசமடைந்தது. மீண்டும் Lal Bahadur Sastri அமைச்சரவையில் Minister without Portfolioவாக நியமிக்கப்பட்டார். 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புவனேச்வரில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் குழுவில் பேசிக்கொண்டிருக்கும் போதே நேரு மயங்கி விழுந்தார். 1964ஆம் ஆண் டு ஜனவரி மாதம் காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

காமராஜ் திட்டமே திரு. மொரார்ஜி தேசாயின் செல்வாக்கைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டதொரு வலைப் பின்னல் ஆகும். 1964ஆம் ஆண்டு மே 22ஆம் நாள் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் திரு.நேரு நிருபர்களின்



கேள்விகளுக்குப் பதில் அளித்தார். இதுவே இவர் கலந்து கொண்ட கடைசி நிருபர்கள் கூட்டமாகும். ஷேக் அப்துல் லாவின் விடுதலை, லாவோஸ் பிரச்சனை, ஜாதிக் கலவரங்கள், கோவாவின் எதிர்காலம், இந்தியா சீனா எல்லைத் தகராறு, மத்திய அமைச்சரவையில் உத்தேசிக்கப் பட்டுள்ள மாற்றங்கள், காமராஜ் திட்டம், யாரை அவருடைய வாரிசாகக் கொள்ளவேண்டும் போன்ற கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். அதில் காமராஜ் திட்டம் குறித்த கேள்வி பதில் களில் தமிழக அரசின் நிர்வாகத்திறமைக்கு அவர் சூட்டிய புகழாரம் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது.

## 188) ஜம்மு காஷ்மீர் ஹஸ்ரத்பால் மசூதியில் வைக்கப்பட்டிருந்த முகம்மது நபியின் தலைமுடி காணாமற் போனதும், அதன் விளைவாக ஏற்பட்ட கலவரமும்

1963ஆம் ஆண்டு டிசம்பர் 27ம் நாள் ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் (Hazratbal) மசூதியில் வைக்கப்பட்டிருந்த முகமது நபியின் ''தலைமுடி'' திடீரென்று காணாமற் போய்விட்டது. இதன் விளைவாக ஜம்மு காஷ்மீரிலும், இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் கலவரம் மூண்டது. ஒரு வாரத்திற்குபிறகு, காணாமற்போன முகமது நபியின் ''தலைமுடி'' கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அது ஹஸ்ரத் பால் மசூதியில் மீண்டும் வைக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாயின. கிழக்கு பாகிஸ்தானில் 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விளைந்த கலவரத்தால் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அங்கிருந்து வெளியேறினர். பலர் கொல்லப் பட்டனர். முகமது நபியின் ''தலைமுடி'' எவ்வாறு மறைந்தது, அது எவ்வாறு மீண்டும் கொண்டு வரப்பட்டது என்பது ஒரு புரியாத புதிராகவே இருந்தது. திரும்பப் பெறப்பட்ட தலை

முடி முகமது நபியினதுதானா? என்ற ஐயப் பாட்டினை பலர் வெளியிட்டனர். அந்த நேரத்தில் திரு.ஜவஹர்லால் நேரு தன்னுடைய எண்ண ஓட்டங்களை அறிந்து செயல்படுப வரான திரு.லால்பகதூர் சாஸ்திரியை ஸ்ரீநகருக்கு அனுப்பி வைத்தார். அவர் அங்கே சென்று மதத்தலைவர்களுடனும் மற்றைய அதிகாரி களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். மூத்த முஸ்லீம் மதத் தலைவர்களின் குழு ஒன்றினை நியமித்தார் திரு. சாஸ்திரி. அந்தக் குழுவினர், ஹஸ்ரத்பால் மசூதியில் மீண்டும் வைக்கப்பட்டுள்ள தலைமுடி முன்பு இருந்த தலைமுடியே என்று உறுதி செய்தனர்.

***(ராஜீவ்காந்தி பிரதமமந்திரியாகப் பொறுப்பேற்ற உடன் அப்போது பதவியிலிருந்த வெளியுறவுச் செயலரான திரு.*** A.P. ***வெங்கடேச்வரனை ராஜினாமா செய்திடும்படியான ஒரு நெருக்கடியை உண்டு பண்ணினார். இந்த*** A.P.***வெங்கடேச்வரன்தான் திரு.நேரு காலத்தில் காஷ்மீரில் கலவரம் ஏற்பட்டபோது உள்துறைச் செயலராகப் பணியாற்றி வந்தவர். யாது காரணங்களாலோ ராஜீவ் காந்தி பிரதமமந்திரியாகப் பொறுப்பேற்றவுடன் திரு.வெங்கடேச்வரன் பதவியில் தொடர்ந்து இருப்பதை விரும்பவில்லை. பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில்*** **"You will see a new Foreign Secretary Tommorow"** ***என்று கூறி*** **A.P.*வெங்கடேச்வரனை அவமானப் படுத்தினார்.)***

## 189) காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் திரு.நேரு ஈடுபட்டார்.

இவ்வாறாக திரு.சாஸ்திரியின் தலையீட்டால் நாட்டில் நிகழ்ந்து வந்த கலவரங்கள் ஓர் முடிவிற்கு வந்தன. ஜம்மு காஷ்மீரில் மீண்டும் அமைதி நிலவியது. திரு.G.M.Sadiq ஜம்மு காஷ்மீரின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



ஹஸ்ரத்பால் நிகழ்ச்சி ஜம்மு காஷ்மீரில் நடந்த போதிலும் இதன் தாக்கம் உலகெங்கிலும் வெளிப் பட்டது. காஷ்மீர் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காண வேண்டும் என்று திரு.நேரு எண்ணம் கொண்டார். இந்தியா சுதந்திரம் அடைந்தபோது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு மௌண்ட்பேட்டன் காஷ்மீர் பிரச்சனையால் இந்தியாவிற்குத் தலைகுனிவே ஏற்பட்டுள்ளது. அதை பாகிஸ்தானிடம் ஒப்படைப்பதே 'சிறந்த செயலாகும்' என்ற அறிவுரையை அவ்வப்போது நேருவிற்கு அளித்து வந்தார்.

இதன் விளைவாக காஷ்மீர் பிரச்சனை குறித்து இந்தியா பாகிஸ்தான் நாடுகளிடையே பலமுறைப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன. ***(ஸ்ரீரங்கம் கோயில் நாதமுனி ஸந்நிதி, வேதாந்த தேசிகன் ஸந்நிதி, தன்வந்திரி ஸந்நிதி விவகாரங்கள் போல கலியுகம் முடியும் வரை காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண இயலாது. அந்தப் பிரச்சனை கோமா***(Coma) ***நிலையில் இருக்கும் ஒரு நோயாளியைப் போன்றது. அவ்வப்போது "டிரிப்" மூலம் மருந்துகளையும் குளுக்கோசையும் ஏற்றிக் கொண்டே உயிர் வாழ வேண்டியதுதான்.)*** இந்தியா தரப்பில் பழுத்த அரசியல் வாதியான திரு.ஸ்வர்ணசிங்கும், பாகிஸ்தான் தரப்பில் திரு. புட்டோவும் கலந்து கொண்டனர். ஆனால் ஜம்மு காஷ்மீரிலிருந்து எந்த முஸ்லீம் மதத் தலைவரும் இந்தப் பேச்சு வார்த்தையில் பங்கு கொள்ள அழைக்கப் படவில்லை. ஹஸ்ரத்பால் நிகழ்ச்சிக்குப் பிறகு திரு.நேரு இந்த வெறுமையைப் பற்றி சிந்தித்தார். சிறையில் அடைக்கப் பட்டிருந்த ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்மந்திரியான ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்து அவரை இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கான ஆயத்தங் களைச் செய்தார் திரு.நேரு.

## 190) ஷேக் அப்துல்லா 1953ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பின்புலம் யாது?

1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எந்தவித குற்றச் சாட்டுகளையும் சுமத்திடாமல் ஜம்மு காஷ்மீரின் அரசியல் தலைவர் களில் ஒருவரான ஷேக்அப்துல்லா கைது செய்யப் பட்டு வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டார். 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் விடுதலை செய்யப் பட்டார். ஜம்மு காஷ்மீரை சென்ற டைந்த ஷேக் அப்துல்லாவிற்கு மக்களால் மாபெரும் வரவேற்பு அளிக்கப் பட்டது. ஹஸ்ரத் பால் மசூதி உட்பட பல இடங்களில் அவர் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த கூட்டங்களில் உரையாற்றினார்.

ஷேக் அப்துல்லாவின் இந்த அரசியல் செல்வாக்கு பலருக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு, ஜம்மு காஷ்மீரில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தானுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவைப் பிளவு செய்வதற்குத் திட்டமிட்டார் என்றும், இந்து மற்றும் முகம்மதியர் சமுதாயத்தினரிடையே பிளவை உண்டாக்கும் செயல்களைச் செய்ய முற்பட்டார் என்றும், அமைதியைக் குலைக்க முற்பட்டார் என்றும், பாகிஸ் தானிடமிருந்து பெருமளவில் பணம் மற்றும் பயங்கர ஆயுதங் களைப் பெறுவதற்கு ரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார் என்றும் அவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. ஷேக் அப்துல்லா மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது, 1964ஆம் ஆண்டு சீனாவிடம் பெற்ற தோல்வியால் நிலைதடுமாறிய திரு.நேரு, தம்மு டைய காலத்திலேயே காஷ்மீர் பிரச்சனைக்கு ஓர் முடிவு காண முயன்றார்.



## 191)ஷேக்அப்துல்லாவின் விடுதலை---‘காஷ்மீர் என்ற மணப்பெண்ணை அவள் எண்ணம் என்ன என்பதை அறியாது திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமகன்கள் இந்தியாவும், பாகிஸ் தானும்’ என்ற கருத்தைக் கொண்டிருந்தார் ஷேக் அப்துல்லா.

அதற்கு முன்னோடியாக ஷேக் அப்துல்லா மீதான வழக்குகள் அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டன. திரு.லால்பகதூர் சாஸ்திரி அரசின் இந்த முடிவை அறிவித்தார். 08.04.1964ஆம் நாள் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லா காஷ்மீர் பிரச்சனைக்கு நேருவின் காலத்திலேயே ஓர் தீர்வு காணப்பட வேண்டும் என்று முழக்கமிட்டார். ஷேக் அப்துல்லாவை டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்தார் நேரு. அதை ஏற்று திறந்த காரில் ஸ்ரீநகரிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டார் ஷேக்அப்துல்லா. வழி நெடுகத் திரண்டிருந்த மக்களுக்கு மத்தியில் உரையாற்றிக் கொண்டே சென்றார் அப்துல்லா.

‘ஜம்மு காஷ்மீர் என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய மணமகன்கள் ஆசைப்படுகின்றனர். ஜம்மு காஷ்மீராகிய பெண் தனக்குத்தான் சொந்தம் என்று இந்த இருமணமகன் களும் எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால் இந்த இருவருமே ஜம்மு காஷ்மீராகிய மணப்பெண்ணின் மனதில் என்ன ஆசை உள்ளது என்பதை அறிந்து கொள்ள முயலவில்லை. அதனால் தான் இந்தத் திருமணம் நடைபெற வில்லை’ என்று தமது எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

## 192) ஷேக்அப்துல்லாவுடன் பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது என்ற எதிர்ப்புக்குரல் வலுத்தது இந்தியாவில்.

டில்லி வட்டாரங்களில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பலர் ஷேக் அப்துல்லாவிற்கும் நேருவிற்கும் இடையே நடைபெற உள்ள சந்திப்பை விரும்பவில்லை. அவர்கள் காஷ்மீர் இந்தியாவோடு இணைந்தது முடிந்ததொரு நிகழ்ச்சியாகும். ஆகவே அந்த நிலைக்கு ஏற்பத்தான் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமே ஒழிய வேறு எந்தக் கோணத்திலும் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடாது என்று வலியுறுத்தினர். மற்றைய எதிர்க்கட்சிகளும் ஷேக் அப்துல்லாவின் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ராஜாஜி, மினு மஸானி, வாஜ்பாய், ஜே.பி. போன்ற அரசியல் தலைவர்களும் தங்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தினர். டில்லியில் திரு.நேருவைச் சந்தித்த பிறகு தமது நீண்ட கால நண்பரான ராஜாஜியை, சென்னைக்குச் சென்று சந்தித்தார் ஷேக் அப்துல்லா. பாகிஸ்தான் நாட்டின் அதிபரான அயூப்கானின் அழைப்பின் பேரில் ராவல்பிண்டிக்குச் சென்று பாகிஸ்தான் அதிபரைச் சந்தித்தார் ஷேக் அப்துல்லா.

***(ஆனால் இன்றுவரை காஷ்மீர் பிரச்சனைக்கு எந்தத் தீர்வையும் காண இயலவில்லை. மௌண்ட் பேட்டனின் சூழ்ச்சியால் பாகிஸ்தான் உருவானது. பாகிஸ்தான் மட்டும் உருவாக்கப்படாமல் இருந்தால் இந்தியாவின் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்தையும் விஞ்சியிருக்கும். அதற்குக் காரணம் ஆண்டு தோறும் பல கோடி ரூபாய்கள் எல்லைப் பாதுகாப்பிற்கும் பாகிஸ்தானிடம் பேச்சு வார்த்தை நடத்துவதற்குமே செலவழித்து வருகிறோம்.)***



## 193) நேருவின் மறைவும், திரு.லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொள்ளுதலும்.

1964ஆம்ஆண்டு மே மாதம் 27 ஆம் நாள் நேரு இறந்தார். நாடே சோகத்தில் மூழ்கியது. நேரு இறந்த பிறகு ஹரியானாவைச் சார்ந்த குல்சாரிலால்நந்தா தற்காலிகப் பிரதம மந்திரியாகப் பொறுப்பு வகித்து வந்தார். இந்தியப் பிரதமராக ஆவதற்கு திரு.மொரார்ஜி தேசாயும், திரு.லால்பகதூர் சாஸ்திரியும் போட்டியிட்டனர். இந்த இருவரில் திரு.சாஸ்திரி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டவராய் இருந்ததால் அவர் காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டு 02.06.1964 ஆம் நாள் பாரதப் பிரதமராகப் பதவியேற்றார்.

## 194) இந்தியன் ஆயில் நிறுவனத்தில் என்னுடன் விசாகப் பட்டினத்தில் பணிபுரிந்தோரைப் பற்றிய நினைவலைகள்.

விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் என்னோடு பணி புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. ராம்மோகன். நான் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த போது எனக்கு வயது 24. பர்மாஷெல் கம்பெனியில் வேலை பார்த்துவந்த ராம்மோகன் (வயது 55) அந்தக் கம்பெனியில் இருந்து வெளியே அனுப்பப் பட்டவர்களில் ஒருவராவார். இந்தியன் ஆயில் நிறுவ னத்திற்கு அதிக அளவில் ஊழியர்கள் தேவைப் பட்டதால் மற்றைய ஆயில் கம்பெனிகளில் பணியிலிருந்த, வேலைநீக்கம் செய்யப்பெற்ற பலர் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் உயர் பதவி களில் நியமனம் பெற்றனர்.

சூப்பர்வைஸரான திரு.ராம்மோகன் சுத்த வெள்ளை உடையில் வேலைக்கு வருவார். (சமையல் தொழிலில் ஈடுபட்டிருப்போர் வெள்ளை உடையணிந்து அந்தத் தொழிலைச் செய்யமுடியாது. அதற்காக அவர்கள் காவி வேட்டி அணிந்து சமையல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அதேபோலத்தான் மண்ணெண்ணைக் கம்பெனியில் வேலை செய்பவர்கள் வெள்ளை உடையணிந்து வேலை செய்ய முடியாது. இதற்கொரு விதிவிலக்கு ராம் மோகன். எண்ணெய்க்கிடங்கில் எங்கு சென்றாலும் ஏதோவொரு வகை எண்ணெய் நம் உடலில் ஒட்டிக்கொள்ளும்.

இவர் யாரைப் பார்த்தாலும் முகவாய்க்கட்டையை தொட்டு பிடித்துக்கொண்டு ''பாபு நைனா மஞ்சிக்க உன்னாவா'' (நீ நலமுடன் உள்ளாயா? என்பது இதற்குப் பொருள்) என்று கேட்பார். தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாய் இருப்பார். உணவு இடைவேளையின் போது கூட தெற்கும் வடக்குமாக அந்தக் கிடங்கில் மேற் பார்வையிட்டு வருவார். ஆனால் ஒருநாள் நடந்த ஓர் விவாதத்தின்போது Installation Manager மீது தன் கையி லிருந்த Godown சாவிகளை வீசிஎறிந்து விட்டு தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்றுவிட்டார்.

## 195) மதிய உணவைப் பங்கிட்டு உண்ண வேண்டும்.

'Cochin cafe' என்ற உணவு விடுதியிலிருந்து (Coal Jetty லிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இந்த உணவு விடுதி) ''படாகேரியர்'' என்னும் கேரியரில் மதிய உணவு வரும். இதை ஒரு வயதான பெண்மணி வெயில், மழை என்று பாராது சுமந்து வருவாள். அதற்குக் கூலி மாதம் 5 ரூபாய். மூன்று ரூபாய் சாப்பாட்டு டிக்கெட் டிற்கு இரண்டரை மனிதர்கள் சாப்பிடக்கூடிய அளவிற்கு அன்னம் மற்றும் காய்கறிகள் வைக்கப்பட்டிருக்கும். சாப்பாட்டுச் செலவிற்கு என்று ஒதுக்கப்பட்ட பட்ஜெட் மொத்தமே அறுபது ரூபாய்தான். அதனால் மூன்றுபேர் சேர்ந்து இந்த மூன்றுரூபாய் டிக்கெட்டில் படாகேரியரில் சாப்பாட்டை வரவழைத்துச் சாப்பிட்டு வந்தோம். நான், என் நண்பன் கார்த்திகேயன் மற்றும் பீமாராவ். ***(இவன் காக்கி நாடாவிற்கு. அண்மையில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊருக்குச் சென்றவன் திரும்பவே இல்லை. அங்கு அவன் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்தி எங்களை வந்தடைந்தது. சாப்பாட்டு மேஜையில் பல நாட்கள் அவனைப் பற்றி பின்வரும் காலங்களில் பேசிக்கொண்டிருப்போம்.)***



சில நாட்கள் கப்பலில் இருந்தோ அல்லது Caltex Refinery எண்ணெய்க் குழாய்கள் மூலம் மதியம் 12.30-13.00 வரையிலான நேரத்தில் Interface எனப்படும் ஒரு எண்ணெயை மற்றொரு எண்ணெய் தள்ளிக்கொண்டு வரும் நேரத்தில் அந்தந்த எண்ணெய்க் குரிய Tankக்குகளில் உரிய நேரத்தில் திருப்பிவிட வேண்டும். இல்லையேல் மண்ணெண்ணெய் Tankக்குள் டீசலோ, டீசல் Tankக்குள் மண்ணெண்ணெயோ, Furnace Oil Tankக்குக்குள் Light Dieselஆயிலோ சென்று விடக்கூடும். ஆகவே சாப்பாட்டு நேரம் குறுக்கிட்டாலும் இந்த வேலையைச் செய்து முடித்த பின்னர்தான் சாப்பிட இயலும். அதற்குள் மற்றையோர் சாப்பிட்டு விட்டு அரை வயிறுகூட நிரம்பாத அளவிற்கு கேரியரில் மீதம் வைத்துவிட்டு சென்று விடுவர். மிக்க பசியோடு சாப்பிடச் சென்றால், அங்கு நான்கு கவளம் அன்னமே இருக்கும்.

எல்லாவிடத்திலும் காணப்படுவதுபோல் இந்தியன் ஆயில் Terminalகளில் ஒரு மலையாள நாயர் டீ, பன் மற்றும் பஜ்ஜி அல்லது வடை ஆகியவற்றை விற்பனை செய்வான். அவனுக்கென ஒரு இடம் ஒதுக்கித் தரப்படும். ஆயில் கம்பெனிகளில் இதுபோன்ற சிறிய அளவு உணவு விடுதிகளை நடத்துவதற்கு நீர், தேவைப்பட்டப் பாத்திரங்கள், எரிபொருள் (கேஸ் அல்லது மண்ணெண்ணெய்), மின்சாரம், இடத்திற்கு வாடகையின்மையாகிய சலுகை கம்பெனியால் தரப்படும். விற்பனை செய்பவர் மற்றையோருக்கு அளிக்கும் விலையிலிருந்து 25 சதவீதம் விலையைக் குறைத்து கம்பெனி ஊழியர்களுக்குத் தர வேண்டும். நான் வளர்ந்த விதம் இதுபோன்ற இடங்களில் டீ அருந்துவதையோ, பஜ்ஜியைச் சாப்பிடுவதையோ தடுத்து நிறுத்தியது. ஆகவே என் பசியை ஆற்றிக் கொள்வதற்குப் பானையில் வைத்திருக்கும் குடிநீரே உதவியது. ***(கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதும், வேலையில் சேர்ந்த ஆரம்பகால கட்டத்திலும் இதுபோன்ற பல துன்பங்களை நான் எதிர்கொள்ள நேர்ந்தது.)***

## 196) இந்தியன்ஆயில் நிறுவனத்தில் சிலர் ஆடிய ஆட்டங்களும், பாடிய பாட்டுக்களும்.

R.**சண்முகம் என்பவர்** Management Trainee **ஆகப்பணியில் சேர்ந்தார். இவர் விழுப்புரத்தைச் சார்ந்தவர். இவர் தந்தை** Esso **கம்பெனி டீலராக இருந்தவர். அரசியல் செல்வாக்கு கொண்டவர். தி.மு.க.வைச் சேர்ந்த நாஞ்சில் மனோகரனுக்கு நெருக்கமானவர். அவர் அப்போது மக்களவை உறுப்பினராக இருந்து வந்தார். அவர்தன் குலப்பெருமையை காப்பாற்றுவதற்காகத்தான் வேலைக்கு வந்துள்ளதாகவும், இந்தியன் ஆயில் கம்பெனியில் வேலை**



**செய்து பிழைக்க வேண்டும் என்ற கட்டாயம் தமக்கு இல்லை என்றும் எங்களிடம் கூறி வருவார். தான் எந்த வேலையையும் செய்ய மாட்டார். மற்றவர்களை வேலை வாங்குவதில் வல்லவர்.** ***(இவர் பின்னாட்களில் கொருக்குப் பேட்டை இந்தியன் ஆயில் டெர்மினல் மேனேஜராக பணியாற்றிய பிறகு பாம்பே தலைமை அலுவலகத்தில் அட்மினிஸ்ரேட்டிவ் மேனேஜராக பணியாற்றி வந்தார்.***

***அப்போது யாது காரணங் களுக்காகவோ கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப் பட்டார். இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பல அதிகாரிகள் ''பதவி'' என்னும் மது மயக்கத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். இப்போதும் மிதந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் காலச்சக்கரச் சுழற்சியில் இவர்கள் எல்லோரும் அந்தந்தக் காலங்களில் காணாமற் போய்விடுவர். அவ்வாறு காணாமற் போனவர்களில் ஒருவர் R.சண்முகம். இவர் ஆடிய ஆட்டங்களென்ன! பாடிய பாட்டுக்களென்ன! அதிகார அத்துமீறல்கள் என்ன! இவற்றையெல்லாம் கதைக்கு கருவாகக் கொண்டு பல ஆண்டுகளுக்கு மெகா சீரியல் தயாரிக்கலாம். என்னுடைய 34 வருட அனுபவத்தில் நினைவில் நிற்போர் பலர். மறந்திட நினைப்போர் சிலர். அவர்கள் ஆடிய ஆட்டங்களை இந்தக் கடந்த கால வாழ்க்கைச் சுவடுகள் கட்டுரைப்பகுதியின் பின்பகுதியில் எழுத உள்ளேன்.)***

## 197) Cashier G.V.S.Avadhaniயும் பதவி உயர்வுக் கனவும்.

Cashier G.V.S.Avadhani (எப்போதும் ஒரு கூண்டுக்குள் இருந்து கொண்டு வேலை செய்பவர்.) 1963-1965 கால கட்டத்தில் பெட்ரோலியப் பொருட்களை வாங்க வருவோர் கத்தைகத்தையாகப் பணத்தைப் பையில் எடுத்துக் கொண்டு வந்து Cashierஇடம் கொடுக்க வேண்டும். D.D

அல்லது Cheque மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் முறை அந்தக்கால கட்டத்தில் அமுலில் இல்லை. ஒவ்வொரு நாளும் சுமார் அறுபதாயிரத்திலிருந்து எண்பதாயிரம் ரூபாய் வரை ரூபாய் நோட்டுக்களை எண்ணவேண்டும். மிகக் கடின மான வேலை. அவதானியின் உற்ற தோழன் ''பான்பராக்'' தான். இவன் புகழ்பெற்ற தெலுங்குப்பட இயக்குநரான K.விஸ்வநாத்தின் உறவினன்.

அப்போதுதான் சிறகுகள் முளைத்துப் பறப்பதற்கு முயன்ற இந்தியன் ஆயில் எம்ப்ளாயீஸ் யூனியனின் லோக்கல் செகரட்டரி. நிர்வாகம் 1966ஆம் ஆண்டு தன் நரித்தந்திரத்தை உபயோகித்து இந்தியன் ஆயில் எம்ப்ளாயீஸ் யூனியனை உடைப்பதற்குச் சதிகள் பலவற்றை மேற்கொண்டது. அவற்றில் ஒன்று சிலருக்குப் பதவி உயர்வு அளிப்பதாகக் கூறி அவர்களை ''ஆந்திரா யூனியன்'' என்றதொரு அமைப்பை உருவாக்கும்படி மறைமுக சதி திட்டங்களில் ஈடுபட்டது. பதவி உயர்வுக்கு ஆசைப்பட்டு அவதானி விளக்கில் வீழ்ந்து மாளும் விட்டில் பூச்சிப்போல ஆனான். 1964ஆம் ஆண்டு வேலையில் சேர்ந்த அவதானி பனிரெண்டு ஆண்டுகள் கழித்துதான் பதவி உயர்வு பெற முடிந்தது.

## 198) Gauger வீராசாமி நாயுடு ஓர் நடமாடும் "தெலுங்கு அகராதிப் புத்தகம்''

N.வீராசாமி நாயுடு கிழக்கு கோதாவரி தொகுதி முன்னாள் எம்.பி.ஆன ராஜகோபால நாயுடுவின் தூரத்து உறவினர். நிரந்தரம் ஆக்கப்படாத Gaugerஆக வாரச் சம்பள அடிப்படையில் வேலை பார்த்து வந்தான். S.S.L.C.படிப்பை முடிக்காத நாயுடுவிற்கு பலர் முயன்றும் Permanent Posting-ஐப் பெற்றுத்தர இயலவில்லை.



கடின உழைப்பாளி. ராம்மோகன்ராவைப் போல எப்போதும் வெள்ளை உடையில் காட்சி அளிப்பான். அவ்வப்போது வெளிவரும் தெலுங்குப் படங்களைப் பற்றிய விமர்சனத்தை இவர் செய்திடுவார். இந்தப் படம் பார்ப்பதற்கு உகந்தது, அந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம் என்ற ஆலோசனையைத் தந்திடுவார். கடின நடையில் அமைந்துள்ள அல்லது பேசப்படும் தெலுங்கு வார்த்தைகளுக்கு பொருள் அறிந்து கொள்வதற்கு ஓர் நடமாடும் அகராதியாகத் திகழ்ந்து வந்தார்.

## 199) அறையிலிருந்து தனிவீட்டிற்குக் குடி பெயர்ந்தேன்.

சென்னை தண்டையார் பேட்டையில் இந்தியன் ஆயில் எண்ணெய்க்கிடங்கு 1965ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. சென்னைக்கு மாற்றல் பெறலாம் என்ற என்னுடைய ஆசை நிறை வேறவில்லை. ஆனால் என்னுடைய அறையில் தங்கியிருந்த N.கார்த்திகேயன், R.சத்தியநாராயணா ஆகியோர் சென்னைக்கு மாற்றல் பெற்றுச் சென்று விட்டனர். நானும், மற்றொரு நண்பனுமான K.ராமமூர்த்தியும் DabaGarden பகுதியில் ஒரு வீட்டின் மாடிப் பகுதியில் குடிபெயர்ந்தோம். வேலைப்பளுவின் காரணமாக மாலை 2 மணிமுதல் இரவு 10 மணி வரையிலான Shiftமுறை அமுல்படுத்தப் பட்டது. பலநாட்கள் நான் மதியம் 1 மணிக்குக் கிளம்பி அலுவலகத்தைச் சென்றடைந்தால் இரவு 12 மணிக்குத்தான் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து சேர முடியும்.

இரவு வரும்போது ஆள்அரவமற்ற அந்தச் சாலையின் ஒரு புறத்திலே கொழுந்து விட்டெரியும் பிணங்களே சாலை ஓர விளக்குகளாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும். சுகா

தாரத்துடன் கூடிய எந்த உணவு விடுதியும் திறந்திருக்காது. இரண்டு வாழைப்பழத்தை தோலுடன் சேர்த்து உண்ட பிறகு நீரைப் பருக வேண்டும். அதுதான் என்னுடைய இரவுச் சாப்பாடு. வேலையின் களைப்பால் உறக்கம் கண்களைத் தழுவிடும். இரவு பட்டினி கிடப்பதற்கு, ஓர் முடிவு கட்ட வேண்டுமென்று நானே சமையல் செய்து சாப்பிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டேன். காலையில் பில்டர் காபி. பிறகு ஏதாவது ஒரு காலை உணவு. மதியம் சாப்பாடு. அதே சாப்பாட்டை ஒரு கேரியரில் எடுத்துக் கொண்டு கோல்ஜெட்டி டெரிமினலுக்குப்போவது. அங்கே சரியாக இரவு 8 மணிக்குச் சாப்பிடுவது. எண்ணெய் நிரப்பப்பட்ட ஏதாவது ஒரு லாரியை நிறுத்தி வைத்து வேலை முடிந்தவுடன் பத்துமணிக்கு வீட்டிற்கு திரும்புவது. எப்பொழுதெல்லாம் செகன்ட் ஷிப்ட்டில் வேலைக்குப் போக வேண்டுமோ அப்பொழுதெல்லாம் இதுவே என்னுடைய அன்றாட செயல் பாடாக அமைந்திருந்தது.

## 200) என்னைக் கொல்வதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சி.

மண்ணெண்ணை 18.5 லிட்டர் அளவு கொண்ட டின்களில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. பெரும்பாலான மண்ணெண்ணை வியாபாரிகள் 200லிட்டர் கொள்ளளவு கொண்ட பேரல்களை லாரிகளில் எடுத்து வந்து, இங்கே நிரப்பிக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று ஆங்காங்கு அவர்களுக்கு வேண்டிய அளவில் நிரப்பப்பட்ட பேரல் களைத் தந்து செல்வர். அவர்களிடமிருந்து காலி பேரல்க ளைப் பெற்றுக்கொள்வர். மறுநாள் காலை மீண்டும் மண் ணெண்ணை நிரப்பிக் கொள்வதற்காக விசாகப்பட்டி னத்திற்கு வந்து சேர்வர். அனகாபள்ளி சின்ன அப்பாய்



என்பவர் அதிகஅளவில் மண்ணெண்ணை விற்பனை செய்து வந்த டீலர்களில் ஒருவர். Filling Operators என்று அழைக்கப் பட்டு வந்த கீழ்நிலை ஊழியர்களில் ஒருவர் டேவிட். இவர் ஒன்றரைக்கண் பார்வை கொண்டவர்.

ஒரு நாள் மாலை 4 மணிக்கு இவரால் சின்ன அப்பாய் கணக்கில் நிரப்பப்பட்ட எண்ணெய் பேரல்களை நான் Gatepass கொடுப்பதற்குச் சோதனையிட்டபோது ஒவ்வொரு பேரலிலும் அதிகஅளவில் மண்ணெண்ணை நிரப்பப் பட்டிருப்பதைக் கண்டேன். 40 பேரல்களிலும் எண்ணெய் ததும்பி வழிந்தது. இதை டெர்மினல் மேனேஜரிடம் தெரிவித்தேன். அவர் ஒவ்வொரு பேரலிலும் எத்தனை லிட்டர் எண்ணெய் உள்ளது என்பதை அளந்து, புகார் அளித் திடுமாறு பணித்திட்டார். லாரியில் இருந்த நிரப்பப்பட்ட பேரல்கள் அனைத்தும் கீழே இறக்கப்பட்டு ஒவ்வொரு பேரலில் இருந்த மண்ணெண் ணையை 20லிட்டர், 5லிட்டர், 1லிட்டர் கேன் கொண்டு அளந்தேன். 40 பேரல்களையும் இவ்வாறு அளப்பதற்கு இரவு 11 மணியாகி விட்டது. ஒவ்வொரு பேரலிரும் 5லிட்டர் முதல் 8லிட்டர் வரை அதிகப் படியாக நிரப்பப்பட்டிருந்தது.

அதன்பின்னர் எந்த லாரியை நான் அதிக அளவில் எண்ணெய் நிரப்பியதற்காகப் பிடித்தேனோ அதே லாரியில் ஓட்டுனர், அவன் பக்கத்தில் அதிக எண்ணெய் நிரப்பிய ஆபரேட்டர், அவன் பக்கத்தில் நான் ஆகிய மூவரும் டவுனை நோக்கிப் புறப்பட்டோம். அன்றையதினம் என்னைச் சாலையில் வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது கீழே தள்ளி கொல்ல முயற்சி செய்யப்பட்டதாகவும், அது நிறைவேறவில்லை என்றும் பின்நாட்களில் அறிந்தேன். குற்றம் புரிந்த டேவிட் வேலையைவிட்டு நீக்கப்பட்டார்.

இந்தியன் ஆயிலில் நான் பணி புரிந்து வந்தபோது என்னைக் கொல்லவும், என் குழந்தைகளைக் கடத்திச் செல்லவும் முயற்சிகள் பலமுறை அரங்கேறியுள்ளன. அவற்றில் முதல் முயற்சி மேற் சொல்லப்பட்ட நிகழ்ச்சியாகும். ***(அதனால்தான் மொட்டைக் கடுதாசி களுக்கும், தொலைபேசி அச்சுறுத்தல்களுக்கும் தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கும் நான் பயப்படுவதில்லை.)***

## 201) வாழ்க்கைப் படகில் மேற்கொண்ட பயணம்.

1963ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1968 செப்டம்பர் மாதம் வரை விசாகப்பட்டினத்தில் பணிபுரிந்து வந்தேன். 1965ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் Supervisor ஆகப் பணி உயர்வு பெற்றேன். அதன்பிறகு 1968ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் Operations Officer Grade III பதவி உயர்வு பெற்று, செகந்தராபாத் மெட்டுகுடா ஆயில் டெப்போவிற்கு பணிமாற்றம் பெற்றேன். 1967ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள் பங்குனி உத்தரத்தில் எனக்கும் ருக்மிணிக்கும் திருமணம் திருவிண்ணகரப்பன் திருக்கோயிலில் நடைபெற்றது.

## 202) ஜேம்ஸ்பாண்ட் 007.

1963 முதல் 1968 வரை நான் பார்க்காத ஆங்கிலப் படங்களே இல்லை எனலாம். ஹிட்ச்காக்கின் படங்கள், ஜேம்ஸ் பாண்ட் படங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கன. ஜேம்ஸ்பாண்ட் 007ஐ மையமாகக் கொண்டு முதலில் வெளிவந்த படம் Dr.No என்பதாகும். இந்தப் படம் 1962ஆம் ஆண்டு வெளிவந்தது. நான் இந்தப் படத்தை விசாகப் பட்டினம் லீலாமஹாலில் 1964ஆம் ஆண்டு இறுதியில் பார்த்தேன். Ian Fleming என்பவர் எழுதிய நாவல்கள் அனைத்தும் படமாக்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய முதல் நாவல் (1953) Casino Royale என்பதாகும். அதன் பிறகு



அவர் எழுதிய நாவல்களில் ஒன்றான Dr.No என்னும் நாவல் தான் 1962ஆம் ஆண்டு முதன் முதலில் படமாக்கப்பட்டது.

இதில் ஜேம்ஸ்பாண்டாக Sean Connery என்பவர் நடித்திருந்தார். Dr.Noவைத் தொடர்ந்து அவர் From Russia with Love (1963), Goldfinger (1964), Thunderball (1965), You Only Live Twice (1967), Diamonds Are Foreover (1971), ஆகிய படங்களில் இவர் ஜேம்ஸ்பாண்டாக நடித்திருந்தார். அவருக்குப் பிறகு அந்தக் கதா பாத்திரத்தில் George Lazenby (On Her Majesty's Secret Service)-1969, Roger Moore, Live and Let Die (1973), The Man with the Golden Gun (1974), The Spy Who Loved Me (1977), Moonraker (1979), For Your Eyes Only (1981), Octopussy (1983), A View to a Kill (1985).

Ian Flemingஆல் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் பாத்திரமே ஜேம்ஸ்பாண்ட் 007. 1964ஆம் ஆண்டு Fleming இறந்த பிறகு ஜேம்ஸ்பாண்டை மையமாகக் கொண்ட நாவல்கள் பிற நாவல் ஆசிரியர்களால் எழுதப்பட்டன. ஜேம்ஸ்பாண்ட் நாவல்களைத் தழுவி தெலுங்கு மொழியில் Gudachari 117 என்ற தலைப்பில் பல படங்கள் வெளி வந்தன. அதேபோல் தமிழிலும் C.I.D. படங்கள் வெளி வந்தன. Dr. No. படத்தில் Dr. No.தான் வில்லன். ஜேம்ஸ் பாண்டிற்கு நிகராக வீரமும், வல்லமையும் படைத்தவன். Dr. No.ஆக நடித்தவர் Joseph Wiseman என்பார். இவர் 60 ஆண்டுகள் வில்லனாக நடித்து, தம்முடைய 91ஆவது வயதில் இறந்தார். ***(இவருக்குப் புகழாரம் சூட்டி திரு. கங்காதரன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று 6-11-2009 ஹிந்து நாளிதழில் வெளிவந்துள்ளது.)***

## 203) எழில் கொஞ்சும் விசாகப்பட்டினம் கடற் கரையும், Lawson's Bay இன் அழகும்

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி ஆந்திரா பல்கலைக்கழக பொறியியற் கல்லூரி வளாகத்தில் அவ்வப் போது நடைபெறும். ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் இந்தப் போட்டிகளை நான் நேரில் சென்று பார்த்து வருவேன். தற்போதைய 'தி ஹிந்து' நாளிதழின் ஆசிரியரான ராம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு விளையாடியபோது அந்தப் போட்டிக்கு நான் சென்றிருந்தேன். விசாகப் பட்டினத்தின் எழில் கொஞ்சும் கடற்கரையில் உலாவி வருவது மனதிற்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும். Dolphin's Nose என்று அழைக்கப்படும் மலை உச்சியில்தான் கலங்கரை விளக்கம் அமைந்துள்ளது. இந்தக் கலங்கரை விளக்கத்திற்குத் தேவையான மண்ணெண்ணை விசாகப் பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்திலிருந்துதான் பெற்றுக் கொள்ளப்பட்டது. கடற்கரையின் ஓரத்தில்தான் Caltex உயர் அதிகாரிகளுக் கான குடியிருப்பு அமைந்திருந்தது.

ஆந்திரா பல்கலைக்கழகத்திலிருந்து சிறிது கிலோ மீட்டர் தொலைவில் ராமகிருஷ்ணா கடற்கரை அமைந் துள்ளது. அங்கிருந்து சிறிதுதூரம்சென்றால் Lawson's bay என்று அழைக்கப்படும் மிக அழகான கடற்கரைப் பகுதி காணப்படும். இதுவொரு வளைவுப் பகுதி. கடல் அலைகள் ஆர்ப்பரிக்காத இடம். சுமார் 1கிலோமீட்டர் தொலைவு வரை கடல் அமைதியாக காணப்படும். கடலோரத்தில் குட்டைத் தென்னை மரங்களும் ஆங்காங்கே புன்னை மரங்களும் காணப்படும். எந்தவித அச்சமுமின்றி சுமார் 1 கிலோமீட்டர் நீளம்வரை கடலுக்குள் சென்று நீராடலாம். ஆனால் 1



கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பால் சுறாமீன்கள் கூட்டம் கூட்டமாகக் காணப்படும். கடல் அமைதியாக உள்ளதே என்று நீண்ட தூரம் செல்வோர் சுறாமீன்களால் தாக்கப்படக் கூடும். ஒவ்வொரு சுறாமீனும் கொழுத்துப் பருமனுடன் காணப்படும். அவை தம் வாளால் ஒங்கி அடித்தால் முகத்திலும் உடம்பிலும் காயம் ஏற்படும். Lawson's bay-இன் அழகு என்றும் மாறாதது.

## 204) 1964ஆம் ஆண்டு இந்தியாவில் நடை பெற்ற இந்தியா விற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையேயான கிரிக்கெட் போட்டிகள்.

1964 ஆம் ஆண்டு பலம் பொருந்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவிற்கு வருகை தந்தனர். புகழ் பெற்ற தொடக்க ஆட்டக்காரர் ஆன Bob Simpson இந்த அணிக்குத் தலைவராகச் செயல்பட்டார். கிரிக்கெட் விளையாட்டின் போது விக்கெட் கீப்பருக்கு இடக்கை பக்கமோ, அல்லது வலக்கை பக்கமோ நிற்பவருக்கு First slip என்று பெயர். Bob Simpson இந்த First Slip Positionலிருந்து பல பந்துகளைப் பிடித்திருக்கிறார். இவர் ஒரு சிறந்த சுழற்பந்து வீச்சாளரும் ஆவார். Richie Benaud விற்குப் பிறகு அணித் தலைவர் பொறுப்பை ஏற்றவர் Bob Simpson. அவருக்குப்பிறகு Bill Lawry அணித்தலைவரானார். இந்தியாவில் நடந்த போட்டிகளில் ஆஸ்திரேலியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக விளங்கியவர்கள் Bob Simpson உம், Bill Lawryஉம் ஆவர். இந்திய அணிக்கு Nawab of Pataudi கேப்டனாகப் பொறுப்பு வகித்தார். முதல் டெஸ்ட் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்த ஸ்டேடியம் பழைய மூர் மார்க்கெட்டின் பின்புறம் அமைந்திருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு சேப்பாக்

பகுதியில் புதிதாக ஸ்டேடியம் கட்டப்பட்டது. இங்கு நடைபெற்ற டெஸ்டில் ஆஸ்திரேலியா அணி 139 ரன்களில் வெற்றி பெற்றது. சென்னையில் நடந்த போட்டியில் இந்தியச் சுழற்பந்து வீரரான Bapu Nadkarni இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 122 ரன்கள் கொடுத்து 11 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தியத் தரப்பில் Nawab of Pataudi 128 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியத் தரப்பில் இளம் வேகப்பந்து வீச்சாளரான McKenzie 91 ரன்கள் கொடுத்து 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சென்னையில் இந்தப் போட்டி 2-10-1964 தொடங்கி 7-10-1964 வரை நடைபெற்றது.

இரண்டாவது டெஸ்ட் 10-10-1964 தொடங்கி 15-10-1964 வரை பம்பாயில் நடைபெற்றது. இதில் இந்தியா 2 விக்கெட்டு வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்க்ஸ் Score 320, 2ஆவது இன்னிங்க்ஸ் Score 274, இந்தியத்தரப்பில் கர்னாட காவின் புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளரான B.சந்திரசேகர் 50 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளையும், நட்கர்னி 33 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்திய இன்னிங்க்ஸ் ஸ்கோர் முதல் இன்னிங்க்ஸ் 341, 2ஆவது இன்னிங்க்ஸ் 8 விக்கெட்டு இழப்பிற்கு 256 ரன்கள். இந்தியத்தரப்பில் Nawab of Pataudi உம், திலீப் சர் தேசாயும் முறையே 86, 56 ரன்கள் எடுத்தனர்.

கல்கத்தாவில் 17-10-1964 முதல் 22-10-1964 வரை நடை பெற்ற 3ஆவது டெஸ்ட் டிராவில் முடிந்தது. இந்திய அணியின் மிகச் சிறந்த ஆல் ரவுண்டரான சலீம் துரானி இந்தப் போட்டியின்போது 73 ரன்களில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியா தரப்பில் அணித்தலைவரும், ஆல்ரவுண்டருமான Bob Simpson 45 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளை



வீழ்த்தினார். இந்தியத் தரப்பில் 3 டெஸ்ட்களிலும் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர்களான Borde, Nadkarni, Chandrasekar ஆகியோர் சிறப்பாக விளையாடினர். இந்திய அணிக்கு கபில்தேவ் வந்து சேரும்வரை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பஞ்சம் ஏற்பட்டிருந்தது. ***(தற்போது இந்தியத் தரப்பில் சிறந்த வேகப் பந்து வீச்சாளர்களும், பல்வகைப்பட்ட சுழற்பந்து வீச்சாளர்களும் சமஅளவில் அமைந்துள்ளனர். சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட அணித்தலைவரான Dhoniயின் தலைமையில் இந்தியக் கிரிக்கெட் வெற்றி வாகை சூடி வருகிறது.)***

## 205) ஹிந்தி மொழிக்கு எதிரான போராட்டமும், அதன் விளைவுகளும்

1965ஆம் ஆண்டு முதல் ஹிந்தி மொழியே ஆட்சி மொழியாகும் என்ற மத்திய அரசாங்கத்தின் கொள்கைக்குப் பலத்த எதிர்ப்பு தமிழ்நாட்டில் எழுந்தது. திரு.C.N.அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் போராட்டங்கள் பலவற்றை மேற்கொண்டது. சீனப்படையெடுப்பின்போது தமது தனித்திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகக் கூறிய தி.மு.க. ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அரங்கேற்றியது. மதம், இனம், மொழி ஆகியவை எளிதில் தீப்பிடிக்கச் செய்ய உதவும் கருவிகளாகும். இதை நாம் அவ்வப்போது கண்டு வருகிறோம். இவற்றில் ஒன்றுதான் ஆரியர், திராவிடர் என்று தமிழக மக்களைப் பிரித்துக் காண்பிப்பது. திரு.அண்ணாத்துரை ஹிந்தி என்பது ஒரு வட்டார மொழியே ஒழிய அதற்கென எந்த இலக்கிய, இலக்கண வளமும் இல்லை.

ஆகையால் அது தேசிய மொழியாக ஆவதற்கு எந்தத் தகுதியும் பெறவில்லை என்று வாதிட்டார். அதிக அளவில் இந்தியாவில் பேசப்படுவது ஹிந்தி மொழியே, ஆகையால் அந்த

மொழி தேசிய மொழியாய் இருப்பதற்கு எல்லாத்தகுதிகளையும் கொண்ட மொழியாகும் என்ற கூற்றிற்கு அவர் அப்படிப் பார்க்கப் போனால் தேசியப்பறவையாக மயில் இருப்பதை விட அதிக அளவில் காணப்படும் காக்கைப்பறவை அல்லவோ இருக்க வேண்டும் என்று கிண்டலாகக் குறிப்பிட்டார். (ஆதாரம்: A.S.Raman-' A Meeting with C.N. Annadurai- Illustrated weekly of India. 26-9-1965)

1965ஆம் ஆண்டுக்குப் பிறகும் தமிழக மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் கூட்டு தேசிய மொழியாக விளங்கும் என்று நேரு தந்த உறுதிமொழிக்கு லால் பகதூர் தலைமையிலான அரசாங்கம் மதிப்பு அளிக்கவில்லை. தாண்டன் போல்வாருடைய உத்தரபிரதேச ஹிந்தி வெறியர்கள் எப்பாடுபட்டேனும் ஹிந்தி ஒன்றே தேசிய மொழியாகக் கொள்ளப்படவேண்டும் என்பதில் உறதியாக நின்றனர். ***(உத்தரப் பிரதேச மக்களவை உறுப்பினர்கள் தான் ஒரு கால கட்டத்தில் நாட்டின் பிரதமராய் யார் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வந்தனர். ஆனால் நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது. மானம், ரோஷம் ஏதுமில்லாத நடை பிணங்களாய்ப் வாழும் காங்கிரஸ் ஒரு காலத்தில் இந்திராகாந்தியைக் கொல்ல முயன்ற தி.மு.க. வினருடன் உறவு கொண்டு அந்தக் கட்சி இடும் பிச்சையை சட்டியில் ஏந்திக் கொண்டு காமராஜ் ஆட்சியை மீண்டும் மலரச் செய்வோம் என்ற வெற்றுக் கோஷம் இட்டுக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் காங்கிரஸ் கட்சி தி.மு.கவின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய நிகழ்ச்சிகள் 1965ஆம் ஆண்டு நிறைவேறின.)***

26-1-1965ஆம் நாள் முதல் ஹிந்தி ஒன்றே ஆட்சி மொழியாகக் கொள்ளப்படும் என்ற முடிவை ஒரு வார காலத்திற்குத் தள்ளிப் போடவேண்டும் என்ற வேண்டு கோளை திரு.அண்ணாதுரை பாரதப் பிரதமரான திரு.



லால்பகதூர் சாஸ்திரியிடம் முன் வைத்தார். மேலும் 26-1-1965ஆம் நாளை துக்க நாளாக தி.மு.க. அறிவித்து அன்றையதினம் போராட்டங்களில் ஈடுபடப்போவதாகவும் திரு.அண்ணாதுரை அறிக்கை வெளியிட்டார். ஆனால் திரு. லால்பகதூர் சாஸ்திரி திரு. அண்ணாதுரையின் இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. மாறாக 26-1-1965 தொடங்கி முன் அறிவித்தபடி ஹிந்தி ஒன்றுதான் ஆட்சி மொழியாகக் கொள்ளப்படும் என்ற மத்திய அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவித்தார்.

## 206) ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் வலு வடைந்தது

தமிழகத்தில் பெரும் கலவரம் மூண்டது. பல இடங்களில் ஹிந்தி அரக்கியின் கொடும்பாவி எரிக்கப் பட்டது. ஹிந்தியில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களும், இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சில பகுதிகளும் பொது இடங்களில் நெருப்பில் இடப்பட்டன. ரயில்வே அறிவிப்புப் பலகைகளிலும் தபால் நிலையங்களிலும் வைக்கப்பட்டிருந்த ஹிந்தி அறிவிப்புப் பலகைகள் தார் பூசி அழிக்கப்பட்டன. காவல்துறையினருக்கும், மாணவர்களுக்கும் இடையே ஆங்காங்கு தமிழகத்தில் கைகலப்புகள் நிகழ்ந்தன. சில இடங்களில் காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டால் பலர் உயிரிழந்தனர்.

## 207) ‘‘தமிழ்ப்பற்று என்றால் என்ன?’’

மனித சமூகங்களிடையே பிளவை உண்டு பண்ணு வதற்கு ‘‘மொழி’’ ஒரு வலிமைமிக்க ஆயுதமாகும். இனம் மற்றும் மொழியின் அடிப்படையில்தான் இன்று அரசியல் ஆதாயம் தேடப்படுகிறது, பெறப்படுகிறது. சாதிகள்

ஒழிக்கப்படவேண்டும் என்று கூக்குரல் இடும் அரசியல் தலைவர்கள் இனவாரியான மக்கள் தொகைக் கணக் கெடுப்பு எடுக்கப்படவேண்டும் என்று போராடுகிறார்கள். நாளையே சாதிகள் ஒழிக்கப்பட்டு விட்டால் எங்களுக்கு 3 சதவிகிதம் வேண்டும், எங்களுக்கு 10 சதவிகிதம் வேண்டும் என்று எவ்வாறு கேட்க முடியும்? மக்களைக் குழப்புவதற்கே அரசியல் தலைவர்கள் இந்த மொழிப் பிரச்சனையை முன் வைத்து தாம் வேண்டியவற்றை அடைகிறார்கள்.

தமிழ்நாட்டில் பார்ப்பனர்களுக்கு எதிரான போராட் டங்களை நடத்தியும், தமிழை ஏதோ காப்பாற்ற வந்தவர்கள் போல் ஓர் மாயையை உண்டாக்கி மக்களைத் திசைதிருப்பி, தம் அரசியல் செல் வாக்கைப் பெருக்கிக் கொண்டனர் தி.மு.க.வினர். 1963-64 கால கட்டத்தில் ''தமிழ்ப்பற்று'' கொண்டோர் தாங்கள்தாம் என்றும், தமிழைக் காக்க வந்த காப்பாளர்கள் என்றும் தங்களுக்குத் தாமே பறை சாற்றிக் கொண்டனர் தி.மு.க.வினர். இன்று காங்கிரஸ்காரர்களால் பாத பூஜை செய்யப்பெறும் அளவிற்குத் தங்களை உயர்த்திக் கொண்டு உள்ள தி.மு.க.வினர் 63-64 கால கட்டத்தில் காங்கிரஸ்காரர்களை வடக்கத்தியரின் கைக்கூலிகள் என்று இகழ்ந்து வந்தனர். 1965இல் அரங்கேறிய பல்வேறு அவலங்கள் தி.மு.க.வினரை 1967ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியில் அமர வைத்தது.

## 208)தமிழ் வளர்ச்சி பெற்றுள்ளதா?

1938ஆம் வருடம் தொடங்கி நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் பல்வேறு கால கட்டங்களில், ஆரம்ப காலங்களில் ஜஸ்டிஸ் பார்ட்டியாலும் அதன்பின்பு தி.மு.க.வினராலும் அரசியல் ஆதாயம் கருதியே மேற் கொள்ளப்பட்டு வந்தன. ***(இவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு தமிழ், நலிவடைந்துள்ளது என்பதே உண்மை. தற்போது தமிழின் இலக்கிய, இலக்கண வளங்களை நன்கு கற்றறிந்த பேராசிரியர்களோ, ஆராய்ச்சியாளர்களோ இல்லை என்றே கூறலாம். ழ என்ற எழுத்தை உச்சரிக்கத் தெரியாதவர்கள் ளகர, லகர, னகர, ணகர, எழுத்துக்களிடையே அமைந்துள்ள அடிப்படை வேறுபாடுகளைக்கூட அறியாதவர்கள். சின்ன ர, பெரிய ற என்று சொல்லி மெல்லின, வல்லின, இடையின அறிவை அடியோடு இழந்தவர்கள் இன்றைய தமிழர்கள். தமிழ் செந்தமிழ் அந்தஸ்து பெற்றுள்ளதே தவிர அந்த மொழி வளரவில்லை.***



***மாறாக கழகக் கண்மணிகளுக்கும், அந்தக் கண்மணிகளின் உறவினர்களும், நண்பர்களுமான, பேராசிரியர்களுக்கு துணைவேந்தர் பதவிகள் கிட்டியுள்ளன. தமிழ்நாட்டின் கல்வித்திறம் அனைத்து வகையிலும் தாழ்ந்துவிட்டது. சில பல்கலைக் கழகங்கள் பணம் வாங்கிக் கொண்டு பட்டம் அளிக்கும் வியாபாரக்கூடங்களாக மாறிவிட்டன. தமிழில் தரமுள்ள இதழ்கள் வெளிவருவதில்லை. கலைக்கதிர் போன்ற இதழ்களை தமிழ் எங்கள் மூச்சு, தமிழ் எங்கள் பேச்சு என்று கூறிவரும் இவர்களால் பதிப் பிக்கத்தான் முடியுமா? தமிழ் ஏதோ பச்சைத்தமிழர்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்றும், அந்தணர்கள் தமிழ் அறியாதவர்கள் என்றும் ஒரு மாயையை உண்டு பண்ணியுள்ளனர். தமிழ்த்தாத்தா இல்லையேல் சங்கநூல்கள் என்னவாயிருக்கும்? ஒரு பரிதிமாற்க் கலைஞர் பிறக்க வில்லையேல் தமிழ் என்றோ அழிந்து போய் இருக்கும். வைணவர்கள் இந்தத் தமிழகத்தில் இல்லாதிருந்தால் தமிழுக்குரிய மரியாதை திருக் கோயில் களில் இடம் பெற்றிருக்குமா?)***

## 209) தாளமுத்து, நடராசன் ஆகியோரின் மரணம்

1939ஆம் ஆண்டு தாளமுத்து, நடராசன் ஆகிய இருவரும் சிறையில் மாண்டனர். இவர்கள் சென்னை ஹிந்து

தியோலாஜிகல் உயர்நிலைப்பள்ளி முன்பு இந்தி மொழிக்கு எதிரான போராட்டம் நடத்தியபோது கைது செய்யப்பட்டனர். சிறையில் வயிற்றுப் போக்கி னால் அவதியுற்று இறந்து போயினர். ஆயினும் இவர்கள் தமிழ் மொழிக்காக உயிர் கொடுத்தனர் என்று போற்றப்பட்டு வருகின்றனர்.

## 210) சின்னச்சாமியின் உயிர்த்தியாகம்.

1-5-1938ஆம் நாள் ஸ்டாலின் ஜகதீசன் என்பார் சாகும்வரை உண்ணா நோன்பை மேற்கொண்டார். தெற்கே சங்கரலிங்க நாடார் என்பவர் இந்தப் போராட்டத்தில் உயிர்நீத்தார். 1958-59ஆம் ஆண்டுகளில் இலக்குவன் மற்றும் அரங்கரத்தினம் என்ற இருவர் முறையே திருச்சி மற்றும் சென்னை அகில இந்திய வானொலி நிலையங்களுக்கு முன்பு போராட்டங்களை நடத்தினர். ஆகாசவாணி என்ற இந்திச் சொல்லைப் பயன்படுத்தக்கூடாது. மாறாக அகில இந்திய வானொலி என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இவர்களது கோரிக்கை. கி.ஆ.பெ. விஸ்வநாதனும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

25-1-1964ஆம் நாள் திருச்சியில் நடை பெற்ற முனிசிபாலிட்டி தேர்தலின்போது சின்னச்சாமி என்பார் திருச்சி ராப்பள்ளி ரயில்வே சந்திப்பின் எதிரில் தீக்குளித்து மாண்டார். தீப்பற்றி எரிந்த இந்த நிகழ்ச்சியின்போது ‘இந்தி ஒழிக, தமிழ் வாழ்க’ என்று கூறிக் கொண்டு மாண்டார். ‘‘கன்னித்தமிழே நீ என்றும் வாழும்பொருட்டு நான் இறந்து போகிறேன்’’ என்று கூறிக்கொண்டே உயிர்த் தியாகம் செய்தார் சின்னச்சாமி. இந்த நிகழ்ச்சி தொடங்கி பலர் தமிழைக் காப்பாற்றுகிறோம் என்று கூறித் தீக்குளித்து மாண்டனர்.



## 211) 1964ஆம் ஆண்டு தி.மு.க. சென்னை மாநகராட்சி தேர்தலில் வெற்றி வாகை சூடியது.

1964ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநகர கார்ப்பரேஷனுக்கான தேர்தலில் சென்னையிலுள்ள அனைத்து சுவர்களிலும் சின்னச்சாமியின் கருகிய உடல் அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகள் காணப்பட்டன. அந்தத் தேர்தலில் தி.மு.க. வெற்றி வாகை சூடியது. அதைத் தொடர்ந்து 1967ஆம் ஆண்டு திரு. அண்ணாதுரை தலை மையில் மாநிலத்தில் முதன்முதலாக அமைச்சரவை பொறுப் பேற்றது. காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட்டது. அதன்பிறகு திருச்சிராப்பள்ளியில் தற்போதைய முதல் அமைச்சரான மாண்புமிகு கருணாநிதியால் சின்னச்சாமிக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது.

## 212) ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் தொடர்ச்சி.

சின்னச்சாமியின் தீக்குளிப்பு நிகழ்ச்சி நடந்தேறிய பிறகு, 1965ஆம் ஆண்டு பல இளைஞர்கள் தமக்குத்தாமே தீயிட்டுக் கொண்டு உயிர் நீத்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சிவலிங்கம், அரங்கநாதன், வீரப்பன், முத்து, சாரங்கபாணி ஆகியோர். தண்டபாணி, முத்து, சண்முகம் ஆகியோர் விஷமருந்தி உயிர் நீத்தனர். 27-1-1965ஆம் நாள் ராஜேந்திரன் என்ற 18 வயது கல்லூரி மாணவன் (போலீஸ் காரரின் மகன்) போலீஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தான். இந்த நிகழ்ச்சி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இவர்கள் அனைவரும் மொழிப் போராளிகள் என்று போற்றப் படுகின்றனர்.

## 213) Home Sickness வந்தால் என்ன செய்வது?

1964-65ஆம் ஆண்டுகளில் 800 கி.மீட்டருக்கு மேல் பயணம் செய்வோர்க்கு ரயிலில் தூங்கும் வசதிக்கான கட்டணம் வசூலிக்கப்படவில்லை. சென்னையைச் சேர்ந்த என்னுடைய நண்பர்கள் வால்டேர் ரயில் நிலையத்திலிருந்து (இதுதான் விசாகப்பட்டினம் ரயில் நிலையம்) தாம்பரத்துக்கு டிக்கெட் வாங்கிச் செல்வர். சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு டிக்கெட் வாங்கினால் தூங்கும் வசதிக்கான கட்டணம் செலுத்தப்படவேண்டும். வால்டேர் ரயில் நிலையத்தி லிருந்து ஹௌரா விரைவு வண்டியில் சென்னைக்குச் செல்வதற்கான கோட்டா 4 பர்த்கள்தான்.

ஆகவே ஊருக்குச் செல்ல வேண்டுமானால் காலை 7மணிக்கே முன்பதிவு கவுண்டருக்குச் சென்று வரிசையில் நிற்கவேண்டும். ''ஊர் நினைவு'' வந்தால் ஹௌரா விரைவு வண்டி வரும் (இது வால்டேர் ரயில்நிலையத்திற்கு மாலை 7 மணிக்கு வந்துசேரும்.) நேரத்திற்கு வால்டேர் ரயில் நிலையத்திற்குச் சென்று சென்னைக்குச் செல்லும் ரயிலைப் பார்த்து மனநிறைவு கொள்ளவேண்டியதுதான். நண்பர்களும் நானும் அவ்வப்போது வால்டேர் ரயில் நிலையத்திற்குச் சென்று ஹௌராவிலிருந்து சென்னை செல்லும் ரயிலைப் பார்த்து மகிழ்ந்துவிட்டு அங்கே உள்ள வெஜிடேரியன் உணவு சாலையில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கால்நடையாக இருப்பிடத்தைச் சென்றடைவோம்.

## 214) Indian Oil Regional Office Setup.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் விசாகப்பட்டினம் டெர்மினல் சதர்ன் ரீஜன் எனப்படும் கட்டுப்பாட்டு வட்டத்திற்குள் உட் பட்டதாகும். சென்னையில்அப்போதைய



மௌன்ட்ரோடில் 150A, Khivraj Mansionஇல் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சதர்ன் ரீஜனல் அலுவலகம் அமைந் திருந்தது. ஆரம்ப கால கட்டத்தில் திரு. J.V.K. Rao Branch Managerஆகப் பணியாற்றி வந்தார். அவருக்குப் பிறகு திரு. D.N. Sharma Branch Managerஆகப் பொறுப்பேற்றார். நான் வேலை பார்த்து வந்த Operations Departmentஇன் மேலதி காரி Branch Operations Manager என்று அழைக்கப்பட்டு வந்தார். சுருக்கமாக இவரை BOM என்று அழைப்பார்கள். திரு. C.Y. Vasudeva Rao என்ற C.Y.V. Rao Esso. company இல் பணி புரிந்தவர்.

நான் முன்பே குறிப்பிட்டுள்ளபடி இந்தியன் ஆயில் ஒரு ஒட்டு மாமரம். A.G.S. Office, Esso, Caltex, Burma Shell, Railways போன்ற நிறுவனங்களில் பணி செய்தவர்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயிலின் தலையாகவும், கைகளாகவும், கண்க ளாகவும், கால்களாகவும் விளங்கினர். உலகத்திலேயே இதுபோன்ற Cross Breeding Companyஐப் பார்க்க இயலாது. இந்த நிறுவனத்திற்கு I.A.S. அதிகாரிகள் ஆரம்ப கால கட்டத்தில் Chairmanகளாக விளங்கினர். இதுதவிர என்னைப் போன்ற ஆயில் கம்பெனியில் பணிபுரிந்திராத பலரும் வேலையில் அமர்ந்திருந்தனர். ஆனால் மற்றைய எண்ணெய்க் கம்பெனிகளிலிருந்து வந்தவர்கள் முழுமை யான வேலைத்திறன் படைத்தவர்கள் அல்லர். ஏனெனில் அவர்கள் பணிபுரிந்த எண்ணெய் நிறுவனங்களில் அனைத்து எண்ணெய்க் கம்பெனியைச் சார்ந்த துறைகளிலும் பணி புரியும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

ஆனால் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் என் போன்ற ஆயிலைப் பற்றி ஒன்றும் அறியாதவர்கள் கற்றுக் கொண்ட

அல்லது மேற்கொண்ட வேலைத்திறன் இந்தியன் ஆயிலின் ரத்த ஓட்டமாக விளங்கியது. 1961ஆம் ஆண்டிலிருந்து 67ஆம் ஆண்டுவரை பணியில் சேர்ந்தவர்கள் அனைத்துத் துறைகளிலும் தேர்ந்தவர்களாய் எந்தப் பணியையும் அனா யாசமாய்ச் செய்திடும் ஆற்றல் படைத்தவராய் விளங்கி வந்தனர்.

## 215) டெர்மினல் மேற்பார்வையாளராக இருப்ப வருக்கு என்னென்ன தெரிந்திருக்க வேண்டும்?

ஒரு டெர்மினலில் மேற்பார்வையாளராகப் பணி புரிபவருக்கு Quality Control எனப்படும் தரக்கட்டுப்பாடு, எண்ணெய் வினியோகம் பற்றிய அறிவு, (இதனை Knowledge on Supply and Distribution, என்று குறிப்பிடுவர்) Excise and Customs Rules, Salestax Rules, R.T.O. Rules, Factory Act Rules, Public Relations, Controlling of the Work Force எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம் ஆகிய வற்றைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும்.

ஆரம்ப கால கட்டத்தில் இந்தத் துறைகளில் எல்லாம் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் எனக்கு அமைந்தி ருந்தன. பிற்காலங்களில் டெர்மினல் மேனேஜராக நான் பணிபுரிந்தபோது விசாகப்பட்டினத்தில் நான் பெற்ற இந்தப் பன்முகப் பயிற்சி பெரிதும் உதவியது.

## 216) எண்ணெய் வினியோகத்தின் எல்லைக் கோடுகள்.

விசாகப்பட்டினம் டெர்மினலிலிருந்து Eastern Region கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருந்த Berhampur, Cuttack, Bhilai, Jameshedpur, Bondamunda, Talcher, Bilaspur, Bailadila போன்ற ஆயில் டெப்போக்களுக்கே அதிக அளவிற்கு பெட்ரோலியப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. சதர்ன் ரீஜனைப் பொறுத்தவரை Nidadavole, Vijayawada, Warangal ஆகிய டெப்போக்களுக்கே பெட் ரோலியப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. ஆகவே தினந்தோறும் Eastern Region, S & D Manager ஆன திரு. தாலுக்தார் என்பவர் தொடர்பு கொண்டு எந்தெந்த டெப்போவிற்கு எந்த அளவில் எண்ணெய் அனுப்பப் படவேண்டும் என்பதைக் கூறிடுவார். இதன் அடிப்படை யில்தான் விசாகப்பட்டினம் டெர்மினலின் செயல்பாடு அமைந்திருக்கும். S & D என்பது கத்திமேல் நடப்பது போன்றதொரு கடினமான செயல்பாடாகும். இந்தப்பணியை P.அச்சுதராம் என்பவன் செவ்வனே செய்து வந்தான். மாதத்தின் அனைத்து நாட்களிலும் டெர்மினலுக்கு வருகை தரவேண்டும். விடுப்பு எடுக்க இயலாது. அதிகப் பொறுப்பு களைச் சுமக்க வேண்டிய கட்டாயம் S & D மேற்பார்வை யாளருக்கு அமைந்திருந்தது.



### 217) பணி மாற்றங்கள்.

திரு. M.Srinivasan 1966ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் டெர்மினல் மேனேஜராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். முந்தைய டெர்மினல் மேனேஜர் திரு. ராஜேந்திரா-சென்னை, தண்டையார் பேட்டை டெர்மினலுக்கு பணிமாற்றம் பெற்றுச் சென்றார். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ஆம் நாள் எண்ணையின் அளவு, Lubricants இருப்பு மற்றும் அசையும், அசையாச் சொத்துக்கள் ஆகியவற்றைக் கணக்கு எடுப்பதற்கு 10பேர் கொண்ட குழு சென்னையிலிருந்து வருகை தரும். மார்ச் 31க்கு முன் 5 நாட்களும், பின் 5 நாட்களும் வேலைப்பளு கூடியிருக்கும்.

## 218) ரெவின்யூ ஸ்டாம்பில் கையெழுத்திட்டால் தான் சம்பளம்.

Accounts Departmentஇன் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தவர். திரு. சீதாராமன். இவர் பர்மா ஷெல் கம்பெனியிலிருந்து வந்தவர். Accounts துறையில் முற்போக்குச் சிந்தனை படைத்தவர்களும், சில முடிவுகளை எடுப்பதில் வல்லவர்களாயும் இருப்பவர்களைக் காண இயலாது. Accounts துறையில் உயர் அதிகாரியாய் இருந்த வந்த P. வடிவேலு A.G.S. Officeலிருந்து Deputationஇல் வந்தவர். அவர் ஊழியர்கள் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும்போது ரெவின்யூ ஸ்டாம்பில் (அப்போது 10 பைசா) கையெழுத்திட வேண்டும் என்ற ஒரு நடைமுறையை ஏற்படுத்தி வைத்தார். ஆனால் திரு. சீதாராமன் பணியில் அமர்ந்தவுடன் இந்த நடைமுறையை நீக்கினார்.

## 219) Decision Making

பொதுவாக அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் வியாபாரத் துறையில் முன்னேற்றம் காண்பது மிக அரிதான செயல்களில் ஒன்றாகும். அதற்குக் காரணம் ஒவ்வொரு அதிகாரியும் தனக்குரிய அதிகார வரம்புக்கு உட்பட்டு உரிய முடிவுகளை அவ்வப்போது எடுப்பதில்லை. அதனால் மேலதிகாரிகளின் முடிவிற்காகக் காத்திருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட செயலை இவர்களால் விரைவாக மேற்கொள்ள முடியாது. இதற்கு Escalation of Decession Making Process என்று பெயர். ஆரம்பகால கட்டத்தில் திரு.வடிவேலு, திரு.லக்ஷ்மணதாஸ் போன்ற உயர்அதிகாரிகள் வளர்ந்து வரும் வியாபார நிறு வனத்தின் தன்மைக்கேற்ப முடிவுகளை எடுக்கத் தயங்கினர். இவர்களைப் போன்றோருடை செயல்



பாடுகளையும் தாண்டி, இந்தியன் ஆயில் நிறுவனம் வளர்ச்சிபெற்று ஒரு ஆலமரமாக இன்று விளங்குகிறது. குறிப்பாக இந்தியன் ஆயில் நிறுவனத்தில் தரக்கட்டுப்பாடு கொள்கை போற்றத்தக்கதாக அமைந்துள்ளது.

## 220) தரக்கட்டுப்பாடு (Quality Control)

பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடமாகிய எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து நம்முடைய வாகனங்களில் நிரப்பப்படும் நீண்ட பயணத்தின் போது இந்தியன் ஆயில் நிறுவனம் மட்டும்தான் அந்தக்கால கட்டத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்ளும் எண்ணெய் வினியோகத்தின் போதும் கடுமையான தரக் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொண்டு வந்தது. மற்றைய எண்ணெய்க் கம்பெனிகள் தரக் கட்டுப்பாட்டுக் கொள்கை களை உருவாக்கவும் இல்லை. அவற்றை சரிவர அமுல் செய்யவும் இல்லை.

## 221) பேருந்து வழித்தடம் எண்.18. சிம்ஹாசலம் முதல் காஜுவாக்கா வரை.

ஆந்திராவில் குறிப்பாக விஜயவாடா தொடங்கி ஸ்ரீகாகுளம் ஈறாக உள்ள மக்களிடையே சத்யநாராயணா, சிம்ஹாசலம் என்ற பெயர்களைக் கொண்டவர்களாகப் பெரும்பாலானோர் விளங்குவர். அதேபோன்று கம்மம், வாரங்கல், ஹைதராபாத் பகுதிகளில் வசிக்கும் பிற்படுத்தப் பட்ட மக்களிடையே யாதகிரி என்ற பெயரைக் கொண் டோர் பலர் உள். ஆந்திராவில் புகழ்பெற்ற திருத்தலங்களாக திரு மலை திருப்பதி-திருவேங்கடமுடையான் திருக்கோயில், நெல்லூர்-ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில், விஜய வாடாவில் -பானக நரஸிம்ஹர் திருக்கோயில், கோருகொண்டா

-ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ஹர் திருக்கோயில், பத்ராசலம்-ஸ்ரீராமர் திருக்கோயில், அன்னவரப்பு -சத்யநாராயண ஸ்வாமி திருக் கோயில், சிம்ஹாசலம்-ஸ்ரீவராஹ நரசிம்ஹர் திருக்கோயில், ஸ்ரீகாகுளம் ஸ்ரீகூர்மத்தில்-ஸ்ரீகூர்மநாதர் திருக்கோயில் ஆகியவை அமைந்துள்ளன.

ஸ்ரீராமானுஜருடைய திருப்பாதங்கள் பட்ட திருத் தலங்களாக ஸ்ரீபராசரபட்டர் தம்முடைய ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தில் கீழ்க்கண்டவாறு அருளிச் செய்துள்ளார்.

**ஸ்ரீரங்க$_3$ம் கரிஶைலமஞ்ஜநகி$_3$ரிம்**
**தார்க்ஷ்யாத்$_3$ரிஸிம்ஹாசலௌ**
**ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச**
**ப$_3$த$_3$ரீநாராயணம் நைமிஶம் |**
**ஸ்ரீமத்$_3$த்$_3$ வாரவதீப்ராயக$_3$-**
**மது$_4$ராயோத்$_4$ யாக$_3$யா: புஷ்கரம்**
**ஸாளக்$_3$ராமகி$_3$ரிம் நிஷேவ்ய**
**ரமதே ராமாநுஜோ(அ)யம் முநி: ||**

இதில் சிம்ஹாசலம் என்னும் க்ஷேத்ரத்திற்கு உடையவர் எழுந்தருளியது குறிப்பிடப்பட்டுள்ளது.

தினந்தோறும் 18ஆம் எண் பேருந்து வழித்தடத்தில் அலுவலகத்திற்குச் செல்லவேண்டும் என்பதை முன்னரே குறிப் பிட்டுள்ளேன். சிம்ஹாசலத்திலிருந்து காஜுவாக்கா என்னும் ஊரில் அமைந்துள்ள இந்துஸ்தான் ஷிப் யார்டு வரை இந்த 18ஆம் எண் பேருந்து தினந்தோறும் சென்று வரும். காலை 7.20க்கு Dhaba Garden பேருந்து நிறுத்தத்தில் ஏறினால் நேரத்தில் அலுவலகத்தைச் சென்றடையலாம். சிம்ஹாசலம் கிழக்குத் தொடர்ச்சி மலையில் கடல் மட்டத்திலிருந்து 800அடி உயரத்தில் அமைந்துள்ளதொரு



திருத் தலமாகும். விசாகப்பட்டினத்திலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. 1965ஆம் ஆண்டு அக்ஷய திருதியை அன்று சிம்ஹாசலத்திற்குச் சென்று வந்தேன் நான்.

கிழக்குத் தொடர்ச்சி மலையின் உயரம் 600 அடியி லிருந்து 1800அடி வரை வேறுபட்டிருக்கும். சிம்ஹாசலத்தின் வடக்கில் 20கி.மீட்டர் தொலைவில் Gosthani என்ற ஆறும், சிம்ஹாசலத்திற்கு மேற்கில் 20 கி.மீட்டர் தொலைவில் ‘சாரதா’ என்ற நதியும், சிம்ஹாசலத்திற்கு மேற்கில் 40 கி.மீட்டர் தொலைவில் வராஹ நதியும் ஓடிக் கொண்டி ருக்கின்றன.

## 222) அக்ஷயதிருதியையும், நிஜரூப ஸேவையும்

இயற்கை எழில் கொஞ்சும் சிம்ஹாசலத்தில் அக்ஷய திருதியை அன்று வராஹமூர்த்தியின்மேல் சாற்றப்பட்டுள்ள குங்குமப்பூ கலந்த சந்தனக்குழம்பு காலை நாலரை மணிக்குக் களையப்பட்டு வராஹமூர்த்தியின் ‘நிஜரூபத்தை’ அன்று ஒரு நாள் மட்டும் காணலாம். இரவு 9மணிக்கு மீண்டும் குங்குமப்பூ கலந்த சந்தனக்குழம்பு வராஹமூர்த்தியின்மேல் சாற்றப்படும். அடுத்த ஆண்டு அக்ஷய திருதியையின் போதுதான் மீண்டும் அந்த சந்தனக் குழம்பு களையப்படும்.

***(அக்ஷயதிருதியையன்று தங்கம் வாங்கினால் புத்தகத்தின் நடுவே வைக்கப் பெற்ற மயிலிறகு போலே குட்டி போடும் என்று சிறார்களை நம்ப வைப்பது போல, மக்களை மூளைச் சலவை செய்து ஆண்டுதோறும் வியாபாரிகள் தங்கள் விற்பனையைப் பெருக்கி வருகின்றனர். ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு அக்ஷயதிருதியை அன்று அன்னதானம் செய்வர், குழந்தைகளுக்கு ஸ்தோத்ர பாடங்களை மனனம் செய்வதற்கு சந்தை சொல்லித் தருவர். புது நூல்களை வாங்கி தங்கள் இல்லங்களை அலங்கரிப்பர். அன்றைய***

*தினம் பெரும்பாலான விஷ்ணுகோயில்களில் உதய கருடஸேவை நடைபெறும். ஸஹஸ்ரநாம பாராயணம் நடை பெறும். நாள் முழுவதும் இறைவனைப் பற்றிய சிந்தனையையே வளர்க்கும் நாளாக இருந்த அக்ஷயதிருதியை இன்று தங்கம் வாங்கினால் பொங்கும் என்று குறுகிய எண்ணம் கொண்ட நாளாக மாறிவிட்டது. மண்ஆசை, பெண்ஆசை, பொன் ஆசை ஆகியவை சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லுபவை. ஆண்டுக்கு ஆண்டு விலைதான் கூடுகிறதேயொழிய சென்ற ஆண்டு வாங்கிய தங்கம் இரட்டிப்பு ஆகவில்லை. எதிலும் வியா பாரம், எங்கும் வியாபாரம். அடுத்த ஆண்டு முதல் நம்முடைய தொலைக் காட்சி ஊடகங் களில் அக்ஷயதிருதியை முன்னிட்டு புத்தம்புதிய படங்கள், நான் நகை வாங்கியது எப்படி என்று ப்ரபல நடிகைகள் பேட்டி ஒளி பரப்பப்படும். எல்லோருடைய வயிறுகளும் இந்தக் காட்சிகளைப் பார்த்து நிறைந்துவிடும்.*

*நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று நமக்கே தெரியவில்லை. ஆயினும் நாட்டிலே நிலவும் உணவுப்பஞ்சம், விலைவாசி ஏற்றம், குடிநீர்ப்பஞ்சம் ஆகியவைகளுக்கு இடையே சென்ற ஆண்டு 40 டன்களாக தங்கம் அக்ஷயதிருதியை அன்று விற்றது என்றும், இந்த ஆண்டு 80 டன்களாக விற்பனை அதிகரிக்கக்கூடும் என்றும் நகைக்கடை உரிமை யாளர்கள் பேட்டியளித்து வருகின்றனர். நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை இந்த நிகழ்ச்சி வெளிப்படுத்துகிறது அல்லவா? கலைஞர் ஆட்சியின் சாதனைப்பட்டியலில் இந்த தங்க விற்பனையையும் சேர்த்துக்கொள்ளலாம். டாஸ்மார்க் மூலம் வருமானம் இரட்டிப்பு ஆகியுள்ளது. இதைவிட வேறு சாதனை இருக்க முடியுமா? இவ்வாறு நாட்டிலே கடுமையான விலையேற்றத்தின் இடையே இந்த ஆண்டு தங்கத்தின் விற்பனை அக்ஷயதிருதியை அன்று மட்டும் 40 டன்களிலிருந்து 80 டன்கள்வரை தங்கம் விற்பனை ஆகக்கூடுமானால் அவ்வாறு தங்கம் வாங்குபவர்களுக்கு பணம் எவ்வாறு வந்து சேர்ந்தது என்பதை வருமான வரித்துறை கண்காணிக்க வேண்டும். I.P.L. ஊழல், Spectrum ஊழல் போல, அக்ஷயதிருதியை அன்று பெருமளவில் தங்கம் வாங்குபவர்கள் மக்கள் ஊழல் செய்து கருப்புப்பணத்தைச் சேர்த்த வர்களாகத்தான் இருக்கக்கூடும்.)*



## 223) சுனைகளும், அருவிகளும்

சிம்ஹாசலத்தில் ஆண்டின் அனைத்து நாட்களிலும் சிம்ஹாசல தாரா, சீதம்ம தாரா, மாதவ தாரா ஆகியவற்றி லிருந்து நீர் பொசிந்து கொண்டேயிருக்கும். மழை காலங்களில் அதிக அளவில் நீரின் வீழ்ச்சி காணப்படும். இவ்வாறு வெளிப்படும் நீர் சென்ற இதழில் குறிப்பிடப் பட்டுள்ள Lawson's Bay என்னும் இடத்தில் கடலில் கலக்கிறது. **(இதை 'சிந்துபைரவி' படத்தில் காணலாம்.)** சிம்ஹாசலத்திற்கு அண்மை யில் உள்ள ''முடசரலோவா'' என்னும் பெரியதொரு ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி யிலிருந்து குடிநீர் விசாகப்பட்டினத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

சிம்ஹாசலம் மலைத் தொடரைச் சுற்றி அமைந்துள்ள பகுதியில் மல்லிகை, பைன் ஆப்பிள் போன்ற பயிர்களோடு பலா மரங்கள், புளிய மரங்கள், மா மரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. மலைச் சரிவுகளில் ஆங்காங்கே அமைந்துள்ள சுனைகளிலிருந்து வெளிப்படும் நீரின் உதவி கொண்டு காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

## 224) சிம்ஹாசலம் என்றால் என்ன பொருள்?

சிம்ஹாசலம் என்ற சொல் ''சிங்கம் உறையும் மலை'' என்ற பொருளைத் தரும். இங்கு கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் திருநாமம் வராஹ நரஸிம்ஹன் என்பதாகும்.

சனிக்கிழமைகளில் சுற்றி உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் பெருமளவில் திரண்டு வந்து விடியவிடிய திருநாம சங்கீர்த்தனமும், நாட்டியமும் ஆடி மகிழ்வர்.

## 225) முதலாம் குலோத்துங்கனும், சிம்ஹாசலமும்.

கலிங்க தேசத்தின் ஒரு பகுதியாய் விளங்கிய சிம்ஹாசலத்தை முதலாம் குலோத்துங்கன் கலிங்க மன்னனைப் போரில் வெற்றி கொண்டு சோழ நாட்டின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டான். தெலுங்குச் சோடர்கள் என்று அழைக்கப்படும் ஆந்திர தேசத்தை ஆண்டு வந்த சோழ மன்னர்களின் கிளை வம்சத்தில் தோன்றியவனான அனந்த வர்மனுக்கு உதவி செய்யும் பொருட்டு கலிங்கத்தின்மீது படையெடுத்தான் முதலாம் குலோத்துங்கன். கலிங்கத்தின் மீது மூன்று முறை படையெடுத்தான் என்பது வரலாறு. அவ்வாறு படையெடுக்கும் போது விசாகப்பட்டினத்தில் பல நாட்கள் தங்கியிருந்து அந்த நகரத்திற்கு குலோத்துங்க சோழபட்டினம் என்று பெயரிட்டான்.

நரஸிம்ஹப் பெருமாளின் தீவிர பக்தனான குலோத்துங்கன் விசாகப்பட்டினத்தில் தங்கியிருந்த நாட்களில் தினந்தோறும் சிம்ஹாசலம் சென்று வராஹ லக்ஷ்மிநரசிம்ஹரை ஸேவித்து வந்தான் என்பது வரலாறாகும். (முதலாம் குலோத்துங்கனை இராமாநுசருக்குத் தீங்கிழைத்த கிருமி கண்ட சோழனாக சித்தரிக்க முயல் வோர் இதைக் கருத்தில் கொள்க.)

கி.பி. 1999ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ள முதலாம் குலோத்துங்கன் காலத்தைய கல்வெட்டு ஒன்று அந்த ஆண்டு முதலாம் குலோத்துங்கன் சிம்ஹாசலம் திருக்கோயிலில் சுற்றியுள்ள பகுதியில் முகாமிட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது.



## 226) வராஹ நரஸிம்ஹனின் திருவுருவக்காட்சி.

நிஜரூப ஸேவையின்போது காட்சியளிக்கும் வராஹ நரசிம்ஹப் பெருமாளைக் கூர்ந்து கவனித்தால் இடுப்பிற்கு மேலே வராஹ ரூபமும், இடுப்பிற்குக் கீழே நரசிம்ஹத்தின் வாலுடன் கூடிய திருக்கோலத்தையும் ஸேவிக்கலாம். இரு பக்கத்திலும் ஸ்ரீதேவியும் பூதேவியும் எழுந்தருளியுள்ளனர். இந்தத் திருக்கோயில் பாஞ்சராத்ர ஆகமத்தின் பூஜா விதானங்களைக் கொண்டது. தென் இந்தியக் கோயில்களைப் போல சூடிக் கொடுத்த நாச்சியார் மற்றும் ஆழ்வார் ஆசார்யர்களுக்குத் தனி ஸந்நிதிகள் அமைந்துள்ளன. ஸ்ரீமணவாள மாமுனி களுக்கென தனி ஸந்நிதி அமைந்துள்ளது. அனைத்து ஆழ்வார், ஆசார்யர்கள் திருநக்ஷத்ரங்கள் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது இந்தத் திருக்கோயிலில்.

ஹிரண்யகசிபு தன் மகனான ப்ரஹ்லாதனை சிம்ஹாசலத்திற்கு அண்மையில் உள்ள கடலில் அமுத்தி சிம்ஹாசலம் திருக்கோயிலில் இருக்கும் மலையைப் பெயர்த்து அவன்மீது எறிந்து கொல்ல முற்பட்டபோது ஸ்ரீமந்நாராயணன் அவனைக் காப்பாற்றினான். ப்ரஹ்லாதனுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஹிரண்யாக்ஷனைக் கொன்ற வராஹ ஸ்வரூபத்தையும், ஹிரண்யகசிபுவைக் கொன்ற நரஸிம்ஹ ஸ்வரூபத்தையும் ஒருசேரக் காட்டி அவனுடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்தான். அதனால் தான் சிம்ஹாசலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் வராஹ நரஸிம்ஹராக ஸேவை ஸாதிக்கின்றான்.

## 227) முகம்மதியர்களின் படையெடுப்பு

மற்றைய இந்துக் கோயில்கள் முகம்மதியர்கள்

படையெடுப்பினால் பாழ்பட்டது போல் சிம்ஹாசலமும் 16ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த படையெடுப்பால் நாசத்தை அடைந்தது. ஹைதராபாத்தில் ஆண்டு வந்த குதுப்ஷாஹி வம்ச மன்னனான முகம்மது குலி குதுப்ஷா (கி.பி.1580-1612) சிம்ஹாசலம் மற்றும் ஸ்ரீகூர்மத்தின்மீது படையெடுத்தான். இதன் விளைவாக 48 ஆண்டுகள் திருக்கோயில் தன் பெருமையை இழந்திருந்தது என்பதை ஆங்குள்ள கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முகம்மதியர்கள் படை யெடுப்பால் நாசமுற்ற திருக்கோயிலின் நிலைமையை கோகுலபதி கூர்மநாதகவி தம்முடைய சிம்ஹாத்ரி நரஸிம்ஹ சதகத்தில் விவரித்து உள்ளார்.

***(ஏறக்குறைய இதே காலகட்டத்தில் திருமலை திருக்கோயிலில் முகம்மதி யர்கள் புகுந்து அங்கு அவர்கள் செய்த அட்டூழியத்தை விவரித்து பாஞ்ச ஜன்யம் முந்தைய இதழ்களில் 'கவி சிந்திய கண்ணீர்' என்னும் தலைப்பில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. வாசகர்கள் மீண்டும் அந்தக் கட்டுரைத் தொடரைப் படித்திட வேண்டுகிறேன். ''மதச்சார்பின்மை'' என்ற போர்வையில் முகம்மதியர்கள் இந்துக்கோயில்களின்மீது படையெடுத்தார்கள் என்று எழுதுவதுகூட மதச்சார்பின்மைக்கு ஊறு விளைவிக்கும் என்ற புதியதொரு பத்திரிகை தர்மத்தைப் பெரும்பாலான நாளிதழ்கள் கொண்டு ள்ளன. வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள்தானே இவை. இவற்றைக் கூறுவதில் என்ன தயக்கம் இவர்களுக்கு?)***

## 228) கவி சிந்திய கண்ணீர்

கூர்மநாதகவி படையெடுப்பின்போது சிம்ஹாச லத்தில் இருந்த தாகவும், அப்போது அங்கிருந்த பண்டிதர்கள் உயிருக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டதாகவும், படை யெடுப்பைத் தடுக்க இயலாத நீர் ஏன் இந்த மலையில் கோயில் கொண்டுள்ளீர் என்று கூர்மநாதகவி வராஹ நரஸிம்ஹனை நோக்கி வசையுடன் கூடிய ச்லோகங்களைக் கூறியதாகவும், அப்போது பெரியதொரு தேனீக் கூட்டம் கோயிலெங்கும் சூழ்ந்து சிலைகளை உடைக்க வந்த முகம்மதியர்களை விரட்டியடித்த தாகவும் கூறப்படுகிறது. ஆபத் சகாயனாக எம்பெருமான் விளங்கியதை இன்றும் மக்கள் நினைவு கூறுகிறார்கள். விஜயநகர மாமன்னரான கிருஷ்ணதேவராயர் தம்முடைய ஆமுக்த மால்யதாவில் தாம் சிம்ஹாசலம் சென்று வழிபட்டதைக் குறிப்பிட்டு உள்ளார். அவருடைய அவைப்புலவரான அல்லசானி பெத்தண் ணாவும் தம்முடைய மனு சரித்திரத்தில் கிருஷ்ணதேவராயர் சிம்ஹாசலம் சென்று வழிபட்டதைக் குறிப்பிட்டுள்ளார். சிம்ஹாசலத்தில் பெரியதொரு ஜயஸ்தம்பத்தை நாட்டினார் கிருஷ்ண தேவராயர்.



சிம்ஹாசல மாஹாத்மியம் மற்றும் லக்ஷ்மி நரஸிம்ஹ சரிதா ஆகிய நூல்களில் சிம்ஹாசலத்தின் பெருமை பல்வகையிலும் பேசப்படுகின்றன. கோருகொண்டா கல்வெட்டுகளிலும் ஸ்ரீரங்கம் செப்பேடுகளிலும் குறிப்பிடப் படும் மும்மடி நாயக்கன் சிம்ஹாசலம் திருக்கோயிலுக்குப் பல தானங்களை அளித்துள்ளான். திருக்கோயிலின் அனைத்து மண்டபங்களிலும் அழகான வேலைப்பாடு அமைந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. தூண்கள் பல்வேறு அவதார வைபவங்களைத் தாங்கி நிற்கின்றன.

## 229) கல்வெட்டுகள்

இந்தத் திருக்கோயிலில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.பி. 1899ஆம் ஆண்டு இவையனைத்தும் படியெடுக்கப்பட்டுள்ளன. கோயில் புனர்

நிர்மாணம் செய்யப்பட்ட போது பல கல்வெட்டுகள் அழிவுற்றன. ஆயினும் 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் (11ஆம் நூற்றாண்டு தொடங்கியே கல்வெட்டுகள் காணப்படுகின்றன.) ஆழ்வார்கள் எழுந்தருளி யிருக்கும் ஸந்நிதியில் மட்டும்தான் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் நிலதானம் மற்றும் பொற்காசுகள் தந்தமையைக் குறிப்பிடுகின்றன. முதலாம் குலோத்துங்கனின் 2 கல்வெட்டுகள் இந்தக் கோயிலில் காணப்படுகின்றன. சோழர்களைத் தவிர கங்க மன்னர்களான முதலாம் நரசிம்மன், இரண்டாம் நரசிம்மன், இரண்டாம் பானு தேவன், மூன்றாம் நரசிம்மன், மூன்றாம் பானு தேவன், நான்காம் நரசிம்மன் ஆகியோர் காலத்தைய கல்வெட்டுகளும் ஒட்டடி, மத்ஸயர்கள் வம்சத்து மன்னவர்களான முதலாம் அர்ஜுன தேவன், இரண்டாம் அர்ஜுன தேவன், மூன்றாம் அருண தேவன், நான்காம் அர்ஜுன தேவன் ஆகியோர் காலத்தைய கல்வெட்டுகளும், ஒரிஸ்ஸா பகுதியைச் சேர்ந்த சூர்ய வம்ச கஜபதிகள் மற்றும் பல குறுநில மன்னர்களின் கல்வெட்டுகள் மொத்தம் 344 கல்வெட்டுகள் சிம்ஹாசலம் கோயிலில் காணப்படுகின்றன.

ஆண்டின் அனைத்து நாட்களிலும் விழாக்கள் நடைபெறு கின்ற திருத்தலமாகும் சிம்ஹாசலம். இங்கு நடை பெறும் விழாக்களில் குறிப்பிடத்தக்கவை திருக்கல்யாண உத்ஸவம், (சித்திரை மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி தொடங்கி பௌர்ணமி ஈறாக நடைபெறும் உத்ஸவம்.) மார்கழி மாதம் நடைபெறும் அத்யயன உத்ஸவம், காம தகனோத்ஸவம், ரதோத்ஸவம், சந்தன யாத்ரோத்ஸவம், நரஸிம்ஹ ஜயந்தி, கிரி பிரதக்ஷணம், ஸ்ரீஜயந்தி, கார்த்திகை தீபோத்ஸவம், தெப்போத்ஸவம், மற்றும் ஆழ்வார் ஆசார்யர்கள்



திருநக்ஷத்ரங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க உத்ஸ வங்களாகும்.

## 230) கிழக்குக்கடற்கரை கப்பற்படை தலைமையகம்

விசாகப்பட்டினத்தில் கிழக்குக்கடற்கரைப் பகுதி களைப் பாதுகாத்துவரும் கப்பற்படைத் தலைமையகம் அமைந்துள்ளது. இந்திய நாட்டின் கடற்கரை நீண்ட பரப்பளவைக் கொண்டது. ஆங்கிலேயர்கள் காலத்தி லிருந்தே விசாகப்பட்டினத்தில் கடற்படையின் கண் காணிப்புத்தளம் செயல்பட்டு வந்துள்ளது. இந்தியன் ஆயில் எண்ணெய்க் கிடங்கின் அண்மையில் கடற்பகுதியில் I.N.S.Rajendra என்ற பயிற்சிக் கப்பல் நங்கூரமிட்டு இருக்கும். இதில் Naval Cadets என்று அழைக்கப்படும் போர்க்கப்பல்களில் பணிபுரியும் அடிப்படை ஊழியர் களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அந்தப் பயிற்சிக் கப்பலிலே ஓராண்டு காலம் தங்கியிருந்து இவர்கள் பயிற்சி பெற வேண்டும். கடற்படையில் பணிபுரிவோர் தூய வெண்ணிற ஆடைகளையே அணிந்திருப்பர். இந்தப் பயிற்சிக் கப்பலுக்கும் வெள்ளை வண்ணம் பூசப்பட் டிருக்கும்.

I.N.S.Krishna, I.N.S.Godhavari, I.N.S.Ganga, I.N.S.Kaveri போன்ற போர்க்கப்பல்கள் நடுத்தர போர்க் கப்பல்களாகும். இவை அனைத்தும் Naval Dockyard என்று அழைக்கப்படும் பகுதியில் நைலான் கயிறுகளைக் கொண்டு கட்டப்பட்டு இருக்கும். I.N.S.Sutlej, I.N.S.Sharadha, I.N.S. Kukri போன்ற பல சிறிய ரக போர்க்கப்பல்களும் Naval Dockyardஇல் ஒன்றன்பின் ஒன்றாக காணப்படும். எந்தக் கப்பலும் நீண்ட தடித்த நைலான் கயிறுகளைக் கொண்டு

Buoys எனப்படும் கயிறுகளைக் கட்டுவதற்கு உபயோகப் படுத்தப்படும் மிதவை அல்லது கட்டுமானத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் இந்தக் கப்பல்களை நடுக்கடலில் நிலைகொள்வதற்கு மட்டுமே நங்கூரங்களை உபயோகப்படுத்திடுவர்.

இந்தக் கப்பல்கள் தலைமையகம் பிறப்பிக்கும் ஆணைகளுக்கேற்ப கடற்பகுதிகளில் கண்காணிப்பு வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும். ஒவ்வொரு போர்க் கப்பலுக்கும் குறிப்பிட்ட அளவு Furnace Oil அல்லது Diesel Oil கொள்ளளவு இருக்கவேண்டும். அந்த அளவு குறைந்தால் அவர்களிடமிருந்து எண்ணெய்க்கிடங்கு மேலதி காரிக்கு உடனடிச் செய்தி அனுப்பி வைக்கப்படும். அப்போது எல்லாம் விரைந்து சென்று அந்தப் போர்க்கப்பல்களுக்குத் தேவையான எண்ணையை நிரப்பிடவேண்டும். தாமதம் ஏற்பட்டால் அந்தச் செய்தி டில்லி ராணுவ மேலிடம்வரைச் சென்றுவிடும். அனைத்து ஊழியர்களும் Navy கப்பல்களுக்கு எண்ணெய் நிரப்பும் செயலாகிய Bunkering என்னும் வேலையை மேற்கொண்டிடும்போது விழிப்புடன் செயல் படுவர். நாட்டை 24 மணி நேரமும் கண்காணித்து வரும் Army, Airforce, Navy ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர் களுக்கும், அதிகாரிகளுக்கும் நம்மால் எந்தக் கைமாறும் செய்திட இயலாது.

குறிப்பாகக் கப்பற்படையில் பணிபுரிவோர் பரிதாபத்திற்கு உரியவர்கள். ஒரு சில உயர் அதிகாரிகளைத் தவிர மற்றையோர் தங்கள் குடும்பத்தினரிடம் அல்லது மனைவி மக்களிடம் சில நாட்களே கூடியிருக்கக்கூடும். அவர்கள் கண் திறந்தால் கடல்தான் தென்படும். கண் மூடினாலும் கடலில் மிதந்து செல்ல வேண்டியதுதான். இதே



நிலைதான் Armyஇல் பணிபுரிவோர்க்கும். குறிப்பாக எல்லைப் படையில் பணிபுரிவோர் உயிர் எந்த நிமிடத்திலும் பறி போகும். பெரும்போர் நிகழ்ந்தால் கப்பற்படையில் பணி புரிவோர் மற்றும் Airforceஇல் பணிபுரிவோர் இறக்கக்கூடும்.

***(இவர்களையெல்லாம் நாம் என்றும் நினைவில் கொள்வதில்லை. உள்நாட்டில் யார் சொத்துக்கு உலை வைக்கலாம், யாரை வீழ்த்தித் தான் உயர்பதவியை அடையமுடியும்?, எவ்வளவு லஞ்சம் வாங்கலாம்? யாரைக் கொலை செய்யலாம்? என்ற எண்ணம் கொண்டவர்களாக தரைப்பகுதியில் வாழ்ந்து வருபவர்களாகிய நாம் செயல்படுகிறோம்.)***

## 231) 1965ஆம்ஆண்டு மூண்ட போர்.

கி.பி. 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பாகிஸ் தானுடன் போர் மூண்டது. Rann of Kutch பகுதியில் தொடங்கிய இந்தப் போர் Kargil, Uri, Haji Pir ஆகிய பகுதிகளுக்குப் பரவியது. இந்தப் போரின் விளை வாக பர்மாஷெல், மற்றும் E.S.S.O. ஆகிய வெளிநாட்டு எண்ணெய்க் கம்பெனிகள் தங்களுடைய எண்ணெய் இறக்குமதியைக் குறைத்துக் கொண்டன. முதன்முதலாக நாட்டிலே டீசல் மற்றும் பெட்ரோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்த நேரத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தனது கடமையை செவ்வனே ஆற்றியது. Infrastructure எனப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் பெற்றிராத விசாகப்பட்டினம் எண்ணெய்க்கிடங்கில் ஒரு நாளைக்கு சராசரி 40 லாரிகளில் எண்ணெய் நிரப்பப்பட்டு வந்தது.

ஆனால் மற்றைய எண்ணெய்க் கம்பெனிகளின் ஒட்டு மொத்த துரோகச் செயல்களால் ஒரு நாளைக்கு 100 லாரிகளில் நிரப்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஊழியர்கள் அனைவரும் இரவு 11மணி வரையிலும் பல நாட்களுக்குப் பணியில் ஈடுபட்டு இந்த சவாலை சமாளித்தோம். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் அடித்தளம் 1965ஆம் ஆண்டு வெளிப்படுத்திய உழைப்பினால் அமைக்கப்பட்டது. இந்த அடித்தளமே இந்தியன் கார்ப்பரேஷன் பிற்காலங்களில் அடைந்த பல வெற்றிகளுக்குக் காரணமாய் அமைந்திருந்தது. ***(ஆயினும் இன்றைய இந்தியன் ஆயில் நிர்வாகம் இதை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. அண்மையில் இந்தியன் ஆயிலின் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி 10 கிராம் அளவு கொண்ட தங்கக்காசுகள் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அதேசமயம் பணியில் இருப்போருக்கு அவரவர்களுடைய பணி யாண்டுகளைப் பொறுத்து 20 கிராம், 30 கிராம் அளவு கொண்ட தங்கக் காசுகள் வழங்கப்பட்டன. இதற்கு ஓய்வு பெற்ற ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களுக்கு பணியாண்டுகளின் அடிப்படையில் தங்கம் வழங்கப்படவில்லை. 1962, 67 கால கட்டத்தில் பசி, தாகம், உறக்கம் இவற்றைப் பாராது அயராது உழைத்த ஊழியர்களே இன்றைய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் வளர்ச்சிக்கு வித்திட்டனர் என்பதை இன்றைய நிர்வாகம் அறிந்து கொள்ளவில்லை.)***

Rann of Kutch பகுதியில் போரில் ஈடுபட்டிருந்த மத்திய ரகப் போர்க்கப்பல்கள் பகல், இரவு என்று பாராது, Bunker எனப்படும் டீசல் அல்லது Furnace oil நிரப்பிக் கொள்வதற்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி வந்து சேரும். எவ்வளவு விரைவாக எண்ணெய் நிரப்பக்கூடுமோ அவ்வளவு விரைவாக விழிப்புடன் செயல்பட்டு அந்தப் பணியை நிறைவேற்றி வந்தோம். நாட்டைக் காப்பாற்றுவதற்காக உழைத்த பெருமையை நாங்கள் அனைவரும் பெற்றோம். ''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே, நீ நாட்டுக்கு என்ன செய்தாய்?'' என்பது மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் பொன்மொழிகளில் ஒன்றாகும். எண்ணெய்க் கம்பெனிகளில் பணி புரிவோர் நாட்டிற்குப் பெருமளவில் உழைத்தார்கள், உழைத்து வருகிறார்கள். பசுமையான அந்த நாட்களை யாரும் தம் வாழ்க்கையில் மறக்க இயலாது.



## 232) Quality Control Norms Strictly Adhered While Supplying Fuel to Defence.

தரக்கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்ட டீசல் அல்லது Furnace oil எண்ணெய்களே கடற்படைக் கப்பல்களுக்கு விநியோகம் செய்யப்படவேண்டும். கடற்படைக் கப்பல்களுக்கு விநியோகம் செய்யப்படும் டீசல் குறைந்த கந்தகமும், அதிக Flash Pointஉம் கொண்டதாக இருக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் L.S.H.F. (Low Sulphur High Flash) என்று குறிப்பிடுவர். அவ்வாறே மத்திய ரக மற்றும் பெரிய போர்க்கப்பல்களுக்கு விநியோகிக்கப்படும் Furnace oil Low Sulphur, Low Viscosity, High Flash கொண்டதாக இருக்க வேண்டும். (**Viscosity:-**The resistance of a fluid to flow, caused by its internal friction, which makes it resist flowing past a solid surface or other layers of the fluid.

**Flash Point:-** The lowest temperature at which a liquid or volatile solid heated under standard conditions gives off sufficient vapour to ignite on the application of a small flame.***குறைந்த அளவு கந்தகம் கொண்ட பெட்ரோலியப் பொருள்களைத்தான் உபயோகத்தில் கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் இயந்திரங்கள் கந்தகம் கூடுதலாக இருந்தால் பாழ்பட்டுவிடும். நாம்***

***உபயோகத்தில் கொள்ளும் அனைத்துப் பெட்ரோலியப் பொருள் களுக்கும் பலவகை தரக்கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன. இவற்றை அறிந்து கொள்வதற்கு வேதியியல் அல்லது பௌதிக இயலில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இவற்றின் பயன்பாட்டை அறிந்து கொள்வதற்கு நாம் பெற்றிருக்கும் உலகியல் அறிவே போதுமானது.***) பாதுகாப்புக்கருதி, இத்தகைய தரக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## 233) நேருவின் மறைவும், லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமர் ஆகப் பொறுப்பேற்றதும்

கி.பி. 1964ஆம் ஆண்டு, மே மாதம், நேருவின் மறைவிற்குப் பிறகு, திரு. காமராஜ் மற்றும் சிண்டிகேட் உறுப்பினர்கள் என்று அழைக்கப்பட்டு வந்த மேற்குவங்காள-Atulya Ghosh, பாம்பே-S.K. Patil, ஆந்திர மாநில-நீலம் சஞ்சீவரெட்டி, கர்னாடகா-நிஜலிங்கப்பா ஆகியோருடைய ஒப்புதலுடன் திரு.லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2-6-1964ஆம் நாள் லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

19 மாதங்களே பணியாற்றிய லால்பகதூர் சாஸ்திரி 4-1-1966ஆம் நாள் தாஷ்கன்டில் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, தாஷ்கன்டில் நடந்த பேச்சு வார்தைகளில் கலந்து கொண்டார். ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் 10-1-65 ஆம் நாள் மரணமடைந்தார். அதன் பிறகு பாரதப்பிரதமர் பதவிக்கு ஏற்பட்ட மோதலில் மீண்டும் மொரார்ஜிதேசாய் கீழே தள்ளப்பட்டு, இந்திராகாந்தி பாரதப் பிரதமரானார். ***(அன்று தொடங்கிய அல்லி ராஜ்யம் நிழல் பிரதம மந்திரியாகச் செயல்படும் அன்னை(?) சோனியாகாந்தி காலம்வரை தொடர்ந்து வருகின்றது. இந்திய வரலாற்றில் இந்திராகாந்தி கொண்டு வந்த அவசர காலப் பிரகடனம்*** (Emergency) ***ஒரு கறை படிந்த வரலாற்று நிகழ்வாகும்.)***



லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமராகப் பணிபுரிந்த காலத்தில், அதாவது 1965ஆம் ஆண்டு நாட்டில் பெரும் பஞ்சத்தால் மக்கள் அவதியுற்றனர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அளித்து வந்த உணவுப் பொருள் சார்ந்த உதவிகள் பாகிஸ்தானுக்கு எதிரான போரினால் நிறுத்தப் பட்டன. வெளிநாட்டு எண்ணெய்க் கம்பெனிகள் செய்த சூழ்ச்சியால் நாடெங்கும் பெட்ரோலியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இந்தியாவின் உற்ற நண்பனான சோவியத்ரஷ்யா தக்க சமயத்தில் ஒப்பந்தத்தையும் தாண்டி அதிக அளவில் பெட்ரோலியப் பொருள்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்து உதவியது. அடிப்படைக்கட்டுமான வசதிகள் இல்லாத இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பல யுக்திகளைக் கையாண்டு நாடெங்கும் நிலவியிருந்த பெட்ரோலியப் பொருள்களின் தட்டுப்பாட்டைப் போக்கியது.

## 234) உணவுப் பொருள்களுக்கான ரேஷன் அமுல் படுத்தப்பட்டது

நாட்டின் பல பகுதிகளில் உணவுப் பொருள்களுக்கான ரேஷன் அமுல்படுத்தப்பட்டது. குழந்தைகளுக்கான பால்பவுடர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அத்யாவசிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியிருந்தது. லால்பகதூர்சாஸ்திரி மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டியிருந்தது. வடக்கு வியட்நாம்மீது அமெரிக்கா குண்டுகள் வீசி சேதப்படுத்தியபோது, இந்தியாதான் மற்றைய நாடுகள் இந்தச் செயலைக் கண்டிப்பதற்கு முன் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. இதனால் இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்குமான உறவில் விரிசல் ஏற்பட்டது.

## 235) காஷ்மீர்ப் பிரச்சனையும், பாகிஸ்தான் ராணுவத்தின் ஊடுறுவலும்

இந்தியாவிற்கு காஷ்மீர் பிரச்சனை ஒரு நீங்காத தலைவலி யாகும். 1965ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லாவும், அவருடைய ஆதர வாளர்களும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கினார்கள். அமெரிக்கா அளித்த நவீன ஆயுதங்களின் உதவி கொண்டு இந்தியா வுடன் போர் தொடுத்து காஷ்மீர் பகுதியைத் தனதாக்கிக் கொள்ள நினைத்தது பாகிஸ்தான். 1962ஆம் ஆண்டு சீனாவுடன் நிகழ்ந்த போரில் படுதோல்வியுற்ற இந்தியாவின் ஆயுதபலம் குறைந்தே காணப்பட்டது. சீனாவுடன் நடந்த போரில் இந்தியாவின் படைபலத்திற்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. இத்தகையதொரு சூழ்நிலையில் இந்தியாவுடன் போர் தொடுத்தால் வெற்றி பெறலாம் என்ற மனப்பால் குடித்த பாகிஸ்தான், 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சதுப்பு நிலமான Rann of Kutchமீது படையெடுப்பைத் தொடங்கியது. பிரிட்டீஷ் பிரதமரின் தலையீட்டால் தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

ஆயினும் பாகிஸ்தான் 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயிற்சி பெற்ற போர்வீரர்களை ஊடுருவச் செய்து ஆங்காங்கே மதக் கலவரங்களை உண்டு பண்ணியது. இத்தகைய கலவரங்கள் கட்டுக்கடங்காமல் எங்கும் பரவிட இந்தியா ராணுவத் தாக்குதலை மேற் கொண்டது. செப்டம்பர் மாதம் முதல் நாள் ஜம்மு காஷ்மீரின் தென்மேற்கில் அமைந்துள்ள Chhamb பகுதியில் உயர்ரக போர்க்கருவிகளுடன் திடீர்த்தாக்குல் நடத்தியது.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல



சீனாவும் பாகிஸ்தானுடன் சேர்ந்து ‘‘இந்தியா ஆக்ரமிப்பில் ஈடுபட்டு வரும் ஒரு நாடு, காஷ்மீர் பாகிஸ்தானுக்கே சொந்தம்’’ என்று கொக்கரித்தது. ஆனால் சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு வேண்டிய பெட்ரோலியப் பொருள்களை அதிக அளவில் கொடுத்து உதவியதோடு மட்டும ல்லாமல் பாரதப் பிரதமர் எடுத்த நடவடிக்கைகளுக்கு தன் ஆதர வினை நல்கியது.

## 236) லால்பகதூர் சாஸ்திரியின் மரணம்

ஐ.நா. பாதுகாப்பு சபையின் கட்டாயத்தால் இரு நாடுகளும் 23-9-1965ஆம் நாள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டன. இருநாடுகளிலும் பொருளாதாரச் சீரழிவு அதிக அளவில் மக்களின் வாழ்க்கையைப் பாதித்தது. நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் மக்களும் இந்தியாவின் போர் நடவடிக்கைகளுக்குத் தம்முடைய ஆதரவை நல்கினர். 4-1-1966ஆம் நாள் தாஷ்கன்டில் சோவியத் ரஷ்யாவின் பெருமுயற்சியால் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும், பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் புகழ்பெற்ற ‘தாஷ்கன்ட் ஒப்பந்தத்தில்’ கையெழுத்திட்டனர். அதன்பிறகு நடந்த பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டபிறகு, திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் 10-1-1966ஆம் நாள் மரணமுற்றார் லால்பகதூர் சாஸ்திரி.

## 237) சின்மயானந்தாவின் கீதை தொடர்ச் சொற்பொழிவுகள்

விசாகப்பட்டினத்தில் இரும்பு உருக்காலை அமைக்கப் படவேண்டும் என்று பல ஆண்டுகளாக மக்கள் போராடி வந்தனர். அதன் உச்சகட்டமாக 1965ஆம் ஆண்டு ரயில் மறியல், பேருந்துகளுக்குத் தீவைப்பது போன்ற வன்முறைச்

செயல்களில் மக்கள் ஈடுபட்டிருந் தனர். அந்தக்கால கட்டத்தில் திரு. Abid Hussain என்னும் ஐ.ஏ.எஸ். அதிகாரி மாவட்ட ஆட்சியாளராகப் பணி புரிந்து வந்தார். இவர் ஒரு மிகச்சிறந்த நிர்வாகி. இவர் பிற்காலங்களில் Planning Commission உப தலைவராகவும், அமெரிக்காவில் இந்தியாவின் பிரதிநிதியாகவும் பணியாற்றினார். விசாகப் பட்டினத்தில் உருக்காலை நிறுவப்பட வேண்டும் என்ற மக்களின் கலவரம் உச்சகட்டத்தில் இருந்தபோதும், 65ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திரு. சின்மயானந்தா நிகழ்த்திய ஒரு மாதகால கீதாஞானயஜ்ஞத்தின்போது 2ஆம் அத்யாய விளக்க வுரைக்கு தவறாது மாலை ஆறரை மணிக்கு வருகை தந்திடுவார். நானும் அதே நேரத்தில் பந்தலுக்குள் நுழை வேன். நான் **30** நாட்களும் விடாது கேட்ட சொற் பொழிவு இது ஒன்றேயாகும். திரு. சின்மயாவின் நாவன்மை விவரிப் பதற்கு அரியது.

சுமார் 3000 நபர்கள் தினந்தோறும் சின்மயானந்தாவின் சொற்பொழிவிற்கு வருகை தந்திடுவர். ஒன்றரை மணிநேரம் ஆங்கிலத்தில் அழகிய சொற்களைக் கொண்டு கேட்பவர் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கிட உரையாற்றிடும் வல்லமை பெற்றவர் திரு. சின்மயானந்தா. கீதையை அனைவரும் பயின்று இன்புறும் அளவிற்கு அதை நாட்டில் பரப்பிய வர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திரு. சின்மயானந்தா. 45 ஆண்டுகள் ஆகியும் இன்றும் என்னால் அவருடைய சொற் பொழிவை நினைவு கூறமுடிகிறது என்றால், அன்று அதனுடைய தாக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்து உணரலாம். பிற்காலங்களில் நான் கேட்ட சமயச் சொற்பொழிவாளர்கள் யாரிடமும் சின்மயானந்தாவின் நாவன்மையை காண இயலவில்லை.



***(இன்று மக்களிடையே பெருமளவிற்கு ஏற்புடையதாய் விளங்கும் சின்மயா மிஷன், ராமகிருஷ்ணா மிஷன், இஸ்கான் இயக்கம், சத்யசாயிபாபா இயக்கம் ஆகியவற்றைப் போல ஸ்ரீவைஷ்ணவ இயக்கங்கள் தோன்றவில்லை. இதற்கு பலர் பல காரணங்களை முன் வைத்துள்ள போதிலும் அடிப்படைக் காரணம் ஸ்ரீவைஷ்ணவர்களிடையே சமுதாயச் சிந்தனை இல்லை என்பதே. மோக்ஷத்திற்குப் படிகட்டுகிறோம் நாங்கள் என்று தங்களுக்கு த்தானே விளம்பரம் செய்து கொண்டு, எளிய நடையில் உயரிய தத்துவங்களை எடுத்துரைக்க இயலாது சொன்ன செய்திகளையே மீண்டும் மீண்டும் பல தலைப்புகளில் உபன்யாஸம் என்ற பெயரில் செய்து வருவதால் நம் கோட்பாடுகள் பரவலாக மக்களைச் சென்றடைவதில்லை. மக்களை ஈர்த்திடும் வகையில் புதிய தலைப்புகளில் பயனுள்ள செய்திகளை, நமக்கு நாமே போட்டுக் கொண்டிருக்கும் வட்டங் களைத் தாண்டி சொற்பொழிவாற்றும் வல்லமை படைத்தோரை விரல் விட்டுதான் எண்ண வேண்டியுள்ளது.)***

## 238) சின்மயானந்தாவின் வாழ்வும், பணியும்.

1916ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் பாலகிருஷ்ண மேனன் என்ற பூர்வாச்ரம பெயர் கொண்ட ஸ்வாமி சின்ம யானந்தா எர்ணா குளத்தில் பிறந்தார். 1939ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இவர் ஆங்கில மொழியில் மேற்படிப்பை மேற்கொள்வதற்காக லக்னோ பல்கலைக்கழகத்தில் பயின்றார். ரிஷிகேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஸ்வாமி சிவானந்தாவின் சிஷ்ய ரானார். அவர் அவருடைய குருவான ஸ்வாமி தபோவன் மகராஜிடம் ஆன்மிகக் கல்வி பயின்று வரும்படி அவரை அனுப்பி வைத்தார்.

அதற்கு முன்பு சில ஆண்டுகள் The National Herald

என்ற நாளிதழின் உதவியாசிரியராகப் பணியாற்றி வந்தார் பாலகிருஷ்ணமேனன். கீதை மற்றும் உபநிஷத்துக்களின் சாரத்தை மக்களிடையே பரப்புவதற்காக கீத ஞான யக்ஞங்களை 1951ஆம் ஆண்டு பூனாவில் தொடங்கினார் சின்மயா னந்தா.

1953ஆம் ஆண்டு சின்மயா மிஷன் என்னும் தொண்டு நிறுவனத்தை நிறுவினார் அவர். இந்துக்களின் நலனைப் பாது காப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட விஷ்வ ஹிந்து பரிஷத்தில் முதல் தலைவரானார் ஸ்வாமி சின்மயானந்தா. கிராமப்புறங்களில் வாழும் மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார மேம்பாட்டைக் கருதி Chinmaya Organisation for Rural Development (CORD) என்னும் தொண்டு நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்.

1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் நாள் கலி போர்னியாவில் San Diego என்னும் ஊரில் அவர் இறந்தார். அவருடைய பூதவுடல் ஹிமாலயக் குன்றுகளின் இடையே அமைந்துள்ள சித்பாரி ஆச்ர மத்தில் அடக்கம் செய்யப் பட்டது. 10,000 உறுப்பினர்களுக்கு மேல் கொண்ட சின்மயா மிஷன் உலகெங்கும் இந்தியாவின் நீண்ட பாரம்பரியத் தையும், பண்பாட்டையும், ஆன்மீக மேம்பாட்டையும் பரப்பி வருகின்றது. கி.பி. 2003ஆம் ஆண்டு சின்மயா மிஷனின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா நாடெங்கும் கொண்டாடப் பட்டது.

## 239) மறக்கமுடியாத திரைப்படமான மல்லீஸ்வரி

மறக்கமுடியாத திரைப்படங்கள் பல இதுகாறும் வெளி வந்துள்ளன. அவற்றில் ஒன்று 1951ஆம்ஆண்டு வெளிவந்த மல்லீஸ்வரி என்ற தெலுங்குத் திரைப்படமாகும். ''சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து'', என்ற பாரதியின் பாட்டிற்



கிணங்க, அந்தப் படத்தில் அமைந்திருந்த பாடல்கள் கேட் போரை மகிழ்ச்சி கொள்ளச்செய்யும். ''ஆகாச வீதிலோ'', ''எவரு ஏமனி'', ''கோத்தி பாவாக்கு பெள்ளண்டா'', ''ஓ மேகமாலா அந்தால மேகமாலா'', ''அவுனா நிஜமேனா'', ''பிலச்சினா பிகுவதரா'' போன்ற பாடல்களை இன்றும் மீண்டும் மீண்டும் கேட்கத் தோன்றும். இந்தப் பாடல்களுக்கு இசையமைத்தவர் எஸ். ராஜேஸ்வரராவ் ஆவார்.

1951ஆம் ஆண்டு இந்தப்படம் வெளி வந்த போதிலும் 1965ஆம் ஆண்டின் இறுதியில் இந்தப்படம் திரை யிடப்பட்ட போது, பல நாட்களுக்கு அனுமதிச்சீட்டுகள் கிடைக்கவில்லை. இந்தத் திரைப்படம் மீண்டும் மீண்டும் பார்த்து மகிழும் வகையில் அமைந்தி ருந்தது. விஜயநகர சாம்ராஜ்ய மன்னரான கிருஷ்ணதேவராயர் காலத்தில் நடந்த தாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அந்தக்கால கட்டத்தில் புகழ்பெற்று விளங்கிய படத்தயாரிப்பு நிறுவ னமாக வாஹினி ஸ்டுடியோஸ் இந்தப்படத்தைத் தயாரித்து வெளியிட்டது. புகழ்பெற்று விளங்கிய திரைப்பட இயக்கு னரான திரு. பி.என். ரெட்டி இந்தப்படத்தின் இயக்குனராவார். தான் இயக்கிய படங்களிலேயே மிகச்சிறந்த படம் ''மல்லீஸ்வரி'' என்று திரு.பி.என். ரெட்டி ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். திரு. என்.டி. ராமாராவ், திருமதி. பானுமதி, திருமதி. ருஷ்யேந்திரமணி, திரு. ஸ்ரீவத்ஸவா போன்ற புகழ்பெற்ற நடிகர்கள் இந்தப் படத்தில் நடித்திருந்தனர்.

**மல்லீஸ்வரி-கதைச்சுருக்கம்.**

கிருஷ்ணதேவராயர் காலத்தில் அழகிய நங்கையரை அந்தப் புரத்தில் 'ராணி வாசம்' என்ற பெயரில் ராணிக்குத்

தோழியாக அழைத்து வருவர். மல்லீஸ்வரி ஒரு அழகிய நாட்டிய நங்கை. அவள் தன் மாமனாகிய நாகராஜு என்ற சிற்பக் கலைஞன்மீது ஆராத காதல் கொண்டிருந்தாள். பணத்திற்கும் பொருளிற்கும் ஆசைப்பட்டு மல்லீஸ்வரியின் பெற்றோர்கள் அவளை ராணி வாசத்திற்கு அனுப்பி விட்டனர். ராணி வாசத்திற்குச் செல்லும் நங்கைகள் வெளி உலக மக்களுடன் குறிப்பாக ஆண்களுடன் எந்தத் தொடர்பும் கொள்ளக் கூடாது. இதை மீறி அந்தப் பெண் ஓர் ஆண் மகனைக் காண முற்பட்டாலோ, அவனுடன் பேச முற் பட்டாலோ அவள் தலை துண்டிக்கப்படும். அவ்வாறே எந்த ஆண்மகனும் ராணி வாசத்தில் இருக்கும் பெண்ணைச் சந்திக்க முற்பட்டால் அவன் தலை துண்டிக்கப்படும்.

மல்லீஸ்வரியைக் காணவேண்டும் என்ற ஆசை யினால் அரண்மனைச் சுவர்களைத் தாண்டி, கட்டுப் பாட்டையும் மீறி, மல்லீஸ் வரியைச் சந்திக்கிறான் நாகராஜு. அப்போது காவலர்களால் பிடிபட்ட நாகராஜுவிற்கு கிருஷ்ணதேவராயர் மரணதண்டனையை விதிக்கிறார். ஆனால் மல்லீஸ்வரியின் காதலை மதித்து, தான் விதித்த தண்டனையைத் திரும்பப் பெறுகிறார் கிருஷ்ணதேவராயர். காதலர்கள் இருவரையும் விடுவித்து, அவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதியளிக்கிறார் மன்னர். கடுமையான தண்டனையிலிருந்து தப்பித்த இருவரும் மன்னனுக்குத் தம் வணக்கங்களைத் தெரிவித்து ஊர் திரும்புகின்றனர். கதையின் கரு என்னவோ மிகச்சிறியதுதான். இந்தப் படத்தில் கிருஷ்ண தேவராயரின் மாண்புகள் பலவகையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாடல்களும், பின்னணி இசையும் சிறப்பாக அமைந்தி ருந்தன. மக்களால் என்றும் மறக்க முடியாத மாபெரும் திரைப்படம் **மல்லீஸ்வரி** ஆகும்.



## 240) தஞ்சை ராமையாதாஸ்

1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமது 52ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார் திரு. தஞ்சை ராமையாதாஸ். தமிழ்த் திரையுலகில் பாடலாசிரியராகவும், வசன கர்த்தாக வாகவும் ஒரே நேரத்தில் கோலோச்சியவர்கள் வெகு சிலரே. அவர்களில் ஒருவர் தஞ்சை ராமையாதாஸ் ஆவார்.

உயர்ந்த இலக்கியச் சுவையோடும் பாமர மக்களின் ரசனைக் கேற்றவாறும் இரண்டு நிலைகளில் நூற்றுக் கணக்கான திரைப்படப் பாடல்களை எழுதிப் புகழ்ப்பெற்ற ராமையாதாஸ், 1948 முதல் 1962 வரை இருபத்துமூன்று படங் களுக்குக் கதையோ, வசனமோ அல்லது இரண்டுமோ எழுதியிருக்கிறார். மிஸ்ஸியம்மா படத்தில் **''பிருந்தா வனமும் நந்தகுமாரனும் யாவருக்கும் சொந்தமன்றோ''** என்ற பாடலை யார்தான் மறக்கமுடியும்? இதை எழுதியவர் தஞ்சை ராமையாதாஸ் ஆவார். 1913-இல் தஞ்சாவூரில் பிறந்த இவர் டி.என்.ராமையா என்ற இயற்பெயர் கொண்டவர்.

தஞ்சையின் ஒரு பகுதியான மானம்புச் சாவடியில் (மகர் நோன்புச் சாவடியின் திரிபு) இருந்த சுப்பையா நாயுடு நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். அப்போதே ராமையாவுக்குத் கலை ஆர்வமும், பாடல்கள் எழுதும் திறமையும் இருந்தன. பிரபல நடிகரும், பாடகருமாக இருந்த டி.ஆர். மகாலிங்கம் சுகுமார் புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் ஒரு தயாரிப்பு நிறுவன த்தைத் தொடங்கியவுடன் படமாக்கத் தேர்ந்ததெடுத்தது தஞ்சை ராமையாதாஸ் எழுதிய **மச்சரேகை** நாடகத்தின் கதையைத்தான். 1950இல் வெளி யான **மச்சரேகை** படத்துக்கான கதை, வசனம், பாடல்களை ராமை யாதாஸே எழுதினார்.

விஜயா புரொடக்ஷன்ஸ் சார்பாக பி.நாகிரெட்டி சக்ரபாணி தயாரித்த **பாதாள பைரவி** என்ற (தமிழ், தெலுங்கு) இரு மொழிப் படத்தின் தமிழ் வசனங்களையும், பாடல் களையும் எழுதும் வாய்ப்பு ராமையாதாஸுக்குக் கிடைத்தது. கே.வி. ரெட்டி இயக்கத்தில் 1951இல் வெளியாகிப் பெரும் வெற்றியைப் பெற்றது இந்தப் படம். அந்தப் படத்தின் வெற்றி காரணமாக, அதற்குப் பின்னர் தெலுங்குத் தயாரிப் பாளர்கள் இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் படம் தயாரிக்க முடிவு செய்த போதெல்லாம் தமிழ் வசனங்களையும் பாடல் களையும் எழுத அவர்கள் அணுகியது தஞ்சை ராமையா தாஸைத்தான்.

**அந்த வகையில் இவர் வசனமும் பாடல்களையும் எழுதிய படங்கள்:**

கல்யாணம் பண்ணிப்பார் (1952), தர்மதேவதா (1952), குணசுந்தரி (1955), மிஸ்ஸியம்மா (1955), பிரேம பாசம் (1956), பெண்ணின் பெருமை (1956), மாயாபஜார் (1957), கடன் வாங்கிக் கல்யாணம் (1958), செஞ்சுலட்சுமி (1958), ராஜசேவை (1959), வாழ்க்கை ஒப்பந்தம் (1959), அடுத்த வீட்டுப்பெண் (1960), மங்கையர் உள்ளம் மங்காத செல்வம் (1962). மேற்கூறிய படங்கள் அனைத்தும் பெரும் வெற்றி பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரு மொழிப் படங்களைத் தவிர ராமையாதாஸ் எழுதிய பிற படங்கள்: பெண் மனம் (1952), பணக்காரி (1953), குலேபகாவலி (1955), கோடீசுவரன் (1955), நம் குழந்தை (1961), பட்டினத்தார் (1962)

ஆர்.ஆர்.பிக்சர்ஸ் சார்பாக டி.ஆர். ராமண்ணா தயாரித்து இயக்கிய **குலேபகாவலி** என்ற படம் 1952இல் வெளியானது. வசனம், பாடல்களை ராமையாதாஸ் எழுயிருந்தார். இந்தப் படம் பெரும் வெற்றியைப் பெற்ற படமாகும்.



பிரபல இசையமைப்பாளர் ஜி.ராமநாதன் தயாரித்து இசை யமைத்த **பட்டினத்தார்** என்ற படம் 1962இல் வெளி யானது. அந்தப் படத்துக்கான வசனத்தை பிரபல எழுத் தாளரான அகிலனுடன் கூட்டாக எழுதிய ராமையாதாஸ் சில பாடல்களையும் இயற்றியி ருந்தார். பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் பட்டினத்தார் வேடத்தில் முதன்முறையாக நடித்திருந்தார்.

நேரடித் தமிழ்ப் படங்களுக்கு வசனமும் பாடல்களும் எழுதிக் கொண்டிருந்த கால கட்டத்திலேயே பல மொழி மாற்றுப் படங்களுக்கும் (டப்பிங்) குறிப்பாக தெலுங்கி லிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டவை களுக்குத் தமிழ் வசனங்களையும் பாடல்களையும் இவர் எழுதி வந்தார்.

‘‘மொழிமாற்றுப் படங்களுக்கு எவ்வாறு வசனம் எழுதுவது என்பதை நான் தஞ்சை ராமையாதாஸ் அவர் களிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன்’’ என்று வசன கர்த்தாவான ஆரூர்தாஸ் தனது சுய சரிதையில் குறிப்பிட்டு உள்ளார். **திருக்குறள் இசையமுதம்** என்ற தலைப்பில் 133 குறள்களுக்கு இசையமைத்துப் பெருந் தொண்டாற்றியுள்ள ராமையாதாஸ் 1965இல் தமது 52ஆவது வயதில் காலமானார்.

## 241) E.L.B.S.வெளியீடுகள்

கல்லூூரியில் படித்த நாட்களில் வேதியியல் பாடங் களை நன்றாகப் பயிலுவதற்கு கல்லூரி நூல் நிலையத்தில்

வைக்கப்பட்டு உள்ள புத்தகங்களைப் படித்து அறிவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அந்தப் புத்தகங்களை எளிதில் பார்த்திட இயலாது. பெரும்பாலும் பேராசிரியர்கள் அதை தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்று விடுவார்கள். 1964-68 காலகட்டத்தில் பல நூல்கள் E.L.B.S. Series என்ற வரிசையில் மலிவுப்பதிப்பு நூல்களாக வெளியீடு செய்யப் பட்டன. புத்தக உலகில் அதுவொரு பொற்காலம். Complete works of Shakespeare, Complete works of Wordsworth, Complete works of Keats மற்றும் விஞ்ஞானம் தொடர்பான நூல்கள் பல 10ரூ, 20ரூ அடக்கவிலையில் விற்பனை செய்யப்பட்டன.

வேதியியலில் Finar என்பவர் எழுதிய நூல்கள் மிகமிக மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டன. கல்லூரி நாட்களில் நான் வாங்கிப்படிக்க முடியாத வேதியியல் புத்தகங்கள் அனைத்தையும் மலிவு விலையில் வாங்கி மீண்டும் படித்து மகிழ்ந்தேன். வேதியியலில் இளங்கலைப்பட்டம் பெற்றிருந்த போதும் அந்தத் துறையில் என்றாவது முதுகலைப்பட்டம் பெறவேண்டும் என்னும் ஆசை என் உள்ளத்தே உறைந்து கொண்டிருந்தது. அதனால் வேதியியல் தொடர்பான புத்தகங்களோடு Modren Physics என வகைப்படுத்தப்பட்டுள்ள Quantum theory, Einstein's Theory of Relativity, Special Theory of Relativity ஆகிய வற்றை விளக்கும் பல புத்தகங்களை வாங்கிப் படிக்க லுற்றேன்.

## 242) A.P. செல்வராயனின் அறிவுரை

என்னுடன் பணியில் இருந்த A.P. செல்வராயன் என்பவன் பெங்களூரைச் சேர்ந்தவன். அவனுடைய தந்தை



பெங்களூரில் R.T.O. ஆகப் பணி புரிந்து வந்தார். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் ஆரம்ப கால கட்டங்களில் ரயில்வே, துறைமுகம், R.T.O, Customs, Sales Tax. Excise போன்ற அரசுத் தொடர்புடைய துறைகளில் பணியில் இருப்ப வருடைய பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோர் அவரவர் தகுதிக்கு ஏற்ப வேலையில் அமர்த்தப்பட்டனர். இதற்கு அடிப்படைக் காரணம் அந்தந்தத் துறையில் உள்ளோருடைய ஒத்துழைப்பை எவ்வித இடர்ப்பாடும் இன்றிப் பெறுவதற்காக கையாளப்பட்டதொரு யுக்தியாகும். இன்றும் இந்த முறை மறைமுகமாக நடைமுறையில் உள்ளது.

A.P. செல்வராயன், Operations Traineeஆக 1965ஆம் ஆண்டு விசாகப்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுடன் கருத்துப் பரிமாற்றம் கொள்ளும்போது பல புதிய செய்தி களைத் தந்திடுவான். நல்ல உயரம், மீசை, மாலை வேளை களில் பெங்களூர்க்காரர்களுக்கே உரிய கோட், டை, ஷூ இவற்றுடன் காணப்படுவான். நிறையப் புத்தகங்களைப் படித்தவன். வான சாஸ்த்ரத்தைப் பற்றிய பல அறிவியல் உண்மைகளை அவன் என்னிடம் கூறினான். அதற்கு மேலும் நான் இதுபற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் George Gamow என்பார் எழுதிய, ‘‘The Birth and the Death of the Sun", "Alice in wonder world, Fred Hoyle எழுதிய "Frontiers of Astronomy", "Ten Faces of the Universe", J.Silk's B.Bank- "Creation and Evolution of the Universe", "Chandrasekar and his Limit", "Black holes and White dwarfs" போன்ற புத்தகங்களைப் படித்திடுமாறு கூறினான். அன்றே விசாகப்பட்டினத்தில் உள்ள புத்தக விற்பனை நிலையத் திற்குச் சென்று அவன் குறிப்பிட்ட சில புத்தகங்களில் Geroge Gamowவின் ‘‘The Birth and the Death of the Sun"

புத்தகத்தையும், Fred Hoyle எழுதிய "Frontiers of Astronomy" புத்தகத் தையும் வாங்கிப் படித்தேன். ஒரு மர்ம நாவலைப் படிப்பது போல் 2 நாட்களில் படித்து முடித்தேன். அவற்றில் குறிப்பிட்ட செய்திகளை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் Einstein இன் "The Special and General Theory of Relativity" பற்றிய குறிப்புகளை உள்ளத்தில் பதித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அது தொடர்பான பல நூல்களை வாங்கி என் அறிவின் எல்லைக் கோடுகளை மாற்றி அமைக்கலுற்றேன்.

## 243) இந்த அண்டத்தில் நாம் வசிக்கும் பூமியைப் போன்ற கிரஹங்கள் இருக்கின்றனவா?

இந்த அண்டத்தில் ஒவ்வொரு வினாடியும் பல விந்தைகள் நிகழ்கின்றன. மனித உடலே மிகப்பெரிய அறிவியல் விந்தையாகும். இந்த மனிதர்களைப் படைத்து விலங்கினங்களையும் மரம் செடி கொடிகளையும் படைத்து மனிதனுள் ஐம்பொறிகளையும், ஐம்புலன்களையும் வைத்து, அளத்தற்கரிய நூல்களைப் படைத்து, பூமியைப் படைத்து, அந்தப் பூமியையே ஒரு நட்சத்திரக்கூட்டத்தின் உள்ளே வைத்து, பூமி அமைந்துள்ள பால்வெளி விண்மீன் கூட்டங்கள் போல பல கோடிக்கணக்கான (எண்ணிக்கையில் அடங்கா) விண்மீன் கூட்டங்களை உருவாக்கி அவை யெல்லாவற்றையும் ஓர் ஒழுங்கில் சுழலச் செய்யும் ஆற்றல் கொண்ட இறைவனை விஞ்ஞானத்தின் துணை கொண்டு மெய்ஞ்ஞானத்து க்குள் நுழைந்து நாம் காணலாம். ஆகவே விஞ்ஞான அறிவு மெய்ஞ்ஞான நிலைக்கு இட்டுச்செல்லும் ஓர் உறுதியான வழித்தடமாகும். இந்த உண்மையை அறியா தார் விஞ்ஞானத்தின் பலன்களை அனுபவித்துக் கொண்டு விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒப்பிடக்கூடாது,



நம் ரிஷிகளும் ஆழ்வார்களும் உயர்ந்தவர்கள், மேல் நாட்டு விஞ்ஞானிகள் மிலேச்சர்கள் அவர்களைப் பற்றியெல்லாம் பேசக்கூடாது என்றெல்லாம் முழங்கி வருகின்றனர் சிலர்.

ஆனால் விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டுதான் ஏதோ ஓர் அளவிற்கு மெய்ஞ்ஞானத்தைத் தேட முயல் கிறோம். அறிவியல் விந்தைகளை படைத்தவன் இறைவனே. அவன் படைத்த அண்டத் தையும், நாம் வாழும் பூமியையும், அதில் வாழும் மனிதனையும், அவனால் ஏற்படுத்தப்படும் இயற்கைச் சீரழிவையும், ஆராய்ந்து அனைத்து மக்களும் இன்பம் நிறைந்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பது தான் விஞ்ஞானத்தின் நோக்கமாகும். மறைந்திருந்த உண்மைகளை ஆதாரபூர்வமாகக் கொண்டு வருவதுதான் விஞ்ஞானத்தின் வேலையாகும். விஞ்ஞானம் எதையும் உண்டு பண்ணவில்லை. ஆனால் இறைவனால் உண்டு பண்ணப்பட்ட பல்வேறு நியதிகளை அது வெளிப்படுத்து கிறது. ஆகவே ஒருவருக்கு விஞ்ஞானத்தோடு கூடிய மெய்ஞ்ஞான அறிவே தேவை.

***(நமது நட்சத்திரக் கூட்டத்தில் மட்டும் கோடிக்கணக்கான பூமிகள் இருக்க வேண்டும். அவற்றில் நம்மைப் போன்ற முதிர்ச்சி அடைந்த மனித இனம் இருப்பதற்கும் சாத்தியம் இருக்கிறது என்கிறார் ஆலன்பாஸ் என்ற அறிஞர்.***

***அமெரிக்காவில் உள்ள கார்நெகி அறிவியல் கழகத்தின் ஆலன் பாஸ், தர்க்க ரீதியாகவும் அறிவியல் பூர்வமாகவும் கிடைத்த சில கருது கோள்களை வைத்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார். அறிவியல் வளர்ச்சிக்கான அமெரிக்க சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார். மிகவும் சக்திவாய்ந்த தொலைநோக்கிகளால்கூட நமது சூரிய குடும்பத்துக்கு அப்பால்***

*300-க்கும் மேற்பட்ட கிரகங்களைத்தான் பார்க்க முடிந்தது. இவற்றில் ஒருசிலவற்றில்தான் ஏதாவது ஒரு வகை உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்தியக் கூறுகள் அமைந்துள்ளன. பெரும்பாலானவை வாயுக்கள் நிரம்பிய கிரகங்கள்தான். இந்த கிரகங்கள் தங்களுடைய தாய்கிரகமான நட்சத்திரங்களை மையமாக வைத்தே சுற்றி வருகின்றன. அந்த நட்சத்திரங்கள் இன்னமும் கொதிப்பு அடங்காத நெருப்புக் கோளங்கள். அந்த நட்சத்திரங்களுக்கு அருகில் செல்லும் கிரகங்களில் எந்தவகை உயிரினங்களும் இருப்பதற்குச் சாத்தியம் இல்லை.*

*ஆனால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சூரிய குடும்பத்தைச் சாராத கிரகங்களின் எண்ணிக்கை, அமைப்பு ஆகியவற்றை ஆராயும் போது ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் நம்முடைய பூமியைப் போல குறைந்தது ஒரு துணை கிரகமாவது இருக்கவேண்டும். அப்படிப் பார்த்தால் இந்த பிரபஞ்சத்தில் கோடிக்கணக்கான பூமிகள் இருக்க வேண்டும். இவையெல்லாம் உயிரினங்கள் வசிப்பதற்கு ஏற்றவையாக இருக்கும் என்பது மட்டும் அல்ல. இவற்றில் உயிரினங்கள் இப்போதும் வாழ்ந்து கொண்டி ருப்பதற்கு நிறைய சாத்தியக் கூறுகள் உள்ளன. பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திர குடும்பத்தைச் சேர்ந்த இந்த வகை பிற பூமிகளில் 300 கோடி அல்லது 400 கோடி ஆண்டு களுக்கு முன்னதாகவே நமது பூமியில் இருந்ததைப் போன்ற ஜீவ ராசிகள்-அதாவது பாக்டீரியாக்கள் போன்ற நுண்ணுயிரிகள் இருந்திருக்கக்கூடும்.வரும் கெப்ளர் விண்கலத்தை 'நாசா' ஆய்வுக்காக அனுப்புகிறது. அடுத்த சில ஆண்டுகளில் இத்தகைய அருகே அமைந்த பூமிகள் சிலவற்றை அந்தக்கலம் கண்டுபிடிக்கும் வாய்ப்பு இருக்கிறது.*

*பூமியில் உள்ள மனிதர்களைப் போலவே அறிவு முதிர்ச்சி உள்ள மனித இனங்கள் பிற கிரகங்களில் எத்தனை இருக்கும் என்று எடின் பர்க் பல்கலைக்கழகத்தில் சமீபத்திய கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கில் இருக்கும் என்ற பதில் அப்போது கிடைத்தது என்கிறார் ஆலன் பாஸ்.)*



## 244) அறிவியல் முனைவர். ஐன்ஸ்டீன்

''ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், இருள் சூழ்ந்த இவ்வுலகத் தார்க்குச் சுடர் ஒளிபோல திகழ்ந்தவர்'' என்று முன்னாள் பிரதமர் நேரு புகழாரம் சூட்டியுள்ளார். ஐன்ஸ்டீன் 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானிகளுள் தலைசிறந்தவர் ஆவார். அவர் ஒரு புகழ் பெற்ற பௌதிக விஞ்ஞானி. விஞ்ஞான உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணியவர்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் புதிய அறிவியலின் தந்தை ஆவார். ஐன்ஸ்டீன் 1879ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் ஜெர் மனியில் உல்ம் என்ற சிற்றூரில் பிறந்தார். 1905இல் ஐன்ஸ்டீன் மிகப்பெரிய சாதனைகளைச் செய்தார். இந்த ஆண்டில் இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளி வந்தன. அவை:

1. இயங்கும் பொருள்களின் மின்காந்த இயக்கங்கள்.
2. ஆற்றலின் தடை-எதிர்ப்பாற்றல்.
3. பிரௌன் கண்ட இயக்கத்தின் ஒழுங்கமைதி.
4. ஒளியின் தோற்றமும் மாறுபாடும்-அதுபற்றிய பயன் மிக்க மதிப்பீடு.
5. அணுத்திரளின் பருமான அளவைகளை அறுதியிடுவதற் குரிய ஒரு முறை.

ஐன்ஸ்டீனுடைய சார்புக் கொள்கை (Theory of Relativity) மிகவும் சிக்கலானது. ஒரு பொருளின் எடைக்கும் அப்பொருளி லிருந்து பெறக்கூடிய சக்திக்கும் உள்ள தொடர்பைச் சார்புக் கொள்கை விளக்குகிறது. உலகமே பாராட்டியபோதிலும் அவர் பிறந்த ஜெர்மனி அவரை

வெறுத்தது. ஜெர்மனி முதல் உலகப் போரைத் தொடங்கிய போது உலகமே ஜெர்மனியைக் குற்றம் சாட்டியது. அதை அறிந்த கெய்சர் மன்னன் குற்றத்தை ஜெர்மனி செய்ய வில்லை என்று ஓர் அறிக்கை தயாரித்தான். அதில் கையெழுத்துப் போடும்படி எழுத்தாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்குக் கட்டளையிட்டான். ஆனால் ஐன்ஸ்டீன் அந்த அறிக்கையில் கையெழுத்திட மறுத்து விட்டார்.

அதுமுதல் ஐன்ஸ்டீனுக்கு ஜெர்மனியில் பல இன்னல்கள் தொடர்ந்தன. அவர் ரஷ்ய நாட்டுப் பொது வுடைமைக் கட்சியுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார் என்று கூறி ஜெர்மன் அரசாங்கம் ஐன்ஸ்டீனை நாடு கடத்தியது. அவரது பொருள் களையெல்லாம் அரசாங்கம் பறிமுதல் செய்தது. ஐன்ஸ்டீன் மனம் தளர்ந்து விடவில்லை. அமெரிக்க நாடு அவரை வரவேற்றது. அமெரிக்கா அவருக்குக் குடியுரிமை வழங்கியது.

அண்டவெளியைப் பற்றியும், காலம் இடத்தைப் பற்றியும் ஐன்ஸ்டீனைப் போல் ஆய்வு செய்த அறிவியல் அறிஞர்கள் உலகில் எவரும் இலர். புவியீர்ப்பு, மின்காந்தம், ஒளி முதலியவைகளைப் பற்றி அவர் புதிய கோணத்தில் ஆராய்ந்தார். **ஐன்ஸ்டீன் இயற்கைக்கே புத்துருவமும், புது வடிவமும் கொடுத்தவர்**.

இயற்கையின் செல்வம் எல்லையற்றது. எண்ணில் அடங்காதது. பொருள், ஆற்றல், அறிவு, அழகு, இன்பம், நலம் ஆகிய பல்வேறு வண்ணங்களாக அது எங்கும் பரவி நிறைந்துள்ளது. மனிதன் இயற்கையின் செல்வத்துக்கு உரிமை உடையவன். ஆனால் இயற்கையை உணரும்



அளவிலேயே அதை அவன் தனதாகப் பெற்றுத் துய்க்க முடியும். இயற்கையை உணரும் வகையில் அறிவியல் ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களே மனித இனத்தின் முன்னோடிகள் ஆவர். அவர்கள் அறிவே உலக அறிவாக, பொது மக்கள் அறிவாகப் பரவி உலக நாகரிகத்தை வளர்க்கிறது.

## 245) Euclid-Newton-Einstein ஆகியோரது கண்டு பிடிப்புகளின் தனித்தன்மை யாது?

அறிவுலக வரலாற்றில், ஆராய்ச்சியறிஞர் பலர். ஆனால் இத்தகைய இயற்கையின் செல்வராக நாம் மூவரைச் சிறப்பித்துக் குறிக்கலாம். அவர்கள் யூக்லிட், (Euclid) நியூட்டன், (Newton) ஐன்ஸ்டீன் ஆகிய மூவருமேயாவர்.

2500 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த கிரேக்க அறிஞர் யூக்லிட், பொது அறிவை வகுத்துத் தொகுத்துப் புத்தமைதி கண்டவர். இயங்குகிற பொருளுக்கெல்லாம் அடிப்படைச் சட்டமாக அமைவது இயங்காத நிலையான இயற்கை, அதாவது வெளியிடம் (Space) என்பதை அவர் கண்டார். இவ்வெளியிடத்தில் இயங்கும் பொருள்கள் அதன்வடிவில் ஒரு கூறாகவே இயங்குவன. வெளி யிடத்துக்கு, நீளம், அகலம், உயரம் என்ற மூவளவைகள் (Three dimensions) உண்டு; இவையே பொருளின் வடிவ, உருவப் பண்புகள், இவற்றின் அமைதி களை யூக்லிட் கணித்து உருவாக்கினார். இவை வடிவியல் (Geometry) உருவியல் (Mensuration) என்ற நூல் துறைகளாக வளர்ந்தன. இக்காரணத்தால் அவர் வடிவியலின் தந்தை எனும் புகழ் பெற்றுள்ளார்.

2000 ஆண்டுகளுக்கு மேலாக யூக்லிட் கண்ட

முடிவுகளே அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு அடிப்படையாய் இருந்து வந்துள்ளன. நியூட்டன் 17-ஆம்நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த அறிஞர். அவர் இயற்கை என்னும் இயங்காச் சட்டத்தில் இயங்குகின்ற பொருள்களின் நிலை களையும் இயக்கங்களையும் ஆராய்ந்தார். அவற்றின் ஒழுங்கு முறைகளை வகுத்துத் தொகுத்து அளவையிட்டார். இவையே இயங்கியலின் (Physics) அடிப்படை ஆயிற்று. இக்காரணத் தால் நியூட்டன் **இயங்கியலின் தந்தை** என்று அழைக்கப் படுகிறார்.

சென்ற 300 ஆண்டுகளின் அறிவியல் ஆராய்ச்சிகள் யூக்லிட் கண்ட அடிப்படையிலும் நியூட்டன் கண்ட அடிப் படையிலுமே நடைபெற்று வந்துள்ளன. 20ஆம் நூற் றாண்டுக்குள் அறிவியல் ஆராய்ச்சி யூக்லிட் முடிவுகளையும், நியூட்டன் முடிவுகளையும் தாண்டி நெடுந்தொலை வளர்ந்துவிட்டது. பல நுட்ப இயக்கங்களை அவர்கள் முடிவுகள் விளக்கத் தவறின. பல பாரிய இயக்கங்கள் நுண்ணிய அளவில் அவற்றுக்கு முரண்பட்டனவாகத் தோன்றின. யூக்லிட், நியூட்டன் ஆகியவர்களின் முடிவுகள் தவறென்று கொள்வதா? இயற்கைதான் தவறுகிறது என்று கொள்வதா? இந்த இருதலைக் கேள்வி அறிஞர் உள்ளங் களில் அலை பாய்ந்தது. அறிவியல் அறிஞர்கள் பெரிதும் இடர்ப்பாடுற்றனர்.

லாரென்ஸ், (Lorentz) மைக்கேல்சன், (Michaelson) ஏர்ன்ஸ்ட் மாக் (Ernst Mach) முதலிய பேரறிஞர்கள் இவ் விடர்ப்பாடுகளில் கருத்துச் செலுத்தி ஆராய்ந்தனர். அவற்றைக் கணித்து அளவையிட்டனர். ஆனால், அவர்களால் இடர்ப்பாடுகளை முற்றிலும் விளக்க முடியவில்லை. பழைய அடிப்படைகள் ஆட்டங்கண்டன. ஆனால் இன்னும்



அவையே அடிப்படைகளாய் இருந்தன. ஏனென்றால் வேறு அடிப்படை காணப்படவில்லை.

## 246) இயற்கை ஈன்ற செல்வன் Einstein

இந்நிலையில் இயற்கையே தன் உரிமைச் செல் வனாக ஐன்ஸ்டீனை இந்நிலவுலகிற்கு அனுப்பிற்று என்னலாம். அவர் விளக்கங்களின் மேல் விளக்கங்களாகப் புதுப்புது விளக்கங்கள் கொண்டு வந்தார். அவை இடர்ப் பாடுகளை விளக்கின. புதிய மெய்களையும் காட்டின. அது மட்டுமா? யூக்லிட், நியூட்டன் ஆகியோர் முடிவுகளையும் அவை விளக்கி, அம்முடிவுகளுக்குப் புதுப் பொருளும் புது வண்ணமும் தந்தன.

சென்ற நானூறு ஆண்டுக் காலத்தை நாம் பொதுவாக அறிவியலூழி என்கிறோம். நீராவி, நிலக்கரி, பாரெண்ணெய், (Petrol) மின்னாற்றல், கதிரியம் (Radium) பரம்பலை (Radio Waves) ஆகிய பல புதுமைகள் கண்டுணரப் பெற்றது இக்காலத்திலேயே. அவற்றால் மனித வாழ்வில் ஏற்பட்ட புரட்சிப் படிகளை நாம் நீராவியூழி, நிலக்கரி ஊழி, மின்னூழி முதலிய பெயர்களால் குறிக்கிறோம். இவ்வகையில் தற்காலத்தை நாம் அணு ஊழி என்று வழங்குகிறோம். அண்டத்தை (Universe) ஆக்கும் ஆற்றலும், அழிக்கும் ஆற்றலும் ஒவ்வோர் அணுவுக்குள்ளும் அடங்கியுள்ளன என்பதை மனிதன் அறிந்து வருவது இவ்வூழியிலேயே. அதை அவன் இன்று அணுகுண்டாக அழிவுத்துறையிலே பெரிதும் வழங்குகிறான்.

அணுவைப் பிளந்து அளவையிடும் வகையில், ஐன்ஸ்டீனின் ஆராய்ச்சிகளே பேரளவில் வழிகாட்டின. அறிவியல் துறைகளில் ஐன்ஸ்டீன் பெற்ற பெருமைகளில்

இதுவும் ஒன்றாகும். ஆனால் அவர் முழுப் பெருமையில் இது ஒரு சிறு கூறேயாகும். அவர் பெருஞ்சாதனை அணுவின் இயக்கத்தையும் அண்டத்தின் இயக்கத்தையும் ஒரே இயற்கை நியதியின் கீழ்க் கொண்டு வந்ததேயாகும். இதன்மூலம் மனிதன் இரண்டையும் இயக்கி ஆளும் தன் ஆற்றலைப் பெருக்கி யுள்ளான்.

## 247) தொடர்புறவுக் கோட்பாடு

ஐன்ஸ்டீனின் அறிவியல் புரட்சிக்குரிய முக்கிய கோட்பாடு தொடர்புறவுக் கோட்பாடு (Relativity Theory) என்பதே. இதை அவர் இரண்டு தொகுதிகளாக ஆராய்ந்து வெளியிட்டார். முதல் தொகுதி தொடர்புறவின் சிறுதிறக் கோட்பாடு (Special or Particular Theory of Relativity) என்பது இரண்டாம் தொகுதி. அதன் பொதுமுறைக் கோட் பாடு (General or Universel Theory of Relativity) என்பது.

சிறு திறக் கோட்பாடு நியூட்டனின் இயக்கக் கோட் பாட்டின் மூவளவை முறையை நாலளவை முறை (Four dimensions) ஆக்கிற்று. நீளம், அகலம், உயரம், என்ற பழைய மூவளவை முறையினிடமாக, அவர் நீளம், அகலம், உயரம், காலம் என்ற நாலளவைகளையும் இயக்க அளவைகளாகக் கொண்டார்.

இயக்கம் என்பது இயங்கா இயற்கைச் சட்டத்தில் இயங்கும் பொருள்களின் இடப்பெயர்ச்சி என்று யூக்லிடும், நியூட்டனும் முடிவு செய்திருந்தனர். அம்முடிவை ஐன்ஸ்டீன் மாற்றினார். இயற்கையில் எல்லாப் பொருள்களும் இயங்கும் பொருள்களே. இயங்கும் பொருள் களுக்கு அடித்தளமான நிலவுலகமும், அதைச் சூழ்ந்த வளிமண்டலமும் (Atmos phere) பம்பரம்போல சுழன்று கொண்டு கதிரவனைச் சுற்று



கின்றன. கதிரவனும் பால்வெளியினுள்ளே (The Milky Way) இயங்குகின்றான். பால்வெளியும் அகண்ட வெளியில் (Inter-Stellar space) இயங்குகிறது.

ஆகவே இயக்கம் என்பது இயங்காச் சட்டத்தில் இயங்கும் இயக்கம். அதாவது தனிநிலை இயக்கம்.(Absolute Movement) அன்று; இயங்கும் பொருளுடன் தொடர்புறவு கொண்ட தொடர்புறவு இயக்கமே (Relative movement) என்று ஐன்ஸ்டீன் கண்டு விளக்கினார்.

தொடர்புறவுக் கோட்பாட்டின் பொதுமுறை விளக்கம் இன்னும் வியப்புக்குரியது. அவர் இதன்படி, மாறுபடும் தொடர்புறவு இயக்கங்கள் அனைத்தையும் அளக்கும் ஒரு மாறுபடாத நிலையான அடிப்படை இயக்க அளவையைக் கண்டார். இதுவே ஒளியின் வேகம். (Velocity of light) இது எந்தத் தொடர்புறவுச் சூழல்களாலும் மாறு படாமல், எங்கும் எப்போதும் நொடிக்கு (Second) 1,86,000 கல் (Miles) அல்லது 3 லட்சம் கிலோமீட்டர்/ வினாடி தொலைவிலேயே செல் கிறது. இதுவே அளவைகளுக்கெல்லாம் மூல அளவை (Basic Standard) என்று அவர் காட்டினார்.

## 248) புரட்சிகரமான கண்டுபிடிப்புகள்

ஐன்ஸ்டீன் புரட்சிகரமான கண்டுபிடிப்புகள் இவை மட்டுமல்ல. இன்னும் பல. நியூட்டன் கண்ட பொருள் ஈர்ப்பாற்றல் (Force of gravity) ஒரு தனி ஆற்றலன்று. பொருள்களின் இயக்கத்தால் ஏற்படும் ஓர் இயல்பான விளைவே என்று அவர் விளக்கினார். மின் காந்த அலைகளும் (Electro-magnetic waves) ஒளி அலைகளும் வேறு வேறு இயக்கங்களல்ல. ஒரே விசை ((Velocity) உடைய ஒரே இயக்கத்தின் இருவேறு வண்ணங்களே என்று அவர்

வகுத்துரைத்தார். பொருள் வேறு, ஆற்றல் வேறு என்ற பழைய முடிவை மாற்றி, அவற்றின் தொடர்பைப் புத்தம் புதிதாக விளக்கினார். 'விசை' மிகுந்தோறும் பொருளின் எடைமானம் (Mass) பெருகும். அதன் பருமானம் (Volume) குறுகும் என்ற மெய்மையை அவர் சுட்டிக் காட்டினார். இரண்டும் ஒன்று மற்றொன்றாகக் கூடுமாதலின், இரண்டும் அடிப்படையில் ஒன்றே என்று முடிவு செய்தார். இங்ஙனம் அறிவியல் உலகில் ஐன்ஸ்டீன் செய்த மாறுபாடுகள் புரட்சிகர மானவை. அளவற்றவை. ஆனால் அறிவியல் உலகில் செய்த இதே புரட்சியை அவர் வேறு பல துறைகளிலும் கூடத் தொடங்கி வைக்கத் தவறவில்லை.

## 249) அறிவியலின் முதிர்ந்த நிலையே மெய்யறிவு

**அறிவியல் அல்லது பகுத்தறிவும் சமயம் அல்லது பற்றார் வமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று கருதுபவரே உலகில் பலர் இன்றும் காணப்படுகிறார்கள்.** தாழ்ந்தபடிச் சமயவாழ்வும், தாழ்ந்தபடி அறிவியல் வாழ்வும் தத்தம் குறைபாட்டால் முரண்படுவது உண்மையே. ஆனால் உயர்தரச் சமய உணர்வும், உயர்தர அறவிய லார்வமும் முரண் பட்டவையல்ல. கிட்டத்தட்ட ஒரே உணர்வின் இருவேறு வண்ணங்களே, இதை ஐன்ஸ்டீன் அழகுற விளக்கியுள்ளார்.

ஐன்ஸ்டீன் புகழ் பரந்த அளவுக்கு அவர் கோட் பாடுகள் இன்னும் பொது மக்களிடையே பரவவில்லை. அறிவுலகின் உச்சியிலுள்ள ஒரு சிலரே அதனை மதிப்பிட்டு வரவேற்றனர். அவருடைய 'தொடர்புறவுக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டவர் உலகிலே பத்துப்பேருக்கு மேல் இருக்க முடியாது' என்று அறிவியல் வட்டாரங்களில் கூறப்பட்ட காலம் உண்டு. இன்னும் அது அறிஞர் சூழலும் ஆய்வுக்கூட எல்லையும் கடந்துவிடவில்லை. பள்ளி, கல்லூரி மாணவர் பாடத்திட்டங்களில்கூட அது முற்றிலும் இடம் பெறவில்லை. இதற்கு முக்கிய காரணம். தவிர, ஐன்ஸ்டீன் கோட்பாடு உயர்தரக் கணக்கறிவின் அடிப் படையில் அமைந்துள்ள தனால், உயர்தரக் கணக்கியலறிவு பரவும் அளவிலேயே அது பொது அறிவாக வளரமுடிகிறது. ஆயினும் அறிஞர் குழு மூலமாக அவர் புகழுடன் இவ்வறிவும் பரவி வருகின்றது. உலகம் அவர் அறிவின் முழு விளைவைத் துய்க்கும் காலம் தொலை விலிராது என்னலாம்.



## 250) அணுகுண்டின் மூலவிதை

பிரேகில் நடந்த ஒரு செயல் பின்னாட்களில் பெரு முக்கியத்துவம் உடையதாய் அமைந்தது. ஐன்ஸ்டீனின் அறிவியல் கோட்பாடு களில் அடிப்படையான முக்கியத் துவம் உடைய ஒரு வாய்ப்பாடு உண்டு. அது ஆற்றலின் அளவைப் பற்றியது. ஒளிவேகத்தின் தற்பெருக்க எண்ணையும், எடைமானத்தையும் பெருக்கிய அளவே ஆற்றல் என்பது அவ்வாய்ப்பாடு. ஆற்றலை நாம் **'ஆ '** என்றும் ஒளி விசையை **'ஒ'** என்றும் எடைமானத்தை **'எ'** என்றும் குறித்தால், அது,

**ஆ= எ ஒ$^2$**

($E=mc^2$ Where E - Energy, m=Mass and C=Velocity of LIght) என்ற உருவில் எளிய வாய்ப்பாடாகக் காட்சி தரும்.

இவ்வாய்ப்பாட்டை அடிப்படையாகக் கொண்டால் அணுவில் அடங்கிய ஆற்றல் அளவற்றதாகும். ***(சூரியன் பல கோடி ஆண்டுகளாக வெப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்***

***தன்மை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஐன்ஸ்டீனின் இந்த வாய்ப்பாடு வெளிப் படுத்தியது. சூரியனில் நிறைந்துள்ள ஹைட்ரஜன் வாயுவானது ஹீலியமாக இடைவிடாது மாற்றம் அடையும்போது ஏற்படும் வெப்பத்தின் விளைவே சூரிய ஒளியாகும்.)*** அம்முறையில் பேராற்றல் வாய்ந்த அழிவுப் பொறிகளைச் செய்யப் பலர் முயன்றனர். பலர் அவற்றை அவ்வப்போது அவரிடமே கொண்டு வந்து காட்டி அவர் ஆதரவு பெற விரும்பி யதுண்டு. இம்முயற்சிகளின் நோக்கத்தையே ஐன்ஸ்டீன் வெறுத்தார். அவற்றிலீடுபட்டவர் அறிவு நிலையையும் அவர் பொருட்படுத்தவில்லை. அவர்களை வெறியர் என்றே மதித்து வெறுத்தொதுக்கினார்.

பிரேகை விட்டுப் புறப்படும் சமயத்தில் அவர் தங்கிய இடமறிந்து அவரைக் காணப் பலர் அருமுயற்சி செய்தனர். இவர்களில் அணுஆற்றல் பொறி அமைத்த இளைஞரும் ஒருவர். பேராசிரியர் பிராங்கிடம் இளைஞர் தம் உரிமையை வற்புறுத்தினார். இத்தகைய தருவாய்க்காக ஆண்டுக் கணக்காகக் காத்திருக்கிறேன். அணு ஆற்றலுக்கு வழிவகுத்த பேரறிஞரை நான் கண்டுதானாக வேண்டும் என்றான் இளைஞன். அவரைக் கண்டபோதும் இளைஞர் முழு விளக்கமும் விரைந்து சொல்லப்படபடத்தார். ஐன்ஸ்டீன் என்று மில்லா வெறுப்புடன் பேசினார். ‘‘தம்பி, இவ்வளவு கடுமுயற்சி தேவையில்லை. விரிவுரை வேண்டியதில்லை. ஒரு சொல்லே போதும், இந்த அறிவற்ற முயற்சி பயன்படா தென்பதற்கு, என்னிடமிருந்து இதுபற்றி வேறு எதுவும் அறிவதற்கில்லை. இந்தப் பொறி உருப்படியாக வேலை செய்யாது!’’ என்று கூறி அகன்றார். ஆனால் பொறி உருப் படியாக வேலை செய்தது. அழிவுத் துறையிலேயே வேலை செய்தது.



25 ஆண்டுகளுக்குள் அந்தப் பொறியே அணு குண்டாக வளர்ந்து ஹிரோஷிமா நகரத்தை அழித்தது. அதுவே அணு ஊழியை ஆரவாரமாகக் தொடக்கி வைத்த அணுகுண்டு.

இதற்கிடையில் அணு ஆற்றலின் தந்தையாகிய அவரே அணுக்குண்டு ஆராய்ச்சிகளிலும், அதன் விளைவாக ஏற்பட்ட இயக்கங்களிலும் பல பொறுப்புக்கள் ஏற்க வேண்டி வந்தது. ஆற்றல் என்பது ஒளிக்கதிரின் வேகப் பெருக்கத் தையும் எடைமானத்தையும் பெருக்கிய தொகையே ($E=MC^2$) என்ற ஐன்ஸ்டீன் வாய்ப்பாடே அணு ஆற்றலுக்கு வழி வகுத்தது. பொருளை ஆற்றலாக மாற்றினால் ஒவ்வோர் அணுவுக்குள்ளும் எல்லையற்ற ஆற்றலுண்டு என்ற அவர் கோட்பாடு வெறும் கோட்பாடாக இல்லை. பலர் அணுவின் கருநுண் மங்களை ஆற்றலாகப் பெருக்க முடியும் என்று செயல் தேர்வு மூலம் காட்டினார்கள்.

இச்சமயம் பெர்லினிலுள்ள ஆட்டோ ஹான், (Otto Hahn) லீஸ்மைட்னர் (Lise Meitner) ஆகியோர் பொதுநிலை நுண்மங் (Neutrons) கொண்டு தாக்கினால், வின்மம் (Uranium)என்ற உலோக அணுப்பிளப்புற்று, சில நுண் மங்கள் ஆற்றலாகி விடுகின்றன என்று கண்டார்கள். எரிக்கோ பெர்மி (Erico Fermi) என்ற இத்தாலிய இயங்கியலறிஞர் இதனை ஒருபடி முன்னேற்றுவித்து, அதை வெற்றி கரமாக்கு வதற்கான பொதுநிலை நுண்மத்திரளின் அளவைக் கண்டார். அவர் இத்தாலியிலிருந்து வெளியேறி அமெரிக்கா வந்து வாழ்ந்தவர். ஜெர்மனியும் இத்தாலியும் இவற்றைப் போரில் பயன் படுத்துவதற்கு முன்பு அமெரிக்காவில் இதைப் பயன்படுத்தி அணு குண்டாக்கிவிட வேண்டும் என்று அவர் எண்ணினார். அவர் அமெரிக்க அரசியலை இவ்வகையில் ஊக்கம் தந்திட, அதற்கு ஐன்ஸ்டீன் ஆதரவுக் கரம் நீட்டினார்.

ஐன்ஸ்டீன் அணு ஆற்றலின் அழிவை விரும்பா விட்டாலும், அது ஜெர்மனி கைப்பட்டால் தம் உற்ற தாயக மாகிய அமெரிக்காவுக்கு ஏற்படும் தீங்கை எண்ணிப் பார்த்தார். அதுவகையில் அமெரிக்காவுக்கு உதவுவது நம் கடமை எனக் கொண்டார். ஆகவே அவர் இம்முயற்சியில் முனைந்தார்; அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டை அம்முயற்சியில் ஈடுபடுத்தி ஊக்குவித்தார். 1945இல் அமெரிக்காவில் அணுகுண்டு ஓர் ஒப்பற்ற போர்க் கருவி யாயிற்று. அது போரை நிறுத்தவும் பெரிதும் உதவிற்று. ஆனால் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா நகரம் அவ் வெற்றிக்குப் பலியாயிற்று. அணுகுண்டுப் போருக்கு இங்ஙனம் கடமையுணர்ச்சியால் ஐன்ஸ்டீன் உதவினாலும், அணு குண்டு எதிர்ப்பியக்கத்திலும் அவர் மிகுந்த ஊக்கம் காட்டினார். அரசியலில் ஈடுபட விரும்பாத அவரை இங்ஙனம் அணுகுண்டு ஓரளவு உலக அரசியற் பொறுப்புகளில் சிக்க வைத்தது.

## 251) இயற்கை: ஐன்ஸ்டீன் காலத்திற்கு முற்பட்ட அறிவு

இயற்கையைப் பற்றிய நம் அறிவு மெய், வாய், மூக்கு, செவி, கண் என்ற ஐம்பொறிகளால் அறியப்படுவது. இவற்றால் ஏற்படும் ஐந்து அறிவுகளையே தொட்டறியும் அறிவு. சுவைத்தறியும் அறிவு. முகந்தறியும் அறிவு. கேட்டறியும் அறிவு. கண்டறியும் அறிவு என்று கூறுகிறோம். இவையே ஐம்புல அறிவுகள். இவற்றுள் மெய், வாய், மூக்கு என்ற முதல் மூன்றும் மிக அருகில் உள்ள பொருள்களையே அறியத் தக்கவை. ஆனால் செவி, மேக மண்டலத்திலுள்ள இடியை இங்கிருந்தே உணர்கிறது. கண்ணோ, வானத்தின் கோடிக்கணக்கான ஒளிக் கோளங்களை இங்கிருந்தே காண வல்லது. நாம் அறியும் உலகின் பேரளவு எல்லை நம் கண்ணால் காணும் உலகே.



ஐந்து புலன்களாலும் நாம் உணரும் உலகு எவ்வளவோ பெரிது. ஆனால் இயற்கையின் எல்லையற்ற பரப்பில் அது ஒரு சின்னஞ்சிறு கூறு மட்டுமே. புலன்களால் நாம் உணரும் இச்சிறு பரப்பில் கூட நம் அறிவு மிகமிகக் குறைபட்டது என்று அறிஞர் காட்டுகின்றனர். நம் கண் காணும் ஒளி வெண்கதிரொளி மட்டுமே. இதில் கதிர வனொளியின் ஏழு நிறங்களும் அடங்கியுள்ளன. அந் நிறங்கள் வயலட், (Violoet) இன்டிகோ, (Indigo) பச்சை, நீலம், மஞ்சள், ஆரஞ்சு, (Orange) சிகப்பு ஆகியவை. இவற்றுள் மிக அகலங்குறைந்த அலை வயலட் அலையே. அது ஒரு சென்டிமீட்டரில் லட்சத்தில் நான்கு கூறு நீளமுடையது. மிக அகலமிக்கது சிகப்பலை. அது அதே லட்சத்தில் ஏழு கூறு நீளமுடையது. இவற்றிடைப்பட்ட சிறு அகலத்துக்கு இப்பாலும் அப்பாலும் எத்தனையோ நிற அலைகளும் ஒளி, வானொலி (Radio) ஒலிபரப்பு (Broad cast) அலைகளும் ஓயாது இயங்குகின்றன.

இவை அனைத்தும் கண்காணா அலைகள், ஆராய்ச்சி அறிஞர் அவற்றின் செயலால் அவற்றைக் கண்டுபிடித்து நமக்குப் பயன்படுத்துகிறார்கள். புலன் காணாத இவற்றைப் புலன் கடந்த ஆராய்ச்சி அறிஞர்கள் இயற்கையின் மறைவான உள் வீட்டிலிருந்து நமக்கு எடுத்துதவியுள்ளனர்.

## 252) விசும்பின் கருத்தாட்சி

கண்காணும் நம் ஒளியலைகளும், கண் காணாத இந்த அலைகளுக்கும் உள்ள வேறுபாடு அவற்றின் அளவில், அவற்றின் அலையகல ஏற்றத்தாழ்விலேயே உள்ளது.

மருத்துவ நிலையத்தில் உடலின் உட்பகுதியைப் படம் பிடிக்க உதவுபவை எக்ஸ் கதிர்கள் (X-rays). இவ்வலைகள் ஒளி அலையைக் காட்டிலும் மிக நுட்பம் வாய்ந்தவை. சென்டிமீட்டரில் பத்து லட்சத்தில் ஒரு கூறுமுதல் பத்துக் கோடியில் ஒரு கூறு வரையில் இவை குறுகிச் செல்கின்றன. அதே சமயம் வானொலியின் அலைகள் ஒரு லட்சம் சென்டி மீட்டர் முதல் ஒரு கோடி சென்டிமீட்டர்வரை அகலமுடைய னவாக விரிந்து பரவுகின்றன.

நீரின் அலைகள் நீரில் தவழ்கின்றன. ஒலி அலைகள் காற்றில் தவழ்கின்றன. ஆனால் ஒளி அலைகளும் அதனுட னொத்த பிற கண்காணா அலைகளும் வெற்றிடத்தில் எவ்வாறு இயங்கமுடியும்? இக்கேள்வி அறிவுலகின் ஒரு புதிராயிற்று. புதிருக்கு அறிஞர்கள் ஒரு தற்காலிக விளக்கம் கண்டனர். வெளியிடத்தில் விசும்பு (Ether) என்ற ஒரு வகை ஊடுபொருள் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இது காற்றைவிட நுண்ணிதாம். ஏனென்றால் அது எல்லாப் பொருள்களின் உள்ளீடாகவும் இருக்க வேண்டும். அதே சமயம் காற்று நிலவுலகைச் சுற்றிலும் ஒரு சில கல் தொலைவு வரையே இருக்கிறது. இதுவோ நிலவுலகையும் கதிரவனையும் எல்லாக் கோலங்களையும் சூழ்ந்து அண்டத்திலும் அப்பாலும் நிறைந்திருக்க வேண்டும்.

பள்ளிகளில் கணக்குக்கு விடை தெரியாத மாணவன் தெரியவில்லை என்பான். ஆனால் ஒரு பொருளுக்குக் காரணம் கூறமுடியாவிட்டால், மக்கள் அதை இயற்கை என்கிறார்கள். அல்லது இயற்கை என்று கூறாமல் கடவுள் படைப்பு என்கிறார்கள். இரண்டும் காரண விளக்கம் ஆகிவிடாது. ஆகவேதான் இயற்கையை மெய் விளக்க



அறிஞர்களும், அறிவியலாராய்ச்சியாளரும் ஆராய்கின்றனர். கடவுளைப் பற்றியும் உபநிடத காலம் முதல் நம் பண்டைக் கால அறிஞர்கள் ஆராயத் தொடங்கினர்.

கடவுளைப் பற்றி ஆராய முற்பட்ட உபநிடத அறிஞர்களைப் போலவே 19ஆம் நூற்றாண்டில் சிலர் விசும்பு பற்றியும் ஆராய முற்பட்டனர். அவர்களில் மைக்கேல்ஸன், மார்லி ஆகியவர்கள் முக்கியமானவர்கள். அணுவினும் சிறியன், அண்டத்திலும் பெரியன். காற்றினும் நெய்மையன், வைரத்தினும் திண்ணியன் இவ்வாறு எதிரெதிர் பண்புகளைக் கடவுள் பண்பாகக் கருதினர் சமயவாணர். விசும்பு வகையில் அறிஞரும் இதே வகையான முடிவுக்கு வரவேண்டியவ ராயினர். இது அவர்களுக்குத் திகைப்பை உண்டு பண்ணி யிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

## 253) ஐன்ஸ்டீன் கோட்பாடுகளின் கருமூலம்

**ஒளி மட்டுமின்றி, இயற்கையின் எல்லா இயக்கங்களுமே எங்கும் ஒரே நிலையில் ஒரே வகையில் நடைபெறுகின்றன. ஆனால் இயக்குதளங்களின் (Reference System)தொடர்பால் அவை மாறுபாடு அடைகின்றன. இம்மாறுபாடுகளை லாரன்ஸ் வாய்ப்பாடு விளக்கு கிறது. நீளம், அகலம், உயரம் என்ற மூன்று இட அளவைகள் மட்டும் லாரன்ஸ் வாய்ப்பாட்டால் மாறுபடுவதாக ஐன்ஸ்டீன் கொள்ளவில்லை. காலமும் அதே வகையில் மாறுபடும் என்று அவர் துணிந்து உரைத்தார்.** இது மைக்கேல்சன்-மார்லி தேர்வாராய்ச்சிகளின் முடிவை முழுதும் இயல்பாக விளக் கிற்று. அத்துடன் அது ‘விசும்’பின் கருத்தாட்சியையும் அது முற்றிலும் ஒழித்தது.

## 254) கருமூலத்திலிருந்து கிளைத்த பாரிய கிளைக்கோட்பாடுகள்

ஐன்ஸ்டீனின் அடுத்த பல கோட்பாடுகளுக்கு இம்முடிபு அடிகோலுகின்றது. கருமூலத்திலிருந்து கிளைத்துப் பல்கிப் பெருகிய பாரிய கிளைகளாக அவை பரவின.

1. எந்தப் பொருளும் ஒளி வேகத்துக்கு மேல் விரைந்து செல்ல முடியாது. ஏனெனில் அந்த வேகத்தை எட்டும் பொருள் வேகமாகவே மாறிவிடும். (ஒளிவேகம் என்று இங்கு குறிப்பிடப்படுவது ஒரு வினாடிக்கு 3 லட்சம் கி.மீட்டர் வேகத்தில் செல்லும் ஒளிக்கற்றை.)

2. ஒளி வேகத்தை நோக்கிப் பொருள் விரையுந்தோறும் பருமன் அளவு (Volume) குறுகுகிறது. ஆனால் எடைமானம் பெருக்கமுறுகிறது.

3. வேகம் அல்லது ஆற்றல் ஒரு பண்பு. (Entity) பொருள் மற்றொரு பண்பு அன்று. இரண்டும் ஒன்று என்று ஐன்ஸ்டீன் காட்டினார். அத்துடன் இரண்டின் தொடர்பையும் ஆற்றல்= எடைமானம்Xஒளிவேகத்தின் தற்பெருக்கம்$^2$ என்று அவர் காட்டினார்.

4. ஒளிவேகம் வேகத்தின் எல்லை மட்டுமன்று. பருமன், எடைமானம் ஆகியவற்றின் எல்லையும் அதுவே. ஏனெனில், ஒளிவேகம் மிகுந்தோறும் எடைமானம் மிகுவதால், உச்சவேகமே உச்ச எடைமானம் ஆகும். ஒளிவேகம் வேகத்தின் எல்லையாதலால், எடைமானத்தின் எல்லையும் அதுவே. வேகம் குறையுந்தோறும் பருமன் பெருகுகிறது. வேகத்தின் குறைந்த எல்லை ஒளிவேகத்தின் குறைந்த எல்லையே. ஆகவே பருமன் எல்லையும் ஒளிவேக எல்லையாகவே அமைகிறது.



இயற்கை எல்லையற்றது என்று ஐன்ஸ்டீன் காலம் வரை மக்களும், கவிஞரும், அறிஞரும் கருதி வந்தனர். எல்லையற்றது என்பதற்கு ஐன்ஸ்டீன் ஒளிவேகம் என்ற பாரிய எல்லையை ஒப்பாக்கினார். இது பொருளின் எல்லை மட்டுமன்று. பொருளுலகின் எல்லை. அதாவது அண்டங்கள் அடங்கிய இயற்கையின் எல்லை ஆகும்.

5. இயற்கை எல்லையற்றது மட்டுமன்று. வடிவமற்றது என்றும் யாவரும் இதுவரை எண்ணி வந்துள்ளனர். இதில் வியப்புக்கு இடமிலை. ஏனெனில் எல்லையற்ற பொருளுக்கு வடிவமும் இருக்க முடியாது. ஆனால் ஐன்ஸ்டீன் இயற்கைக்கு எல்லை தந்ததனால், அதற்கு வடிவமும் உருவமும் காண முடிந்தது.

6. பொருளும் ஆற்றலும் ஒன்றே என்ற தத்துவம் வகுத்ததுடன் ஐன்ஸ்டீன் அமையவில்லை. அதன் உதவியால் அவர் அணு ஆக்கம், அண்டத்தின் ஆக்கம் ஆகிய இரண்டையும் ஒரே இயற்கை அமைதியில் கொண்டு இணைக்கப் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

அணு உண்மையில் நடுவே ஒரு கருவுள்ளும், (Nucleus) அதனைச் சூழ்ந்து சுற்றி வரும் எதிர் மின்னிகளும் (Electrons) உடையதே. கருவுளோ நேர் மின்னிகள் (Positrons) திரளும், நொது மின்னிகள் (Neutrons) திரளும் சேர்ந்திணைந்தது. இவற்றுட்பட்ட நேர் மின்னிகளும் எதிர் மின்னிகளும் நொது மின்னிகளும் பொருட் கூறுகளல்ல. ஆற்றல் வெளி என்னும் அகல் களத்தில் நிகழும் இரு வகை இயக்கச் சுழிகளே (Eddies in primordial field-energy)என்று ஐன்ஸ்டீன் கண்டார்.

அண்டங்களும் கோளங்களும் இயங்கும் அதே நியதியிலேயே மின்னி எதிர் மின்னிகளும் இயங்குகின்றன.

அது மட்டுமன்று மின்னி எதிர் மின்னி இயக்கங்களும் அண்டத்தின் இயக்கமும் ஒரே ஆற்றல்களத்தின் சுழி எதிர்ச் சுழிகளால் ஆக்கப்பெறுபவையே என்று ஐன்ஸ்டீன் கணித்துக் காட்டினார். ஐன்ஸ்டீனின் இந்த விளக்கமே 1949ஆம்ஆண்டு அவர் தோற்றுவித்த ஒன்றுபட்ட களக்கோட்பாடு ஆகும். ( (Unified Field Theory)

## 255) ஞாயிற்று மண்டிலம் பற்றிய புதிரின் விளக்கம்

ஐன்ஸ்டீன் கோட்பாடுகள் பலருக்கு மாயம் போலவும், பலருக்குக் கவிஞரின் கற்பனை போலவும் மருட்சி அளித்ததுண்டு. ***(இந்தக் கட்டுரையைப் படிக்கும் பலருக்கும் இந்த உணர்வே ஏற்பட்டிருக்கும். ஆனால் ஐன்ஸ்டீன் ஓர் மாபெரும் தத்துவவாதியாவார். வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் மறைத்துச் சொல்லப்பட்ட பொருளையே அவர் விஞ்ஞான ரீதியாக எடுத்துரைத்தார். அவர் ஒரு யூத இனத்தைச் சார்ந்தவராயினும் ரிஷிகளில் ஒருவராக எண்ணத் தக்கவர். அணுவினுள்ளும் எம்பெருமான் உறைகின்றான் அண்டத்தினுள்ளும் அவன் உறைகின்றான் என்ற ஆழ்வார் வாக்கிற்கு விளக்கமளித்தவர் ஐன்ஸ்டீன். இதுபோன்ற விஞ்ஞானிகளின் பெயரைச் சொன்னாலே நாக்கு வெந்து விடும் என்று ஒரு சிலருக்கு ஒரு சில அறிவிலிகள் உபதேசம் செய்து கொண்டிருக்கலாம்.)*** இதனால் தொடக்க காலத்தில் அவை மெய்ம்மை விளக்கங்களா, கற்பனைகளா என்று சிலர் மயங்கினர்.

ஆனால் ஒளிக்கதிர்களின் வளைவு போன்ற பல மெய்ம்மைகள் காட்சியாராய்ச்சிகளாலும், ஆய்வுகள் ஆராய்ச்சிகளாலும் மெய்ப்பிக்கப்பட்டன. அத்துடன் உலகை ஆட்டிப் படைத்துள்ள அணு குண்டு, பொருள்-ஆற்றல் மாறுபாடு பற்றிய அவர் வாய்ப்பாட்டின் விளைவே யாகும்.



தவிர, **ஐன்ஸ்டீன் கோட்பாடுகள் அறிவியல் உலகின் பல புதிர்களை விளக்கிப் புத்தொளி தந்துள்ளன.**

பொருள்-ஆற்றல், மாறுபாட்டு வாய்ப்பாட்டால் விளக்கம் பெற்ற மற்றொரு புதிர், ஞாயிற்று மண்டில ஆராய்ச்சித்துறை பற்றியதாகும். ஞாயிற்று மண்டிலத்தி லிருந்து நிலவுலகுக்கு வரும் ஒளியாற்றலின் அளவே எல்லையற்றது. ஆனால் அண்ட வெளியில் பரவும் ஒளியாற்றலில் இது ஒரு சிறு பகுதியேயாகும். எல்லையற்ற காலம் இவ்வாறு எரிந்து ஒளியாற்றல் இழந்தும், ஞாயிற்று மண்டிலத்தின் எடைமானத்திலோ, பருமானத்திலோ அதற்கேற்ற குறைபாடு காணப்படவில்லை. இது அறிவியல் அறிஞர்களுக்கு விளங்காத புதிர்களுள் ஒன்றாக இருந்தது.

பொருள் ஆற்றல்-தொடர்பு பற்றிய ஐன்ஸ்டீன் வாய்ப்பாடு இதை முற்றிலும் விளக்கிற்று. பொருள் ஆற்றலாக மாறும்போது பருமானத்தின் அளவைவிட எடைமானத்தின் அளவும் ஆற்றலளவும் பல கோடி மடங் காகக் பெருகுகின்றன. ஆகவே ஞாயிறு மண்டிலத்தி லிருந்து வெளிப்படும் ஒளியாற்றலின் அளவை நோக்க, அது இழக்கும் பருமானம் மிகச் சிறிதேயாகும். தவிர, இயற்கையின் நேர் வரை கோளாகாரமான அண்டவரையாதலால் வெளிச் செல்லும் ஒளியாற்றல் சென்று மீண்டும் வளைவதேயாகும். அறிவியலுலகின் மலைப்புக்குரிய ஒருபுதிர் இங்ஙனம் எளிதில் விடுவிக்கப்பட்டது.

## 256) ஐன்ஸ்டீனின் கனிந்த அருளுள்ளம்

பிரின்ஸ்டனில் ஐன்ஸ்டீன் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடந்தார். ஆராய்ச்சியிலீடுபட்ட மாணவர்கள்கூட அவர் வேலையில் தலையிடத் துணியவில்லை. அவரும் அதை

விரும்பவில்லை. அவர் புகழ் உலகெங்கும் பரந்திருந்தது. உலகின் அறிஞர்கள் பலர் அவரை அடிக்கடி நாடி வந்தனர். ஆனால் எவருக்கும் அவர் தொடர்பு அரிதாகவே இருந்தது. ஆனால் அரியார்க்கு அரியரான அவர், ஓர் ஏழை சிறுமிக்கு என்றும் எளியவராய் அமைந்தார். அவள் பத்து வயதுக் குழந்தை. பள்ளியில் படித்து வந்தாள். கணக்கென்றால் அவளுக்குக் கசப்பு. எட்டிக்காய் சாப்பிடுவது போன்ற உணர்வு. அது அவள் மூளையில் ஏறவில்லை. அவளுக்கு அது ஓயாத்தொல்லை தந்தது. பிரின்ஸ்டன் மாளிகையின் 112ஆவது எண்ணுள்ள கூடத்தில் உலகிலேயே கணித அறிவில் சிறந்த ஒருவர் இருப்பதாக அப்பெண் கேள்வி யுற்றிருந்தாள். ஆள் நுழைய அஞ்சும் இடத்தில் அணில் நுழைவது போல், ஐன்ஸ்டீனின் அறிவுக் கோயிலுக்குள் குழந்தை நுழைந்தது!

ஐன்ஸ்டீன் குழந்தையிடம் குழந்தையாகப் பழகினார். ஆராய்ச்சிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அச் சிறுமிக்குச் சொல்லிக் கொடுக்க அவளுடன் அன்பாகப் பேச அவருக்கு நேரமிருந்தது. அப்பெண் வகுப்பில் எளிதாகக் கணக்கில் தேர்ச்சி பெற்றாள். அது கண்டு ஆசிரியரும் மாணவரும் வியந்தனர். ''எப்படி இவ்வளவு எளிதில் எல்லாம் கற்றுக் கொண்டாய்?'' என்று கேட்டார்கள். ''உலக அறிஞர் ஐன்ஸ்டீன் அல்லவா எனக்குக் கற்றுக் கொடுக்கிறார்?'' என்று குழந்தை பெருமையாகப் பேசினாள்.

## 257) ஐன்ஸ்டீனின் எளிமையும், நீர்மையும்

இந்த அருஞ்செய்தி குழந்தையின் தாய்க்கு எட்டிற்று. அந்த அறிஞருக்குத் தன் குழந்தை எவ்வளவோ தொல்லை கொடுத்திருக்க வேண்டும் என்று தாய் கருதினாள். அவள், ஐன்ஸ்டீனிடம் மன்னிப்புக் கோரச் சென்றாள். குழந்தை



நுழைந்த இடத்தில் நுழைய அன்னை தயங்கினாள். ஆனால் குழந்தை இட்டுச் சென்றது. ''புகழ்மிக்க பெரியீர்! இந்தக் குழந்தை உங்களுக்குக் கொடுத்த தொல்லைக்கு நான் மன்னிப்பு கோரு கிறேன்'' என்றாள் தாய். **''மன்னிப்பா அம்மா! குழந்தை என்னிடமிருந்து கற்றுக் கொண்டதைவிட, அதனிடமிருந்து நானல்லவா அதிகஅளவில் கற்றுக் கொண்டேன்?'' என்றார் ஐன்ஸ்டீன்.**

''நீ எப்போது வேண்டுமானாலும் வா அம்மா!'' என்று தாய் முன்னிலையிலேயே குழந்தைக்கு அவர் புதிய அழைப்பும் விடுத்தார். பிரின்ஸ்டனை அடுத்த மக்களுக்கு ஐன்ஸ்டீன் அடிக்கடி பிள்ளைகளுடன் விளையாடும் ஓர் அன்புத் தெய்வமாகக் காட்சி அளித்தார். ஆனால் பிரின்ஸ்டன் கலைக்கூடத்துக்கு அவர் அறிவுத் தெய்வமாகவும், உலகத்துக்கு அறிவியற் புரட்சி வீரராகவும் விளங்கினார். ஐன்ஸ்டீன் அறிவால் உலகம் பயன்பெற்றது. அவர் அருள் திறத்தால், உலகவாழ்வு அழகு பெற்றுள்ளது என்னலாம்.

## 258) பிரசரட்டின் மகிமை

Daba Gardens பகுதியில் அமைந்திருந்தது Hotel Ooty எனப்படும் உணவு மற்றும் தங்கும் விடுதி. தமிழ் நாட்டுக் காரர்களுக்கு தகுந்த உணவு இங்கேதான் கிடைக்கும். ஆந்திரா உணவு என்பது காரம் மிகுந்தது. அவர்கள் உணவில் ஆவக்காய் ஊறுகாய், கோங்கூரா சட்னி, புளுசு போன்றவையே அதிக அளவில் இடம் பெற்றிருக்கும். இந்தப் புளுசு என்பது ஒரு'கூட்டு'வகை. தமிழகப் பகுதியில் தயாரிக்கப்படும் 'பொறித்த குழம்பு வகையைச்' சேர்ந்தது. அவர்களுக்கு மோர்க்குழம்பு, வற்றல் குழம்பு போன்ற வைகளைத் தயாரிக்கத் தெரியாது. புளுசுதான், சாம்பார் ஸ்தானத்தில் முதல் உணவாக அன்னத்துடன் சேர்த்து

உட்கொள்ளப்படும். அந்தப் புளுசு கலந்த அன்னத்தை உட்கொள்வதற்கு கறி வகைகள் கிடையாது. புளுசு அல்லது ஆவக்காய் ஊறுகாய்தான் தொட்டுக் கொள்வதற்கு இலையில் பரிமாறப்படும். சாற்றமுது எனப்படும் ரச வகைகள் கிடையாது. சில நேரங்களில் நாம் உணவோடு உட்கொள்ளும் சாம்பார் வகைகளுக்குப் பதிலாக ஆவக்காய் ஊறுகாய்தான் பிரதான உணவு வகையாகப் பரிமாறப்படும்.

செவ்வாய்க்கிழமைகளில் Hotel Ootyக்கு விடுமுறை தினம். அன்றையதினம் அதே பகுதியில் அமைந்துள்ள Chadagas உணவு விடுதியில்தான் காலை உணவை உட்கொள்ளவேண்டும். இந்த உணவு விடுதி ஆந்திராவைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டு வந்தது. இந்த உணவு விடுதியில் பிரசித்தமான 'பிரசரட்டு' எனப்படும் ஆந்திரா உணவு வகை காலை உணவு வகைகளில் ஒன்றாகப் பரிமாறப்படும். இந்த பிரசரட்டு என்பது பயத்தம்பருப்பைக் கொண்டு தயாரிக்கப்படும் ஓர் தோசை வகை. தோல் நீக்காத பயத்தம்பருப்பை ஊற வைத்து, சிறிதளவு அரிசியுடன் அரைத்துக் கொள்ளவேண்டும். பிறகு அதில் சிறிது தேங்காய்த் துருவல், தேவையான பச்சைமிளகாய் மற்றும் இஞ்சியை நறுக்கிச் சேர்க்க வேண்டும். தேவையான உப்புடன் சிறிது சீரகத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து தோசைக்கல்லில் தோசை போலே வார்த்துக் கொள்ளவேண்டும். ஆந்திரா வெங்கும் மிகப் பிரசித்தமான உணவு வகையிது.

## 259) ஆவக்காய் ஊறுகாய் தயாரிப்பது எப்படி?

ஆந்திராக்காரர்கள் விரும்பி உண்பது கோங்கூரா சட்னி. இந்த கோங்கூராவை நாம் புளிச்சகீரையென்று அழைப்போம். அதிக அளவில் இரும்புச்சத்து கொண்டது



இந்தக்கீரை. சில ஊர்களில் தயாரிக்கப்படும் உணவு வகைகளை நாம் என்ன முயன்றாலும் மற்றைய இடங்களில் தயாரிக்கும்போது அதற்குரிய ருசியை அந்தப் பதார்த்தங்கள் வெளிப்படுத்துவதில்லை. உதாரணத்திற்கு திருநெல் வேலி அல்வா. திருநெல்வேலியில்தான் அல்வா ருசிக்க வேண்டுமா? இதற்கு அவர்கள் கூறும் காரணம் தாமிரபரணி தண்ணீர் எடுத்து அதில் அல்வாவைத் தயாரிப்பதால்தான் அந்த ருசியை அது பெறுகிறது என்கிறார்கள். ஆனால் திருநெல்வேலியில் தாமிரபரணி நீர் மாசடைந்த நீராகும். வடமாநிலங்களில் தயாரிக்கப்படும் சப்பாத்தி, சுக்காரொட்டி போல தென் பகுதிகளில் அந்த ருசி கொண்ட உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படுவதில்லை. அந்தப் பகுதிகளில் விளையும் கோதுமையின் தரமும், கைப்பக்குவமுமே இதற்குரிய காரணங்களாகும்.

லட்டு என்றால் திருப்பதி என்கிறோம். முறுக்கு என்றால் மணப்பாறை முறுக்கு என்கிறோம். மாத்தூர் வடை, மேல்கோட்டை திருப்பணியாரங்கள் என்று ஒவ்வொரு ஊருக் கென்று சில உணவுப் பண்டங்களைக் குறிப்பிடுகிறோம்.

ஆவக்காய் என்றால் ஆந்திரா ஆவக்காய் ஊறுகாய் தான் சிறப்புடையது. இதற்குக் காரணம் அங்கு விளையும் புளிப்பு மிகுந்த ஊறுகாய்க்கு என்றே பயிரிட்டு வளர்க்கப் படும் மாமரங்களில் இருந்து பறித்த மாங்காய்களை உபயோகப்படுத்துவது, அந்த ஊறுகாய்க்கேற்ற காரம் கொண்ட மிளகாய்த் தூளைப் பயன்படுத்துவது. ***(ஆந்திராவில் குண்டூர்ப்பகுதிகளில் விளையும் மிளகாய்களே தரம் வாய்ந்த வைகளாகும்.)*** எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் கைப்பழக்கம்.

**தயாரிக்கும் முறை:** தரமுள்ள மாங்காய்களை

விதையுடன் 4 அல்லது 8 பகுதிகளாக வெட்டிக் கொள்ள வேண்டும். பிறகு விதைத்துண்டுகளை நீக்கிவிடவேண்டும். வெட்டிய உடனே ஊறுகாய் தயாரிக்கப்படவேண்டும். ஊறுகாய் தயாரிப்பதற்கு தேவையான அளவு மிளகாய்ப் பொடி, கடுகுப்பொடி, உப்பு, மஞ்சள் தூள், பச்சை வெந்தயப் பொடி, கொண்டைக்கடலை, நல்லெ ண்ணெய், பெருங் காயம் அல்லது பூண்டு ***(ஆந்திராவில் அனைத்து சாதியினரும் பிராமணர்கள் உள்பட வெள்ளைப்பூண்டை விரும்பி உண்பர். அவர்கள் பெருங்காயத்தைச் சேர்த்துக் கொள்வதில்லை.)*** இவற்றை ஒன்றாக மாங்காயுடன் கிளறி ஒரு ஜாடியில் மூடியிட்டு காற்றுப்புகா வண்ணம் அதன் வாயை மூடிவைக்க வேண்டும். இவ்வாறு ஊறுகாய் தயாரிக்கப்படும்போது நீர்த்துளிகளோ அல்லது Moisture எனப்படும் ஈரமோ எந்தப்பதார்த்தங்களிலும் இருக்கக்கூடாது. அவ்வாறு கண்ணுக்குத் தெரியாத Moisture இருக்கக்கூடுமானால் தயாரித்த ஒரு மாதத்திலேயே அந்த ஊறுகாய் கெட்டுப் போய்விடும். ஆந்திராவில் பெரும்பாலான வீடுகளில் இந்த ஆவக்காய் ஊறுகாயை ஒரு ஆண்டிற்கு மேல் பாதுகாத்து உணவுடன் உட்கொள்வர்.

## 260) 'அமர்சில்பி ஜக்கன்னா' திரைப்படமும், பேலூர் சென்னகேசவப்பெருமாள் திருக் கோயிலும்

பெரும்பாலும் திரைப்படங்கள் சமயத்தலைவர்களை மைய மாக வைத்துத் தயாரிக்கப்படுவதில்லை. Commercial Formula என்று ஒப்புக்கொள்ளப்பட்ட 5 சண்டைக் காட்சிகள், 2 கனவுக்காட்சிகள், (அவற்றில் கதாநாயகி 10 செகன்டிற்கு ஒருமுறை புதிய உடை மாற்றிக் கொண்டு மரத்தைச் சுற்றிச்சுற்றி வந்து காதல் பாட்டு பாட வேண்டும்.) ஒரு மொட்டைத்தலை Big Boss, அவனுக்கு நண்பர்கள், 



உள்துறை அமைச்சர், ஒரு நீதிபதி, டி.ஐ.ஜி. ஆப் போலீஸ் ஆகியோர் இருப்பர். கதாயநாயகன் ஒரே நேரத்தில் கையில் எந்த ஆயுதமும் இல்லாமல் 50 பேர்களை உயிர் மாளச் செய்வான். பெரும்பாலான படங்கள் இவ்வாறே தயாரிக்கப் பட்டு வந்த காலத்தில் 1965ஆம் ஆண்டு வெளிவந்த ''அமர் சில்பி ஜக்கன்னா'' என்னும் திரைப்படம் ராமாநுஜருடைய வாழ்க்கை வரலாற்றையும், கர்னாடக மாநிலத்தில் அமைந்து உள்ள பேலூர் சென்ன கேசவப்பெருமாள் திருக் கோயில் நிர்மாணத்தின்போது நடந்ததோர் நிகழ்ச்சியை உள்ளடக்கிய தாக விளங்கியது. இந்தப்படம் கன்னடத்திலும் தெலுங்கிலும் தயாரிக்கப் பட்டு மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றது.

பெரும்பாலும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் விருப்பம்போல் திரைக்கதையை மாற்றிக் கொள்வார்கள். படத் தயாரிப்பாளருக்கு ஏற்ப மூலக்கதையும் வளைந்து கொடுக்கும். ஆனால் அமர்சில்பி ஜக்கன்னா படத்தில் அது போன்ற மாற்றங்களை அதன் தயாரிப்பாளர் செய்யவில்லை.

**கதைச்சுருக்கம்:** ஜக்கன்னாச்சாரி என்னும் சிற்பி கர்னாடக மாநிலத்தில் தும்கூர் நகரிலிருந்து 9கி.மீட்டர் தொலைவிலுள்ள ''கைடாலா'' என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவன். ஹொய்சாள மன்னனாகிய விஷ்ணுவர்த்தனனின் சிற்றரசர்களில் ஒருவரான நிருபகாயா என்பான் அந்தப் பகுதியை ஆண்டு வந்தான். நாட்டிய மங்கையாகிய ஜக்கன்னாச்சாரியின் மனைவியின்மேல் ஆசை கொண்ட அந்தக்குறுநில மன்னன் வேண்டுமென்றே அவள்மீது நடத்தை கெட்டவள் என்ற ஒரு பழியைச் சுமத்துகிறான். இதனால் தன் மனைவியின்மீது கோபம் கொண்ட ஜக்கன்னாச்சாரி அந்த ஊரையும் தன் குடும்பத்தையும்விட்டு நாடெங்கும் திரிந்து கொண்டிருக்கிறான். இவன் குடும்பத்தை

விட்டுப் பிரிந்தபோது அவன் மனைவி கருவுற்றிருந்தாள். உரிய காலத்தில் அவள் ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள். அவனுக்கு டங்கன்னாச்சாரி என்ற பெயர் இடப்பட்டு, அவனுடைய பாட்டனாரால் மிகச் சிறந்த சிற்பியாக உருவாக்கப்பட்டான்.

ஊரை விட்டு நீங்கிய ஜக்கன்னாச்சாரியை மக்கள் பைத்தியம் என்று கருதி கல்லால் அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தபோது அந்த வழியாகச் சென்ற இராமாநுசர் தம்முடைய எல்லையற்ற கருணையால் அந்தச் சிற்பியைக் காப்பாற்றித் தம்முடன் இருக்கச் செய்கிறார். தொண்டனூரில் விஷ்ணுவர்த்தனனின் மகளுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கி ஹொய்சாள மன்னனான பிட்டி தேவனையும் ஸ்ரீவைஷ்ண வனாக்கி, தொண்டனூரில் எழுந்தருளியிருந்த காலத்தில் விஷ்ணு வர்த்தனனின் மனைவியான சாந்தளா தேவியின் விருப்பப்படி பேலூரில் சென்னகேசவப் பெருமாள் திருக் கோயிலை நிர்மாணிப்பதற்கு சிற்பியான ஜக்கன்னாச் சாரியரை நியமித்தருளுகிறார் இராமாநுசர்.

தன் தந்தையைக் கண்டுபிடிப்பதற்காக ஊரைவிட்டு அகன்ற டங்கன்னாச்சாரியைத் தேடி ஜக்கன்னாச்சாரியின் மனைவி பேலூரைச் சென்றடைகிறாள். அங்கே தன் கணவனை அடையாளம் காண்கிறாள். ஆயினும் தான் யார் என்பதை அவள் யாரிடமும் தெரிவிக்க வில்லை. கோயிலை நிர்மாணிக்கும் பணியில் முழுவதுமாகத் தன்னை அர்ப் பணித்துக் கொண்ட ஜக்கன்னாச்சாரிக்கு மறைமுகமான பணிவிடைகளைச் செய்கிறாள் அவன் மனைவி. திருக் கோயில் திருப்பணிகள் அனைத்தும் முடிந்து ப்ரதிஷ்டை தினத்தன்று அங்கே வந்து சேருகிறான் ஜக்கன்னாசாரியின் மகனான டங்கனாச்சாரி. அங்கே வந்த அவன் ஜக்கன்னா



சாரியால் உருவாக்கப்பட்ட மூல விக்ரஹத்தில் தோஷம் இருப்பதாகக் கூறுகிறான்.

அப்போது ஜக்கன் னாச்சாரி அதை மறுத்து அவ்வாறு அந்தச் சிலையில் தோஷமிருந்தால் அது நிரூபிக்கப்பட்டால் தன் கையை வெட்டிக் கொள்வதாக சபதம் செய்கிறான். சிற்பக்கலையில் தன் தந்தையைவிட நிபுணனான டங்கனாச்சாரி மூலவிக்ரஹத்தின் இடதுதோள்பட்டையின்கீழ் ஓர் உளியால் தட்டுகிறான். அதிலிருந்து ஒரு தேரைக் குதித்தோடுகிறது. அனை வரும் வியப்பும் துன்பமும் அடைகின்றனர். தான் செய்த சபதப்படி ஜக்கன்னாசாரியார் தன் கையைத் தானே வெட்டிக் கொள்கிறான். உடனே தன்னை யார் என்று அவன் மனைவி வெளிப்படுத்திக் கொள்கிறாள். உடையவருடைய பிரார்த்தனைக்கிணங்க, சென்னகேசவரின் அருளால் ஜக்கன்னாசாரியருக்கு கை துளிர் விடுகிறது. தந்தையும் மகனும் இணைந்து பேலூர் திருக் கோயிலில் மூல விக்ரஹத்தை நிர்மாணிக்கிறார்கள். அனைவரும் இராமானுசரை வீழ்ந்து வணங்குகின்றனர்.

ஆந்திரத்திரையுலகில் வில்லனாகவே மட்டும் நடித்து புகழ் பெற்று விளங்கிய ராஜநளா இந்தப் படத்தில் ராமானு ஜராக வேடம் பூண்டிருந்தார். சாந்தம் தவழும் முகத்துடன் மெல்லிய குரலில் அருட்பார்வையைக் கொண்ட மஹானாக இந்தப்படத்தில் அவர் காணப்பட்டார். எப்படி N.T.Rama raoவுக்கு ராமர் அல்லது கிருஷ்ணர் வேடம் பொருந்துமோ அவ்வாறு ராஜநளாவிற்கு இராமானுசர் வேடம் பொருந்தி யிருந்தது.

ஜக்கன்னாச்சாரியரின் பெயரில் ஆண்டுதோறும் கர்நாடக மாநிலத்தில் சிற்பிகளுக்குரிய விருது வழங்கப் படுகிறது. ஜக்கன்னாச்சார்யர் பிறந்த ஊரில் அவரால்

கட்டப்பட்ட சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயில் அரசுசாரா நிறுவனங்களின் நிதியுதவி கொண்டு நல்ல நிலைமையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 261)பேலூர் சென்ன கேசவப்பெருமாள் கோயிலின் சிறப்புகள்

கர்நாடக மாநிலத்தில் ஹாஸன் மாவட்டத்தில் அமைந்துள்ளது பேலூர். ஹளபேடு என்று தற்போது அழைக்கப்பட்டு வரும் பண்டைய துவார சமுத்ரமே ஹொய் சாள மன்னர்களின் தலைநகரமாக 150 ஆண்டுகள் விளங்கி வந்தது. ஹளபேடில் புகழ்பெற்ற ஹொய்சாளேச்வரர் சிவன் கோயில் உள்ளது. ஆனால் பல்வேறு படையெடுப்புகளின் காரணமாக இந்தக் கோயிலில் வழிபாடுகள் தற்போது நடை பெறவில்லை. ஹொய்சாளர்களின் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது இந்தக் கோயில்.

(தமிழ் நாட்டி லுள்ள அனைவரும் இந்தக் கோயிலைத் திரைப்படங்களில் கண்டு களித்திருக்கலாம். பல திரைப் படங்களில் இடம் பெற்ற பாடல்கள் இந்த ஹொய்சாளேச்வரர் கோயிலில் படமாக்கப்பட்டுள்ளன.) ஹளபேடிலிருந்து 17 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பேலூர் சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயில்.

**“விஞ்சுபுகழ் ஆண்டானை வே(ப)லூர் செலவிடுத்தருளிப்**
**பஞ்சநாரணனை ப்ரதிட்டை பண்ணி நாரணப்பதியில்**
**அஞ்சலென்று தன்னடிமையாகும் ஐம்பத்திருவர்தமைக்**
**கஞ்சமலராள் நாயகனைக் காத்திருமென்றே கழறா”**

என்று ராமாநுஜார்ய திவ்யசரிதையில் பிள்ளைலோகம்ஜீயர் குறிப்பிட்டுள்ளார். (இதன் பொருளாவது முதலியாண்டானும் வேலூர் (பேலூர்) எழுந்தருளி அங்கிருந்த அனைவரையும்



உடையவருக்கு உரியோராக்கித் திருத்தியருளினார். முன்னர் எம்பெருமானார் தாம் திருநாராயணபுரத்தைப் புதுப்பித்ததும் அதையடுத்து விஷ்ணு வர்த்தனன் என்கிற ப்ரபுவைக் கொண்டு ஒரே முஹூர்த்தத்தில் தழைக்காட்டில் (தலக் காடு) கீர்த்திநாராயணன் என்கிற வாழ்புகழ் நாரணன், தொண்டனூரில் லக்ஷ்மீகாந்தன் என்கிற ஸ்ரீமந்நாராயணன், கதுகலத்தில் (தற்போதைய கடக் ‘Gadag’) வீர நாராயணன், விஜயாபுரத்தில் விஜய நாராயணன், வே(ப)லூரில் கேசவனுக்கு அடுத்துள்ளதான நாராயண நாமத்தால் கேசவ நாராயணன் என்கிற பஞ்ச நாராயணப் ப்ரதிஷ்டையை செய்தருளினார்.) இதனால் பேலூரில் அமைந்து உள்ள சென்னகேசவப் பெருமாள் கோயிலுக்கு கேசவ நாராயணன் என்ற திருநாமம் சாற்றப்பட்டமை இந்தக் குறிப்பு மூலம் அறியப்படுகிறது. பேலூரில் காணப்படும் 170 கல்வெட்டு களும், செப்பேடுகளும் கர்னாடக மாநில தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் Epigraphia Carnatica Volume IX இல் பதிவு செய்யப் பட்டுள்ளன.

உத்ஸவ விக்ரஹ பீடத்தின்கீழ் விஜயநாராயணன் என்று பொறிக்கப்பட்டுள்ளதை ஒரு கல்வெட்டு தெரிவிக் கிறது.**(XV B1 254)** இந்தத் திருக்கோயிலில் பல சிற்பிகளின் பெயர்கள் ஆங்காங்கே மண்டபங்களிலும் தூண்களிலும் பொறிக்கப் பட்டுள்ளன. உதாரணத்திற்கு கல்வெட்டு எண் 6இல் **(At the base of the Madanikai figure of the south-Western pillar of the ranga-mantapa.) "Be it well. (This is) the work of Chavana (eulo gised as) Nritya-Sarasvati-ganadasi, a bherunda to the Sarabha the envious rival sculptors, son of Dasoja and a bee at the lotus feet of the God Dharmesvara illustrious Balligrame"**

பேலூரில் அமைந்துள்ள கல்வெட்டுகள் மூலம் ஹொய்சாளர்களின் மூதாதையர்களைப் பற்றிய விளக்கங் களைப் பெறமுடிகிறது. வசந்த மண்டபத்தில் காணப்படும் ஒரு கல்வெட்டில் (XV B1 274) **This is sculptured by Gumma Birana** என்ற சொற்றொடர்கள் காணப்படுகிறது. ***(பேலூரில் காணப்படும் கல்வெட்டுகளில் ஜக்கன்னாச்சாரியின் பெயர் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.)***

இந்தத் திருக்கோயிலில் சௌம்யநாயகி, ஆண்டாள், மற்றைய ஆழ்வார்கள், இராமாநுசர், ஸ்ரீவேதாந்ததேசிகன், ஸ்ரீமணவாளமாமுனிகள், ஸ்ரீரங்கநாதர், Kappe Chenniga ஆகியோருக்கான தனி ஸந்நிதிகள் அமைந்துள்ளன. சிற்பங்கள் பல நிறைந்த மண்டபங் களும், தூண்களும் இத் திருக்கோயில் எங்கும் காணப்படுகின்றன. இங்குள்ள நரசிம்மர் சிற்பம் அமைந்துள்ள தூணை ஒருவர் சுழற்றலாம். ஒரு நாட்டிய மங்கையின் பல்வேறு அங்க அசைவுகளைச் சிற்பங்களாக வடித்துள்ளனர். விஷ்ணு வர்த்தனன் மற்றும் மனைவியாகிய சாந்தளாதேவி ஆகியோரின் சிலைகள் கூப்பிய கரங்களோடு இந்தத் திருக்கோயிலில் காணப்படு கின்றன. இந்தத் திருக்கோயில் கி.பி. 1117ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. **(நான் 1975ஆம் ஆண்டு இந்தத் திருக்கோயிலுக்குச் சென்று வந்தேன்.)**

## 262) மிதிலா விரைவு வண்டியில் Barauniக்குப் பயணம்

இந்தியன் ஆயில் நிறுவனத்திற்குச் சொந்தமான Barauni Oil Refinery 1964ஆம் ஆண்டு 49.40 கோடி ரூபாய் செலவில் ரஷ்ய மற்றும் ருமேனியா நாட்டு தொழில் நுட்ப உதவியோடு நிர்மாணிக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டு



டிசம்பர் மாதம் Barauniஇல் உள்ள எண்ணெய்சுத்திகரிப்புச் சாலையில் அமைந்துள்ள பரிசோதனைக் கூடத்தில் பயிற்சி பெறுவதற்காக நிர்வாகம் என்னை அனுப்பி வைத்தது. அந்த ஆண்டில் மேலைக்கடற்கரைப் பகுதியில் பம்பாய் நகரில் E.S.S.O. மற்றும் பர்மா ஷெல் ஆகிய எண்ணெய் நிறுவனங் களுக்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை களும், கீழைக் கடற்கரைப் பகுதியில் Caltex என்ற எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையும் இயங்கி வந்தன. இந்தியன் ஆயில் நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை அஸ்ஸாமில் Noonmathi பகுதியில் அங்கே கிடைக்கும் கச்சா எண்ணெயை சுத்திகரித்து வந்தது. ஆகவே தரக்கட்டுப்பாட்டில் பயிற்சியைப் பெற்று பரிசோதனைக் கூடம் ஒன்றை உரிய முறையில் விசாகப் பட்டினத்தில் அமைப்பதற்காக தெற்கு பிராந்தியத்தின் சார்பில் நிர்வாகம் என்னை Barauni எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையில் பயிற்சி பெற அனுப்பி வைத்தது.

பீஹார் மாநிலத்தில் பாட்னாவிலிருந்து சுமார் 80 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது Barauni எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை. Barauniயிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் கங்கை நதி அகண்ட கங்கையாய் காணப் படும். விசாகப்பட்டினத்திலிருந்து கல்கத்தாவிற்குச் சென்றேன். அங்கு நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்து கல்கத்தா நகரைச் சுற்றிப்பார்த்தேன். கல்கத்தா Zoo, காளி கோயில், ராமகிருஷ்ணா மடம், ஹூக்ளி ஆற்றின்மீது கட்டப் பட்டுள்ள தொங்கு பாலம் ஆகிய இடங்களுக்கு Tramஇல் சென்று வந்தேன். சென்னையில் ஒரு காலத்தில் Tram ஓடிக் கொண்டிருந்த போதிலும் என்னால் அதில் ஏறி சவாரி செய்ய

முடியவில்லை. அந்தக் குறை தீர கல்கத்தாவில் Tramஇல் அனைத்து இடங்களுக்கும் சென்று வந்தேன். அதன்பிறகு கல்கத்தா நகரிலிருந்து பீஹார் மாநிலத்திற்குச் செல்லும் மிதிலா விரைவு வண்டியில் அடுத்தநாள் காலை 10 மணிக்குச் Barauniஐ சென்றடைந்தேன். அங்கிருந்து Barauniக்கு எனக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் பேசி ஏதோவொரு பேருந்தைப் பிடித்து Barauni Refiniry townshipஐ சென்ற டைந்தேன். அங்கு Refineryக்குச் சொந்தமான விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தேன்.

## 263) Refinery Co-ordinator Sri. K.U.K. Menon

மறுநாள் Barauni Refiniryஇல் அமைந்துள்ள Refinery Co-ordinator அலுவலகத்திற்குச் சென்று மேலதிகாரியான திரு. K.U.K.Menan என்பவரைச் சந்தித்தேன். அன்றைய தினம் மேற்கு பிராந்தியம், கிழக்குபிராந்தியம் ஆகிய பகுதி களிலிருந்தும் பரிசோதனைக் கூடத்தில் பயிற்சி பெறு வதற்காக வந்த மற்றையோரையும் கண்டேன்.

***(ஆரம்ப காலகட்டத்தில் கௌஹாத்தியில் கிடைக்கும் Low Sulphur Crudeஐ சுத்திகரிப்பு செய்வதற்கான கட்டமைப்பு வசதிகள் அமைக்கப் பட்டிருந்தன. அஸ்ஸாமில் கிடைக்கும் கச்சா எண்ணைக்குகு ஆங்கிலத்தில் Sweet Crude என்ற பெயர் வழங்கி வந்தது. அஸ்ஸாமில் எண்ணெய் சுத்திகரிப்பு சாலைகள் நிறுவப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டபோது அஸ்ஸாமிலிருந்து*** தொலைதூரக் குழாய்கள் மூலம் Barauniக்கு வந்துகொண்டிருந்த Sweet Crude வருவது நின்று போயிற்று. தற்போது ஆப்ரிக்கா, நைஜீரியா, ஈராக், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்படும் Sweet Crude ஒரிஸ்ஸா மாநிலத்தில் அமைந்துள்ள பாரதீப் துறைமுகத்திலிருந்து



மேற்கு வங்காள மாநிலத்திலுள்ள துறைமுகப் பட்டினமான ஹால்டியா வழியாகக் குழாய்கள் மூலம் Barauniக்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. ஆனால் உலகச் சந்தையில் Sweet Crudeஇன் விலை அதிகம் என்பதால் அதிக அளவு கந்தகம் கொண்ட கச்சா எண்ணெய்யை சுத்திகரிப்பதற்காக Barauni சுத்திகரிப்புச் சாலையில் உள்கட்டமைப்பு வசதிகள் மாற்றம் பெற்று வருகின்றன. இவற்றைத் தவிர கச்சா எண்ணெ யிலிருந்து எடுக்கப்படும் பல்வேறு ரசாயனப் பொருள் களைப் பெறுவதற்காக வடமாநிலத்தின் பல்வேறு பகுதி களில் அமைந்துள்ள ரசாயன சுத்திகரிப்புச் சாலைகளுக்கு Barauniலிருந்து மூலப்பொருள் அனுப்பி வைக்கப் படுகிறது.)

***(K.U.K.Menonஐப் பற்றிய சில குறிப்புகள். இவருடைய மகன் சுரேஷ்மேனன், ரேவதி என்னும் நடிகையை மணந்து கொண்டவர். சில ஆண்டுகள் கழித்து அவர்களிடையே மணமுறிவு ஏற்பட்டது. அதைவிடக் கொடுமை திரு. மேனன் பணியில் இருந்து ஓய்வு பெற்ற நாளன்றே மரணமடைந்தார். பழகுவதற்கு இனிமையானவர். இவரை அவருடைய நண்பர்கள் Kuku என்று அழைப்பர்.)*** பயிற்சியின்போது பெட்ரோலியப் பொருள்களை எவ்வாறு பரிசோதிப்பது என்பதை செய்முறைப் பயிற்சி யாகப் பலநாட்கள் மேற்கொண்டேன். ஒரு பரிசோதனைக் கூடத்தை நிறுவுவதற்கு எந்த வகையில் உள்கட்டமைப்புகள் அமைக்கப்படவேண்டும் என்பதைப் பற்றி விரிவான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டேன்.

## 264) This is Bihar!

பீஹார் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு என்பது காண இயலாத தொன்று. Refineryஇல் அமைந்திருந்த பல Oil

Storage Tankகளி லிருந்து குற்றால அருவி போல டீசலும், கெரசினும் பொங்கி வழிந்து கொண்டிருந்தன. நிரப்பப்பட்ட எண்ணெய் லாரிகள் வெளியே சென்றவுடன் வரிசையாக நின்று கொண்டிருந்தன. அவற்றிலிருந்து தாராளமாக எண்ணெய் நீக்கப்பெற்று மறுபடியும் சீல் வைக்கப்பட்டன. கட்டுப்பாடுகள் நிறைந்த விசாகப்பட்டினம் எண்ணெய்க் கிடங்கில் பணிபுரிந்து வரும் எனக்கு இந்தக்காட்சிகள் அச்சத்தை உண்டு பண்ணியது. இது குறித்து திரு. மேனனிடம் கேட்டேன். அதற்கு அவர், **"Look My Boy. This is Bihar. You shut your eyes and forget about it. You and I cannot stop these activities. You get yourself trained properly and go to Visakhapattinam safely"** என்ற அறிவுரையை வழங்கினார்.

## 265) Garhara Terminal- A Trans shipment Terminal.

Barauniலிருந்து 12 கி.மீட்டர் தொலைவில் அமைந் திருந்தது Garhara எண்ணெய்க்கிடங்கு. இங்கு கௌஹாத்தி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து மீட்டர்கேஜ் வேகன்களில் வந்து சேரும் பல்வேறு தரப்பட்ட எண்ணெயை பிராட்கேஜ் வேகன் களில் Transhipment செய்யப்படும். இந்த இடத்திற்கு ஜீப்பில் அல்லது எண்ணெய் நிரப்பிக் கொள்ளச் செல்லும் லாரிகளில்தான் செல்ல முடியும். நானும் மற்றைய பிராந்திய நண்பர்களும் அந்த இடத்திற்கு ஜீப்பில் சென்றோம். பீஹார், உத்தரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் கங்கையின் அரவணைப்பால் வளம் மிக்க பூமியாகத் திகழ்கின்றது. எங்கு நோக்கிலும் எக்காலத்திலும் பசுமை தான் கண்ணுக்குத் தெரியும். Garhara செல்லும் வழியில் பல ஏக்கர் நிலங்களில் பட்டாணி சாகுபடி செய்யப்பட்டு



அறுவடை செய்யும் பக்குவத்தில் அனைத்துச் செடிகளும் காணப்பட்டன. ஒரு பட்டாணிக் காயிலிருந்து திடமான 6 பட்டாணிகளைப் பார்க்க முடிந்தது. மற்றைய காய்கறிகளும் பல வயல்களில் பயிரிடப்பட்டிருந்தன. It was Green! Green!! Green!!! everywhere.

## 266) பீஹார் மாநில சமையற்காரர்கள்

பீஹார் மாநிலம் சமையற்காரர்களுக்குப் பெயர் பெற்றது. ஆனால் அந்த சமையற்காரர்கள் பல நாள் குளிக்க மாட்டார்கள். அவர்கள் உடுத்தியிருக்கும் ஆடைகளைப் பார்த்தாலே வயிற்றைக் குமட்டும். பொதுவாக பெரியபெரிய ஹோட்டல்களில் பண்டங்கள் ருசியுடையவாய் இருந்த போதிலும் அவை தயாரிக்கப்படும் இடத்தைக் காண நேர்ந்தால் அவற்றை உட்கொள்ள முடியாது. சுகாதாரம் என்பது காணாமற்போன பலவற்றில் ஒன்றாகும். Barauni இல் எங்கு பார்த்தாலும் இனிப்புப் பண்டங்களை விற்கும் கடைகளே காணப்படும். ‘சாவல்’ எனப்படும் அரிசிச் சோற்றைக் காண இயலவில்லை. அப்போது திருவானைக்கா ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் என்னோடு படித்துவந்த கிருஷ்ணசாமி ரெட்டியார் என்பவரை சந்திக்க நேரிட்டது. அவரும் சில நண்பர்களும் ஒரு வீட்டில் தங்கியிருந்து தாங்களே சமைத்த உணவை உட்கொண்டு வந்தனர். ஆனால் அங்கு ஒருசில நாட்களே என்னால் தங்க முடிந்தது.

அதன்பிறகு இரவு நடுங்கும் குளிரில் 2 கி.மீட்டர் தூரம் நடந்து சென்றால், சாலை ஓரத்தில் அமைந்திருந்த ஒரு ராஜஸ்தானி தாபாவில் சுத்தமான வெள்ளை நிறம் கொண்ட அன்னத்தின் மேல் பாறாங் கல்லைவிட கடினமான தயிர்க் கட்டியை விட்டு சிறிது உப்பைக் கொடுப்பான். அந்த

தயிருடன் கலந்த அன்னத்தை உண்பதற்கு 4 பச்சை மிளகாய், ஒரு எலுமிச்சம்பழ மூடி, சிறிது உப்பு கொடுக்கப் படும். இந்தப் பச்சைமிளகாயைக் கையால் நெறித்து, அதை ஊறுகாயாக மாற்றிக் கொண்டு அந்தத் தயிர் சாதத்தை உட்கொள்ளவேண்டும். இதுதான் அந்த ராஜஸ்தான் தாபாவின் சூப்பர் ஸ்பெஷல் சாப்பாடு. டிசம்பர் மாதத்தில் பொதுவாக பீஹார் மாநிலத்தில் இரவு வெப்பம் 4 டிகிரி சென்டிகிரேட்டைத் தொடும். என்னிடம் போதிய கம்பளி ஆடைகள் அப்போது இல்லை. சில நண்பர்கள் கம்பளி ஆடைகளைக் கொடுத்து உதவினர்.

## 267) Mrs & Mr. Ratnam ஆகியோரின் தேவை யறிந்து செய்த உதவி

ஒரு ஞாயிற்றுக்கிழமை தெருவில் போய்க் கொண் டிருந்த போது ஒரு வீட்டிலிருந்து தமிழில் பேசும் ஒலி கேட்டது. தயங்கித் தயங்கி அந்த வீட்டிற்குள் நுழைந்தேன். ‘நீங்கள் யார்’ என்று என்னிடம் வினவினார் அந்த வீட்டின் உரிமையாளர். அப்போது அவரிடம் ‘‘நான் விசாகப்பட்டினத் திலிருந்து பரிசோதனைக் கூடத்தில் பயிற்சி பெறு வதற்காக வந்துள்ளேன். என் பெயர் கிருஷ்ணமாசாரி என்று கூறி 30 நாட்கள் பயிற்சி பெறவேண்டும் ஆனால் இந்த ஊரில் எனக்குத் தகுந்த உணவு கிடைக்கவில்லை. வந்த 5ஆம் நாளே என் எடை 2 கிலோ குறைந்துவிட்டது. எப்படி மீதியுள்ள நாளைக் கழிப்பேன் என்பதுதான் தெரியவில்லை’’ என்று அழாத குறையாக அவரிடம் சொன்னேன். அவருடைய பதிலில் இருந்து அவர் பெயர் ரத்னம் என்பதும், அவர் திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்மார்த்த ப்ராம்மணர் என்றும், அவர் மனைவி பெயர் லக்ஷ்மி என்பதை அறிந்து கொண்டேன். என் கதையைக் கேட்ட லக்ஷ்மிமாமி



‘‘உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் எங்காத்திலேயே நீங்கள் ஊர் செல்லும்வரை மூன்றுவேளை உணவு உட்கொள்ளலாம்’’ என்று கூறினாள். அன்ன லக்ஷ்மியே உருவெடுத்து வந்து அபயம் அளித்தது போல் எனக்குத் தோன்றியது.

***(முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றதொரு பழமொழி உண்டு. நாம் நல்ல செயல்களைச் செய்தால் நமக்கோ அல்லது நம் சந்ததியினருக்கோ யாராவது ஏதோவொரு இடத்தில் ஏதோவொரு நன்மையைச் செய்வார்கள். கிராமங்களில் நாங்கள் வசித்து வந்தபோது முகந்தெரியாத ஒருவரை என் தந்தையார் பகல் ஒரு மணிக்கு எங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவார். பாவம் இவர் வெளியூர்காரர். ஆசார சீலர். எங்கேயும் சாப்பிடமாட்டார். இவருக்கு உணவு பரிமாற வேண்டும் என்று என் தாயாரிடம் கூறுவார். அன்றைக்கு தேவையான அளவு அன்னம் மற்றும் உணவுப் பொருள்கள் இருக்கின்றனவா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப் படாது அவருக்கு உணவளிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்திடுவார். அதே போல் ஒரு நாள் முழுவதும் பலமுறை ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் செய்து வருவார் என்று முன்னமேயே கூறி உள்ளேன். அவருடைய விருந்தோம்பலும், பாராயணமுமே என்னைப் பெரிய தொரு சங்கடத்திலிருந்து காப்பாற்றியது என்றே கூறலாம். அவர் அன்று யாரோ ஒருவருக்கு ஒருவேளை உணவு அளித்ததன் பலன் எனக்கு யாரோ ஒருவர் Barauniஇல் வாய்க்கு ருசியாக 25 நாள் உணவளித்து வந்தார். இவ்வாறான நிகழ்ச்சிகள் பலருக்குப் பல இடங்களில் நிகழ்ந்திருக்கக்கூடும்.)***

## 268) சொர்க்கமும், நரகமும் எங்கே உள்ளன?

1966ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் நாள் பயிற்சி முடிந்து விசாகப்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தேன்.

அண்டத்தில் எங்கேயோ சொர்க்கமும் நரகமும் இல்லை. 1965ஆம் ஆண்டு இறுதியில் Barauni நரகமாகத் தோன்றியது. 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு காலத்தில் நரகமாகத் தோன்றிய விசாகப்பட்டினம் சொர்க்க மாகக் காட்சியளித்தது. அமைதியான வாழ்க்கை. நல்ல உணவு. ஆங்கிலத் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு லீலா மஹால். ஊருக்குச் செல்ல வேண்டுமானால் ஹௌரா எக்ஸ் பிரஸ். இதுபோன்ற வசதிகளைக் கொண்ட விசாகப்பட்டினம் நகரமே சொர்க்கமாகக் காட்சியளித்தது.

## 269) கனவு கலைந்தது

விசாகப்பட்டினம் திரும்பியவுடன் பரிசோதனைக் கூடத்திற்கான அடித்தளம் போட்டு தூண்கள் எழுப்பப்பட்டிருந்த நிலையில் மேற்கொண்டு எந்த வேலையும் நடைபெறவில்லை. நான் என் பங்கிற்கு பரிசோதனைக்கூடம் எவ்வாறு அமைக்கப் படவேண்டும், அதில் என்னென்ன பரிசோதனைகளை மேற்கொள்ளலாம், என்னென்ன ரசாயனப் பொருள்களை வாங்க வேண்டும் என்பதை உள்ளடக்கிய Project Report ஒன்றை மிக விரிவான அளவில் தயாரித்து Installation Managerஇடம் ஸமர்ப்பித்தேன். அதற்கு அவர் இவை எல்லாம் தேவை யில்லை, "Management has decided to abandon this Project" என்று கூறிவிட்டு என்னுடைய Project reportஇன்மீது FILE என்று கொட்டை எழுத்தில் எழுதினார். பரிசோதனைக்கூட மேலாளராக மாற்றம் பெற விரும்பிய என் கனவும் கலைந்தது. வழக்கம்போல் கப்பலிலிருந்து பலவகைப்பட்ட எண்ணெய் களை இறக்குவது, கப்பல்களுக்கு Bunker Fuel நிரப்புவது, எண்ணெய் வேகன்களை நிரப்புவது, Caltex எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து குழாய் மூலம் oil Tankகளில் எண்ணெய் நிரப்புவது போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தேன்.



## 270) Excise Inspector Sri. Krishnamoorthi.

ஒரு எண்ணெய்க்கிடங்கில் ஒரே ரக எண்ணெயை இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் என்றும், (Customs Bonded) உள்ளூரில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் (Excise Bonded) என்றும் வகைப்படுத்தி வைக்கப்படும். ஒரு எண்ணெய் Tankஇல் Excise Productக்கும் Customs Productக்கும் வித்தியாசம் காண இயலாது. ஏனெனில் டீசல் என்றால் ஒரே மாதிரியாகத் தான் கண்ணுக்குத் தெரியும். அவற்றில் எது Excise Product என்றும், எது Customs Product என்றும் யாரும் பாகுபடுத்திப் பார்க்க இயலாது. அதனால் முதலில் வந்தது முதலிலே வெளிச் சென்றது என்ற கொள் கைப்படி (Firstin Firstout) வரிகள் செலுத்தப்படவேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு முன்கூட்டியே வரி செலுத்த வேண்டும். ஆனால் உள்ளூரில் சுத்திகரிக்கப் படும் பொருளுக்கு அவற்றை வெளியேற்றிய பிறகு வரி செலுத்த வேண்டும். அல்லது வரிவிலக்கிற்கு விண்ணப் பிக்கவேண்டும். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி செலுத்த வேண்டாம். ஆனால் அவ்வாறு வெளியேற்றிய எண்ணெய்க்கு வரிவிலக்குக்கோரி கலால்துறைக்கு 24 மணி நேரத்திற்குள் விண்ணப்பம் செய்யவேண்டும். மேலும் கலால் துறை அதிகாரி அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் போது கண்காணிக்க வேண்டும்.

விசாகப்பட்டினம் Oil Terminalஇல் திரு. கிருஷ்ண மூர்த்தி என்பார் Excise Inspector ஆகப் பணிபுரிந்து வந்தார். சொட்டைத்தலை, கண்ணாடி, தொளதொள சட்டை, வெள்ளைப் பேன்ட் இந்தக் கோலத்தில் காட்சியளிப்பார். இவருக்குக்கென்று தனி அறை உண்டு. காலை சுமார் 11 மணிக்கு வருவார். மாலை 4 மணிக்கு எல்லாம் சென்று

விடுவார். இவருடைய மேலதிகாரி Caltex Refinery இல் உள்ள Excise Superintendent ஆவார்.

இவர் தினந்தோறும் என்னை முதலில் பார்த்தவுடன் ''**ஏமண்டி சாரிகாரு. பாவுன்னாரா? ஏமி விசேஷாலு ஈரோஜு. நேனு மூடு கண்டலுக்கு எள்ளி போத்தானு? அன்னி பணிலு மீரே சூச்கோண்டீ. நேனு ரேப்போச்சி சந்தகம் பெட்தானு**''. (இதன் பொருளாவது- சாரி காரு. நீர் நலமாய் இருக்கிறீரா? இன்று விசேஷமான நிகழ்ச்சிகள் உண்டா? நான் 3 மணிக்கெல்லாம் வெளியே சென்று விடுவேன். ஏதேனும் கையெழுத்திடுவதற்கு காகிதங்கள் இருந்தால் நாளை வந்து கையெழுத்துப் போடுகிறேன்.) என்று கூறுவார். ஒருநாள் இவர் காலை 11மணிவரை வர வில்லை. அன்றையதினம் 'ஜலமணி' என்ற கப்பலுக்கு ஏற்றுமதிக்கு உரியதான வரி செலுத்தாத டீசல் நிரப்பப்பட வேண்டும். அது Excise Stock. வழக்கம்போல் நான் 40 கிலோ லிட்டர் Excise Bonded டீசலை நிரப்பிவிட்டு அடுத்த நாள் திரு. கிருஷ்ணமூர்த்தி வந்தவுடன் கையெழுத்திடுமாறு உரிய டாக்குமென்ட்களை அவரிடம் சேர்ப்பித்தேன். ''அவர் சாரிகாரு. இதில் நான் கையெழுத்திட இயலாது. ஏனெனில் நான் நேற்று விடு முறையில் இருந்தேன். ஆகவே நீங்கள் Caltex Refineryஇல் உள்ள என் உயர் அதிகாரியிட மிருந்துதான் கையெழுத்தைப் பெற வேண்டும்'' என்று கூறி விட்டார். இது ஒரு பெரிய சிக்கலை உண்டு பண்ணியது.

## 271) ஆயில் கம்பெனிகளில் அமுலில் இருந்த Excise rules

Caltex Refinery Excise Superintendent தன்னிடம் ''ஜலமணி'' கப்பலுக்கு வரிவிலக்கு அளிக்கும் ஆவணங் களில் முன்னதாகக் கையெழுத்து பெறப்பட வில்லை யென்றும், அவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட 40கி.லிட்டர் டீசலுக்கு வரி விலக்கு அளிக்க முடியாதென்றும் கூறி விட்டார். அதனால் Excise collector இடம் மேல் முறையீடு செய்தோம். அந்த மேல் முறையீட்டை திரு. கிருஷ்ண மூர்த்திதான் தயாரித்துத் தந்தார். மேல் முறையீட்டை விசாரித்த உயர் அதிகாரி ''The Installation Manager is let off with a warning, the export transaction is regularised'' என்ற தீர்ப்பை வழங்கினார்.



விசாகப்பட்டினத்தில் நான் கற்றுக் கொண்ட இந்தப் பாடம் பிற்காலங்களில் பல தவறுகளைச் செய்யாமல் இருப்பதற்கு உதவியது. உதாரணத்திற்கு Excise product விற்பனை செய்யப்படும்போது குறிப்பாக S.R.P. (Self Removal Procedure) எனப்படும் ''நம்முடைய கண் காணிப்பிலேயே விதிகளைப் பின் பற்றுவது'' கொள்கைப்படி எண்ணெய் விநியோகம் செய்யப்படும் முன்பு அதற்கான Excise தீர்வை செலுத்துவதற்கான போதிய அளவிற்கு Excise கணக்கில் பணம் இருக்கவேண்டும். அவ்வாறு பணம் இல்லாமல் பெட்ரோலியப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தால் அது ஓர் குற்றமாகும். குறிப்பாக விடுமுறை தினங்களில் தேவையான அளவிற்கு இந்தியன் ஆயில் கம்பெனியின் கணக்கில் Cash Balance இருக்க வேண்டும். இதற்காக letter of authority என்றதொரு cheque book மூலம் பணம் செலுத்தப்படும். இதன் மூலம் ஒரு நாளைக்கு 50 லட்சம் ரூபாய் வரையிலும் Excise அல்லது Customs Accountஇல் பணம் செலுத்தலாம்.

வாழ்க்கையில் பாடங்களை பிறர் அனுபவம் கொண்டும் பெறலாம், அல்லது தானே தடுக்கி விழுந்து

அடிபட்டும் பெறலாம். என்னுடைய அனுபவம் கொண்டு இந்தியன் ஆயில் கார்ப்ப ரேஷனில் Excise சம்பந்தமான பல நடைமுறை ஒழுங்குகளை அகில இந்திய அளவில் அமுல்படுத்த உதவியுள்ளேன். இதற்காக Employees Suggestion Schemeஇன் கீழ் பரிசுத் தொகையாக ரூ. 5000 நான் பிற்காலத்தில் பெற்றுள்ளேன். கம்பெனி நிர்வாகத்தின் கீழ் ஓர் அதிகாரி பணிபுரியும்போது மிகுந்த விழிப்புடன் செயல்பட வேண்டும் என்பதை ''ஜலமணி'' கப்பலுக்கு டீசல் நிரப்பப்பட்ட நிகழ்ச்சி மூலம் அறிந்து கொண்டேன்.

## 272) Customs & Excise rules-How they differ

எண்ணெய்கம்பெனிகளைப் பொறுத்தவரை Customs & Excise விதிமுறைகள் சில வகைகளில் மாறு பட்டிருக்கும். வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருள்களுக்கு Customs தீர்வை இறக்கு மதி செய்யப்பட்ட பெட்ரோலியப் பொருள்களை Storage Tankகளில் கொண்டு சேர்த்தபிறகு Green Bill of entry எனப் படும் அனுமதி ஆவணத்தின்வழி பெருமளவில் அதாவது 3000 அல்லது 4000 கி.லிட்டருக்கு உரிய மொத்த வரியை (பல லட்சம் பெறுமானம் கொண்டது) செலுத்தி அதன் பிறகுதான் விற்பனை செய்யமுடியும். ஆனால் உள்ளூரில் சுத்திகரிக்கப்படும் (Excise Product) எண்ணெய்க்கு விற்பனை செய்யும் நாளில் அதற்குரிய வரித்தொகை Excise Accountஇல் இருக்கவேண்டும். ஒரே Storage Tankஇல் Excise Product & Customs Productஉம் சேர்ந்து இருக்கும்போது விழிப்புடன் செயல்படவேண்டும்.

## 273) Engine Oil திருட்டும், Domestic enquiryயும்

விசாகப்பட்டினம் எண்ணெய்கிடங்கை இந்தியக் கடற்படையின் சார்பில் இந்தியன் ஆயில் கம்பெனி உருவாவதற்கு முன்பு பர்மாஷெல் கம்பெனி மேற்பார்வை யிட்டு வந்தது. 1960-63 கால கட்டத்தில் டீசல் பம்புகளே எண்ணெயை லாரிகளிலும் வேகன்களிலும் நிரப்புவதற்கு பயன்பாட்டில் இருந்து வந்தன. விசாகப்பட்டினம் எண்ணெய்க் கிடங்கில் சுற்றி அமைந்திருந்த மதிள்கள் 6அடி உயரம்கொண்டவை. இந்த மதிள்சுவருக்கு உட்புறத்தில் இந்த டீசல் இஞ்ஜின்கள் பொருத்தப்பட்டிருந்த Pump Houseகள் அமைந்திருந்தன. Pump House எண் 4 என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த இஞ்ஜின் பிஸ்டன்கள் தேய்ந்த நிலையில் இருந்ததால் அதிக அளவில் இஞ்ஜின் ஆயில் தேவைப்படுகின்றது என்ற காரணத்தை முன்வைத்து ஆபரேட்டர் சத்யநாராயணா என்பார் 4 ஐந்து லிட்டர் கேன்களில் இஞ்ஜின் ஆயிலை அவருடைய மேலா ளரிடம் கேட்டு Pump Houseஇல் வைத்திருந்தார். மதிளின் வெளிப் புறம் இரும்புத் தாதுகள் மற்றும் நிலக்கரிகளின் கரித்தூள் படிமங்கள் படிந்து மதிளின் உயரம் மூன்றடியாகக் குறைந்து விட்டது. இதனால் வெகு சுலபமாக இஞ்ஜின் ஆயிலை வெளியாட்களிடம் அவ்வப் போது விற்றுக்கொண்டிருந்தார் சத்யநாராயணா. இந்தச் செயலை கையும் களவுமாக பிடித்தார் சூப்பர்வைஸராகப் பணியாற்றிய திரு. மோசஸ். சத்யநாரா யணாமீது இஞ்ஜின்ஆயிலை முறைகேடாக விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு Domestic Enquiry நடைபெற்றது.

***(ஒரு நிர்வாகத்தில் விதிகளை மீறிய செயல்கள், திருட்டு, நியாயமான உத்தரவுகளுக்கு அடிபணியாமை, நீண்ட நாட்கள் அனுமதியின்றி விடுப்பில் செல்லுதல், லஞ்சம் வாங்குதல், அதிக அளவு எண்ணெய் நிரப்புதல், எண்ணையைத்திருடி விற்றல் போன்ற***

*குற்றச்சாட்டுகள் மேல் நடத்தப்படும் விசாரணையே* Domestic Enquiry *எனப்படும். இந்த விசாரணையின் போது சட்டம் படித்த வழக்குரைஞர்கள் ஆஜராக முடியாது. குற்றம் சாற்றப் பட்டவர் சார்பில் அதே கம்பெனியைச் சார்ந்த வேறொரு தொழி லாளி வாதாடலாம். இவ்வாறு வாதாடுவதற்கு கம்பெனியின் விதி முறைகளை நன்றாக அறிந்த யூனியனைச் சார்ந்த ஒருவர் முன் வருவார். விதிமுறைகளை நன்கறிந்த அதிகாரி ஒருவர்* Prosecution *தரப்பில் ஆஜராவார். இரண்டு அதிகாரிகள், நீதிபதிகளாகச் செயல் படுவர். அவற்றில் ஒருவர்* Industrial Relations *அல்லது* Personnel Dept *துறையைச் சார்ந்தவராகவும் மற்றொருவர் குற்றம் சாற்றப் பட்ட நபர் சார்ந்த துறை மேலதிகாரியாகவும் இருப்பார். இவ்வாறு விசாரணை நடைபெறும்போது சாட்சியங்கள், ஆவணங்கள், வாதப் பிரதிவாதங்கள் நீதிமன்றங்களில் நடை பெறுவது போல் நடைபெறும். இந்த நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்பை எதிர்த்து இரு தரப்பி னரில் யாரும் நிர்வாகத்தின் உயர்அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம். தேவைப்பட்டால் உயர்நீதி மன்றத்தில் மேல் முறை யீடும் செய்யலாம்.)*

## 273) சட்டம் எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கும்

சத்யநாராயணா தரப்பில் வாதாடிய தொழிலாளி ‘‘தொழி லாளிகள் வறுமையில் வாடுபவர்கள், குறைந்த சம்பளக்காரர்கள், தேவைக்கு அதிகமாக இன்ஜின் ஆயில் வைக்கப்பட்டிருந்ததால் அதை விற்று பணம் பண்ணலாம் என்ற எண்ணம் உதிக்க வழி வகுத்ததே அவருடைய மேலாள ரான திரு. மோசஸின் குற்றம் ஆகும். ஆகவே அவர்தான் தண்டிக்கப்படவேண்டுமேயொழிய சத்ய நாராயணா அல்ல’’ என்று வாதாடினார். வழக்கின் முடிவில் திருட்டைக் கண்டு பிடித்த மோசஸ்ஸிற்கு எச்சரிக்கை விடப்பட்டு, சத்ய நாராயணா சுமத்தப்பட்ட குற்றத்திலிருந்து விடுதலை



செய்யப்பட்டார். சட்டம் ஒரு கழுதை, அதன் முன்னே போனால் உறுமும், சீறும். பின்னால் போனால் உதைக்கும். சட்டத்தை எப்படி வேண்டு மானாலும் வளைத்துக் கொள்ள லாம். நீதியை அநீதியாக்கலாம். அநீதியை நீதியாக்கலாம். வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞரை வாதத்தைப் பொறுத்து தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஒரு நபருக்கு ஹைகோர்ட்டில் தூக்குத்தண்டனை, உச்சநீதி மன்றத்தில் விடுதலை. இது எப்படி சாத்தியமாகும்? இதுதான் சட்டம்.

பிற்காலங்களில் பல Domestic Enquiryகளில் நான் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பிலும், வாதி தரப்பிலும், நீதிபதியாகவும் பணி யாற்றியுள்ளேன். ஒவ்வொரு முறையும் என் மனக்கண்முன் 1966ஆம் ஆண்டு நிகழ்ந்த சத்யநாராயணா இஞ்ஜின் ஆயில் வழக்குத்தான் தோன்றும்.

## 274) பெண்பார்க்கும் படலம்

1966ஆம் வருடம் செப்டம்பர் மாதம் விடுமுறையில் மன்னார்குடியைச் சென்றடைந்தேன். என்னுடைய அத்தை பெண்ணை நான் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று என் தகப்பனார் வற்புறுத்தினார். ஆனால் அதற்கு என் தாயார் இணங்கவில்லை. என்னுடைய இரண்டாவது மாமா வான ராகவாசார்யரின் மூத்த பெண் கமலாவை நான் திருமண செய்து கொள்ள வேண்டும் என்ற என் தாயாரின் விருப்பத் திற்கு என் தந்தையார் இசைவு தரவில்லை. ஆகவே நெருங்கிய உறவில் அமைந்திருந்த இந்தப் பெண்கள் நிராகரிக்கப்பட்டனர். **(இதற்கு நேர்மாறாக என்னுடைய முதல் புதல்வன் சிர.வாசுதேவனுக்கு அவனுடைய மாமா பெண் ணையும், இரண்டாவது புதல்வன் சிர. சடகோப னுக்கு அவனுடைய அத்தை பெண்ணையும் மணம் முடித்து வைத்தோம்.)** இரண்டு மூன்று பெண்களை அவர்கள்

இருக்கும் இடம் சென்று பெண் பார்த்தேன். ஒருவர் விசாகப் பட்டினத்தில் வேலை செய்யும் உங்கள் பிள்ளைக்கு பெண் கொடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டார். விசாகப் பட்டினத்தில் தெலுங்கு பேசுவார்கள். எங்கள் வீட்டுப் பெண்ணிற்கு தெலுங்கு தெரியாது. தஞ்சாவூர் ஜில்லாவைத் தவிர வேறு எந்த ஊரில் வேலை பார்க்கும் பையனுக்கு நாங்கள் பெண் கொடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டனர். ***(இதே போல் தற்போது அதாவது 2010, செப்டம்பர் மாதம் அபுதாபியில் வேலை பார்க்கும் என்னுடைய மூன்றாவது பையனுக்கு உரிய மணப்பெண்ணைத் தேடும்போது ''அபுதாபியா? அங்கெல்லாம் பெண்கள் பர்தா அணிய வேண்டுமாமே! ஆகவே பெண் கொடுக்க மாட்டோம்'' என்று கூறி வருகிறன்றனர்.)***

பையனுடைய தகப்பனார் கூட்டுறவு நாணயச் சங்க பணப் பட்டுவாடா வழக்கில் சிக்கியவர். பையனும் அப்படித் தான் இருப்பானோ? என்று மறைமுகமாகத் தன் விருப்ப மின்மையை மற்றொருவர் தெரிவித்தார். பிறகு தற்போதைய காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்த்ர சரஸ்வதி பிறந்த ஊரான இருள்நீக்கி என்னும் கிராமத்தில் கீர்த்திமூர்த்தி ஸ்ரீனிவாஸ அய்யங்காரின் குமாரத்தி சௌபாக்யவதி ருக்மிணிக்கும் எனக்கும் 1967, ஜனவரி மாதம், 18ஆம்நாள் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. எங்கள் இருவருக்கும் ஜாதகப்பொருத்தம் பார்க்கப்படவில்லை. வெறும் மனப் பொருத்தமும், பெயர்ப் பொருத்தமும் இந்த விவாஹத்திற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன. என்னுடைய 28ஆவது வயதில் 18 வயது நிரம்பிய ருக்மிணியை நான் திருமணம் செய்து கொண்டேன். (இன்று 2 அல்லது 3 வயது வித்தியாசத்திற்கு மேல் ஆணோ பெண்ணோ இருந்தால் திருமணம் செய்து கொள்வதற்கு அஞ்சுகிறார்கள்.)



## 275) 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்

லால்பகதூர் சாஸ்திரியின் மறைவு டெல்லி அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தது. நேருவின் மகள் இந்திரா பிரதமராகப் பொறுப் பேற்றார். 1967ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்தத் தேர்தலின் போது காங்கிரஸை எப்படியெல்லாம் எதிர்த்தால் வெற்றி கிடைக்கும் என்பது பற்றி தீவிர சிந்தனையில் மூழ்கியிருந்தார் திரு. அண்ணாதுரை.

பல கட்சிகளையும் கொண்ட வலுவான கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது தி.மு.க. இதன்படி ராஜாஜியின் சுதந்தரா கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்ட் பிளாக், பிரஜா சோஷலிஸ்டு கட்சி, காயிதே மில்லத் தலைமையிலான முஸ்லிம் லீக், ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கம், ம.பொ. சிவஞானத்தின் தமிழரசுக் கழகம் ஆகியவற்றோடு கூட்டணி அமைத்தது தி.மு.க. காங்கிரஸ் எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானோர் தி.மு.க. அணியில் திரண்டனர்.

173 தொகுதிகளைத் தனக்கு எடுத்துக்கொண்ட தி.மு.க. ஏனைய தொகுதிகளைக் கூட்டணிக் கட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தது. மக்களவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீட்டின்படி தி.மு.க. 25 தொகுதிகளில் போட்டியிட்டது. மற்ற தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தது. தி.மு.க.வின் முக்கியத் தலைவர்கள் அனை வருமே வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு இருந்தனர். ஆனால்

அண்ணாவோ தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக நிறுத்தப் பட்டிருந்தார். தி.மு.க.வின் வியூகம் புரியாமல் மற்ற கட்சியினர் குழப்பத்தை அடைந்தனர். ஒருவேளை தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் என்று அண்ணா நம்பவில்லையோ என்று சிலர் சந்தேகப்பட்டனர். ஆனால் கருணாநிதியோ தெள்ளத் தெளிவாக இருந்தார். 'எத்தனை நாள் அதிகாரம் செய்யமுடியும் ஆட்சியாளர்களே! இன்னும் ஆறே நாள். அதிகாரம் மாறும்' என்று பொதுக் கூட்டங்களில் முழக்கமிட்டுக் கொண்டருந்தார்.

## 276) எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்

இந்தத் தேர்தலில் தி.மு.க. பிரசாரத்தின்போது முன் வைத்தவைகளில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, மொழிப்போராட்டத்தின்போது நடத்தப்பட்ட அத்துமீறல்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன வாகும். எல்லாவற்றிற்கும் மேலாக ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி வழங்கப்படும் என்றும், ஒருவேளை அவ்வாறு தர இயலாவிட்டால் ரூபாய்க்கு ஒருபடி அரிசி தருவது உறுதி என்றும் அறிவித்தார் அண்ணாதுரை. வாக்காளர்கள் மத்தியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது இந்த அறிவிப்பு. ***(1967ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை இலவச அறிவிப்புத் திட்டங்கள், அல்லது மக்களை ஈர்க்கும், அல்லது முட்டாளாக்கும் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது தி.மு.க.விற்குக் கை வந்த கலை யாகும்.தேர்தல் சமயத்தில் இலவச டி.வி., (டி.வி. பார்த்துக் கொண் டிருந்தால் வயிறு நிறைந்து விடும்.) இலவச வேஷ்டி, சேலை, இலவச கம்ப்யூட்டர், இலவச சாப்பாடு என்று மக்களை சோம் பேறிகளாக்கும் திட்டங்களை அல்லது தேவையற்ற திட்டங் களை அறிவித்து பாமர மக்களை வஞ்சித்து ஆட்சி பீடத்தில் அமர்வதே இவர்கள் கைக்கொண்டு வரும் தேர்தல் பிரசார யுக்திகளாகும்.)***



தேர்தல் பிரசாரம் உச்ச கட்டத்தை எட்டிக் கொண்டி ருந்தது. திடீரென ஒரு செய்தி ஒட்டுமொத்த தமிழகத்தையும் உலுக்கியது. எம்.ஜி.ஆரை சுட்டு விட்டார்கள். சுட்டவர் எம்.ஆர்.ராதா. எம்.ஜி. ஆரை சுட்டதோடு தன்னையும் சுட்டுக்கொண்டார் எம்.ஆர்.ராதா. அவசரம் அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தீவிர சிகிச்சைக்குப் பிறகு இருவருமே உயிர் பிழைத்தனர். தனிப்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக நடந்த இந்த மோதல் அரசியல்ரீதியாக முக்கியத்துவம் பெற்றது.

தி.மு.க. அறிவித்திருந்த வேட்பாளர் பட்டியலில் பரங்கி மலை தொகுதிக்கு அறிவிக்கப்பட்டிருந்த பெயர் எம்.ஜி.ஆர். ஆனால் அதற்குள் அவர் சுடப்பட்டதால் மருத்துவமனையில் இருந்தபடியே வேட்பு மனு தாக்கல் செய்தார் எம்.ஜி.ஆர். கழுத்தில் குண்டடி பட்டிருந்ததால் அதைச் சுற்றி பேண்டேஜ் போடப்பட்டி ருந்தது. அதனைப் புகைப்படமாக எடுத்து போஸ்டரில் போட்டு தமிழ்நாடு முழுக்க ஒட்டினர் எம்.ஜி.ஆர் ஆதரவாளர்கள். தி.மு.க. வின் நம்பிக்கைக்குரிய பிரசார பீரங்கியான எம்.ஜி.ஆர் மருத்துவ மனையில் முடங்கியதால், அவருடைய போஸ்டர்களே பிரசாரம் செய்யும் வேலையை எடுத்துக்கொண்டன.

## 277) தான் சுடப்பட்ட நிகழ்ச்சியை எம்.ஜி.ஆர். விவரித்தபடி!

எம்.ஜி.ஆர். நடித்த ''பெற்றால்தான் பிள்ளையா?'' என்ற படத்தை எம்.ஆர்.ராதா.வின் நெருங்கிய நண்பரான வாசு தயாரித்து, 9.12.1966ஆம்நாள் வெளியீடு செய்தார். நண்பனுக்கு உதவி செய்யும் எண்ணத்தில்தான் படத்தை முடிக்கப் பொருளுதவி செய்தார் ராதா. அதை உதவி என்று

கொடுத்திருந்தால் பிரச்சனையே வந்திருக்காது. வாசு கடனாகக் கேட்டார். கொடுத்தார். எம்.ஆர்.ராதா.

''படத்தை முடிக்க வேண்டிய கட்டத்தில் புதிய காட்சிகளை இணைக்கச் சொல்லி விட்டார் எம்.ஜி.ஆர். அதனால் செலவு கூடிவிட்டது. லாபமில்லாவிட்டாலும் பரவாயில்லை. கையைக் கடிக்காமல் இருந்தால் போதும். உங்களுக்கு வேறு பணம் தர வேண்டும். என்ன செய்வது என்றே விளங்கவில்லை'' என எம்.ஆர்.ராதாவிடம் புலம்பினார் வாசு.

''நான் கொடுத்த பணம் திரும்பி வராதா? இந்நாள் வரை நான் இளகிய மனம் உடையவனாக வாழ்ந்து வந்திருக் கிறேன். எந்தச் சூழ்நிலையிலும் இனி யாருக்கும் உதவி செய்யக்கூடாது. பணம் கொடுத்து பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது என்று என்னை மாற்றிவிட்டாய். வா. என்னோடு... எம்.ஜி.ஆரிடமே பேசுவோம்'' என்று எம்.ஆர். ராதா கூறினார்.

கைத்துப்பாக்கியையும் எடுத்து வைத்துக் கொண்டது எனக்குத் தெரியாது என்று பின்பு ஒரு பேட்டியில் வாசு கூறினார். ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி. ஆரைச் சந்தித்தனர் எம்.ஆர். ராதாவும், வாசுவும். ''என்னுடைய தொழில் நடிப்பது... பண விஷயத்துக்கு நான் பொறுப்பில்லை'' என்று எம்.ஜி. ஆர் கூறியதும் உணர்ச்சி வசப்பட்டு கைத்துப்பாக்கி யால் சுட்டிருக்கிறார் எம்.ஆர். ராதா. இதைப்பற்றி திரு. எம்.ஜி.ஆர்., சின்னப்பத்தேவரிடம் சொன்ன வைகளை வசனகர்த்தா ஆரூர்தாஸ் ''கோட்டையும் கோடம் பாக்கமும்'' என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளார்.

''நானும் (எம்.ஜி.ஆரும்) புரொடியூஸர் வாசுவும் எதிர்எதிரா உட்கார்ந்து முகத்திற்கு முகமாக அடுத்த படத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். ராதாண்ணன் எங்களுக்குப் பக்கவாட்டில் நின்று வயிற்றைத் தடவியபடி அங்கேயும் இங்கேயுமாக நடந்து கொண்டிருந்தாரு. ''என்னண்ணே! வயிற்றைத் தடவிக்கிட்டு இருக்கீங்க. உட்காருங்களேன்!'' ''வாசு வீட்டில் கீரைக்குழம்பு சாப்பிட் டேன். அது வயிற்றை என்னமோ செய்கிறது'' மறுபடியும் நாங்க பேச ஆரம்பித்தோம். அப்போ ...அப்போ என் காதில் எதையோ ஒன்றை வைக்கிறமாதிரி ஒரு உணர்வு என்று சொல்லிக் கொண்டே எம்.ஜி.ஆர். என் சட்டைப் பையிலி ருந்த பேனாவை எடுத்து, அதன் முனையை என்னுடைய காதுக்குள் வைத்தபடி சொன்னார்.

'இப்போ சட்டுன்னு திரும்புங்க' என்றதும் நான் திரும்பி னேன். என் காதுக்குள் வைக்கப்பட்ட பேனா முனை நழுவி கழுத்துப் பக்கம் வந்தது. எம்.ஜி. ஆர். தொடர்ந்தார். 'இப்படித்தான் ... ... இதேதான்... அவ்வளவுதான் குண்டு வெடித்திடுச்சி.. அண்ணே! என்ன இப்படிப் பண்ணிட்டீங்கன்னு சொல்லிக்கிட்டே நான் சோபாவைத் தாண்டிக் குதிச்சு அதற்குப் பின்னால மறைஞ்கிட்டேன்.

உடனே வாசு பாய்ந்து அவர் கையிலிருந்த ரிவால் வரைப் பிடுங்க எத்தனிச்சாரு. அதுக்குள்ளே ராதாண்ணன் பட்டுன்னு ரிவால்வர் நுனியை தன் உச்சந்தலையில் வச்சி ரெண்டு தடவை அவரே சுட்டுக்கிட்டாரு.

வாசுவுக்கும் அவருக்கும் நடந்த அந்தப் போராட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு, ரத்தம் பெருகி வழிஞ்ச என் காதை கையால மூடிக்கிட்டு வெளியே ஓடிப்போய் போர்டிகோவில் நின்ற கார்ல உட்காந்தேன். டிரைவர் ஓடிவந்து காரை ஸ்டார்ட் பண்ணி வெளியில் போயிட்டோம். இதான்

நடந்தது. அதுக்கப்புறம் மற்ற விஷயங்கள்லாம் தான் பேப்பரில் வந்துச்சே! கவலைப்படாதீங்கண்ணே பொழைச் சிட்டேன். கடனை அடைச்சிடுவேன்''. இவ்வளவும் எங்களிடம் சொன்ன எம்.ஜி.ஆர். தன்னை எம்.ஆர்.ராதா ஏன் சுட்டார்? சுடுவதற்கான காரணம் என்ன என்பதை மட்டும் சொல்லவில்லை.

## 278) எம்.ஆர்.ராதாவிற்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை

தேர்தல் நடக்கவிருக்கும் நேரம். அப்போது தி.மு.க.வைச் சார்ந்திருந்தார் எம்.ஜி. ஆர். குண்டு காயத்துக்குப் போட்ட கட்டு களுடன் போஸ்டர் போட்டு விளம்பரம் செய்தார்கள். எம்.ஆர்.ராதா. கைது செய்யப்பட்டார். கோர்ட், வழக்கு, விசாரணை. இது பற்றிய செய்தியை தினத் தந்தி வெளியிட்டது. அதில் 2.8.1967இல் குறுக்கு விசாரணை முடிந்தது என்று குறிப்பிட்டிருந்தது.

குற்றவாளி என்பது உறுதி செய்யப்பட்டு சிறைத் தண்டனை அடைந்தார் ராதா. நாலரை ஆண்டுகளுக்குப் பின் விடுதலை ஆனார். சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் இவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்று தீர்ப்பு கூறப்பட்டது. இதை எதிர்த்து ஹைகோர்ட்டிலே அப்பீல் செய்தார். ஏழு ஆண்டுகளையே மேல்கோர்ட் உறுதி செய்தது.

சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். 5 ஆண்டு களாகக் குறைத்து தீர்ப்பு வழங்கினர். சிறையில் நன்னடத்தை காரணமாக தண்டனை கொஞ்சம் குறைந்தது. எந்த நிலையிலும் மனிதன் நிதானத்தை இழக்கக்கூடாது. வன்முறை பலன் தருவதில்லை. பூமியில் உள்ள எல்லா கோர்ட்டுகளையும்விட மேலான கோர்ட் ஒன்று இயங்குகிறது.



அதிலிருந்து யாரும் தப்பமுடியாது. இப்படிப் பல உண்மைகளை சிறைவாசம் உணர்த்தியது ராதாவிற்கு.

எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட குண்டு காயத்தினால் பேசும் திறன் பாதிக்கப்பட்டு இருந்தாலும், எம்.ஜி.ஆரின் செல் வாக்கு பன்மடங்கு உயர்ந்துவிட்டது. விடுதலையான எம்.ஆர்.ராதாவின் வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள். அவருடைய இயல்பான ஆர்ப்பாட்டங்கள் இல்லை. கிண்டல், கலாட்டா, சத்தம் எல்லாமே அடங்கி விட்டது. இவரது வாயைக் கிளறி செய்திகளை வரவழைத்து பத்திரிகையில் வெளியிட முயன்றார்கள். ''ஒன்றும் பேசாதீர்கள் இராமச் சந்திரன் நல்லவர். நடையைக் கட்டுங்கள்'' என்று பத்திரி கைக்காரர்களை விரட்டிவிடுவார். தனது உயிருக்கே உலை வைக்கக்கூடிய நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தாலும் எம்.ஆர். ராதாமீது பகைமை பாராட்டவில்லை எம்.ஜி.ஆர். இந்த கசப்பான சம்பவத்திற்குப் பிறகு படத்தில் அவருடன் நடிப்பதை நிறுத்திக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

## 279) தி.மு.க. பெற்ற மாபெரும் வெற்றி

ஏற்கெனவே இருந்த இந்தி எதிர்ப்பு போராட்டம், காங்கிரஸ் அரசின் மீதான அதிருப்தி, வலுவான கூட்டணி மற்றும் கலைஞர் களின் பிரசாரத்தோடு எம்.ஜி.ஆர் சுடப் பட்டதால் ஏற்பட்ட அனுதாபமும் சேர்ந்து கொண்டது. விருது நகர் தொகுதியில் காமராஜை எதிர்த்து பெ.சீனுவாசன் என்ற இளைஞரை நிறுத்தியிருந்தது தி.மு.க.

தேர்தல் முடிவுகள் தி.மு.க. கூட்டணிக்கு அபரி மிதமான வெற்றியை வழங்கியிருந்தன. பரங்கிமலை தொகுதியிலிருந்து எம்.ஜி.ஆர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ரகுபதியைவிட பெரும்

பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தான் குண்டடிபட்டு தொகுதிக்கு நேரடியாக சென்று வாக்குகள் கேட்க முடியாத நிலையிலும், காங்கிரஸின் முன்னணி தலைவர்களெல்லாம் பரங்கிமலையில் முகாமிட்டு எம்.ஜி. ஆரை தோற்கடிக்கச் செய்ய எடுத்த முயற்சி களையும்மீறி, எம்.ஜி.ஆர் வெற்றி வாகை சூட்டினார்.

அத்தொகுதி மக்கள் வெறும் எம்.எல்.ஏ. என்ற பதவியை மட்டும் வழங்கவில்லை. கூடவே தமிழகத் திலேயே பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் முதலிடமாக வெற்றி பெற்ற வேட்பாளர் என்ற முக்கியத்து வத்தையும் கொடுத்தனர். அவர் குண்டு காயங்களுடன் மருத்துவமனையில் படுத்துக் கொண்டே ஜெயித்தார். இப்படிப்பட்ட சாதனைகளால்தான் இவர் புரட்சி நடிக ராயிருந்து, புரட்சித்தலைவராகி, முதல்வர் என்ற உயர்வினை பிற்காலத்தில் அடைந்தார். போட்டியிட்ட 173 தொகுதிகளில் 138 தொகுதிகளை வாரிச்சுருட்டியிருந்தது தி.மு.க. அதன் கூட்டணிக் கட்சிகளும் பல தொகுதிகளைக் கைப்பற்றி யிருந்தன. போதாக்குறைக்கு நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிட்ட 25 தொகுதிகளையும் வென்று காங்கிரஸ் கட்சியை அதள பாதாளத்துக்குத் தள்ளியிருந்தது தி.மு.க. காங்கிரஸுக்கு சட்டமன்றத்தில் வெறும் 49 இடங்கள் கிடைத் திருந்தன. முக்கியமாக, விருதுநகரில் காமராஜ் தோல்வியை சந்தித்தார்.

(1967ஆம் ஆண்டு வீழ்த்தப்பட்ட காங்கிரஸ் 43 ஆண்டுகளாகியும் ஆட்சியைக் கைப்பற்ற இயலவில்லை. இதற்குக் காரணம் பிராந்தியக் கட்சிகளான தி.மு.க. அல்லது அ.தி.மு.க. போடும் தொகுதிப் பிச்சையைப் பெற்றுக் கொள்வதால்தான். மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளது. தி.மு.க. அன்னை சோனியா மீது அனைத்து பாரத்தையும் போட்டுவிட்டு தி.மு.க.வின் திட்டங்களுக்கு ‘ஜே’ போட்டுக் கொண்டு காலத்தைக் கழித்து வருகின்றனர். காமராஜர் பிறந்ததினத்தின் போது மட்டும் காமராஜர் ஆட்சியை மீண்டும் வளரச் செய்வோம் என்று மார்தட்டிக் கொள்வார்கள். E.V.K.S.இளங்கோவனைத் தவிர தன்மான உணர்ச்சி கொண்ட தலைவர்களைக் காங்கிரஸில் காண இயலவில்லை. நிலைமை இப்படியிருக்க இவர்கள் எப்படி காமராஜ் ஆட்சியை மீண்டும் மலரச் செய் வார்கள் என்பதை மக்களிடையே எடுத்து உரைக்கலாமே!)



## 280) திரு. அண்ணாதுரை முதல்வரானார்

கவர்னர் உஜ்ல்சிங்கிடம் ஆட்சி அமைக்கும் உரிமையைக் கோரினார் அண்ணாதுரை. கவர்னரும் அவருக்கு முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். தி.மு.க.வின் முதல் அமைச்சரவையில் நெடுஞ் செழியன் கல்வி அமைச்சரானார். கே.ஏ. மதியழகனுக்கு உணவுத்துறையும், கருணாநிதிக்குப் பொதுப் பணித் துறையும், மாதவனுக்கு சட்டத்துறையும், சத்தியவாணி முத்துவுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையும் வழங்கப்பட்டது.

ஆட்சிக்கு வந்ததும் படிஅரிசித் திட்டத்தைத்தான் முதலில் தொடங்கினார் அண்ணாதுரை. சென்னை மற்றும் கோவையில் அமுல்படுத்தப்பட்டது. பின்னர் பொருளாதார சூழல் இடம் கொடுக்க மறுத்ததால் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தது தி.மு.க. அரசு. அண்ணா துரையின் ஆட்சிக்காலத்தில் நடந்த முக்கியமான நிகழ்வு களுள் ஒன்று மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயர் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் பெற்றது. ஜூலை, 18, 1967 அன்று இதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அடுத்தது சுயமரியாதைத் திருமணச் சட்டம். பண்டைய புராணங்களிலும் சாத்திரங்களிலும் இப்படித்தான் குறிப்பிடப் பட்டுள்ளது என்றுகூறி நடந்துவந்த திருமணத் துக்குப் பதிலாக சீர்திருத்தத் திருமணத்தை சட்டப் பூர்வ மாக்கியது தி.மு.க. அரசு. அடுத்து தமிழகத்துப் பள்ளிகளில் இனி தமிழும் ஆங்கிலமுமே இருக்கும். இந்தியும், ஸம்ஸ் க்ருதமும் இருக்காது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (அன்று ஒழிக்கப்பட்ட ஸம்ஸ்க்ருதம் இன்று வரை வளர்ச்சியை அடையவில்லை.)

## 281) First Union Agreement

1966ஆம் ஆண்டு இந்தியன் ஆயில் நிறுவனத்தில் அனைத்துத் தொழிலாளர் யூனியன்களும் நிர்வாகமும் தங்களுக் கிடையே ஆன முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அதன்படி போனஸ் வழங்குதல், வாகன வசதிக் கடன், வேலை நிரந்தரம், பதவி உயர்வு பற்றிய வரை யறுக்கப்பட்ட கொள்கைகள், பஞ்சப்படி வழங்குதல், அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயித்தல், சில பதவிகளை ஒருங்கிணைத்தல், Transfer Allowance வழங்குதல் போன்றவற்றில் உடன்பாடு ஏற்பட்டது. இதன் விளைவாக நானும் கம்பெனி அளித்த கடன் உதவியோடு டைனமோ வைத்த இரு சக்கரவண்டி ஒன்றினை வாங்கினேன். சில நாட்களில் கம்பெனி வளாகத்திற்குள்ளேயே டைனமோ பறி போயிற்று.

***(அதன்பிறகு 1982ஆம் ஆண்டு சென்னையில் பணிபுரிந்தபோது கம்பெனி அளித்த கடன் உதவியில் ஸ்கூட்டரும், அதன்பிறகு 1983ஆம் ஆண்டு காரும் வாங்கினேன். 14 ஆண்டுகள் கார் ஓட்டிப் பழக்கமிருந்தும் தற்போது என்னால் கார் ஓட்ட முடியாது. அதற்குக் காரணம் தற்போது சாலையில் காணப்படும் ஒழுங் கீனம்தான். யார் மீதாவது மோதிடு வேனோ என்ற அச்சத்தினால் நான் கார் ஓட்டுவதில்லை.)***



## 282) காலசக்கரத்தின் சுழற்சி

எனது Installation Managerஆகப் பணியாற்றி வந்த திரு. ராஜேந்திரா 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சென்னை தண்டயார்பேட்டை Installationக்கு இடம் மாற்றம் பெற்று சென்றிட, ப்ராஞ்ச் ஆபிஸில் Assistant Operation Managerஆக இருந்த திரு. M.(மாடபூசி) ஸ்ரீனிவாசன் புது Installation Managerஆகப் பணியில் அமர்ந்தார். இவர் நிதானமாகச் செயல்படுவார். 1979ஆம் ஆண்டு சென்னை மணலி Refinery Co-ordinatorஆக இவர் பதவி வகித்து வந்தபோதும் ராயபுரம் டெர்மினல் மேனேஜராக (1983ஆம் ஆண்டு) இவரிடம் நான் பணிபுரிந்துள்ளேன். ***(இவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தனது குடும்பத்தைப் பற்றிய செய்திகளை நீண்ட கடிதங்கள் மூலம் எனக்கு தெரிவித்திடுவார். இவர் ஜோதிடத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். பின் நாட்களில் தனது இரண்டாவது பெண்ணிற்கு சுமார் 100 ஜாதகங்களை அலசி அமெரிக்க மாப்பிள்ளையாகப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தார்.***

*ஒருநாள் 10ஆவது மாடியில் குடியிருந்த இவரது மாப் பிள்ளை காரை அந்தமாடிக்கு எடுத்துச் செல்ல அப்போது குறி தவறி தடுப்புச்சுவரையும் தாண்டி கீழே விழுந்து நொறுங்க, மாப் பிள்ளையும் மரணமடைந்தார். (அமெரிக்கக் குடியிருப்புகளில் இதுபோன்ற வசதிகள் உண்டு.) இந்தத் துயர நிகழ்ச்சி அவரை வெகு வாகப் பாதித்திருந்தது. ஏன் இவ்வாறெல்லாம் நடக்கின்றது என்பதை அறிய முடியவில்லையே, ஜாதகப் பொருத்தம் இருந்தும் இவ்வாறு அகால மரணம் ஏன் ஏற்பட்டது? என்று கேட்டு எனக்குக் கடிதம்*

*எழுதியிருந்தார். என்னால் அவர் கேட்ட கேள்விகளுக்கு எந்தப் பதிலையும் கூறமுடியவில்லை. இவர் 2005 ஆம் ஆண்டு ஆசார்யன் திருவடியடைந்தார். பாஞ்சஜன்யம் இதழை தவறாமல் படித்து வந்தவர் இவர். )*

## 283) கிரேக்கப் புராணக்கதைகள்

ஆங்கிலமொழி ஒரு கலப்பு மொழியாகும். கிரேக்க, ரோமானிய சொற்கள் மிகுந்த அளவில் இந்த மொழியில் காணப்படும். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் முதிர்ச்சி பெற்ற நாகரிகம் கொண்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக நதி தீரங்களில் வாழ்ந்து வந்த மக்கள் நாகரிகம் தெரிந்த பண்பாட்டு முதிர்ச்சி அடைந்தவர்களாக வாழ்ந்து வந்தனர். Egyptian Civilisation, Mesopotamian Civilisation,Saraswathi river Civilisation, Indus valley Civilisation,Chinese Civilisation,Mycenacan civilisation, Hebrew Civilisation, Sumerian Civilisation, Greek Civilisation, Roman Civilisation என்று நாகரிகங்கள் பலவகைப்படும். இவற்றில் Greek Civilisation பற்றிய பல ஆங்கில திரைப்படங்கள் 60, 70 கால கட்டத்தில் திரையிடப்பட்டு வந்தன.

இவைகளில் குறிப்பிடத்தக்க சில திரைப்படங்கள் The Trojan War, Helen of Troy, The Adventures of Jason and the Argonauts,The Adventures of Ulysses, Zeus the Greek God, Deadalus-the Architect and Inventor,The Mighty Hercules,Orpheus and Eurydice போன்றவை.

கிரேக்கப்புராணக் கதைகள் கிரேக்க மொழியில் எழுதப் பட்டு பிறகு ரோமானியர்களால் லத்தீன் மொழியில்



மொழி பெயர்க்கப்பட்டு அதன்பிறகு ஆங்கிலம், ப்ரெஞ்ச் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவின. கிரேக்கப் புராணங்களின்படி கிரேக்க நாடுதான் உலகத்தின் மத்தியில் அமைந்துள்ளது என்றும், அதைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் கடல்கள் அமைந் துள்ளன என்ற நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தனர். கிரேக்கநாட்டின் மத்தியில் அமைந்திருந்த உயர்ந்த மலையான Mount Olympusஇல் கடவுளர்களுக்கு எல்லாம் தலைவரான Zeus வாழ்ந்து வந்தார். அங்கு இருந்த கடவுளர் அனைவரும் Zeusஇன் பிள்ளைகள். Cronus என்பவர் Titans இனத்தின் தலைவர். Titans என்பவர்கள் அமானுஷ்ய மான சக்தி படைத்தவர்கள். Cronusஇன் புதல்வர்கள் Zeus, Poseidon and Hadesஆவர். Zeus விண்ணின் தலை வனாகவும், Poseidon கடல் களின் தலைவனாகவும், Hades பாதாள லோகங்களின் தலைவ னாகவும் விளங்கி வந்தனர். இவர்களைத் தவிர ஒன்பது பெரும் சக்தி படைத்த கடவுளும், பல சிறு கடவுளர்களும் ஒலம்பஸ் மலையில் வாழ்ந்து வந்தனர்.

1. Zeus-விண்ணில் வாழும் கடவுளர்களுக்குத் தலைவன்.
2. Hera- Zeus இன் மனைவி.
3. Poseidon- கடல்களின் கடவுள்.
4. Demeter-வேளாண் தொழிலைப் பாதுகாக்கும் பெண் தெய்வம். நல்ல விளைச்சலைத் தருபவள்.
5. Apollo-சூரியனுக்கு அதிபதியாய் விளங்கும் ஆண் தெய்வம். இசை மற்றும் கவிதைக்கு அரசன்.
6. Artemis-சந்திரனுக்கு அதிபதியாய் விளங்கும் பெண்

தெய்வம். வேட்டையாடுபவரைக் காப்பாற்றிடும் மற்றும் கற்பு நெறியைக் காத்திடும் தெய்வம்.

7. Athena-கல்விக்கு அதிபதியான பெண் தெய்வம்.

8. Aphrodite-காதல் மற்றும் அழகு தெய்வம்.

9. Hermes-கடவுளரிடையே செய்திப் பரிமாற்றத்திற்கு உதவிடும் தெய்வம்.

10. Ares-போர்த் தெய்வம்.

11. Hephaestus- அக்னி மற்றும் நிர்மாணக்கலை தெய்வம்.

12. Dionysus-மது மற்றும் களியாட்டங்களின் தெய்வம்.

13. Hades-பாதாள லோகம் மற்றும் பணத்திற்கு அதிபதியான தெய்வம்.

**இவர்களைத்தவிர சிறு தெய்வங்களாக**

1. Nine Muses-இவர்கள் இசை, இலக்கியம், ஓவியம், மற்றும் விஞ்ஞானத்திற்கு அதிபதியான சிறு தெய்வங்கள்.

2. Three Graces-இந்த மூன்று சிறு தெய்வங்களும் நாட்டியம், நுண்கலை, சமூகக் களியாட்டங்கள் ஆகியவற்றிற்கு அதிபதியான சிறு தெய்வங்கள்.

3. Three Fates-இந்த மூன்று சிறு தெய்வங்களும் மனித இனத்தின் தலைவிதியாகிய நூல் இழைகளை ஆட்டுவிப்பவர்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இந்த நூலிழைகளை அறுத்துவிடும் ஆற்றல் படைத்தவர்கள்.

4. Three Furies-இவர்கள் நீதிமன்றங்களால் தண்டிக்கப் படாத மனிதர்களை அவர்கள் செய்த செயல்களுக்காக



தண்டிக்கும் வல்லமை படைத்த சிறு தெய்வங்கள்.

5. Pan-இடையர்களைக் காப்பாற்றும் சிறு தெய்வம்.

6. Satyrs-நிலங்களில் உள்ள வயல்வெளிகளையும் மரங் களையும் பாதுகாக்கும் சிறு தெய்வம்.

7. Momus-நகைச்சுவையை ஊக்குவிக்கும் சிறு தெய்வம்.

கிரேக்க புராணங்களில் காணப்படும் பல்வேறு தெய் வங்களின் வடிவினையும் சாயலையும் நமது புராணங் களிலும் காணலாம். Durkheim என்னும் சமூக சிந்தனை யாளர் வெளிப்படுத்திய கருத்துக்கள் இவற்றை ஒட்டி அமைந்துள்ளன. இயற்கை அளித்துள்ள அனைத்துப் பொருள்களையும் ஊக்குவிக்கும் ஒரு சக்தியே கடவுள். அந்தக் கடவுளுக்கு மனிதன் ஓர் வடிவம் கொடுத்து அவற்றிற்குப் பெயர் இடுகிறான் என்பதே Durkhiemஇன் கொள்கையாகும்.

## 283) கிரேக்க புராணக் கடவுளர்கள்

நமது புராணங்களில் காணப்படும் பல தேவதைகள், அதி தேவதைகள், கடவுளர், அவர்களுக்குள் நிகழ்ந்த போர்கள், ஒருவருக்கொருவர் இட்டுக்கொண்ட சாபங்கள், காதல்வெறி, பிறர்மனை நாடுதல் போன்ற நிகழ்ச்சிகளைக் கிரேக்க புராணங்களிலும் காண்கின்றோம். இவர்களை மையமாக வைத்து பல ஆங்கிலத் திரைப் படங்கள் வெளிவந்துள்ளன.

1) Achilles: இவன் Peleus and Thetis தம்பதியினர்க்குப் பிறந்தவன். Iliad (இலியட் )என்னும் காப்பியத்தின் தலைவன். சிறு குழந்தையாயிருந்தபோது அவன் தாய் இவன் எப்போதும் சாவு என்பதே இல்லாத ஒரு நிலையில் அமரனாக

வாழவேண்டும் என்று அந்தக் குழந்தையின் கால்களைப் பிடித்துக் கொண்டு Styx ***(நல்லோர் மற்றும் தீயோர் இறந்தபிறகு வாழும் ஓர் இடத்திற்கு Hades என்று பெயர். இதனை 7 சுற்றாக சுற்றிக் கொண்டு ஓடும் நதிக்கு Styx என்று பெயர். சிறு தெய்வங்கள் இவள்மீது ஆணையிட்டு தங்கள் செயலைச் செய்ய முற்படுவர்)*** என்னும் ஆற்றில் அவனை அமிழ்த்தினாள். இதன் விளைவாக இவள் தன் கைகளால் பிடித்துக் கொண்ட பகுதி மரணத்திற்கு இலக்கான பகுதியாக ஆனது. அதன்பின் அவள் தன்னுடைய மகனான Achillesயிடம் நீண்ட ஆண்டுகள் எந்த வீரச் செயலையும் செய்யாது வாழவிரும்புகிறாயா? அல்லது சில ஆண்டுகளே வாழ்ந்து வீரச் செயல்களைச் செய்ய விரும்புகிறாயா என்று கேட்டாள். அப்போது தான் சில ஆண்டுகளே வாழ்ந்து வீரமரணம் அடைய விரும்புவதாகக் கூறினான். அவனுக்கும் Agamemnonக்கும் இடையே நிகழ்ந்த போர் Iliad (இலியட்) என்னும் காப்பியத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. Achilles அந்தப் போரில் கால்பகுதியில் தைத்த அம்பால் வீர மரணம் எய்தினான்.

இந்த நிகழ்ச்சியிலிருந்துதான் Achilles heel என்னும் ஆங்கிலச் சொல் உருவாக்கப்பட்டது. ஒருவருடைய உயிர் நிலையைக் குறிப்பதற்கு இந்தச் சொல் கையாளப்படுகிறது.

2) Agamemnon: இவன் Atreusயினுடைய மகனாவான். Sparta நாட்டின் மன்னனான Tyndareus என்பானுடைய பெண்ணான Clytemnestra என்பாவை திருமணம் செய்து கொண்டவன். அதனடியாக Mycenae நாட்டிற்கு மன்னனாக முடிசூடிக் கொண்டான். Helen என்பாள் பொருட்டு நடந்த Trojan போரில் இவனுடன் சென்ற போர்ப் படைவீரர்கள் பெரும் சூறாவளியில் சிக்கித் தவித்தபோது Calchas என்னும் குருவின் கட்டளைப்படி தன் மகளைப் நரபலி கொடுத்தான்.



அதன்பிறகு சூறாவளிக் காற்று ஓய்ந்தது. போரில் வெற்றி கொண்ட பிறகு தன்னுடைய நாட்டிற்குத் திரும்பி வந்தான். அப்போது அவனுடைய மனைவியும், அவளுடைய கள்ளக் காதலனுமாகிய Aegisthus ஆகிய இருவரும் இவன் அரசாண்ட நாட்டை அபகரித்ததோடு மட்டுமல்லாமல் Agamem nonஐயும் கொன்று விட்டனர்.

3) Amazons: ‘‘மார்பகங்கள் இல்லாத போர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களைக்’’ குறிக்கும் சொல்லாகும். இவர்கள் Asia Minor பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய அரசிக்குப் பெயர் Penthesilea என்பதாகும். இந்த இனத்தில் ஒரு பெண் பிறந்தால் அவளுடைய வலது மார்பகப் பகுதி நாளங்கள் துண்டிக்கப்படும். போர் புரியும் போது அம்புகளை மார்பில் சுமந்து செல்வதற்காக இந்தச் செயல் மேற்கொள்ளப்பட்டது. ட்ராய் நகரில் நடந்த போரில் இவர்களுடைய அரசி Achillesஆல் கொல்லப்பட்டாள்.

4) Apollo: இவன் Zeus, Leto தம்பதியினர்க்குப் பிறந்தவன். Apollo கவிதைகளுக்கும், இசைக்கும் தலைவனாகக் கொள்ளப்படுகிறான். இவனே மருந்துகளுக்கும், மருத்துவர் களுக்கும் தலைவனாவான். நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவன். நோய்களை தன்னுடைய அம்புகளால் விரட்டியடிப்பவன். ***(இதனால்தான் நமது நாட்டில் அப்பலோவின் பெயர் மருத்துவமனைகளுக்கும் மருந்தகங் களுக்கும் வைக்கப் பட்டுள்ளது.)***

5) Devil: கிரேக்கச் சொல்லான Diabolos என்றதின் சுருக்கமான வடிவமே Devil எனப்படும். இதற்கு விரோதி அல்லது எதிரி என்பது பொருளாகும். இது ஹீப்ரு மொழியில் Satan என்று குறிப்பிடப்படுகிறது.

6) Dionysus: இயற்கையின் வளத்திற்கும் குறைவற்ற இயற்கைச் செல்வத்திற்கும் உரிய கடவுளாக கிரேக்க புராணங்களில் குறிப்பிடப் படுபவன்.

8) Dragon: சிறகுகள் கொண்ட விலங்கினம். விஷம் கலந்த மூச்சுக் காற்றை வெளியிடும் ஓர் நாகம். இவை பெரும் புதையல்களையும் அழகிய நங்கையர்களைக் காத்து வருவதாக கிரேக்க மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

9) Eos: விடியற்காலைப் பொழுதின் பெண் கடவுளாகக் கொள்ளப்பட்டவள். இவளையே ரோமானியர்கள் Aurora என்ற பெயரிட்டு அழைத்து வந்தனர். தன் கணவனான Tithonusஉடன் உறங்கிக் கொண்டிருக்கும் இவள் விடியற்காலைப் பொழுதில் அவன் பிடியிலிருந்து விடுபட்டு இவ்வுலகைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் Oceanus என்ற ஆற்றிற்குச் சென்று அதி விரைவாகச் செல்லக் கூடிய குதிரைகள் பூட்டிய ரதத்தில் புறப்பட்டு வந்து சூரிய ஒளியை எதிர் நோக்கி வருபவளாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள்.

10) Eros: இவன் காதல் உணர்வைத் தூண்டிவிட்டு புணர்ச்சிக்கு வித்திடும் கடவுளாவான். கிரேக்க புராணங் களின்படி ஊழிக் காலத்து இருளில் தோன்றியவன். இவன் தன் சக்தியால் பஞ்ச பூதங்களை இணைத்து அவற்றுக்கு ஓர் உருவம் கொடுக்கிறான். இவன் சிறகுகளைக் கொண்டவன். தன்னுடைய அம்புகளால் கடவுளரையும் மனிதர்களையும் மோகம் கொள்ளச் செய்யும் சக்தி படைத்தவன். இவனே காதல் தெய்வமாக கிரேக்க புராணங்களில் கொண்டாடப் படுபவன். ***(நமது புராணங்களில் குறிப்பிடப்படும் மன்மதனே கிரேக்க புராணங்களில் Eros என்று கொண்டாடப்படுகிறான்.)***

11) Fates: மனித இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் மூன்று பெண்கடவுளர் இவர்கள். அதில் Clotho என்பவள் வாழ்க்கை என்னும் நூலை சுழற்றுபவள். Lachesis என்பாள் வாழ்க்கையாகிய நூலின் நீளத்தையும் செல்லும் பாதையையும் நிர்ணயிப்பவள். Atropos என்பவள் வாழ்க்கை என்னும் நூலை அறுத்து முடிவுக்குக் கொண்டு வருபவள். ***(நமது புராணங்களில் கூறப்படும் சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்பவற்றையே இந்த மூன்று பெண் கடவுளர்களும் மேற்கொள் வதாக கிரேக்க புராணங்கள் குறிப்பிடுகின்றன.)***



12) Fauna: பூமித்தாயையும் அவளுடைய எல்லையற்ற வளப்பத்தை யும் குறிக்கும் ரோமானிய புராணக் கடவுளாவாள். இவளுக்கு Bonadea என்ற பெயரும் உண்டு.

13) Flora: மலர்கள் மலர்வதற்கும் மணம் வீசுவதற்கும் உரிய ரோமானியப் பெண் கடவுள். கிரேக்க புராணங்களில் இவளுக்கு Chloris என்ற பெயர் வழங்குகிறது.

***(ஒரு பகுதியின் இயற்கை வளத்தையும் ஆங்கு மணம் வீசிக் கொண்டிருக்கும் மரங்கள் மற்றும் பூக்களை வர்ணிப்பதற்கு ஆங்கிலத்தில்*** Flora and Fauna ***என்ற சொல் அமைந்துள்ளது. ஆங்கிலமொழி ஒரு கலப்பு மொழியாகும். கிரேக்க, ரோமானிய, ஹீப்ரு மொழிச் சொற்கள் அதிகஅளவில் ஆங்கில மொழியில் காணப்படும்.)***

14) Furies: கொலை செய்வோர், நம்பிக்கை துரோகம் செய்வோர், பெற்றோர்களிடம் அன்பு காட்டத் தவறுவோர், விருந்தோம்பலை மேற்கொள்ளாதோர் ஆகியோருக்கு உரிய தண்டனையை அளித்திடும் பெண் கடவுளர் இவர்கள்.

Alecto (மன நிம்மதியைக் கெடுப்பவள்.) Tisiphone (ரத்தம் குடிக்கத் துடிப்பவள்). Megaera (பலன்களைத் தடுத்து நிறுத்துபவள்) ஆகியோர் இக்கடவுளர் ஆவர். இவர்கள் சிறகுகள் கொண்ட கன்னிப் பெண்கள்.

இவர்களுடைய தலைமயிர்களிலிருந்து புற்றிலிருந்து நாகங்கள் வெளி வந்து கொண்டிருப்பதுபோல அவை வந்து கொண்டிருக்கும். இவர்களுடைய கண்களிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும்.

15) Gemini: வான்வெளியில் அமைந்துள்ள ஒரு நட்சத்திரக் கூட்டத்திற்கு ஜெமினி என்று பெயரிடப்பட்டுள்ளது. castor and Pollux என்ற இரட்டையர்களே இவர்கள்.

16) Genius: மனிதர்களையும் நீதியையும் காப்பாற்றும் கடவுள். ரோமானியப் புராணங்களின்படி ஒவ்வொரு மனிதனுடன் Genius என்னும் கடவுளும் உடன் பிறக்கிறான் என்ற நம்பிக்கை கொண்டு இருந்தனர்.

17) Graces: கிரேக்க புராணங்களின்படி அழகு மற்றும் கவர்ச்சியின் வடிவமாகக் கொள்ளப்பட்ட பெண் கடவுள். இயற்கை மற்றும் மனிதர்களிடையே காணும் கவர்ச்சிக்கும் அழகுக்கும் இவளே காரண மாவாள். இவள் Muses உடன் சேர்ந்து நுண்கலைகளுக்கும் கவிதை புலமைக்கும் காரணமாகிறாள்.

18) Helen: உலகத்திலேயே மிகச் சிறந்த அழகியாய்ப் போற்றப் பட்டவள். இவள் Menelaos என்னும் ஸ்பார்ட்டா நாட்டு மன்னனின் மனைவியாவாள். இவளை Paris என்பான் Troy நகரத்துக்குக் கவர்ந்து சென்றான். இதன் விளை வாக எழுந்த போரே Trojan war என்று குறிக்கப்படுகிறது.

19) Heleos: கிரேக்க புராணங்களின்படி இவனே சூரியக் கடவுள். இவன் தந்தையின் பெயர் Hyperion இவனுடைய சகோதரன்பெயர் Selene (சந்திரன்), சகோதரி Eos (விடியற்காலை)

20) Hermes: கிரேக்க புராணங்களின்படி வியாபாரம்,



அதிர்ஷ்டம் மற்றும் பணக்காரர்களால் வழிபடும் கடவுள். ரோமானியப் புராணங்களின்படி இவனுக்கு Mercury என்ற பெயர் வழங்குகிறது. இவனே ஏமாற்றுபவர்களாலும், திருடர்களாலும் வணங்கப்படும் கடவுளாவான்.

21) Hydra: Tython and Echidna தம்பதியினர்க்கு பிறந்த ஏழு தலைகள் கொண்ட ராக்ஷஸ மிருகம். இதன் வாயிலி லிருந்து அனல் கக்கிக் கொண்டேயிருக்கும். இவனை Her cules என்பான் கொன்ற தாக கிரேக்க புராணங்கள் கூறுகின்றன.

22) Momus: நிந்தை செய்வோர் மற்றும் பிறர் குற்றங்களைப் பற்றிப் பேசுபவரின் கடவுளாக கிரேக்க புராணங்களில் சித்தரிக்கப்படுபவர்.

23) Nemesis: நீதி நெறி தவறி நடக்கும் மானிடர்கள் மற்றும் இயற்கை நியதிக்கு புறம்பாகச் செயல்படுபவர்கள் ஆகியோரின் கடவுளே Nemesis.

24) Plutus: செல்வத்திற்கு அதிதேவதையான கடவுள். இவனை Zeus என்னும் கிரேக்க முதற்கடவுள் கண்ணிழக்கச் செய்ததாகவும், அதனால் இந்தச் செல்வத்திற்கு அதிபதியான கடவுள் தராதரம் பார்க்காமல் செல்வத்தைக் கொடையாகக் கொடுக்கும்படி நேரிட்டது என்று கிரேக்க புராணங்கள் கூறுகின்றன. ***(இன்றும் இந்தக் கடவுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தற்குறிகளிடமும் தர்மம் செய்ய எண்ணம் இல்லாதவர்களிடமும் செல்வம் குவிந்திருக்கிறது. அறிஞர்கள் வறுமையில் வாழ்கிறார்கள். எந்த நாட்டுப் புராணமா னாலும் மனித சமுதாயத்தின் பிரதிபலிப்பே புராண கதாபாத்திரங் களாகும். கிரேக்க புராண கடவுளர்களுக்கும் நம் நாட்டில் பேசப்படும் புராண கதாபாத்திரங்களுக்கும் இடையே இதுபோன்ற ஒற்றுமை களையும் வேற்றுமைகளையும் பார்க்கலாம்.)***

25) Sirens: இவர்கள் கிரேக்க புராணங்களின்படி கடல்கன்னிகள் ஆவர். இவர்கள் அழகான அதே நேரத்தில் மயக்கம் தரக்கூடிய ஒலியை எழுப்ப வல்லவர்கள். மாலுமிகளை இந்த ஒலியில் மயங்கச் செய்து அதனால் அவர்கள் திசை மாறிப் பாறைகளில் மோதி இறக்கச் செய்பவள். இத்தகைய செயலால் இவர்கள் கிரேக்க நாட்டைக் கடல் கொள்ளைக் காரர்களிடமிருந்து காப்பாற்றி வந்தனர்.

26) Terminus: ரோமானியப் புராணங்களின்படி நாட்டின் எல்லை யைக் காத்து நிற்கும் கடவுள். கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கடவுளுக்கு பூஜைகள் நடைபெறும். ( Bus Terminus என்ற சொல் இதிலிருந்து ஆங்கிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.)

27) Titans: Ouranos and Gaia தம்பதியர்க்குப் பிறந்த ஆறு ஆண் மகவுகள் ஆறு பெண் மகவுகளுக்கு Titans என்ற பெயர் வழங்குகிறது.

28) Zeus: ஒலிம்பிக் மலையில் வாழும் கிரேக்க முதற்கடவுள். இவருடைய மகன்களும் மகள்களுமே மற்றைய கடவுளர். விண்ணாட்டை ஆளுபவரும் இவரே. ரோமானியப் புராணங்களின் படி Jupiterரே Zeus ஆவார்.

இதுபோன்று கிரேக்க மற்றும் ரோமானியப் புராணங்களில் கடவுளர்கள் பல உண்டு. இவர்களிடையே நிகழும் போர்கள், சாபத்தின் விளைவாக ஏற்படும் நிகழ்வுகள், பிறர் மனை கவர்தலால் ஏற்பட்ட போர்கள், காம வெறி யாட்டம், கணவனுக்கு மனைவி இழைத்திடும் துரோகம் போன்றவற்றின் பின்னணியில் பல கிரேக்கப் புராணப் படங்களை நான் 1963-68 கால கட்டத்தில் பார்க்க நேரிட்டது. அதன் விளைவே இந்த புராண கதாபாத்திரங்கள் பற்றிய இந்த



விரிவான குறிப்புகள். ***(ஒப்பாய்வியல் என்பது இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பானதொரு ஆய்வாகும். அதன் அடிப்படையில் இந்திய நாட்டுப் புராணங்களை யும் அதில் காணப்படும் கதாபாத்திரங்களையும் கிரேக்க, ரோமானிய, எகிப்திய நாட்டுப் புராணங்களோடு ஒப்பாய்வு செய்ய முற்பட்டால் அது உலகமெங்கும் வாழும் மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஓர் சிறப்பானதொரு ஆய்வு நூலாக அமையும்.)***

## 284) Konark-சூரியனுக்கான கோயில்

விசாகப்பட்டினத்தில் பர்மாஷெல் கம்பெனியில் ஸ்டெனோ கிராபராக வேலை பார்த்து வந்தவர் திரு. துரைராஜ் என்பவர். இவர் தஞ்சாவூர்க்காரர் என்பதால் அவரோடு நெருங்கிய பழக்கம் உண்டு. பெரும்பாலும் இரவுநேரங் களில் உணவு விடுதியில் நாங்கள் பல மணி நேரங்கள் பேசிக் கொண்டிருப்போம். ஒருநாள் அவர் பூரி ஜகந்நாத் மற்றும் Konark ஆகிய இடங்களுக்குச் சென்று வரலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார். அதன்படி 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சனிக்கிழமை ஹௌரா செல்லும் புகை வண்டியில் பிரயாணம் செய்து மாலை 3 மணிக்கு கட்டாக் நகரை சென்ற டைந்தோம். கட்டாக், புவனேச்வர் ஆகிய இரண்டு பெயர்களுமே ஒரே இடத்தைக் குறிப்பன. மிக அகலமான வீதிகள், எங்கும் புது மாளிகைகள், அடர்த்தியான சாலையோர மரங்கள் கண்ணுக்கு விருந்தளித்தன.

அடுத்தநாள் காலை Konark என்னும் கடற்கரையோர கிராமத்திற்குச் செல்வதற்குப் பேருந்தில் முன்பதிவு செய்திடப் பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தோம். அங்கு முன்பதிவு செய்யும் இடத்தில் நீங்கள் பேருந்தில்

முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்களா அல்லது 2ஆம் வகுப்பில் பிரயாணம் செய்ய விரும்பு கிறீர்களா? என்று கேட்டனர். எங்களுக்கு ஒன்றும் புரிய வில்லை. எதற்கும் புகைவண்டிபோல முதல் வகுப்பில் வசதிகள் கூடுதலாக இருக்கும் என்ற நினைப்பில் முதல் வகுப்புக்குரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டோம்.

கட்டாக் மாநகரில் மஹாநதி ஊரின் ஊடே ஆர்ப்பரித்துக் கொண்டு செல்கிறது. அந்த ஊரில் புகழ்பெற்ற பிந்துசாகர் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியைச் சுற்றி பல கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கது லிங்கராஜா கோயில் ஆகும். கலிங்கநாட்டு கலைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கும் பல கோயில்களில் இந்தக் கோயிலும் ஒன்றாகும். புவனேச்வர் நகரில் ஒரு கோடி லிங்கங்கள் அமைந்துள்ளதாக ப்ரம்ம புராணம் கூறுகிறது. லிங்கராஜா கோயிலானது 7ஆம் நூற்றாண்டில் அந்தப் பகுதியை ஆண்டு வந்த யயாதிகேசரி என்பானால் தன் தலை நகரை ஜெய்ப்பூரிலிருந்து புவனேச்வருக்கு மாற்றியபோது நிர்மாணிக் கப்பட்டதாகும். இந்தக் கோயிலில் கலிங்க மன்னனான 3ஆம் அனகபீமனின் கல்வெட்டுகள் (13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை) தொடங்கி அதன்பின் அரசாண்ட மன்னர்களின் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 25,000 சதுர அடிப் பரப்பில் அமைந்துள்ளது லிங்கராஜா திருக்கோயில்.

இந்தக் கோயிலில் அமைந்துள்ள கோபுரத்தின் உயரம் 180 அடி ஆகும். கருவறையிலிருக்கும் லிங்கத்தின் உயரம் 8 அங்குலம். அகலம் 8 அடி. ஒருநாளில் 22 கால பூஜைகள் நடைபெறுகின்றன. லிங்கராஜா கோயிலைத் தவிர ஏரியைச்



சுற்றி ஆனந்தவசுதேவன், ராஜாராணி கோயில், முக்தேச்வரர் கோயில், சித்தேச்வரர் கோயில், பரசுராமேச்வரர் கோயில் ஆகியவை அமைந்துள்ளன. ஆனால் அந்தக் கோயில்களை எங்களால் சென்று பார்க்க முடியவில்லை.

அடுத்த நாள் காலை பேருந்து நிலையத்தைச் சென்றடைந் தோம். முதல் வகுப்பில் பிரயாணம் செய்யப் போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன் பேருந்து நிலையத்தைச் சென்றடைந்த எங்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. Konark செல்லும் அந்தப் பேருந்து தமிழ்நாட்டில் காணப்படும் நகரப் பேருந்தைவிட மோசமான நிலையில் காணப்பட்டது. கிழிந்த இருக்கைகள், உடைந்த ஜன்னல்கள், பிடிமானத்திற்காக அமைக்கப்பட்டிருந்த கம்பிகள் வளைந்தும் நெளிந்தும் காணப்பட்டன. முதல் வகுப்பு என்றால் பேருந்தின் முன் பகுதி, இரண்டாம் வகுப்பு என்றால் பேருந்தின் பின்பகுதி என்று விளக்கி எங்களை முன் பகுதியில் உட்கார வைத்தனர்.

சுமார் 2மணிநேரம் பல கிராமங்களின்ஊடே பயணம் செய்து Konarkஐ காலை 9 மணிக்குச் சென்றடைந்தோம். போகும்வழியில் கிராமங்களில் மக்கள் காலை ஆகாரமாக இனிப்புப் பண்டங்களை தேனீர் விடுதிகளின் முன் அமர்ந்து சுவைத்து உட்கொண்டிருந்ததைக் கண்டோம். ***(இந்தியநாட்டில் அதிலும் குறிப்பாக வடநாட்டிலும் தமிழகத்தில் அடையார் ஆனந்த பவன், கிருஷ்ணா ஸ்வீட்ஸ், பி.ஜி. நாயுடு ஸ்வீட்ஸ், வசந்தபவன் போன்ற உணவு விடுதிகள் இனிப்புப் பண்டங்களின் விற்பனையை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு வருகின்றன. மற்றொரு பக்கம் சர்க்கரை வியாதியால் பீடிக்கப்பட்டு அதன் விளைவாக மாரடைப்பு நோய்களை எதிர்கொள்வோரும் பெருகி வருகின்றனர். புகைபிடித்தல் ஆபத்து என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்வதுபோல், இனிப்புப் பண்டங்களை அதிக அளவில் உட்கொண்டால் ஆபத்து என்ற***

*அறிவிப்பு பலகையை இனிப்புகள் விற்கப்படும் கடைகளில் வைக்க வேண்டும். இனிப்பு பண்டங்கள் விற்கும் கடைகளின் எண்ணிக் கையையும் குறைக்க வேண்டும். இனிப்புப் பண்டங்களை விற்கும் கடைகள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் விற்கக்கூடாது என்றும் தடை செய்ய வேண்டும். ஆனால் டாஸ்மார்க் கடைகளின் மூலம் பெறப்படும் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது என்று பெருமிதம் கொள்ளும் இந்த அரசாங்கம் இவற்றைச் சிந்தனையில் கொள்ளாது என்பது தெரிந்தும் சமுதாயத்தின் மேல் உள்ள அக்கறையால் இந்தக் கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன.)*

Konarkஇல் புகழ்பெற்ற சூரியக்கடவுளுக்கான ஆலயம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சூரியனார்கோயில் போலே இதுவும் சூரியக்கடவுளுக்காகக் கட்டப்பட்டதொரு கலைநயம் மிக்க கோயில் ஆகும். தமிழ்நாட்டில் பல திருக்கோயில்களில் ஆண்டின் ஒருநாள் சூரியஒளி மூலவிக்ர ஹத்தின்மேல் படுவதுபோல அமைக்கப்பட்டு உள்ளன. இது தமிழர்களின் கட்டிடக்கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். Konark கோயில் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. நாங்கள் சென்று பார்த்தபோது இடிந்து பாழ்பட்ட நிலையில் காணப்பட்டது. இந்தக் கோயிலின் பல பகுதிகள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இப்போது விஞ்சியிருப்பது ஜகமோஹனா பகுதி மட்டுமேயாகும். கலிங்கநாட்டு சிற்பிகளின் கலைநயத்தை ஒவ்வொரு அங்குலப் பரப்பிலும் இன்றும் காணலாம்.

1915ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் நாள் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப் பட்டது இந்தக் கோயில். 1984ஆம் ஆண்டு உலகம் தழுவிய பாதுகாக்கப்பட வேண்டிய புராதனச் சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. Konark என்ற சொல்லுக்கு சூரியக் கடவுள் என்பது பொருளாகும். அர்க்கா என்றால் சூரியனைக் குறிக்கும். கொனா என்றால் மூலையைக் குறிக்கும்.



ஆகவே Konark என்பதற்கு ‘‘மூலைப்பகுதியில் அமைந்துள்ள சூரியன்’’ என்பது பொருளாகும். வட இந்தியாவில் Modhera- in Gujarath, Martand- in Kashmir ஆகிய இடங்களில் சூரியக் கடவுளுக்கென்று கோயில்கள் அமைந்துள்ளன. Konarkக் கிற்கு மித்ர வனம் என்ற பெயரும் அமைந்துள்ளது. இங்கு சூரியனுக்கு கோயில் கட்டப் பட்டதின் காரணத்தை சாம்பபுராணம் தெரிவிக்கிறது. வராக புராணத்திலும், ஸ்காந்த புராணத்திலும் சூரிய வழிபாட்டைப் பற்றியும் அவனுக்கு அமைந்த கோயில்களைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன.

Konark கோயில் சந்திரபாகா நதி, கடலில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. கீழைக்கங்கை வம்சத்தைச் சார்ந்த முதலாம் நரசிம்மனால் Konark கோயில் 13ஆம் நூற் றாண்டில் கட்டப்பட்டது. இவன் 3ஆம் அனங்கபீமாவின் புதல்வனாவான். இவன் கி.பி. 1238ஆம் ஆண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்தான். முதலாம் நரசிம்மன் அரியணை ஏறியபோது பல இன்னல்களை எதிர்கொள்ள நேரிட்டது. போரில் பகையரசர்களை மாளச் செய்தான். காஞ்சிபுரம் வரையில் படையெடுத்துச் சென்று அங்கே வெற்றித்தூண் ஒன்றினை நிறுவி னான். Konark கோயிலில் காணப்படும் சிற்பம் ஒன்றில் மகிஷாசுர மர்த்தனி, புருஷோத்தம ஜகந் நாதர், மற்றும் சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

கி.பி. 1245ஆம் ஆண்டுக்குப் பிறகு வங்காளத்தை ஆண்டு வந்த முகம்மதியர்களை முதலாம்நரசிம்மன் வெற்றி கொண்ட பிறகு இந்தக் கோயில் எழுப்பப்பட்டிருக்க

வேண்டும். ஏனெனில் முகம்மதி யர்களோடு நடந்த போர்க்காட்சிகள் புடைச் சிற்பங்களாக இந்தக் கோயிலில் இடம் பெற்றுள்ளன. ஆயினும் இந்தக் கோயில் கட்டப் பட்டதின் பின்புலம் பற்றியோ பூஜை முறைகளைப் பற்றியோ நமக்கு எந்தவித குறிப்புகளும் கிடைக்கவில்லை. கலை நயம் மிக்க இந்தக் கோயிலை நானும் துரைராஜனும் பலமுறை வலம் வந்து சிற்பங்களை கண்டு ரசித்தோம். வாழ்நாளில் ஒரு முறையேனும் சென்று பார்க்க வேண்டிய கலைக்கூடங்களில் இதுவும் ஒன்றாகும். கடலிலிருந்து 20 அடி தொலைவில் அமைந்துள்ள இந்தக் கோயிலின் பெரும்பகுதி கடல் அலைகளின் சீற்றத்தால் காணாமல் போய்விட்டன. எஞ்சியிருப்பது ஒருசில பகுதிகளே. நாம் பறி கொடுத்த பல கலைச் செல்வங்களில் இந்தக் கோயிலின் பல பகுதிகளும் ஒன்றாகும்.

மாலை சுமார் நான்கு மணிக்கு பூரி ஜகன்னாத் திருக் கோயிலைச் சென்றடைந்தோம். ஆனால் கோபுர வாயிலில் பண்டாக்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டிக் கொண்டு எங்கள் கைகளைப் பிடித்து இழுத்தனர். இதனால் சினங் கொண்ட துரைராஜ் இந்தக் கோயிலுக்குள் நாம் செல்ல வேண்டாம். விசாகப்பட்டினத்திற்குச் சென்று விடுவோம் என்று கூறி என்னை உள்ளே போகாமல் தடுத்து விட்டான். அதன்பிறகு அந்த ஊருக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஆனால் அந்த ஊரில் பல புகழ் பெற்ற ஸ்ரீவைஷ்ணவ மடங்கள் அமைந்துள்ளன. என்னுடைய தந்தையார் குருபரம்பரை நூல்களை நன்கறிந்தவர். இராமானு சருக்கும், பூரிக்கும் அமைந்திருந்த தொடர்பை எனக்கு விளக்கமாக எழுதி இப்படிப்பட்ட திவ்யதேசத்தை ஸேவிக்காமல் வந்துவிட்டாயே என்று கடிந்து கொண்டார்.



அவர் அன்று எழுதிய குறிப்புக்களின் விரிவான வடிவம் பின்வருமாறு:

உடையவர் காசிமாநகரை விட்டுப் புறப்பட்டு, சம்பகாரண் யத்திற்கு விஜயம் செய்து ஆங்கு வம்பராய் வந்த வாதிகளையும் வெற்றி கொண்டு நைமிசாரண்யம், தண்டகாரண்யம், சித்ரகூட பர்வதம், ச்ருங்கிபேரபுரம் முதலாகப் பெருமாளும் பிராட்டியும் நின்றும் இருந்தும் சயனித்துக் கொண்டும் திருவிளையாடல்கள் கண்டருளிய ப்ரதேசங்களை கௌரவ புத்தியுடன் ஆதரித்துக் கொண்டு அங்கிருந்து கிழக்குத்திசை நோக்கிப் புறப்பட்டு கங்கா ஸங்கமமான ஸாகரத்தையும் தர்சனம் செய்து கலிங்க தேசத்தை அடைந்தார்.

கலிங்க தேசத்தில் கடகம் (Cuttack) என்கிற தலை நகருக்குள் பிரவேசித்து விகடவித்வான்களாய் (கோணலான புத்தியுடையவர்கள்) மதம்பிடித்தவர்களாய் எதிர்த்து வந்த வர்களையும் தோற்றுத்தலை குனியச் செய்து வெற்றி வீரராய்த் தொடர்ந்து திக்விஜயத்தில் எழுந்தருளினார்.

அவ்வளவில், அங்கு மணிமகுடம் சூடி அரசனாய்த் திகழ்ந்த புருஷோத்தம கஜபதி ஆகிற ராஜா, உடைய வருடைய தெய்விக சேஷ்டிதங்களையும் திவ்ய சரித்திரங் களையும் கண்டு உடையவரை எதிர்கொண்டு ஸேவித்து பலவிதமான உபசாரங்களைப் பண்ணி பூஜித்தான். அவனாலே பூஜிதரான உடையவர் ஸ்ரீபுருஷோத்த மத்தைக் குறித்து எழுந்தருளினார். ஸ்ரீபுருஷோத்தமத்தில் ஸ்ரீஜகந் நாதன் ஸந்நிதியிலே எழுந்தருளி 'ரங்கநாத ஜகந்நாத நாததுப்யம் நமோ நம:' என்று ஐக்யமாக அநுஸந்தித்தார்.

முன்பு லீலாத்ரிநாதன் என்று நித்ய ஸூரிகளால்

ஆராதிக்கப் பெற்று; பிறகு இந்த்ரத்யும்நனாலே ஆராதிக்கப் பெற்று; பிறகு காலவமாதவனாலே ஆராதிக்கப்பெற்று; கலியுகத்தில் கலிங்க தேசத்தில் கடகம் என்ற ராஜதானியில் கடாகாதிபதிகளால் ஆராதிக்கப்பெற்று இன்றும் அபரி மிதமான ப்ரஸாதங்களை அமுது செய்து கொண்டிருக்கும் ஸ்ரீபுருஷோத்தமமுடையானை க்ருஷ்ண குணங்களுக்கு ஏற்றதான சொற்களால் ஸ்தோத்ரம் செய்து 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்சேவடி செவ்வி திருக்காப்பு' (திருப்பல்லாண்டு-2) என்று மங்களாசாஸனம் பண்ணி மகிழ்ந்தார்.

## 285) இராமாநுசரும், ஸ்ரீகூர்மமும்.

ஸ்ரீபுருஷோத்தமனாலே பலவிதமாக ஸத்கரிக்கப்பெற்ற உடையவர் எம்பெருமானை நேராகப் பார்த்து, 'தேவரீர் ஸ்வாதந்திரியத்தைத் தவிர்ந்து ஸ்ரீரங்கம் முதலிய திவ்ய ஸ்தலங்களிலே அடியேனுக்குப் பரதந்திரராய் வசப்பட்டு இருக்குமாபோலே இவ்விடத்திலும் எழுந்தருளியிருக்க வேணும்' என்று பணிவுடன் பிரார்த்தித்தார். ஸ்ரீபுருஷோத் தமனும், 'அவ்வாறு இருப்பது நமக்கு இஷ்டமில்லை. அந்த அபிப்ராயத்தை மாற்றிக்கொள்ளும்' என்று சோதிவாய் மலர்ந்தருளினான்.

உடையவரும் சிஷ்யர் குழாங்களுடன் புறப்பட்டு ஆங்கிருந்த வித்வான்களுடன் வாதப்போர் நிகழ்த்தி அவர்களை வெற்றிகொண்டார். ஸ்ரீபுருஷோத்தமனும் அந்த ஸ்தலத்தில் 'பட்டிமேய்ந்தோர்காரேறு பலதேவற்கோர் கீழ்க்கன்றாய் இட்டீறிட்டு விளையாடி' (நாச்சியார் திருமொழி 14-1) என்கிறபடி தன் இச்சைப்படியே திருவிளையாடல் கொண்டு மகிழ்வதையும் அந்த ஸ்தலத்திலுள்ளாருடைய தேசாசாரங்கள் துராசாரமாக இருக்கிறபடியையும் கண்டு



அந்த ஸ்தலத்திலுள்ளோரையும் திராவிட தேசத்திலுள்ள திவ்யதேசங்களின்படியே நல்லொழுக்கமுள்ளோராகும்படி திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளங் கொண்டார்.

அவனும் திருநாட்டில் மூதுவரான மந்திரிகளின் கோற் கீழடங்கி அவர்கள் தோளிலும் மடியிலும் வானிளவரசாய் வளர்ந்துபோந்த சிறுவன் ஆவான்; திருவாய்ப்பாடியில் நந்தகோபன் இளவரசனாக வளர்ந்ததால் மிகவும் ரஸிகனாய் 'க்ருஷ்ண மஹா மதங்கஜம் ராஜாதிராஜ:' என்னும்படி பட்டத்துக்குரிய ஆனையும் அரசும் போல் தன்னுடைய ஸ்வாதந்த்ரியத்தால் 'அபிசேத் ஸுதுராசார: துராசாரோபி' என்கிறபடியே தன்னைப் பற்றியிருப்பாருடைய குற்றங் களைச் சிறிதும் ஆராயாது அவற்றையே போக்யமாகக் கொள் பவனாயிருந்தான். அதற்குறுப்பாக கீழ்திசைக் கடலின் கரையில் குறும்பு செய்வானோர் மகனாய் 'தருமமறியாக் குறும்பன்' (நாச்சியார் திருமொழி 14-6) ஆகையால் உடைய வருடைய ஆணைக்கு அடங்காதவனாய், தானிருக்கு மிடத்தைத் திருத்துவது அவனுக்கு இஷ்டம் சிறிதுமில்லை.

ஆதலால் ஸ்ரீபுருஷோத்தமனும் கருடாழ்வானான 'விநதை சிறுவனை' (நாச்சியார்திருமொழி 14-3) கமலக் கண்களாலே கடாக்ஷித்து, 'நாம் முன்பே மதுராபுரியிலிருந்து யாதவர்களை த்வாரகையில் ஓரிரவில் உறக்கத்திலே வைத்தாற்போல், இப்போது நீரும் நம் யதிராஜனையும் அவர்க்கு உசிதமான நம்முடைய ஸ்ரீகூர்மமாகிற கமட ஸ்தானத்திலே வைத்து வாரும்' என்று ஆணையிட்டரு ளினான். அப்போது உடையவருடைய உறக்கத்திலே 'பறவையரையனும்' (பெரியாழ்வார் திருமொழி 5-2-9) அவரைப் பற்றிக் கொண்டுபோய் 'இறைப் பொழுதில்' (பெரியாழ்வார் திருமொழி 4-8-2) அங்கே விட்டுவந்தான்.

உடையவரும் திருக்கண்களை விழித்ததும் வியப் படைந்தார். 'கனவுபோல் இது விசித்ரமாகவுள்ளதே! என்று ஆச்சர்யப்பட்டார். அதன்பிறகு, ஸ்ரீபுருஷோத்தமத்தில் உடையவருடைய பிரிவுத் துயரத்தில் மிகவும் தளர்ந்து தரைக் கிடையாகக் கிடந்து வருந்திய முதலிகள் திசைகள் எங்கும் தேடிச் சென்று உடையவரைக் காணாது திகைத்தனர். அவ்வளவில் ஸ்ரீபுருஷோத்தமன் ஒரு ப்ராஹ்மண வேஷத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் முன்னிலையில் தோன்றி, 'நீங்கள் எதற்காக துக்கப்படுகிறீர்கள்? உங்கள் இராமாநுசன் ஸ்ரீகூர்மத்தில் நலமாக வாழ்ந்து வருகிறார். நீங்களும் அங்கே சென்று ஸேவியுங்கள்,' என்று தெரிவித்தார். சிஷ்யர்களும் மகிழ்ச்சிப் பெருக்குடன் அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீகூர் மத்தை நாடி நடையாகச் சென்று அலைகளின் வரிசை களையே மாலையாக அணிந்து ஸமுத்ர தீரத்தின் அருகில் நிலைகொண்டிருந்த ஸ்ரீகூர்ம க்ஷேத்ரத்தை அடைந்ததும் செருக்குகள் அற்றவர்களாயும் அன்பு பூண்டவராயும் விளங்கிய அவர்கள் ஆங்கே உடையவரைக் கண்டு களித்து அவர் திருவடிகளிலே விழுந்து வணங்கி அடிமைகள் புரிந்து ஒருவரை யொருவர் பார்த்துப் பழகி இன்புற்றனர்.

## 286) கடல் பயணம்

இந்தியக்கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பல்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒரோர் துறைமுகத்தில் போர் ஒத்திகைகளை நடத்தும். (Naval excer sises) இந்த ஒத்திகைகளின் போது எந்தவித அறிவிப்புமின்றி போர்க் கப்பல்கள் வருகை தரும். அதன்பிறகு Bunker Fuels எனப்படும் Furnace, oil and or Low sulphur high flash diesel oil ஆகியவற்றைக் குறுகிய கால அவகாசத்துக்குள் நிரப்பிக் கொண்டு செல்லவேண்டும். இந்த ஒத்திகை



கடற்கரை எல்லையைத் தாண்டி சில கிலோமீட்டர் தூரத்தில் நடைபெறும். (ஆனால் கடற்பகுதியை nautical mile என்ற அளவை கொண்டு குறிப்பிடுகிறோம். 6080 அடி தூரம் ஒரு nautical mile ஆகும்). 1967ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் இந்த ஒத்திகை நடைபெற்றது. இவ்வாறு தேவைப்பட்ட எண்ணைய் வகைகளைக் போர்க் கப்பல் களுக்கு அளித்திடுவதற்காக 24 மணி நேரமும் நாங்கள் ஆயத்தநிலையில் இருந்தோம்.

ஒருநாள் மாலை 3 மணிக்கு I.N.S. Kistna என்ற போர்க் கப்பலுக்கு Bunker Fuels கொடுத்துக் கொண்டி ருக்கும் போது எதிரிகள் படை (ஒத்திகையின் ஓர் பகுதியாக) தாக்க வந்திருப்பதாக செய்தி வரவே, எண்ணெய்க்குழாயின் தடுப்பு வால்வை மூடிவிட்டு, கப்பலுக்குள் இருந்த என்னோடு கப்பல் போர் நடக்கும் இடத்திற்குச் சென்று விட்டது. இவ்வாறு போர்க்கப்பலில் சென்ற நான் கடற்கரை யிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்திற்குச் சென்றேன். அங்கு நடந்த Mock drill எனப்படும் போர் ஒத்திகையையும் கண்டேன். ''போர்'' முடிந்து ''எதிரிக்கப்பல்'' விரட்டியடிக்கப் பட்டது. அதன் பிறகு மாலை 7 மணிக்கு Naval Dockyard எனப்படும் கப்பல்கள் தங்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தேன். நடுக்கடலில் கடல் எவ்வாறு கொந்தளிப்பின்றி இருக்கு மென்பதை கடல் பயணம் செய்த இந்த அனுபவத்தின்மூலம் நான் பெற்றேன். கப்பற்படையைச் சாராத ஒருவர் மாதிரிப் போர் ஒத்திகையைக் காண்பதற்கு இந்த நிகழ்ச்சி உதவியது. இந்தியாவின் முதல் நீர் மூழ்கிக் கப்பலுக்கு என்று மிகவும் சுத்திகரிக்கப்பட்ட டீசல் எண்ணெய் ஏற்றப்பட்டபோது நான் அந்த செயல்களை மேற்பார்வை இட்டு வந்தேன். நீர்மூழ்கிக் கப்பலின் உள்ளே சென்று பார்க்கும் பேறும் எனக்குக்

கிட்டியது. ஒத்திகை களின் முடிவில் I.N.S. Vikrant என்னும் போர்ப்படை விமானங்களை தன்னகத்தே கொண்ட போர்க்கப்பல் பொதுமக்கள் சென்று பார்ப்பதற்காக Coal Jetty எனப்படும் பகுதியில் நங்கூரமிட்டிருந்தது. இதே கப்பலுக்கு 1982ஆம் ஆண்டு சென்னைத் துறை முகத்திற்கு அண்மையில் அமைந்திருந்த ராயபுரம் Bunker Terminal இல் பணிபுரிந்து கொண்டிருந்தபோது L.S.H.F. Fuel ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 287) தனித்தெலுங்கான வேண்டி எழுந்த கிளர்ச்சி

1956ஆம் ஆண்டு ராயல்சீமா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. பல ஆண்டுகள் நிஜாமின் ஆட்சியின்கீழ் இருந்து வந்தது தெலுங்கானாப் பகுதி. இவ்வாறு ஆந்திரமாநிலம் உருவாக்கப்பட்ட போது பொரு ளாதார ரீதியில் பின்தங்கிய பகுதியாக விளங்கியது தெலுங் கானா. 1967ஆம் ஆண்டு தனித்தெலுங்கானா கோரிக்கை வலுப்பெற்றது. 1969ஆம் ஆண்டு இந்தக் கோரிக்கை வலுப் பெற்று தெலுங்கான பகுதி முழுவதிலும் பல்வேறு வகைப் போராட்டங்கள் நிகழ்ந்தன.

## 288) விசாகப்பட்டினத்தில் இரும்பு உருக்கு ஆலை நிறுவ நடைபெற்ற கிளர்ச்சி

1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விசாகப் பட்டினத்தில் இரும்பு உருக்கு ஆலை அமைக்க வேண்டு மென்ற கோரிக்கையை முன்வைத்து பெரியதொரு போராட்டம் நிகழ்ந்தது. சாலைமறியல், ரயில்வண்டிகளை நிறுத்துவது, கடைகளில் புகுந்தது. சாலை மறியல் ரயில் வண்டிகளை நிறுத்துவது, கடைகளில் புகுந்து கொள்ளை



யடிப்பது, அலுவலகங்களில் புகுந்து ஆர்ப் பாட்டம் செய்வது போன்றவற்றில் மாணவர்களும், மக்களும் ஈடுபட்டு வந்தனர். விசாகப்பட்டினம் ரயில் நிலையத்திற்குத் தீ வைக்கப்பட்டது. விசாகப்பட்டினம் கலங்கரை விளக்கம் மற்றும் வானொலி நிலையம் ஆகியவற்றிற்கும் தீ வைக்கப் பட்டது. விசாகப்பட்டினம் வழியாகச் செல்லும் ரயில்கள் வேறு பாதைகளில் செலுத்தப்பட்டன.

மத்திய அரசு தலையிட்டு இரும்பு உருக்கு ஆலை அமைக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த பின் இந்தப் போராட்டம் முடிவிற்கு வந்தது. அப்போது மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு. அபிட் உசேன் என்பவர் இந்தப் போராட்டத்தின்போது செயல்பட்டதை அனைவரும் வியந்து பாராட்டினர். இவர் பின்னாட்களில் திட்டக்கமிஷன் உபதலைவ ராகவும், அதன்பிறகு அமெரிக்காவில் இந்தியத் தூதராகவும் பணியாற்றி வந்தார். இந்தப் போராட்டத்தின்போது எண்ணெய்க் கிடங்கிற்குச் சென்று வருவதற்குச் சரியான பேருந்து வசதிகள் அமைந்திருக்கவில்லை. கடைத் தெரு விற்குச் செல்பவன் உயிரோடு வீடு திரும்புவானா என்ற அச்சம் எங்கும் நிலவியிருந்தது.

## 289) பீஹாரில் பஞ்சம்

இதே காலகட்டத்தில் வடநாட்டில் பீஹார் மாநிலத்தில் வரலாறு காணாத பஞ்சம் நிலவியிருந்தது. பழங்குடி மக்கள் அதிக அளவில் வாழும் Monghyr மாவட்டத்தில் மக்கள் பலவகைப்பட்ட கிழங்கு களைத் தின்று உயிர் வாழ்ந்து வந்தனர். உயிர்நிலைப்பதற்குத் தேவையான குடிநீர், கால் நடைகளுக்குத் தீவனமான வைக்கோல் மக்களுக்குக்

கிடைக்கவில்லை. ஏழை மக்கள் தாங்கள் உண்பதற்கான உணவுப்பொருள்களை ஆங்காங்கே கொள்ளை யடித்து சேகரித்துக் கொண்டனர். இந்தியாவின் பொருளாதாரம் பல வகையிலும் பாதிப்பை அடைந்தது.

## 290) பசு வதைத் தடுப்புச் சட்டம் இயற்றக்கோரி எழுந்த போராட்டத்தில் வெடித்த வன்முறை

1966ஆம் ஆண்டு நாடெங்கும் பசுவை உணவாகக் கொள்வதற்குக் கொல்லப்படுவதை எதிர்த்து மிகப்பெரிய தொரு போராட்டம் வடஇந்தியாவில் நடைபெற்றது. 6.11.1966ஆம் நாள் டில்லி மாநகரில் 1லட்சம் சாதுக்களும், பொதுமக்களும் கைகளில் திரிசூலத்தையும், ஈட்டிகளையும் ஏந்திக்கொண்டு ஒன்று திரண்டனர். ஊர்வலத்தின் முடிவில் பெரியதொரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ராமேஷ் வராநன் என்பாருடைய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவர் தம்முடைய உரையில் பசு வதைத்தடைச் சட்டம் உடனடியாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பாராளு மன்றத்தில் முற்றுகையிடுமாறு அறை கூவல் விடுத்தார்.

பாராளுமன்றத்தைச் சுற்றிலும் காவல் காத்து வந்த காவல்துறையினர் மீது பொது மக்களும், சாதுக்களும் கற்களையும், ஈட்டிகளையும், திரிசூலத்தையும் எறிந்தனர். இதன் விளைவாகப் பெரியதொரு கலவரம் நிகழ்ந்தது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் ஆத்திரம் அடைந்த சாதுக்கள் தாங்கள் சென்ற வழியில் காணப் பட்ட பல்வேறு அரசு அலுவலகங்களையும், வானொலி நிலையத்தையும், திரு.காமராஜரின் இல்லத்தி னையும் தீ வைத்துக் கொளுத்தினர். 250 கார்கள், 150



இருசக்கர வண்டிகள் எரிக்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டு நடந்த மதக்கலவரங்களுக்குப் பிறகு மிகப்பெரிய அளவில் வன்முறை வெடித்தது 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்தான்.

'நக்சலைட்டுகள்' என்ற பெயரில் தற்போது தீவிர வாதத்தில் ஈடுபட்டுள்ளனர் ஒரு கூட்டத்தினர். 1967ஆம் ஆண்டுதான் மேற்கு வங்காள மாநிலத்தில் 'நக்சல்பாரி' என்ற ஊரில் போராடியவர்களுக்கு இந்தப்பெயர் வழங்கப் பட்டது. அந்தச்சொல் தற்போது அரசிற்கு எதிராகப் போராடும் அமைப்பாய் வளர்ச்சி பெற்றுள்ளது. 'நக் சலைட்டு'களை எவ்வாறு ஒடுக்குவது என்பதில் ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேஷ், பீஹார், சட்டீஸ்கர், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் தடுமாற்றம் கொண்டுள்ளன. இவர்களுடன் 'மாவோயிஸ்ட்டுகள்' என்றதொரு தீவிரவாதக் கூட்டமும் பெருமளவில் வன்முறையில் ஈடுபட்டு வரு கின்றது. ***(அவ்வப்போது மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஒரு கூட்டத்தைக் கூட்டுவார். இந்தப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டுமென்று அரசியல் தலைவர்கள் முழக்கமிட்டு விட்டுச் சென்று விடுவர். அதன்பிறகு எந்த முன்னேற்றமும் காணப்படாது. நக்சலைட்டுகளை உருவாக்குவதே சுரண்டலில் ஈடுபட்டிருக்கும் நம் அரசியல்வாதிகள் தான். வறுமையிலேயே வாடிக்கொண்டிருக்கும் பழங்குடி மக்களுக்கு அரசு அறிவிக்கும் எந்தத் திட்டங்களும் சென்றடைவதில்லை. அரசியல்வாதிகள் தான் அந்தத் திட்டங்களை நடைபெறச் செய்யாமல் தடுத்து விடுகின்றனர்.)***

## 291) நக்சலைட்டுகள் உருவான உருவாக்கப் பட்ட வரலாறு

1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் விளைவாக

மேற்குவங்காளத்தில் ‘பாங்ளா’ காங்கிரஸ் கட்சியினை தலைவரான திரு.அஜாய் முகர்ஜியுடன் இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகள் இணைந்து மந்திரி சபை அமைத்தனர். இதன் விளைவாக ஜோதிபாசு துணை முதலமைச்சரானார். அந்த ஆண்டுதான் டார்ஜீலிங் மாவட்டத்தில் நிலஉரிமைப் போராட்டம் தொடங்கியது. அந்த மாவட்டத்தின் மேற்கெல்லை நேபாள நாட்டின் ஒரு பகுதியாகும். கிழக்கில் பாகிஸ்தானும் ***(பாகிஸ்தானின் ஒரு பகுதியாக விளங்கியது கிழக்கு வங்காளம். முஜிபூர் ரஹ்மான் தலைமையில் அங்கு நிகழ்ந்தக் கிளர்ச்சியின் விளைவாக பங்களாதேஷ் உருவானது)*** மற்றைய திக்குகளில் திபெத், பூடான், சிக்கிம் ஆகிய நாடுகளின் எல்லையோரப் பகுதிகள் இருந்து வந்தன. எங்கு நோக்கிலும் தேயிலைத் தோட்டங்களையே காணலாம்.

பெரும்பாலான நிலப்பகுதிகள் ஆங்கிலேயேக் குடி மக்களுக்குச் சொந்தமாக இருந்தன. அந்தப் பகுதியில் நில உரிமைப் போராட்டங்கள் பெருமளவில் நிகழ்ந்து வந்தன. டார்ஜிலிங் மாவட்டத்தின் ஒரு பகுதியான ‘நக்சல்பாரி’யில் கிரிஷக்சமிதி என்னும் ஓர் அமைப்பு இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. கனுஸந்யால் என்னும் மத்தியதர வகுப்பைச் சார்ந்த ஒருவர் இந்த இயக்கத்தின் தலைவராக விளங்கி வந்தார். ஏழை மக்களை வெளியேற்றி உணவுப்பொருள்களைப் பதுக்கி வந்த நிலச்சுவான்தார்களுக்கு எதிரான போராட்டத்தில் சமிதி ஈடுபட்டிருந்தது. அவ்வாறு நடந்த ஒரு போராட்டத்தின் போது காவல் துறையைச் சார்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நடந்த போராட்டத்தின்போது ஏழை விவசாயிகள் ஆயுதங்களை ஏந்தி நிலச்சுவான்தார்கள் பலரின் தலைகளைச் சீவிச் சாய்த்தனர். தாங்கள் சார்ந்துள்ள இடதுசாரி



கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் அமர்ந்து இருப்பதால் தங்களுக்கு நியாயம் கிடைக்கு மென்று நக்சல்பாரி விவசாயிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் நம்பிக்கைப் பொய்த்துவிட்டது. சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி அப்போதைய அரசாங்கம் 1500 காவலர்களை நக்சல்பாரியில் தங்க வைத்தது. கனுஸந்யால் சிறையில் அடைக்கப்பட்டார். மற்றைய போராளிகள் அடர்ந்த காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

நிலச்சுவான்தார்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்குச் சொல்லொணாத் துன்பங்களை அளிப்போர்களை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு ‘நக்சலைட்’ என்ற பெயர் சூட்டப்பட்டது. கம்யூனிஸ்ட் சீன அரசு நக்சலைட்டுகளின் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்ததோடு மட்டுமல்லாமல் தேவையான ஆயுதங்களையும் எல்லையைத்தாண்டி அவர்களுக்கு அளித்து வந்தது. இவ்வாறு மேற்குவங்கத்தில் தோன்றி ‘நக்சலைட் இயக்கம்’ ஆந்திர மாநிலத்தின் தெலுங்கானா மற்றும் ஸ்ரீகாகுளம் பகுதிகளில் பரவத் தொடங்கியது. ஸ்ரீகாகுளத்தில் பள்ளி ஆசியரான வேம்பட்டு சத்தியநாராயணா என்பவர் நக்சலைட்டுகளின் தலைவராக விளங்கி வந்தார். தெலுங்கானா பகுதியில் தரிமாலா நாகிரெட்டி என்பார் நக்சலைட் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். பல்வேறு பகுதிகளைக் கண்காணிப்பதற்கு ‘தளம்’ என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

மேற்குவங்கத்தில் அஜாய்முகர்ஜியின் தலைமையிலான ஆட்சி ஓர் ஆண்டு களுக்குமேல் நீடிக்கவில்லை. ஜனாதிபதி ஆட்சி அமுல் படுத்தப்பட்டது. மேற்கு வங்கத்தில்தான் Gherao எனப்படும் ‘அதிகாரிகளை இருக்கையில் வைத்து சிறைப்பிடிப்பது’ என்னும் புதுவகைப்

போராட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. (1969ஆம் ஆண்டின் முதல் ஆறுமாதத்தில் 1200 Gheraos மேற்கு வங்கத்தில் அரங்கேறின.)

## 292) Confrontation between the Parliament and the Judiciary

இந்திய அரசியல் சட்டம் இந்த நாட்டில் வாழும் குடிமகனுக்கு அடிப்படை உரிமைகள் பலவற்றை வழங்கி யுள்ளது. இந்திய நாட்டின் நாற்பெரும் தூண்களாக விளங்கு பவை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் அமைப்பான பார்லிமென்ட், உச்சநீதி மன்றம் மற்றும் அதன் மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ள நீதி மன்றங்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உண்மையை நிலை நாட்டப் பாடு படும் ஊடகங்கள். இவற்றில் அவ்வப்போது பார்லி மென்ட்டிற்கும், நீதித்துறைக்கும் இடையே மோதல்கள் நிகழ் வதுண்டு. உச்சநீதி மன்றத்திற்கு மட்டும் முழுமையான அதிகாரம் உண்டு என்றும், இல்லை இல்லை பார்லி மென்ட்டிற்குத்தான் முழு அதிகாரம் உண்டு என்றும், யாருக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அதிக முக்கியத்துவம் தந்துள்ளது என்பதைக் குறித்த தீர்ப்புகளும். அந்தத் தீர்ப்பினை இல்லையெனச் செய்வதற்கு புதுப்புதுச் சட்டங்கள் இயற்றப்படுவதும் இந்திய அரசியல் வானில் அவ்வப்போது நிகழும் விபத்துகளாகும்.

## 293) 24th Constitution amendment bill

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பலமுறை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு திருத்தத்திற்கு வித்திட்டது தான் 'கோகல்நாத் வழக்கு'. 1967ஆம் ஆண்டு பிப்ரவரி, 27ஆம் நாள் உச்சநீதி மன்றம் அளித்த ஒரு தீர்ப்பின் விளைவாக அடிப்படை உரிமைகளைப் பற்றிய இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1971ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அதுவே 24ஆவது அரசியல் அமைப்புச் சட்ட திருத்தமாக 1971ஆம் ஆண்டு பார்லி மென்ட்டில் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக Article 368இல் பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கு பார்லி மென்ட்டிற்கு முழுஅதிகாரம் உண்டு என்ற சட்டம் அமுலுக்கு வந்தது. கோகல்நாத் வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அறுவர் பார்லிமென்ட்டிற்கு இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரம் இல்லையென்றும், ஐந்து நீதிபதிகள் பார்லிமெண்ட்டிற்கு அந்த அதிகாரம் உண்டு என்று தீர்ப்பு அளித்தனர்.



## 294) ஆயிரம் கப்பல்களிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்த அபூர்வ சிந்தாமணி

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் தான் பணிபுரிந்து வந்தது Operations Department எனப்படும் பகுதியாகும். மக்களுக்கு வினியோகிக்கப்படவேண்டிய பல்வேறு எண்ணெய்களை Ships, Pipeline. Oil Tankers ஆகியவற்றின் மூலமாகக் கிடங்குகளில் சேமித்து மக்களின் தேவைக்காகப் பல்வேறு இடங்களுக்கு Oil Tankers, Tank Lorries, Barrels ஆகியவற்றில் நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும். விசாகப் பட்டினம் எண்ணெய்க்கிடங்கிற்கு ரஷ்யா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்ணெண் ணெய் மற்றும் டீசல் கப்பல்களில் கொண்டு வரப்பட்டன. முன்பே தெரி வித்தவாறு மேற்கு வங்காளத்திலுள்ள Haldia துறை முகத்திற்கு Hooghly ஆற்றின் ஆழத்தைப் பொறுத்து (Draft) அங்கு செல்லும் கப்பல்களிலிருந்து எண்ணெய் விசாகப்

பட்டினத்தில் இறக்கப்பட வேண்டும். இதன் விளைவாகப் பல இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள நேரிட்டது. எண்ணெய்க்கிடங்குகளில் குறிப்பிட்ட கொள்ளளவிற்கு மேல் நிரப்ப முடியாது. பாதுகாப்பு விதிகளின்படி ஒரு எண்ணெய் நிரப்பப் பயன்படும் கிடங்கில் (Storage Tank) 4,000 டன்தான் நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் இடமிருந்தாலும் அதன் கொள்ளளவைத் தாண்டி எண்ணெய் நிரப்பப்படக்கூடாது.

அதேபோல் மண்ணெய்ணெய் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு Storage Tankஇல் டீசலை நிரப்ப இயலாது. தரக்கட்டுப்பாடு மட்டும் இதற்குத் தடையல்ல. Customs நிர்வாகம் இதற்கு ஒப்புதல் வழங்கவேண்டும். ஒரு எண்ணெய்க் கப்பல் துறைமுகப்பகுதிக்கு வந்து சேர்ந்துவிட்டால் பல்வேறு இடையூறுகளைத்தாண்டிப் பணிபுரியவேண்டும். நான் இந்தியல் ஆயில் நிறுவனத்தில் பணிபுரிந்த 34 ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கப்பல்களிலிருந்து பல்வேறு வகைப்பட்ட எண்ணெய் களை இறக்குமதி செய்திருக்கிறேன். ஏற்றுமதியும் செய்திருக் கிறேன். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் நான் ஒரு ஆயிரம் கப்பல்களைக் கண்ட அபூர்வ சிந்தாமணி.

## 295) மறக்கமுடியாத அந்த ஞாயிற்றுக்கிழமை!

1963-68 கால கட்டத்தில் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணிபுரிந்த அனைவரும் நேரம் கருதாது, கடமை தவறாது பணி யாற்றி வந்தனர். Infrastructure எனப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் அதிக அளவில் அமைந்திராத காலமது. மண்ணெண் ணெய், டீசல், Furnace oil ஆகியவற்றை இறக்குமதி செய்யப் படும் கப்பல்கள் மூலமாகவோ அல்லது CORIL எனப்படும் Caltex எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து குழாய்கள் மூலம் storage tankகளில் நிரப்பப்படும். அவ்வாறு நிரப்பப்பட்ட எண்ணெயை 1966ஆம் ஆண்டு வரை பர்மாஷெல் கம்பெனி யால் பல ஆண்டுகளுக்கு முன் பொருத்தப்பட்ட டீசல் இன்ஜின்களைக் கொண்டுதான் லாரிகளில் நிரப்பிக் கொள்ள வேண்டும். பல நாட்கள் இந்த இன்ஜின்களை Start செய்வதற்காகப் பொருத்தப்பட்ட சக்தி வாய்ந்த பாட்டரிகள் செயல் இழந்துவிடும். அப்போதெல்லாம் எண்ணெய் நிரப்ப வரும் லாரிகள் ‘‘ரத்ததானம்’’ செய்வதுபோல ‘‘பேட்டரி தானம்’’ செய்ய வேண்டும். இந்தத் தானம் முறை வைத்து ஒவ்வொரு லாரியிடமிருந்து பெறப்படும். காலையில் Start செய்யப்பட்ட இன்ஜின், லாரிகளில் எண்ணெய் நிரப்பும் பணிமுடியும் வரை ஓடிக் கொண்டேயிருக்கும். அவ்வப் போது அதற்குத் தேவையான டீசல் எவ்விதக் கட்டணமும் செலுத்தப்படாமல் அதில் நிரப்பப்படும். இவ்வாறு உபயோகத்தில் கொள்ளப்படும் டீசலுக்கு own use என்ற தலைப்பில் கணக்கு எழுதி விடுவோம்.



ஞாயிற்றுக்கிழமையானால் அது ஒரு சோதனை நாள். அன்றைய தினம் ஒரு அதிகாரியே அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிடவேண்டும். சோதனையாக அன்றைய தினம் 60க்கும் மேற்பட்ட oil wagonsகள் நிரப்பப்படவேண்டும். சுமார் 60 லாரிகள் நிரப்பப்பட வேண்டும். அவற்றிற்கான பில்களில் கையெழுத்திட வேண்டும், ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஒன்றரை கிலோமீட்டர் நடந்தே செல்லவேண்டும். உணவு உண்பதற்குக்கூட நேரம் கிடைக் காது. குடிநீர் வசதி இருக்காது. உணவு அருந்தியபிறகு மண்ணெண்ணெயில் தான் சில நாட்கள் கைகளை அலம்பிக்கொள்ள நேரிடும்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை Light Diesel Oil லாரி ஒன்றினை நிரப்பிக் கொண்டிருக்கும் போது எண்ணெய் ஓட்டத்தில் திடீர் அழுத்தம் ஏற்பட்டதால் லாரியின் மேலே பொருத்தப்பட்டிருந்த Hose எனப்படும் ரப்பர்குழாய் அந்த இடத்தினின்று விலகி என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள முடியாதபடி கீழே நின்றிருந்த என் தலை முதல் கால்வரை Light Diesel Oilஐ வாரி இறைத்தது. எனக்குப் பூச்சாண்டி வேஷம் போடப்பட்டது. ஒரு தொழிலாளி எங்கேயோ சென்று ஒரு சலவை சோப் வாங்கி வந்தார். கையெழுத்துப் போடமுடியாத நிலையில் அனைத்து லாரிகளும் நின்று விட்டன. எங்கேயோ ஒரு மூலையில் ஒரு பீப்பாயில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மழை நீரில் பலமுறை உடம்பைத் தேய்த்துக் கழுவி எண்ணெயில் ஊறவைக்கப்பட்ட பேன்ட் சட்டையை வெயிலில் காய வைத்து அணிந்துகொண்டு 3 மணிநேர தாமதத்தில் என் பணிகளைத் தொடங்கினேன்.

## 296) ஒரு ‘கறுப்பு ஆட்டை’க் கொன்றோம்.

அன்று எண்ணெய் ‘குளியல்’ கண்ட எனக்கு அதன் நாற்றம் என் உடம்பைவிட்டுப் போவதற்கு சில நாட்கள் ஆயின. தாங்கமுடியாத கண்ணெரிச்சலால் அவதிப்பட்டேன். இதுபோன்ற பல ஆபத்துக்களை அன்றாடம் ஒருவர் எதிர் கொள்ளவேண்டும். Hose களில் உள்ளே உள்ள மெல்லிய எஃகுக் கம்பிகள் எண்ணெய் நிரப்பும்போது ஏற்படுகின்ற திடீர் அழுத்தத்தினால் ஒன்று திரண்டு அந்த ரப்பர் குழாயின் உள்ளே பந்து போல் அடைத்துக் கொண்டு நிற்கும். ***(இந்த ரப்பர் Hoseகள் டெண்டர் முறை மூலம் வாங்கப் படுபவை. இவற்றின் தரத்திற்கு காகிதத்தில் மட்டும் உத்தர வாதம் இருக்கும். பொதுத்துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் இந்தத் தரக்குறைவு பற்றி யாரும் கண்டுகொள்வதில்லை/கவலை கொள்வதில்லை.)*** இதன் விளைவாக அந்த ரப்பர் குழாயில் எண்ணெய் ஓட்டம் தடைபடும். எண்ணெய் ஓட்டம் தடைபடுவதால் பம்ப்பின் அழுத்தம் அதிகரிக்கும். இதற்கு Back pressure என்று பெயர். ஏன் எண்ணெய், கப்பலுக்குள் செல்லவில்லை என்பதைக் கண்டறிவதற்கு பல மணி நேரங்கள் செல வழியும். கடும் வெய்யிலில் கந்தகத்துகள் மற்றும் நிலக்கரித் துகள்களின் நடுவே நடந்து சென்று ஒவ்வொரு வால்வையும் சோதனை செய்து அதன்பிறகு என்ன ஆயிற்று என்பதைக் கண்டறியவேண்டும்.



இவ்வாறு அடைப்பு ஏற்பட்ட ரப்பர்குழாய்களை எவ்வித தயக்கமுமின்றி நாலு துண்டாக வெட்டி கடலுக்குள் தூக்கி எறிய வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் ‘‘கருப்புஆடு’’ இன்னொருவர் உயிரை வாங்கிவிடும். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் கவனத்தோடு செயல்பட்டால்தான் ஆபத்துக்களையும், விபத்துக்களையும் தடுக்க இயலும்.

என்னுடைய 34 வருட அனுபவத்தில் நான் எதிர் கொண்ட நடைமுறைச் சிக்கல்கள் அவற்றைக் களைந்த விதம் பற்றி இந்தக் கட்டுரைத் தொடரில் அதிக அளவில் எழுதவிரும்பவில்லை. ஏனெனில் அது வாசகர்களுக்குப் புரிந்து கொள்ள முடியாத குறிப்புகளாக மாறிவிடும். ஆனால் இந்தியன் ஆயில் நிறுவனம் என்போன்ற பழுத்த அனுபவ வாதிகளைக் கொண்டு பெரும்பயன் பெறலாம். காரணம் அன்றையதினம் ஒவ்வொரு இன்னல்களுக்கும் நாங்களே தீர்வைக் கண்டுபிடித்து செயல்பட்டோம். பெரும்பாலான மேலதி காரிகள் Caltex, E.S.S.O. , Burma Shell போன்ற

அந்நிய ஆதிக்கத்தின் கீழான எண்ணெய்க் கம்பெனிகளில் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு எங்களைப் போன்ற பல்துறை அனுபவம் கிடையாது.

## 297) என்னுடன் பணிபுரிந்த தொழிலாளர்களைப் பற்றிய சில நினைவுகள்

என்னுடன் பணிபுரிந்த தொழிலாளிகளில் S. அப்பாராவ் என்பவன் திறமை படைத்தவன். 3 ஆட்கள் செய்யக்கூடிய வேலையை அவன் ஒருவனே தன் புத்தி கூர்மையால் எளிதாகச் செய்துவிடுவான். கப்பலில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்போது எண்ணெயின் ஓட்டத்தை அதாவது ஒரு மணிக்கு 500 கிலோ லிட்டர் என்ற அளவில் குழாய்களில் சென்று கொண்டிருக்கும் போது மிக நேர்த்தியாக ஒரு எண்ணெய் டாங்கிலிருந்து இன்னொரு எண்ணெய் டாங்கிற்கு Flying Switchover என்ற முறையில் மாற்றி விடுவான். இவ்வாறு செய்வதற்கு சமயோசித புத்தியும், விரைந்து செயல்படும் தன்மையும் தேவைப்படும். இதே போன்று நேரத்தை வீண் செய்யாது பயனுள்ள பணி ஏதேனும் செய்து கொண்டிருப்பார்கள் ஸ்ரீராமுலு, போத்தண்ணா, சிம்மாசலம் போன்றவர்கள்.

## 298) ''தாத்தாளு-Gang''

ஆள்பற்றாக்குறையை சமாளிப்பதற்கு அந்த ஊர் கட்டுப் பாட்டின்படி வெளியிலே கூடாரமிட்டிருக்கும் ''தாத்தாளு'' என்பவருடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 60 லேபர்களிடமிருந்து தான் வேலைக்கு பணியாட்களை எடுத்துக் கொள்ளமுடியும். வேறு இடத் திலிருந்தோ அல்லது வேறு ஊர்களிலிருந்தோ contract labour எனப்படும் இவர்களைப் பணியில் அமர்த்தமுடியாது. இந்தத் தாத்தாளு



என்பவர் ஆந்திராவிற்கே உரிய கச்சத்தோடும் பனியன் cum சட்டையோடும் காணப்படுவார். குட்டையானவர். அதிகாரி களிடம் மரியாதையுடன் பழகுவார். இவ்வாறு அமர்த்தப்படும் வேலையாட்கள் தாங்கள் பெறும் கூலியின் ஒரு பாகத்தை கட்டக் காணிக்கையாக தாத்தாளுவிடம் தந்திட வேண்டும். தாத்தாளு கேங்கில் சேருவதற்கு 'பகடி' எனப்படும் கட்டணம் செலுத்தப் படவேண்டும். Coal jetty எனப்படும் பகுதியில் அனைத்து தற்காலிக வேலையாட்களும் தாத்தாளு கேங்கைச் சேர்ந்தவர் களாகவேயிருப்பார்கள். இதுபோல் துறைமுகத்தின் பல பகுதிகளில் பல 'லேபர்கேங்குகள்' காணப்படும்.

## 299) மற்றைய அலுவலக நண்பர்களும், அவர்கள் மேற்கொண்டு வந்த பணிகளும்

அலுவலகத்தில் என்னுடன் பணிபுரிந்த திரு. மல்லேச்வர ராவ் ரயில்வேயில் கார்டாகப் பணிபுரிந்தவர். இவர்தான் Customs and Excise துறையுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது அதற்குரிய கையெழுத்திடப்பட்ட ஆவணங்களைப் பெற்று வருவார். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருளுக்கு வரிகட்டியபிறகே உபயோகத்தில் கொள்ளமுடியும். இதுபற்றி முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன். Yellow bill of entry என்ற ஆவணத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற வேண்டும். எண்ணெய்ப் பொருள்கள் Storage Tankஐ வந்தடைந்த பிறகு இவ்வளவு கிலோ லிட்டர் எண்ணெய் வந்து சேர்ந்துள்ளது என்பதற்கு Outturn எனப்படும் வரவுச்சீட்டு தயாரிக்கப்பட வேண்டும். அதன்பிறகு அவ்வப்போது உபயோகத்தில் கொள் வதற்காக முன்கூட்டியே 3000 கி.லிட்டர் அல்லது 2000 கி.லிட்டருக்கு Customs அலுவலகத்தில் Green Bill of entry எனப்படும்

ஆவணத்தைத் தயார் செய்து அதற்குரிய பல லட்சம் ரூபாய் வரியைச் செலுத்தியபிறகே விற்பனை செய்ய இயலும்.

1963-68 கால கட்டத்தில் இத்தகைய பெருந் தொகையை மும்பையிலிருந்து தலைமை அலுவலகம் விசாகப்பட்டினத்திலுள்ள S.B.I. அலுவலகத்திற்கு அனுப்பும். அதன்பிறகு அந்தப் பணத்தை customs accountஇல் செலுத்த வேண்டும். இந்தச் செயல்களை எல்லாம் ஒழுங்கு படுத்துவது என்பது அத்துணை எளிதல்ல. பொறுமை, அதிகாரிகளிடமும், பிற அலுவலக ஊழியர் களிடமும் பணிந்து போகும் தன்மை, வேலை நேரம் முடிந்தபிறகும் வங்கி அதிகாரிகளிடம் காசோலைக்குப் பணம் பெறுதல் போன்ற செயல்களைச் செய்யும் நபர் பணிவுடன் செயல்படுபவராக இருக்கவேண்டும். இவை யனைத்தும் மல்லேச்வர ராவிடம் இருந்ததால் பல இன்னல் களைக் கடந்து எவ்விதத் தொய்வுமுமின்றி செயல்பட்டு வந்தோம். ஆனால் மல்லேச்வர ராவ் அடுத்த சில ஆண்டுகளில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அச்சுதராம் என்பவருக்கு புனைபெயர் ''பொட்டி வாடு'' என்பதாகும். அதற்குத் தமிழில் 'குள்ளன்' என்று பொருளாகும். 1 மணி நேரத்திற்கு 6 சிகரெட்டுகளை ஊதித் தள்ளுபவன். ***(ஆந்திர பிராமணர்களிடையே புகைபிடிப்பது என்பது ஒரு இயல்பான நிகழ்ச்சி. அவர்கள் இதைத் தவறான செயலாகக் கொள்வதில்லை.)*** Supply and Distribution எனப்படும் மிக கடினமான பொறுப்புள்ள வேலையை மேற்கொண்டு வந்தவன் இவன். யாரிடமும் அளவிற்கு மீறி பேசமாட்டான். அனைத்து Installation Managerகளாலும் விரும்பப் படுபவன். அவனுடைய கையெழுத்து பெயருக்கேற்றார் போல அச்சுக்கோர்த்தது போல் இருக்கும். 1967ஆம் ஆண்டு



இவன் ஒரு மாத விடுப்பில் சென்றிருந்தபோது இவனுடைய இந்தப் பணியை வெற்றிகரமாக நான் செய்து முடித்தேன். S.I. ஷெரீப் என்பான் இவனுடைய உதவியாளன். T.S. Rama swamy பர்மா ஷெல்லில் பணியாற்றியவர். Accountant ஆகப் பணிபுரிந்து வந்தார். P.C.K. சாஸ்திரிக்கு 'ஸ்டோர்ஸ் சாஸ்திரி' என்று பெயர். கடப்பா சாஸ்திரி எனப்படும் K.V. சாஸ்திரி Oil accounting வேலையைச் செய்து வந்தார். K.ராமமூர்த்தி customs and excise வேலைகளைத் திறம் பட செய்து வந்தார். G.V.S. அவதானி காசாளர். நான் Gauger பதவியில் அமர்வதற்கு முன்பு அந்தப் பதவியில் இருந்தவர் S.மோசஸ். இவர் ஒவ்வொரு முறையும் பதவி உயர்வு பெறும்போது நானும் பதவி உயர்வு பெற்றுவந்தேன். மிகச் சிறந்த உழைப்பாளி. விசாகப் பட்டினத்திலேயே பிறந்து வளர்ந்து புகழ்பெற்ற A.V.N. கல்லூரியில் demonstrator ஆகப் பணிபுரிந்து வந்தவர். S.H. Krishna Rao என்பவர் மற்றொரு சூப்பர்வைசர். 1966ஆம்ஆண்டு ஜூன் மாதம் நான் சூப்பர்வைசராகப் பதவி உயர்வு பெற்றேன்.

## 300) 1966-67ஆம் ஆண்டுகளில் இந்திரா காந்தி எதிர் கொண்ட இன்னல்கள்

லால்பகதூர் சாஸ்திரியின் அகால மரணத்திற்குப் பிறகு இந்தியப் பிரதமராகப் பதவி வகித்தவர் திருமதி இந்திராகாந்தி. தமது 48ஆவது வயதில் அவர் பாரதப் பிரதமரானார். 1984ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் அவருடைய பாதுகாப்புப்பணியில் ஈடுபட் டிருந்த சீக்கிய மதத்தைச் சார்ந்த காவலர் ஒருவரால் சுட்டுக் கொல்லப் பட்டவர். இவருடைய ஆட்சி காலத்தில் நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் அரங்கேறி உள்ளன. நாட்டில் நிலவிய பஞ்சத்தின் விளைவாக அமெரிக்காவில் இருந்து கோதுமை

P.L. (Public Law) 480 என்னும் திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டது. மேற்கு வங்காளத்தில் நிலவியிருந்த உணவுப் பஞ்சத்தின் காரணமாக பெரும் கலகம் மூண்டது. அந்தக் கலகத்தை அடக்குவதற்கு ராணுவத்தின் உதவி நாடப்பட்டது. உணவுத் தானியங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து வந்த மாநிலங்கள் அவற்றை தேவைப்படும் மற்றைய மாநிலங்களுக்கு விற்க மறுத்தன.

வடகிழக்குப் பகுதியில் நாகா இனத்து மக்களும், மிசோராம் பகுதி மக்களும் தனிநாடு கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்பு அரசியல் தீயாக எங்கும் பரவி அதில் குளிர் காய்ந்து வந்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். சண்டிகர் நகரை தலைநகராகக் கொண்ட பஞ்சாப் மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று தீவிர கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் பஞ்சாப் மொழிபேசும் மக்கள். மக்களவையில் பேசா மடந்தையாய் பணியாற்றி வந்த இந்திராகாந்தியை ராம்மனோகர் லோகியா என்னும் எதிர்க் கட்சித்தலைவர் "Goongi gudia" (Dumb doll) என்று வர்ணித்து வந்தார்.

## 301) Indo American Educational foundation

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்திராகாந்தியின் அமெரிக்க விஜயம் நடைபெற்றது. பலருடைய எதிர்ப்பு களையும் மீறி அமெரிக்கா உணவுதானியங்களை இந்தியா விற்கு அளித்ததன் மூலம் பெறப்பட்ட கோடிக்கணக்கான இந்திய ரூபாய்களைக் கொண்டு ***(இந்தியப் பொருளாதாரம் மிகச் சீர்கேடான நிலையில் அந்தக் காலகட்டத்தில் அமைந் திருந்தது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு டாலர்களைக் கொண்டு பணம் செலுத்து***



***வதற்கு இந்தியப் பொருளாதாரச் சூழல் இடம் கொடுக்க வில்லை.)*** வேண்டிய அளவு உணவு தானிங்களைக் கொடுத்து உதவிய அமெரிக்கா, அதன் வழிபெறப்பட்ட இந்திய ரூபாய் களைக் கொண்டு இந்திய நாட்டிலேயே Indo American Educational foundation என்றவொரு அமைப்பை உருவாக்குவதற்கு இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து அறிஞர் களும் உயர் கல்வித்துறையைச் சார்ந்தோர்களும் போராட்டங் களை நிகழ்த்தினர். அதன் விளைவாக இந்த ஒப்பந்தத்தின் அமலாக்கம் கைவிடப்பட்டது. வியட்நாமில் அமெரிக்காவின் செயலை ஆதரித்துப்பேசிய இந்திராகாந்திக்கு உலகெங்கும் எதிர்ப்பலைகள் உருவாகின.

## 302) I.M.F.இன் வழிகாட்டுதல்படி இந்தியப் பொரு ளாதாரக் கொள்கைகள் சீரமைக்கப்பட்டன.

இந்தியப் பொருளாதாரக்கொள்கை இன்டர்நேஷனல் மானிடரி பன்ட் எனப்படும் I.M.F விதித்த விதிகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது. இதில் வேடிக்கையென்ன வென்றால் லால்பகதூர் சாஸ்திரி பிரதமராய்ப் பணியாற்றிய போது I.M.F.இன் கோட்பாடுகளுக்கு ஏற்ப இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று எண்ணம் கொண்டார் அப்போது அதை எதிர்த்தவர் இந்த இந்திராகாந்தி அம்மையார்தான்.

## 303) Indian Rupee was devalued

5.6.1966ஆம் நாள் இந்தியப் பொருளாதாரத்தை மேலும் சிதைவுறச் செய்யும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி Johnsonஉடன் இந்திராகாந்தி செய்து கொண்ட ரகசிய ஒப்பந்தத்தின்

விளைவாக இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு 35 சதவிகிதம் குறைக்கப்பட்டது. நாடெங்கும் இந்தச் செயலுக்குப் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பெருந் தலைவர் காமராசர் இந்தச் செயலுக்கு கண்டனம் தெரிவித்த தோடு மட்டுமல்லாமல் அமெரிக்க ஏகாதிபத்யத்திற்கு இந்தியா தலை வணங்கி தன் தன்மானத்தை அடகு வைத்துவிட்டதற்கு ஒப்பாகும் என்று இந்தச் செயலைக் குறை கூறினார். ‘‘ஒரு பெரிய மனிதரின் பெண்ணான இந்திரா காந்தியின் அற்பச்செயல் இது’’ என்று அவர் வர்ணித்தார். பாரதப் பிரதமராக இந்திராகாந்தி பதவி ஏற்பதற்கு தாம் செய்த உதவி தவறு என்று மனம் வருந்தினார். திரு. C. சுப்ரமண்யம் மற்றும் திரு. அசோக்மேத்தா ஆகியோர் இந்திராகாந்தியால் புறக்கணிக்கப்பட்டனர்.

## 304) குல்சாரிலால் நந்தா அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்.

பசுவதைச் சட்டம் கொண்டுவரக்கோரி சாதுக்கள் நிகழ்த்திய போராட்டத்தை சென்ற இதழில் குறிப்பிட்டி ருந்தேன். இந்தப் போராட்டத்தின் விளைவாக டெல்லி முழுவதும் கலவரம் வெடித்தது. இதைக் காரணம்காட்டி உள்துறை மந்திரியான குல்சாரிலால் நந்தா பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதற்கு காரணமாய் இருந்த நிதி அமைச்சர் திரு. சச்சின் சௌத்ரியும் பதவியை விட்டு விலக நேரிட்டது. இந்த நிலையில்தான் 1967ஆம்ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பல தொகுதிகளில் தோல்வியைத் தழுவியது. 520 அங்கத்தினர்கள் கொண்ட மக்களவையில் காங்கிரஸ் கட்சி 283 இடங்களையே பெற முடிந்தது. ஆனால் இந்தத் தேர்தலில் S.K. பட்டீல், அட்டுல்ய கோஷ் போன்றோர்



தோல்வியைத் தழுவியது இந்திராகாந்திக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1967ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு அமைந்த மந்திரி சபையில் திரு. மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராகப் பதவியேற்றார்.

## 305) ஒரு பங்குனி உத்தர நாளில் ருக்மிணியுடன் விவாஹம் நடைபெற்றது

1967ஆம்ஆண்டு மார்ச் 27ஆம் நாள் திருவிண்ண கரப்பன் ஸந்நிதியில் (பங்குனி உத்தர நாளன்று) எனக்கும்,சௌ. ருக்மிணிக்கும் விவாஹம் நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்குக் குல தெய்வமாய் விளங்குபவர் ஒப்பார் இல்லதோர் அப்பனான திருவிண்ணகரப்பன். திருமணச் செலவு அனைத்தும் பிள்ளை வீட்டைச் சார்ந்தது. திருவிண்ணகரப்பன் திருக்கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள வில்லியவரம்பல் கிராமத்தில் கிராமக் கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்து வந்தார் என்னுடைய பெரியம்மா குமாரரான ஸ்ரீனிவாஸன். இவரைப் பற்றி நான் முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன். கல்யாணத்திற்கான மொத்த செலவு ஆயிரம் ரூபாய்தான். இதற்காக நான் வெளியில் கடன் வாங்கியது 450ரூபாய். இதை 9 தவணையில் மாதம் 50ரூபாய் வீதமாக செலுத்தி வந்தேன். அந்தக்கால கட்டத்தில் பெரிய பெரிய திருமண மண்ட பங்கள் கிடையாது.

திருவிண்ணகரப்பன் ஸந்நிதித் தெருவில் அமைந்திருந்த ஒரு வீட்டை 2 நாள் வாடகைக்கு எடுத்துக் கொண்டோம். வாடகை ரூபாய் 50/- அங்கேயே சாப்பாட் டிற்கான வசதிகளையும் செய்துகொள்ள வேண்டும். திருவிண்ணகரைச் சுற்றி அமைந்துள்ள பல கிராமங்களில்

தாருடன் கூடிய ஒரு வாழை மரம் அந்தக்கால கட்டத்தில் ரூபாய் மூன்றிற்குக் கிடைக்கும். கும்பகோணம் காய்கறிச் சந்தையில் மிக மலிவான விலையில் காய்கனிகள் விற்கப்படும். ஒரு தார் வாழையின் விலை 10ரூபாய்தான். அரிசி படி ஒன்றிற்கு 2ரூபாய். எண்ணெய் வகைகள் ஒருகிலோவிற்கு 2 ரூபாய். தேங்காய் எண்ணெய் மட்டும் 1 கிலோ 4 ரூபாய். தளிகை செய்வதற்கு உறவினர்களில் யாரேனும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய முன்வருவார்கள். மாப்பிள்ளை அழைப்பு கிடையாது. திருவிண்ணகர் ஸந்நிதியில் திருவுண்ணாழி பிரதக்ஷி ணத்தில் கல்யாண சடங்குகள் நடைபெறும். இப்போது உள்ளது போல் விரிவு படுத்தப்பட்ட வெளி மண்டபங்கள் கிடையாது. சனிக்கிழமை தவிர கோயிலில் கூட்டம் அதிக அளவில் காணப்படாது.

ஒப்பிலியப்பன் ஸந்நிதித் தெருவில் வாசம் கொண்டிருந்த கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ.உ.வே. நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி எங்களை ஆசீர்வதித்தார். ருக்மிணிக்கு S.S.L.C. தேர்வு நடந்து கொண்டிருந்த போது தான் கணிதத்தேர்விற்கு முதல் நாள் விவாஹம் நடைபெற்றது. அப்போது எனக்கு வயது 28. ருக்மிணிக்கு வயது 17. 11 வயது வித்யாசத்தில் இந்தத் திருமணம் நடைபெற்றது. **(ஆனால் இன்று இதை யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.)** திருவாரூரில் புகழ்பெற்று விளங்கிய பட்டு சாஸ்திரிகள் என்பார் தான் பாலூரார் குடும் பங்களில் நடைபெறும் அனைத்து மங்கல, அமங்கல காரியங்களுக்கு ப்ருஹஸ்பதியாக இருந்து வைதிக காரியங் களைச் செவ்வனே நடத்திக் கொடுப்பார். இவர் ஸ்ரீவைஷ் ணவர்கள் இல்லங்களில் உணவு உட்கொள்ளமாட்டார். சங்கர



மடம் போன்ற பொது இடங்களில் மட்டும்தான் உணவு உட்கொள்வார். இவர் உணவு உட்கொள்வதற்காக வேண்டிய அனைத்து மளிகைப் பொருள், காய்கறிகளையும் அவர் எங்கே தங்கியிருக்கிறாரோ அந்த இடத்தில் சேர்ப்பித்துவிடுவார்கள். பாலூரார் குடும்பங்களில் உள்ள அனைத்துப் பெண்களையும் ஆண்களையும் பெயர் சொல்லியே அழைத்திடுவார் இவர்.

## 306) விசாகப்பட்டினத்தில் தனிக்குடித்தனம்

விவாஹம் முடிந்த அடுத்த நாள் மன்னார்குடிக்குத் திரும்பினோம். நான் உடனடியாக விசாகப்பட்டினத்திற்கு திரும்பி வந்துவிட்டேன். 4 மாதங்கள் கழித்துதான் தனிக் குடித்தனம் வைக்கப்பட்டது. திருவாரூரைத் தாண்டி ரயிலில் பயணம் மேற்கொண்டிராத ருக்மிணி மொழி தெரியாத, 1000கி.மீட்டருக்கு அப்பால் உள்ள விசாகப்பட்டினத்திற்கு அழைத்து வரப்பட்டாள்.

## 307) சிவசேனா கட்சியும், அவர்கள் தென்னிந்தி யர்களுக்கு இழைத்த கொடுமைகளும்.

பஞ்சாபில் எழுந்த கிளர்ச்சி போல மஹாராஷ்டிரத்தில் பால் தாக்கரேயின் சிவசேனா 1967ஆம்ஆண்டு எழுச்சி பெற்றது. 'சம்யுக்த மகாராஷ்டிர சமிதி' என்ற ஓர் அமைப்பின் மறு வடிவமே சிவசேனா. புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட் ஆக விளங்கிய பால்தாக்கரே சிவசேனா கட்சியினைத் தொடங்கித் தென்னிந்தியர்கள் மும்பை மாநகரத்தில் இருந்து விரட்டப் படவேண்டும் என்றும், மஹாராஷ்டிரர்களுக்கே மும்பை மாநகர் சொந்தம் என்றும், மராத்தி மொழியே அனைத்து பள்ளிகளிலும் போதிக்கப்படவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து வந்தனர். வேட்டி கட்டும் தென்னிந்தியர்களை ஒழித்துக் கட்டுவோம் என்பதே அவர்களுடைய முழக்க மாயிருந்தது.

தமிழர்களுக்கும் கன்னடியர்களுக்கும் சொந்தமான உணவு விடுதிகள் தாக்கப்பட்டன. மும்பையைச் சுற்றியிருந்த பஞ்சாலைகளில் மேலாதிக்கம் செலுத்தி வந்த கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 'இந்தியாவின் வணிகத்தலைநகரம்' என்று அழைக்கப்படும் மும்பை மாநகர் சிவசேனையின் இத்தகைய செயல்களால் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஆயினும் படித்து வேலையில்லாத மஹாராஷ்டிர பட்டதாரிகளின் ஆதரவு கொண்டு சிவசேனா 1968ஆம்ஆண்டு நடைபெற்ற மும்பை முனிசிபல் தேர்தலில் 42 இடங்களைக் கைப்பற்றியது. நாடெங்கும் முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் 220 இடங்களில் மோதல்கள் நிகழ்ந்தன. அற்பமான காரணங்களை முன்வைத்து இந்த மோதல்கள் நிகழ்ந்தன.

மசூதிக்கு முன்பு நாதஸ்வரம் வாசிக்கப் பட்டது என்று முகம்மதியர்களும், இந்துக் கோயில்களுக்கு அண்மையில் பசுவதை செய்யப்பட்டது என்றும் ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சுமற்றிக்கொண்டு இருதரப்பினரும் மதக்கலவரங்களில் ஈடுபட்டிருந்தனர். முகம்மதியர்களை நோக்கி, ''பாகிஸ்தானுக்குக் குடி பெயர்ந்து செல்லுங்கள், இல்லையேல் உங்களைப் புதைகுழியில் சமாதி வைத்திடுவோம்'' என்ற கோஷம் இந்தக் கலவரங்களின் போது நாடெங்கும் ஒலித்தது.

## 308) இந்தியன் ஆயில் மேற்கொண்ட முதல் பெட்ரோலியப் பொருள் ஏற்றுமதி

விசாகப்பட்டினம் தாபா கார்டன் பகுதியில் நாங்கள் குடியிருந்தோம். காலையில் 8 மணிக்கு அலுவலகத்தில் இருக்கவேண்டும். அதற்கு இல்லத்தைவிட்டு காலை



7மணியளவில் கிளம்பினால்தான் சென்றடையமுடியும். மதிய உணவு கேரியரில் இதற்கென அமர்த்தப்பட்ட ஒரு பெண்மணி மூலம் அலுவலகத்தை வந்து அடையும். வீடு திரும்புவதற்கு இரவு 7 மணியாகிவிடும். அந்த ஊரில் அமைந்துள்ள மிகப்பெரிய கேளிக்கை சாதனம் திரை அரங்குகள்தான். சில சமயம் மொழி மாற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் படங்களைக் கண்டுகளிக்கலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணிக்குத் திரையிடப்படும் தமிழ்த்திரைப்படத்தைக் காண அனைத்துத் தமிழர்களும் ஒன்று கூடுவர்.

விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை பெட் ரோலியம் கார்ப்பரேஷனுக்கு 1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16,000 டன் பெட்ரோல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதி தான் இந்தியன் ஆயில் நிறுவனம் மேற்கொண்ட முதல் ஏற்று மதியாகும். Product Exchange எனப்படும் ஒப்பந்தத்தின்படி ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு சாலையிலிருந்து வேறொரு எண்ணெய்க் கம்பெனி தனக்குத் தேவையான எண்ணெய் வகைகளைப் பெற்றுக் கொண்டு, வாங்கும் எண்ணெய்க்கம்பெனிக்குச் சொந்தமான இடத்திலிருந்து அந்த எண்ணைய்க் கம்பெனிக்கு தேவைப்பட்ட எண்ணெயைத் திருப்பிக் கொடுக்கும். இந்தக் கொடுக்கல் வாங்கல் ஆண்டு முழுவதும் நடைபெறும். நிதியாண்டின் இறுதியில் அதாவது மார்ச் மாதத்தின் இறுதியில் நிலுவையில் திருப்பித் தர வேண்டிய எண்ணெய்க்குப் பணம் செலுத்தி அந்த கணக்கு முடிவிற்கு கொண்டு வரப்படும்.

இதன் அடிப்படையில் Gunnar Brovig என்னும் கப்பலில் 16,000 டன் பெட்ரோல் CORILலிருந்து

நிரப்பப்பட்டது. இந்தியன் ஆயில் நிறுவனத்தில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஏற்றுமதி தொடர்பான செயல்பாடுகளை யாரும் தெளிவாக எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. பல அலுவலகங்களை நாடி நானும் என் மேலதிகாரியான திரு. ஸ்ரீனிவாசனும் அறிந்து கொண்டு இந்தக் கப்பலில் எண்ணெய் நிரப்பும் வேலையை மேற் கொண்டோம். இந்தக் கப்பலில் பெட்ரோல் நிரப்புவதற்கு 3 நாட்கள் ஆகின.

## 309) ருக்மிணி எங்கே சென்றாள்?

கப்பலில் எண்ணெய் நிரப்பப்படும்போது 2ஆம்நாள் இரவு சுமார் 8 மணிக்கு வீட்டிற்குத் திரும்பி வந்தால் அங்கே வீடு பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. கீழே குடியிருப்போரிடம் 'ருக்மிணி எங்கே சென்றுள்ளாள்' என்று கேட்டால் யாருக்கும் விடை தெரியவில்லை. ''நாக்கு தெலிய தண்டி'' (எனக்குத் தெரியாது) என்ற பதிலே கிடைத்தது. இரவு 8 மணிக்கு மேல் எங்கே போய்த் தேடுவது? என்று தெரியாமல் தெருமுனையில் தென்பட்ட சைக்கிள் ரிக்ஷாக் காரரிடம் தெலுங்கில் என் வீட்டைச் சுட்டிக்காட்டி 'அந்த வீட்டு அம்மாவை நீ ரிக்ஷாவில் எங்கேனும் அழைத்துச் சென்றாயா?' என்று கேட்டேன். அதற்கு அவன் ருக்மிணியை 3 கி.மீட்டர் தொலைவில் உள்ள கோஷா மருத்துவமனையில் கொண்டு போய்ச்சேர்த்தாகக் கூறினான். இந்தச் செய்தியை அறிந்து கொண்டு கோஷா ஆஸ்பத்திரிக்குச் செல்ல இரவு 10 மணியாகிவிட்டது. அவளுக்கு என்ன உடல் உபாதை ஏற்பட்டது என்பதைக் கூட என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

கோஷா ஆஸ்பத்திரிக்குச் சென்றால் அங்கே அனுமதி



மறுக்கப்பட்டது. ஏனெனில் அது பெண்களுக்கான தனி மருத்துவ மனையாகும். இரவில் ஆண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வரவேற்பறையில் இருந்த நர்ஸிடம் 'ருக்மிணி என்ற தமிழ்ப்பெண் இங்கே மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளாரா?' என்று வினவியதற்கு, அவள் 'உங்கள் மனைவிக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் நீங்கள் அவரை அடுத்த நாள் காலை 8 மணிக்குத்தான் சந்திக்க முடியும்' என்று கூறினாள். வேதனையுடன் வீடு திரும்பினேன்.

மறுநாள் காலை 7 மணிக்கு மேலாளர் திரு. ஸ்ரீநிவாசனிடம் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்து அன்று விடுப்புக் கேட்டேன். அதற்கு அவர் மறுத்துவிட்டார். ஏற்றுமதிக்கான எண்ணெய்க் கப்பலில் பெட்ரோல் நிரப்புவது முடியுந்தருவாயில் இருப்பதால் உடன் வந்து ஏற்றுமதிக்கான மற்றைய ஆவணங்களைப் பூர்த்தி செய்து கப்பலை வெளியில் அனுப்பியபிறகு மருத்துவமனைக்குச் செல்லலாம் என்று கூறிவிட்டார். உதவிக்கு யாரும் இல்லாத அந்த நிலையில் ஒரு மணிநேரம் தாமதமாக வருவதற்கு அனுமதி பெற்று மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கே என்னைப் பார்த்தவுடன் ருக்மிணி அழ ஆரம்பித்துவிட்டாள். அன்று முழுவதும் மருத்துவ மனையிலேயே நான் இருக்க வேண்டும் என்று மன்றாடினாள். என்னுடைய நிலைமையை விளக்கிக்கூறி அலுவலகம் செல்வதற்குப் பெரும்பாடாகி விட்டது.

உதவிக்கு யாரும் இல்லாத அந்த நேரத்தில் இருள்நீக்கி கிராமத்திற்குத் தந்தி மூலம் செய்தி அனுப்பி, அவளுடைய தாயாரை விசாகப்பட்டினத்திற்கு வரவழைப்ப

தற்கு மூன்று நாட் களாகிவிட்டன. அடுத்த நாள் இல்லத்திற்கு அழைத்து வந்து தேவையான நேரங்களில் மருந்துகள் கொடுத்து வந்தேன்.

## 310) Promoted to next Grade

1968ஆம் வருஷம் மே மாதம் Operations Officer Grade III என்ற பதவிக்கான நேர்காணல் சென்னையில் நடைபெற்றது. அப்போது Branch Operations Manager ஆகப் பணியாற்றி வந்தவர் திரு. G.S. Savoor என்பவர். கடின உழைப்பாளிகளை ஊக்குவிக்கும் குணம் கொண் டவர். 20 நபர்கள் கலந்து கொண்ட இந்த நேர்காணலில் நான் முதலிடத்தைப் பெற்றதால் பதவி உயர்வு பெற்றேன். பதவி உயர்வு பெற்ற என்னை செகந்திராபாத் நகரில் அமைந்துள்ள மெட்டுகுடா டெப்போவிற்கு பணி மாற்றம் செய்தனர்.

## 311) இந்திய கிரிக்கெட் அணி பெற்ற வெற்றி

1967-68 ஆண்டுகளில் மன்சூர் அலிகான் என்ற பெயர் கொண்ட Nawab of Pataudiஇன் தலைமையில் இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்த்ரேலியா நாட்டிற்கு டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றது. 1961-62 தொடங்கி இந்திய கிரிக்கெட் அணியில் சிறந்ததொரு ஆட்டக்காரராக விளங்கி வந்தவர் Nawab of Pataudi. 1961-62 ஆண்டுகளில் Ted Dexter தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு வருகை தந்தது. முதல் மூன்று போட்டிகள் யாருக்கும் வெற்றி தோல்வி யில்லாத நிலையில் டிராவில் முடிந்தது. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிரு ந்த Nawab of Pataudi இந்திய அணியை வலுப்படுத்து வதற்காக வரவழைக்கப்பட்டார். Allan and Lock போன்ற



புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர்களை எதிர் கொள்வதற்கு உரிய மட்டை வீரராக Nawab of Pataudi ஐத் தேர்ந்தெடுத் தனர் தேர்வுக்குழுவினர்.

அணித்தலைவர் Nari Contractor and Nawab of Pataudi ஆகிய இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி 4 மற்றும் 5ஆம் போட்டி களில் இந்திய அணி வெற்றி பெற்றது. சுழற்பந்து வீச்சாளரான Borde மற்றும் அணியின் ஆல்ரவுண்டரான Salim Durraniஉம் இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

## 312) Nari Contractorஇன் கிரிக்கெட் வாழ்வு முடிவுற்றது.

1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் Nari Contractor இன் தலைமையில் இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பயணத்தை மேற்கொண்டது. 17-3-1962ஆம் நாள் நடந்த டெஸ்ட் மேட்சின் போது Griffith வீசிய வேகப்பந்து Nari Contractor இன் தலையில் பட்டு மயக்கமுற்று விழுந்தார். அவருடைய எதிர்கால கனவுகள் சிதறின. இன்றுவரை அவர் ஓர் செயலிழந்த வீரராகத்தான் உயிர் வாழ்ந்து வருகிறார். அணித்தலைவர் படுகாயம் அடைந்ததால் 21 வயதே நிரம்பிய Nawab of Pataudi இந்திய அணித்தலைவராகப் பொறுப்பேற்றார். 1969ஆம் ஆண்டு வரை அவர் இந்திய அணித் தலைவராகச் செயல்பட்டு வந்தார்.

## 313) Sunil Gavaskar என்ற தாரகை கிரிக்கெட் வானில் தோன்றியது

Nawab of Pataudiயின் ஒரு கண் செயலிழந்துத நிலையில் ஒரு ஆட்டின் கண் பொருத்தப்பட்டுள்ளது.

1967-68 ஆண்டுகளில் இந்திய அணி ஆஸ்த்ரேலிய நாட்டிற்கு விளையாடச் சென்ற போது அவருடைய திறமையினால் அந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. 1969ஆம் ஆண்டு இந்திய அணிக்கு அஜித் வடேகர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்ற இந்திய அணியில் சுனில் கவாஸ்கர் இடம் பெற்றார். இந்திய அணியின் Dileep Sardesai, Eknath Solkar, Salim Durrani ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

## 314) கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம்பாள்.

தேவன் எழுதிய ‘ஜஸ்டிஸ் ஜகன்னாதன்’ கொத்த மங்கலம் சுப்பு எழுதிய ‘தில்லானா மோகனாம்பாள்’, லட்சுமி என்கிற புனை பெயர் கொண்ட டாக்டர். திரிபுரசுந்தரி எழுதிய ‘பெண்மனம்’ ஆகிய தொடர்களால் ஆனந்தவிகடன் பல்வேறு தரப்பினரும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக ஆயிற்று.

பத்திரிகை விற்பனையில் தொய்வு விழுந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதில் திரு. எஸ்.எஸ். வாசன் தெளிவாக இருந்தார். கொத்தமங்கலம் சுப்புவின் மூலம் அவர் எழுதச் செய்த ‘தில்லானா மோகனாம்பாள்’ கதை பத்திரிகை உலகிலேயே ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. அந்தக் கதையை வாசனே மேற்பார்வை யிட்டு, தேவையான மாற்றங்களைச் செய்து அதை ஓர் இலக்கியமாகவே உருவாக்கினார். இந்தக் கதை ஆனந்தவிகடனின் வெளிவந்து கொண்டிருந்தபோது வாசகர்களுக்கு இந்தத் தொடரை திரு.சுப்புதான் எழுதுகிறார் என்றே தெரியாது. புனைபெயரில் இந்தத் தொடர் வெளிவந்துகொண்டிருந்தது.



வார இதழ்களில் வந்த எந்தத் தொடர்கதையும் தில்லானா மோகனாம்பாள் போல சிறப்பித்துப் பேசப்பட்ட தில்லை என்றே சொல்லவேண்டும். தமிழகத்துக்கே உரிய நாதஸ்வர இசையும், பரதக் கலையும் அதில் பின்னிப் பிணைந்து சாகாவரம் பெற்ற கதாபாத்திரங்களை உருவாக்கி னார். பத்திரிகை விற்பனை பெருமளவிற்கு உயர்வதற்கு அந்தத் தொடர் மிகவும் உதவியதாகச் சொல்வார்கள்.

நடிகர், கவிஞர், கதாசிரியர், திரைப்பட இயக்குநர் என்ற பல தகுதிகளையும் பெற்ற திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள். திரைப்படத் துறையில் ஆற்றிய பல்வேறு பணிகள் காலத்திற்கும் நிலைத்து நிற்பவை. பின்வரும் கலை வாரிசுகள் பின்பற்றக் கூடிய-பண்புகள், வழிமுறைகள், ஆன்மீக நெறிமுறைகள், கிராமியக் கலைகள் ஏராளமாக நிறைந்திருந்தன. ஒரு கலைக் கல்லூரியாகவும் கற்பிக்கும் ஆசானாகவும் திகழ்ந்து வந்தார் கொத்தமங்கலம் சுப்பு.

## 315) சுப்பிரமணியன் என்ற சுப்பு

1910ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் கன்னாரியேந்தல் எனும் சிறு கிராமத்தில் (தஞ்சை மாவட்டம்-புதுக்கோட்டை அருகே) மகாலிங்க அய்யர்-கங்கம்மா தம்பதிகளுக்கு தலைமக னாகப் பிறந்தார். சுப்பிரமணியன் என்று பெயர் இடப்பட்டு, சுப்பு என அனைவராலும் அழைக்கப்பட்டார்.

குமரன், ஊழியன் ஆகிய இரு பத்திரிகைகளில் பணி யாற்றி வந்தார். கணக்கப்பிள்ளையாக செட்டியார் ஒருவரிடம் சில காலம் இருந்தார். பள்ளத்தூரில் நடந்த நந்தனார் என்ற நாடகம்தான் கலை உலக வாழ்க்கைக்கு மாற்றிவிட்டது. நடிகனாக மேடை ஏறினார். படங்களில் கொத்தமங்கலம் சீனு

அப்போது புகழ் பெற்று விளங்கி வந்தார். சினிமாவில் பல துறைகளில் பயன்படக்கூடிய ஆற்றலைப் பெற்றவர் கொத்தமங்கலம் சுப்பு என ஜெமினி வாசனிடம் அறிமுகப் படுத்தியவர் திரு. கே. சுப்ரமண்யம் ஆவார்.

## 316) ஜெமினி ஸ்டுடியோ கைமாறியது

அம்பிகாபதி திரைப்படத்திலே எம்.கே. தியாகராஜ பாகவதருடன் நடித்த எம். ஆர். சந்தானலட்சுமியையும் இன்பசாகரன் படத்திலே நடிக்க வைத்தார் திரு. கே. சுப்ரமண்யம். வி.என். ஜானகி அறிமுகமானதும் இந்தப் படத்தில்தான். படம் முடிவடையும் தருணத்திலே தீவிபத்து ஏற்பட்டு படத்தின் நெகடிவ் அனைத்தும் எரிந்து போயிற்று. இந்தச் சம்பவம் திரு. கே. சுப்ரமண்யம் அவர்களின் சதிவேலை எனப்பேசிக் கொண்டார்கள்.

மனம் சோர்ந்து போகாமல் இந்த இன்பசாகரன் கதையை பிரேம் சாகர் என்று ஹிந்தியில் தயாரித்து வெளியிட்டார். இதுவும் லாபகரமாக இல்லை. சிறந்த படமாக ஓடிக் கொண்டிருந்த இவரது தியாகபூமி படமும் ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்டது. இப்படி எல்லாமே சேர்ந்து கே. சுப்ரமண்யம் அவர்களை துயரத்தின் அடித்தளத்துக்குக் கொண்டு சென்றது. ஸ்டுடியோவும் ஏலத்துக்கு வந்து விட்டது. அதிக விலையை டெண்டரில் குறித்துக் கொடுத் தார் எஸ்.எஸ்.வாசன். ஸ்டுடியோ வேறு கைக்குப் போக விடாமல் காக்கவே இந்த ஏற்பாட்டை எஸ்.எஸ். வாசன் செய்தார்.

திரு. கே. சுப்ரமண்யம் அவர்களிடத்தில் வாங்கிய இடம் தான் பின்னர் மூவிலேண்ட் ஜெமினி ஸ்டுடியோவாக மாறியது. இதை திறந்து வைத்தவர் ராஜா சர் முத்தையா



செட்டியார் அவர்கள். ''எஸ்.எஸ். வாசன் அவர்கள் ஸ்தாபனம் மங்களகரமாக விளங்க வேண்டும். அதற்காகவே உன்னை வாசனிடம் அனுப்பி வைக்கிறேன். நீ கெட்டிக் காரன், உன்னால் ஜெமினியும் ஜெமினியால் நீயும் உயரும் நிலை வரும்'' என மனதார வாழ்த்தி கொத்தமங்கலம் சுப்புவை ஜெமினி ஸ்டுடியோவுக்கு அனுப்பி வைத்தார் திரு. கே. சுப்ரமண்யம்.

## 317) கொத்தமங்கலம் சுப்புவின் பாடல்கள் கருத்தாழம் மிக்கவை

முருகனிடம் அளவு கடந்த பக்தியுடையவர். மோட்டார் சுந்தரம்பிள்ளை படத்திலே மனமே முருகனின் மயில் வாகனம்- என்ற பாட்டை எழுதியவர் கொத்தமங்கலம் சுப்பு. ஆனந்த விகடனுக்கு பூர்விகப் பெருமையிருந்தாலும், சுப்பு அவர்கள் எழுதிய தில்லானா மோகனாம்பாள் தொடர் பத்திரிகையின் தரத்தை உயர்த்தியது.

வஞ்சிக்கோட்டை வாலிபன் படத்தில் வைஜயந்தி-பத்மினி போட்டி நடனத்துக்காக திரு. சுப்பு அவர்கள் எழுதிய பாடல்தான் 'கண்ணும் கண்ணும் கலந்து இன்பமம் கொண்டாடுதே . . . . . சபாஷ் சரியான போட்டி' என்று பி.எஸ்.வீரப்பா அவர்களின் குரல் இன்னும் காதுகளில் ஒலிக்கிறது. காந்தியடிகளின் மறைவை வில்லுப்பாட்டில் பாடினார். நெஞ்சை உருக வைக்கும்-கல்லையும் கரைய வைக்கும் தன்மை கொண்டது இந்த கிராமியப்பாடல்.

தேசிய உணர்வு, மனித நேயம், கலையுணர்வு, ஆன்மீகம், எல்லாவற்றிலுமே சிறந்து விளங்கினார் சுப்பு. தில்லானா மோக னாம்பாள் தொடர்கதை ஆனந்த விகடனில் வெளிவந்து மக்களால் விரும்பப் பெற்று பெரிய அளவில்

பேசப்பட்டது. அந்நாளில் கல்கியின் தொடர்நாவல்கள் தான் இப்படி கலகலப்பை உண்டு பண்ணும். நெடுங்காலத்துக்குப் பின் சுப்புவின் எழுத்துக்கள் அந்த தரத்தை எட்டிப் பிடித்தன. இன்னும் சொல்லப் போனால் ஆனந்த விகடன் விற்பனையை அதிகப்படுத்தின. ஆனந்த விகடன் வரும் நாள் விழாக்கோலம் கொண்டது.

திரைப்படத் துறையில் படத் தயாரிப்பு என்பது பல நோக்குடையது. அன்றைய கால கட்டத்தில் புகழ் மிக்க வர்களை இணைத்து திரைப்படம் தயாரிப்பது என்பது ஒரு வகை வியாபார நோக்கு. கலை நயத்துடன் படைப்பு களை உருவாக்கி காலத்துக்கும் பெயர் நிலைக்கப் பாடுபடுவது என்பது மறுநோக்கு. அந்த வகையில் இந்த இரண்டாம் வழியைப் பின்பற்றிய தயாரிப்பாளர்களில் ஏ.பி. நாக ராஜனைச் சொல்லலாம்.

## 318) தில்லானா மோகனாம்பாள் கதையைத் திரைப் படமாக்கிய ஏ.பி. நாகராஜன்

ஆனந்தவிகடனின் உரிமையாளரான திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களை அணுகி, தில்லானா மோகனாம்பாளைப் படமாகத் தயாரிக்கும் உரிமையைப் பெற்ற ஏ.பி. நாகராஜன், கதையை எழுதிய திரு. கொத்தமங்கலம் சுப்புவைச் சந்தித்தார். அப்போது சற்று உடல்நலமில்லாமல் மருத்துவ மனையில் இருந்தார் கொத்த மங்கலம் சுப்பு. ரூபாய் 10,000 கொடுத்து தில்லானா மோகனாம்பாள் கதையின் உரிமையை திரு.எஸ்.எஸ். வாசன் அவர்களிடம் பெற்றி ருக்கிறேன். இந்த நல்ல செய்தியை தங்களுக்குத் தெரியப்படுத்தவே இங்கு வந்திருக்கிறேன். தங்களுக்கும் பொருளாதார ரீதியில் ஒரு தொகை தரலாம் என நினைக்கிறேன் என்று ஏ.பி. நாக ராஜன் அவர்கள் திரு.சுப்பு அவர்களிடம் கூறியிருக்கிறார்.



தனியாக ஏதும் தரவேண்டியதில்லை. தாங்கள் எங்கள் அய்யரிடம் கொடுத்த தொகை எனக்கு வந்து சேர்ந்து விட்டது. இதோ பாருங்கள் என்று கூறி 10,000 ரூபாய் நோட்டுக் கத்தையை தலையணைக்கு அடியிலிருந்து எடுத்துக் காட்டினார் திரு. சுப்பு. எஸ். எஸ். வாசன் அவர்களின் இந்தச் செயலைக் கண்டு இப்படிக் கூட மனிதர்கள் இருக்கிறார்களே என வியந்தார் ஏ.பி.நாகராஜன்.

சிறந்த தேசபக்தர், கவிஞர், நடிகர் திரு. கொத்த மங்கலம் சுப்பு அவர்களை 15.7.1974இல் காலம் அழைத்துக் கொண்டது. கலையுலகத்திற்கு இவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று.

பொதுவாக பத்திரிகைகளில் தொடராக வெளிவந்த கதை கள் படமாக்கப்படும்போது அவை வெற்றி பெறுவது இல்லை. அதற்கு உதாரணங்களாக அகிலனின் பாவை விளக்கு, கல்கியின் பார்த்திபன் கனவு, கள்வனின் காதலி போன்ற படங்களைக் குறிப்பிடலாம். ஆனால் ஆனந்த விகடனில் வாரந்தோறும் வெளிவந்த போதும், திரைப் படமாகத் தயாரிக்கப்பட்டபோதும் மாபெரும் வெற்றியைப் பெற்றது தில்லானா மோகனாம்பாள். இந்தப் படத்தின் வெற்றிக்கு திரு. கே.வி. மகாதேவனின், இசையமைப்பும் ஓர் காரணமாகும்.

## 319) ஏ.பி. நாகராஜனின் தில்லானா மோக னாம்பாள் 27.7.68ஆம் நாள் திரையிடப்பட்டது.

முதலில் நாடகமேடையில் பெண் வேடமேற்று கதா நாயகியாகவும், திரைப்படத்தில் கதாநாயகனாகவும் நடித்து, சில சமூகப்படங்களை இயக்கி, இறுதியில் பக்தி பட இயக்குநராக உருவானவர் ஏ.பி. நாகராஜன். ஏறக்குறைய 12

அல்லது 13 படங்களுக்குத் திரைக்கதை வசனமும் எழுதி, நான்கைந்து படங்களுக்குத் துணை இயக்குநராகப் பணியாற்றி, தனது வாழ்க்கையின் பிற்பகுதியில்தான் இயக்குநர் என்ற பொறுப்பை ஏற்றார்.

மற்ற படங்கள் எப்படி இருந்தாலும், கொத்த மங்கலம் சுப்புவின் நாவலிலிருந்து ஏ.பி.என். உருவாக்கிய 'தில்லான மோகனாம்பாள்' ஒரு மாஸ்டர் பீஸ் என்பதை மறுப்பதற் கில்லை. தமிழ் கலாச்சாரத்தின் பதிவுகளில் ஒன்றாக நிச்சயம் அந்தப் படம் அவரது பெயர் சொல்லும். சிவாஜி, பத்மினி, நம்பியார், எஸ்.வி. சகஸ்ரநாமம், மனோரமா, பாலாஜி, நாகேஷ் முதலியோரின் அற்புதமான நடிப்புடனும் அருமையான வசனங்களுடன் வந்த படம் அது. அன்றைய கலைஞர்களை நிலபிரபுக்கள் தமது இச்சைப் பொருள்களாக முடக்க முயன்றதற்கு எதிராக ஒலித்த நாதசுர - பரத நாட்டிய கலைஞர்களின் குரலைப் பதிவு செய்த படம் அது. இன்றும் 'தில்லான மோகனாம்பாள்' திரைப்படம் இவரது பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. தில்லானா மோகனாம்பாள் திரைப்படம் 27-7-1968ஆம் நாள் திரையிடப்பட்டது. 100 நாட்களுக்கு மேல் பல ஊர்களில் ஓடி மக்களின் பேராதரவைப் பெற்ற படமாகும் இது.

## 320) செகந்திராபாத் நகருக்குப் பணிமாற்றம் பெற்றேன்

1968ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் விசாகப் பட்டினத்தை விட்டு பணிமாற்றம் பெற்று செகந்திராபாத் நகரைச் சென்றடைந்தேன். விசாகப்பட்டினத்தில் எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் குடியிருந்து வந்த தீக்ஷிதலு என்பவருடைய இளைய சகோதரர் உஸ்மானியா பல்கலைக்



கழகத்தில் பணியாற்றி வந்தார். அவருடைய உதவி கொண்டு 'சிக்கடப்பள்ளி' என்னும் குடி யிருப்புப் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம். இந்தியன் ஆயில் நிறுவனத் திற்குச் சொந்தமான எண்ணெய்க் கிடங்குகள் செகந்திராபாத் மெட்டுகுடா பகுதியில் அமைந்திருந்தது.

தென் மத்திய ரயில்வே தலைமையகத்தின் பின்புறப் பகுதியில் அமைந்து உள்ளது Railway Recreation Club எனப்படும் R.R.C. விளையாட்டு மைதானத்தின் பின்புறம் ஒரு சிறு குன்றின் சரிவில் அமைந் திருந்தது மெட்டுகுடா ஆயில் டெப்போ. இரவில் அதிக நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைந்திருந்த இந்த ஆயில் டெப்போவில் இருந்து அண்மையில் உள்ள R.R.C. விளையாட்டு மைதானத்தின் வேலிப்பகுதியில் மாதத்தின் சில நாட்களில் கொலை செய்யப் பட்ட பெரும்பாலும் பெண் சடலங்களைக் காவல் துறையினர் கைப்பற்றிச் செல்வர். வெளிச்சமே இல்லாத அந்தப் பகுதியில் இரவு நேரங்களில் பெண்கள் அழைத்து வரப்பட்டு, கற்பழிக்கப் பட்டு கொலை செய்யப்படுவது ஒரு வழக்கமான செயலாக அமைந்திருந்தது.

சில நாட்கள் பணி முடிவடைவதற்கு இரவு 10 மணி கூட ஆகும். ஆனால் ஆயில் டெப்போவிலிருந்து ரயில் தலைமையகத் துக்குச் செல்லும் சாலையில் செல்வதற்கு அச்சமுண்டாகும். இரு சக்கர வண்டியில் செல்லும்போது காண இயலாத இடத்திலிருந்து ரவுடிகள் சிறு கருங்கற்களை வீசுவர். வழி மறித்து கத்தியைக் காட்டி கடிகாரம், எடுத்துச் செல்லும் பணம் ஆகியவற்றைப் பறித்திடுவர். ஆகவே நானும் மற்ற தொழிலாளர்களும் பணி முடிந்தபிறகு சமவெளி யிலும், உயரமான பகுதியிலும் அமைந்துள்ள இருப்புப் பாகைளைக் கடந்து மறுபடியும் சமவெளியில் அமைந்துள்ள

இருப்புப்பாதையைக் கடந்து தார்னாகா செல்லும் சாலையைச் சென்றடைந்தால் எவ்வித அச்சமுமின்றி செல்லலாம். மேட்டுப் பகுதியில் செகந்திரா பாத், அவுரங்காபாத் செல்லும் இருப்புப்பாதை அமைந்து உள்ளது. தினந்தோறும் மாலை 7 மணிக்குச் செல்லும் அஜந்தா எக்ஸ்பிரஸ் நேரத்தை உணர்த்தும் ஒரு கடிகாரமாகும். ✸✸✸

**(5ஆம் பகுதிமுற்றிற்று)**